தேம்பாவணி.

அநாதிநம.

தேம்பாவணி.

மூன்றாங்காண்டம்.

வீரமாமுனிவர்
அருளிச்செய்த
இக்காப்பியம்
அவரதுகையெழுத்துப்பிரதிக்கொப்பப்
புதுவையிலெழுந்தருளியிருக்கும்
மகாகனம்பொருந்திய ஆண்டவரும்
அப்போஸ்தொலிக்குவிக்காரியாருமாகிய
கிளேமேன்சுபொனாந்
துரிசிப்பாரென்னும்
நாமதேயங்கொண்டிருக்கிற
மேற்றிராணியாரவர்களநுமதியில்
உரோமாபுரியினின்றுவந்த
உத்தாரத்தின்படியே

௲அ௱௫௰௧ம். ௵
புதுவையிற்சன்மவிராக்கினிமாதாகோயிலைச்சேர்ந்த
அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

கடவுள்-துணை.

இக்காப்பியத்தைப்

பிரசித்தப்படுத்தியவரால்

முகவுரை.

தேனினுமினிய வித்தேம்பாவணியைக்குறித்து நெடுங்காலங் கற்றோர்முதன் மற்றநேகரிதயத்துப் பற்றியவாசை யிப்போது தேவருள் நுக்கிரகத்தா னிறைவேறினதினிமித்த மத்தியந்தகளிகூருகின்றோம். அதேதெனி விம்மூன்றுங்காண்டத்தோ டஃது முற்றுமச்சிற்பதிப்பித் தியாவர்க்குமின்பநன்மையாம்படி வெளிப்படுகின்றது. ஆதலான் முகிலிடத்து மறைந்தசெஞ்சுட ருலகிருட்போக்கிவிளங்கினு மதினின்றுநீத்துத்தன்னொளிமுகங்காட்டுளி யெத்திக்கினுந் தெண்கதிர்வீசி மிகப்பிரகாசிப்பதுபோல நூற்றிருபது வருடமளவுங் கையெழுத்துப்பிரதிகளா யித்தேசத்தெத்திசையினும்பரம்பி யவற்றின்பிழைமுகிலின் மறைந்த விவ்வுத்தம காப்பியமெங்கணு மிகு கீர்த்திப்பேர்பெற்றுச் சுகிர்தவொளிபரப்பிவிளங்கியிருப்ப வீரமாமுனிவரது கையெழுத்துப்பிரதிக்கொப்ப வச்சடித்தபிரதியாய் வெளிவிட்டபின் பதிகதெளிந்தபிரகாசகதிர்வீசி மேன்மேலும் பிரபலியமாமென்று நம்பிக்கொள்ளுகின்றோம்.

இதின் முதலிருகாண்டங்க ளத்தியந்த வின்பசந்தோஷத்துடனேற்றுக்கொள்ளப்பட்டமையா லவற்றினும்பிரியப்படுவதற்குரிய வர்த்தமானங்கணிறைந்த விக்காண்டமின்னுமதிகவிருப்பெழுப்பு மென்பதுறுதி.

தேம்பாவணிவிளக்கு நன்மை மிக்குளவாம்படிக் கதிலலங்காரமாலையாய்ப் பிணித்த வியப்புக்குரிய பொருட்களைச் சுருக்கிலடக்கிக்காட்டக்கருதி யிக்காண்டமுடிவிற் பொதுப்பொருளட்டவணையை வெவ்வேறுசந்தங்கள் வருமுறையாக நவமாய்ச் செய்துதருகின்றோம். இதைக்கொண் டிவ்வுத்தமபொருட்கள் வகுத்துவைத்திடப்பட்ட வொழுங்குணர்ந்து தடுமாற்றமின்றித் தானேதவிரும்பியதை யுடனேயெளிதி லெடுத்துக்கொள்ளலாமேயன்றி யிப்பிரபந்தத்தி லினியபாவிலுஞ் சிறந்தவுரையிலு மிலட்சணமாய் வருணிக்கப்பட்ட வதிசயவர்த்தமானங்களு மினிமைபயக்கு மற்றைவிசேஷங்களு மிக்கவெனத்தெரியலாகும். ஆகையி லவ்வட்டவணையைவாசிப்பவர் தேம்பாவணியையும்வாசித்தறிய மேன்மேலு மவாவுற் றதனைத் தக்ககனமாயெண்ணுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

பின்னும் புலவர்க்குநலமாக விக்காப்பியத்தில்வழங்குஞ் சந்தங்களின் பொதுவட்டவணையை யகராதிமுறையாய்த்தருகின்றோம். சிலவிருத்தவருக்கங்களுக் கிரண்டல்லது மூன்று சந்தவகை பொருந்துவதாகக்காட்டிக் கூட்டினதனாலும் விசேஷசிறப்புடையவற்றை வேறாகக் குறித்ததினாலுஞ் சந்தங்களின்றொகை மாணாக்கன் புறவுரையாசிரியத்திற் சொல்லிய தொண்ணூறென்னுந் தொகைக்குக்கொஞ்ச மேற்பட்டதிசயமல்ல.

சந்தங்களின்

அட்டவணை.

௨௫-வது. குழவிகள்வதைப்படலம்.

பக்கம்,	விருத்தம்.	
௧	௧	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.
௫	௰௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௮	௰௯	மா, கூவிளம், கூவிளம், தேமா.
௰௨	௨௯	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.
௰௬	௩௯	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௨௧	௫௭	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௮	௭௪	விளங்கனி, விளங்கனி, விளங்கனி, விளம். மா, கூவிளம், மா, கூவிளம், மா, கூவிளம், விளம்.
௩௨	௮௫	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௩௫	௯௧	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௨௬-வது. கருணையன்மாட்சிப்படலம்.

௩௯	௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௪௫	௰௫	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.

சந்தங்களினட்டவணை.

பக்கம்,	விருத்தம்.	
௬௯	௨௭	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௫௩	௪௰	மா, மா, காய், மா, மா, காய்.
௫௯	௫௪	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.
௬௭	௭௭	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௭௧	௯௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௮௨	௱௰௮	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௮௮	௱௩௯	காய், காய், காய், காய். (இடைமடக்கு.)
௯௰	௱௪௬	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௯௫	௱௫௮	காய், காய், மா, தேமா, காய்.
௱	௱௭௧	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

௨௭-வது. ஞாபகப்படலம்.

௱௫	௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௱௮	௯	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௱௰௨	௰௯	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.
௱௰௫	௨௧	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௱௰௮	௩௭	காய், காய், மா, மா, காய்.
௱௨௨	௪௬	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௱௨௭	௬௧	காய், காய், மா, தேமா.
௱௨௯	௬௬	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

பக்கம்,	விருத்தம்.	
௱௩௫	௮௰	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௱௩௯	௯௩	காய், காய், காய், காய், மா, தேமா.
௱௪௪	௱௨	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௱௪௯	௱௰௮	மா, மா, காய், மா, மா, காய்.
௱௫௪	௱௨௧	விளங்காய், கூவிளம், கூவிளங்காய், கூவிளம். விளம், கருவிளம், கூவிளம், கருவிளம். மா, தேமா, கூவிளம், தேமா, தேமா, கூவிளம்.
௱௫௭	௱௩௭	மா, கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம்.
௱௫௯	௱௪௫	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௱௬௩	௱௫௫	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௱௬௯	௱௬௬	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.

௨௮-வது. வாமனுட்சிப்படலம்.

௱௭௪	௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௱௮௧	௨௰	மா, மா, காய், மா, காய்.
௱௮௭	௩௬	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௱௯௨	௫௪	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௱	௭௫	காய், காய், காய், காய்.
௨௱௪	௮௬	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௨௱௯	௯௭	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௨௱௰௪	௱௰௩	மா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.
௨௰௯	௱௨௭	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

பக்கம்,	விருத்தம்.	
௨௨௪	௱௪௧	விளம், கூவிளங்காய்.
௨௨௯	௱௪௯	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

௨௯-வது. வேதக்கெழுமைப்படலம்.

௨௩௮	௰௮	மா, காய், மா, மா, காய்.
௨௪௧	௨௯	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௨௪௪	௩௫	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௪௯	௪௯	மா, காய், மா, மா, காய்.
௨௫௧	௫௫	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௨௫௪	௬௬	காய், காய், காய், காய்.
௨௫௯	௭௭	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௬௩	௮௯	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௨௬௬	௯௭	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.
௨௭௰	௱௯	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௭௪	௱௨௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.

௩௰-வது. மீட்சிப்படலம்.

௨௭௮	௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௨௮௧	௯	காய், காய், மா, தேமா, காய்.
௨௮௫	௨௰	மாங்கனி, கூவிளம், கூவிளங்காய். மா, புளிமா, புளிமா, புளிமா.
௨௯௰	௩௫	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

பக்கம்,	விருத்தம்.	
௨௯௨	௪௨	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௨௯௮	௬௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௩௱௭	௮௫	கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம். கருவிளம், கருவிளம், கருவிளங்கனி, கருவிளம், கருவிளம், கருவிளங்கனி.
௩௱௰	௯௧	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௩௱௰௩	௱௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௩௱௰௮	௱௰௫	காய், காய், காய், காய்
௩௨௧	௱௨௩	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௩௨௮	௱௪௰	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௩௩௰	௱௪௬	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௩௩௨	௱௫௧	மா, கருவிளம், மா, கருவிளம்.

௧௧-வது. பிரிந்தமகவைக்காண்படலம்.

௩௩௬	௧	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.
௩௩௯	௯	தேமா, விளம், மா, காய்.
௩௪௧	௰௫	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௩௪௪	௨௪	மா, மா, மா, மா, மா, மா.
௩௪௮	௩௬	மா, மா, காய், காய்.
௩௫௨	௪௭	மாங்கனி, கூவிளம், கூவிளங்காய். மா, புளிமா, புளிமா, புளிமா.
௩௫௬	௯௧	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

பக்கம்,	விருத்தம்.	
௩௯௨	௮௰	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௩௯௪	௮௫	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௩௯௬	௬௪	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.

௩௨-வது. புரோகிதப்படலம்.

௩௭௩	௧	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம். } சிறப்பு டையது.
௩௭௯	௰௧	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.
௩௮௰	௨௨	காய், காய், காய், காய், மா, தேமா.
௩௮௫	௩௨	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௩௮௮	௩௬	கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம், மா, மா, புளிமாங்காய்.
௩௯௩	௪௮	வெண்பாப்போல வந்தவிருத்தங்கள். (இடைமடக்கு.)
௩௯௪	௫௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௪௱	௭௨	காய், காய், காய், காய், மா, தேமா.
௪௱௬	௬௰	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௪௱௰௨	௬௭	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.

௩௩-வது. பிணிதோற்றுபடலம்.

௪௱௰௭	௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௪௨௧	௰௨	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.

பக்கம்,	விருத்தம்.	
௪௨௫	௨௯	மா, கூவிளம், மா, விளம், விளம், மா. விளங்கனி, மா, விளம், விளம், மா.

௩௪-வது. தூதுரைப்படலம்.

௪௨௮	௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௪௩௨	௰௩	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௪௩௫	௨௩	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௪௩௮	௩௩	காய், காய், காய், காய்.
௪௪௨	௪௫	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௪௪௬	௫௩	மா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.

௩௫-வது. உத்தானப்படலம்.

௪௫௰	௧	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௪௫௬	௨௰	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௪௫௮	௨௭	விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா.
௪௬௨	௩௯	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௪௬௮	௫௬	தேமா, மா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.
௪௭௩	௬௮	மா, கூவிளம், விளம், விளம், மா. விளங்கனி, விளம், விளம், மா.
௪௭௫	௭௪	கருவிளம், கருவிளம், கருவிளம், கருவிளம், கூவிளம், தேமா, புளிமா, புளிமா.
௪௭௮	௮௧	விளம், மா, மா, காய்.

௱௬-வது. முடிசூட்டுபடலம்.

பக்கம்,	விருத்தம்.	
௪௮௧	௧	மா, கூவிளம், கூவிளம், கூவிளம். விளங்கனி, கூவிளம், கூவிளம்.
௪௮௯	௰௭	மா, மா, காய், மா, மா, காய்.
௪௯௧	௨௮	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௪௯௮	௪௪	தேமா, கூவிளம், கூவிளம், கூவிளங்காய்.
௫௱	௫௰	மாங்கனி, கூவிளம், கூவிளங்காய். மா, புளிமா, புளிமா, புளிமா.
௫௱௭	௭௪	தேமா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய்.
௫௱௰	௮௧	விளம், மா, தேமா, விளம், மா, தேமா.
௫௱௰௪	௯௪	காய், காய், மா, தேமா, காய்.
௫௱௰௮	௱௨	புளிமா, கூவிளங்காய், புளிமா, கூவிளங்காய், கருவிளம், புளிமா, கூவிளங்காய், புளிமா, கூவிளங்காய், கருவிளம். கருவிளநறும்பூ, கருவிளநறும்பூ, கருவிளம், கருவிளநறும்பூ, கருவிளநறும்பூ, கருவிளம்.
௫௱௨௧	௱௭	விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.
௫௱௨௯	௱௰௭	விளம், விளம், மா, கூவிளம். விளம், விளம், விளங்கனி.
௫௩௰	௱௨௯	மா, மா, காய், மா, மா, காய்.

தேம்பாவணி.

இருபத்தைந்தாவது.

குழவிகள் வதைப்படலம்.

வேறு.

சென்முகத்திடிச் சினத்தொலிமுழங்கியவெம்போர்
கொன்முகத்தெரிக் குணுக்கினமியற்றியகாலை
பொன்முகத்தொளிப் புரிசைமாநகரிலாயவைநாஞ்
சொன்முகத்திவட் டொடையொடு றொடருதுமுணர்த்தே.

உரை.— முன்சொன்னபடி மேகமுகத்திவிடிகள்காட்டுஞ்சினத்தோடு மிகவுமுழங்கியகொடும்போர் வீணைப் பசாசுகளெல்லாநடத்திவருகையிற் பொன்னுல்விளங்கியுயர்ந்த மதிளிற்சிறந்த வெருசலேமாநகரிடத்திலாகியசெய்தியை நானிங்கே யென்பாவாற் றொடர்ந்து சொல்லிக்காட்டுவேனென்க. (க)

புராதனந்தரும் புகழ்மறையூகர்நாடளித்துத்
தராதரந்தருந் தடத்ததோளுருமுமிழ்தனுக்கை
நிரோருகத்தரு நீண்டதார்கரிக்கொடிதாங்கு
மெரோதனென்றருஞ் சடத்தகோனெருசலேமாண்டான்.

உரை.— புகழப்பட்டபழையவேதத்தை யநுசரித்தயூதருடைய நாட்டையாண்டளித்தவனாய் மலையோடொத்த தட

த்ததோளனு யிடிவிடும்வில்லேந்தியகையனாய்த் தாமரைமா லையனு யானைக்கொடியையுயர்த்தவனு யெரோதனென்பவ னந்நாளிலே கொடுங்கோனு யெருசலேமாநகரிடத்து வீற் றிருந்தாண்டானென்க. (உ)

ஆளவரசையா லல்லவைக்கஞ்சிலான்றன்கோ
னீளவாசையா னீதிக்கோற்கோட்டியகயத்தான்
காளவாசையாற் கலங்கியவெருளினனுணர்வு
மாளவாசையான் மயங்கியசிந்தையிற்கொடியான்.

உரை.—எரோதனென்னுமரச னெத்தன்மைத்தானென் னில், தானாளும்படியுளவாசையினுற் பாவத்துக்கஞ்சாதவனு ய்த் தன்னுட்டெல்லைகடந்து புறநாடுகளைக்கீழ்ப்படுத்தியா ண்டு தான்பிடித்தசெங்கோல்திகமாய்நீளும்படி யுளவாசை யினுல் நீதியின்கோலைவளைத்தகசடனு யிருண்டவாசையிற்க லங்கிவெருண்டநெஞ்சினனுய்ப் பொங்கினவாசையான் ம யங்கி யுணர்வுகெட்டுச் சிந்தையிற்கொடியனுய்க்கிடந்தா னெரோதனென்க. (௩)

மன்னுநீருயர் மன்னவர்மூவர்வந்துரைப்ப
மின்னுநீர்நவ மீனுயருதித்தலும்வேந்த
னென்னுநீருல கினிதளித்தாள்பவன்பிறந்தாங்
குன்னுநீர்கடந் துதித்தலுங்கேட்டுளமருண்டான்.

உரை. — முன்னே யாண்டவன் மனிதனுய்ப்பிறந்தவுட னே பெருமையி னிலைகொண்டுயர்ந்தமூவரச ரவனைத்தே டிவந்தவளவிலே யவர்சொன்னதினு லொருவான்மீனவமா யுதித்தசெய்தியுங் கடல்சூழ்ந்தபூவுலகிரட்சித்துப் பொதுவ றவாளும்படி யாண்டவனங்கேபிறந்தசெய்தியு மெரோத னென்பவன்கேட்டு மனதிலேமயங்கினுனென்க. (௪)

பருள்கொணெஞ்சினன் மறைவலோரியாரையும்விளி
த்துத்
தெருள்கொணன்மறைச் செப்பமாய்ந்துலகளித்தாள்வோ

ணிருள்கொளிந்நிலத் தெவ்விடத்துதிக்குவனென்று
வெருள்கொணெஞ்சற வெத்திலத்துதிக்குவானென்றார்.

உரை. — மூவரசர்சொன்னசெய்தியான் மயங்காநின்ற வெரோதன் வேதபாரகரெல்லாரையுமழைத்துத் தெளிந்த வேதநூன்முறையிற் பூவுலகிரட்சித்தாளவருமாண்டவ னிப் பூவுலகிலெங்கேபிறப்பானென்று தான்கேட்டவளவிலேய வனுள்வெருவிமெலியும்படி தானிருந்தவெருசலேமண்டை யிற் பெத்திலமாநகரிடத்துப் பிறப்பானென்றாரென்க. (௫)

என்றவாசக மெறிவைவேலெனவுளம்போழ்ந்து
குன்றமார்பிடை கொண்டவெங்கொடுமையைமறைத்துச்
சென்றமூவரைச் செப்பிநீர்வணங்கிமீண்டங்கண்
ணின்றயாவையு நீர்சொலப்போவல்யானென்றான்.

உரை. — அங்ஙனம் வேதநூலோர்சொன்னவாசகங் கூர் ந்தவெறிவேலாகத் தன்மனம்பிளந் துட்புகுந்தமையானே க ன்மலையொத்தமார்பிலே தானினைத்த கொடுமையைமறைத் து வந்தமூவரசரைநோக்கி நீர்முன்னேபோய்ப்பிறந்தநா தனைவணங்கி மீண்டிங்கேவந்து நீரங்கேகண்டதெல்லாவற் றையு மெனக்குச்சொன்னதின்மேலே நானுமவனைவணங்க ப்போவேனென்றானென்க. (௬)

மீன்முகத்தவர் மேவிமீண்டிலரெனக்கண்டுங்
கான்முகத்தலர் முல்லையார்கண்டதுங்கடந்த
நூன்முகத்துயர் சீமையோனுரைத்தது நுதலிக்
கோன்முகத்தனூர் குவிந்தெழவெருவினைக்கொண்டான்.

உரை. — அங்ஙன மம்மூவரசர் நவமீன்காட்டியவழியே போய்த்திரும்ப வெருசலேம்வழியாகவாராததை யெரோ தன்கண்டு சிலவிடையர்கண்டகாட்சியுந் திவ்வியநூலாற்சீ மையோன் கோயிலிலேசொன்னவிசேடத்தையுங்கேட் டுள் ளாராய்ந்து தன்முகத்து மிகவுந் துக்கந்தோன்றும்படியஞ் சி வெருவாநின்றானென்க. (௭)

பிறந்தமுன்னிடம் பெயர்ந்துவந்தெருசலேந்தன்னைத்
துறந்தபின்னவன் றுடர்ந்தபல்லிடந்துடர்ந்தவனைப்
பறந்ததென்னினும் பற்றிமொய்த்தடுகவென்றேவத்
திறந்தருஞ்சிலர் தேடவிற்காண்கிலாதயர்ந்தான்.

உரை. — அங்ஙனம் வருந்திவெருவாநின்றவரசன் சிலபடைவீரரையழைத்து நவமாய்வந்தவரசன் முன்றான்பிறந்தவிடமுமதைவிட் டெருசலேநகரில்வந்து போய்ச்சென்றவிடங்கள்யாவையுந்துடர்ந்துதேடி யாகாயத்திற் பறந்து போனாலு மவனைப்பற்றிக் கண்டவிடத்துமேல்விழுந் தவனைக்கொல்லுங்களென்று கட்டளையிட்டமையா லவரும்போய்த்தேடினவிடத்துக் காணாமையான் மிகவும் வருந்தினானென்க. (௯)

நானளிக்குமிந் நாட்டின்மற்றொருவன்வந்தவற்கே
மானளிக்குமிக் கோன்மையீந்திறைஞ்சவோவளமூழ்த்
தூனளிக்குமிவ் வுடல்விடநாளிதோவெனவான்
கோனளிக்குமிக் கொள்கையிறான்மயல்கொண்டான்.

உரை. — அங்ஙனம் வருந்திமயங்காநின்ற வெரோதன் றன்மனதிலயர்ந்தெண்ணி நானாண்டவிந்நாட்டில் வேறோரரசன்வந்து நானவற்குப்பெருமையிற்சிறந்த விச்செங்கோலைத்தந்தபின் னவனைவணங்கவோ வென்செல்வநாள் பதமழிந் திவ்வுடலை யென்னுயிர்விடும்படி நாளிதோவென்று மிகவும்வருந்திவான்கோனாகியகடவு ளுலகளிக்கப்பிறந்ததன்மையிற் றான்மயங்கிக் கேடுகொண்டானென்க. (௧௦)

விட்புலந்தகை வேய்ந்ததுதான்வினைவேய்ந்தான்
மட்புலங்குறை மறந்ததுதானுயிர்மறந்தா
னுட்புலந்தழ லுண்டதுதானுணவுண்டான்
கட்புலந்துயில் கடிந்ததுதான்கொலுகடிந்தான்.

உரை. — ஆண்டவ னவதரித்து மனிதனாய்ப்பிறந்ததனால் வானுலகுபெருமையைக்கொண்டது,தான்வினையைக்கொண்

டான். பூவுலகதனுற் றன்குறைமறந்தது, தான் றன்னுயிரைம றந்துகிடந்தான். துக்கமிகுதியாற் றுயராகியசெந்தீத் தன் மனத்தையுண்ணுநிற்கத் தானுண்ணுமனுந் துயில்கொள்ளாம லுங் கொலுவிலேவாராமலு மயங்காநின்ற னெரோதனென்க. (ம)

வேறு.

மாலையேற்திருள்மொய்த்தெங்கு மல்கியகாலைகள்வர்
வேலையேந்துபுவெங்கோறல் விளைப்பதுபோலக்கோடுங்
கோலையேற்தெரோதனெஞ்சிற் கொடிதுணர்ந்திருண்டமொ
ழ்ந்த
காலையேந்தலைப்பேய்சேர்ந்து கடிதுணர்வழற்றிற்றன்றே.

உரை. — மாலைகாலத்தன்கையிலேந்தியவிருள் பூவுலகிலெங்கும்பரந்து நெருங்கின நடுச்சாமத்துக் கள்ளர்கையில்வேலையேந்தி யுயிர்களைக்கொன்றுயதிப்பார், அதுபோல நீதிதப்பிவளர்ந்த கொடுங்கோலையேந்திய வெரோதனென்பான் முன்சொன்னபடி யெடுத்தநினைவினுன்மயங்கி மனதிலிருள்பரந்தகாலத்தவனை முழுதுங்கெடுக்கப் பசாசண்டி யவன்மனதினுட்டைக்கொளுத்தினாற்போல நெட்டூரவுணர்வினையுரைத்ததென்க. (மக)

உருட்டியசெங்கோலீந்தே யுயிருய்வரொவருமுண்
டோ
மருட்டியபகைமுற்றுமுன் வளர்திறத்தடியிலீர்த்துத்
தெருட்டியநீரார்கோன்மை திறம்பெறத்தாயுமேவார்
வெருட்டியமுறையில்வந்த வேந்தனைக்கோறனன்றே.

உரை. — எரோதனென்பவற்குப் பேய் மனதினுரைத்ததெங்ஙனமென்னில், அரசராணையுருட்டின தஞ்செங்கோலைப்பிறர்க்குத்தந்தபின்பு சாகாம லின்னுமுயிர்வாழ்வாருண்டோ! தாமயங்கும்படி தமக்குவந்தபகைமுற்றி வளருமுன்னே வல்லமைகொண் டதை யடியிலேயறுத்துத் தங்கோன்மைநிலைபெறும்படி தந்தாயைமுதலாயெண்ணுரோ தெளிந்த

வுணர்வுடையோர். ஆகையா னீவெருவிமயக்கும்படி நவ மாய்ப்பிறந்தவரசனை யுடனேகொல்லுவது நல்லதென்க.
(ம௨)

விடுதியேல்முடியின்வாழ்க்கைவிடுத்தனையவற்காணுதே
சடுதியேயிடங்கட்டோறுந் ததும்பியகுழவியெல்லா [ற்
மடுதியேயொருங்குதானு மாவியற்றிறப்பனில்லாற்
கெடுதியேயெனப்பேய்கோவுங் கேடுறநன்றிதென்றான்.

உரை. — அங்ஙன மவனை யுடனேகொல்லாமல் விட்டாயா கி லுன்முடியின்வாழ்க்கையும் விட்டாயென்றறிக. ஆகை யி லவனைக்காணுதேபோது உடனேசூழவெங்குமுள்ளகுழ ந்தைகளெல்லாரையுங்கொல்வாய், அங்ஙனங் கூடவவனுஞ் சாவான். இல்லாவிட்டாற் கெட்டாயென்று பேய் மனதிற் சொன்னதற் கெரோதன் முழுதுங்கெடும்படி தான்சம்ம தித்து நல்லதென்றானென்க. (ம௩)

இருள்சொரிந்தடர்ந்தகங்கு லிடைமூகிலிருகண்கூசத்
தெருள்சொரிந்திடித்துமின்னுந் திறத்துளத்தானாத
னருள்சொரிந்திடுமெஞ்ஞானத் தவிர்கதிர்மின்னியன்றான்
மருள்சொரிந்திருண்டநெஞ்சில் வடுமுகங்கூசிக்கண்டான்.

உரை. — அங்ஙனமெரோதன் றனக்குப்பேய் மனதிலு ணர்த்தியதற்குச் சம்மதிபட்டானு மிருண்டநடுயாமத்துமு ழங்கினமேக மிருகண்கூச விருளினுட் டெளிவுறமின்னினு ற்போல வளவிறந்தவல்லமைகொண் டெல்லா மனிதருள்ள த்திருந்தாளாநின்றகடவுள் தனதயையைப்புரிந் தியாவர்க்குங் காட்டு மெய்ஞ்ஞானவுணர்வுகளாகிய தேவமுகத்தினின்று ருங்கதிர்கள் மின்னிவிளங்கியதனு லெரோதன்கொண்டம யக்கத்தாற் றன்னெஞ்சிருளே நிறைந்ததாயினு மத்தேவ வொளியினாற் றுனிணைத்த கொடுமையினகோரத்தைக்கண்டு கூசினுனென்க. (ம௪)

தேம்புளங்கூசத்தோன்றுந் திருவிளக்கவித்துமீண்டு
சாம்புளங்கருதுந்தீமை தன்னையேசாரத்தோன்றக்

கூம்புளங்கடுத்தவஞ்சங் குணமெனச்சொல்வார்தேடி
யோம்புளந்தெளிந்தநூலோ ரொருங்குடனழைத்தல்செய்
தான்.

உரை. — அங்ஙன முளத்தின்மெலிந்துகூசும்படி தானி
னைத்த கொடுமையைக்காட்டி மனதிற்றோன்றிய ஞானவுண
ர்ச்சியாகிய திருவிளக்கொளியையவித்து மீளவுஞ்சாய்ந்தவு
ணர்விற் செய்யத்துணிந்ததீமை தன்னைச்சாராமற் றான்செ
ய்ததாக வுலகிற்றோன்றுதபடிக்குத் தன்மனத்தைக்கடுத்த
வஞ்சநினைவினைக் குணமென்றுரைப்பாரைத்தேடி நன்னூ
லோம்பி யுணர்விற்றெளிந்தோர்யாரையு மொருங்குடனழை
ப்பித்தா னரசனென்க. (௰௫)

சொரிசுமத்திடுங்காரொப்பத் துளிக்கையிற்சலுமோ
வெரிசுமந்திலங்கிமின்னு மினமணிநிரைத்திட்டிரா[னின்ற
றரிசுமந்தெழுந்தபைம்பொன் னாசனத்திருந்துதோன்றி
வரிசுமந்தடும்வெம்வேங்கை மறத்தொடுபொலியநின்றான்.

உரை. — அங்ஙன மறிஞர்யாரையு மழைப்பித்துத் தானே
முன்னாளின் மழையைச்சுமந்துபொழியு மேகத்தொத்த த
ருமக்கையுள சலுமோனென்னுமிராசாவிருந்த சிங்காசன
மென வெரியொளிசுமந்துவீசி மின்னியநவமணிநிரைத்து
வகுத்ததாய்ப் பன்னிரண் டரும்பொற்சிங்கங்கள் சுமக்க வ
வற்றின்மேலெழுந்திருக்கும் பசும்பொன்னாசனத்தெழுந்து
தோன்றி யுயிர்களைக்கொன்றுவாழும் வரிமாவாகிய கொடி
ய வேங்கையோடொத்தகடுஞ்சினத் தெரோதனின்றனெ
ன்க. (௰௬)

மந்திரிமாரும்வாய்ந்த வளந்தருந்தவருநன்னூற்
றந்திரிமாருந்தானைத் தலைவருமொருங்குகூடி
யிந்திரியலைபொங்கொத்த திடையிடைமொய்ப்பநின்றான்
சிந்திரிமலைமேலாடுஞ் செழுங்கொடியொத்தநெஞ்சான்.

உரை. — அங்ஙனம் வரும்பொருள்சொல்லு மந்திரிமா
ரு மாட்சியைப்பயக்குந் தவத்துயர்ந்தோரு மற்றநன்னூற்

றந்திரிமாருந் தன்படைத்தலைவருமென்றிவரொருங்குடன் கூடிக் கீழ்த்திசைக்கடலலைகள்பொங்கித் தம்முட்கலந்துநெருங்கினதன்மையா லவருஞ்சூழவெங்குமொய்த்திருப்பப் புனல்பாய்ந்தொழுகுமலையின்மேலாடாநிற்குங் கொடியைப்போல நிலைகொள்ளாதாடிய சிந்தையுள்ள வெரோதனென்பானடுவேநின்றானென்க. (௰௭)

நாறியமணியின்வாய்ந்த நன்முடிபெயர்தற்கஞ்சி
யூறியகொடியவஞ்சத் துணர்வினையொளித்துத்தானே
கூறியவுரைகள்கோட்டிக் குணித்தவைமுடித்தற்கொல்காத்
தேறியவுதவிதேடுந் திறத்தெனவிளம்பல்செய்தான்.

உரை. — அவரெல்லாருங்கூடியவளவி லெரோதனென்பான் விளங்கியமணிகளாற்செய்த தன்முடிபெயர்ந்துவேறோரவற்குத் தருமோவென்றஞ்சினதினாற் றன்மனதிலெடுத்த கொடியவஞ்சமுள்ளவுணர்வினை யவர்க்குக்காட்டாதொளித்து நினைத்தவைமுடிக்குங்கருத்துச் சற்றுந்தளராதாயினுஞ் சொல்லுஞ்சொல்லை மறைவாகக்கோட்டியவரிடத்துத்தான்றேறும்படி யுதவினதோர் நல்லாலோசனைதேடினாற்போலச் சொல்லத்துடங்கினானென்க. (௰௮)

வேறு.

பற்றார்வெம்பகைபட்டறநாளுள்
கற்றார்கல்விகடந்தெழுநாட்டின்
மற்றோரொருமன்னனுதித்தீங்
குற்றானென்றதொருங்குலகெல்லாம்.

உரை.—எரோதனெங்ஙனஞ் சொன்னானென்னில், பகைவர்பகை பட்டொழியும்படி நாளுளாகின்ற கற்றோர்படித்த நூலடையப்படாத செல்வத்திற்பொலிந்த விந்நாட்டி லெல்லையல்லா தாரோமற்றொருவனிராசாவென் றுபிறந்தானென் றுலகமெல்லா மொருமொழியாய்ச் சொல்லுவதென்றானென்க. (௰௯)

அன்னானீங்குளனென்றறைவானை
முன்னானு நகைத்துமுனிந்தேன்
பின்னானாயினபெற்றியையெண்ணி
யென்னாலாவதியம்புமினென்றான்.

உரை.—நவமாய்ப்பிறந்தவரச னிந்நகரண்டையிலுள்ளவனென்றார். அவனை நானு முன்னே நகைத்து மனதிலெண்ணாமலவனைக்கோபித்தேன், பின்னர்வந்தபலவற்றையுமெண்ணியதனாலையங்கொண் டும்மையெல்லாரையுமழைத்தேன், நீங்களென்னாற்செய்யவேண்டியகருமம் யாதென்றுசொல்லுவீராகவென்றானென்க. (பின்னராயினபெற்றிகளாவன:இடையர்கண்டகாட்சியு நவமாயுதித்தமீனும் வணங்கவந்தமூவரசருஞ் சீமையோன்சொன்னபுகழ்ச்சியு மித்தொகைமுதலாயினவை, இவையெலாமெங்கும் மறைவறவழங்கினமையால்வற்றைவிரியாமற்றொகையாயுரைத்தானென்க.) (உ௰)

என்றானடியடுத்தவையென்னத்
தன்றாழாமுகமுள்ளவைதந்து
நின்றான்கோட்டமுணர்ந்திடைநின்றார்
குன்றாநேர்நெறிகோடியுடைந்தார்.

உரை.— அரசனினைத்தகொடுமையை யுரையிற்காட்டா தம்மனஞ் சொன்னவிடத்துங் கண்ணாடி தனக்கடுத்தவற்றைக் காட்டித்தருவதுபோலக் கோபந்தாழாதவரசன்றன்முக மவனினைத்தவற்றைப் புறத்துக்காட்டித்தந்தமையா லரசன் மனக்கோட்டத்தை முகச்சாயலினுணர்ந்து சூழநின்றவர் குறையாதநீதிநெறி கோடிவளையும்படி தாமுஞ்சாய்ந்துடைந்தாரென்க. (உக)

கோற்கொண்டாரவர்கொள்கையைநோக்கி
மேற்கொண்டாரும்விளம்புவரென்றார்
நூற்கொண்டாரென நூலறையாரு
மாற்கொண்டாரறமாற்றுனைகொண்டார்.

உரை. — செங்கோலேந்தியவரசர்காட்டிய தன்மையை நோக்கி யதற்குத்தக்கதா யுயர்ந்தகுணத்தோர்முதலாய்ப்பே

சுவாரென்று முன்னே கற்றோர்சொன்னார், அத்தன்மைத்த
ன்றுபடித்தநூல்வழிவிட் டெல்லாருமயங்கியறவழிமாற்றி
யவுரைகளைக்கொண்டானென்க. (உஉ)

வள்வாய்மாமுரசார்ப்பொலிமாறுக்
கள்வாயாளுவமன்னவகாதல்
கொள்வாய்வாய்மொழிகொள்கெனமீண்டே
யெள்வாய்நாபனியம்புதலுற்றான்.

உரை. — கூடிநின்றபலவருள் ளிழிவுசொல்லுடை நாப
னென்பான் முந்திச்சொல்வான்: அகன்றவாய்முரசொலிமா
றாது தேனைப்பொழியுநாடாளுமரசனே யாசையைக்கொ
ண்டுரைத்த மெய்மொழிகளைக் கேட்டருளிக்கொள்வாயெ
ன்று மீளவுஞ்சொன்னானென்க. (உ௩)

துஞ்சித்திண்பகைமுற்றுடையாதார்
விஞ்சித்திண்பகைமுற்றியவேலை
யெஞ்சித்திண்டிறலெல்லளுறல்காண்பார்
நெஞ்சிற்றிண்டிறனேர்மதிவல்லோய்

உரை. — நெஞ்சிற்கொண்ட திண்மனவூக்கத்தளவாயறிவி
ன்வல்லவரசனே வந்தபகையை யாதியிலெண்ணுததனை யடி
யிற்றுடையாதவரே பின்னரப்பகைவளர்ந்து முற்றினகாலத்
தவர் தம்வல்லமை நிந்தைபடும்படி யதனையொழிக்கமாட்
டாரென்றுகாண்பாரென்க. (உ௪)

அன்றற்றேகினவண்ணலரோடுஞ்
சென்றற்றேபகைதீர்கிலநாமே
யின்றற்றீர்கிலமேற்பழிவெள்ளம்
பின்றற்றாழ்குதும்பேதையர்போன்றே.

உரை. — முன்னேவந்துபோயின மூவரசரோடுகூடிப்
போயன்றுதானே யப்பகையைத்தீராதிருந்தோமே, இன்
றுதானாகிலும்போ யதனைக்கொல்லாதிருந்தோமாயி னப்பழி
முற்றி வெள்ளமாகத்திரண்டு மொய்த்தகாலத்துப் பேதைய
ர்போல வுள்ளேயமிழ்ந்துவோமென்க. (உ௫)

நடுவொக்குந்தகைநாட்டரசர்க்கோர்
வடுவொக்குந்துயர்வந்தனவேலை
கடுவொக்கும்பிணிபோலதுகாப்பா
ருடுவொக்குங்கலையொள்ளொளிநீரார்.

உரை. — நீதியோடொத்த பெருமையிற்சிறந்தவரசர்க்கு வடுவாகவொருதுயர்வந்தகாலத் தவருள்வானிற்றோன்றுமீனைப்பவிளங்கியவறிவுடையோர் வந்ததுன்பத்தை நஞ்சினால்வந்தநோயைப்போலத் தாமதமின்றிக்காப்பாரென்க. (உ௬)

ஆக்கத்தாருயிர்யாவுமளித்த
நோக்கத்தோருயிர்கொன்றிகனூற
ஆக்கத்தஞ்சுவையோவுலகெல்லாங்
காக்கப்பெய்நிறைகாரிடியாதோ.

உரை. — நீயுனக்கிலாபமதென்றெண்ணி யிந்நாள்வரைக் குமுலகுளவுயிர்கள்யாவையுங் காத்தளித் திரட்சித்தாயென்றுநோக்கி யிப்பொழுதோருயிரைக்கொன்று வந்தபகையைத் தீர்ப்பதற்குத்துணியமாட்டாமலஞ்சுகின்றாயோ? அதற்கு நீயஞ்சவேண்டாம், அதேனென்னி லுலகம்யாவையுமிரட்சித்து நிறைமழைபொழியுமேகமு மேலோரிடத்துச்சிலவுயிர்களைக்கொல்லு மிடிகளைவிடாதோவென்க. (ஆகையான்மேகமங்ஙனமிடிகளைவிட்டாலு முலகமிரட்சிக்கும்பெய ரதற்கு நிற்பதுபோல நீயும் பகைத்தவோருயிரைக்கொன்றாலு முயிர்புரந்தளிக்கும்பெயருனக்கழியாதென்பதுகருத்து.) (உ௭)

பாயாவேங்கையையென்புளிபைம்பூ
வீயாப்புண்டரிகம்மெனவெண்ண
லாயாப்பேதமையாம்பகைகோற
லோயாக்கோல்வழுவோகடனென்றான்.

உரை.— பாயாதவேங்கையாகிய வேங்கைமரத்தை யொருவன்சொன்னவளவி லதுவேபூவாதபுண்டரிகமாகிய பாயுங் கொடியவேங்கையென் றெண்ணி யஞ்சுவ தாராயாத பேதமையாமல்லோ, அத்தன்மைத்து வந்தபகையைக்கொ

ல்லலேசாயாதநீதிச்செங்கோலுடையவரசர்வழுவிச்செய்யுங்குறையோவல்ல,அவர்செய்யவேண்டியகடன்றனே. ஆகையா லிதுவுங் கொலைத்தொழிலென்றாலு மிது கொலையாதகமென்றுங் கொடுமையென்று மெண்ணவேண்டாமென்றனென்க. (உ௮)

வேறு.

விரும்பித்தேடிய விலைப்பொருட்கண்டெனவுள்ள
மரும்பித்தேறிய வரசனுங்கவன்மிசைமலர்க்கண்
டிரும்பித்தேறலிற் காட்டியதிளை நயங்கண்டு
சுரும்பிற்றேக்கிய மற்றவரொத்துரைசொன்னார்.

உரை.—அங்ஙன நாயகன் சொன்னவுரைகளைக்கேட்டுத் தாருசையோடு முன்றேடின விலையேறப்பெற்றபொருளைக் கண்டாற்போலமகிழ்ந் துளமலர்ந்துதேறியவரச னினிதாயவனைநோக்கி மலர்ந்தபூவின்வாயூறின மதுவின்றன்மையான் முகத்திற்காட்டின மகிழ்ச்சியை மற்றவர்கண்டவளவிலே யூறினதேன்மேல் வண்டினஞ்சாய்ந்துமொய்த்ததுபோல வவரெல்லாரு நாயகன்சொன்னதற்கொத்த பலவற்றையுஞ்சொன்னாரென்க. (உ௯)

நன்றென்றுயினு நடுக்குறப்பெத்திலநகர்க்கண்
ணன்றங்கெய்திய வன்னவனில்லையாலஃன்றே
யின்றெங்குள்ளனென் றுயினுமியம்புவரில்லைப்
பின்றின்றுந்தொழிற் பேசுமினென்றனன்பெருமான்.

உரை.—அப்பொழுதரசனாகிய வெரோதன்சொல்வான்: வந்தபகைவனைக்கொல்லுவது நன்றென்றாலு நாமேநடுங்கும்படி முன்பெத்திலமென்னுநகரிடத் தன்றுபிறந்தவனங்கில்லையாம்,இப்பொழுதெங்கேயுள்ளவனென்று தேடினவிடத்துச்சொல்லுவாரில்லை,இவையெலா மிங்ஙனமாகையிற் செய்யுங்கருமம்யாதென்று சொல்வீராக வென்றனனென்க. (௩௰)

நகைத்துமாதிய னரபதிவாழ்கெனநவிலுந்
துகைத்துமொய்த்தவெந் துயரறச்சொன்னதற்கமைகிற்

பகைத்துவந்தவன் பழியறத்துன்முடிபெயரா
முகைத்துநாடெலா மூரணிலவாழ்வதுகாண்பாய்.

உரை. — அரசன்சொன்னதைக்கேட்ட மாதியனென்பானகைத்து மன்னவன்வாழவென்றுசொல்வான்: வருந்தும்படிமொய்த்த வித்துயரறும்பொருட்டு நான்சொன்னதற்கு நீசம்மதித்தாயாகிற் பிறந்தபகையின்பழியையறத்துன்முடியும்பெயராம லுன்னாடெல்லாமுமலர்ந்து பகையொன்றின்றி வாழக்காண்பாயென்க. (௩௧)

வளைகளார்பொழில் வனையணிக்கரமிதமலைமேற்
கிளைகளார்நிழற் கெழும்பலாக்கனியெலாந்தீந்தேன்
சுளைகளாயிரந் தரவுமொன்றுயிரடும்விடமாந்
திளைகளார்கனி சேர்கிலீங்கெவன்செய்வாயென்றான்.

உரை. —மதுப்பொழிசோலைகள்சூழ்ந்து செய்யுமழகிற்சிறந்த கரமிதமென்னுமலைமேற் கிளைத்துநெருங்கிய நிழலைச்செய்யு மொருபலாமரமுண்டாம், அதுவேகாய்த்தகனிகளெல்லாமினியமதுப்பொழியாயிரஞ்சுளைகளைத்தருவன,அவற்றுள்ளொருசுளை யுயிரைக்கொல்லுநஞ்சாம். அங்ஙனமாகியவ்வகைக்கனி யிங்குன்கையில்வந்தா லென்னசெய்வாயிராசாவேயென்றான் மாதியனென்க. (௩௨)

கொல்லுமச்சுளை யின்னதென்றறிகிலேற்குவிதேன்
புல்லுமச்சுளை யொருங்கொழிப்பேனெனப்பொருனன்
சொல்லுநீர்மையிற் றுளும்பகைதோன்றிலதென்னி
லொல்லுநீர்மையி லொருங்கடக்குழவிகளென்றான்.

உரை. — மாதியன்கேட்டதற் கிராசாவுயிரைக்கொல்லு நச்சுச்சுளை மற்றவற்று ளின்னதென்றறியேனாகி லொருங்குடன் மதுப்பொழிமற்றவாயிரஞ்சுளைகளையு மெறிந்தழித்துப்போடுவேனென் றிராசாசொல்ல வித்தன்மைத்தே பகையாகப்பிறந்தகுழந்தையைக் காணாதிருக்கையிற் கூடினதன்மைத் திந்நாட்டிலுள்ளகுழந்தைகளை யொருப்படக் கொல்லவேண்டுமென்றான் மாதியனென்க. (௩௩)

கேட்டவாசகங் கெழுங்குணமெனப்பலர்வாழ்த்தக்
கோட்டமாமெனக் கூறியசிலருளத்தஞ்ச
நாட்டவாயுற நயமொளித்தரசுரைநவிலா
மீட்டம்மாதியன் வினைவிளைமருளுரைவிரித்தான்.

உரை. — மாதியன்சொன்னதைக்கேட்டுக் குணமதென்று சூழநின்றவருட் பலரோவாழ்த்தவுஞ் சிலரதைக்குற்றமென்று மனதிற்கூசியஞ்சாநிற்பவு மிராசாவதனுட்கொண்டமகிழ்ச்சி நெஞ்சிலடங்காது தன்கண்வழியாய்ப்புறப்படவருகையி லதனையொளித்துள்ளடக்கிப் பேசாதிருக்கவுந் திரும்பிமாதியன் றீவினைவிளைதற்குக்காரணமாக மயக்குவிக்குஞ் சொல்லைவிரித்தானென்க. (௩௪)

திருந்தவாய்ந்தறந் திறம்பிலாச்செய்யினுமெவர்க்கும்
பொருந்தவாற்றுவர் பூவுலகுண்டுகொல்மன்ன
வருந்தவாம்பலே மனமகிழ்முளரிவாய்மலரு
மிருந்தமாயிரு ளீர்த்தவோரிரவியின்முகத்தே.

உரை. — தான்சொன்னது சிலர்க்குப்பொருந்தாமையாலிராசசம்மதியாதிருப்பதென்றெண்ணி மாதியனிவ்வணமமொழிசொன்னானென்னில், மன்னனே நன்றாயாராய்ந்தறத்திலொழுக்கங்குறையாதொருவன்றிருந்தச்செய்தாலு மிப்பூவுலகி லெல்லாருக்கும்பொருந்த யாதொன்றினையுஞ்செய்வாருண்டோ வில்லையே, சூரியன்முதலாயெங்குமூடியிருந்தவிருளைநீக்கிவருகையிற் றாமரைமகிழ்ந்து மலர்ந்ததாயினு மதுசெவ்வாம்பலுக்குப்பொருந்தாது தான்வருந்தாநிற்குமென்றானென்க. (௩௫)

பிரிந்தபோர்நிலம் பெறக்கொடும்போர்முகத்திறப்பத்
தெரிந்தவீரரைச் செலுத்தலேகொடிதலதென்பார்
வரிந்தகோலொடு நாடுகொள்வழுவறச்சிலவீங்
கிரிந்தசீறுயி ரிறத்தலேகொடிதென்பார்கொல்லோ.

உரை. — மீளவுந்தான்சொன்னதெவர்க்குஞ்சம்மதியாம்படிசொல்வான்: ஒருவனுண்டநாட்டிற் சிறுநிலம்பிரிந்து

வேறோரரசன்வசமாகி லந்நிலத்தை மீட்டடையும்பொருட் டுக்கொடியபோர்முகத்துமடிந்துசாகும்படி தெரிந்துகொண்ட நல்லவீரசேவகரைவிடுவது கொடியதல்லவென்பவ ரிப்பொழுதிராசாங்கத்தோடு நாடெலாங்கெடும்படிவந்த துயரைத்தீர்க்க விங்கேதிரியுஞ் சிலபுல்லுயிர்களைச் சாகவிடுவது கொடியதென்பாரோவென்றானென்க. (௩௬)

பகைத்தவெம்பசி பரிந்தறமலையொழிந்தொழுகி
முகைத்தபன்மலர் முருக்கியநீத்தமுங்கொடிதோ
துகைத்ததீதறச் சொன்னவைவிடுதியேலையா
தகைத்தவாழ்வொடு தாங்கரசிழந்தனையென்றான்.

உரை.—இராசாங்கமு நாடும் வாழும்படி சிலகுழவிகளைக்கொல்வது கொடிதல்லவென்பதற்குப் பகைத் துயிர்கள்யாவையுமுண்ணும் பசியைக்கொல்லும்படி மலையினின்றிழித்தோடிவருகையில் வரும்வழியிற்பூத்த பலமலரையழித்தமையால்வெள்ளமுங்கொடியதென்பாரோவில்லையே, ஆகையால்வருந்தும்படி வந்ததீதுதீர்ப்பதற்கு நான்சொல்லிக்காட்டியவழியைவிட்டாயாகின் மன்னனே தடுக்கப்பட்ட வுன்வாழ்வினையு முன்னிராசாங்கத்தையு மிழந்தாயென்றான் மாகியனென்க. (௩௭)

கான்முகத்துயர் கன்மலையனையவெங்கொடிய
கோன்முகத்திலுங் கொலுந்துயர்முகத்திலுங்கோடா
நான்முகத்துணா யேவியனுவன்றவைகேட்டுத்
தான்முகத்திடர் தளிர்ப்பநொந்தியம்புதலுற்றான்.

உரை.— இவையெலாமாகிக் காற்றின்முகத்திலசையா வயிரமலையைப்போலக் கொடுங்கோன்முகத்திலுந் தன்னுயிரைக்கொல்லவந்த துயரின்முகத்திலும் வளையாதநீதிநூலோடொத்த வுரையுள வேவியனென்பான் மற்றவர்சொன்னவற்றைக்கேட்டுத் தான்றன்முகத்தின் மிக்க துயரத்தைக்காட்டி நொந்து சொல்லத்துடங்கினனென்க. (௩௮)

வேறு.

தன்னுயிராகமற் றுயிர்கடாங்கிட
மின்னுயிர்மணிமுடி வேய்ந்தபார்த்திபன்
கொன்னுயிர்வழுவென வய்யங்கொண்டுயன்
மன்னுயிரொழித்தலோ வடுவிலாதென்றான்.

உரை.— தன்னுயிரைப்போலத் தானாளாநிற்கும்பிரசைகளுயிர்களைத்தாங்கி யோம்புதற்காரணமாக விளங்கிய மணிகள்பதித்தமுடியைச்சூடி யாளுமரசன் றன்னுயிர்க்கோரிடையூறுவந்ததென்றுகாரணமின்றிவீணாய்க்கொண்டசந்தேகத்தினாற் பலமன்னுயிர்களைக்கொல்லுவது குற்றமில்லாத நீதியோவென்றானேவியனென்க. (௩௯)

போழ்வினையாயினு முடிபுரந்திடத்
தாழ்வினையுண்டெனச் சாற்றுவாருண்டோ
வாழ்வினைப்பிறர்க்களித் தரசன்வாழ்வுறக்
கீழ்வினையில்லையெனக் கிசலன்கூறினான்.

உரை. — இராசாங்கமழியாமற் காக்கும்படி கொலைத்தொழிலாயினு மெத்தொழிலாயினுந் தாழ்வுண்டென்பாருண்டோ? பிறர்வாழ்தற்குக்காரணமாகியவரசன் றான்வாழும்படி யென்னசெய்தாலும் வசையில்லையென்றான் கிசலனென்பானென்க. (௪௰)

கண்ணிலானேவியம் வரைந்தகாதைபோ
லெண்ணிலாவிளைஞனென் றிசைத்திநீயென
வொண்ணிலாவரசடி யிறைஞ்சியோதியின்
றெண்ணிலாவேவியன் மீண்டுசெப்பினான்.

உரை.—குருடன் சித்திரங்களையெழுதினாற்போல வெண்ணமின்றி யிளைஞனாகக்கொள்ளச்சொன்னாய்நீயென்று கிசலனைநோக்கியுரைத்தபின்னர் விளங்கியமன்னவனதுபாதத்தைவணங்கிக் கற்றகல்விசெய்யொளியிற் றெளிந்தவேவியனென்பான் மீளவுஞ்சொன்னானென்க. (௪௧)

மண்ணளவொளிப்புகழ் மருவுமன்னவ
கண்ணளவறிவுளோர் கதைத்தமாசுறை
யெண்ணளவிழிவுறு மென்றுகேட்கிலன்
விண்ணளவொளிமறை விளம்பக்கேட்டியால்.

உரை. — பூவுலகெங்கும் புகழப்பட்டவரசனே கண்செல்லுமளவிற்கப்பாற்செல்லாத புல்லறிவாளர்சொன்ன கூடுவுரைகளை மனதிலெண்ணியவளவிற் கிழக்குவருமென்றெண்ணியவற்றைக்கேளாமல் வானுலகிடத்தும் புகழப்பட்டவேதத்துரைகளைச்சொல்லக் கேட்பாயாகவென்க. (௪௨)

வையகத்தொருவனுய் வாய்ந்தமுத்தொழிற்
செய்பகத்திணையிலான் சிறந்தவன்பொடு
பொய்யகத்துறுஞ்செயிர் போக்கமைந்தனுய்
மெய்யகத்துறுந்திறன் மறையின்மெய்மையே.

உரை.—ஒருவனுய்நின் றிப்பூவுலகி லியாவையுமாக்கலுங் காத்தலு மழித்தலுமென்னுந்தொழில் மூன்றினையுஞ் செய்யுமிடத்துப் புறத்துணையில்லானுகியகடவுள் நிறை தயைபுரிந்து பொய்யின்வழியாய்வந்த தீவினைபோக்கி நம்மையிரட்சிக்கும்படி தானிங் கவதரித் தெடுத்தவுடலின்வகையான் மனிதனுந்தன்மை வேதத்தில்வழங்கு மெய்மையல்லோவென்க. (௪௩)

ஊன்முகத்துதித்தபோ துலகின்நீதிரு
ஞான்முகத்தொழிப்பனென் றுதிக்குநாடனில்
வான்முகத்துடுநவம் வழங்குமென்றுமெய்ந்
நூன்முகத்தெழுமறை நுவல்வதாய்ந்துளாய்.

உரை.—மீளவு மாண்டவனுடலெடுத் திங்கேபிறந்தபோது பூவுலகெங்கும்படர்ந்தபாவத்திருளை நாலுமுகத்திலுமொழிப்பானென்றமையா லவன்பிறக்குநாளிலேதானே வானுலகிடத்தொருநவமீனுதித்துத்தோன்றுமென்று தப்பாதநூற்படி வேதத்திற்சொல்லியிருப்ப தறிவாயேயென்க. (௪௪)

அக்கணங்காண்டனு மரசர்மூவர்வந்
திக்கணங்காட்டிய வியூதர்மன்னவ
னெக்கணங்கவன்பிறந் திலையந்துளானென
மிக்கணங்கலங்கலோய் வினவக்கேட்டியால்.

உரை. — அங்ஙனமுதித்த நவமீனைக்கண்டு மூவரசர்வந்து நவமாய்த்தோன்றியவிம்மீன்காட்டின யூதர்நாட்டரசனெங்கேபிறந்திருப்பனென்றுகேட்க மிக்கழகுயர்ந்தமாலையுடையோய் நீகேட்டிருந்தாயென்க. (௪௫)

மீட்சியுங்கோவலர் வியப்பக்கண்டதோர்
காட்சியுங்கடும்வினை கடிந்தசீமையோன்
சாட்சியும்புகழ்ச்சியு மற்றச்சால்புறு
மாட்சியும்பெருமையும் வழங்கக்கேட்டியால்.

உரை. — மீளவு முன்பலவிடைய ரதிசயப்பட்டுக்கண்ட காட்சியுந் தீவினைகடிந்ததவத்தோனாகியசீமையோன் வந்தநாதற்குத்தந்தசாட்சியும் புகழ்ச்சியு மித்தொகைப்பட்ட மற்றமாட்சியும் பெருமையுமுடையசெய்திக ளெங்கும்வழங்கக்கேட்டாயேயென்க. (௪௬)

மன்னரசிழந்தென வானினின்றுவான்
றன்னரசெமக்கெலாந் தரவந்தான்பகைத்
துன்னரசெடுப்பவீங் குணர்ந்துற்றனெனக்
கொன்னரசிழிவுறக் குழைந்துள்ளெண்ணவோ.

உரை. — அங்ஙனமாண்டவ னிலைபெற்றதனதரசினை விட்டுவந்தவனைப்போல வானுலகினின் றிங்கே நமக்கெல்லாருக்கும் வான்வீட்டரசினைத்தரும்படி வந்தவனாகையி லவனுன்னைப்பகைத் துன்சிற்றரசுபறிக்கவந்தானென்று வீணாயரசியல்கெட நீகுழைந்தெண்ணுவாயோவென்க. (௪௭)

எண்ணினுமவன்பெய ரிசைத்தநீர்மையான்
மண்ணினும்வானினு மன்னராட்சியாய்க்
கண்ணினுமினிதுயிர் கடிதல்பண்ணவோ
பண்ணினுமரசிய னிலைக்கும்பான்மையோ.

உரை.— அங்ஙன முன்னரசுபறிக்கவந்தானென் றெண்ணினும் பூவுலகிடத்தும் வானுலகிடத்துமாருமரசமொல்லா ரு மவன்பெயர்சொல்லியானவனொன்றிருக்கையிற் கண்ணினுமினிய வவனுயிரைக்கொல்வாயோ! கொன்றனு மதின்பின் புன்னரசு நிலைபெறுந்தன்மையிதோவென்க. (௪௮)

ஆயினுமவனை நீ காண்டிலாமையாற்
றாயினுமன்பமை யரசன்றன்மையாய்த்
தீயினுங்கொடும்வினை தெரிந்துசெயலாம்
வீயினுநலதென விரும்பிச்செய்யவோ.

உரை.— இவையெலாமாகியு மீளவுமவனைக்காணாமையா லின்றதாயினு மிக்கவன்புடைமையேயரசியலாகையி னெவெந்தீயினுங் கொடிய வுணர்வினைத்தெரிந்து குழந்தைகள்யாவுமிறக்கினு நலமென்றெண்ணி விரும்பிச் செய்வாயோ வென்க. (௪௯)

வீய்வினையஞ்சினர் விளிவிலாவரோ
தீய்வினையஞ்சினர் செத்துஞ்செத்திலாக்
தூய்வினையெஞ்சிலாத் துதியின்வாழ்வரோ
காய்வினையெஞ்சிலாக் கருத்தினானென்றான்.

உரை.— நீயிறத்தற்கஞ்சியல்லோ விவையெலாஞ்செய்யத்துணிகின்றா யாகினுஞ்சாதற்கஞ்சினவர்சாகாரோ? தீவினைக்கஞ்சினவராக்குஞ் செத்தானுஞ் சாகாதவரைப்போலத் தூயநல்வினை குறையில் விளைவிக்கும்புகழோ டென்றும் வாழாநிற்பார் மெலியாச்செந்தீயெயப்ப வேகுமுணர்வினோ யென்றானென்க. (௫௰)

ஏவியனென்பவ னிவையெலாமறை
நூலியன்றுளத்தஞ்சா நுவல்வதாயபின்
காலியனென்பவன் கதங்கொடோதினன்
மாலியன்றிறையவன் வதனநோக்கியே.

உரை.— அங்ஙனமேவியனென்பான் சற்றுமஞ்சாதிவை யாவையும் வேதநூற்படிசொன்னபின்பு காலியனென்பா

னிராசாவின் முகத்தைநோக்கி யுண்மயங்கிச் சினத்தோடு சொல்லத்துடங்கினானென்க. (௫௧)

வீரியர்தொழிலிதோ வெருவிப்புன்மைசேர்
நாரியர்தொழிலிதோ நவையிலாமறை
யாரியர்தொழிலென வரசியற்படப்
பூரியர்தொழிலினைப் புகன்றுளாயரோ.

உரை. — நீசொன்னது வீரர்க்குரியதொழிலோ வெருவி யினங்கொண்ட மாதர்க்குரியதொழிலோ? மாசில்லாதவேதயாரகர் சொல்லுந்தன்மைத்துப்பேசி யரசியல்கெடும்படி நீயே யீனர்க்குரியதொழிலைச் சொல்லிக்காட்டினாயென்க. (௫௨)

இன்வளர்தயைமலி யிறைவனேவலான்
மின்வளர்படைமுகத் திரத்தவெள்ளமாய்
முன்வளர்தகமையோர் பகைமுருக்கியே
பொன்வளர்முடிநலம் புனைவராயினர்.

உரை. — அளவிறந்தினிய தயையின்மிக்க கடவுளிட்ட வேவலரல்லோ முன்னிருந்தவராய் மாட்சியிற்பொலிந்த வெம்முந்தையாரேந்திய படைக்கலத்தின்வழியா யிரத்தம்வெள்ளமாகவோடும்படி தம்பகைவரை வெட்டிக்கொன்று பொன்முடிசூடி யாண்டாரல்லோவென்க. (௫௩)

சேய்வினைபுரிவரைச் சேர்த்தியோம்பவோர்
தாய்வினைபுரிதலே தருமமாம்பகை
நோய்வினைபுரிவரை நூறலுங்கொடுந்
தீய்வினைபுரிதலோ வென்றுசெப்பினான்.

உரை. — பிள்ளையின்றன்மையானடந்தவரைச் சேர்த்தியோம்பும்படி தானவர்க்கொருதாயாகநடப்பது தருமந்தானே, ஆகிலும் பகைவராய் மனநோகநடந்தவரை யரசன்கொல்லுவதுங் கொடியதீவினையாமோ வில்லையென்றான் காலியனென்க. (௫௪)

பொற்றொழில்வனமரப் பாவைபொற்பென
மற்றொழிலொளியொடு வஞ்சங்கோடிய
புற்றொழிலனைவரும் புகன்றுகோல்வளை
முற்றொழில்லத்தன முரியச்சொல்லினர்.

உரை.— அங்ஙன மரத்தாற்செய்யப்பட்டபாவை பொன்னாலலங்கரித்தாற்போல வங்கேகூடின மற்றவனைவரும் வீரமென்றுபெரும்பெயர்விளங்க வஞ்சகத்தாற்கோணிய புற்றொழிலையுரைத்து மூன்றனேவளைந்தசெங்கோல் முழுதும்வளைந்தொடிந்துகெடும்படி பேசினரென்க. (ருரு)

விழுக்குடையிவையெலாம் வழங்கக்கேட்டனு
மிழுக்குடைவழுவர செய்துவானென
வொழுக்குடையேவிய னுளத்துநொந்துளாய்
விழுக்குடையரசியல் விரும்பிக்கூறினன்.

உரை.—அங்ஙனம் பொய்யிற்வழியா யிவையெலாம்வழங்கக்கேட்டு மன்னவன்மிக்ககேடுகளை யடைவானென்றிரங்கி நல்லொழுக்கத்துயர்ந்த வேவியன் மனதிநொந்துயிர்களியாவையுநிழற்ற விழுமியகுடைநலந்தரும்படி யரசியல்கொடாமைவிரும்பி மீளவுஞ் சொல்லத்துடங்கினனென்க. (ருசு)

வேறு.

சீப்புறவுரைத்தமாற்றந் தந்தனகடுநோய்தீர்க்குங்
கைப்புறவுரைத்தமெய்மை கனிவெனக்கேட்கிற்பார்க்கே
துப்புறவிளங்குமௌவி சூடிநேயன்பைச்சூடிச்
செப்புறநினைத்தவரய்மை சினந்தினுமுரைப்பேனே.

உரை. — ஏவிய னெங்ஙனஞ்சொல்லத்துடங்கினனென்னில், இருசெவிகசக்கும்படி சொன்னமெய்யே யதனையினிதாய்க்கேட்டவர்க்குமுன்கேட்டபொய்யினால்வந்த நோயைத்தீர்க்குமருந்தாகுமே, ஆகையாற் செங்கதிர்வீசிவிளங்கிய முடிபைச்சூடினவரசனே யன்பினைக்கொண்டு நான்சொ

ல்லநினைத்தவாய்மையை நீயென்னைச்சினந்தாலுஞ் சொல்லுவேனென்க. (ருஎ)

நூலியனுணங்குகேள்வி நோக்கினார்முகத்தைநோக்கா
கோலியல்கோடக்கோடிக் கூறுவர்பகையிற்றீயார் [ர்
காலியனோக்கியாங்கு சீலைக்கொடியன்னார்கேட்பின்
வேலியல்பகையிலானும் வேரொடுகெடுமுன்வாழ்க்கை.

உரை.—மன்னனே நூல்வழியியன்ற நுணுங்கிய கேள்வியின்றன்மையைநோக்கினநல்லோர் முகத்தைநோக்கிச்சொல்லார். அரசியல்கெட்டுக்கோணும்படி தாங்கோணிட்டே சினவர் பகைவரினுந்தீயார். ஆகையாற் காற்றுவீசுந்தன்மையிற் றிரும்பியாடுஞ் சீலைக்கொடியையொப்பார்சொல்லுவதைக்கேட்டாயாகில் வேலையேந்தியெதிர்க்கும் பகையுமின்றி யுன்வாழ்க்கை வேரோடுகெடுமென்றறிவாயாக வென்க. (ருஅ)

கற்றுணர்மாட்சிபூண்டு கசடறுமறையினூலா [மோ
னுற்றறுபொருள்கடேர்ந்தே யுணர்த்துவதொன்றுகேண்
சொற்றுனுமெனதுசூட்சி துணிவிழிவாகத்தோன்றின்
முற்றுமொழியைக்கேட்டு முனிதியேமுருகுவேலோய்.

உரை.—முருகுவேலோங்கியவரசனே கற்றகல்வியின் மாட்சியைக்கொண்டு மாசிலவேதநூல்தந்த சில மெய்ப்பொருட்களைத்தேர்ந்து நான்சொல்லத்தகுமொன்றினைக்கேட்கக் கடவாய், நான்சொல்லுஞ்சூட்சி துணிவிலயேதமபாகத் தோன்றினுஞ்சொல்லுவதுமுடிப்பக்கேட்டுப் பின்பென்னைக்கோபிப்பாயாகவென்க. (ருகூ)

நீடியதவத்தினீண்டு சிறந்தமோயிசனைநிந்தை
கூறியவபிரோன்றத்தான் கோரனென்றவனையீண்டே
கீறியபுவிவிழுங்கிக் கெடுமவனைச்சார்ந்தோ
ரூறியவழலின்வெள்ளத் தொருங்கையம்பதவர்வெந்தார்.

உரை. — வேதத்துள் பலகதைகளைச்சொல்லத்துடங்கினனேவியனென்பான்: நெடுநாட்டேடினதவத்திற்சிறந்த மோ

யிசனென்பவனை யபிரோனுந் தாத்தானுங் கோரனு மென்னுமிம்மூவர் நிந்தித்ததனு லுடனேபிளந்தபூமி யவரையிழுங்கினதன்றி யவரோடுசேர்ந்த விருநூற்றைம்பதுபேரும் பிளந்தபூமிவாயா லூறியெழுந்த செந்தீவெள்ளத்தமிழ்ந்தி வெந்துபோனரென்க. (௬௰)

பின்னியற்பொருவாவன்றன் பெருந்தகையிகழ்ந்து [பேசு
மன்னியத்தவனேரீரா மாயிரத்தேழுநூறும்
வன்னியத்தடத்திலும்பி யயச்சினத்திறைவனீதி
யுன்னியற்குள்ளங்கூச வொருங்குவெந்தடலையானார்.

உரை.— மீளவு நிகராவியல்பிற்சிறந்த வம்மோயிசனுடைய பெருமையையிகழ்ந்துபேசின வறிவின்மையரலங்கேதானே வல்லமைக்கொத்தசினத்தைக்காட்டிய வாண்டவனுடைய நீதியையுணர்ந்தமாத்திரத்தி லுள்ளங்கூசம்படி யுடனே செந்தீத்திரண்டெழுந்து பதினாலாயிரத்தெழுநூறுபேரும் வெந்து சாம்பலானாரென்க. (௬௧)

தொகையிலாத்தகவிற்காட்சிச் சுடரெலிசேயென்பா [னைச்
சிகையிலாத்தலையனென்று சிறுவரெண்ணைந்திரண்டுந்
தகையிலாச்சொன்னபாலாற் சடத்திருகரடிபாய்த்து
நகையிலாற்றியவோர்செல்வ ரெடுங்கியார்த்தொருங்குமாய்
த்தார்.

உரை.— மீளவுந் தொகுக்கப்படாதமாட்சியிற்சிறந்த வரும்பொருட்களைக் காட்டுங்காட்சியின் சுடராகநின்ற தீர்க்கதரிசியாகிய எலிசேயுஎன்பவனை மயிரில்லாத்தலையனென்று சங்கைக்கேடாக நாற்பத்திரண்டுசிறுபிள்ளைகள் சொன்னமாத்திரத்திற் கொடியவிருகரடிகள்புறப்பட்டவர்மேற்பாய்ந்து நகைத்துச்சொன்ன வொருசொற் காரணமாக வொருப்படநடுங்கி யலறிச்செத்தாரென்க. (௬௨)

ஈறடியில்லானின்றுன்றந்தெழுதியமறைக்கற்பேழை
தேறடியடிகளேந்திச் செல்லமற்றெவருமென்னைந்

நூறடியகலநாத னுவன்றுதான்செய்தவேவ
லாறடியார்க்குந்தாரோ யாரணத்தறிதியன்றே.

உரை.—மீளவு முடிவுமாதியுமில்லாநித்தியகடவுள் சீனயி மாமலைமேற்றோன்றந்தருளின வேதமெழுதப்பட்ட விருகல் லுள்ளடைத்தபேழையை நன்னெறிவழுவாவடியிற் றேறிய குருக்களேந்தி வழியேபோகையின் மற்றவர்யாவருமண்டா மல் நாலாயிரமடியளவகன்றுநிற்ப வாண்டவன்றானேசெய் தகட்டளையை வேதத்திலையறிந்திருக்கிறாய் வண்டுகள்முழ ங்கு மதுமலர்மாலையையணிந்த வரசனேயென்க. (சுஈ)

செம்பதின்பிறப்பைந்தோடுஞ் சிறப்பணிவனையப்பே
ழை
தம்பதிவரக்கைகூப்பாத் தருக்கொடுநோக்கக்கான்முற்
கொம்பதினிலைகள்போலக் குழைந்தபெற்சமித்தாரங்கண்
ணம்பதினாயிரத்தே ழமைந்தபத்தொருங்குவீழ்ந்தார்.

உரை.—மீளவுஞ் செம்புமுதற்பஞ்சலோகத்தாற் சிறப்பி லலங்கரித்த முன்சொன்னமறைப்பேழை யொருநாள் பெ ற்சமித்தார்நாட்டிடத்துவருகையி லவர்கைகூப்பிவணங்கா தாங்காரத்தோ டதைப்பாராநின்று ரொன்றதனு லங்கேதா னே பெருங்காற்றின்முகத்துக் கொம்பிற்குழையு மிலைகளை ப்போல வெல்லாருங் குழையாநிற்க வவருள் ளைம்பதினாயிர த்தெழுபதுபேரும் விழுந்துசெத்தாரென்க. (சுச)

அள்ளிபவயயர்நாப்ப ணரசனுமிறைஞ்சிச்செல்லத்
தெள்ளியமறையின்பேழை தேர்மிசைவரவிற்சாய்ந்து
விள்ளியவலங்கலோசன் விழுமெனக்கையாற்றீண்ட
வுள்ளியவுலகமஞ்ச வுருமுபட்டன்னமாண்டான்.

உரை.—மீளவு மொருநாள் திரண்டுவரும்படைவீரரி னடுவே தாவிதனெனியவரசன் வணக்கத்தோடுகூடவந்து செ ல்லத் தெளிந்த வேதமெழுதப்பட்ட விருகல்லுடையப்பே ழைதானே தேரின்மேலெழுந்தருளச்செய்யும்போ தப்பே ழைசாய்ந்துவிழுமென்று மலர்ந்தமாலையையணிந்த வோசு

னென்பான் றனக்குவிலகினதென்றஞ்சாம லதைத்தாங்கும்படி கையாற்றீண்டினான், தீண்டினவுடனேயிதைநினைத்தவளவி லுலகெலாமஞ்சும்படி யிடிபட்டாற்போல வங்கேவிழுந்துசெத்தானென்க. (௬௫)

ஆதிநீடென்றகாலத் தம்புவிகூசச்செய்த
நீதிநீயறிதியன்றே நினக்கியானுரைப்பதென்னோ
வேதினியிறைஞ்சும்வேதத் திவையெலாம்புரிந்தநாதன்
நீதினீயுயிரீறாகத் தேடுகின்றவனேயன்றோ.

உரை.—அங்ஙனமாதிக்கடவுள் முற்காலத்துநெடிதாய்ச்சினந்து பூவுலகெல்லாங்கூசும்படிசெய்துகாட்டிய நீதியை நீயறிந்தாயொழிய நானுனக்குரைப்பானேன்? ஆகிலுநீ மெய்ந்நூலென்றுவணங்கிய வேதத்தெழுதப்பட்ட விவையெலாவற்றையுஞ்செய்த கடவுளாரெனிற் நீதுவிளையுமுறையானீ கொல்லும்படி யிப்பொழுதிற்றேடியகுழந்தையவன்றானல்லோவென்க. (௬௬)

அறத்துறுந்தகையுஞ்செங்கோ லாண்மையுமொளியு
மறத்துறுந்தீங்குதன்பால் வந்தபின்னாவதுண்டோ [நீங்க
புறத்துறுந் துயர்கண்டுய்வார் பொலிந்தநூற்புலமைநீரார்
நிறத்துறுந்தொடையன்மார்ப நிகர்ப்பருநிலையிதன்றோ.

உரை. — அங்ஙனமாகையி லறத்தினால்வரு மாட்சியுஞ் செங்கோல்தருவல்லமையும் புகழுமென்றிவையெல்லாமொழிந்து நீங்கும்படி பாவத்தால்வருங்கேடுகள் தன்னிடத்துவந்தபின்னராவதுண்டோ வில்லையாகையாற் கற்றநூலிற்சிறந்தோர் புறத்து மற்றவர்க்குவந்தகேடுகளைக்கண்டு தமக்குவாராதபடிக்குத்தப்பிப்பிழைப்பார், இதுவெத்தானுநிசராதமுறைமை விளங்கியமாலையையணிந்தவரசனேயென்க (ஆகையான் முன்காட்டியநீதியாற் பிறர்க்குவந்தகேடுகளைக்கண்டுன்னைக்காப்பாயாகவென்பது கருத்து.) (௬௭)

கட்புலனுணர்த்துங்காட்சிக் கசடர்சொல்லுதவிகேளே
மட்புலனளிப்பநாதன் மைந்தனாயுதித்தானென்ன [ல்

வுட்புலன்றெளிந்தன்றனை யொருங்குநீதொழுதிபின்னர்
விட்புலன்வேந்தனாக வினையறவாழ்வாயென்றான்.

உரை.— அங்ஙன மிருகண்டந்த வறிவொன்றினையுமுள்ள கசடர்வாய்மொழிகளை யுதவியென்றுங்கொளாமற் பூவுலகியாவையு மிரட்சிக்கும்படி யாண்டவனவதரித் திங்கே மனிதனாயப்பிறந்தானென்று மனதிற்றேர்ந்து நீயுங்கூடவவனை வணங்கக்கடவாய்,வணங்கினாயாகிற் பூவுலகாண்டபின்னர் வானுலகரசனாக வினையொன்றின்றி யெக்காலத்தும் வாழ்ந்திருப்பாயென்றானென்க. (௧௮)

நாற்கடற்கவியின்பாட லயம்பெறுக்கேட்டகோகோ
பாற்கடற்றிரிந்துநச்சுப் பயன்பெறும்பாந்தடானோ
நூற்கடற்கேள்விநல்லோ னுவன்றவைகேட்டுக்கான்முன்
மேற்கடற்சினத்துவேந்தன் மிக்குளம்வெருண்டுசொன்னான்

உரை.— அங்ஙன மேவியன்சொன்னபின்ன ரமிர்தக்கடலோடொத்த நால்வகைக்கவியா லினிதிற்பாடலே தனக்கின்பம்பயவாமற்கேட்டிருந்த கழுதைபோலவோ பாற்கடலிலே நெடுநாட்டிரிந் துண்டபாலாற் றனக்குநஞ்சுபெருகும்படி பயனைக்கொண்டபாம்புபோலவோ நூற்கடற்கேள்விநல்லோனாகியவேவியன் சொன்னவற்றைக்கேட்டுப் பெருங்காற்றின்முகத்து மேற்கடல்பொங்கினசினத்தோடு மட்டின்றி யெரோதனுங் கோபித்துச்சொன்னானென்க. (௧௯)

மொய்யுண்டதிறத்தவீரர் விளிவதற்கஞ்சுவாரோ
கையுண்டபசும்பொற்செங்கோல் கடிதவிழ்த்தனன்றே
நெய்யுண்டபடைகொண்டொன்னா னிறையுயிருண்டுநானு
மொய்யுண்டமடிவுற்றாலு முடியுடனினிதுமாள்வேன்.

உரை.—வல்லமையுடையவீரர் சாதற்கஞ்சார், இவ்வுலகாண்டு கைகொண்டசெங்கோலைப் பிறர்க்குவிடுதலிற்சாதலேநன்றாம். ஆகையிற் பிறந்தபகைவனைக்கொன்று குருதியொழுகும் படைக்கலத் தவனுயிருண்டபின்பு நானுஞ்செத்தாலு முடியோ டினிதாய்ச்சாவேனென்றானென்க. (௨௰)

என்றனனிறைவன் மீட்டு மிழிமதயானைச் சீற்றம்
வென்றனனொருவன் றனை யிடற்றலைமலக்கனென்பா
னின்றனனவனை நோக்கி நீதிநீத்துரைத்த காதை
சென்றனவெவணுங் கூசத் திசையெலா முழுமிற் சொன்னான்.

உரை. — அங்ஙன மரசன் சொன்னபின்பு மீளவு மதத்தைப் பொழிந்த யானையின் சீற்றத்தை வென்றவனாய்ப் படைத்தலைவனாய் மலக்கனென்பா னொருவ னங்கே நின்றான், அரசனை நோக்கி நீதிமுறையின் வழுவிச்சொன்ன கொடிய செய்தி சென்றவிடமெலாங் கூசும்படி யிடிமுழக்கத்தொடு சொன்னானென்க. (எக)

பொருந்தலர் தடிந்தெஞ்ஞான்றும் புள்ளின மினிது மாந்த
விருந்தமர சனிவேலோய் விரிந்த வென்னாட்டி லெங்கு
மிருந்தமர் சிறுவர் யாரு மெல்லையுநீங்கா தொல்லற்
கருந்தமர் பிறவொன் றெண்ணா தடுதியே சடுதியென்றான்.

உரை.—பகைவரை வெட்டி யெந்நாளுங் கழுகுமுதற் பலபறவைக ளினிதாயுண்பதற்கு விருந்தினைச் செய்யுமிடியோ டொத்த வேலினையுடையோ யகன்ற வென்னாட்டி லெங்குமமர்ந்த குழந்தைகள் யாவையு மொன்றினையும் விடாமற் றமரொன்றும் பிறவொன்றும் பாராம லுடனே கொல்வாயாகவென்று மலக்கனை நோக்கி யரசன் சொன்னானென்க. (எஉ)

குன்றிணையிணையிற் குன்றக் குவ்வியதோளினானு
மின்றிணையடியைச் சூடி விரும்பிய நிலையினாங்கு
முன்றிணை யெங்கும் வேரோ டுன்பகையொருங்கு தீர்ப்பே
னென்றிணையறக்காய்ந்தேகி யெழுந்திறைகோயிற் புக்கான்.

உரை. — மலையை யெதிராய் வைத்தா லது குறையென்று தோன்றும்படி திரண்ட பெரும்புய மலக்கனு மின்னிடமா யிலங்கியவரசன் பாதத்தைத் தலைமேற்கொண்டு நீ விரும்புந்தன்மையின்மேலுஞ் செய் துன்னாட்டிலெங்கு முன்பகையெல்லாம் வேரோடறும்படி தீர்ப்பேனென்று சொல்வி

நிகராச்சினத்திற் காய்ந்துசொன்னதை நிறைவேற்ற வவ
னேபோகையி லரசனுமெழுந்து தன்னரண்மனையிற் புகுந்
தானென்க. (௭௩)

வேறு.

புலக்கதம்பொதிரரியினங்கொடு புலியினங்கொடிதொ
வியெழக்
கலக்கமொன்றியவெறிகடம்பறழ் கடுகிவந்துணுகதமெனு
மலக்கனென்றவனொடுமுனிந்ததிர் மறவர்வெங்குலமருவியா
ங் [ர்குவார்.
கிலக்கமொன்றிலசிறுவர்பொன்றிட விறைவனென்றவை யய

உரை.—அங்ஙன மிக்கசினத்தோடுதிரண்ட சிங்கங்களும்
புலிகளுங் கொடிதாய்முழங்கிக் கலங்காநின்றவாட்டுக்குட்டி
களைப்பாய்ந்துண்ண வந்ததன்மையான் மலக்கனென்பவ
னு மவனோடொத்தகொடியசேவகர்பலருமொய்த்துக் கண
க்கொன்றின்றிக் குழந்தைகள்சாகும்படி யேரோதனேவிய
தன்மையிற் செய்வாரென்க. (௭௪)

முலைமுகக்கதிர்தழுவிமொய்த்தன முகைமுகப்பலசிறு
வரா
யுலைமுகக்கனலெரிகதத்தன ருவணிகட்கொடுவொழிதரும்
கொலைமுகத்தொடுகுருதியைத்துடர் குழவிதுய்த்துணுமழு
துக [மே.
வலைமுகத்தெளிபவிழுமுத்தொடு மவிருதுப்பெனமருளு

உரை.—அங்ஙனஞ்செய்துவருகையி லோரோரிடத்துமு
லைகளைத்தழுவி யவற்றோடுசாய்ந்திருந்த மலரும்பொத்த ப
லகுழந்தைகளுலையில்வளர்த்தகனலெய்துங்கதத் ததிர்ந்தசேவ
கர்வீசியவாளால்வெட்டுண்டமுகத்துக் குருதியுந்தாமுண்ட
நின்றபாலுந் துளிதுளியாய்விழுதலிற் கடலிடத்தெளிபொ
ழிமுத்துக்களும் பவளங்களுங்கலந்ததன்மையிற் றோன்றின
வென்க. (௭௫)

கரமுமற்றனர்தழுவுகின்றமொய் கதிருமற்றனர்கசடிலா
வரமுமற்றனர்நிறைதுயிர்த்துட லுதரமற்றனருயிர்படச்
சிரமுமற்றனர்சிதறவம்பிதழ் முளரியற்றெனச்சிறியதோர்
புரமுமற்றனர்கடிகையும்பல புடையிலற்றுகவெவணுமே.

உரை. — கொடுமையின்மிக்க சிலசேவகர் குழந்தையின் கையையு மக்கையாற்பிடியாநின்ற முலையையும்வெட்டி நேருடலெல்லாம்பிளக்க மார்பையும்வயிற்றினையுமறுத்துத் தலையையும்வெட்டி வாசவிதழ்நாறுஞ்சிதறும்படிதாமரையைக்கிழித்தாற்போலப் பலவிடத்தெங்கும் துண்டுகள்விழும்படி சிறியதோருடலைக் கண்டங்கண்டமா யறுப்பா ரென்க. (எசு)

அடாவிடாதனகொடுமையார்தரு கரியசேயனையென வருள்
விடாவிடாததுதழுவினுளவன் வெகுளமார்பொடுமகவினைக்
கடாவினனுருவொருவைவாள்வழி கடிதிலீருயிர்படமதுப்
படாவிளமுகையெழிலொடோர்கொடி படுவபோலவர்வி ழுவரே.

உரை. — வேறோரிடத்துக் கொலைத்தொழில்விடாத கொடியோர் கொல்லும்படி பிள்ளையைத்தருகவென்று தாயைக் கேட்க வவளன்புவிடாமையாற் பிள்ளையும்விடாமலிறுகத்தழுவினள், அவனோவென்னின் மிகவும்வெகுண்டு தாய்மார்போடு பிள்ளையைக்கடாவிக்குத்தினான், அங்ஙனமுருவிப்பாய்ந்தவொருவாள்வழியே யிரண்டுயிர்பட்டுத் தாயும்பிள்ளையுமலராவரும்போதுபூங்கொடியற்றுவிழுந்தாற்போல விழுந்தாரென்க. (எஎ)

இப்புறத்திவள்விடுதியென்ற திழுத்திழுத்தனளெரிகதத்
தப்புறத்தவன்விடுதியென்ற திழுத்தறுத்தனனவள்முகந்
துப்புறத்தனிமகவுதுண்டு துமித்துடற்குறையெறிகுவான்
செப்புறத்தகுமுறையகன்ற சினத்தழற்றியநினைவினான்.

உரை. — வேறோரிடத்துச்சேவகன் பிடித்தபிள்ளையைவிடுவென்று தா யிப்புறத்திழுக்க வெங்கதத் தவனப்புறத்திழு

த்திரண்டாகவறுத்தான். மீளவு மவனுக்கொருபிள்ளையாயிரு ந்தகுழந்தையைத் துண்டாக்கித் தாய்முகந்தெங்கு மிரத்தஞ் சிதறும்படி துண்டுகளையெறிந்தான் சொல்லுந்தன்மையை க்கடந்த சினத்திலழன்ற கொடியநினைவினனென்க. (எஅ)

நஞ்சினுர்தொழில்கண்டதாய்மறை வென்றுநாடினுநா
குகொண்
டஞ்சினுர்தொழில்கண்டிலாமையி லஃபிறுவுயிர்யேணிய
நெஞ்சினுடொழில்கண்டிலாமக னின்றுநீடழீவபகை
விஞ்சினுர்தொழில்கொண்டுவாள்வழி வெம்புணீருகவீவனுல்.

உரை. — வேறோரிடத்து நஞ்சொத்தசேவகர் செய்யுங் கொலையைக்கண்டதாய் தன்மகனைமறைக்கவுபாயங்களைத்தே டினுலு மிளமையாலஞ்சவுமறியாமையா லன்போடுதன்னு யிரைக்காக்க வுணர்வுடையதாய் செய்வதைக்கண்டுபிடியாம ற் பிள்ளை மிகவுமழாநிற்ப வவ்வோசைகேட்ட வெம்பகை மிக்கோர்கையால் வாள்வழியாயிரத்தமோடி யவனுஞ்சா வானெனன்க. (எகூ)

இடிக்குவார்சிலரிகழ்வினேடெதி ருடற்றுவார்சிலரி
ணையடி [நெய்
பிடிக்குவார்சிலர்தரையினேடுடல் புடைக்குவார்சிலர்பிளிர
யடிக்குவார்சிலரணைகையோடுட றுமிக்குவார்சிலரனுவெ
னத்
தடிக்குவார்சிலர்தறிக்குவார்சிலர் தணிக்குவாருயிரவருமே.

உரை. — அங்கங்கேசிலரிடித்தார்ப்பவு மிகழ்ச்சிகூறிச் சி னந்தெதிர்ப்பவுங் குழந்தைகள் காலிரண்டும்பிடித்திழுத்து த் தரையோடுமோதவு மிரத்தமெங்குஞ்சிதறும்படி குழவிக ளைத்தடியாலடிப்பவு மணைத்ததாய்கையோடணைக்கப்பட்ட மகனையும்வெட்டியெறியவு மணுவாகத்துண்டிப்பவுந் தறிப் பவுஞ்செய்தே யொருப்படவெல்லாருங் குழந்தைகள்யா வையுங் கொல்வாரொன்க. (அ௰)

உருவியேந்தியவுவணியின்விழி யுருவவெய்துறியுளையு
ளம்

வெருவிமாழ்கி—யிடிமுழங்கொலி மெலியமேவலருரறவே
கருவிமாசனகுழலினன்னையர் கலுழுகண்மழைகடுகவோ
டருவியாகியகுருதிநெய்மக ரனையிலாதுகவிடுவரால்.

உரை.— அங்ஙனஞ் சேவகருருவியேந்தியகொடும்வாள் கண்ணூடுருவி வெருவிக்குமின்றாகவும் வருந்தி யுள்ளமஞ்சி மயங்கும்படி யிடியினுமக்கொடியார்முழங்கவுந் திரண்ட பலமேகங்களாகவிரித்தகூந்தலோடு தாயாரெல்லாரு மழுங் கண்ணீர்மழையைப்பொழிபவும் வெள்ளத்தாறாகக்கரையொன்றின்றியோடும்படி குழந்தைகள் திரளாய்க்குருதிகளைச்சிந்துவாரென்க. (அக)

மூலையணிச்சுதரகலமேவயமூ மூலையெனச்சொரியமுது
தலையணிச்சுதரகலவேகமழ் தலையிருட்கவினழிவிட [கத்
நிலையணிச்சுதரகலமேயினி நிலையிமேமெனவிழவிழ
விலையணிச்சுதரகலமேவவினை விளைவிருயவர்மெலிவரே.

உரை.—அங்ஙன மூலையாபரணமாகநின்ற மக்கள்போன திரு வழுதாற்போல மூலைப்பால்சொரிந்தொழுகவுந் தாய்தலைக்கணியாகநின்ற பிள்ளைகள் செத்ததினான் முன்வாசநெய்யாலு மதுமலர்மாலைகளாலுங் கமழாநின்று தலைக்கழகாகிய விருண்டகூந்தலையழிப்பவு மிப்புவியிற்றமக்கணியாகநின்றமக்கள்போனபின் பினிப் புவியிலிரோமென்றயர்ந்துவிழவும் விலையேறப்பெற்றமணியணியாகநின்ற பிள்ளையெல்லாம் போய்த் தாய்மா ரொருங்குடன் மிக்க வினையுட்பொருமன் மெலிந்தழுவாரென்க. (அஉ)

என்கணேயுயிரமுதமேயென திதயமேயுயிரினிமையே
நின்கணேயுயிர்மடியவேநினை நினையவேயகனிலையுழி
தன்கணேயுயிரொடுமிரோனினி யெனவெலாடேமகர்தணர்வ
ரோ
புன்கணேயுயிர்பருகவேயொரு புனலறுவிழிபொழியுமே.

உரை.—மகனே யென்கண்ணே யெனக்குயிரமுதே யென்னிதயமே, என்னுயிர்க்கின்பமே, நீயொழிந்தபின்பு நா

னுன்னை நினைத் திப்பூவுலகி லிருப்பேனோ வில்லையென்று பி ள்ளையை யிழந்த வொவ்வொருதாய் வருந்தியடைந்ததுன்ப ந் தன்னுயிரையுண்ணுநிற்கத் தன்னிருவிழிகள்வற்றாதோராரு கக் கண்ணீரைப் பொழிவனவென்க. (௪௩)

தாயரோதையுமடிதரும்பல தனயரோதையுமுதிர
மே
பாயவோதையும்வதைசெயும்பல படைகளோதையுமறமலி
தீயரோதையுமினவரும்பல திசையிலோதையும்வெருவுறுந்
தூயரோதையுமிடியொடுங்கடல் துதையுமோதையுமிணையி
லா.

உரை.—அங்ஙனம் புலம்பியாற்றாதழுததாய்மாரோசை யு மட்டின்றிவெட்டுண்டிறக்கும்பிள்ளைகளோசையு மன்று சிந்தின விரத்தத்தினோசையு மவரைக்கொல்ல வீசினபலவா யுதங்களோசையு மக்கொடியசேவக ரலறிச் சினந்திடுமோ சையும் பலவிடத் தைப்போவென்றிரங்கினவரோசையு மக் கொடுமைகண்டஞ்சின நல்லோரோசையு மிவையெலாமொ ருங்குடன்கூடி யிடிமுழக்கத்தாலுங் கடலின்முழக்கத்தாலு நிகராதனவென்க. (௪௪)

வேறு.

வெவ்வினைவிளைத்தகாலை வினைவிளைவாகுந்தன்மை
மைவ்வினையுணர்ந்ததீய மன்னனித்திறத்திற்செய்த
வவ்வினைநினைத்துநிந்தை யனைவருமுறைப்பதல்லாற்
செவ்வினையுளத்துவந்த திருமகன்விளிந்தான்கொல்லோ.

உரை. — ஒருவன் விளைத்ததீவினை யவனைவருத்தும்வினை யைவிளைவிக்குந்தன்மைதப்பாம லிங்ஙனந் தீயமன்னனாகிய வெரோதன்மயங்கி யுணர்ந்தகொடுமையாற்செய்த கொலை யைநினைத்தயாவரு மவனைச்சொல்லு நிந்தையாகியபயனே யொழிய வவனேநினைத்தபடி செவ்வியவறநெறிவழங்குவது ணர்ந் திங்கவதரித்ததிருக்குமார னிறந்தானோ வில்லையெ ன்க. (௪௫)

தேனுகுமெசித்துநாட்டிற் சேர்ந்துறைநாதனங்கண்
மீனுகுமுடியிற்றாயும் வெண்மலர்வளனுங்காண
ஆனுகுகொலையின்றன்மை யுளம்பனித்தெஞ்சக்காட்டி
வானுகுநிறையைநீத்தார் வழுக்கதுகாண்மினென்றான்.

உரை.— மதுமலர்பூத்த வெசித்துநாட்டிற்சேர்ந்திருந்த திருக்குமாரனங்கே வான்மீன்முடியைச்சூழ்ந்த தன்றாயாகியமரியும் வெண்மலர்க்கொடியையேந்திய வளனாகியசூசையுங்காண யூதேயநாட்டிற் றிரளாய்க்குருதியைச்சிந்திய வக்கொலையாவையுந்தந்தகாட்சியாற்காட்டிக் கண்டவர்மனமேகுழைந்துமெலியாநிற்ப வான்வீடெய்தற்குக் காரணமாகிய நீதிநிறையைவிட்டு நடந்தவரடையுங்கேடு பாருங்களென்றானென்க. (அசு)

போர்முகத்தொன்னார்மார்பிற் புதைத்தவேலுயிர்சால்
சீர்முகத்தவன்றன்னாட்டிற் சிந்தியகுருதியோட [புண்ணுஞ்
வேர்முகத்தொருமாசில்லா விளைஞரைக்கொல்லுந்தன்மை
பார்முகத்திணையாத்தீமை பார்த்துளத்திரங்கிநொந்தார்.

உரை.— அங்ஙன மரியுஞ்சூசையும் வெம்போர்முகத்துப் பகைவர்மார்பிற்பாய்ந்துபுதைத்தவே லவருயிர்களையுண்டாற்போல வெரோதன்றன்னாட்டிற்றானே திரளாய்க்குருதியோடும்படி யழகியமுகத்து மாசில்லாதகுழந்தைகளைக்கொன்றதன்மை பூவுலகெங்குநிகராத கொடுமையாகப்பார்த்துத் தாமனமிரங்கிநொந்தாரென்க. (அஎ)

கடலுடைத்தரணியாவுங் களித்தினிதெழவீங்குற்ற
வுடலுடைக்கடவுடன்னை யொழிக்குபகைத்தகோமா
னடலுடைத்தன்னெஞ்ச லடைபெறும்பயனேநாதன்
மிடலுடைத்திறத்திலென்னு மேவலர்சூட்சியென்றார்.

உரை.— உடையாய்க்கடலைச்சூழ்ந்த வுலகமெல்லாமகிழ்ந்து நன்றாய்வாழும்படி பூவுலகிலிறங்கியுடலையெடுத்தநாதனைக் கொல்லவேணுமென் றவனைப்பகைத்தவெரோதன் ம

ற்றநாடெல்லாம் வாழாநிற்கத் தன்னுடொன்றே வருந்திமெ லிவது தானடைந்தபெரும்பயனே வாண்டவனுள்ளமிக்கதி றத்துமுன்னர் பகைத்த மனிதர்சூட்சி யென்னுருமென்று மரியுஞ்சூசையு நொந்தாரென்க. (அஅ)

கொழுமலர்ப்பள்ளிப்பார்ப்புக் கொடியபுள்பறிப்ப வன்ன
மழுமலர்த்தடமொத்தர்நாட் டன்னைமாரழுநோய்க்கேங்கிச்
செழுமலர்க்கொடிகளீன்ற தேன்முகைமுகிழாமுன்ன
ரொழுமலர்ப்பகைக்கான்முன்பட் டெனமகர்க்கிரங்கிநொந் தார்.

உரை.—மீளவுந் தாமரைப்பள்ளிமேலிருந்தகுஞ்சுகளைக் கொடியதோர்பறவைவந்து பறித்ததனாற் றுயன்னமழாநிற் கும்பூந்தடாகத்தொப்ப வந்நாட்டின்மக்களையிழந்த தாயா ரழுதவருத்தத்தைக்கண்டு தாமுமிருவர்மனதிலேங்கினதன்றி நற்பூங்கொடிகளீன்ற நறுந்தேனிறைந்தவரும்புகள் மலரா முன்னரவற்றிற்குப்பகையாயெழுந்த கொடியகாற்றின்முன் னேபட்டாற்போல வெட்டுண்டிறந்தகுழந்தைகளுக்கு மிர ங்கிநொந்தாரென்க. (அகூ)

கண்பொழிகலுழிபோற்றிக் களிப்புகுங்காட்சியுற்றுப்
புண்பொழியுதிரத்தாவி போக்கியமகவர்யாரும்
விண்பொழியொளியின்வாழ்ந்து வினையறுங்கதியிற்கண்டு
பண்பொழியுரையினுதற் பணிந்திவர்வாழ்த்திச்சொன்னர்.

உரை.— அங்ஙன மரியுஞ்சூசையுமனதிலிரங்கி யாறுகவ ழுதகண்ணீரைத்துடைத்தாற்போல மகிழ்வதற்குக் காரண மாக மீளவுமொருகாட்சியையடைந்து பட்டபுண்வழியாற் குருதியோடுயிரையும்போக்கி யிறந்தகுழந்தைகளெல்லாம் வான்செய்யொளியோ டொப்பவிளங்கிக் குறையொன்றின் றிவாழ்ந்து வினையறுஞ்செல்கதியிற்சென்றவராகக்கண்டு வீ ணைவாய்க்குரலோ டினிதாய்த்திருக்குமாரனைவணங்கி வாழ்த் திச்சொன்னரென்க. (கூ0)

வேறு.

ஆலமேயமுதாக்கியபான்மையாற்
சீலமேவிலன்செய்பகைதம்முயிர்
காலமேனியிறந்தனர்காந்திசெய்
கோலமேவுருக்கொண்டெழநல்கினாய்.

உரை.—என்னாண்டவனே யுயிரைக்கொல்லு நஞ்சினை நல்லமுதாகச்செய்தாற்போல நீதியொழுக்கமில்லாத வெரோதன்பகையாற் றம்முயிர்போ யுடலைவிட்டிறந்தவிடத் தக்குழந்தைகளொளியைவீசுமழகிற்சிறந்தவுருக்கொடு விளங்கத்தந்தாய்நீயேயென்க. (௩௧)

தேரொழுங்கதிரோன்றிரிவான்றெருக்
காரெழுந்திருட்காலமோர்காலமோ
பேரொழுந்தையைபெற்றனைச்சேர்ந்தனர்
சூரொழுங்கயர்ந்துய்த்திலர்வாழ்வரோ.

உரை.— தேர்மேலெழுந்த சூரியன்றிரியும் வானுலகின்றெருவிடத்து மேகங்களெழுந் திருட்காலமொன்றுண்டோ வில்லையே, அத்தன்மைத்தல்லோ வுன்பெருந்தயையைப்பெற் றான்றிருப்பாதத்தைச்சேர்ந்தயாவரும் வருந்தும்படிகேடையாமல் வாழ்வாரென்க. (௩௨)

தணிவருந்தடத்தாமரைபூத்தென
மணிவருந்துருமைந்தனிறங்கிநீ
பிணிவருந்துயிர்பேணியபெற்றியே
பணிவருங்கலையோரடைபான்மையோ.

உரை.— தாழ்ந்தகுளத்துட் டாமரைமலர்வதுபோல நீயுமிப்பூவுலகிலிறங்கி மணிகள்வருந்தும்படி யவற்றினுமழகியவுருவினையெடுத்து மகனாய்ப்பிறந்து பாவப்பிணியால்வருந்தின மனிதருயிர்கள்யாவையும் பேணியிரட்சிக்குந் தன்மையேகற்றசொல்வல்லவராயினுந்தாமடையுந்தன்மையோவென்க.
(௩௩)

அஞ்சினுலெனவிங்குவந்தண்மினு
யெஞ்சினுரிவர்க்கிங்கருளீந்துராய்த்
துஞ்சினுரொனவாங்கவர்தோன்றிவாழ்
நெஞ்சினுருயிர்நீடுறநல்கினுய்.

உரை. — அஞ்சியொளித்துவந்தார்போல விங்கேயெசித்துநாட்டிற்சென்றுய், சென்றவுடனே மெய்க்கடவுளறியாமையான் மெலியாநின்றவெசித்தார்வணங்கின பொய்யான தேவர்களையோட்டி இவர்க்குத்தயைச்செய்தாய், மீளவு நீவந்தொளித்தமையால் யூதேயநாட்டில் வெட்டுண்டகுழந்தைகள்செத்தாரென்றுதோன்றி யெக்காலத்தும்வாழ்ந்தவராகிச் சாதற்கஞ்சாவுயிரையடையத் தந்தாயென்க. (௬௪)

வளிவிள்ளாமுகைகொய்தெனமாய்ந்துதேன்
றுளிவிள்ளாமுகைத்தேற்றொடையாகநீ
யளிவிள்ளாதணிந்தம்மகர்யாவருங்
களிவிள்ளாவுயர்செல்கதிவாழ்வரோ.

உரை.—கொடுங்காற்றறுத்த மலராதவரும்புகளைப்போல வக்குழந்தைகளுஞ்செத்தபின்பு தேன்றுளிமாறுத வரும்புகளாற்கட்டப்பட்ட வாசமாலையாக நீயருள்விடாத வுன்மார்பணியாய்க்கொண்ட வக்குழவிகளெல்லாரும் பேரின்பம்பிரியாத செல்கதியிலெக்காலத்தும்வாழ்வாரென்க. (௬௫)

எண்ணின்மேலெழுஞ்சூட்சியியற்றிநீ
விண்ணின்மேலெழும்வீடடவந்துனை
மண்ணின்மேலெழுமாக்கள்பகைப்பரோ
புண்ணின்மேலெழுந்தீப்பொறியீட்டியே.

உரை.— அங்ஙன மனிதரையிரட்சிக்கும்படி எண்ணப்படாதசூட்சிகளைநடத்தி வான்மேல்வாழும்வீட்டை யெமக்குத்தரும்படி நீ மனிதனுய்வந்திருப்பப் பட்டபுண்மேற்செந்தீயைக்குவித்தாற்போலத் தம்மையிரட்சிக்க நீகொண்டதுயரின்மேலும் பூவுலகத்தோருன்னைப்பகைத்து வருத்தஞ்செய்வாரோவென்க. (௬௬)

மின்னைக்காட்டியவேகத்துற்றெல்கிப்போய்க்
கொன்னைக்காட்டியகோலம்விரும்பினர்
பொன்னைக்காட்டழல்போன்றரிதுன்றயை
தன்னைக்காட்டினர்நோய்செயுந்தன்மையால்.

உரை.—அங்ஙன முன்னேப்பகைத்தா லு மின்றேன்றின சீக்கிரத்தொல்கியொளித்துப்போய் வீணழகுள்ள பூவுலகின் வாழ்வுகளைவிரும்பினமனித ரவ்வாசையா லுன்னையெண் ணும லுனக்குத் துயர்களைவிளைவித்ததனுற் பொன்னைக்கெ டாமற் பொன்றன்னெளியைக்காட்டுந் தீயைப்போல வவ ரு முன்றயையைக்காட்டுவாரொன்க. (௩௭)

கடல்வண்ணத்தருதேகதிவாயிலே
யுடல்வண்ணத்தொளியேயுயிரேயுயிர்க்
கடல்வண்ணத்தணியேயருளேயென
மடல்வண்ணத்தலர்தாளைவணங்கினர்.

உரை. — கடலேரடொத்தவருதே கதியைச்சேர்வதற்கு வாசலே யெடுத்தவுடலின்வகையா லுயிராவிளக்கு மொளி யே யாவர்க்குமுயிரா யுயிர்க்கெலாம்வல்லமையிடு மோர ணியே யருளேயென்று திருக்குமாரனைவாழ்த்தி மலர்ந்தவ வன்றிருவடியை மரியுஞ்சூசையும்வணங்கினரொன்க. (௩௮)

வில்வின்மாரியின்விண்ணவர்நின்றிசைச்
சொல்வின்மாரியின்றாய்புகழ்பாடியுஞ்
செல்வின்மாரியிற்றேன்மலர்சிந்தியு
மெல்வின்மாரியினெள்ளடியேற்றினர்.

உரை.—மிக்கவொளியைப்பொழிந்த வுருவோடுநின்றவா னவர் மரியுஞ்சூசையுஞ்சொன்னதற் கிசைகளைச்சொன்னு ற்போல மிக்கபுகழ்ச்சிகளைப்பாடவு முகிலிடுமழையின்றன் மையான் மதுமலர்மாரியைப்பொழியவுஞ் சூரியனையொப் பத்திரளாய்க்கதிரைவீசாநின்றதேவகுழந்தையது திருப்பா தத்தைவணங்கினரொன்க. (௩௯)

நாதனன்றியு நாதன்றெரிந்ததன்
றூதனென்றகருணையன்றுஞ்சிலா
தாதலன்பெழுந்தாங்கவர்கண்டடை
சீதவின்பியல்பீங்கினிச்செப்புவாம்.

உரை. — இவையெல்லாவற்றையுங் காட்சியின் மரியுஞ்சூசையுங் கண்டபின்ன ரெரோதன்செய்தகொலையில்கப்படாத திருக்குமாரனன்றியு மிவன் றனக்கோர் தூதாகத்தெரிந்துகொண்ட கருணையனென்பவனுஞ் சாகாமற்றப்பினவகையையங்கேகண்டமையா லவன்மேல்வைத்தவன்பினளவாக வவரிருவருந் தம்மனத்தைக்குளிர்த்த வின்பத்தையடைந்த தன்மையை யினிச்சொல்வாமென்க. (௱)

குழவிகள்வதைப்படலமுற்றும்.
ஆகப்படலம் - உரு - இ - விருத்தம்
உ௲உ௱கூ௰௪.

இருபத்தாறாவது.

கருணையன்மாட்சிப் படலம்.

வேறு.

அல்லறத் துளங்குதிங்க ளணிந்தமீன் பரப்புப்போலப்
பல்லறத் தொகுதிவாய்த்த பணிபுனை சக்கரீய
னில்லறத் துணைவி குன்றத் திணையகற் பெலிசபெத்தை
சொல்லறத் துணையாய்த் தம்முட் டுணைபுறத் தின்றி நின்றார்.

உரை. — கருணையனென்று மவனைக்கொலையிலகப்படா மையான் மரியுஞ்சூசையு மிக்கமகிழ்ச்சியை யடைவதற்குக் காரணமேதென்றுங்காட்டத் துடங்கினார். ஆகையால் இரா விருள்கெடும்படி விளங்கியதிங்கள் சூழவணிந்தமீன்களின் பரப்புப்போலப் பலவறங்கள்யாவையுந் தொகுத்துச்சிறந்த வோ ராபரணமாகப்புனைந்த சக்கரீயனென்பவனுந் தனக் கில்லறத்துரிய துணைவியாக வயிரமலைபோலொத்த கற்புடை யளெலிசபெத்தையென்பவளுஞ் சொல்லப்படாதமுறைமையோ டு தம்முளொத்த துணையாகப் புறத்தொருநிகருமின்றி நின் றானென்க. (க)

ஐதுவளர் கொடையோ டொன்றக் கான்வளர் தவத்தின்
பொய்வளருலகினாசை போற்றியபுதல்வரின்றி [மிக்கோர்
மெய்வளர் திருவுளத்தின் வினையிதென் றுணர்விற்றேறி
மைவளர் துயரற்றேங்கி வயதுமுற்றியராய் நின்றார்.

உரை. — இல்லறமாகிய கைத்தானத்தோடு பொருந்தச்சே ர்த்திய துறவறமாகியகானத்தில்வளருந் தவத்தின் மிக்கவிரு வரும் பொய்வழியாகவளரு முலகினாசையையாற்றியபுதல்

வரில்லாமையா லதுதிருவுளமென் றுணர்ந்த தன்மையிற்றே றி மயக்கத்தால்வருந்துயரின்றிப் பெருமையிலோங்கி வய தின்முற்றிப்போனாரிருவருமென்க. (தங்குலத்தொளியும் வ யதிற்சாய்ந்த தமக்கோருதவியு மக்களாலாகுமென்று புதல் வர்மேலாசைகொள்வார்மனிதர், ஆயினும் பற்பலவிடத்துத் தங்குலத்திழிவு மீன்றோர்க்குத்துன்பமுங்கேடு மக்களாலாகு மென்றுகண்டமையா லவ்வாசை பொய்வளராசையென்று ணர்க.) (உ)

ஆட்சியின் றுணையா மின்பப் புதல்வனையின்றித் தாய்நல் லாட்சியின் றுணையைநேடி யருமறையுணர்ந்தவோதிக் காட்சியின் றுணையோடன்னார் கனிந்துயர்ந்தெவர்க்குஞானச் சூட்சியின் றுணைதாமாகித் துகடவிர்புகழின்வாய்ந்தார்.

உரை.—அங்ஙன மிவ்வுடற்கொருதுணையாகநிற்கு மினி யமக்களில்லாமையாற் றாயநல்லறமுயற்சியைத் தமக்குத்து ணையாகத்தேடி வேதநூற்கல்வியின்காட்சியு மொருதுணை கொண்டினிதாயுயர்ந்து மற்றெவர்க்குந் தாமொருஞானச்சூ ட்சியிற்பொலிந்த துணையேயாகிக் குறையாதபுகழின் மிக் காரென்க. (ங)

பாரவலர்மலர்ந்தசோலை படர்ந்ததண்ணிழலேபோலத் கரவலர்மலர்ந்துநல்குங்கனிந்ததேனெவர்க்குமூட்டிப் [தார் புரவலராகநொந்து புலம்பினர்க்குயிரேயாகி யிரவலருயிராய்ப்பேணி யிவர்க்குமோருடம்பென்றானார்.

உரை.—அங்ஙன மதுமலர்பரவி மலர்ந்தசோலைகள் விரி வாய்ச்செய்யுங் குளிர்ந்தநிழலைப்போலவிருவருந்தங்கையா கியமலர் மலர்ந்திடுந்தேனாகிய கொடையையெவர்க்குமூட் டிப் புரவலரென்னும்பெயரும்பெற்று வருந்தினயாவர்க் குந் தாமுயிராகநின் றவரைத்தேற்றியிரப்போரெல்லாரையு ந் தமக்குயிராகவெண்ணிப்பேணி யவர்க்குத் தாமோருடம் பினைப்போல நின்றாரென்க. (நொந்தாருறுதிபெறத் தேறி னமையா னொந்தார்க்குயிரானா ரில்லாதவர்க்குவேண்டியவ ற்றைக்கொடுத்தமையா லுயிர்க்குவேண்டும்பொருளைத்தே

டிக்கொடுக்குமுடலைப்போலவாகி யிரவலர்க் குடம்பாகுமொன்றுமெனன்க.) (ச)

பேரறக்கன்னிவயிற் பிறக்குமுன்றனக்குத் தூதென்
றோறத்தொகையோன்மைமைக் கரியதோர்புதல்வன்றோன்ற
வீரறப்படலைக்கண்ணி யேந்திவர்க்கிறைவனந்நாள்
நேரறக்கருப்பந்தந்து நெடும்புகழளித்தலோர்ந்தான்.

உரை. — பூமானுந்தேவியு மங்ஙனநன்னெறிவழுவாவருகையி லாண்டவன் புருடனுதவியின்றிப் பெரிதறத்துயர்ந்து கன்னிமாருதவள்வயிற்றுத் தானவதரித்துப்பிறக்குமுன்னே தனக்குத்தூதாக நிறைந்தவெல்லாவறத்திற் பொலிந்தவொருவன் மலடியின்பிள்ளையாய்வந்துதோன்றும்படி யில்லறந்துறவறஞ்சேர்த்திக் கோவைமாலையாசவணியாநின்றவிவர்க் கந்நாளிலே நிகராதகருப்பத்தைத்தந்து நெடுநாளழியாப்புகழையளிப்பத் திருவுளமானுனென்க. (ரு)

கேழ்வியின்புலமைமூத்தோன் கெழுமியமுறையிற்றூம
வேழ்வியின்முகத்துநிற்ப வேய்ந்தவிண்ணவற்கண்டஞ்சச்
சூழ்வினையறிந்தவானோன் சொல்லெடுத்தஞ்சேலஞ்சல்
வாழ்வினையுரைப்பத்தூதாய் வந்தனென்கேட்டியென்றான்.

உரை. — ஆண்டவனினைத்ததை முடிப்பதற் கொருநாள் கேள்வியின் புலமைமூத்தோனுகியசக்கரீயன் றனக்குவந்தமுறையோடு தூபவேள்வியின்முகத்துநிற்கும்போது தோன்றியவொருவானவனைக்கண்டஞ்சினுன், அஞ்சின நினைவினையறிந்தவானவ னஞ்சாதஞ்சாதென்று நீவாழ்ந்துவக்கும்படி தூதாகவந்தேன், கேளிதென்றுனென்க. (சு)

மாண்டகையறத்தின்பாலான் மைந்தனேநினக்குத் தோன்றக்
காண்டகையுரியபண்பாற் கருணையன்வனையென்பா
யாண்டகைமுகத்துமுன்னி யவற்கதர்செப்பஞ்செய்து [ன்.
சேண்டகையடையத்தீயோர் செலுத்துவானெறியிலெஃ்று

உரை. — வானவனெங்ஙனஞ் சொன்னானென்னில் மாட்சியிற்பொலிந்த வறத்தின்றன்மைத் தொருபிள்ளையுனக்குப்பிறந்து அவனிடத்துக்காணப்படுங் குணத்துரியபெயராக வவனைக்கருணையனென்பாய், அவனேயவதரித்துவரு மாண்டவன் முகத்துமுன்னேதோன்றி யவற்குவழியைச்செப்பமிட்டுப் பாவிகளும் வானுலகேற்ற பெருமையையடையும்படி யவரை நல்லறநெறியி லொழுகச்செய்வானென்றானென்க. (௭)

முதிர்ந்தனகாலஞ்சாய்ந்த முகத்திலேவாவுவப்பநானே
யெதிர்ந்தனபிள்ளைகாண்பே னென்றனன்மூத்தோனென்று
பொதிர்ந்தனவயிர்ப்புற்றேயே புகன்றவைகண்டாலல்லா [ட்
லதிர்ந்தனதுயரினூமை யாதியென்றெளித்தான்வானோன்.

உரை. — வானவன்சொன்னதற்கு மூத்தோனாகியசக்கரீயன்சொல்வான்: என்வயதுகாலமுதிர்ந்துசாய்ந்தபின்பு நானேமகிழும்படி யெனக்கெதிராக வொருபிள்ளைவரக்காண்பேனென்றான், என்றதற்குவானவனு நீயுட்சந்தேகப்பட்டமையா னான்சொன்னவற்றை நீகாணுமளவு மதிர்ந்தவுளத்தில்வருந்தி யூமையாகக்கடவாயென்று மறைந்துபோனானென்க. (அ)

இவ்வழியெவருமஞ்ச விருந்தவன்கையாற்பேசிச்
செவ்வழியுளத்துத்தேவ திருவுளம்போற்றியையம்
வெவ்வழிவொழியத்தூது வந்தகாபிரியேல்சொன்ன
தவ்வழிகருப்பமாகி யதிசயித்தோங்கினானே.

உரை. — இங்ஙன மெவருமதிசயித்தஞ்சும்படி மாதவனாகியசக்கரீய னூமையாய்க்கையாற்பேசி யொழுக்கமுடைய மனதி லாண்டவன்றிருவுளத்தைவணங்கிக் கொண்டவையந்தீரும்படி தூதாய்வந்தவானவனாகியகாபிரியேல் சொன்ன தன்மைத்துத் தன்றேவியிடத்துக்கருப்பமாகித் தானதிசயப்பட்டு மனதிலோங்கினானென்க. (௯)

இலங்கெழுவிசும்பின்வெண்கோட் டிளம்பிறைக்குழ
விபோல

நலங்கெழுகருவிற்றேன்றல் நவிவளர்ந்தாருந்திங்க
ளலங்கெழுபருவத்தெம்மை யளிப்பதற்கிரங்கிநாதன்
வலங்கெழுகன்னிதன்வாய் மைந்தனேதானுமானான்.

உரை.—வான்மேல் வெண்கோடுள்ள விளம்பிறைவிளங்கிவளர்வதுபோல வெலிசபெத்தைநலம்பெறக்கொண்ட கருப்பத்தி லழகியபிள்ளையும்வளர்ந் தாருந்திங்கள்மைந்தபருவத்து நம்மையிரட்சிக்கும்படி மனதிலிரங்கினநாதன் மேன்மையிற்சிறந்த கன்னியாகியமரியென்பவளிடத்துத் தானுமகனானனென்க. (௰)

கண்கவர்வனப்பிற்றூது கபிரியேலுரைத்தகாலை
பண்கவர்மொழிநற்கன்னி பயன்படவெலிசபெத்தை
மண்கவர்கருப்பந்தாங்கி மகிழ்ந்தனகாதைகூற
விண்கவரரசாளோங்கி விளைந்தபலுணர்வுமுற்றாள்.

உரை. — இன்பத்தாற் கண்ணைப்பறிக்கு மழகுளவுருவிற்றேன்றிக் காபிரியேலென்னும்வானவன் திருவவதாரத்துக் கன்னிமரியென்பவளிடத்துத் தூதுசொன்னவளவில் வீணைக்குரலினுமினியமொழிவாய்க்கன்னி பயனையடையும்படி கிட்டினதன்னுடயொருத்தி யெலிசபெத்தையென்பாள் மாட்சியிற்பொலிந்த கருப்பத்தைத்தாங்கி மகிழாநின்றசெய்தி சொன்னவளவில் வானுலகிலும்விரும்பப்பட்ட வரசாளாகியமரியென்பவள் களிகூர்ந்தோங்க வதற்கடுத்தபலவற்றையுங் காட்சியிலறிந்தாளென்க. (௰௧)

பூவிடைக்குளித்ததேன்போற் புதல்வனைத்தான்சூற்பூண்ட
மூவிடைப்புரக்குங்கோன்முன் மூதிரருட்டோயெய்திக்
கூவிடைப்பொதுவற்றுற்ற குழவியைமருவத்தானே
பாவிடைப்புகழின்மிக்கபயன்கொள்வானெனக்கண்டுற்றாள்.

உரை.— மரியென்பவள் காட்சியிலறிந்த செய்திகளாவன: மலராதவரும்பிடத்தொளித்த தேனைப்போலத் தானணிந்தகருப்பத்தின் மகனைக்கொண்ட மூவுலகாளுமாண்டவற்கு

முன்னே பூவுலகிற்றோன்றி யவற்குமுதிர்ந்தவருளின் றாதா கவந்து பூமியிலுள்ளபொதுமுறையின்றி யற்புதமாயெலிச பெத்தைகருப்பத்தில் வந்தபிள்ளையைத் தான்மருவிப்போ ஞற் பாவலர்சொல்லத்தகும் புகழ்யாவையுங்கடந்தபயனை ய வனடைவானென்று காட்சியிலறிந்தாளென்க. (எலிசபெத் தைவயதின்முற்றினவளாய் மலடியுமாய்த் தரித்தகருப்ப மற் புதமாய் வந்ததென்றனென்க.) (௰௨)

பானலஞ்சினைகொள்மேகம் பகல்செயவிளங்காதென்
தேனலஞ்சினைகொள்பைம்பூத் தேங்கமழாதோதேவ [ஞே
ஞானலஞ்சினைகொள்கன்னி துளங்கருள்புரிதலுள்ளி
வானலஞ்சிவணிச்சூற்கொள்மைமையையணுகலோர்ந்தாள்

உரை. — அணியாகச்சூரியனையுட்கொண்டமேக மொளியைச்செய்வதுபோலவு நறுந்தேனைச் சூலாகக்கொண்டமலரும்வாசனைவிடும்போலவு மாண்டவனைச்சூலாகத் தரித்தகன்னியாகியமரியென்பவளும் விளங்கியவருளைச்செய்யவுணர்ந்து வான்மேல்வழங்கு நன்மைகளைத் தாயும்பிள்ளையுமடையும்படி தான்கருப்பந்தரித்த மலடியாகியவெலிசபெத்தையண்டைக்குடனேபோக நினைத்தாளென்க. (௰௩)

ஓர்ந்தவைபறத்திரட்சிக் குரித்துணையவற்குங்கூறத்
தேர்ந்தவையுயர்ந்தகேள்வி செறிந்தருட்புலமையோனுங்
கூர்ந்தவையிமிழிற்கேட்டுக் குணமிதென்றிருவர்வானத்
தார்ந்தவைசூழநீண்ட வதர்கடந்தேகலுற்றார்.

உரை. — மரியென்பவளங்ஙன நினைத்தவற்றை நல்லறமுயற்சிக்குரியதுணைவனாகிய சூசைக்குச்சொல்லித் தேர்ந்தகல்வியி லுயர்ந்தகேள்வியோடுபொருந்தி மிக்கவருளின் புலமையோன்சூசையுஞ் சொன்னதைமிகவு மினிதாய்க்கேட்டுட்போதமேல குணமென்றுரைப்ப விருவருங்கூட நிறைந்த வானோர்சலை சூழ்ந்துவர நெறிவழிகடந்துபோகத் துடங்கினரென்க. (௰௪)

வேறு.

தேசிகப்பாவையிற் சிறந்தகோதையாள்
மாசிகற்பானொளி கமலமார்தல்போ
லாசிகற்சூலணிந் தல்கல்நான்குமா
யேசிகற்பாயொளி பரப்பவேகினார்.

உரை.—அங்ஙன மழகியபொற்பாவையினுஞ் சிறந்தபெண்ணாகியமரியென்பவ ளிருளின்பகையாஞ் சூரியன்கதிரைத் தாமரையுண்டதுபோலப் பாவத்தின்பகையாஞ் சூலையணிந்துநாளுநாளாய்த் தீவினைபகைத்துப்பாயு ஞானவொளியைத் தானேபரப்பும்படி யன்றிருவர்கூடிப்போனாரென்க. (௰௫)

ஆரணவடிவினோ னரியசூலெனுங்
காரணமறிகிலாக் கருத்திலோங்கிய
பூரணவருளினாற் பொலிந்தின்பாரலை
வாரணநீந்தியுண் மகிழவேகினார்.

உரை.—வேதவடிவோடுநின்றசூசையுந் தன்கருத்திலடைந்த பூரணவருளினாலோங்கி யதற்குக்காரணமாகிய தேவசூற்செய்தியை யப்பொழுதவனறியாம னிறைந்தவின்பக்கடலினீந்திநீந்தி யுளத்துமிகமகிழ்வெய்தி யன்றிருவர்போனாரென்க. (௰௬)

குயிற்றுணைபடலையங் கலனிற்சேர்ந்திவர்
குயிற்றுணைகுயிலுமின் னிசையிற்கூத்தெழ
மயிற்றுணையாடிய பொழில்வளைத்தநீ
ளெயிற்றுணையுயர்நக ரகலவேகினார்.

உரை.— கோத்தமணிவடங் கடைப்பூட்டிசையி லொன்றுபட்டதுபோல மரியுஞ்சூசையும் பிரியாமற்சேர்ந்துசோடாய்க் குயில்கள்கூவிய விசைகளோடுபொருந்தி யினியகூத்தாக மயில்களுஞ் சோடாயாடாநின்றபூஞ்சோலைகள்சூழ வளைக்கப்பட்ட நீண்டமதிளாலுயர்ந்த நசரோத்தென்னுந்தந் நகரைவிட்டுப் போனாரென்க. (௰௭)

செண்பகமலர்ந்தகாத் திரளும்பொய்கையும்
வண்பகடுழைத்தபூம் வயலுநாடுந்தம்
பண்பகவிசையொடப் படிகடந்துபோய்
விண்பகலவனென வெற்பினேறினர்.

உரை. —அங்ஙன மிருவர்போகையிற் சண்பகச்சோலைக ளையும் பூந்தடங்களையும் வலியகிடாக்களுழுத பூம்வயல்களை யு மிவையெலாம்வழங்கிய வந்நாட்டையு மன்பிணையியன்ற தம்மனத்தின்விசையோடுகடந்து சூரிய னுதயகிரிமேலெ ழுந்தாற்போலத் தாமுமொருமலையை யேறினரென்க. (௰அ)

கண்புதைத்தனவிருள் கலந்தசோலைசூழ்
மண்புதைத்தனமணி வளர்குன்றுச்சிமே
னண்புதைத்தனநசைச் சிறைநலங்கொடு
விண்புதைத்தனமினின் விரைவுற்றேறினர்.

உரை. — கண்ணைப்புதைத்த விருளைச்செய்யுஞ்சோலைக ளாற்சூழப்பட்டு மண்ணுட்புதைத்தமணிகளைவிளைவிக்கு ம ம்மலையுச்சிமேலே யன்பினாற்றூண்டப்பட்ட தம்முடைய வாசையையிறகாகக்கொண்டு மேகத்திற்றோன்றியுட்புதைத் தொளிக்கு மின்கள்விரைவோ டேறினரென்க. (௰௯)

பிழையிடைக்குளித்தநோய் பெயர்க்கவோர்ந்துவா
னுழையிடைக்குளித்தபல் லுறைவிண்டாண்டிமின்
மழையிடைக்குளித்தென வளர்ந்தபன்மலை
நுழையிடைக்குளித்தரு ளுதலிப்போயினர்.

உரை. —பாவத்தால்வருந்துயரைக் கருணையனென்பவற் குப் போக்கவேணுமென்னுங்கருத்தோடுபோகையில் வான த்திற்றிரியும் பலதுளிமேகங்களைத்தாண்டி மின்னிமேகத்து ள்ளொளிக்கு மின்னலைப்போலத் தாமும் பலமலைகளைத்தாண் டி நுழைவழிக்காட்டினு ளொளித்துப்போ யருளினினை வோடுபோனரென்க. (௨௰)

தீய்முகத்திணங்கில தில்லைச்செஞ்சுடர்
காய்முகத்திருளில்லை கழ்மு நீத்தமே
பாய்முகத்தணையில்லை யன்புபற்றிய
வாய்முகத்தரியதோர் வருத்தமில்லையால்.

உரை. — தீயின்முன்னே வேகா திணங்காததில்லை, சூரிய ன்முன்னேயிருளுமில்லை, நிறைந்தவெள்ளத்துமுன்னே யணையுமில்லை, அத்தன்மைத்தன்புபற்றினவிடத் தரியதோர்வருத்தமுமில்லையென்க. (ஆகையான் மலைகளிலுள்ளகடும்வழிகளை யவருமன்பினுல்வருந்தாமற்கடந்தாரென்பதுகருத்து.) (உக)

துணியுடையுணர்விடுந் துணிவுற்றன்பிரு
லணியுடையலரடி வருத்தத்தஞ்சிலார்
பிணியுடைவரைகளும் பிரிந்தநெட்டிடைக்
கணியுடைநெறிகளுங் கடிதினீந்திஞர்.

உரை. —அங்ஙனமிருவருந் தெளிந்தவுணர்வினுற் றுணிந்து பற்றியவன்பின்மிகுதியா லழகியமலரினு நொய்யபாதம் வருந்துதற்கஞ்சாமற் றன்பநிறைந்தமலைமேல் வழிகளையு நெடிதாய்ப்பிரிந்த மருதநிலத்தின்வழிகளையும் விரைவோடு கடந்தாரென்க. (உஉ)

யாப்புரியன்பிரு ளையென்றேகலுந்
தூப்புரிமுத்தணி தோன்றச்சூழ்முகைக்
காப்புரிவலர்ந்தநீ ணெறிகடந்துபோய்ப்
பூப்புரியெயினலம் பொலியநோக்கிஞர்.

உரை. — அவற்றையாவையுங்கடந்தபின்பு செய்யுளின்றன்மையா லொருப்படத் தம்முட்கட்டப்பட்டவன்புடையோர் மரியுஞ்சூசையுஞ் சீக்கிரமாய்நடந்து தூயமுத்தணிவடங்கள் தூங்கினாற்போலத்தோன்றிய பலவெள்ளரும்புகளைக்கொண்டசோலைகள்சூழ வன்போடுமலராநிற்கு நெடிதோர்வழியையுங்கடந்து தாந்தேடியவழகிய பூதமாபுரத்தின்மதில்கள் வான்மேற்றோன்றக்கண்டாரென்க. (உஈ)

மின்னெதிர்விளக்கென விரிந்துவில்செயப்
பொன்னெதிர்மணியெனப் புரிந்தவன்பினாற்
றன்னெதிரிலார்க்குமுன் சக்கரீயனுந்
துன்னெதிர்துணைவியுந் தொழுதெதிர்ந்தனர்.

உரை. — இவர்வருவதையறிந்து மின்னையெதிர்கொண்ட விளக்குப்போலவும் விரிவாயொளியைப்பரப்பப் பொன்னையெதிர்கொண்டமணிபோலவு மன்பினாலொவ்வாத மரியுஞ் சூசையுமென்றிவரைச் சக்கரீயனுந் தன்றுணைவியெலிசபெத்தையு மொருப்படவந்துதொழு தெதிர்கொண்டாரென்க. (உச)

நீர்த்தமெய்யுயிரிணைத் தழுவுநீர்மையாற்
சீர்த்தருந்தவர்தமைத் தழுவித்தேன்மலர்
போர்த்தகொம்பணைத்தபூங் கொடியைப்போலருட்
கூர்த்தநன்மாதருங் குடங்கைவீக்கினார்.

உரை. — அங்ஙன மவரெதிர்வந்துசென்றவளவி லுடலுதன்னுயிரை யன்போடுதழுவினதுபோலச் சிறந்ததவத்தோராகியசூசையுஞ் சக்கரீயனுந் தாந்தம்மைக்கட்டிக்கொண்டு பூத்தகொம்பினைச்சுற்றிப் பூங்கொடியதை யணைத்ததுபோல வருளின்மிக்கமாதராகியமரியு மெலிசபெத்தையுந் தாந்தம்மையணைத்துக்கொண்டாரென்க. (உரு)

அள்ளியவலர்களு மலருள்வாசமுந்
தெள்ளியகனிகளுங் கனியுட்டேறலும்
வள்ளியமணிகளு மணியுள்வாமமு
முள்ளியநிலைக்கவ ருறைந்தசீர்மையே.

உரை. — அங்ஙன மவர்தாந் தம்மைத்தழுவிக்கொண்டதெத்தன்மைத்திருந்ததோவெனில், நெருங்கிப்பூத்தமலரு மலருட்கொண்டவாசம்போலவுந் தெளிந்தகனிகளுமவையுட்கொண்ட நறுந்தேன்போலவு மாபரணத்துள்ள மணிகளுமவையுட்கொண்டவொளியின் வடிவுபோலவு நினைத்தவித்தன்மைத் தந்நாலுபெருந் தம்மைத் தழுவிக்கொண்டிருந்தாரென்க. (உசு)

வேறு.

வற்றியேமுகின்மாரிசெய்வாரியாற்
பெற்றியேபெறுமோடையிற்பெற்றநாள்
முற்றியேநயமுற்றுறச்சூலரு
ளூற்றியேயெனக்கன்னியுரைத்தனள்.

உரை.—கன்னியாகியமரியென்பவ ளெலிசபெத்தையை நோக்கிக் கோடையில்வற்றினதடாகம் பெய்தமழையின்வெள்ளத் தினிதாய்நிறைந்து குணம்பெற்றாற்போல நீயும்பிள்ளையின்றியுன்வாணாண்முற்றினபின்பு மிக்கவின்பங்கொண்டுமகிழும்படி யிக்காலத்துப் பிள்ளைவரமடைந்து கருப்பத்தைக்கொண்டாயே யென்றாளென்க. (உஎ)

உரைத்தவாய்மையிருசெவியூடினி
திரைத்தவாண்மையிலேந்தியகருவுறை
வரைத்தவாமமகன்கருமாசறக்
கனைத்தவாயிலனுட்களித்தானரோ.

உரை.—அங்ஙனம் மரியென்பவள்சொன்னவாசக மெலிசபெத்தைசெவியுட்புகுந் தொலித்தவல்லமையா லிவளேந்தியகருப்பத்துள்ள வொளியாலெழுதப்பட்டாற்போல வழுக்குளமகனாகிய கருணையன்கருப்பவழியால்வருஞ் சென்மப்பாவத்தைக்கடிந்து வொலிபடப்பேசும்படி தனக்குவாயில்லாமையா லுள்ளேகளிப்போடு மகிழ்ந்தானென்க. (உஅ)

நிருதிவாய்திறந்தங்கையினேருட்
கருதிவாய்திறந்தாசிகதைத்தலாற்
பருதிவாய்திறந்தள்ளிருள்பட்டெனச்
சுருதிவாய்திறந்தாசுதுடைத்தனள்.

உரை.—வரையாக்கொடுப்போனொருவ னன்போடு பேசினவுடனே நிறையக்கொடுக்கு மவன்கையைப்போல மரியென்பவளுந் தயையைக்கருதி வாய்திறந்து புகழ்ச்சியைச்சொன்னமாத்திரத்துச் சூரியனொளிசெய் தன்வாயை

த்திறந்தவளவின் மூடினவிருளெலாம்படுவதுபோல வில் லூந் தன்வாய்மலர்ந்தவுடனே கருணையன்கொண்டபாவவி னையெலாமொழியும்படி துடைத்தாளென்க. (உகூ)

துடைத்தவாசறச்சூலுறைதோன்றலாங்
குடைத்தயாநிகருந்தவிர்ந்துள் ளூணர்
விடைத்தயாபமோடீந்தவரத்தொகை
படைத்தநாதனருட்பயனெய்தினான்.

உரை.—அங்ஙனம் பாவந்துடைக்கப்பட்டதன்றிக் கரு ப்பத்திலிருந்தகருணைய னெல்லாவுவமையுங்கடந் தங்கேதா னே தேர்ந்தவறிவினையடைந்து தயையைப்புரிந்து சகல்வர த்தொகையுந்தந்து படைத்தகடவுள்செய்த வருளின்பயனை மிகவுமடைந்தானென்க. (௩0)

மூகையின்முற்றியவாசமெனுமுதிர்
தகையின்கன்னிவயிற்றிடைத்தற்பர
னகையின்றன்மையிற்கண்டுநயந்தருட்
டொகையினங்கவன்றுடொழுதேத்தினான்.

உரை. — அங்ஙனங் கருணையன் றனக் கறிவும்வரத்தொ கையும்வந்தவளவிலே மல்ராவரும்பினிடத்துமுற்றி வாசனை புறத்துத்தோன்றவீசினாற்போல மாட்சியின்முதிர்ந்தகன்னி வயிற்றி லவதரித்தநாதன் மணிநகையழகோடுதோன்றக் கா ட்சியிற்கண்டுமகிழ்ந்து தானடைந்தமிக்கவருளினாற்றான் ற ன்றாய்வயிற்றிருந்து மவன்றிருப்பாதத்தைத் தொழுதானெ ன்க. (௩க)

ஏற்றருங்குணத்தேத்திய நாதனு
மாற்றருங்குணத்தாய்வயிற்றின்பொடு
தூற்றருங்குணத்தோன்றலைநோக்கலாற்
சாற்றருங்குணத்தாரருடாங்கினான்.

உரை.—அங்ஙன மரியமுறையிற்கருணையன்றொழுதநாத னு மாறுதநற்குணத்துயர்ந்த தன்றாய்வயிற்றினின்றினிதாய்க் கருணையன்றன்னை நோக்கினதனு லிவன்சொல்லிலடங்காத

தன்மைத்து மீளவுநிறைந்தவருளின்வரங்களையடைந்தானென்க. (௩௨)

மாரியாற்பிரளாறெனமைந்தனுட்
டாரியாற்றகுசால்பருடன்மைமேல்
வாரியாற்பிரண்டன்னையுமல்கொளி
மூரியாற்றுதிமுற்றெடுத்தோதினள்.

உரை.—பெய்தமழையின்மிகுதியாற் பிரளுமாறுபோல மகனாகியகருணையனுளத்தின்வழியாற்கொண்ட மிக்கவருளின்றன்மைமேல் வெள்ளமாகப்பிரண்டு தன்றாயு நிறைந்தடைந்தகாட்சியினொளிமிகுதியாற் றுதிகளைச்சொல்லத்துடங்கினாளென்க. (௩௩)

மக்கடங்கியமாசறமைந்தனாய்த்
திக்கடங்கிலதேவனைச்சூலொடு
தொக்கடங்கியதாயிவண்டோன்றவந்
திக்கடங்கிலவின்பளிப்பாள்கொலோ.

உரை.— எலிசபெத்தை யெங்ஙனந்துதிகளைச்சொன்னாளென்னில், மனிதரிடத்திலுள்ளபாவங்களையொழித் திரட்சிக்கும்படி தானுமனிதனாகி யெண்டிக்கிலுமடங்காதகடவுளையொருப்படக் கருப்பத்தின்வழியாக வடக்கிவைத்திருக்குந் தேவதா யிங்கேவந்து தேனினுமினியவின்பத்தை யெனக்கூட்டுவாளோவென்க. (௩௪)

பிரிந்தகன்றினைதேடியபெற்றமோ
வெரிந்தகூழுயிரொன்றியமாரியோ
சொரிந்ததன்மைவரத்தொகையீகநீ
விரிந்தநீணெறிவந்தெனைமேவினாய்.

உரை.—பிரிந்த தன்கன்றைத்தேடிவரும்பசுபோலவோ, கோடையிற்காய்ந்தபயிர்க்குயிராகப்பெய்துவரு மழைபோலவோ, நீ கன்னித்தாயே மட்டின்றிச்சொரிந்ததன்மைத் தெனக்குவரங்கள்யாவையுந்தொகுத்துத்தரும்படி விரிவாய் நீண்டநெறிகளைக்கடந் தென்னைத் தேடிவந்தாயென்க. (௩௫)

வேய்ந்தமாட்சியின்மேவருமேன்மையால்
வாய்ந்தமாதருளாசிமலிந்தநீ
யாய்ந்தவாய்மைகடந்தரிதாசியுட்
டோய்ந்தநீயணிசூற்கனிதானுமே.

உரை. — அடைதற்கரிய முறைமையி னியுள்ளணிந்தமாட்சியின்மேன்மையா லெல்லாமாதருள்ளு மாசீர்வதிக்கப்பட்டவளுநீயே, உணரப்படுந் தன்மையினு மரியவாழ்த்துதலினுண்முழுகி யாசீர்வதிக்கப்பட்டவனு நீ கொண்டகருப்பத்தின் கனியாகிய வுன் றிருக்குமாரனேயென்க. (௩௬)

நின்றன்வாய்மொழியென்செவிநேர்பட
வென்றன்வாயுறைமென்பிக்கின்புறி
மின்றன்வாயெனமேவியுகண்டுளத்
துன்றன்வாயருளாண்மையிலோங்கினன்.

உரை. — உன்வாய்மொழியே யென்செவிகளிற்பட்டவளவி லென்வயிற்றுள்ளபிள்ளைமகிழ்ந்து மின்னலைப்போல வுள்ளேயன்போடுகுதித்து நீசொன்னவுரைகளின் வல்லமையான் மனதிலோங்கினனென்க. (௩௭)

நீதவாய்நெகிழாநெறிநாயகன்
வேதவாய்மொழியாகவிளம்பிய
சாதவாய்மையுன்வாய்தகவுன்புகழ்
சீதவாயிலெங்குங்கிளைப்பாரென்றுள்.

உரை. — நீதிறன்முறைகளைத்தப்பாதகடவுள் வேதமாகத் திருவுளம்பற்றினயாவு முண்மையாகி யுன்னிடத்துத்தகும்படிசெலுத்துவானென்றமையா லுன் றுதிகளைப்பாடி யெங்குமெல்லாரும்பரப்புவாரென்று ளெலிசபெத்தையென்க. (௩௮)

பட்டசெங்கதிர்மீட்டவைபானின்மேல்
விட்டவெண்பளிங்கொத்திவள்மேவலோ
டிட்டதன்புகழ்தன்னிறைமோன்றனை
யொட்டமீட்டனள்கன்னியுமோதியே.

உரை.—கன்னித்தாயாகிய மரியென்பவளைத் துதித் தெலி சபெத்தை யங்ஙனஞ்சொன்னபின்பு தன்மேற்பட்டகதிர்க ளைத்திருப்பிச் சூரியன்மேலேவிடுங் கண்ணாடியைப்போல வாசையோ டெலிசபெத்தை தனக்குச்சொன்னதுதிகளெல் லாம் ஆண்டவனைச்சேரும்படி யவற்றைத்திருப்பிக் கன்னி யாகியமரியென்பவள் சொன்னாளென்க. (௩௯)

வேறு.

தெருளாறெளிந்தவென்னுளமென் றிருநாயகனைப்பு
கழ்ந்திறைஞ்ச [ந்துவப்ப
வருளாலுயிரொன்னுயிரொன்னை யளித்தோன்முகத்திற்கெழு
மருளாறளர்ந்தவிவ்வடிமை மனந்தானிரங்கிப்பார்த்ததயைப்
பொருளாலெவருமுறைமுறையாற் புகழ்ந்தென்னைச்செல்
வியென்பார்.

உரை. —மரியென்பவ ளெங்ஙன மறுமொழிசொன்ன ளென்னில், ஞானத்தாற்றெளிந்த வெனதுள்ளமே யென்னா ண்டவனைத்துதித்துவணங்கவு மருளினாற்பொலிந்த வென் னுயிரோ யென்னையிரட்சித்தநாதன்முகத்தி லெழுந்துமகிழ வுந் தளர்ந்துமயங்காநின்ற விவ்வடிமையை யாண்டவன்மன மிரங்கிப்பார்த்த தயையின்பொருட்டாக வெல்லாரு மெல் லாத்தலைமுறையோடு மென்னைப்புகழ்ந்து பாக்கியமுள்ளவ ளே யென்பாரென்க. (௪0)

விண்பால்முதன்மூவுலகசைக்கு மிடவின்மிக்கோனெ
ன்னிடத்துத் [வே
திண்பால்வளமேசெய்தமையாற் றிருத்தன்னாமம்புகழ்பட
நண்பாலிணையாக்குணத்தொகையோனயந்தெஞ்ஞான்றுமு
றையெஞ்சா [வான்.
மண்பால்தன்னைத்தொழுதஞ்சு மக்கட்கேதான்றயைசெய்

உரை. — வானமுதன் மூவுலகனைத்தையு மசைத்தற்குரிய வல்லமைமிக்கோன் மாட்சியுள்ள விவையெல்லாவற்றையு மென்னிடத்திற்செய்தமையா லவன்றிருநாமமேவாழ்த்த

ப்படுமாம். அங்ஙனமன்பினுனிகரப்படாதகுணத்தோன் மனம்பொருந்தியெக்காலத்துந் தப்பாமற் பூவுலகிடத்துத் தன்னைவணங்கியஞ்சாநிற்கு மனிதர்யாவர்க்குந் தயையைச் செய்வானல்லோவென்க. (௪௧)

கேழ்வார்தடக்கைவலிகாட்டிக் கிளர்தீயுணர்விற்செருக்குளத்துச் [னாக்குகின்றான்
சூழ்வார்சிதைத்தான்வயத்துயர்ந்தோர் துகள்செய்நிவப்பிறூழ்வாருயர்த்தான்பசித்தயர்வார்சாலநிறைத்தான்றிருமல்கியாழ்வார்வறியோராக்குகின்றான் மாறுநீதிவயமிக்கோன்.

உரை.— ஆண்டவனெக்காலத்தும் விளங்கியதன்றடக்கையின் றிறத்தைக்காட்ட நடத்தினநீதிமுறையெங்ஙனமென்னில், தீவினையுணர்ந்து மனதிலாங்காரத்தைநினைத்தவரைக் கெடுத்தான், திறத்திலுயர்ந்தோர் பாவத்தாற்கொண்ட வுயர்ந்தவிடத்தினின்றுவீழத்தள்ளினான், அறத்தைப்பற்றித் தாழ்ந்தவரையுயர்த்தான், பசித்துமெலிந்தவரை நிரப்பினான், பொருட்செல்வமென்றினைநாடிமலியவாழ்பவரைத்தரித்திரராக்கினான் மாறுதநீதிநெறியின்வல்லநாதனென்க. (௪௨)

அண்ணத்தலையின்முறைகடந்தேயபிரமுதன்மூத்தோர்க்குரைத்த [ம்ப
வண்ணத்தருந்தன்றயையுள்ளி வழுவாவன்பிற்பணித்தொழுனெண்ணத்தொழுகுமிசறயலை யிரங்கிக்கைக்கொண்டானென்றாள்
கண்ணத்தகுதிகடந்தெனையாள் கருணைமிக்கவானரசாள்.

உரை. — அணுகுந்தலைமுறையெல்லாங்கடக்கும்படி தன்றயையைநமக்குச்செய்ய முன்னே யபிரமென்பவன்முதலாய மற்றமூத்தோர்க்கெல்லாஞ் சொன்னதன்மையையின்று நினைத்துத் தப்பாதமுறையி லன்போடு தன்பணிவிடையைச்செய்யாநிற்கு மடிமைத்தனத்துநடத்துவரு மிசறயலாகியபூதரை யிரக்கம்புரிந்துகாக்கும்படி கைக்கொண்டானென்று கருதுந்தன்மையைக்கடந்தகருணைமிகுதியாலென்

னை யாளாநிற்கும் வானுலகரசாளாகிய மரியென்பவள் சொ
ன்றாளென்க. (சஙு)

இனையபலவுமிசைத்திசைப்ப வின்பக்கடலூடுளமூழ்
கத்
தனையரருளாற்றெளிந்தெதிர்ப்பிற் றுயரிவ்வாறன்றுவந்தா
ணனையகொம்பார்குயிலன்ன நயப்பவளர்தேய்மும்மதிமற்
றனையரினிதாங்குறைந்துற்ற தனைத்துமறைதற்கெவர்யாலார்.

உரை.—இங்ஙனம் பலவுஞ்சொல்லிச்சொல்லி யின்பக்க
டலின்முழுகி மரியுமெலிசபெத்தையுமென் றிருதாயார் தம
திருபிள்ளைகளருளினு லித்தன்மைத்தன்றுமுதலெதிர்ப்பிலே
தானே மிகவுந்தெளிந்துள்ளுவந்தபொழுதே பூவரும்பணிந்
த கொம்பிலிருந்துவாழு மிருகுயில்களைப்போலப் பின்னையு
ந் திங்கள்மூன்றுமுறையில்வளர்ந்து தேயுங்காலத் தங்கவரி
ருந்தவளவிற் சம்பவித்தயாவையுஞ்சொல்லும்படி வல்லவ
ராரென்க. (சச)

அங்கட்படர்வான்செஞ்சுடர்முன் னருகேசுங்கனுதி
த்ததுபோ
லிங்கட்சுடரொத்தவதரித்த விறைவன்பிறக்குமுன்னெவருந்
தங்கட்சிறுமைதீர்ந்ததெனத் தகுங்காரணங்காணுவப்பத்
திங்கட்குழவிக்கோட்டுருவிற் சிறந்தத்தோன்றல்தோன்றின
ஞல்.

உரை. — அழகுளவிடங்களைப்பரப்பின வான்மேற்றிரியு
ஞ்சூரியன்முன்னேயணுகி வெள்ளியுதயம்போல் விவ்வுல
கிடத்தொருசூரியனையொப்ப வவதரித்தநாதன்பிறக்குமுன்
னே காரணமறியாதுலகிலெவருந் தங்கள்வினையின்சிறுமை
தீர்ந்ததென்றாற்போல மிகவுமகிழாநிற்க விளம்பிறைவடி
வோடு சிறந்தகருணையன்பிறந்தானென்க. (சரு)

பிணித்தநரதேவிறையவற்கே பீடமாகவனைந்தமது
பணித்தகமலச்செங்கரத்திற் பயந்தமகவையேந்தியருட்
குணித்தகன்னியணைத்தனகாற் குழவிக்கூட்டும்வரத்தொகை
யைக்
கணித்ததிறத்தூட்டின்னல்லாற் கதிர்வானவருமறிவரோ.

உரை.—அங்ஙனங் கருணையன்பிறந்தபின்பு தேவதத்துவமு மனுத்தத்துவமு மொன்றுபடவிசைத் தவதரித்தநாதற்குப் பீடமாகவலங்கரிக்கப்பட்டு மதுவைச்சொரிந்த தாமரையொத்தசெங்கையிற் கன்னியாகியமரியென்பவள் பிறந்தபிள்ளையையேந்தி யருளே நினைத்து மார்போடணைத்தவளவிலே தானக்குழந்தைக்கூட்டின வரத்தின்றொகையை நினைத்தவளாக வவற்றையூட்டினவளொழிய வானவர்முதலாயறியுந்தன்மையோ வில்லையென்க. (சசு)

கனியேபார்த்தான் றிருமுகத்தைக் கண்டானுவந்தானருட்குளித்தான்
[ங்கிப்
றுனியேதீர்ந்தானுரையுதவாத் துள்ளித்துதித்தானுணர்வோ
பணியேகிளர்பூங்கரத்தொல்கிப் பணியச்சிரத்தைக்கோட்டுகின்று
[தோன்.
னணியேவாழ்ந்தான்வரப்பவ்வ நயப்பத்தாழ்ந்தானிளமூத்

உரை.—அங்ஙன மரியென்பவளேந்திய வன்றுபிறந்தவிளவலா யறிவினாலும்வரத்தினாலு மூத்தோனாகியகருணையனின்பமாய்ப்பார்த்தான், அவள்திருமுகத்தைக்கண்டான், கண்டவளவின்மகிழ்ந் தருட்கடலின்மூழ்கினான், தன்றுயர்யாவையுந்தீர்ந்தான், உரையுதவாமையான்மகிழ்ச்சியாற்றுள்ளியவளைத்துதித்தபாவனைகாட்டினான், உணர்விற்சிறந்து குளிர்ந்த வவள்பூங்கரத்திற் றனைசந்தொல்கி யவளைவணங்கத்தன்றலைதாழக்குனித்தான், மிகவும்வாழ்ந்தான், வாழ்ந்துவரங்களின்கடலினு ளமிழ்ந்தினனென்க. (சஎ)

மெய்கொள்மறைநூனெறிவழுவா விளைந்தவுவப்பிலெட்டாநாட்
[பின்
கைகொள்முறைகட்டிருந்தலொடு கருணையன்பேரிட்டன
னைகொள்குழவிகருணையினு லவிழ்நாட்பரிவுதீர்ந்தவையன்
மொய்கொள்ளுணர்வோடுரைகொண்டே முதலோன்மேல்
வாய்த்துதிமுடித்தான்.

உரை.— மெய்யானவேதநூல் விதித்தநெறியின்வழுவாதப்படி யவன்பிறந்தவெட்டாநாளாகி விளைந்தமகிழ்ச்சியோ

டு செய்யவேண்டியகைமுறையாவையுந் திருந்தச்செய்து கருணையனென்னும்பெயரையுமிட்டவளவிலே யழகியபிள்ளையின்கருணைவிளங்கக் கட்டப்பட்டிருந்தநாக்கவிந்தூமையாய்நின்ற குறைதீர்ந்த தகப்பனாகியசக்கரீய னுணர்விலோங்கி யுரைகொண் டன்று விரிவாய்முதலோனாகியகடவுளைத்துதித்தானென்க. (சஅ)

நிரையிற்றேய்ந்தவழகிளையோ னீர்ப்பவாசியோகியபின்றுதியிற்றேய்ந்தவுரையெவர்க்குஞ்சுவையிற்கனிந்துகனிகூறிமதியிற்றேய்ந்தபதத்தாளு மறைதோய்மாட்சிமாதவனுநுதியிற்றேய்ந்தவாளுயிரீர் நோய்கொண்டகன்றுபோயினரால்.

உரை. — இவையெலாமுடிந்தபின்பு பிறையைமிதித்தபாதமுடைய மரியென்பவளும் வேதத்தையணிந்தமாட்சியையுடைய மாதவன்சூசையும் பொன்னழகொளியிற்சிறந்த விளையோனாகியகருணைய னுயரும்படி யவனையாசீர்வதித்தபின்ன ரெவர்க்குமினியவுரைகளைச்சொல்லித் துதித்துக்கூர்ந்த நுனியிற்றேய்ந்தவடிவா ளுயிர்வேறாக வுடலையறுத்தாற்போலநொந்துபிரிந்துதாமிருவர்தம்பதிக்குப்போனாரென்க. (சகூ)

தொலைகொள்வாளா லுயிர்பிரிந்த கொள்கைத்தன்றோர்பிரிந்தினும்வெண் [மியா
கலைகொள்பதத்தாள்பிரியாதோர் கருணைவிளைத்தவன்பொருலைகொள்ளழவிற்றுயர்கொண்டே வொளிப்பவெசித்துமேவியகா [றனையுணர்ந்தாள்.
லலைகொள்ளுணர்வோடன்புணர்ந்தே யருளின்பெயரோன்

உரை. — அங்ஙனங் கொல்லும்வாளா லுடலைவிட் டுயிர்பிரிந்ததன்மைத் திருவரகன்றுபிரிந்தகாலத்து மிளம்பிறைபாதத்தணிந்தமரியென்பவள் பிரியாதகருணையினு லக்குழந்தைமேல்வைத்த வன்பினையொழியாதவளா யுலையுள்வளருந்தீப்போல மனதில்வளர்ந்த மிக்கதுயரைக்கொண்டுமுன்சொன்னபடியொளித் தெசித்துதேசத்துக்குப்போகிறபோ தலைகொண்டஞ்சு முணர்வுடையளாயினுந் தன்னன்பினைநினைத் தப்போதுங் கருணையன்றன்னை நினைத்தாளென்க. (ருய)

செய்தவுதவிபாசமென்த்திருந்தீருயிராவிசித்திடுமார்
பெய்தவுதவிகொண்டசிலர் பேணுதொழிந்தாற்பிறர்துயராக்
கொய்தவுதவிசெய்யுரவோர் குன்றுத்தங்கண்ணட்புரிமை
யெய்தவுதவிக்களவன்பு மெய்திப்பிறரைமேவுவரால்.

உரை. — ஒருவற்கொருவன்செய்த வுதவிபாசமா யிருவ ரீதம்முயிரொன்றுபடச்சேர்த்திக்கட்டு மாலாயினுமவ்வுதவியைக்கொண்டசில ரதைமனதிற்பேணுமன் மறந்தாலும் பிறர்க்குவந்ததுயரைத்தீர்ப்ப வவர்க்குதவினபெரியோரோவெனிற் குறையாதநட்பின்றன்மையாகத் தாஞ்செய்தவுதவிக் களவாகவவர்மேலன்பும்வைத்துப் பிறரைமறவாது மேவாநிற்பாரென்க. (௫௧)

மாறுவருளோடின்னணமே மறைந்ததிருவெம்மகற் காணுக்
கேறுவெகுளியரசெல்லாச்சிறுவர்கொல்வானென்னவுயி [ன்
றீருய்மாள்வன்கருணைபனே வெய்தியவனையொளிக்குதுமெ
ருருவன்போடருந்தவனே டறைந்தாள்கருணைநிலைநெஞ்சா
ள்.

உரை. — சொன்னதன்மைத்துக் கருணைநிலையாய்நிற்கு நெஞ்சுடையமரியென்பவள் மாறுதன்றயையா லெசித் திலொளிக்கப்போகையிற் கருணையனைநினைத்து நாமொளித் துப்போ யெந்திருக்குமாரனைக்காணுமையாற் றேறுதவெ குளியோ டேரோத னிந்நாட்டிலுள்ளகுழந்தைகளையொரு ங்குடன்கொல்வான், ஆகையாற் கருணையனுங்கூட வெட்டுண்டிறப்பானேவில்லையாவென்றதனு னுமேயவனூரிற்செ ன்றவனையுமொளித்தானல்லதென்று விடாதவன்போ டருந் தவனுகியகுசையோடு சொன்னுளென்க. (௫௨)

வெருவின்மிக்கோரொவித்ததெலாம் விண்ணேறென்
பாரன்னமறை [யாற்
யுருவின்மிக்கோனெய்தியவன் புரிமைக்கஞ்சிமறுத்தமை
செருவின்மிக்கோனுணர்ந்தபகை செப்பிச்சிறுவனொளிக்
குபவான் [ர்.
திருவின்மிக்கோர்வானவனைச் செலுத்துநின்றாருண்மிக்கா

உரை. — மிகவஞ்சுபவர் கேட்டவொலியெலா மேகத்தி டியொலியாகநினைப்பார், அதுபோல வேதவடிவாய்நின்றகருணை தேவதிருக்குமாரன்மேல்வைத்த வன்பினளவாக வஞ்சினதினா லவள்சொன்னதற்குச் சம்மதியாமன்மறுத்தான், ஆசையாற் பகைத்தவெரோதனினைத்த கருத்தினைச்சொல்வி யெலிசபெத்தையுந்தன்பிள்ளையையொளிக்கும்படியவளண்டைக் கொருவானவனைப்போகவிட்டாரென்க. (௫௩)

வேறு.

அடைந்தவானவ னறைந்தவைகேட்டெலிசபெத்தை
குடைந்தநோயுளங் கொடுந்தழல்குடித்தெனக்கொண்ட
மிடைந்தபாசறை பொறாமையில்வீழ்ந்தனளுயிர்கெட்
டுடைந்தகாலையி னுடனிலைவிழுவதும்போன்றே.

உரை. — அவர்விட்டவானவ னெலிசபெத்தையண்டையிற்சென்று சொன்னவற்றைக்கேட் டவளவதரித்தநாதற்கிரங்கித் துயராற்குடைந்தமனதி லழலைக்குடித்தாற்போல வுட்கொண்டதுன்பமிகுதியைப் பொறுக்கமாட்டாம லுயிர்கெட்டொழிந்தவளவி னுடனும்விழுவதுபோல மயங்கிவிழுந்தாளென்க. (௫௪)

எம்மையீங்களித் திருவிசும்புயர்ந்தவானயங்க
டம்மைநீரொடு தான்றரவிளவலாய்ப்பிறந்த
செம்மையோன்றனைச் செகுத்திடப்பகைப்பரோவென்ன
வெம்மைபாயழல் விழுங்கினவிருப்பினளுளைந்தாள்.

உரை. — மயக்கந்தெளிந்தபின்பெழுந்து நம்மையிரட்சித் துயர்ந்தவான்மேலுள்ளவாழ்வுகளை யினிதாய்நமக்குத்தரும்படி குழந்தையாய்ப்பிறந்த செம்மையோனாகிய திருநாதனைக்கொல்லக்கருதிப் பகைப்பாருண்டோவென்று செந்தீயைவிழுங்கினதன்மைத் தன்புடையவெலிசபெத்தை நொந்தாளென்க. (௫௫)

சொரிந்தசீர்பொருத் தன்மையிற்றாடுசெய்துகளோ
வரிந்தநோய்கெட வெசித்தனராற்றியுவறனே

விரிந்தநீணெறி விளைத்தநோய்கொடுதளர்ந்திங்கட்
பிரிந்தநாயகன் பெரிதுளைவானெனவழுதாள்.

உரை.—நிறைமழைசொரிந்ததுபோல வளவொன்றின்றி யிங்கேயாண்டவன் பொழிந்தசெல்வங்களைப் பொருததன்மையா விந்நாடுசெய்தபாவத்தாலோ தீவினையால்வந்தநோய் கெட்டறும்படி யெசித்தார்செய்தவறங்களாலேயோ நெடும்வழிவிளைவிக்குந்துயராற்றளர்ந் திந்நாட்டைவிட்டு நாதனங்கேபோகக்கருதிப் பெருந்துயரடைவானென்று மிகவுமழுதாளென்க. (௫௬)

உவணியாலுயிருளையவீர்த்துடலெனவுளைந்தே
சிவணிவானவன் றிருவுளமிதுவெனத்தேற்றிக்
கவணியாலலை கருத்தமைந்தையனையிழந்த
வவணியார்தன தருமகவொளிப்பதுமுணர்ந்தாள்.

உரை.—அங்ஙன முயிருளையும்படி வாளாலுடல்வெட்டுண்டதுபோல வெலிசபெத்தை வருந்தாநிற்ப வந்தவானவனனுங்கி வருந்தாதே திருவுளமிதுவேயென்று தேற்றினபின்பு துன்பத்தலைந்த கருத்துமமர்ந்து சக்கரீயனென்னுந்தகப்பனையிழந்த நன்மையானிறைந்த தன்மகனைத் தானுமொளிப்பக்கருதினாளென்க. (௫௭)

சூர்முகத்துரித் துணையிலாணிகர்ப்பருந்துணிவாற்
கார்முகத்துமின் கடுகலோடழிபொருளளித்துச்
சீர்முகத்ததன் சேயெடுத்தருந்தவமுள்ளி
நீர்முகத்தநா டகன்றுகானொளிப்பதேநினைத்தாள்.

உரை.— உரியதுணைவனைவருந்தியிழந்தவளா யொவ்வாத துணிவோடு மேகத்துமின்னைப்போலத் தோன்றியொழியு மிவ்வுலகின்பொருள்களை யொருங்குட னிரப்போர்க்கீந்து தன்செல்வமகனையெடுத்துக்கொண் டரியதவத்தைக்கருதி நீரிற்குளிர்ந்தநாட்டைவிட்டுக் கானகத்தொளிக்கும்படி நினைத்துப்போனாளென்க. (௫௮)

அன்புமச்சமுங் காட்டியவழி துடர்ந்தக்கல
முன்புகாவிடர் முயன்றநீணெறிகளைக்கடந்து

துன்புமல்குமுட் குடியலான்மன்னுயிர்துடரா
வின்புகுத்ததோ ரிருண்டகானிடையொளித்துறைந்தாள்.

உரை.— அங்ஙனம் வேறொருதுணையுமின்றித் தன்னன்புந் தன்னச்சமுந் தனக்குக்காட்டினவழியேபோய் முன்னடவாதனவாய்த் துயரைவிளைத்தனவாய் நீண்டபற்பலநெறிகளைக்கடந்து துன்பமுமிருளுமென் றிருகுடிகளொழிய மனிதரண்டாமையாற் றனக்கின்பம்விளைவிக்குமோரிருண்டகாட்டிலேபோய் மகனோடொளித்திருந்தாளென்க. (௫௯)

தெண்ணஞ்சுழியிற் செவ்விதட்டாமரைப்பள்ளி
வண்ணம்பார்ப்பொடு மகிழ்வெழத்துஞ்சியவன்ன
மெண்ணந்தூவிய வேடனுக்கஞ்சிவந்தெரிகான்
கண்ணம்பார்ப்பொடு கலுழ்ந்தெனமகவொடுகலுழ்வாள்.

உரை.— அங்ஙன மக்கானகத்தொளித்திருந்தவள் தெண்ணீர்த்தடாகத்தலர்ந்தசெந்தாமரைமலரைப் பள்ளியாகக்கொண்டு தன்னழகியகுஞ்சுகளோடு துயிலாநின்றதோ ரன்னமொன்றுமெண்ணாதகொடியவேடனுக்கஞ்சி யத்தடாகத்தைவிட்டோடிவந் தெரியுங்கானத்திடத்தக்குஞ்சுகளோடு வருந்தியழுதாற்போல வெவிசபெத்தையுந் தன்மகனோடக்காட்டிலே யழுதுகொண்டிருப்பாளென்க. (௬௰)

மெழுகினால்வனை பாவைதீவெம்மைபட்டுருகி
யொழுகினாலென வுளமெலிந்தருந்துயர்க்கடலின்
முழுகினாளென மொய்யறுநெஞ்சினாள்முரலுங்
கழுகினாவிமிர் கானிடையுடறளர்ந்திருந்தாள்.

உரை.— அங்ஙன மெழுகினாற்செய்யப்பட்ட தொரு பாவை தீயழற்பட்டுருகி யொழுகினாற்போலத் தானுமுண் மெலிந்து துன்பக்கடலி லமிழ்ந்தியலையுங் கருத்தினையுடையளாய் வண்டுகள்முழங்குங்காட்டிலே தளர்ந்தவுடலோ டிருந்தாளென்க. (௬௧)

இருந்தகாலையில் வானவரிசைத்தலாற்றுனுள்
வருத்தவேந்தெலா மகவையுந்துமித்தனனெனக்கேட்

டருந்தயாபரன் றன்மகவளித்தலாற்புகழைத்
திருந்தநீடுநாள் வாழ்த்திசைத்துறுதியிற்சிறந்தாள்.

உரை. — அங்ஙன மவள்தன்மகனோடிருந்தகாலையில் வர்னவர்வந்துசொன்னதிறற்றுனுள்ளிரங்கிவருந்தும்படி யெரோத னெல்லாக்குழந்தைகளையும் வெட்டிக்கொன்றனென்றுகேட்டவளவிலே தயாபரனாகியசுவாமி தன்மகன்சாகாதபடிகாத்தானென்று நெடுநாளும்விடாததுதிகளைச்சொல்லி யாண்டவனைவாழ்த்தி மனதிற்றேறினாளென்க. (௬௨)

காட்சியோடுள வறத்தொகையனைத்துமேகதிர்செய்
யாட்சியோடுடு வம்புவிதொடர்ந்தெனத்தொடர
மாட்சியோடுயிர் வளர்ந்ததன்மையினிளைத்த
பூட்சியோடினிப் புணர்வதுமரிதெனவறிந்தாள்.

உரை. — அங்ஙனந் தானுள்ளடைந்த ஞானகாட்சியோடிசைபடப்பொருந்திய வெல்லாவறங்களுஞ் சந்திரனையொளியைவீசிச்சூழத்துடர்ந்த பலமீன்களைப்போல விவளைத்துடர்ந்துநிற்க மாட்சியிற்பொலிந்த தன்னுயிர் நாடோறும்வளர்ந்ததன்மைத் தினியிளைத்ததன்னுடலோடு புணர்ந்துநிற்பதரிதாமென்றறிந்தாளென்க. (௬௩)

சொரிந்ததேனினுஞ் சுவைகொடன்னுயிரினுமினி [மை
புரிந்தசேயொடு புகல்செயாக்கண்டுகண்டுருகிப்
பிரிந்தகாலையிற் பெறுந்துயருள்ளியுள்ளயர்ந்து
விரிந்தகாட்சியிற் றுணிந்தபின்குழவியைவிளித்தாள்.

உரை.— அங்ஙனந் தானிறக்குங்காலங்கிட்டினதென்றறிந்தமையான் மலரினின்றொழுகுந்தேனினு மினியதன்னுயிரினுந் தனக்கின்பம்விளைவிக்குந் தன்மகனோ டிச்செய்தியைச்சொல்லாம லவனைப்பார்த்துப்பார்த்து மனதிலுருகித் தானிறந் தவனைப்பிரிந்தகாலத் தவன்பெறுந்துயரின்மிகுதியைநினைத்தமனதில் வருந்திப் பலநாள்போனபின்னரொருநாளாண்டவன் விரிவாய்த்தந்தகாட்சியிற்றேறினவள் குழந்தையையழைத்துச் சொன்னாளென்க. (௬௪)

இனியயாவினு மினியவென் றனையனேயுன்னைக்
கனியவீன்றநான் கருதியசெல்கதிசெல்ல
நனியவாவிய நாளிதேயிதுதிருவுளமாய்
முனியமாறுமோ முரிந்தழமாறுமோமகனே.

உரை.—எல்லாவின்பத்தினு மினியவென்மகனே யுன்னை மகிழ்வோடுபெற்றநான் பரமகதியைச்சேரும்படி மிகவும் விரும்பினநாளிதுதானே, இதுவே திருவுளமாகையிற் கோபித்தாலுமாறுமோ குழைந்தழுதாலுமாறுமோ வில்லைமகனே யென்றுளென்க. (௬௫)

மற்றியாதுநான் வகுப்பவும்வயதொருநான்கு
முற்றியாகுமுன் பிரிவதென் றயர்விலைமுன்னர்
பெற்றியேயுணர் வனைத்தையும்பிறக்குமுன்வரஞ்சால்
புற்றியேயுனாக் குயர்ந்தவற்குவகைசெய்யருளோய்.

உரை.—இதுதிருவுளமென்றதின்மேற் சொல்லத்தக்கதுண்டோ? உனக்கின்ன நாலாம்வயதுமுடியாதிருக்கையிலுன்னைத் தனியேவைத்துப்பிரிந்துபோகிறேனென் றெனக்கு வருத்தமில்லை, இதுக்குமுந்தியேயெல்லாவுணர்வினையுமடைந்தாயே, பிறக்குமுன்முதலாய் மிக்கவரங்களைக்கொண்டாய் சொல்லின்மேலுயர்ந்த வாண்டவற்குகந்தவருளோனேயென்றுளென்க. (௬௬)

திலங்கலந்தமா செல்விடத்துறைவதுமெண்ணே
லலங்கலந்ததே னனையதீஞ்சொலொடுவஞ்சச்
சலங்கலந்தசால் தகுதிகொள்மாக்கட்ந் துணையிற்
புலங்கலந்தகான் பொதிர்விலங்கினத்துணையினிதே.

உரை. — மீளவு மிக்காட்டிலுள்ள மிருகங்களிடத்திருப்பதென்றெண்ணாதே, தாமணிந்தமாலையினின் றொழுகுந் தேனைப்போல வினியசொற்கொண்டு வஞ்சச்சலத்தைநிறையக்கொள்ளு மனிதர்துணையினுந் தனிமையுள்ள காட்டுமிருகங்களின்றுணையே நல்லதென்றுளென்க. (௬௭)

நாடிழந்துள நட்பிழந்தியாவையுமிழந்தே
கோடிழந்தபூக் குழைந்தெனநசைக்கொடுகுழையேல்
வீடிழந்ததீ வினைகொடுசெல்வமுற்றறஞ்செய்
பீடிழந்தபுன் மாக்களிற்பேதையரிலையே.

உரை. — மீளவும் பிறந்தநாடிழந்து நட்புளவுறவுமிழந்து மற்றவுலகினன்மையாவையு மிழந்தாயென்று பூத்தகொம்பிற்பெயர்ந்த மதுமலர்வாடினாற்போல விழந்தவற்றைவிரும்பி நீயுமனதிற்குழையாதே, வான்வீடிழந்ததற்குக்காரணமாகிய தீவினைவிளைவிக்குஞ் செல்வங்களையடைந் தறத்தின் மாட்சியையிழந்த நீசமனிதர்மேலும் பேதையரில்லையென்றுணர்க. (சுஅ)

உளக்கமேபிதா வுவ்வுதாயுணர்ந்தமெய்ஞ்ஞான
நோக்கமேயொரு நுசுப்பருத்தோழனுத்தயையி
னீக்கமேமணத் துணைவியாநெடும்பொறைமகனு
வாக்கமேவிய வறத்துறவோரொடுவாழ்வாய்.

உரை. — மீளவு முறவோர்யாரையுமிழந்தாயென் றெண்ணுமை னக்குமன வூக்கம்பிதாவாகவு நற்றவந்தாயாகவு முணர்வினோக்கிய மெய்ஞ்ஞான மிடையைப்பிரியாத தோழனாகவு நிழல்செய்குளிர்ந்ததயை மணத்துணைவியாகவு நெடுநாள் விடாதபொறுமை மகனாகவுங்கொண் டுயிர்க்கிலாபத்தைப்பயக்கு நல்லறமுறையிற்சிறந்த விவ்வுறவினோடு குறையின்றி வாழ்வாயென்றுணர்க. (சுகூ)

உளக்கவித்தினு னுதித்தமெய்ஞ்ஞானமேமரமாய்
வீக்கநற்றவ வேர்விழப்பொறைதயைக்கவட்டா
னீக்கமுற்றியே மகிழ்வுபூத்துயர்ந்தவானிலைவீட்
டாக்கநற்கனி யருந்திவாழ்ந்துணர்வின்மேற்கனிவாய்.

உரை. — மீளவு மம்மனவூக்கமாகிய விரையைவிதைத்தால் மெய்ஞ்ஞானமாகியமரமுளைத்துக் கூட்டினதவமாகியவேருமாழமாய்விழுந்து பொறுமையுந்தயையு மிருகவராகவிட்டு நிழலைச்செய்து மகிழ்ச்சியாகியமலரைப்பூத்து வான்மே

ல்வீட்டுநன்மையாகிய கனிபழுத் ததனை நீயுண்டுண்டு நினைக் குந்தன்மையின்மேலு மினிதாய் வாழ்வாயென்றுளென்க. (எ0)

வான்கலந்தவில் வனப்பொடுசெஞ்சுடர்வயங்கத்
தேன்கலந்தபூ மலர்தலுஞ்செழுஞ்சிறைபுடைத்துக்
கான்கலந்தபுட் கணங்கனிபாடலுங்கதிர்வான்
கோன்கலந்தசீர் வாழ்த்துனக்குணர்த்திருகுருவே.

உரை. — மீளவு முன்னையுணர்த்துங் குருவில்லையென்று வருந்தாதே,வான்மேற்பரப்பின கதிர்செய்யழகோடு சூரிய னுதித்தவளவிலே நறுந்தேன்கலந்த பூவினமலர்தலுந் தஞ் சிறகுகளைப் புடைத்தடித்துக் காட்டிலெங்குங்கலந்தபறவை களினிதாய்ப்பாடலும் வான்கோனாகியகடவுளுடைய சகல நன்மைகளை நீயும்வாழ்த்தும்படியை யநுதினமுன்னையுண ர்த்து மிருவகைக்குருக்களல்லோ வென்றுளென்க. (எக)

விரைசெய்கானலம் வெஃகிலநெடியதோர்நெறியிற்
கரைசெய்சால்சிலைக் கஞ்சிலகருதியகடல்சேர்
திரைசெய் நூலிவண் டெளியவாய்நதனைத்தையுங்கடந்து
நிரைசெய்சீர்கெழு நிமலனைநேடல்கற்றுயர்வாய்.

உரை.—மீளவும்படிக்கவேதநூ லுனக்கில்லையென்னாதே, மதுமலர்வாயால் வாசனைபொழிந்த காவுகள்காட்டிய வழகி னைவிரும்பிநில்லாமலு நெடியவழியிற்கிடந்த பெருங்கல்வி ன்மிகுதியாலஞ்சி நில்லாமலுமோடித் தானினைத்தகடலைச் சேரு மிங்கேயுள்ளபுனல்தா னுனக்கோர் வேதநூலாகக்கொ ண்டுதெளியும்படி யதைவிடாமலாராய்ந்து நீயுமுலகின்பத் தைவிரும்பாமலுந் துன்பத்திற்கஞ்சாமலு மெல்லாவற்றை யுங்கடந்து கடலைப்போலவொழுங்கு மாறாதமுறையோ டெ ல்லாநன்மையி னிறைந்தகடவுளைமாத்திரந் தேடும்படியை க்கற்றுக் கல்வியி லுயர்வாயென்றுளென்க. (எஉ)

என்னையுன்னைமுன் னினிதினிற்பேணியகன்னி
யன்னைவீங்குதன் னருளொடுநிழற்றியதன்மைத்

துன்னையோம்புவ ளுன்னுயிர்க்குயிரெனவளிப்பள்
பின்னையோர்துணை பெறுவதும்வேண்டுமோமகனே.

உரை.—மீளவுஞ் சொன்னதெல்லாமில்லாதாயினு முன்னென்னையுமுன்னையு மினிதாய்ப்பேணின கன்னித்தாயாகிய மரியென்பவள் மிகுந்ததன்றயையா னிழலைச்செய்து தானுன்னையோம்பிக்காக்கவு முன்னுயிர்க்குயிரா யிரட்சிக்கவுஞ் செய்வாள், அதின்பின்பு மற்றொருதுணையும்வேணுமோ மகனேயென்றாளென்க. (எ௩)

தெளிகொள்ளாரணத் திருவினளகன்றனளென்னே
லளிகொள்ளார்வலர்க் ககன்றதோர்சேணிலைவான்மேற்
றுளிகொள்கார்முகில் தோன்றவீங்ககவிவாழ்ந்தாடுங்
களிகொள்தோகைகள் கானிடைக்காண்டனையிலையோ.

உரை.—தெளிந்தவேதச்செல்வியாகிய மரியென்பவளுன்னையிரட்சிக்குந்தயையை யுள்ளவளாயினு மிப்பொழுதவள் தூரத்தகன்றிருக்கிறாளென்றாதே, அன்புமிக நட்புடையோர்க்கொருதூரமில்லை, அதெங்ஙனமென்னில், உயர்ந்த வான்மேன் மழையைக்கொண்டகரியமேகங்கள் தோன்றியமாத்திரத்தி லிங்கே கூர்ந்தகளியோடொலியெழ வகவி யாடாநிற்குமயில்களை யிக்காட்டிலேகாணுயோ வென்றாளென்க. (எ௪)

என்றுகூறின ளிமிழ்த்தமெய்யோடுயிரார்வ
மொன்றுவானழூந் துறநனிதழுவினடழுவி
நின்றுநீவின ணடியகண்ணருவிநீராட்டிக்
கன்றுவாளுளங் கலங்குவாளுருகுவாள்கலுழ்வாள்.

உரை.—இவையெல்லாவற்றையு மெலிசபெத்தை சொல்லிக்கட்டிக்கொண்டமகன்றன் னுடலுமுயிரு மன்புந் தன்னேடொன்றும்படி யவனையழுந்தத்தழுவினள், தழுவிக்கொண்டிருந்தவனைத்தடவினள், தானழுங்கண்ணீரா லவனுடலெல்லாங்குளிப்பக்கழுவிக் குழையவுங் கலங்கவு முருகவுஞ் செய்வாள், மீளவுமழுவாளென்க. (எ௫)

தீயின்மூழ்கலர் போ லுளம்வாடியுஞ்செந்தீ
வாயின்மூழ்கலர் வருங்கொடிபோ லுடல்சுருண்டும்
மீயின்மூழ்கின மின்னெனவொல்கியுங்குழவி
நோயின்மூழ்கின னுரையெனக்கரைந்தொன் றுநுவலான்.

உரை.—இவையெலாமாகையிற் கருணையன் றீயிற்போட்ட மலரைப்போலத் தன்மனமயங்கிவாடவு மத்தீயிற்போட்ட பூங்கொடியைப்போலத்தன் னுடல்சுருண்டுகருகவு மேகமின்னலைப்போல வொல்கிக்குழையவு நீர்மேனுரையைப் போலக்கரைந்துமெலியவுந் தாேனாய்க்கடலிலமிழ்ந்தினனா யொன்றுஞ்சொல்லா தழாநின்றானென்க. (எசு)

வேறு.

நூறுகாவதமேனுகர்சேணுறை
தேறுகாவலெசித்திடைச்சேர்ந்துரா
யூறுகாதலுணர்விேனாடிற்றையா
மாறுமாறிலறிந்தனர்மூவரே.

உரை.—இவையெலாமிங்ஙனமாகி நூறுகாதத்தின்மேலுந் தூரமாயிருக்குங் காவலிற்றேறினவெசித்துநாட்டிற்சேர்ந்திருந்து தம்மனத்தூறின வன்பினாசை தந்தவுணர்வோடு திருக்குமாரனு மரியுஞ்சூசையுமென்னுமூவ ரிவையெலா மாயினவாறு முள்ளபடி மாறாமற் காட்சியிற்கண்டறிந்தா ரென்க.(உள்ளபடி மாறாமலென்றதனு லவையாயினபொழுது மாயினவளவு மாயினவிடமு மாறாமற் கூடநின்றுகண்டாற்போலக் காட்சியிற்கண்டாரென்பதுகருத்து.) (எஎ)

கரிந்தநெஞ்சுகடுத்தகடுந்திறல்
சொரிந்தசெம்புனலுன்றியவாரியிற்
பிரிந்ததன்மைகருணையன்பேருயி
ரரிந்ததில்லையென்றன்பெழக்கண்டனர்.

உரை. —அங்ஙன முன்சொன்னபடி யெரோதன் றன் கரிய நெஞ்சிற்கடுத்தபகையோடு குழந்தைகளைக்கொன்று

சிந்தின குருதிவெள்ளத்துளகப்படாமற் பிரிந்த கருணைய னுயிரிறந்துபடவில்லையென் றன்றுதானே யன்போடுமகிழு ம்படி கண்டாரென்க. (௭௮)

கண்டவேலையிற்கண்டதுவேலையை
யுண்டபான்மையுவந்துகையேந்திய
வண்டநாதனைவாழ்த்தியின்பாழ்ந்தனர்
கொண்டகோதையும்பூங்கொடியோனுமே.

உரை. — இவற்றைக்கண்டறிந்தவளவிலே துணைவியாய்க் கொண்ட கோதையாகியமரியும் பூங்கொடியோனாகிய சூசையு மினியபாகின்கடலையுட்கொண்டாற்போல மிகவுமகிழ்ந்தப்பொழுது கையிலேந்திய வானநாதனாகியதிருக்குமாரனைவாழ்த்தி யின்பத்திலமிழ்ந்தினாரென்க. (௭௯)

படலையாய்நயம்பீடைபயத்தல்வான்
விடலைநீதியெனவிளையின்பயல்
நடலையாகனைந்தேலிசபெத்தைதன்
னுடலைநீக்குவதோர்ந்துளத்தேங்கினார்.

உரை. — மீளவுங் கோவைமாலையாக வின்பத்தையுந் துன்பத்தையுஞ்சேர்த்தித் தொடரவிடுதலே வான்வேந்தனாகியகடவுளினீதிமுறையாகையிற் சொன்னபடி யவருட்கொண்டமகிழ்ச்சிக்கருகே துன்பமாக வெலிசபெத்தையிறந்துபடுங்காலங் கிட்டினதென்றுகண்டு மனதினொந் தேங்கினாரென்க. (௮௰)

வீயும்வீமலர்மென்கொடியுந்தழற்
றேயுந்தன்மைதுவண்டுசுருண்டெனத்
தாயும்பிள்ளையுந்தாவிடர்நோக்கியுட்
டேயுந்தன்மையினேம்பியிரங்கினார்.

உரை. — விரிந்தமலரு மம்மலரைவிரித்தபூங்கொடியு நெருப்பிற்றேயப்பட்டுத் துவண்டு சுருண்டு கெட்டாற்போலத் தாயும்பிள்ளையுங் கொண்டவருத்தத்தைக்கண்டிவர் மனதிற் றீந்து மெலிந்தவர்க்கிரங்காநின்றாரென்க. (௮௧)

வான்வழங்கரசாள்வகுத்தேவலாற்
றேன்வழங்குமலர்ச்சினை நீடிய
கான்வழங்கினர்கண்ணுளந்தேற்றிட
மீன்வழங்குவிண்ணோர்விரைந்தெய்தினார்.

உரை. — இரங்கினதன்மையில் வானரசுள்ளமரியென்பவள் சொல்லியேவினதினுன் மதுமலர்க்கொம்புகளை நீட்டியகானிடத்திருந்த விருவர்மனத்தைத்தேற்றும்படி யவரண்டைக்கு மீன்கள்திரியும் வானுள்ளோர்சிலரோ விரைந்துசென்றாரென்க. (அஉ)

கண்கனிந்துகளிப்பமெய்காட்டினர்
பண்கனிந்தவிசைக்கொடுபாடினர்
புண்கனிந்தமருந்தெனப்பொங்கருள்
விண்கனிந்தவுறுதிவிளம்பினார்.

உரை.—சென்றவானவரோவெனில், அவ்விருவர்கண்களிதாய்மகிழும்படி யழகிய வடிவினையெடுத்துக்காட்டி வீணைவாய்க்குரலோ டிசைபட வினியபாடலையியற்றிப் பட்டபுண்ணுக்கு ஏற்ற மருந்தோடொத்த தயையோடு வானுலகேற்ற வினியவுறுதிகளைச்சொன்னாரென்க. (அங)

பெறுதியாகமறுப்பெரிதன்பினு
ளுறுதியாகவன்றேவியவும்பர்கேட்
டிறுதியாகநின்றேங்குயிர்தேறியுட்
குறுகியாகமவாயொடுகூறினாள்.

உரை.—பெற்றகொடையின்றயையைவிடாமலன்பிற்பெரியாளாகியமரியென்பவள் தனக்குறுதியாகும்படி யன்றுவரவிட்ட வானவர்சொன்னதைக்கேட்டெவிசயெத்தை சாகவிருந்து மெலிந்ததன்னுயிர்தேறி யுள்ளேகுறுகாநிற்கத் தான்வேதவாயோடுசொன்னாளென்க. (அச)

அன்னையேவியவண்ணலரோயினி
தென்னையாண்டகைதன்பதத்தேவிய

பின்னைபோர்கிலர்பெற்றியோடென்மகன்
றன்னையோம்பிடத்தந்தையுந்தாயுநீர்.

உரை.—எலிசபெத்தை வந்தவானவரைநோக்கி யெங்ஙனஞ்சொன்னாளென்னில், என்றாயாகியமரியென்பாள் வரவிட்டபெரியோரே நீரினிதா யென்னுயிரை யாண்டவன் பாதத்துச் செலுத்தினபின்பு பெயராதிருந் தென்மகனை நன்றாயோம்பிக்காக்கும்படி யவற்குப்பிதாவுநீரே தாயுநீரே யென்றாளென்க. (௮௫)

என்றிரங்கியிரங்கியசேயின்மே
னின்றிரங்குகண்ணீரொடுமாசிதந்
தன்றிலங்கியவங்கொடிவீழ்ந்தெனப்
பொன்றிலங்கியபூட்சிவிழுந்ததே.

உரை.—அங்ஙனஞ் சொல்லியிரங்கினவ ளிரங்காநின்ற தன்பிள்ளைமேற்சாய்ந் தழுதகண்ணீரோ டாசீர்வாதமுந்தந்து விளங்கியவோர்பூங்கொடியறுந்துவிழுந்தாற்போல வன்றவளுடல்சாகையி லொளிலையவீசியிறந்து விழுந்ததென்க. (௮௬)

வீழ்ந்தகொம்பொடுசேர்கொடிவீழ்ந்தென
மாழ்ந்ததாயொடுமாழ்ந்தெனவீழ்ந்தசே
யாழ்ந்ததுன்புளத்தாற்றிலனொற்றைவாள்
போழ்ந்தவீருயிர்போற்கிடந்தானரோ.

உரை.—தாயிறந் தங்ஙனம்விழுந்தவளவிலே விழுந்தகொழுகொம்போ டதின்மேற்படர்ந்த பூங்கொடியொருங்குடன் விழுந்தாற்போல விறந்ததாயோடு பிள்ளையுமிறந்ததன்மையின் மேலேவிழுந்து மனமமிழ்ந்தின துன்பத்தை யாற்றாம லொருவா ளிரண்டுயிரைவெட்டிக் கொன்றாற்போலக் கிடந்தானென்க. (௮௭)

தேற்றருந்துயர்தேற்றியவானவ
ரேற்றருந்துணையாகவெழுந்துயி
ராற்றரும்பரிவாயுடனுடல்போற்
போற்றருந்துயர்கொண்டுபுலம்பினான்.

உரை. — தேற்றப்படாத துயரைக்கொண்ட பிள்ளையை வானவர்தேற்றித் துணையாய்நின்று கருணையனெழுந்துபிரி ந்தவுயிரை யுடல்வருந்தித்தேடினாற்போல வவனுந் தீராதவ ருத்தத்தோடு தேடிதாய்ப்புலம்பினானென்க. (அஅ)

பருகுதேனினைக்கான்றெனப்பண்ணிசைக்
கருகுதேனினுமின்பளிபாடிய
முருகுதேனொடுமுற்றலர்பூவன
முருகுவானிளையோனுளத்தேங்கினான்.

உரை. — கருணையன்புலம்பினவளவில் வண்டினங்களுண்டதேனைக் கொப்பளித்தாற்போல வீணைவாய்க்குரலோடத்தேனினு மினிதா யருகேபாடாநிற்கும், வாசமதுமுற்றிய மலரைப்பூத்தகாவெல்லா மிரங்கியுருகும்படி யிளையோனாகிய வவனுளத்தேங்கிப் புலம்பாநின்றானென்க. (அக)

புல்லுடம்புபுதைத்தனபேருயிர்
வில்லுடம்பெனவேய்ந்தனகாட்சியாற்
கொல்லுடம்பிடிகொண்டுகுடைந்தபுண்
ணல்லுடம்பெனத்தேறிநடந்ததே.

உரை. — சிற்றுடம்பிடத்துப் புதைக்கப்பட்ட கருணையனதுபேருயிரப்பொழுதடைந்த தெளிந்தகாட்சியினாற்றேறிக் கொல்லுங்கைவேலோடுகுடைந்த புண்ணுறி நல்லுடம்பானாற்போலத் தேறியபின்பு நடந்தானென்க. (அடைந்தகாட்சியின் றெளிவுதோன்றும்படி யக்காட்சி யோருடம்பாகவு மிக்கவொளியுயிராகவு மிருந்ததென்று வில்லுடம்பாயினகாட்சியென்றானென்க.) (கூ0)

வேறு.

கதிர்செயுமுருவிற்றோன்றிக் கனிவொடுசூழ்ந்தவிண்ணோருதிர்செயுங்கனிபோல்வீழ்ந்த வுடற்குநன்முறைகள்யாவுமுதிர்செயுமன்பின்பாலான் முடித்தபின்குழவிமோனஞ்
பொதிர்செயுமுளத்தைத்தூண்டும் புரிவிறன்முறைகடேர்ந்தான்.

உரை. — இவையெலாமாகி விளங்கியவுருக்கொடுதோன்றிச் சூழநின்றவானவர் பதமழிந்துதிர்ந்த பழத்தைப்போல விழுந்த வெலிசபெத்தையுடலுக்குச் செய்யவேண்டிய முறைகள்யாவையு மிக்கவன்போடுமுடித்தபின்னரக்குழந்தை முனிவனாகிய கருணையனுளத்தைத் தூண்டி நிறைந்த தன்னன்பின் முறைகளைத் தீர்ந்தானென்க. (கக)

புன்மலர்க்கண்கடுவும் புனலினீராட்டிமார்பிற்
பன்மலர்ப்படலைக்கண்ணி பல்லறம்புனைந்தாயென்று
தன்மலர்க்கரத்தாற்சூட்டிச் சாய்பகலொடுகுவ்வேடு
துன்மலர்க்கமலக்கையைத்தொழக்குவித்திறைஞ்சிட்டானே.

உரை. — கருணையன்றாய்க்குச் செய்தமுறையேதென்னில், சிறுமலரொத்ததன்விழிபொழிந்தநீரா லவளுடலைக்குளிப்பாட்டிப் பலவகைமலரை யொருப்படமாலையாகச்சேர்த்திப் பலவறங்கள்யாவையு மணிந்திருந்தாயென் றதனை யவள் மார்பிலேபோட்டுப் பகல்சாய்ந்தபொழுது குவியுந்தாமரை யொப்பத்தன்கைகூப்பித் தாயைத்தொழுதானென்க. (கஉ)

அளியழக்குயில்கள்மஞ்ஞையுயர்ந்தழவழவன்னங்கள்
கிளியழவழப்பூம்பூவை கிளையழவிரங்கிவீசும்
வளியழப்புனலீண்டோடி வந்தழவனத்திலெல்லா
வுளியழவழவேதோன்ற உம்பர்மெய்யெடுத்துப்போனார்.

உரை. — செய்யுமுறையெலாமுடிந்தபின் வண்டுகளுங் குயில்களு மயில்களு மன்னங்களுங் கிளிகளும் பூவைகளு மழாநிற்பவுந் தழைகளாடிச் சலசலவென் றழுமோதையைக் காட்டவு மிரங்கியழுதாற்போலக் காற்றுக் களகளென்று வீசவு மங்கேயோடினபுன லொல்லெனமுழங்கியழவுங் காட்டிலுள்ளவிடங்கடோறு மழுமோதைகிளம்பவுங் கருணையனு மழுது பின்சென்றுவர வானவ ரெலிசபெத்தையங்கத்தையெடுத்துக்கொண்டுபோனாரென்க. (கங)

பூக்கையைக்குவித்துப்பூவே புரிவொடுகாக்கென்றம்பூ
சேக்கையைப்பரப்பியிங்கட் டிருத்தியவறத்தையாவும் [ஞ்

யாக்கையைப்பிணித்தொன்றாக வினிதினுள்ளடக்கிவாய்ந்த
வாக்கையையடக்கிப்பூவோ டழுங்கணீர்பொழிந்தான் மீதே.

உரை.—எடுத்துக்கொண்டமேனியை யடக்கவேண்டிய விடத்துச்சென்றவளவிலே கருணையன்றன்பூங்கைகூப்பி மண்ணே யிவ்வுடலை நன்றாய்க்காப்பாயாகவென்று குழியிலே மதுமலரணையைப்பரப்பிப் பூவுலகிருந்து திருந்தியவறங்களியாவையு மொருகட்டாகச்சேர்த்தி யினிதாயுள்ளடக்கி மாட்சியிற்பொலிந்தவுடலைக்குழியிலடக்கி மதுப்பொழிமலரையுந் தானழுங்கண்ணீரையு மதின்மேற்பொழிந்தானென்க. (கச)

தாய்முறைதிருந்தியாக்கைதகுமுறைக்கடக்கிப்பின்றன்
ஞெய்முறையடக்கலாற்று நுதலியதவத்தின்மாட்சி
தாய்முறைவிரும்பித்தன்கட் டுணையிலாதஞ்சி யங்கித்
தீய்முறையழனெஞ்சொத்ததிரைச்சுனைதனித்துச்சென்றான்

உரை.—அங்ஙனங் கருணையன் றாய்க்குச்செய்யு முறைகளைத் திருத்தமுடித்து முறையோடவளங்கத்தை யடக்கினபின்பு தன்றுயரையடக்கமாட்டாம லொருபால்முன்செய்யநினைத்த தவத்தின்மாட்சியைவிரும்பவு மொருபானுரியதோர்துணை தனக்கில்லாமையா லஞ்சியேங்கவுந் தீப்பற்றிவருந் தன்னெஞ்சலைவதுபோலத் திரைகொண்டலையு மொருபூந்தடாகத்திடத்து வானோர்மறைந்துபோனதினாற் றனியேசென்றானென்க. (கரு)

எழுஞ்சுனையகட்டுப்பாய்நீ ரினிதிவற்கிரங்கிவிம்மக்
கொழுஞ்சுனைகண்களாய குவளைகளிமையாநோக்கக்
கெழுஞ்சுனைவரம்பில்வைகிக் கிளைத்தநோயழன்றநெஞ்சா
னழுஞ்சுனைபெருகக்கண்ணீ ரகல்கடல்வெள்ளமாற்று.

உரை.—அவன்சென்ற தடாகத்துநடுவேயோயாமற் பாயும்புனற்றெண்ணீ ரிவற்கிரங்கினாற்போல வொல்லென்றேடிவரவு மச்சுனைக் கொளிர்கண்களாக மலர்ந்தகருங்குவளைகளதிசயித்திமையா தவனைநோக்காநிற்கவு மவன்கரைமே

விருந்து மிகவும்வளர்ந்ததுன்பத்தால் வெந்தநெஞ்சுடைய ருகி யச்சுனபெருகும்படி தானழுதகண்ணீர்க் ககன்றகடலின்வெள்ளமு மொப்பல்லவென்க. (சுசு)

மண்ணரம்பிசையிற்பாடல் மாறிவண்டிரங்கிவிம்ம
வுண்ணரம்பழுத்ததன்மைத் துருக்குயிலழுதுதேம்ப [ற்
விண்ணரம்பருளின்மார்பன் விழுங்கியதுயர்கால்வான்போ
பண்ணரம்பிளகியேங்கும் பரிசொடுவிம்மிச்சொல்வான்.

உரை.—ஒப்பனைசெய்தவீணையினரம்புக ளிசையோடு முன்பாடாநின்றவண்டுக ளப்பாடலைமாறியிரங்கி விம்மியழவுமுள்ளே யச்சமிகுந்ததன்மைபா னிறத்தகுயில்க ளழுதுமெலியவும் வானுலகத்தோர்விரும்பிய வருளிற்பொலிந்தமார்பனாகியகருணையன் றன்முன் மிழுங்கியதுயரைக் கொப்பளித்தாற்போல வீணையினரம்புகள்விசையின்றி யிளகிச்செய்யுமேங்கியவோசையின்றன்மையால் விம்மிப்புலம்பத்துடங்கினனென்க. (சுஎ)

சொல்வியவிசையின்பெட்போ துயரமோவியப்போ
வேதோ
புல்வியகொம்பிற்புள்ளும் பூவில்வண்டினமுங்காற்று
மில்வியபுனலுமற்ற தியாவும்வாய்விடாமைகேட்பக்
கல்வியகவிர்ச்செவ்வாயான் கருதியதுபரங்கான்றான்.

உரை. — அவனேபுலம்பத்துடங்கினவளவி லவன்சொல்லுமுறைகளைக்கேட்ப வாசையோ விரங்கித்தாமுமடைந்த துயரமோ வதிசயந்தானோ வேதோகாரணமாகக் கொம்புகளிலிருந்த பற்பலபறவைகளு மலரிடத்திருந்த பலவண்டினங்களும் வீசாநின்றகாற்று மொழுகியபுனலு மற்றதெல்லாம்வாய்விடாது சத்தப்படாமற்கேட்டிருப்ப மதுப்பொழிமுண்முருக்கலரொத்த செவ்வாயான் கருணையனினைத்ததுயர்களையுமிழ்ந்து சொன்னனென்க. (சுஅ)

நீரொழுங்குமிளிபோலு நெடியதேர்நேமிபோலுங்
காரொழுமின்னற்போலுங் கடலெழுந்திரைகட்போலும்

பாரொழுஞ்செல்வத்தில்லைப் பதியுமோர்நிலையுமென்றார்
சீரொழுஞானத்திற்குந் திரைதிரண்டலைவதுண்டோ.

உரை.—கருணையன் புலம்பிச்சொன்னதேதென்னில், நீர்மேலாடும் குமிளியைப்போலவு நெடுந்தேருருளையைப் போலவு மேகத்தின்மின்னலைப்போலவுங் கடலின் றிரைகளைப்போலவும் பூவுலகுள்ளசெல்வத்துரியபதியு நிலையுமில்லையென்றார்பெரியோர், ஆயினுமருளிற்பொலிந்த ஞானச்செல்வத்திற்கு மித்தன்மைத்து நில்லாதலைச்சலுண்டோவென்க. (ஞானமுறையி னிகரொன்றின்றி முன்னர்த் தானருட்செல்வனாகிப் பின்னரிப்பொழுது நிகருமின்றித் தானதிலே வறியோனானசெய்தியைச் சொல்லப்போகிறதைப்பற்றி யிவற்றைச்சொன்னானென்க.) (௯௯)

வெண்ணிறத்துகில்கொள்மாசு வெண்மதிக்கதிருட் போய்த்துத் [னர்த்
தெண்ணிறத்தொழிக்கல்போற்சூழ் சிறையகன்றுதிக்குமுன்
தண்ணிறப்பிறைசூழ்தாளாள்தளிர்த்ததன்றயையிற்சொன்ன
பண்ணிறக்கிளவியால்யான் பழம்பழிக்களங்கந்தீர்ந்தேன்.

உரை.—வைத்தமுறையானே தான்முன்னடைந்தவருட்செல்வங்களைச்சொல்லத்துடங்கினான், ஆகையால்-மாசுபட்ட வெண்டுகிலைச் சந்திரன்கதிர்களுட்டுவைத்துத் தெளிந்துவிளங்கும்படி யம்மாசொழியவெளுத்தாற்போல நானுமென்றாய்கருப்பமாகிய சிறையைவிட்டுப் பிறக்குமுன்னே குளிர்ந்தபிறையைமிதித்த பாதத்தாளாகிய மரியென்பவள்வளர்ந்த தன்றயையோடு வீணைவாய்க்குரலோடு சொன்னமொழியாற் பழம்பழியாகிய சன்மபாவத்தின்களங்கத்தையொழித்தேனென்க. (௱)

உலைவளர்தீயிற்றீய வுலைப்பிடும்பாவந்தீர்ந்து
தலைவளருணர்வுஞானக் காட்சியுமுணராதெய்தி
யலைவளருலகிலொவ்வா வதிசயத்தென்றாய்வையின் [ன்.
மலைவளர்வெள்ளமென்ன வரத்தொகையுவப்பக்கொண்டே

உரை.—மீளவு மூலையில்வளருந் தீயினுந் தீயவேதனைசெய்யும் பாவமாசொழிந்ததன்றிக் கற்றுவரு முணர்வினையும் ஞானக்காட்சியையு நான்கல்லாதடைந்து கடல்சூழ்ந்தவுலகிலொவ்வாத வற்புதத்துடனே யென்றாய்வயிற்றிலிருந்து மலையினின்றெழுகும் வெள்ளத்தின்றன்மையா லெல்லாவரத்தொகையை யடைந்தேனென்க. (ாக)

தூங்குயர்கனிகள்தீம்பாற் றேயவீழ்ந்தென்றேவானி
னீங்குயர் துளிமுத்தாக நிறத்தசங்கிடைவீழ்ந்தென்றே
பாங்குயர்வரத்திலென்னைப் பயந்ததாயுதரநீங்க
வோங்குயரிறைவன்சாயு மொண்கரத்திமிழிற்சாய்ந்தேன்.

உரை. — நான்றாய்வயிற்றிலிருந்தபோ திவையெலாமாகி மீளவுங் கொம்பினின் றுதிர்ந்ததீங்கனி பாலிலேவிழுந்தாற் போலவோ வானத்தினின் றிழிந்தபனித்துளி முத்தாகும்படி சங்கினுள்ளேவிழுந்தாற்போலவோ வுயர்ந்தவரத்தின்முறையா லென்னையீன்றதாய் வயிற்றைவிட்டு நான்பிறந்தபோது யர்ந்தவான்கடவுள் மனிதனாய்ப்பிறந் திப்பொழுது தான்சாயாநிற்கு மரியென்பவள்கையிலே நானுஞ்சாய்ந்துகொண்டேனென்க. (ாஉ)

வைபவகைதளிர்த்தபாவ வடுவொடுசனித்தநானுட்
பொய்வகையன்றிப்பேறு புணர்கிலனுகியெந்தை
மெய்வகைதெளிந்தஞானம் விளைத்தபல்வரங்கடந்தே
யுய்வகைதந்ததன்மை யுரைப்பவோமூகைநானே.

உரை. — அங்ஙன மயக்குவிக்கும்பாவத்தோடு சன்மித்தநா னென்னியற்கையாற் பொய்யேயன்றிப் பேறென்றுமில்லாதவனுகி யென்னுண்டவன் மெய்யிற்றெளிந்த ஞானம்விளையும்படி யெனக்குப்பலவரங்களைத்தந்து நான்வாழும்படி யெனக்குச்செய்தயாவையு மூமைநான்சொல்லத்தகுமோ வில்லையென்க. (ாரு)

வளர்ந்தவெண்மதிதேய்ந்தன்ன வளங்கொடுபிறந்தபின்னு [கக்
னுளர்ந்தகண்ணருவியோட்டி யுலந்தெனையீன்றோன்மாள்

கிளர்ந்தவெம்பகையைக்கொன்னே கிளைத்தகோன்கொடுமை
க்கஞ்சித்
தளர்ந்தமெய்யவலித்தென்னைத் தாயுமிவ்வனத்திலுய்த்தாள்.

உரை.—சொன்ன வருட்செல்வங்களையடைந்தபின்னர்வ ந்தசிறுமையைச் சொல்லத்துடங்கினான், ஆகையால் வளர்ந் ததிங்கள்தேயுந் தன்மையாறுனு மித்தொகைப்பட்ட மா ட்சியோடுபிறந்தபின்ன ரொன்கண்ணூறாக நீர்சிந்தி நானழும் படி யென்னைப்பெற்றவனுமிறந்தான், தாயும் வீணுயாண்ட வன்மேற் பகையைவைத்த வெரோதன்கொடுமைக்கஞ்சின ளாய்த் தளர்ந்ததன்சரீரம்வருந்தும்படி யென்னையிந்தவன த்திலேகொண்டுவந்து வைத்திருந்தாளென்க. (௱௪)

நீட்டிடைநெறிகணீக்கி நீரிடைமலர்ந்தகஞ்சத்
தேட்டிடையன்னமன்ன வீன்றனள்கரத்தில்வைகிக்
காட்டிடையிருந்ததன்மை காண்கிலன்வையநீங்கி
வீட்டிடையுவந்ததன்மை விருப்பெழவளர்ந்தேனன்றே.

உரை. —அங்ஙனம் பலநெடுவழிகளைக்கடந் திவ்விடத்து ச்சென்று தெண்ணீர்ச்சுனையின்மலர்ந்த தாமரையிதழின் மே லன்னம்வாழ்வதுபோல நானு மென்றாய்கையின்மேலி ருந்து காட்டிலேயிருந்ததன்மைதோன்றாமற் பூவுலகத்தைவி ட்டு வான்வீட்டிலேமகிழ்ந்திருந்ததன்மைதோன்றி யினிதா ய்வளர்ந்தேனேயென்க. (௱௫)

வாய்மணியாகக்கூறும் வாய்மையேமழைநீராகித்
தாய்மணியாகமார்பிற் றயங்கியுட்குளிரவாழ்ந்தேன்
றூய்மணியாகத்தூவுந் துளியிலதிளங்கூழ்வாடிக்
காய்மணியாகுமுன்னர்க் காய்ந்தெனக்காய்ந்தேனந்தோ.

உரை. —அங்ஙன மென்றாய் கையிலிருந்து வாயினின்றொ ழுகு மணிகளைப்போல வவள்சொல்லிக்கொண்டிருந்த மெ ய்யுணர்வுகளை மழைநீராக நானுட்கொண் டுளங்குளிரத் தாய் க்கொருமணியாக நா னவள்மார்பின்மேற் கிடந்துவிளங்கி வாழ்ந்தேன், இப்பொழு தையோ தூய்மணிகளையொப்பவி

ழு மழைத்துளியொன்றின்றி யிளம்பயிர்வாடி மணியைப்பி டிக்குமுன்னே காய்ந்துகிடப்பதுபோல நானு முட்காய்ந் தேனையோவென்க. (௱சு)

விரிந்தனகொம்பிற்கொய்த வீயெனவுள்ளம்வாட
வெரிந்தனநுதிநச்சம்புண் டிரும்புழைப்புண்போனேகப்
பிரிந்தனபுள்ளிற்கானிற் பெரிதழுதிரங்கித்தேம்பச்
சரிந்தனவசும்பிற்செல்லுந் தடமிலாத்தனித்தேனந்தோ.

உரை. — அங்ஙனந் தன்னையீன்றகொம்பினின்றறுக்கப் பட்டமலரைப்போல வென்மனம்வாடவுஞ் சுடுவாயம்பினு னியிற்றேய்த்த நஞ்சினையுண்ட பெரும்வாய்ப் புண்ணைப் போலநோகவுந் தம்முட்பிரிந்த பறவைகளைப்பொலக் காட் டிலே விம்மித்தேம்பியழவுஞ் சரிந்தவழுக்குநிலத்திற் செல் லும்வழியை யறியாமலுந் துணையொன்றில்லாமலுந் தனித் தேனையோவென்க. (௱எ)

துள்ளிவாழுழைகாள்கொம்பிற் றுன்னிவாழ்குயில்கா
ள் தூய்தே
னள்ளிவாழளிகாள்தேன்கா ள்ழனிறக்கமலப்பைம்பூம்
பள்ளிவாழோதிமங்காள் பறித்துவாழ்கொடிகாள்கோற
லுள்ளிவாழ்வரிகாள்சொன்மின் னுயிர்தனித்தலிற்றீதுண்
டோ.

உரை. — துள்ளிவாழுமான்களே கொம்புகள்மேலே கூ டிவாழுங்குயில்களே யினியதேனையள்ளியுண்டுவாழு மாண் வண்டுகளே பெண்வண்டுகளே தீப்போற்சிவந்ததாமரைப் பள்ளிமேல்வாழு மன்னங்களே பறித்துவாழும் காக்கைக ளே கொலைத்தொழிற்கருதி யுயிர்கொன் றுடலையுண்டுவாழு ங் கொடியபுலிகளே முதலா யுயிர்தனித்திருப்பதின்யேற் பூ வுலகிற்றீதொன்றுண்டோ சொல்லுங்களென்க. (இவையெ லாமுதலாய்த் தனித்திரா தினங்களைச்சேர்ந்துதிரிவனவென் பதுகருத்து.) (௱அ)

உய்முறையறியேனோர்ந்த வுணர்விலெனத்துறப்புமில்
மெய்முறையறியேன்மெய்தான்விரும்பியவுணவுநேடச்[லா,

செய்முறையறியேன்கானிற் செல்வழியறியேன்றாய்தன்
கைமுறையறிந்தேன்றாயுங்கடிந்தெனைத்தனித்துப்போனாள்.

உரை. — பிழைக்கும்வழியை யறியேன், உள்ளவுணர்வி னேடொத்த வவையவங்களுமின்றிச் சரீரத்தைநடத்துமுறையையறியேன், சரீரம்விரும்பின வுணவுகளைத்தேடும் வகையையறியேன், காட்டிற்றிரியும்வழியையறியேன், என்றாய்கையைமாத்திர மறிந்திருந்தேன், அவளுமிறந் தென்னைத் தனியவைத்துப்போனாளென்க. (௱கூ)

காய்முதிர்கனியினூழ்த்துக்கனிந்துவீழ்ம்மெய்வாட்டி
வேய்முதிர்வனத்திருந்தேன்பின் வித்திநல்விளைமெய்ஞ்ஞான
மாய்முதிருவப்பினுள்ளத் தாண்டகையொருவனாள
நோய்முதிருலகநீக்க னுதல்வருமினிமைதானே.

உரை. — காய்முதிர்ந்து பழமாகிப் பதமழியக் கனிந்துவிழுவதுபோல விழுமிவ்வுடலை முன்னேவாட்டி மூங்கில்படர்ந்தவனத்திருந்து செய்ததவமாகியவினையினால் விளையுமெய்ஞ்ஞானமாகித் தன்மனதிலாண்டவனொருவ னின்பமாயாளும்படி துன்பநிறைந்த பூவுலகினைவிடுவது நினைவிலடங்காத வின்பந்தானேயென்க. (௱ய)

ஊக்கவேர்பூட்டிநோன்பா லுடற்செறுவுழுதுநன்றி
வீக்கமேல்விரதச்செந்நெல் வித்திநல்லொழுக்கநீரைப்
போக்கநீடிறைத்துத்தன்னைம் பொறியெனும்வேலிகாக்கி
லாக்கமாய்ப்பெரும்வீட்டின்ப மண்டமேல்விளக்குந்தா
னே.

உரை.— அங்ஙன மனவூக்கத்தையேராகப்பூட்டித் தவத்தைக்கொண்டுடலாகிய வயலையுழுது நன்மைசேர்ந்த நல்ல விரதமாகிய செந்நெல்லைவிதைத்து நல்லொழுக்கமாகிய நீரை நெடுநாளிறைத்துத் தனதைம்பொறிகளாகிய வேலியை நன்றாய்க்காத்தா லிலாபமாக வான்மேல்வீட்டுப்பேரின்பம் விளைவது நிச்சயந்தானேயென்க. (௱யக)

ஆயினும்வயதோர் நான்கு மாகுமுன் றனித்தநானே
லீயினுங்கொடியபேய்கள் வினைசெயவொருபாலோர்பாற்
பேயினுந்தீயதன்மெய் பெரும்பகைசெயவிவ்வாயிற்
போயினும்வழுவாச்செல்லல் புணர்வரிதறத்தினாறே.

உரை.—இதெலா மூளதாயினு மெனக்குநாலுவயதாகுமுன்னே தனியேநின்று கொல்லும்புலியினுங் கொடியபசாசுகளொருமுகத் துயிர்க்கு வினையைக்கொண்டுவிடவும் வேறொருமுகத் தப்பசாசுகளினுந்தீய தன்னுடலே தனக்குப்பகையைச்செய்யவு நானித்தவத்தின்வழியே போகத்துணிந்தாலும் வழியில்வழுவாமற்செல்லுதற் கறத்தின்வழி யரிதென்க. (௱௰௨)

தன்முகம்படிகமின்றித் தரணியிற்காண்பானில்லைப்
பன்முகங்காட்டுமின்பம் பற்றலிற்றிரிதந்நெஞ்சத்
தின்முகந்தம்மிற்றாமே துகளறவெவருங்காணார்
வின்முகங்காட்டுநூலோர் வெயிற்பளிங்கின்றியன்றே.

உரை.—அறவழி யரிதென்றதற்குச் சொல்லத்துடங்கினான்: கண்ணாடியின்றித் தம்முகத்தை யிங்கேகாண்பாரில்லை, அத்தன்மை யொளிமுகத்துரைத்த கற்றோர்மொழியைக் கண்ணாடியாகக்கொண்டாலொழியப் பலமுகங்களைக்காட்டிய பலவகையின்பங்களைப் பற்றினதன்மைத்துப் பலமுகமாய்த் திரிந்து வேறுகுந் தந்நெஞ்சுள்ளமுகத்தைத் தாமே தம்மிடத்துக் குறையின்றி யெவருங்காணாரென்க. (௱௰௩)

மொய்யொடுகடுத்தகோப முதிரறநீதியென்ன
மெய்யொடுவிளைந்தகாமம் விழுமனக்கேண்மையென்ன
மையொடுவளர்பொன்னாசை வழித்துணையாசையென்னப்
பொய்யொடுபொங்கும்பற்றல் புரைபுகுத்தரியவாறே.

உரை.—தன்னெஞ்சினைத் தா னறிவதரிதாகையின் மனதிற்பகையோடுபொங்கினகோபமே யறத்தினீதியாகத்தோன்றவு மிவ்வுடலாசையால் விளைந்ததீயகாமமே நன்மனத்துரியவன்பின் சிநேகமாகத்தோன்றவு மயக்குவிக்கும்பொருளி

ஞசையே தான்பூவுலகிற்றிரியுநாள்மட்டும் வேண்டியவழித்துணைதேடு மாசையாகத்தோன்றவு மங்ஙனம் பொய்யின்வழியே பொங்காநிற்கும் பற்பலபற்றுதல் பாவத்தைக்கொண்டுவிடும்வழி யறிவதற்கரியதென்க. (௱டு௪)

இன்னவாறொருவனுனே யிடறிலாதொழுகும்பாலோ
துன்னவாறிடறிவீழ்ந்தாற் றுணைவனின்றெடுத்துப்பின்று
தன்னவாறெழுகவென்றே ரருங்குருவிலநிற்பேனே
வென்னவாறெழுகும்வெள்ளத் திளமுனியழுதுசொன்னன்

உரை. — இத்தன்மைத்துள்ளவழியி னுளொருவனுய்நின்றிடறுமனடக்குந்தன்மையோ வதற்குத் துணிந்துசெல்லுமளவி லிடறிவிழுந்தேனுயி னொருவன்றுணையாய் நின்றென்னையெடுத்துப் பின்வாங்காதின்னபடிநடவென் றொருகுருவில்லாமனிற்பேனேவென்று பெருகியவாற்றின் வெள்ளமொப்ப விளமுனியாகியகருணையன் மிகவுமழுதுபுலம்பினனென்க. (௱டு௫)

நவமணிவடக்கயிற்போ னல்லறப்படலைபூட்டுந்
தவமணிமார்பன்சொன்ன தன்னிசைக்கிசைகள்பாடத்
துவமணிமரங்கடோறுந் துணரணிசுனைகடோறு [றே.
முவமணிகானங்கொல்லென் றொலித்தொலித்தழுவபோன்

உரை. — நவமணிகளொருவடமாகவிசைத்த கடைப்பூட்டொப்ப வெல்லாவறங்களை யொருகோர்வையாகப்பூட்டியதவத்தையணிந்தமார்பனுகியகருணையன் புலம்பிச் சொன்னதற் கிசைகளைப்பாடினுற்போல மதுமலர்மரங்கடோறும் வாசமலர்த்தடங்கடோறு முள்ளதெல்லா மொன்றே டொன்றொப்பச் சத்தப்படாமற்கேட்டிருந்தபின்பு கானகத்தெங்குமழுமோசையாக வொலித்துமுழங்கினவென்க. (௱டு௬)

பனிமதிபொழிந்தகற்றை பருகியவாம்பல்போலத்
தனிமதிதுய்த்தநெஞ்சிற் றன்றனைநம்பாத்தன்மை
துனிமதித்தயர்ந்ததல்லாற் றுணிவறுவயிரக்குன்றாய்
முனிமதிக்குழவிசோர்ந்து முளரிமேற்றுயில்கின்றனே.

உரை.—குளிர்ந்ததிங்கள்விட்ட கதிர்களையுண்டவாம்பலைப் போல நிகராதவுணர்வினையுட்கொண்ட நெஞ்சுடையனுகையிற் றானேதன்னை நம்பாமையால் வருமிடர் நினைத்துவருந்தினதொழிய மனத்துணிவுவிடாமல் வயிரக்குன்றின்றன்மையாய்நின்று முதிர்ந்தவுணர்வினுன் முனியு மிளவயதினுற்பாலனுமாயிருந்த கருணையனுடலிற்சோர்ந்து கரைமேற்கிடந்த தாமரைக்குப்பையிற்சாய்ந்து துயிலக்கொண்டானென்க. (௱௫௰௭)

வேறு.

படம்புனைந்தெழுதிய பாங்கிற்பங்கயத்
தடம்புனைந்திளமுனி சாற்றுகின்றெலாம்
வடம்புனைந்தெனப்புனை மறைநல்லோரெசித்
திடம்புனைந்திருளற வுணர்ந்திரங்கினுர்.

உரை.— சித்திரப்படத்தையெழுதிய வனப்பிற்பொலிந்த தாமரைக்குளத்தின்கரைமேலிருந் திளமுனியாகியகருணையன் சொன்னதெல்லாவற்றையு மணிவடமாக வேதநூலணிந்த நல்லோராகியமூவ ரெசித்திடத்திருந்து மறைவின்றியறிந் துளத்திரங்கினுரென்க. (௱௫௰அ)

இரங்கியதன்மையி னுதவியீந்தரு
ளரங்கியநாயக னங்கடர்ந்துசூழ்
குரங்கியவும்பரை விளித்துக்குட்டனுக்
குரங்கிளருறுதிக ளுரைப்பவோதினுன்.

உரை. — அங்ஙன மூவரிரங்கினதன்மைத் துதவியாம்படி கருணையமுத்தியநெஞ்சுடையவதரித்தநாதனங்கேநெருங்கிச்சூழ வணங்காநின்ற வானவருட்சிலரையழைத்துக் குழந்தையாகியகருணையற்கு ஞானவுறுதிகளைச்சொல்லும்படி யவரையனுப்பிச்சொன்னுனென்க. (௱௫௰௯)

பேர்ந்தபூகரையின்மேல் வரடும்பெற்றியா
லார்ந்தபூந்தடங்கரைக் கயர்ந்துதுஞ்சியுட்

சூர்ந்தநோயலைவுகொள் குழவிதன்மையிற்
றேர்ந்தமாமுனிமனந் தேற்றச்சென்மினே.

உரை.— திருக்குமாரன் வானவரைப்பார்த் தெங்ஙனஞ் சொன்னானென்னில், குளத்தினின் றுயெயரப்பட்டுக் கரை மேற்கிடந்தபூ வாடினாற்போலப் பூந்தடாகத்தின் கரைமேற் சோர்ந்துதுயிலாநின்ற துன்பமிகுதியான் மனதில்லைந்தகு ழந்தைவடிவோடு தேர்ந்தமாமுனி மாட்சியிற்சிறந்த கரு ணையனைத்தேற்றி யுறுதிகளைச்சொல்லப்போங்க ளென்று னென்க. (௱உ௰)

அறவினுவிளைத்தநல் லாசையாலுளந்
துறவினுயரிய விரதஞ்சூழ்ந்தபின்
னறவினலர்ந்தபூ முறுக்கிறைந்தென
வுறவினசையினயர்ந் துளைவதேதென்பீர்.

உரை.—அறத்தின்மேல் வினைவைத்து விளைந்தநல்லா சையோடு துறவினுயர்ந்த விரதத்தொழுகும்படி துணிந் தபின்பு வாசமதுமலராக் கையான்முறுக்கி றையச்செய்தா ற்போல வுறவுதுணையை யாசைப்பட்டுவருந்தியுளைவதேதெ ன்பீரென்றானென்க. (௱உ௧)

செருக்கிடைக்கோடுளஞ் சிதைக்குமைம்பொறிப்
பெருக்கிடைப்பெரும்பகை பெறுமியாக்கையை
முருக்கிடைத்துறவற முயற்சிவேண்டுவர்
நெருக்கிடைத்தோலுரித் தரவுநேருவார்.

உரை. — ஆங்காரவினையாற்கோணி மனத்தைக்கெடுக்கு மைம்பொறிகள் செய்வினைபெருகியுயிர்க்குப்பெரும்பகை யைச்செய்யுந் தம்முடலைவாட்டியதுறவறத் துயர்ந்தமுயற் சியைவேணுமென்றவர்யாவரு நெருக்கிடத்தூர்ந்து தோ லையுரித்தபாம்பினைப்போல வாகக்கடவாரென்பீ ரென்று னென்க. (௱உ௨)

மெய்த்துணையிழுக்கெனத் துறவின்மேன்மையோர்
பொய்த்துணையென்றுதம் பொறிகள்போழ்குவா

ரத்துணைகடிந்தபின் னனையர்மற்றிவ
ணெத்துணைகொள்பவ ரென்னவோதுதிர்.

உரை.—துறவின்மேன்மையிற் சிறந்தோர் தம்முடம்பி
ன்றுணை தமக்கிழுக்கென்றெண்ணிப் பொய்யைக்காட்டிய
துணைகளாகிய தமதைம்பொறிகளை யடக்கிக்கொல்வார், அங்
ஙன மவர் தம்முடலின்றுணையைவெறுத்துவிட்டபின்னரிப்
பூவுலகி லெவ்வகைத்துணையை விரும்பிக்கொள்வா ரென்பீ
ரென்றுனென்க. (௱உ௩)

உருத்துணைபொன்மணி புணர்ச்சியோதுணர்
மருத்துணைமலர்தலோ குருவின்வாய்த்துணை
கருத்துணைபுரையொடு சனித்தகாலையிற்
குருத்துணையிலாயினுன் குருடனாயினுன்

என்பவனுயினு னெனினுங்கூருளத்
தின்பவனுகர்ந்தெழ விதயத்தாண்டரு
வன்பவனுணர்வின்மே லியற்றவாண்டகை
பின்பவன்குருத்துணை பெறவுநேடவோ.

இவையிரண்டொருதொடர்.

உரை.—ஒளித்துணையாகப் பொன்னுமணியு மொன்றுப
டச்சேர்த் திசைத்ததுபோலவும் வாசனைதுணையோடுமலர்க
ள்பூத்ததுபோலவுங் குருவின்வாய்த்துணையாகுமென்பான்.
ஆகையாற் கருப்பத்திற்பாவத்தோடு மனிதர்சன்மித்தமை
யாற் குருத்துணையில்லான் குருடனேடொத்தவனென்பான்
கருணையன், என்றுலுந் தானுளத்தருளின்மிகுதியா லின்பங்
கொண்டெழும்படி தன்னெஞ்சினுள் ளாளாநின்று தன்னு
ணர்வின்மேலு மாறுத்தலையை யாண்டவன்றனக்குச் செ
ய்யாநிற்கவே யதின்பின்பவனே வேறொருகுருத்துணைதேடு
வானே வென்பீரென்றுனென்க. (௱உ௫)

போதுவாய்மதுவெனப் பொலிந்தகுலணி
மாதுவாயிருந்தபோ துணர்ந்தவான்கலை
காதுவாயுரைப்பவோர் குருக்களின்டான்கொலன்
றேதுவாய்மலர்த்தன னின்றுமோதுவான்.

உரை. —மீளவு மலரிடத்து மதுப்போலத் தான்முய்கருப்பத்திருந்தபொழுதிற் றனக்கேயடைந்த மிக்கல்விகளைத் தன்காதிலேயுணர்த்தும்படி யொருகுரு வரக்கண்டானே இல்லையே, அன்றுதன்னையுணர்த்தினவ னின்றுங்குறையின்றியுணர்த்துவானென்பீரென்க. (௱உசூ)

உள்ளுறத்திருவுள மிதுவென்றோர்ந்தபின்
றெள்ளுறத்தேற்றுரை செப்பல்வேண்டுமோ
வள்ளுறப்பொலிவயத் தணிந்ததேவருட்
கெள்ளுறத்தோன்றிய விடுக்கணேதென்பீர்.

உரை.— இதுவேதிருவுளமென்று நினைத்துக்கொண்டபின்பு தான்றெளியும்படி வேறொருவன் றேறுதலைச்சொல்லவேணுமோ? நிறைந்தவல்லமையிற்பொலிந்து தேவதயையைமனதிலணிந்தகாலத்து நிந்தைபடும்படி வரத்தகுமிடையூறுண்டோவென்பீ ரென்றானென்க. (௱உஎ)

தான்றனதென்றிரு தகுதிப்பற்றலுந்
தோன்றனவடற்கொடு றூக்கிவானுயர்
கோன்றனதருணிலை சார்ந்தகொள்கையி
லான்றனமதுகைமூ வுலகுமாட்டுமே.

உரை.—அங்ஙனந் தானுந் தனதுமென்னுமிருவகைப்பற்றலைத் தவத்தின்வயத்தாலழித்துநீக்கி யுயர்வான்கோ ...க கடவுளின்றயைநிலை சார்ந்ததன்மைத் தொருவற்குவரு மிகுந்தவல்லமை மூவுலகங்களையும்வேண்டியிருந்தா லாட்டியசைப்பதற்குப் போதுமென்பீரென்றானென்க. (௱உஅ)

நிரையெலாநயனடைக் கடவினீர்மையாற்
றிரையிலாநிலையுடைத் தேவமார்புழி
மரையெனுமலர்ந்தன மனந்துயின்றிடாப்
புரையிலாவாழ்கெனப் புகன்மினீரென்றான்.

உரை.—அங்ஙனமாகையி லொழுங்குபடச்சகலநன்மைகளையரவையுமுட்கொண் டடைத்தகடவின்றன்மைத் தலைவின்றி நிலையைக்கொண்டவாண்டவன்மார்பிடத் தவனொரு

தாமரையாக மனமலர்ந்தினிதாய்மகிழ்ந்து துயின்றாற்போலத் துன்பக்குறையொன்றின்றி வாழக்கடவா னென்பீரென்றானென்க. (ருஉக)

இவையெலாமிளந்தவற் கெம்பிரானுரைத்
தவையெலாம்வணக்கொடு மமரர்கேட்டவி
னவையெலாமறப்பொலி யும்பர்நாயகி
சுவையெலாமலியவோர் விருந்துதோற்றினள்.

உரை. — இவையெல்லாவற்றையு மிளந்தவனாகிய கருணையற்குரைக்கும்படி குழந்தையாய்நின்ற கடவுள்சொல்லவவற்றைவணக்கத்தோடு வானவர்கேட்டிருந்தவேலையிற் குறையொன்றின்றி வானவர்க்கரசாளாகியமரியென்பவள் சுவைகளியாவையுங் கூட்டியதோர்விருந்தினை யாக்கினளென்க. (ருகம)

கன்னலுந்தேறலுங் கனியும்பாலொடு
பன்னலுமரியதோர் பாகுஞ்சேர்த்தியிஃ
தின்னலும்பசியுமாற் றிடுமென்றீந்தன
ளுன்னலுமரிதரு ளுருத்தநெஞ்சினள்.

உரை. —கரும்பையுமதுவையு மினியதீங்கனியையும் பாலோடுசொல்லற்கரியமுறையிற் கூட்டியபாகினையு மொருப்படச்சேர்த்தினளாய்த் துன்பத்தையும் பசியையுமாற்றும் விருந்திதுவென்று வானவர்கையிற் றானாக்கியவிருந்தினைத்தந்தாள் நினைப்பதற்கரியமுறையோடு கருணையிற்பூரித்தநெஞ்சினளாகிய மரியென்பவளென்க. (ருகக)

தாய்வளரன்பின்மேற் றயைவளர்ந்துகான்
போய்வளர்தவர்க்கெலாந் திலதம்போன்றராய்
வீய்வளர்கொடியினான் றாழ்ச்சிமேன்மையின்
வாய்வளருணர்வினை வகுத்துக்கூறினான்.

உரை. —தாயன்பின்மேலுந் தயையையுடையனாய்க் கானகத் தருந்தவத்தைச்செய்வோர்க்கெல்லாருக்கு மொருதிலகமாக நின்றவனாய்ப் பூங்கொடியேந்தினவனாய்ச் சூசையுந்

தன்னைத்தாழ்த்தினதன்மையின் மாட்சியிற்சிறந்ததோ ருண ர்வினைக் கருணையற்குச்சொல்ல வனுப்பினானென்க. (௩௯௨)

மண்ணுறக்கிடந்தநான் வரைவிலாவள
நண்ணுறவெனக்கரு ளானதன்செய்தவை
கண்ணுறக்கண்டபின் கலங்கித்தானுளம்
புண்ணுறக்குழைவதோ புலனென்பீரொன்றான்.

உரை.—தன்னைத்தாழ்த்திச் சூசைசொல்லியனுப்பின தே தெனில்,மண்ணோடொன் றுபட நான் கிடந்தபொழுதி லா ண்டவன்றயையைப்புரிந்து நானளவிறந்தவளமையை ய டையும்படி யெனக்கினிதாய்ச்செய்தயாவையுந் தான்கண் ணாலேகண்டபின்னர் மனம்புண்ணாம்படிகலங்கித் தானுட்கு ழைவ தறிவிதோவென்பீரொன்றானென்க. (௩௯௩)

இனையனபலவுமன் றிசைத்துமூவரு
நனையனவிளமுனிக் காசிநல்கலு
மனையனவுணர்ந்தபல் லமரரோர்கணம்
புனையனவுடைக்கதிர் பொதுளச்சென்றனர்.

உரை.—இவற்றோடுபலவற்றையு மூவர்சொல்லிப் பூவரு ம்பொத்த விளமுனியாகியகருணையற் காசீர்வாதமுந்தந்து பலவானவ ரவற்றைக்கேட் டொருகணத்தி லுடையாகவணி ந்தகதிராவீசி யவனிருந்தவிடத்துச்சென்றாரென்க. (௩௯௪)

குரவமேபின்னிய கூறையாலுடல்
கரவமேலுடுத்துமென் கமலப்பாசிதழ்
பரவமேறுயின்றனன் பாலனைத்தவம்
விரவமேவியர்க்கெலாம் விளக்கொத்தானரோ.

உரை.— வானவர்சென்றவளவிற் பேரீந்திலைகளாற் பின் னப்பட்டசீலை யுடலைமூடமேலுடுத்து மெல்லியதாமரையித ழ்கள்பரப்பினவணையின்மேற் றுயிலாநின்ற னுருவினாற்பா லனைத் தவம்பரம்பும்படி யாசையுள்ளவர்க்கெல்லாருக்கு மொருவிளக்காகநின்ற கருணையனென்க. (௩௯௫)

விழுந்தனகதிர்த்திரள் விழிகள்கூசவுள்
ளெழுந்தினவெருவுறி யயிர்ப்பொடையெழு
வெழுந்தனன்சொல்லுமின் வந்ததென்றுபின்
றெழுந்தனதிருகரங் குவித்துத்தோன்றினான்.

உரை.—சென்றவானவர் வீசினகதிர்த்திரள் துயிலாநின்ற கருணையன்கண்கள்கூசும்படி யுள்ளேயழுந்தினதன்மையில் வெருவிச்சந்தேகத்தோடு துணுக்கெனவெழுந்து வந்ததே தென்று சொல்லுங்களென்றான், பின்புடனே யவனையறிந்து தன்னிருகைகூப்பிவணங்காநின்றானென்க. (௱௩௬)

மூவருமுணர்த்திய வுறுதிமுற்றவுந்
தூவருமுணர்விஞேன் செவியிற்றுய்த்தபின்
மேவருங்கருணையாள் விருந்துதுய்த்துளந்
தேவருந்தெளிவொளி துய்த்துத்தேறினான்

உரை. — மூவர்சொல்லியனுப்பின வுறுதிகளைமுழுதும் வானவர்சொல்லக் கேடாதவுணர்விற்சிறந்தகருணையன் செவியாலுண்டபின்பு விருப்பின்மேலுயர்ந்த கருணையையுடையமரியென்பவ ளனுப்பினவிருந்தினை வாயாலுண்டு தெளிந்த தேவகாட்சியை மனதிலுமுண்டு தேறினானென்க.(௱௩௭)

தெண்ணிறக்கவிஞெடு செறிந்தவும்பருள்
ளொண்ணிறக்கதிர்முகத் தொருவன்போன்றிரீஇப்
பண்ணிறத்திசைகளைப் பாடவானவர்
விண்ணிறக்களிப்பெழ விரும்பிப்பாடினான்.

உரை. — தெளிந்தவொளியின்வடிவோடு சூழநின்றவானவருள்ளே கருணையன் விளங்கியமுகத்தோ டொருவனைப்போல வவர் வீணைவாய்க்குரலோ டிசைகளைப்பாடாநிற்பத் தான் வான்வீட்டில் வாழ்ந்தவனைப்போலப் பாடினானென்க. (௱௩௮)

வேறு.

அடல்வண்ணத்தருள்வெள்ள மார்ந்தொழுகமல்கியெ
கடல்வண்ணத்தெவ்வுயிருந் தேற்றறருங்காவலனே [ழுங்

தேற்றறருங்காவலனைச் சேர்ந்தவிர்தன்கமலத்தா
ளேற்றறருஞ்சிந்தையவ ரீங்கிழிவுநண்ணரோ.

உரை. — வல்லமைக்களவாக வுள்ளவருளின்வெள்ளமோ டிவந்து பெருகியெழுந்த கடலின்றன்மையனு யெவ்வுயிர் கள்யாவையுந் தேற்றாநிற்குங் காவலன் கடவுள்தானே, இங் ஙனந் தேறுதல்செய்யுங்காவலனையண்டி யவனது கமலபா தத்தை வணங்கியேத்துஞ் சிந்தையுள்ளயாவரு மிங்கேகே டொன்றடையாரொன்றுனென்க. (ௗ௩௯)

வான்றேய்ந்தமகிழ்வுளனுய் மன்னுயிர்களுய்வதற்கே யூன்றோய்ந்ததுயர்கொண்ட வும்பர்தொழுங்கோமானே யும்பர்தொழுங்கோமானை யுள்ளிநெறியுட்பிறழா திம்பர்தொழுஞ்சிந்தையவ ரீங்கிழிவுநண்ணரே.

உரை. — வான்வீட்டுள்ள பேரின்பத்தையுடையோனுகி மனிதருயிர்கள்வாழும்படி தானெடுத்த வுடலின்றன்மையா ற் றுயரைக்கொண்டுவருந்தி வானவர்வணங்குமரசனுகிய வ வதரித்தநாதன்றனே, இவ்வரசனைக்கருதி நன்னெறிவழுவா ம லவனைவணங்காநிற்குஞ் சிந்தையுள்ளயாவரு மிங்கேகே டொன்றடையாரொன்றுனென்க. (௪௰)

பானேராவருட்கடலின் பதுமமெனநான்வாழத் தானேராவிடுக்கணுறித் தயையுணர்வின்மிக்கோனே தயையுணர்வின்மிக்கோனைத் தவிர்நசையைத்தவிர்ந்துயர்ந் ரியையுணர்விற்பிறழாதா ரீங்கிழிவுநண்ணரே. [தோ

உரை. — பாலினுமினிய வருளின்கடலுண்மலர்ந்த தாம ரையொப்ப நானேவாழும்படி தானிகராததுன்பங்களைக் கொண்டு நினைத்ததயையின்மிக்கோ னவதரித்தநாதனே, இ ந்நாதனையிழந்தகல்வதற்குக் காரணமாகிய வுலகினுசையைவி ட்டு மாட்சியிற்பொலிந்து கொண்டவுணர்விற்பெயரா நிலை த்தயாவரு மிங்கே கேடொன்றடையாரொன்று னென்க. (௪௧)

விண்கனியவிண்ணுறைந்தோன் வினைத்தவருளுளந்தூ மண்கனியமனுவாகி மணிக்கலத்தேந்தமுதன்றேன் [ண்ட

மணிக்கலத்தேந்தழுதன்றோன் மதிக்குடைக்கீழொதுங்கின
பணிக்கலத்தேந்தடிபெயரா ரீங்கிழிவுநண்ணாரே. [ரன்

உரை.—வானுலகத்தோர் கனிந்து மகிழும்படி தானவர்க்குப்பேரின்பமாகி வானத்திநின்றவனைத் தன்றயை தன்மனத்தைத்தூண்டினதனாற் பூவுலகத்தோருங் கனிந்துவாழப் பூவுலகிலிறங்கி மனிதனாகி மணிப்பாத்திரத்திலேந்திய வமுதுபோலப் பிறந்தநாதனே, இந்நாதனுடைய குளிர்ந்தகுடைக்கீழொதுங்கினரா யழகியபாத்திரத்திற் றயையையேந்திய வவன்பாதத்திற் பெயராதயாவரு மிங்கே கேடொன்றடையாரென்றானென்க. (௱௪௨)

அவ்வுலகுமுவந்தேத்து மான்றகுணத்தொகையோனை
யிவ்வுலகுமேத்தாதா ரீங்கிழிவுநண்ணாரோ
வீங்கிழிவுநண்ணாரே யிக்கருணைக்கடலோனை
நீங்கிழிவுநண்ணாத நெறிநீங்காச்சிந்தையரே.

உரை.— வானுலகுள்ளோர் விரும்பிவணங்கு மாட்சியிற்சிறந்த குணத்தொகையோனாகிய நாதனை யிப்பூவுலகுள்ளோர் வணங்காராயி னிங்கே கேட்டையடையாரோ வடைவார்தாமே, அடையாதவராரென்னிற் கருணைக்கடலாகிய விந்நாதனை நீங்குதற்குக் காரணமாகிய பாவத்தையடையாத நன்னெறிவிடாத சிந்தையுள்ளயாவருமென்றானென்க. (௱௪௩)

வேறு.

என்றுகூறியிளமுனியோடிடை
நின்றுவாழ்த்தியவானவர் நீங்கினு
மன்றுமாலைமணத்தணிகோதைபோ
லன்றுகானமெலாமலர்பூண்டதே.

உரை.— இவையெல்லாவற்றையு மிளமுனிக் கருணையன் சொல்லி யவனுமவனைச்சூழ்ந்தவானவரு மொப்பின்றி மகிழாநிற்க வன்று கானமெல்லா மாலையையணிந்த புதுமணப்பெண்ணைப்போலப் பூத்தமலரையணிந்துதோன்றினதென்க.
(௱௪௪)

தும்பிதேனொடு தூங்கிசையாழ்செயக்
கொம்பிலார்குயில்கூவிசைபாடமேற்
பம்பியார்த்தபுள்பார்க்கவுவந்தரு
ழும்பிவான்மயிலாடினவோகையே.

உரை. — கானமெல்லா முவந்தமகிழ்ச்சியி லாண்வண்டுகளும் பெண்வண்டுகளும் வீணைவாய்க்குரலைச்செய்யவு மதற் கிசைபடக் கொம்பிற் பொலிந்தகுயில்கள் கூவிப்பாடவுஞ் சூழநெருங்கிக்கூடிய மற்றப்பறவைகளினிதாய்ப்பார்த்திருக்கவு மங்கங்கே மகிழ்ந்தெழுந் தழகிய தோகையைவிரித்து மயில்களாடாநின்றனவென்க. (௱௪௫)

கையடங்கிலகாந்திமின்போன்றபுன்
மெய்யடங்கிலபேருயிர்மேலெழீப்
பொய்யடங்கியவைம்பொறிநீக்கிவா
னையடங்கியவாண்டகைநேடுமால்.

உரை. — கருணையனோவெனிற் கையிலொருமின்னைப்பிடித்தா லதிலே யடங்காதெழுவதுபோல வவன்பேருயிருஞ் சிறுதன்மேனியுள்ளடங்காமன் மேலெழுந்து பொய்யையுட்கொண்ட வைம்பொறிகளைநீக்கி வானுலகுள்ளவனப்பெலாமுட்கொண் டடங்கினநாதனொருவனைத் தேடாநிற்குமென்க. (௱௪௬)

பேர்த்தபேருயிரைப்பெறவொல்கிநோய்
கூர்ந்ததாயுடனேடியகொள்கையா
லார்ந்தவாசையலைந்துளமாடவுண்
ணேர்ந்தநாதனையெங்கணுநேடுவான்.

உரை. —பிரிந்ததன் னுயிரை மீளவும்பெறும்படி யுணர்வுளதாயிற் குழைந்துவருந்தி யுடலேதேடினாற்போலக் கருணையன்கொண்ட தேவவன்பினாசையலைந்து தன்மனமுமாடாநிற்க வுளத்துடன்பட்டநாதனை யெங்குந்தேடுவானென்க. (௱௪௭)

மழையினார்ப்பெனவண்டிமிர்நீண்டரு
மழையினீரொனத்தூய்மதுத்தூவலு
மழையினீலநிறத்தவனத்திடை
மழையின்மின்னெனவந்திரிவானரோ.

உரை. — மேகத்தின்முழக்கம்போல வண்டுகள்முழங்கிய நீண்டமரங்கள்யாவு மழைத்துளியாக மதுவினைப்பொழியாநின்று கரியமேகத்தொத்த வக்கானகத்தெங்கு மாண்டவனைத்தேடி யம்மேகத்தின்மின்னலைப்போலக் கருணையன்றிரிவானென்க. (௱சஅ)

மனத்துளேயுறைந்தாள்வயநாதனை
வனத்துளேதுடர்ந்தால்மருவானெனக்
கனத்துளேநுழைமின்னிற்கடிநந்துளத்
தினத்துளேதிருத்தாளடைந்தேத்தினான்.

உரை. — தன்மனதிலிருந்து தன்னையாளாநின்றநாதனைத் தானவ்வனத்திற்றேடினா லகப்படானென்று பின்னறிந்தகருணையன் மேகத்தினுழையுமின்னலைப்போலத் தன்மனத்தினுழைந் தங்கே நாதன்றிருப்பாதத்தையடைந்து வணங்கினானென்க. (௱சகூ)

நெடிதுதேடியநீரியதோர்பொருள்
கடிதுகாண்டலுங்காதல்களித்தென
நொடிதுதைந்தநுணங்கியநோக்கரு
தடிதுதைந்தவகத்தரிதோங்கினான்.

உரை. — நெடுநாட்டேடிய வழகியவோர்செல்வப்பொருளை யிருந்தாப்போலே கண்டதன்மையாற் கருணையன்மனதில்லடைந்த கடவுளின்காட்சியா லாசையுட்களிகூர்ந்தொருநொடியாகிலு நுணங்கியநோக்கம்பிரியாம லாண்டவன்பாதத்திநெருங்கி யரியமுறையின் மனதிலோங்கி வாழாநின்றானென்க. (௱ருய)

மின்னின்மின்னியவேள்வியினீயெனு
வன்னிமின்னியவாண்முகந்தண்ணமே

துன்னிமின்னியதூயுளந்தீச்சுடர்
முன்னின்மோயிசன்காண்மரமொத்ததே.

உரை.—அங்ஙனங்கருணையன் மின்னின்றன்மையா லா டிவிளங்கிய வேள்வியின் றீக்கொழுந்தொப்ப நெருப்புப் போலத் தன்முகம்விளங்கவுங் குளிர்ச்சிபொருந்திய தன்ம னமகிழவு முன்னாளிலே மோயிசனென்பவன்கண்ட வொ ருமரஞ்செந்தீப்பற்றிவெந்தாற்போலத்தோன்றி யத்தீச்சு டாமலுமதுமலர்க்குளிர்ச்சிமாறுமலு மம்மரமிருந்ததுபோ லக் கருணையனின்றானென்க. (†) (௱௫௧)

விண்டின்மாரிவரத்தருள்மீவிளைந்
தண்டியார்ந்துணுமாங்குயிர்வாழ்கினு
முண்டிநாடவுறுப்புதவாப்பசி
மண்டிவாடியபூவுடல்மாழ்குமால்.

உரை.— அங்ஙன மேகம்பெய்தமாரியொப்ப நிறைந்த டைந்தவரங்களால்விளைந்த தேவதிருவருளையணுகி நிறைய வுண்டமையா லவனுயிரங்கேவாழ்ந்தாலு முடற்குவேண்டி யவுணவுகளைத்தேடற்குரிய வவையவங்க ளின்னமுதவாமை யாற் பசிமிகமொய்த்துச் சிறியபூவுடல்வாடிச் சோம்புமெ ன்க. (௱௫௨)

உய்யநீண்கிழங்கோடுயர்தீங்கனி
கொய்யநீரியகுட்டனுநொய்யதன்
கையதாவுதவியில்காலெலாம்
வெய்யவானரசாள்விருந்தோம்பினன்.

உரை.— செல்வக்குழந்தை பிழைத்துண்ணும்படி ம ண்ணிற்புதைத்த நீண்டகிழங்குகளையு முயர்ந்தகொம்பிற்ப ழுத்த தீங்கனிகளையும் பறிப்பதற்குத் தன்னொய்யங்கையா லுதவியில்லாதகாலமெல்லா நாடோறு மொளிவானரசாள் விருந்தினையாக்கி யனுப்புவாளென்க. (௱௫௩)

ஓம்புகின்றவிருந்துளநாடொறுஞ்
சாம்புகின்றவிண்ணோர்தரத்தாமனா

(†) Exod. III.C. 2, 3. V.புறப்பாடாகமம், ௩-ம்.அதி.௨-ம்.௩-ம். வசனம்,

கூம்புகின்றகரத்தொடுகொண்டுணைக்
காம்புகின்றவுடல்கனிவாழுமால்.

உரை.— அங்ஙன மரியென்பவள் சமைத்தனுப்பின விருந்தினை நாடோறுங் கூட்டமாய் வானவர்கொண்டுபோய்க் கொடுக்கக் குவிந்ததாமரையொப்பக் கைகூப்பிவாங்கித் தானுண்டதனாற் சோம்பிமெலிந்த மேனியு மினிதாய் வாழுமென்க. (௱௫௪)

இனையயாவையுமின்பெழக்காண்டநு
நனையளாவியவாகைநறுந்தவன்
புனையவாவுளந்தூண்டியபொம்மலாற்
றனையனாயினநாதனைச்சாற்றினான்.

உரை. — இவையெல்லாவற்றையு மின்பமாய்க்கண்டு மதுமலர்க்கொடியையேந்திய தவத்தோன்குசை தன்மனத்தைத்தூண்டி யணிந்த வன்பின்மிகுதியா லொருநாள் மகனாகநின்ற நாதனைநோக்கிச் சொன்னானென்க. (௱௫௫)

வரிவளர்ந்தவனத்திளமாமுனி
யெரிவளர்ந்திடர்மாந்தவெந்நாளுமோ
வுரிவளர்ந்தவுன்றாளுறச்சேர்க்குதி
சொரிவளர்ந்தவருட்டுடர்போயென்றான்.

உரை. — கொடும்புலி வளரும்வனத்தி லிளமுனியாகியகருணையன் செந்தீயொத்த துயர்களை யெந்நாளு மநுபவித்தல்வேண்டுமோ? அவற்குரிதாகவளர்ந்த வுன்றிருப்பாதத்திலவனைச்சேர்க்கக்கடவாய் சொரியு மழையின் றன்மைத்தருளன்புடையோயென்றான் குசையென்க. (௱௫௬)

அருளின்காணியினனருளிச்சொலும்
பொருளின்காணியபொற்பளிக்கின்புறக்
கருளின்காணுமுக்காலைகடந்தொளிர்
தெருளின்காணியினிவைசெப்பினன்.

உரை. — தயையைக்காணியாகக்கொண்ட சூசை தயை புரிந் தம்மனஞ்சொன்னபொருளிற் றேன்றின வன்பின்மி குதியா லுளங்களிகூர்ந்து மற்றவர்க்கிருளாய்த்தோன்று நிகழ் வெதிரிறப்பென்னு முக்காலங்களை யிருளின்றிக்கடந்து விளங்கித்தெளிந்த ஞானமே காணியாகக்கொண்ட திருக்குமாரன் மறுமொழிசொன்னனென்க. (௬௫௭)

வேறு.

கோதணிந்தவுளங்கோடிக்கோடாநிற்கும் பூவுலகத்
தீதணிந்ததுயர்தீர்ப்பப்பிறந்தேனுனென் றிருமுகத்திற்
றூதணிந்துதவவடிவாய்வழிதான்முன்னித் துடைப்பதற்கே
போதணிந்தவனம்வைகும்வனைத்தேர்ந்தேன் பொறிவென்
றேய்.

உரை. — திருக்குமாரன் சூசையைநோக்கித் தானினைத்தே வியபடி கருணையன்செய்யத்தகும் யாவையுஞ் சொல்லத்துடங்கினன், ஆகையால் பொறிகளைவென்றதவத்தோனேபாவத்தைக்கொண்ட மனிதருள்ளங் கோணிக் கோணுநிற்கும் பூவுலகெல்லாந் தீவினையாற்கொண்ட துயர்களைத்தீர்த்திரட்சிக்கும்படி நானேமனிதனுய்ப்பிறந்தேன், என் றிருமுகத்தி லொருதூதாகித் தவத்தின்வடிவோடு முன்னேபோ யெனக்குவழி துடைத் தொப்பனைசெய்யும்படி மதுமலர்பூத்தவக் கானத்திருக்குங் கருணையன்றன்னைத் தெரிந்துகொண்டே னென்க. (௬௫௮)

இனஞ்சேர்ந்தாரினஞ்சேர்ந்தவிழிவுஞ்சேர்வா ரொன்றருளை [யால்
மனஞ்சேர்ந்தாய்வடுச்சேராக்குழவிதானென் மனப்பணி
வனஞ்சேர்ந்தான்கணெனதருளங்கைமேல் வளர்ந்தன்றுன் [வானே.
புனஞ்சேர்ந்தார்கனித்தருவின்பொலிசைமிக்கோன் பொலி

உரை. — இனத்தாரைச்சேர்ந்தயாவரு மவ்வினத்தார்கொண்டகுறையைத் தாமுமடைவா ராகையிற் கருணையன்மனதி

லருளையடைந்து குற்றமேயவற்குச் சேராதபடிக்குக் குழந்தையிலேதானே யென்னேவலினால் வனத்திலேசேர்ந்தான், அங்கேதானே யென்றனையாகியகையின்மேல்வளர்ந்து புனலின்றுசேவளர்ந்து தீங்கனிகளை நிறையக்காய்க்கு மரத்தின்செல்வத்திலுமிக்க பொலிவுற்றுயர்வானென்க. (௱௫௯)

மீன்கறிகற்றெளிவேற்கஞ்சிலகானின்று வெளிப்பட்ட
வூன்கறிகற்றரியன்னதவத்தின்மிக்கோ னுலகஞ்சத்
தேன்கறிகற்றிமிர்வண்டார்வனத்தினின்று செழுஞானந்
தான்கறிகற்றமிழ்ந்தென்னத்தவறுநீதி சால்புரைப்பான்.

உரை.— அங்ஙனங் கருணையன்வளர்ந்தபின்பு மீனினும் விளங்கியவேலுக்கஞ்சாம லுயிர்கொண்டூனையுண்ணும் வீரசிங்கங் காட்டினின்று வெளிப்படவந்தாற்போலத் தவத்தின் மிக்கோனாகிய கருணையன்றானுந் தேனையுண்டுமுழங்கும்வண்டுகள் நிறைந்தகாட்டினின் றுலகமஞ்சும்படிபுறப்பட்டுத் தானுண்டஞானமுமிழ்ந்தாற்போலத் தப்பாதநீதிநெறிகளைக்காட்டுவானென்க. (௱௬0)

சொல்லாருமலர்சிந்துங்குன்றத்துச்சி துறந்தோடி
வில்லாருந்திரைசிந்துசோர்தானென்னும் வெண்ணதிகண்
ணெல்லாருமுய்வழியைக்காட்டநான்வந் தியைந்தநிலை
கல்லாருங்கற்றுய்யவிரலாலென்னைக் காட்டுவனால்.

உரை.— அங்ஙன மவன்சொல்லிக்கொண்டுவருகையின் மதுமலர்பூத்த மலையினுச்சியைவிட்டிழிந்தோடி விளங்கிய திரைகளைச்சுருட்டுஞ் சோர்தானென்னுமாற்றின் கரைமேனின் றெல்லாரு முயிர்வாழும்படிவழியைக்காட்ட நானவதரித்துவந்தசெய்தியைக் கல்லாதவருமறிந்து பிழைக்கும்படி விரலாலென்னை யெவர்க்குங்காட்டுவானென்க. (௱௬௧)

புண்டுதைந்ததீயன்னசுடுஞ்சொல்வாளாற்புரையீர்த்து
விண்டுதைந்தவிடியன்னமுழங்கிநீதி வெருவுய்த்துக்
கண்டுதைந்தவிருடிரவிளக்கிட்டன்ன கதிகாட்டி
மண்டுதைந்தமன்னுயிர்கள்பலவுமுய்க்கும் வரங்கொள்வான்

உரை.—அங்கே யவன்பழம்புண்ணைத் தீயாற்சுட்டாற்றினாற்போலப் பாவிகளைக்கொடிதாய்ச்சினந்து சுடுந்தன்சொல்லாகியவாளாற் பாவங்களையறுத்தெறிந்து மேகத்திடியினொலியோடுமுழங்கித் தேவநீதிக்கெவருமஞ்சச்சொல்லி நெருங்கியவிராவிருள்கெடும்படி சுடர்விளக்கிட்டதுபோல வான்வீட்டுக்கதியைக்காட்டிப் பூவுலகிலுள்ளபலரையு மங்கே செலுத்தும்படி வரத்தையடைவானென்க. (௱௬௨)

பாடலோடியைந்தாடல்குணிக்குமின்பம் பயந்தெனக்கோற்
கோடலோடியைந்தபுகர்கொண்டன்றாண்ட கோமானான்
மாடலோடியைந்தொழுகியரியவெல்லா வறத்தொகையோ
வீடலோடியைந்தெதிர்க்கும்வினைசால்போதக் கனிகேட்பான்.

உரை. — இனிதாய்ப்பாடிய குரலோடிசைபட நடத்திய வாடலே யாடமாட்டாதமுடவற்கு மின்பஞ்செய்வதுபோலப்பிறர்க்குணர்த்தியதன்மைத் திசைபடத்தானுநடந்து சகலவறங்களிற்சிறந்த கருணையன் பாவிகளிறக்கும்பொழுதவர்க்கெதிர்வரு முடியாததுன்பங்களைக்காட்டினவிடத்துச் செங்கோல்கோணிப் பாவியாய்நடந் தந்நாளிலே யாளாநிற்குமரசன்முதலா யவனையினிதாய்க்கேட்பானென்க. (௱௬௩)

எரிகாய்ந்தவிரும்பின்மேற்றுளிவீழ்ந்தன்ன வெரிகாமம்
புரிகாய்ந்தமனத்துணர்வுற்றொழுகல்செய்யாப் புகைந்தழிய
வரிகாய்ந்தவுணர்வோன்றன்றம்பியில்லாள் வைத்துமதஞ்
சொரிகாய்ந்தகரியன்னகாமப்பவ்வந் தோய்ந்தாழ்வான்.

உரை.—அங்ஙனங் கருணையன்சொன்னவுணர்வெலாநெருப்பாகக்காய்ந்த விரும்பின்மேலேவிழுந்த நீர்த்துளிபோலக் காமத்தீயாற்காய்ந்த வவன்மனதில்விழுந்து புகைந்தழியும்படி தானொத்துநடவாமற் றன்றம்பியுடையமனைவியைத் தான்வைத்துக்கொண்டு மதயானையின்றன்மையாற் காமக்கடலின் மூழ்கிக்கிடப்பானென்க. (௱௬௪)

நஞ்சினிதாய்நெடுநாளுநக்கிநக்கி நாமரத்து
விஞ்சினிதாயமுதூட்டின்சுவைகொள்வானே வினைவென்ற
நெஞ்சினிதாயமுதுமிழ்ந்தேயன்றோது நீதிமுறைக்
கஞ்சிலனையன்றவனைச்சிறையுட்பெய்வா னறப்பகையான்.

உரை.—நெடுநாளொருவன் கசக்குநஞ்சினை நக்கிக்கொண்டுவருகையா லக்குமரத்துப்போ யவற்கு மிக்கினிய வமுதினையூட்டினாலு மின்பங்கொள்ளான், அதுபோல வினையெலாம்வென்றநெஞ்சுடையகருணைய னமுதினையுமிழ்ந்ததன்மைத் தவனுக்கோதிய நீதிமுறைக்கஞ்சாம லறப்பகைவனாகிய வவ்வரச னவனைச் சிறைச்சாலையிற் போடுவானென்க. (௱௬௫)

கலைசெய்தூயுணர்வுளாத்தோன்பிரிதல்சொன்ன காரணமா
யுலைசெய்தீவிளைகாமத்துணைவிதேரு துணர்பகையாற்
கொலைசெய்வான்மைதியைக்காத்திருந்தகாலை கோன்பிறந்த
நிலைசெய்நாள்விருந்தோம்பிநிருபனொல்லா நின்றுவப்பார்.

உரை.— கற்றநூல்வழி வழுவாதுணர்த்தியகருணையன் விலகினதம்பிமனைவியை விடச்சொன்னகாரணமாகத் தீச்சுடுங் காமத்துணைவியாய்நின்றனளுணர்ந்த விடாதபகையாலவனைக்கொல்லும்படி யேற்றவேலைவருமென்று காத்திருக்கையி லரசன்பிறந்தநாள்வந்து முறைமையோடுபெரியோரொல்லாரு மரசனிட்டவிருந்தினையுண்டு மகிழ்ந்திருப்பாரென்க. (௱௬௬)

குழலெடுத்தின்னிசைகுயிலவரசன்காணக் குழூச்சூழ
நிழலெடுத்தொண்மணிமின்னநிருபன்பாவ நிலமகளை
யழலெடுத்தின்பெனச்சுடும்வேற்கண்ணா ளொக்கி யறமழியக்
கழலெடுத்தொண்சிலம்பார்ப்பக்கனத்துமின்போ லாடுகிற்
பாள்.

உரை.—விருந்தினையுண்டபின்பு மன்னவன்பாவத்துப்பிறந்தவளொருத்தி யன்றுவீணைவாய்க்குரலோடிசைபடப் பலரோடாடவு மரசன்வந்துபார்க்கவு மற்றவர்கூட்டமாய்ச்சு

ழநிற்கவு மவளணிந்தமணிகளசைந் தொளிவீசிமின்னவு மி
ன்பங்காட்டி யுயிரைச்சுடும்வேற்கண்ணா லவள்சூழநோக்கி
நல்லறமழியவுங் காலெடுத் தணிந்தபொற்சிலம்புகள்முழங்க
வு மேகத்தாடியமின்னலைப்போல வன்றவளாடுவாளென்க.
(௱௯௭)

தேன்குழையமலர்குழையவிடைகண்கைகாற் றிறங்கு
ழைய
மான்குழையக்குழைந்திழைந்தின்னமிர்தமூற மகிழ்வுறியுட்
கோன்குழையக்குழைப்புகழவுணராதாணை கூறினன்வான்
மீன்குழையக்கவின்மகளேகேட்டதீவேன் விழைந்தென்
பான்.

உரை.—அன்றவ ளாடும்விரைவினா லணிந்தமாலைகுழைய
வு மதினின்று தேன்குழைந்தொழுகவு மவளிடையுங்கண்ணு
ங் கையுங் காலுந் திறங்குழைந்தசைந்துநெளியவு மாட்சி
மையழிந்துகுழையவு மாடாநிற்பதையரசன்கண் டினவமி
ர்தத்தையுண்டதன்மையின்மகிழ்ந்து தானுமுட்குழைய மற்
றவர்புகழைக்கூற வான்மீன்குழைவதற்குக் காரணமாகியவ
ழகுளமகளே நீகேட்டதெல்லாவற்றையும் விரும்பித்தருவே
னென்று மன்னவனுணராமலாணையுமிட்டுச் சொல்வானெ
ன்க. (௱௯௮)

தாயுணர்வாற்கருணையன்றன்றலையையன்று டரக்கே
ட்டுத்
தூயுணர்வால்வருந்தினுந்தான்மறுக்கறேற்றுத் துடர்காமங்
காயுணர்வானுட்கலங்கிக்கொணர்மினென்னக் கடுங்கசடர்
போயுணர்வாற்பகைத்தமுனிதலைகொய்தங்கட் பொறுத்து
ய்ப்பார்.

உரை.—பாவத்திற் றன்னையீன்றதாய்சொன்ன தீயவுணர்
வினாற் கருணையன்றலையைத்தரச்சொல்லி மகளுங்கேட்ப வ
ரசனீதியையுணர்ந்து கொடிதென்று மனதில்வருந்தினா
லும் காமத்திற்காய்ந்தவுணர்வினையுடையனாகி மறுக்கமாட்
டாமற்கலங்கிக் கொண்டுவாருங்களென்பான், அங்ஙனந் தீய
கொடியோர்போய்ச் சொன்னவழுவாதவுணர்வினாற் பகைக்

கப்பட்டமுனியாகிய கருணையன் றலையைவெட்டி யங்கேகு மத்துகொணர்ந்து வைப்பாரெங்க. (ஙசுகூ)

பகைதீர்ந்ததெனத்தாயுள்ளுவப்பநீதி பகர்ந்ததுபோற்
றொகைதீர்ந்தவரத்தோன்வாய்த்தோன்றயாருந் துதைந்தஞ்சத்
தகைதீர்ந்ததீயரசன்குழையக்குன்றாத் தவத்துயர்ந்தோன்
மிகைதீர்ந்தசெல்கதிசேர்ந்துவப்பானென்றான் வினைதீர்ப்பான்.

உரை. — அவன்றலைமுன்னேவைத்தவளவிற் கொடியதாய் தன்பகைதீர்ந்ததென்று மகிழாநிற்பத் தொகையொன்றின்றி வரங்களையடைந்தகருணையன்வா யிறந்தபின்னுஞ் சினந்து நீதிமுறைகளையுரைத்தாற்போலத்தோன்றிச் சூழநின்றயாவருமஞ்சாநிற்ப மாட்சியையிழந்ததீயவரசன் குழைந்துமயங்காநிற்ப மாறாதவத்திற்சிறந்த கருணையன் முன்பமொழிந்தசெல்கதியிற்சேர்ந்து முடிவின்றிப் பேரின்பத்தைக்கொண்டு மகிழ்வானென்றான் வினைகளையெவர்க்குந்தீர்க்குந் திருக்குமாரனென்க. (ஙஎ0)

வேறு.

மூருகுவாய்மொழிமுற்றவுங்கேட்டுளத்
துருகுமாதவனேங்கியவோதியாற்
பருகுவாய்மையின்பானலம்பண்டொடாங்
கருகுகான்றெனவாய்ந்தறைந்தானரோ.

உரை. — திருக்குமாரனருளிய மதுவாய்மொழிகள் யாவையுங்கேட்டு மாதவன்சூசை மனதிலுருகிச் சொன்னவுயர்ந்தவுணர்வோடு தானுள்ளுண்டவமுதத்தை யருகுநின்றிவிதா யுமிழ்ந்தாற்போல மறுமொழிசொன்னா னென்க. (ஙஎக)

கொல்லும்வேலினுங்கொன்றுயிர்மெய்யுணப்
புல்லும்வீயினும்புன்கண்புகுத்திமேற்
செல்லுங்கூற்றினுநஞ்சினுந்தீயதா
மொல்லுமாதருணர்ந்திலடையாசையே.

உரை. — கொல்லும்வேலினு முயிரைக்கொன்றபின் னு டலையுண்ணும்புலியினுந் துன்பங்களைவிளைவித் துயிரைக் கொல்லவருஞ் சாவினுங் கொடியநஞ்சினுங்கொடியதா மாதரின்மேல்வைத்த தீயவாசையென்றானென்க. (௱எ௨)

கனிநுழைந்தமுதோடுணுங்காளமே
துனிநுழைந்துதுகைத்துயிர் துய்த்தென
நனிநுழைந்தநசையினிதுண்டபின்
னினிநுழைந்தவிடுக்கண்வருத்துமே.

உரை. — இனிதாய்நுழைந்தபாலோ டுண்டநஞ்சு துன்பத்தோடுநுழைந்து வருத்தஞ்செய் துயிரையுண்டுகொல்வதுபோல மனதிற்கொண்ட காமத்தாசையுமின்பமென் றதனையுண்டபின்பு துயரைப்புகுத்தி மிகவும்வருத்துமென்றானென்க. (௱எ௩)

சிலையின்மேன்மையுஞ்சீர்த்தியுஞ்சீலநன்
னிலையின்மேன்மையும்வாழ்க்கையுநீதமுங்
கலையின்மேன்மையுங்காமநினைத்தகா
லுலையின்மேல்வழுதொத்தெரிந்திறவே.

உரை. — சிலைத்தொழிலிற் பொலிந்தவீரமும் பெயரிற் பொலிந்தகீர்த்தியு மொழுக்கத்துப்பொலிந்த வறத்திணிலைமையும் பொருளிற்பொலிந்த வாழ்க்கையு முறையிற்பொலிந்தநீதியுங் கல்வியிற்பொலிந்தபுலமையு மிவையெலாமொருங்குடன் காமத்தின்மேலாசைவைத்தமாத்திரத் துலையின்மேல்வைத்தவைக்கோலைப்போல வெரிந்தழிந் தொருப்படக்கெடுவனவென்க. (௱எச)

கண்ணவாவுகதிர்கடன் மூழ்குமுன்
பெண்ணவாவுகொணர்பிணிதன்மையிற்
புண்ணவாவுபுலாலுணுங்குந்தமும்
விண்ணவாவுவிண்ணேறுமோர்தீமையோ.

உரை. — தீதின்முறையிற் பெண்ணின்மேலாசையைவைத்தாலன்றுதானே கண்விரும்பின வொளியைப்பரப்பின கு

ரியனத்தமித்துக் கடலின்மூழ்குமுன்னே யவ்வாசைகொண்டுவிடுந் துன்பத்தின்கொடுமையைப்பார்க்கிற் றன்செய்தபுண்வழியாலிறங்கின வூத்தையுண்ணும்வேனு மேகத்திழிந்தவிடியு மெத்துணைகொடியதாயினு மதற்கிவை தீயனவல்லவென்க. (௱எரு)

அரிந்தபோதுகுழைந்தெனவாகுலம்
பிரிந்தபோதுநசைபெறுமாமென்பார்
விரிந்தபோதுகுடைவினைவண்டெனப்
புரிந்தபோதுநசையுயிர்போழுமே.

உரை.— கொம்பினின்றறுத்த மதுமலர்வாடினாற்போலத் தம்முட்பிரிந்தவளவிலாசையும்வருத்தஞ்செய்யுமென்பார், ஆயினும் பூவினிதாய்மலர்ந்தபருவத்து வண்டுகள்மொய்த்ததனைக்குடைந்து வினையைச்செய்வதுபோல வாசைபுரிந்தவளவிலே யதுவுயாைச்செய் துயிரைக்கொல்லுமென்றானென்க. (௱எசு)

இசைசெய்மெய்ப்பகைதாங்கியமாக்கடந்
நசைசெய்யப்பகைநாடினர்தாமென
விசைசெய்விற்பகைவிற்றொழில்காக்கினும்
வசைசெய்யப்பகைமாற்றரிதாமரோ.

உரை. — ஊத்தையூறு மிவ்வுடலைப் பெரும்பகையாகக் கொண்டமனிதரோ யவருக்காசைசெய்யுமபகையைப் பகையெனறெண்ணம வினிதென்றதனைத்தேடுவார், ஆகையால் விசையைக்கொள்ள வேற்றியவில் லொருவற்குச்செய்யும்பகையை யவனும்வில்லாற்காத்து வெல்லலாம், ஆயினும் வசைபெறவாசைசெய்யும்பகையைமாற்றி வெல்லுவதரிதென்றானென்க. (௱எஎ)

ஒல்லுந்தன்மையையோர்ந்திலமானிடர்
கொல்லுந்தம்பகையேகுணமென்பது
சொல்லுந்தன்மையன்றேலருள்சூழ்ந்துநீ
வெல்லுந்தன்மையையாளவிளம்புவார்.

உரை. —சொன்னபடியா யவற்றையாராயாமன் மனிதர் தம்மைக்கொல்லும் பகையாகியகாமத்தானைச குணமென்று காட்டியவறிவின்மை சொல்லுந்தன்மையல்லவென்று மவர்நினைத்ததீமையி னீயருளைநினைத் ததனைவெல்லுந்தன்மையைச் சொல்லிக்காட்ட வல்லவராவொன்று னென்க. (௱௭௮)

மின்னனேனொழியின்பம்விரும்பிய
வன்னநேரலன்கோடணையாற்றலோ
டின்னதாலருளோனிரும்வீட்டிடை
மன்னநீசெயும்வல்லருளாண்மையே.

உரை. — மின்னலைப்போலத் தோன்றியொழியுஞ் சிற்றின்பத்தை விரும்பினதனுற் பகைவனு யவ்வரசன்செய்யுங் கொடுமையைக்கொண்டு கருணையன் வான்வீட்டிடத்து நிலையைக்கொண்டு வாழும்படிசெய்வது நீநடத்து மருளின்வல்லமைதானேயென்று னென்க. (௱௭௯)

கடுவுயிர்த்தடுங்கட்செவிநாகமே
கொடுமருத்துவர்கொல்விடங்கொல்லுவார்
வடுமருட்டியவஞ்சினர்செய்ததீ
யடுவினைக்கொடுநீயருளாற்றுவாய்.

உரை. — நஞ்சினையுமிழ்ந்துகொல்லும் பாம்பினைக்கொண்டு வைத்தியர் மருந்தினையாக்கிக் கொல்லுநஞ்சினைக்கொல்வார். அந்தன்மைத்தே வஞ்சமனிதர் பாவத்தான்மயங்கிச் செய்த வுயிரைக்கொல்லுந் தீவினைகொண்டு நீயுயிரை வாழ்விக்குந் தயையைச்செய்வாயென்று னென்க. (௱௮௰)

தீயரெம்வினைதீயர்முடித்தலாற்
றூயநல்வினைசூழ்ந்துமுடித்தரு
ளாயநின்வினையாதரவாயினிக்
காயவெவ்வினைக்கையருக்கஞ்சவோ.

உரை. — தீயோர்நினைத்த தீவினைமுடித்தவழியிற்றானே நீ நினைத்த தூயவினைமுடித்து நின்வினையாகியதயையி னுத

ரவிருந்தா லுள்ளங்காய்ந்து பகைத்த நீசமனிதர்க்கஞ்சவே ண்டுமோ வில்லையென்றா னென்க. (௱அக)

உலகியாவுமுடற்றினுமஞ்சவோ
வலகியாவுமகன்றருளாற்றநீ
விலகியாவும்விளங்கியவெஞ்சுட
ரிலகியாரிருளிற்றதுபோலென்றான்.

உரை. — உலகெலா மொருப்பட வெதிர்த்துப்பகைத்தா லு மதற்கஞ்சவேண்டுமோ வில்லையே, அதேனெனி லளவி றந்த தயையை நீ செய்தவளவி லவையெலாம்விலகிநீங்குவ ன, சூரியனுதித்துவிளங்கினவளவி லெங்குநிறைந்த விருள் கெட்டொழிவதுபோலவென்றான் குசையென்க. (௱அ௨)

என்னமாதவனெண்ணகன்றின்புறி
யன்னநாகிலருந்தவன்மாட்சியை
யுன்னநாவமுதூற்றெனநாடொறு
மன்னநாதனைமாறிலவாழ்த்தினான்.

உரை. — இவற்றைச்சொல்லி மாதவன்குசை மிகவுமகிழ் ந்து சொன்னபடி யிளமையி லருந்தவனாகிய கருணையனு டையமாட்சியை நினைத்தபொழுதெலாந் தன்னுக் கமுதூ ற்றதாகி நாடோறுந் திருக்குமாரனை வாழ்த்தாநின்றா னெ ன்க. (௱அ௩)

கருணையன்மாட்சிப்படல முற்றும்.

ஆகப்படலம்-௨௬-இ-விருத்தம்

௨௲௬௱௭௰௭.

இருபத்தேழாவது.

ஞாபகப்படலம்.

வேறு.

மனையிடையிவையெலாம் வழங்குங்காலையிற்
கனையிடைமுரசதிர் கனவிமாபுரம்
வினையிடைவிளைசெயிர் விலகிஞாயகச்
சினையிடைமலர்ந்தநற் சீலஞ்செப்புவாம்.

உரை.— மரியுஞ்சூசையுந் திருக்குமாரனோடிருந்த சிறு மனையிடத்து நெடுநாளிவையெலாஞ் சொன்னமுறையோ டுநடந்துவருகையிற் பேரொலிமுரசதிர் தாமிருந்த விரவி மாபுரம் வினையைவிளைவிக்கும் பாவங்களையகற்றி யரியவே தநற்பொருளையறிவிக்கு முபதேசமாகிய பூங்கொம்பிடத்தி லங்கேமலர்ந்த பூவாகிய நல்லொழுக்கமுறை யினிச்சொல் வா மென்க. (க)

போர்முகத்துற்றபேய்ப் புதையப்பூதியுட்
கார்முகத்திடியெனக் கறங்கிவீழ்ந்துறத்
தார்முகத்திக்கென முதற்சொற்சாற்றிய
வேர்முகத்திளவலன் றடிவைத்தேகினன்.

உரை. — முன்னர்ச் சோகுதோர்வைப்படலத்திற் சொ ன்னமுறையா லவர்மேலேபோர்செய்யமொய்த்த பசாசுக ள் தீயிற்புதைந்துகிடக்கும்படி மேகத்தினின்றிழிந்த விடிக ளைப்போலமுழங்கி நரகில்வீழ்வதற்குக்காரணமாகப் பூமலர் மாலையுமிழ்ந்தமதுவென வந்நாள்மட்டும்பேசா தன்றுமு தற்சொல்லுச்சரித்தவழகியமுகத்துத் தெய்வக்குழந்தை யன் றுதானே முதன்முறை தரையிற் றன்றிருவடியைவைத்து ந டந்தானென்க. (உ)

பூவிடைப்புதிமதுப் பூத்தபூவென
நாவிடைத்தேனுக நவின்றுலாவவிற்
பாவிடைப்புகழெழ வும்பர்பாடிமேற்
கோவிடைத்திருவிழாக் கொள்கைத்தாயதே.

உரை. — அங்ஙன மண்மேற்புதிதாய் மதுவைப்பொழிந்து பூத்தமலரைப்போலத் திருக்குமாரன் மண்மேலின்று நாவிடத்தூறிய மதுச்சொற்பேசிநடக்கையிற் சூழவன ர் திருப்புகழ்முறையோ டினியபாடலையியற்றுநிற்க வான்மே ற்கொண்டாடின திருவிழாவின்றன்மையத்தாயிற்றென்க. (௩)

ஆன்னமுங்கைப்புமொன் றின்றித் தூய்திறத்
தன்னமுமறுவென மெய்ப்பயன்னைதான்
பின்னமும்முறைகொழு திட்டுப்பேரருண்
மின்னமுமுடியினேன் மெய்ந்துதோன்றினான்.

உரை. — அங்ஙனந் திருக்குமாரன் றரையிலடிவைத்து மூந்திநடந்தவன் றூமானே யவனையீன்றகன்னியாகியமரியென்பவள் முன்றன்கையாற் றையலுமின்றி யிசைப்புமின்றிய ன்னமுதலாய் மறுவுளதென்னும்படி பின்னப்பட்ட தூய வெண்சட்டையை மும்முறைதிருக்குமாரனைவணங்கி யவற்கிட்டுப் பெரிதருட்கதிர்வீசி மூவுலகாண்டதற்கு மும்முடி சூடினதேவகுழந்தை யதனையணியாநின்று தோன்றினுனென்க. (௪)

கானுலகவொரடு கதிர்விளக்கிய
வானுலகுடுவொடு வனைந்தநாயகன்
மீனுலகிரங்கவோர் மிடிகொள்காஞ்சுகந்
தானுலகளித்துறித் தரித்துத்தோன்றினன்.

உரை. — அங்ஙனஞ் சோலைகள்பொருந்தியபூவுலகினைப் பலமலர்களானும் விளங்கியவானுலகினைப்பலமீன்களானு மலங்கரித்தநாயக னன்று தேவுலகத்தோர் ஆ! தகாதென்றிரங் காநிற்கத் தான் பூவுலகினையிரட்சிக்கும்படி யவதரித்துவந்த வளவிற் றரித்திரர்க்குரிய சட்டையைத்தரித்துத் தோன்றினுனென்க. (௫)

உருவளர்மதியொடு மொளிவளர்ந்தென
மருவளர்முளரிமெய் வளர்ந்துமெய்ப்பையுந்
தருவளர்வொடுபுதி தன்மைதோன்றின
வெருவளர்முறையிருன் விளிந்தவேலையே.

உரை.—அங்ஙன மணிந்தசட்டையோவெனில், இளம்பி றைவளருந்தன்மைத் ததிஞெளியுங்கூடவளர்வதுபோல வா சகமலமொத்த தேவகுழந்தையின் றிருமேனி நாடோறும்வ ளர்ந்தவளவி லச்சட்டையும்வளரும், அதுவுமன்றியுலகெலா மீவெருவும்படி தானிறந்தபொழுதே யச்சட்டைதானே பு திதாய்த்தோன்றிற்றென்க. (௬)

குழனிகர்தேமொழிக் குழவிகண்டனர்
நிழனிகர் நீங்கிலா நிமிர்ந்தகாதலாற்
கழனிகரடிமலர் புல்லிக்காயுள
மழனிகரடுந்துயர் குளிர்ப்பவாற்றுவார்.

உரை.—வீணைவாய்ந்நரலொத்த வினியமழலைச்சொற் கு ழந்தையைக்கண்டயாவருந் தன்னிழல் தன்னை நீங்காதது போல வவனைப்பிரியமாட்டாமல் மிக்கவாசையான் மிதிய டிதன்மையா லவன்றிருப்பாதமலரைச்சேர்ந்துதிரிய வவன் வன்கொண்டதுன்பத்தாற் காய்ந்தமனமே குளிரும்படி நெ ருப்போடொத்ததுயர்களை யாற்றுவரென்க. (௭)

போதுவாய்மலர்ந்துரை முதற்புகன்றபோ
தேதுவாய்மடங்கவு மினிதுளத்தொடு
காதுவாய்குளிரவுங் கனியகுசைபார்த்
தோதுவாயிளவலன் றுணர்த்தினனரோ.

உரை.—அங்ஙனந் திருக்குமாரன் றன்றிருவாய்மலர் மல ர்ந்து முதற்சொல்லுச்சரித்தவன்றுதானே தீவினைக்கெல்லா ம் வாயையடைக்கவுங் கேட்டவருளமுங் காதுங் குளிரவு மி னிதாய்ச் குசையைப்பார்த்துத் தன்றிருவாயாற் பலவற்றையு ணர்த்தினனென்க. (௮)

வேறு.

கள்ளுண்டவெசித்துநாட்டிற் கடவுளராகநின்று
தள்ளுண்டபழியிற்பொங்குஞ் சடத்துமுன்பொருதபோரி
லெள்ளுண்டபேய்களந்நா டிழிவுறக்குணித்தயாவுந் [டே.
தெள்ளுண்டவுணர்விற்காட்டித் திருமகன்சொன்னான்மீண்

உரை.—மதுவைப்பொழிந்த வெசித்துநாட்டிற் றேவரா கவணங்கப்பட்ட பசாசுகளங்கேநின்று தள்ளுண்டமையாற் கொண்டபழியோடு பொங்கியவஞ்சனைபொருந்தி முன்னர் த்தம்மேலெடுத்தபோர்முகத்து நிந்தைப்பட்டோடினபின் ன ரந்நாட்டைக்கெடுக்கும்படி யப்பேய்கள் நினைத்ததெல் லாவற்றையுந் திருக்குமாரன் சூசைமாமுனிக்குத் தெளிவாக க்காட்டி மீளவுஞ் சொன்னானென்க. (கூ)

புண்டகவெறிகளோட்டிப் புரைபொதிர்நாட்டின்
கண்டகங்கொய்தேனனே கசடறுமுணர்வினீயு [மொய்த்த
மண்டகவுழுதசீல மலியறம்வித்தியாரும்
விண்டகவீட்டிணுக்கம் விளைவதுபேணனன்றே.

உரை. — திருக்குமாரன் சூசையைநோக்கி யெங்ஙனஞ் சொன்னானென்னில், புண்பட்டமனதிற் பசாசுகள்வருந்து ம்படி நானவற்றை நரகிலோட்டினதனாற் பாவநிறைந்தவி ந்நாட்டின்மொய்த்த முள்ளுக்களைப்பிடுங்கினேனானே, நீயு ங்குறையொன்றில்லா வுணர்வினைக்கொண்டு நன்றாயுழுது ந ல்லொழுக்கம்பொருந்தியவறங்களைவிரையாகவித்தி யாவரு ம்வானுலகடைந்து வான்வீட்டுப்பேரின்ப மவர்க்குவிளையு ம்படி பிரயாசப்படுவதுவேண்டு மென்றானென்க. (௰)

மும்மழைமதியிற்பொய்யா முகிலெனவருளின்வாய்
கம்மழைபொழியநானே களிப்புறவிளைவுகாண்பாய் [ந்த
மைம்மழையாகப்பேய்கள் வளர்த்ததீமருளுநீக்க
வம்மழைகுளிர்ப்பதன்றி யகத்தொளிவிளக்கதாமே.

உரை. — அங்ஙன நீ செய்துவருகையின் மாதந்தோறு மும்மழை தப்பாதுபெய்தாற்போல நிறைந்தமழையாய்

நானுந்தப்பாதருளைப்பொழியுந்தன்மையான் மகிழ்வோடு நன்றாய்விளைவதுகாண்பாய். மீளவு மிருண்டமேகத்தொப்ப மனிதர்மனதிற் பேய்கள்விளைவிக்கு மயக்கத்தைத்தீர்க்கும்படி நான்பொழிந்தவருளின்மழையே மனத்தைக்குளிர்ப்பதல்லாதே யதனைத்தெளிவிக்கும் பெரும்விளக்கா மென்றானென்க. (௰௧)

ஆசையேராகப்பூட்டி யறிவழித்துளஞ்சேருக்கி
யோசையேகலங்கவீக்கி யுழுதுபடற்புரையேவித்தி [க்
மாசையேமுதற்பல்வாழ்வின் வளர்பயிர்முகத்தைக்காட்டி
காசையேயுதவாப்பூதிக் கனல்விளைவியற்றும்பேயே.

உரை.— நீயிங்ஙன நல்லறத்தின்பயிரையிட்டுவருகையிற் பசாசுகளுந் தம்பயிரிடும்படி பலவாசைகளையேராகப்பூட்டி யறிவினையழித்து மயங்கினமனத்தைச்சேருக்கித் தம்மைவணங்காதாரைக்கொல்வேன் கெடுப்பேனென்று மனங்கலங்க வீண்ணசைகளைவளர்த்துக்கூப்பிட்டுழுது பாவங்களை விரையாகவித்தி யோரோரிடத்துத் தம்மைச்சேர்ந்தன ரடைந்ததிரவியமுதற் பலவாழ்வுகளை வளரும்பைம்பயிர்முகத்தைப்போல மற்றவர்க்குக்காட்டிப் பின்பதி லொருபிடிபசும்புல்லுதவாததுபோல விறக்குங்காலத் தச்செல்வங்கள் பின்றுடராமல் விரைத்தபாவத்தா னரகத்தூழித்தீயே விளையுமென்றானென்க. (௰௨)

தெள்ளியவரத்தின்மாரி திளைத்தவண்டவத்தின்குன்ற
துள்ளியவோதிநீத்த மொழுகிவந்தலகைவஞ்சத் [த்
தெள்ளியபுரையின்பைங்கூ ழிற்றறச்சிவையிற்கொய்து
விள்ளியகொடியோய்சில விளைவுணர்ந்தொழுகவென்றான்.

உரை.—உலகங்கெட வங்ஙனம் பசாசுபயிரிட்டுக்கொண்டுவருகையிற் றேவவரங்களாகியமழையினுனிறைந்த தவமாகியமலையினின்று நினைத்தவுபதேசமாகிய வெள்ளமோடிவந்து பேய்கள்வஞ்சகத்தால் நிந்தையைவிளைவிக்கும்பாவத்தின்பயிரை வேரோடு பிடுங்கினபின்பு மலர்ந்தபூங்கொடி

யுடையோய் நீ யெங்கு நல்லறவொழுக்கமே விளையும்படி செய்வாயாகவென்று னென்க. (மரு)

சூடகையேயொளியையெஃகக் கொடும்புலியிரங்கச் செந்தீ
வாடகையேகுளிர்ப்ப நச்சு மரமுயிர்காக்கமற்றை
யோரகையேயுணர்ந்தகாலை யுனக்கரிதென்கொல்வேத
மூகையேநானுங்கூற முயல்வியேயெனத்தாளனேர்ந்தான்.

உரை.— அதற்குச்சூசை சுவாமீ கூடகையொளியைவிரும்பவுங் கொடியவேங்கை மனிதர்க்கிரங்கவுந் திரண்டசெந்தீக்குளிர்ப்பவு நச்சுமரக்கனி யுயிரைக்கொல்லாதுகாக்கவு மித்தொகைப்பட்ட மற்றயாவையு முனக்குப் பொருந்தியகாலத்துச்செய்வதரிதோ? அத்தன்மைத்தே யூமைநானும்வேத நூலைச்சொல்லும்படிசெய்வாயேயென்று தானுடன்பட்டானென்க. (மச)

அணித்தகுவுருவிலெங்கு மனவியேவிளக்குமாறும்
மணித்தகுமலர்பூவாச மதுநலம்பொழியுமாறும்
பணித்தகுபயிற்றல்வேண்டாப் படர்ந்தவன்புணர்வினோர்க்கே
பிணித்தகுவுயிரோம்பாறும் பேசவோவென்றுரைத்தான்.

உரை. — சூசையதற்குடன்பட்டபின்பு திருக்குமாரன் சொல்வான்: அழகியதன்வடிவினு லெங்குஞ்சூரியன் விளக்கும்படியையு நவமணிவடிவான் மலர்ந்தபூ வாசனையோடுமதுவைப்பொழியும்படியையு மாராகிலுஞ்சொல்லி யவற்றிற்குப்படிப்பித்தல்வேண்டுமோ வில்லையே, அத்தன்மைத்தகன்றவன்பினோடுபொருந்தி யுயர்ந்தவுணர்வினையுடைய வுனக்கே வருந்தினவுயிர்களைக் காத்திரட்சிக்கும்படியை நான்படிப்பிக்கவோ வென்றுனென்க. (மரு)

நான்முகத்தருளினுக்க நாட்டிமேற்கதியி லுய்ப்ப
வான்முகத்துமிநானேடு முயிரொனவுணர்ந்தநட்பி
னூன்முகத்துணர்த்தியென்ன நுவன்றிறையாசிதந்தான்
றேன்முகத்தலர்தாட்சூசை சென்னிபூண்டிறைஞ்சினனே.

உரை.—நாலுதிக்கெங்கு மிக்கவென்றலைய நாட்டி வான் வீட்டுக்கதியி லுயிர்களைச்சேர்த்திப் பேரின்பத்தையருளும்படி யுடலையெடுத்து மனிதனாய்வந்தநா ளாசையோடுதேடினவுயிர்களென்று நினைத்ததனா லவற்றின்மேலன்பினைவைத்து வேதநூலையுணர்த்துவாயாக வென்றுசொல்லி யவதரித்த நாதன்தற்காசீர்வாதமுந்தந்தான்; சூசையு மதுவைப்பொழிந்த வவன்றிருமலர்ப்பாதத்தைத் தன்றலைமேலணிந்து வணங்கினானென்க. (௰௬)

நாடகவரசனொவ்வா நவிக்கனிமுட்டியொவ்வா
மாடகவாணியொவ்வா மடக்கிளியுணர்த்துந்தீஞ்சொற்
சூடகமகளீரொப்பச் சொன்னவைபொய்யாச்சீலத்
தீடகமரபோன்வான்வீட் டின்புகுமோதியோர்ந்தான்.

உரை.— ஆண்டவனேவினபடியே சூசையெங்ஙன முபதேசஞ்சொன்னானென்னில், புறத்துக்காட்டினவேடத் தொவ்வாதுளத்தியல்புடையநாடகசாலையரசனும் விரும்பும்படி கண்ணுக்கழகினைக்காட்டிக் கொல்லும்படியுண்ணஞ்சினைப்பொழியுமெட்டிக்கனியும் வீணையினரம்புகளினியவோசைபெறுதற்குக்காரணமாகித் தாமோசைபெறுத முறுக்காணியுமென் றிவைமூன்றினையுமொவ்வாமற் றிருந்தியவினிய சொல்லைமொழிந்து மடக்கிளியைச்சவியாதுணர்த்து மாதரையொப்பத் தான்சொல்லிக்காட்டிய நன்னெறியேபொய்யாமலொத்தநடையுளவொழுக்கமாட்சியிற் பொலிந்தகுணத்தோன்சூசை வான்வீட்டின்பத்தைப்பயக்கு முணர்ச்சிகளைச்சொல்ல நினைத்தானென்க. (௰௭)

வாய்ந்தனமணியிற்பூவின் மலர்ந்தனவிளைசெய்தீந்தே
றேய்ந்தனவமுதில்யாருந் துய்ப்பனவழுவாச்சீல [ன்
மீய்ந்தனவரும்வீட்டின்ப மிவனகருணைநெஞ்சத்
தாய்ந்தனவெவர்க்குஞ்சூசை யறைகுபவலித்தானன்றே.

உரை.—சூசைசொல்லநினைத்த வுணர்ச்சிகளெத்தன்மைத்தோவெனில், திருமணியொப்பமாட்சியிற்பொலிந்தனவாய் மதுமலரொப்ப வினிமையின்மலர்ந்தனவாய் வாசனை

பொழிந்த வினியதேனினுட் டோய்ந்தனவாய் நல்லமுதொப்ப வெவருமுண்ணத்தகுவனவாய் நெறிவழுவாதவொழுக்கத்தைத் தந்தனவா யினிவான்வீட்டுப்பேரின்பத்தைத் தருவனவாய்க் கருணையானிறைந்த நெஞ்சிலுணர்ந்தனவா யுயர்ந்தவுணர்ச்சிகளை யெவர்க்குஞ்சொல்லத் துணிந்தானென்க. (௰அ)

வேறு.

ஈரமொன்றில விறைத்தனபயனிலவிளையாம்
வாரமொன்றில மனத்தவர்க்கோதியமறையென்
றூரமொன்றிய வருளணிமார்பனேயுடற்கு
மோரமொன்றிய வுதவியோடன்புறலுணர்ந்தான்.

உரை.— மீளவு மன்பில்லாதவர்க்குச் சொன்னவேதமே யீரமில்லாதநிலத்துப் பயனொன்றின்றியிறைத்தவிளையாமென்று முத்தணியாகமிக்கதயை யணிந்தமார்பனாகியகூசை யுடல்களைமுதலாய்ப்பேணி யெவர்க்குஞ்செய்த சகாயவுதவிகளா லவர்களன்பினைத் தானடையும்படி நினைத்தானென்க. (௰௯)

அன்புவித்தின ராங்கதின்விளைவெனவன்பைப்
பின்புகொள்பவ ரெனப்பிறருயிரெனப்பேணி
யென்புவேண்டினு மிடுந்தயைமலர்முகத்தெவர்க்கும்
முன்புகாண்டில முகைமதுமொழிநலமுரைப்பான்.

உரை.—பிறர்க்கன்பினைக்காட்டி யதனைவிளைத்தவரங்கே தானே யதின்விளைவாகப் பிறரன்பினைத்தமக்குக் கொள்வாரென் றுநினைத்தமையாற் றனக்குயிராகப்பிறரைப்பேணித் தன்னுறுப்பி லொன்றினைவேண்டுங்காலத்துக் கொடுக்கத்தகுவதோர்மிகுந்ததயையான் மலர்ந்தமுகத்தோடு கூசைமுன்னந்நாட்டிற்காணாதமுறையோடு மலர்மதுவொத்தவினியமொழிகளை யெவர்க்குஞ்சொல்வானென்க. (௨௰)

கைதளர்ந்தனர்க் கிரந்துதானளித்துநோய்கடுத்த
மெய்தளர்ந்தனர் மெலிவறுமருந்தெனப்பொறிசெய்

பொய்தளர்ந்தனர் புலனுறவிளக்கெனவெவர்க்கு
மைதளர்ந்தன மனத்துரித்துணையெனவாறுன்.

உரை. — அங்ஙனங் கைதளர்ந்த தரித்திரர்க்கெல்லாந் தானேயிரந்து கொடுப்பனுமவும் பிணியால்வருந்தினவுடலிற்றளர்ந்தவர்க்கெல்லா மெலிவினைத்தீர்ப்பத் தான்மருந்தாகவுமைம்பொறிகளால்வரும் பொய்யிற்றளர்ந்தவுணர்விஞர்க்கெல்லா நல்லறிவுறும்படி தான்விளக்காகவு மபங்கித்தளர்ந்த மனத்தவர்க்கெல்லா முதுதியாம்படி தான்றுணையாகவுநின்றுனென்க. (௨௧)

கொடுந்தொற்புண்ணினைக் கொந்தழலாற்றினைய
சுடுஞ்சொற்கொண்டருந் துகள்வடுவாற்றுதல்வேண்டின்
விடுஞ்சொற்பூவென விள்ளியநயமுகத்தருளே [ன்.
படுஞ்சொற்கொண்டுளம் பனிப்படக்குளிர்த்தினிதுரைப்பா

உரை. — ஓரோரிடத்துப் பழையதோர்கொடும்புண்ணினைத்தீபாற்சுட்டாற்றுவாரைப்போலத்தானுங்கொடியதோர் பழம்பாவத்தின்வடுவினைச் சுடுஞ்சொல்லா லாற்றவேண்டியவன்னிலப்பொழுதே மதுவிடுபூவின்றன்மையான் மலர்ந்தவின்பமுகத்தோடு தயைநிறைந்தசொல்லா லவர்மனங்குளிரும்படி கூடவேயினிதாய்ப்பேசுவானென்க. (௨௨)

தீயொக்குந்துயர் தீக்குளத்திழிமழையொக்கு
நோயொக்குங்கடை நுவித்தநன்மருந்தொக்குநிநுளைப்
பேயொக்குங்கடைப் பெயர்த்துளத்தொளிவிளக்கொக்குந்
தாயொக்கும்பயன் றருமறையொக்குந்தன்றயவே.

உரை.—அங்ஙனஞ் சூசையின்றய வெத்தன்மைத்தோவெனில், தீயோடொத்ததுயராற் சுட்டமனதிற்குப்பொழிந்தமழையொப்பாகவு நோய்வந்தவிடத்து நன்மருந்தொப்பாகவும் பசாசுகள்மயக்குவித்தகாலத் தவ்விருளையகற்றி மனத்தைவிளக்குஞ்சுடரொப்பாகவு மொரு நற்றுயொப்பாகவு மெவர்க்கும்பயன்றரும் வேதமேயொப்பாகவு நின்றதவன்றயவென்க. (௨௩)

பாசமாமரும் பரிவுளமின்னணம்பிணித்தே
வாசமாமையின் மதுமலர்மொய்த்தவண்டனைய
காசமாமையிற் காமருமலர்க்கொடிதயைத்தேன்
வீசமாதவன் விளம்பியதுளத்துணமொய்ப்பார்.

உரை.—அங்ஙன மெல்லாமனங்களையுந் தன்னோடொருப்படப்பாசமாகியவன்புகட்டினபின்பு வாசமதுமலர்சூழ வண்டுகள்மொய்த்தாற்போலப் பொன்வடிவோடுமலர்ந்த வழகியதன்பூங்கொடி தயையாகியமதுவைப் பொழியாநிற்க மாதவனாகியகுசைசொல்லுமுணர்ச்சிகளை யெவருமுட்கொண்டுநுகர்வதற் காசையோ டவனைச்சூழ்ந்துமொய்ப்பாரென்க. (உ௪)

அருடிறந்தவா யறைந்தவையொத்ததோரன்பின்
றெருடிறந்தகா தருந்தவிற்றெளிவுகுஞ்சீலப்
பொருடிறந்தகாப் பொறிநெறிவிலகிமெய்யுணர்வின்
மருடிறந்தகா வரும்பலர்காட்சியிற்பொலிந்தார்.

உரை.— அங்ஙனந் தயையாற்றிறந்தவாயே சொன்னவுணர்ச்சியையொத்த வன்பினாற்றிறந்தகாதுகளேயுட்கொண்டுநுகர்ந்தமையாற் றெளிந்தவொழுக்கத்தின் முறையறியாதவைம்பொறிகள்காட்டினவழியைவிட் டுட்கொண்டமெய்யுணர்வினு ளமயங்காதபலரே காட்சியினுயர்ந்தா ரென்க. (உரு)

ஓரொன்பானுல கொருங்குடன்படைத்தபின்னீதிச்
சீரின்பானெறி சிதைவிலாநடவியநிலையைப்
பாரின்பானலம் படுவகண்டிறைஞ்சலேகல்விப்
பேரின்பானுறும் பெரும்பயனிதுவெனவுரைப்பான்.

உரை.— ஒன்றாய்நிற்குமெய்க்கடவு ளுலகங்கள்யாவையுமொருங்குடன்படைத்தபின்பு நீதிநன்முறைகள் பிறழாமலவற்றை நடத்தாநிற்குந்தன்மையைப் பூவுலகிடத்துநன்றாயாராய்ந்து கண்டுகொண்டதன்மையா லவ்வொருமெய்க்கடவுளைவணங்குவதே கற்றகல்விபா லினிதாய்வரும்பயனதுவேயென்பான் குசையென்க. (உசு)

நீனியவரவிரு ளுளம்புகாத்தெளிதலுநயப்ப
வினியகூறலு மெமர்பிறரின் றியோம்பலுமுன்
முனியமாறலு முரிந்தனர்நிறுத்தலுமற்றக்
கனியசீலமுங் காட்டியோர்பெரும்விளக்கானான்.

உரை.—மீளவுமாசையால் வருமிருள்மனதிற்புகாமல் மி கவுமனத்தைக்காத்துத்தெளிதலு மெவருமகிழ்தற்குக்காரண மாக வினியசொல்லையுரைத்தலு மிவர்நமரென்று மவர்பிற ரென்றுமெண்ணாம லெல்லாரையு மொத்தவன்போடுபேண லுந் தன்கீழடங்கினவரைக்கோபித்தல் வேண்டுங்காலத்து ம க்கோப மனதிற்புகாமற்காத்தலுந் தந்நிலைவிட்டழிந்தோ ரைப் பழையநிலையினிறுத்தலு மற்றநல்லொழுக்கமுறைக ளைக்காட்டி யந்நகரிற் குசையொருபெரும்விளக்காகநின்றா னென்க. (௨௭)

சாற்றிக்காட்டிய தகைநெறிவிரும்பிவந்தொருநா ளேற்றிக்காதலோ டிருந்திருச்செல்வரோவினவப்
போற்றிக்கேண்மினீர் புகையெனவொழிபொருளீகை
யாற்றிக்கேடில வமர்பயன்கூறுதுமென்றான்.

உரை.—அங்ஙனஞ் குசையறுதினஞ்சொல்லிக்காட்டின நன்னெறியறியும்படி யொருநாள்பெருஞ்செல்வமுடையப ல ராசையோடுவந்து தானத்தால்வரும்பயனைச் சொல்லச் சொல்லி யவனைவணங்கியிருப்பப் புகையின்றன்மைதானே ய ழியும்பொருள்கள் செய்தகொடையினானிலைபெற்றுத்தரு ம ழியாதபயனை நான்சொல்லக் கருத்துடன்கேட்பீராகவென் றான் குசையென்க. (௨௮)

வேறு.

பொய்த்தபல்வழிக்கானிடைப்போதல்போன்
மொய்த்தநீருலகின்முரியாதறம்
வைத்தநல்வழிவாய்ப்பரிதாய்க்கொடை
யுய்த்தநன்முறைமுற்படவோதுவாம்.

உரை.—பலபொய்வழியுளகாட்டில் வழிதப்பாமற்போ வ தரிதென்றதுபோலக் கடல்சூழ்ந்தபூவுலகிற் றப்பாதவறத்

தின்வழிவாய்ப்பதரிதே, ஆகையாற் கொடையால்வரும்பய னைச்சொல்லுமுன்னே தவறாதபடி கொடைதானஞ்செய்வத ற் குரியமுறைகளைச்சொல்லிக்காட்டுவோமென்று ஆசை மீ ளவுமுரைத்தானென்க. (உகூ)

வெருடருங்குரல்வெஞ்சினவேறுமிழ்
திருடரும்புயல்பெய்தலிலேத்துவார்
மருடரும்புகர்மல்கினுமாதிலாப்
பொருடருங்கையைப்போற்றுவர்யாருமே.

உரை.—எவருமஞ்சும்படி மேகங்கள்கொடிதாய்முழங் கியுயிராச்சொல்லுங் கொடியவிடிகளைக்கொப்புளித் திரு ளைக்கொண்டதாயினும் பெய்தினு லவற்றை யெவருந்துதி ப்பார், அத்தன்மைத்தொருவன் பயங்கியமனதிறடாங்களை க்கொண்டானாயினு மவர்க்கு மாறுமறக்கொடுப்போனாகி லவனை யெல்லாரும் புகழ்வாரென்க. (௩௰)

நஞ்சுநல்லமுதென்றதைநக்கினு
மெஞ்சுநஞ்சமுதாங்கொலியாவரு
மஞ்சுநர்கொடைவாழ்த்தலிற்றன்புனா
விஞ்சுவெவ்வினையிற்றறவீயுமோ.

உரை.— பாவிகள்நிறையக்கொடுத்ததினு லங்ஙன மெவ ரும்புகழ்ந்தாலு மாவதுண்டோ? நஞ்சினையமிர்தமென்று நக்கினுலுந் தன்குணம்போ யந்நஞ்சுநல்லமுதாமோ வில் லையே, அத்தன்மைத்துப்பொழியுமகத்தொத்தகொடையி னு லெல்லாரானும்புகழப்பட்டபாவி யநுதினமிக்க தன்றீ வினையொழித்து நல்லனாவானே வில்லையென்க. (ஆகையா லப்புகழ் பயனிலதென்பதாயிற்றென்க.) (௩௧)

விஞ்சுமீகையில்வீண்புகழ்கோடலே
யெஞ்சுவாணிகர்புற்பெறுதியென்றலா
னெஞ்சமாசுறமற்புகழ்நீவுகற்
கஞ்சுவார்கொடையாற்பயனவேண்டுவார்.

உரை.—மீளவுந் தன்கைப்பொருளைத் திரளாய்க்கொடுத் துப்பயனி லப்புகழைக்கொள்வதே யறிவில்லாதசெட்டிக

ன்செய்யும் புற்றொழிலாமே. அதுவுமன்றி மேற்பூசினவப்புகழினாற் றன்னெஞ்சினுள்ளமாசுகள் தனக்குத்தோன்றாதுமிரும்படிக் கப்புகழுதவுமென்றதனாற் கொடையினாற்பயனையடையவாசையுள்ளோர் பிறர்புகழ்ச்சிக்கஞ்சுவாரென்க. (ஆசையாலப்புகழ் கேடுளதென்றாயிற்றென்க.) (௩௨)

கொடைவரும்பயன்கொண்டுகவர்ந்திடு
மிடைவரும்புகழென்றுயர்நீர்மையா
ருடைவரும்பொருள்களவர்க்கொளித்தென
மிடைவருங்கொடைவேய்ந்திலவீவரோ.

உரை.—அங்ஙனங் கொடையினால்வரு மெய்யானபயனைத்தான்கைக்கொண்டு திருடுங்கள்ளனுஞ் சூழ்ந்து நின்றவர்சொல்லும்புகழென்றுணர்ந்து மேன்மையிற்பொலிந்தோருடையதிரவியங்களைக் கள்ளர்க்கொளித்தாற்போலச் செய்பு மிக்ககொடைபுறத்துத்தோன்றாதொளித்தே யீவாரென்க. (௩௩)

வீழ்ந்தவர்க்குதவியிலமேன்மையில்
வாழ்ந்தவர்க்கிடுவார்வயல்பாய்கிலா
வாழ்ந்தநீர்க்கடலண்டிநலங்கெடத்
தாழ்ந்தநீர்ப்புனற்றன்மையினாயினார்.

உரை.—மீளவுந் தன்னிலையினின்றழிந்துவிழுந்த வறியோர்க் குதவியொன்றினையுஞ்செய்யாமல் மேன்மையிற்பொலிந்தவர்க்குமாத்திர மிடுபவராயினில், தாழ்ந்தநிலையிலோடியதனால் வயலிற்பாயாமற் றன்னீர்நலமேகெடும்படி முழுவதுங்கடலிற்பாயு நதியைப்போலத் தாழ்ந்தவுணர்வினரவரோவென்க. (இங்ஙனே, வறியார்க்கொன் றீவதேயீகைமற்றெல்லாங் குறியெதிர்ப்பைநீரதுடைத்து, திருப்பயனுரைத் சொன்னாரென்க.) (௩௪)

வளர்ந்தபூங்கதிர்மாழ்கியநெற்றுயி
ருளர்ந்தவான்புயலூட்டியநீரெனத்
தளர்ந்தவாழ்க்கையைத்தாங்கியிலோர்க்கிடுங்
கிளர்ந்தவான்கொடைசெழ்த்தெழுமீகையே.

உரை.—நற்கொடையாதோவென்னில்,வளர்ந்து கதிரையி ட்டுப்பூத்து நீரின்றிவாடாநிற்குஞ் செந்நெற்குயிராக வான் மேகம்பெய்தூட்டிய மழைநீர்போலத் தளர்ந்த வறியருயிர் வாழும்படி யவரைத்தாங்கி யவர்க்கிடுநிறைந்தகொடையே மாட்சியிற்சிறந்த கொடையாமென்க. (௬௫)

ஒருகைம்மாறுணராக்கொடைவான்மிசை
வருகைம்மாறுமுன்வையகத்தாண்டகை
தருகைம்மாறியல்சாற்றிடக்கேண்மினீ
ரிருகைம்மாறிலவேழ்கொடையோற்றியே.

உரை.— அங்ஙன நற்கொடைக்குரியமுறைகளைச் சொன் னபின்பு மனிதராற் கைம்மாறுவருமென்றெருகுறிப்பின்றி ச்செய்ததானம் வான்வீட்டிற் பெரும்பயனடையுமுன் னி ப்பூவுலகிலு மாண்டவனதற்குத்தந்தபயனை நாஞ்சொல்ல நீ ங்களிருகைம்மாறுக்கொடையைச்செய்ப மனதிற்பேணிக்கே ட்பீராகவென்று மீளவுஞ் சொன்னன்குரவையென்க. (௬௬)

வேறு.

மூரல்வாய்ச்சங்குளீந்தீன்றமுத்துஞ்செந்நெல் முத் துமுறழ்
நிரல்வாய்ப்பூங்கமழ்கழனிபணிந்ததேன்பூ நிழற்குளிர்ந்த
குரல்வாய்ப்புட்சோலைநலத்தறமுஞ்சீருங் குடிகொஞ்ச
நரல்வாய்ப்பண்கீதமெழுங்காவிலேய நாடுளதே.

உரை. — சங்குகள்முழங்கி யீன்றமுத்துத்திரளுஞ் செந் நெல்வெடித்தமுத்துத்திரளுங்கலந்து நிரையோடுகிடக்கு ம் பூம்வயல்களைச்சூழ்ந்து மதுமலர்க்குளிர்ச்சியா னிழலைச் செய்து திரண்டபறவைமுழங்காநிற்குஞ்சோலைகளழகுசெ ய்ய வறமுஞ் செல்வமுமங்கேகுடியாயிருந்து சுகமேதுயிலா நிற்க வீணைவாய்க்குரலோடு மாறுதசங்கீதங்க ளினிதெழுந் தொலிக்குங்காவிலேய நாடென்றொருநாடுளதென்க. (௬௭)

படம்புனைந்தபூஞ்சுனைநன்னாட்டின்மூதூர்ப் பார்முக மோ

வடம்புனைந்தமார்பணியோமணியோவவய வனப்பவிக்குந்
தடம்புனைந்தமணிப்புரிசைதழுவுமாடந் தவழ்கொடிசெய்
நடம்புனைந்தநெற்றவிமாநகரமாமந் நாட்டணியே.

உரை.— எழுதியபடத்தின்றன்மையான் மலர்ந்ததடாகங்களாலழகுபெற்றவந்நாட்டின் மூதூரோவெனின் விப்பூவுலகிற்கொருமுகம்போலவோ, இப்பூவுலகமார்பிலணிந்த பதக்கம்போலவோ, அப்பதக்கத்தி னடுவேபதித்த பெருமணிபோலவோதோன்றிப் பூமியிற்படர்ந்தமற்றவழகெலாமொளிக்குந்தன்மைத்துளதாய்ப் பெருமணிமதில்கள் தழுவாநின்றுள்ளேயுயர்ந்துதோன்றிய மாளிகைதோறுமுச்சிமேற்றவழுங்கொடிகளோயாமத்கூத்தாடாநிற்கு நெற்றவிமாபுரமென் றந்நாட்டணியாக நின்றதென்க. (௩அ)

சீர்ச்செல்வத்தருட்செல்வஞ்சேர்த்தியொவ்வாத் திருமிக்கோன் [பிறழாக்கற்
பேர்ச்செல்வத்தொளிக்கொடைக்கைத் தொபீயனென்பான்
பேர்ச்செல்வத்தன்னமென்பாளீன்றநம்பி தயோதரனே
நீர்ச்செல்வத்தலரன்ஞன்வளர்ந்தேவாழ்ந்தார் நிகரில்லார்.

உரை. — அந்நகரிடத்தேயடைந்த பொருட்செல்வத்தளவாக வருட்செல்வத்தைச்சேர்த்தி நிகராததிருவின்மிக்கவனுயிப் பெரும்புகழ்பெற்ற கொடையின்கையனுய்த் தொபீயனென்பான்கொண்ட பிறழாதகற்புத்தருமழகுச்செல்வியாயன்னமென்பவ ளவற்கீன்றநம்பியாகிய தயோதரனென்பவன் றண்ணீரருகே செல்வமாய்வளர்ந்த மதுமலர்போலவளர்ந் தொப்பின்றி மூவரும்வாழாநின்றுரென்க. (௩௯)

பண்ணழகாமின்குரல்போலழகாநாவிற் பனிச்சொல்லே [யே
விண்ணழகாம்பெய்துளிபோலழகாஞ்சீர்க்கு விளைகொடை
கண்ணழகாங்கண்ஞேட்டமென்னவீயாக் காட்சியொளி
நண்ணழகாந்தவவிளக்குள்ளெறிப்பக்கண்டா னடந்தொந்
தான்.

உரை.—சொன்னதொபீயனுவெனில், வீணைக்கிட்டமாலையு மணியுமழகல்ல வினியவோசையேயதற்கழகாவதுபோ

ல நாவிற்கழகா மெவருமுட்குளிரச்சொன்ன வினியசொல்லென்று மேகத்திற்கழகாம் பொழிந்தமழைத்துளிபோலச் செல்வத்திற்கழகா மிரப்போர்க்கிட்ட வீகையென்றுங் கண்ணுக்கழகாங் கண்டபிறர் துன்பத்திரங்குதலென்று மவியாதகாட்சியினொளிகொண் டழியாதவமே விளக்காகக்கொண்டுகண்டான் கண்டதற்கொப்பநடந்தானென்க. (௪௰)

வீயிவரம்பாங்கோதையிறுணர்விலொப்ப விழைந்தி
ருவர்
தீயிவரம்பாம்வினைசெகுக்குமறையினீழற் செய்தங்க
ணேயிவரம்பாயிடியெவர்க்குஞ்செகுத்தபின்னர் றனித்தக
ன்று [தார்.
போயிவரம்பாய்நீனிவைமாநகரிற்கைகார் பொழிந்திருந்

உரை.— எல்லாமலரு மொருப்படச்சேர்த்திய மாலையின்றன்மைத்தா ளவன்றுணையு மவனொடொத்தவுணர்வினளாகி யிருவருங்கூடித் தீயனையழிக்கும்வேதம்போலத் தாமுங்குளிர்ந்தநிழல்செய் தங்கேவருத்துந் தாரித்திரத்தையெவர்க்குமீந்து போக்கினபின்ன ரவ்விடம்விட்டுப்போயெல்லையாக வகன்றவேருருநாட்டிலுள்ள நீனிலவையென்னு நகரிலிருந்து தம்மிருகையாகியமேகங் கொடையாகியவிடாதமாரியை யங்கையும்பொழியாநின்றாரென்க. (௪௧)

மின்சுடரப்பொழிமுகில்போற்புறநாட்டன்றோர் விளக்
காகிக் [ர்
கொன்சுடரப்பொன்புதையாவிளங்கவீந்த கொடைமிக்கோ
பொன்சுடரச்சுடுந்தீப்போற்பொன்றுந்தேவ பொலிவரு
பின்சுடரப்பலவினையெபெற்றூர்மாட்சி பிரியாதார். [ளிற்

உரை. — விளங்க மின்னிப் பெய்யுமேகத்தைப்போலவு வருஞ்சுபுறநாட்டிற் றெத்தெருள்விளக்காகிப் புதைத்தால் வீணாய்ச்சுடரும்பொன்னை நல்குயிளக்கும்படி யிரப்போர்க்கீந்த கொடையிற்மிக்கா ரவ்வனம்பலநாளிருந்தபின்பு பொன்மிகச்சுடரும்படி நெருப்பிற்போட்டதுபோலக் குறையாதுயர்ந்த வாண்டவன்றலையின்றன்மையாற் பின்

பவர்சுடரும்படி பலதுன்பங்களையடைந்தார், அடைந்தகால த்தும்-மாட்சியிற்பிரியாதிருந்தாரென்க. (௬௨)

ஏமஞ்சாலீகலிறுமில்லோரானூர் தாதையுநோய்த்
தூமஞ்சால்மூடியகட்குருடனானார் றுகளொன்றே
வீமஞ்சால்குறைபெண்ணிக்கைகண்ணுதவா மெய்யெல்லாங்
காமஞ்சாலருள்வாயாய்க்கனியயார்க்கு முதவுவான்.

உரை. — மிக்கபொருளை யிரப்போர்க்கீந்திந்து தாமும் வறியரானூர், தாதையாகியதொபீயனுங் கொண்டநோய் மிகுதியாற்புகைந்து மூடப்பட்டவிருகண்ணுங்கெட்டுக்குரு டனானார், இவையெலாங் குறையென்றெண்ணற் பாவ மொன்றே யஞ்சத்தகுவதோர்குறையென்றெண்ணிப் பிறர் க்குதவும்படி தனக்குவறுமைபாற் கையில்லாமலுங் குருட் டாற் கண்ணில்லாமலுந் தன்னுடலெல்லா மாசைபுந்தயை யுநிறைந்தவயாவெவர்க்குமெப்பொழுதுங் கனிந்தமொழி களோடாறுதலைச்சொல்லி யுதவுவான்றெபீயனென்க. (௬௩)

கான்முகத்துயிரக்குன்றொப்பநோயிற் கலங்காதான்
வான்முகத்துத்திருவுளமென்றேம்பிப்பொற்சால் வருங்கட [ண்
னைத்
தேன்முகத்துமலர்தன்னூட்டெய்திக்கொள்கச் சேரினத்து
மீன்முகத்துநல்லாளைமகற்குச்சேர்ப்ப விழைவுற்றான்.

உரை. — காற்றின்முகத் தசையாத வயிரமலையைப்போல த் துன்பத்தாற்கலங்காத தெபீய னிவையெலாமாண்டவன் திருவுளமென்றெண்ணித் தாஞ்சாகுமுன்னே மதுமலர்பூத் ததனூட்டிலொருவன்போய்த் தனக்குவரவேண்டிய வி ருகோடி கடனைவாங்கவுந் தன்னினத்தாருக்குள் ளொருபெ ண்ணை மகற்குமணமாய்ச்சேர்ப்பவு மாசைகொண்டிருந்தா னென்க. (௬௪)

பூமற்றமுகத்தார்வம்புனைநெஞ்சானென் றசரீயன்
காமுற்றுவந்தணர்ந்தநதிலயினம்பி கைகூட்டி
னேமுற்றுபணமுற்றுமீள்வாமென்ன விருதாவர் [ன்.
தாமுற்றுகளியில்விடத்தனையன்போற்றித் தடந்கொண்டா

உரை. — அங்ஙனந் தொபீயனாசைகொண்டுவதற்குவகை யுங்காணாமல்வருந்தாநிற்க முழுதுமலர்ந்த பூவோடொத்தமுகத்தோடு நெஞ்சின்மிக்க வன்பினையணிந்தவொருவன் - அசரீயனென்பா னாசையோடுவந்து நீங்கள்நினைத்தபடியும் மகனைக்கூட்டினீராகி நான்கூடப்போய் வரவேண்டியகடனையும்வாங்கி யிவற்குமணத்தையுமுடித்துத் திரும்புவோமென்றான், அதற்குத் தாய்தகப்பன் முழுமகிழ்ச்சியோடுடன்பட்டு மகனிருவர்பாதத்திற் றெண்டனிட்டுப் போனானென்க. (சரு)

வேறு.

நம்பியுந்துணையுமே கையுநாட்டமுங்
கம்பியுங்குரன்மணிக் கலனும்போற்றமுட்
பம்பியும்விளைத்ததீம் பணியினல்லற
மும்பியும்படர்வழி யுவந்துபோயினர்.

உரை.—அங்ஙனந் தயோதரனுமசரீயனுந் தம்முள்ளுறுதியாற் கையுங்கண்ணும்போலவும் பிரியாவன்பினாற் பொற்கம்பியு மதிற்கோத்தமணியும்போலவு மொருப்படச்சேர்ந்து வழியிற்றம்முள்வளர்த்த வினியசொல்லா னல்லறநினைவுவளர்ந்தெழவு மகிழ்வோடு நீண்டவழியேபோனாரென்க. (சசு)

திரைவளர்தீம்புனற் சென்றுதேமலர்க்
கரைவளர்நிழலுறிக் கவின்கொணம்பிமேற்
புரைவளர்வினையெனப் புழுங்கோர்மீன்வர
விரைவளர்தாரினான் வெருவிவிம்மினான்.

உரை.— அங்ஙனம்போய்த் தீம்புனலாற்றிற்சென்று மலர்ந்தவதின்கரைமே னிழலிலிருக்கையிற் பாவத்தால்வரும்வினை யுயிரைமிழுங்கவருவதுபோல வழகியதயோதரன்மேலே மிக்கசினத்தொருபெருமீன் வாய்திறந்துவருகையில்வாசமாலையணிந்ததயோதர னதனைக்கண்டு வெருவிக் கூப்பிட்டானென்க. (சஎ)

மேவியதுணையவன் மீனைக்கொன்றுபின்
னேவியமுறையதின் பித்துமீரலுந்
தீவியமருந்தென வெடுத்துச்செல்வயர்ந்
தாவியநாட்டெழி லணுகியெய்தினர்.

உரை. — துயோதரன்கூப்பிட்டதற் கோடிவந்தவசரீய னம்மீனைப்பிடித்துக்கொன்று பின்பிவனேவலினாலதின்பித் தையுமீரலையுந் தேவமருந்தென்றெடுத்துக்கொண்டு நடந் துபோய் நாடினநாட்டிற்கணுகிச்சென்றானென்க. (சஅ)

வள்ளலின்மகனென மகிழயாவருங்
கொள்ளவினுவர்ப்பில கடன்கைக்கொண்டபின்
னெள்ளலின்மரபினா ளியையுமன்றலை
யுள்ளலின்முகவிமா நகருற்றாரரோ.

உரை. — அங்கேசென்றவுடனே வளாயாதுகொடுப்போ னாகியதொபீயனதுமகன்வந்தானென்றெல்லாரு மகிழாநி ற்பக் கடனைக்கொண்டமுறையினால் வெறுப்புத்தோன்றாத படி யதைக்கைக்கொண்டபின்ன ரிகழ்ச்சிபடாதகுணத்தா ளைக்கொள்ளும்படி மணவினைநினைத்து முகவிமாபுரத்துச் சேர்ந்தானென்க. (சகூ)

மதியகடுரிஞ்சிய கொடியின்மாடநீ
ணிதியகடார்கொடை நிவலனோன்றுதேன்
புதியகடாரணிப் பொற்பிலீன்றவப்
பதியகடிணையிலாச் சாரமிப்பாவையே.

உரை. — சொன்னமுகவிமாபுரத்திற் சந்திரன்வயிற்றி லுரிஞ்சி யாடினகொடியுள மாளிகையிருந்து செல்வமிகுதி யானிறைந்தகொடையைவழங்கிய நிவலனென்பா னெடுநா ட்செய்ததவத்தாற் புதுமதுநிறைந்த மாலையின்சாயலாய்ப் பெற்ற வந்நாட்டொவ்வாதசாரமியென்னு மொருபெண் ணிருந்தாளென்க. (ருய)

காவிநோய்செய்தகண் விழைந்தெழ்காதல
ரோவிநோய்செய்தபே யொருங்குமாய்த்தலா

ஞவிநோய்செய்தபூங் குழலினங்கையுள்
ளாவிநோய்செய்தழ லருந்திவாடினாள்.

உரை.—கருங்குவளையினு மழகதாகியதனா லதற்குநோய் செய்தசாரமியென்பவளுடைய கண்வடிவினைவிரும்பி யே ழுபெயர்வந்தவிடத்தி லொருங்குடனவரைவருத்திப் பசாசு கொன்றதனை லோயாமற்பூசிக்கொண்டு நானமுதற் பலவாசு நெய்க்குநோய்செய்தபூங்கூந்தலினங்கை தன்னுயி ருந் தாிற்ப வழலையருந்தினாற்போலத் துயரோடுவாடாநின்றா ளென்க. (௫௧)

வாடியவொருமகள் வளர்ச்சிகண்டுளங்
கூடியதுயர்க்கிரு குரவர்நாடொறு
நீடியநசைக்கொடு நிமலனைத்தொழு
தாடியசிந்தையி னாற்றியிம்மூவார்.

உரை.— அங்ஙனந்தமக்கொருபிள்ளையாய்நின்ற சாரமி வாடினதன்மையும வளர்ந்ததன்மையுங்கண்ட தாய்தகப்ப ன்மனதிற்கொண்ட துயரைப்பொறாமனாடோறு மிக்கவா சையுடனே கடவுளைவணங்கிவேண்டி யாடாநிற்குஞ்சிந்தை யினரா யழுதுவிம்மிக்கொண் டிருப்பாரென்க. (௫௨)

தீந்துயர்மூவருந் தகைப்பவன்றவர்
வந்துயர்மணிக்கொடி மன்றற்கேட்டலு
நொந்துயர்கிளையனா நிவலன்றுக்கிமுன்
வெந்துயர்விளைத்தபேய் வினைவிளம்பினன்.

உரை.—அங்ஙன மகளோடு தாயுந்தாதையும் வருந்தாநிற் க விம்மூவர்கொண்டதுயரை யன்றுதடுக்கும்படி யசீயனு ந் தயோதரனும்வந்துறவாடினபின் புயர்ந்தமணிக்கொடி யொத்தபெண்ணைத் தயோதரனுக்குமணமாகக்கேட்டார், அ தற்குத்தகப்பனாகிய நிவலனுயர்ந்தகுலத்திற்பிறந்து தனக்குரி யவுறமுறையாகியவ்வர்சொன்னதைக்கேட்டுமிகவுநொந்து முன்னிவளைக்கொள்ளவந்த வேழுபேரையுங்கொன்று பசா சுவிளைவித்ததுன்பத்தை விரிவாகச்சொன்னானென்க. (௫௩)

பேய்வளர்வினையெலாம் பெயர்ப்பனானெனத்
தீய்வளர்குரவருட் சிறந்துநேர்தலாற்
போய்வளர்கோலமிட் டரிவைபொற்புறி
மீய்வளர்மலர்க்கொடி பூத்துவேய்ந்ததே.

உரை.—நிவலன்சொன்னதற் கசரீயனட்பேய்செய்யும்வி
னையெலாநானே தீர்த்தொழிப்பேனென்றான், அதனைக்கே
ட்டுமனதில்வேகாநின்ற தாயுந்தாதையுமகிழ்ந் துடன்பட்ட
தனாலுடனேபோ யிருவர்க்குமணக்கோலமிட்டுச் சாரமிய
ன்றுமிக்கழகடைந்து வளர்ந்தபூங்கொடி புதிதாய்ப் பூத்தத
ன்மையாற றோன்றினாளென்க. (௫௪)

செங்கதிர்மதியொடோ ரணையிற்சேர்ந்தன
வங்கதிர்நலாளொடு காளையாங்குறி
யிங்கெதிர்தொழூன்முன் கொணர்ந்தவீரலைப்
பொங்கதிர்வெழப்புகைத் தெரித்துப்போக்கினான்.

உரை.—அங்ஙனங்கோலமிட்டபின்பு செய்யுமுறையெ
லாமுடித்துச் சந்திரனுஞ்சூரியனுருப்பட வொருபூமெ
த்தைமேற் சேர்ந்திருந்தாற்போலக் கதிர்வீசியமுகத்தாளோ
டு காளையாகியதயோதர னங்கேபொலிந்திருக்க விங்கே யெ
திராய்நின்று தொழனாகியவசரீயன் முன்வழியிலே மீனைக்
கொன்றெடுத்துக்கொண்டுவந்தவீரலைச் சூழநின்றயாவரும்
திசயித் ததிரும்படி நெருப்பிற்போட்டெரித்துக் கிளம்பின
புகையையிருவர்மேற் போக்கினானென்க. (௫௫)

போக்கியபுகையொடு புழுங்குபேயின
நீக்கியநிலையினாங் கெவருநீர்த்தழ
வீக்கியகொடிநல மெய்ந்தகாளையுட்
டேக்கியமகிழ்வறாச் சிறந்துமூழ்கினான்.

உரை.—அங்ஙன மசரீயன் சுட்டவீரலின்புகையை யவ
ர்மேல்விட்டவளவி லங்கேசினத்தோடுநின்றபசாசுகளோடி
ட்போனதைக்கண் டெல்லாரு மிகவுமகிழாநிற்க மணமுமு
றையோடுமுடிந்து தயோதரன் றாழ்வின்றிவாழாநின்றானெ
ன்க. (௫௬)

திருமணிப்படலையி னிருவர்வாழ்ந்துராய்ப்
பருமணிக்களிப்பினுட் பலவுஞ்சென்றபின்
திருமணிக்கொடியொடு திரும்பச்சேவுணர்ந்
தருமணிக்குன்றனை னமைதிகேட்டனன்.

உரை.— அங்ஙன மிருவரு மிருமணி கோத்தமாலையாக வாழ்ந்திருந்து களிப்போடுபலநாள்போனபின்ன ரருமணிக்குன்றொத்தசோதரன் திருமணிக்கொடியாகியதன்றுணைவியோடு தன்னூருக்குத்திரும்பிப்போகவேநினைத் ததற்குத் தாரமுங்கேட்டானென்க. (௫௭)

விடையொடுவருந்தினுந் தாதைமேவரு
ளிடையொடுவளர்கவென் றிளமின்கூட்டிவான்
கொடையொடுவளர்ந்தசீர் குவிதனன்புரி
நடையொடுவேண்டுவ வெறுப்பநல்கினான்.

உரை.—அதனைக்கேட்ட நிவல னிவளைவிடுதலின்வருந்தினு மூத்தாரங்கொடுத்து விடாமலுங்களிடையிற்கூடத் தயையேவளரக்கடவதென்று மகளைக்கூட்டித் தான்செய்த கொடையின்வழி தன்னிடத்து மிகவும்வளர்ந்த செல்வங்களைத்திரளாய்க்கூட்டித் தன்னன்பினளவாக வாசையின்மேலுங்கொடுத்தானென்க. (௫௮)

பறவையுநிழலுமா யும்மூட்டபற்றுறி
யுறவையுமறக்கினு மூவந்தில்லோர்க்கெலாங்
கறவையுமிகவருட் காமினென்றன
னறவையுமணத்தையு நவிழ்பைந்தாரினான்.

உரை. — மதுவையு மணத்தையும்பொழியாநின்ற மாலையணிந்தநிவலன் மகளையு மருமகனையும்பார்த்து நீங்கள்பறவையு மதினிழலும்போல வெங்கேபோனாலும் பிரியாதவன்போடுசேர்ந்திருக்கவு முறமுறையாரைமறந்தாலுமிரப்போரைமறவாம லவர்க்கெலாம் வேண்டியவெல்லாவற்றையுங்கொடுத்து நற்கறவையினுமிக்கதயையை மனதில்விடாமற்காக்கவுஞ் செய்வீராகவென் றனுப்பினானென்க. (௫௯)

தூம்புடைகையமாத் துரகஞ்சாடியர்
கூம்புடைதேர்தசங் கொடிகுடைக்கொடு
தேம்புடையலங்கல்வேற் சேனைசூழ்வர
வீம்புடைமரபினோர் விரைவிற்போயினர்.

உரை. — அங்ஙனந் துளைத்தகைம்மாயானைகளுங் குதிரைகளும் வண்டில்களுங்கொடிஞ்சித்தேர்களுந் தண்டிகைகளுங் கொடிகளுங்குடைகளு மதுமலர்மாலையணிந்த வேலையேந்தியசேனைகளுஞ்சூழவரவேமேன்மையிற்பொலிந்ததயோதரனுஞ் சாரயியு மசரீயனும் விரைந்துபோனு ரென்க. (கூ௰)

வேறு.

பண்ணடையாலாடலெனப் பரிவற்றிங்க
ளுண்ணடையாளுவப்பவிவை யொழுகுங்காலைப்
புண்ணடையான்மகற்கவண்டாய் புலம்பிநோகப்
பெண்ணடையாளுண்மயங்கிப் பெரிதுநைந்தாள்.

உரை.— வீணைவாய்க்கீதமோ டிசைப்படவாடலேபோல விங்ஙனே மூகவிமாபுரத்தின் முன்னிருந்ததுபரைத்தீர்த்து மணமுடித் திவையெலாமகிழ்வோடுநடத்துவருகையில் நீணைநகரிற் றயோதரனெடுநாள்வரவில்லையென் றவன்றாய்மனதிற் புண்பட்டாற்போல வருந்திப்புலம்பிப் பெண்புத்தியான்மயங்கி மிகவு முட்குழையாநின்றாளென்க. (கூக)

பொருளிழந்தேமகனிழந்தே புலம்பநீகண்
டெருளிழந்தேயிதோகொடையின் செய்கையென்று
ளருளிழந்தேசொல்லவென வழந்தொபியன்
மருளிழந்தேகலங்காதான் மறுத்துச்சொன்னன்.

உரை. —அங்ஙன மயங்கினதாய் புருடனைநோக்கி-இதோ பொருளிழந்துவறியராஞேம், மகனிழந்துதனியராஞேம், நீ மிகவருந்தக் கண்ணொளியிழந்துகுருடனுனுய், இதுவோசெய்கொடையாற் பயனுய்வந்தசெல்வமென்றுள், அதற்குத்

தொபியன்றனையில்லாதசொல்லைப் பேசாயென்றழுது மய ங்காமலுங்கலங்காமலு மீளவுஞ்சொன்னானென்க. (௬௨)

அறமொன்றேபயன்பேதா யருந்தீதல்ல
மறமொன்றேவினைகாணாய் வழங்குமன்பின்
திறமொன்றேநயப்பிடை சேர்த்தியீவான்
புறமொன்றேபொவாக்கருணைப் பொலிவேயானென்றான்.

உரை.—அறிவிலபேதா யிவ்வுலகி னல்லறமொன்றே நன்மையாம், துன்பமும்பொல்லாங்கல்ல, பாவமொன்றேகொடியவினையாம், புறத்தொப்பில்லாத கருணையின்மிக்கோ னாண்டவனேயன்பின்றிறத்தா னமக்கின்பத்தையுந் துன்பத்தையுஞ் சேர்த்தித்தருவானென்றா னென்க. (௬௩)

ணைத்திறத்தானொந்தழுவ தெளிதேவாடு
மெய்த்திறத்தாவிறப்பெளிதே விளைநோய்தந்த
கைத்திறத்தாற்றேறியுளங் காய்ந்ததுன்ப
மத்திறத்தாவின்பமென்ப தரிதேயென்றான்.

உரை.—வந்ததுன்பத்தாற் றுமனமயங்கியழுவதெளிதே, மீளவுமுடலைவாட்டி வலியச்சாவதெளிதே, இவையொழிந் தத்துயர்களை யாண்டவன்றந்ததென் றெண்ணி யவற்றைத்த ந்த தயையுளகையைநோக்கி மனதிற்றேறி யந்நோக்கத்தா லுட்காய்ந்ததுன்பமே யின்பமென்றிருப்பதரிதே காணெ ன்றானென்க. (௬௪)

காய்பதங்கண்டருங்கொல்லன் கரும்பொன்காப்பா
னேய்பதங்கண்டாற்றானே நுனித்தவன்பின்
றாய்பதங்கண்டெற்றையெனச் சாற்றும்வேலை
செய்பதங்கண்டண்டொருவன் றாதுசென்றான்.

உரை.—உலையிற்போட்டவிரும்பு காய்ந்தபதத்தையறிந் தருங்கொல்ல னதையெடுத்தழியாதபடி காப்பானல்லோ,அ ரியவன்புளதாயின்றன்மைத் தெமக்கொரு பிதாவாகியகடவு ளு நமக்குவந்த துன்பத்தின்பதத்தை யறிந்து நாமழியாத

படி வேண்டியபொழுதி லத்துன்பத்தையாற்றமாட்டாளே
வென்று தொபீயன் சொல்லிக்கொண்டிருக்கையி லவர்மகன்
வருவதைக்கண் டொருவன்சீக்கிரமாயோடிச் சொல்லவந்
தானென்க. (௬௫)

வேறு.

இங்கணுணரிவையோடு சென்றனன்காளையென்றுத்
தெங்ஙனம்பியென்று றொழும்விரைவிவருஞ்சென்றே
றிங்கணுமடிகளென்ன விருவர்தாடழுவிவீழ்ந்து
தங்கணுண்மலர்நீராட்டித் தகுந்துயராற்றினரே.

உரை.—சத்திராணுதற்குக் காரணமாகிய வழகுள்ளபெ
ண்ணோடு தம்பிவந்தானென்று வந்ததூது சொன்னதற் கவ
னெங்கேயென்று தாயுந்தாதையுமெழுந்து போகிறசீக்கிரத்
துத் தயோதரனுமற்றவருஞ் சென்றவமையா லவர்கேட்டதற்
கிவர்தாமே சுவாமி யிங்கேயிருக்கிறோமென்று மறுமொழி
சொல்லித் தாய்தகப்பன் காலில்விழுந் தவற்றைத்தழுவாநின்
று தம்மலர்க்கண்ணீராலாட்டி முன்னடைந்தயிக்கதுயலாய
ன்றாற்றினரென்க. (௬௬)

ஏற்றினனுயிரோடாக்கை யிமிழ்த்தெனவணைத்தான்க
ண்ணீர்
தூற்றினனழுங்கணன்றித் துலங்குகண்ணிலெனோவென்னச்
சாற்றினனரியதோழற் றழுவினனவனுமிந்நோ
யாற்றிநானுவப்பச்செய்வே னரிகவிக்கவலையென்றான்.

உரை.—தொபீயனோவெனிற் காலில்விழுந்தமகனையெடுத்
துத்தூக்கினன், தன்னுயிரோ டுடல்பிணித்தாற்போல மார்
போடிறுகவணைத்தான், மகனுடலெல்லா நனையும்படி கண்ணீ
ரைப்பொழிந்தான், ஐயோ வழும்படி கண்ணுளனேனோ
ழிய வுன்னைக்காணும்படி கண்ணிலனேனே யென்றான், எ
ன்றபின் பரியதோழனாகிய வசரீயனைத்தழுவிக்கொண்டான்,
இவனும்-ஐயா விக்கண்ணோயை நானே தீர்த்து நீமகிழும்ப
டிசெய்வே னிக்கவலையறுத்தெறிகவென்றானென்க. (௬௭)

நால்வழிகொணர்ந்தபித்து நோமிருகண்ணிற்பூசிச்
சேல்வழிசிலாம்பிற்பில்லஞ் சிந்திவீழ்ந்திருளுநீங்க
நால்வழியனைத்துந்தோன்றி நவையறத்தொபீயன்காண
மேல்வழியுதவியென்ன விமலன்பின்னிவனைத்தாழ்ந்தான்.

உரை.—அசரீயன்சொன்னபடி கண்ணோயையவற்குத் தீர்ப்பக் கொண்டுவந்தமீன்பித்தைக்கலாத்துக் கற்றநூற்படி குருடுபாய்ந்த விருகண்மேற்பூசினவளவின், மீனினின்றுவிழுஞ்சிலாம்புகளைப்போலக் கண்ணின் றிருபில்லம்விழுந்து மாசெல்லாம்போய் நாலுதிக்கிலு மனைத்துந்தெளிவாய்த் தோன்றிக் குறையொன்றின்றி யனைத்தையுந் தொபீயன்கண்டான், கண்டவுடனேயிதுமேலானவுதவியால்வந்ததென்றெண்ணியாண்டவனைவணங்கினபின் பசரீயனையும் வணங்கினானென்க. (௩௮)

திருமணிக்குன்றின்சாயற் சிறுவனுமொளிமீன்பூத்து
வருமணிச்சாயலாளும் வளர்நிதிக்குப்பையோடு
பெருமணிப்பேழைச்சால்பும் பெற்றமற்றெவையுந்தன்கண்
ணிருமணிக்களிப்பிற்கண்டா னிருங்கொடைப்பயனிகந்திமிக்
கான்.

உரை.—கண்டெரிந் தெங்கும்பார்த்ததொபீயன் கண்டதேதெனில், திருமணிவயிரமலையின்சாயலாய்நின்ற மகனைக் கண்டான், வான்மீன்பூத்ததுபோல மணியின்சாயலாய்நின்றவன்றேவியையுங்கண்டான், குவித்துவைத்த திரவியங்களையும் பெருமணிகள்வைத்த பலபேழைகளையுங்கண்டான், தனக்குவந்த யானைகுதிரைமுதலியாவையுங்கண்டான், இவையெல்லாவற்றையுந் தன்னிருகண்களிகூர்ந்து குளிரும்படிகண்டான்செய்தபெருங்கொடையின்பயனையிக்கடைந்ததொபீயனென்க. (௩௯)

நல்வினைவிளைவுகண்ட நகமொலாநயப்பத்தோன்றல்
பல்வினைவழியிலாய பயனெலாம்பணிப்பத்தாதை
நல்வினைவிளக்கைப்பற்றி வேதிருந்துமாமோகாளாய்
நல்வினையுணர்விற்றேறூன் வழங்குகைம்மாறேதென்றான்.

உரை. — நல்வினைத்த விளைவுகண்ட நினைவுமாபுரமெல்லா மகிழாநிற்பத் தயோதரன் முன்போனவிடத்து நடந்தயாவையுந் தகப்பனுக்குரைப்ப வவனுமகிழ்ந்து விளங்கிய கடகமணிந்தமகன் கையைப்பற்றி யப்பாற்போய்த் தனித்திருந்து மகனே யித்தன்மைத் தரியவல்லமையிற்றெளிந்துதவினதோழனுக் கென்னகைம்மாறு கொடுத்தல்வேண்டுமென்று சொல்லென்றான்றந்தையென்க. (௭0)

கொடியவோர்வகுலிகொன்றான் கொள்கடன்கொண்டான்பேய்கள்
கடியவோர்களினல்லாளைக் கடியொடுசேர்த்தான்செல்வம்
பொடியவோரளவற்றுய்த்தான் புலம்புனக்கிருகண்டந்தான்
படியவோர்கைம்மாறுண்டோசீர் பாதியிட்டிறைஞ்சவென்றான்.

உரை. — அதற்குத் தயோதரன் - என்னைக்கொல்லவந்த கொடியபிணியை யவனேகொன்றான், வரவேண்டினகடனையவனேநமக்குவாங்கிக்கொண்டான், என்மாமன்மனையிருந்தபேய்களையோட்டி யிந்நல்லாளையெனக்கு மணத்தோடவனேசேர்த்தினன், அளவொன்றின்றிச் செல்வங்களைவீட்டிலேமூளைக்கவவனேசெய்தான், வருந்தாநின்றவுனக்கிருகண்ணை யவனேதந்தான், இவையெல்லாவற்றையுஞ் செய்தபின்பவற்குரிய வோர்கைம்மாறுண்டோ? ஆகினும்வந்ததெல்லாவற்றையும்பகுந்து பாதியையவற்குத்தந்துபோதாதென் றவனை வணங்குவோமென்றான் மகனென்க. (௭௧)

கோதைவாய்விரைசெய்மார்பன் கூய்மினென்றவனும்வந்தான்
றாதைவாயமிர்தமூறத் தன்கையான்முன்கைபற்றிக்
காதைவாய்மடங்கச்செய்தாய் கடிப்புகழிங்கண்வித்தி
மேதைவாய்ப்பெருஞ்சீர்வான்மேல்விளைத்திமற்றறியநானே.

உரை. — மகன்சொன்னதைக்கேட் டுடன்பட்டுத் தொபியன் வாசமாலையணிந்த மார்பனுகியவசரீயனையழைக்கச்

சொல்லி யவனும்வந்தான்,வந்தவளவி லவன்முன்கையைத்த
ன்கையாற்றெருபீயன்பிடித்துச்சொன்னான்: பேசவகையின்
றி வாயையடங்கச்செய்தாய், இப்பூவுலகில்மிக்கபுகழையுன
க்குவிளைத்துப் பொலிந்தவுணர்வோ னெக்கு வான்மேற்பெ
ருஞ்செல்வம்விளைவித்தாய், இதொழிய நா னிந்தன்றியறிய
த்தகுவதொ வில்லையென்றனனென்க. (௭௨)

அடிப்பணிசெய்கநாமே யரும்பொருளோடுமெய்த்த
கடிப்பணிபகுந்தோர்பாகங் கைக்கொள்கவென்னப்போற்றிக்
கொடிப்பணியுலவுமார்பன் குளிர்ப்பவோர்முறுவல்காட்டித்
துடிப்பணிமொழியாற்சொன்னான்சுருதிநூலமிர்தவாயான்

உரை.—நாமுனக்கடிமையாகி யுன்னடியூழியத்தைச்செ
ய்வதுமுறைமைய,மீளவுங் கொண்டுவந்ததிரவியங்களையுமணி
கள்வைத்த பேழைகளையும்பகுந் தவற்று ளொருபாதியைக்
கைக்கொள்வாயாகவென்று வணங்கினான். அணிந்தமணிவ
டங்கள் கொடியாய்ப்படர்ந்து தூங்குமார்பனசரீய னவர்
மனங்குளிரும்படி தானொருபுன்னகையைக்காட்டி முர
சொத்தவொலியோடு வேதநூலமிர்தமாகவூறுகின்ற வாயா
னுரைச் சொன்னானென்க. (௭௩)

உருக்கொடுதோன்றிநானே யுருவிலாவானேனின்பப்
பெருக்கொடுதேவபாதம் பெற்றவிரபயேலென்பன் [த்
மருக்கொடுமலர்ந்தபூப்போல் வளரருட்கொடையின்பாலா
திருக்கொடுபுகழ்நீயெய்தச் செலுத்தினனென்னைநாதன்.

உரை.— அசரீய னெங்ஙன மறுமொழிசொன்னானென்
னில், உருவோடிங்கேயுங்களுக்குத்தோன்றினு முருவில்லா
தவானவனானே, இன்பப்பெருக்கத்தோ டாண்டவனதிருப்
பாதத்தையடைந்த -இரபயேலென்னப்படுவேன், மதுவை
ப்பொழிந்து விரிந்தவாசமலரைப்போலவருளோடுமலர்ந்த
முகத்து நீதந்த கொடையின்பயனாக விப்பொழுதுசெல்வ
த்தையும் புகழையுமடையும்படிக் கென்னையுங்களண்டைக்
காண்டவனனுப்பினானென்றானென்க. (௭௪)

இரவலர்தங்கைவேலி யிடத்தரும்பொருளைவித்திப்
புரவலர்புகழும்பொய்யாப் பொலிவொடுவிளைத்திவாழ்வும்
பரவலர்மலர்ந்தசோலை படர்நிழன்மங்காயாண்டும் [ஞ்சா.
கரவலர்முகைத்தில்லோர்தங் கைக்கொளுங்கொடைவித்தே

உரை.—இரப்போரதுகையாகியவயலிடத்தே மிக்கபொருளை நீ முன்விதைத்தமையா லின்றுகொடுப்போர்க்குரிய புகழையும் பொய்யாததுறையி லுயர்ந்தவாழ்வுகளையு மதின்விளைவாகக்கொண்டாயே, அங்ஙனம் பரவியமலரைப்பூத்த சோலையின்றன்மையாய்க் குறையாதெவர்க்கும் படர்ந்த நிழலைச்செய் தெங்குந் தன்கைமலர்த்திநிந்தகாலத் திரப்போர் கைக்கொண்டபொருளாகிய வித்துத்தா னெக்காலத்துங் கெடாது விளையுமென்றுணர்க. (௭௫)

பொன்றெளிசுடரச்செய்திப் புலாயறத்துயர்ந்தா யென்ன
வுன்றெளிசுடரத்துன்பத் துளதியேதுன்பந்தாங்கி [ப்
மன்றெளிசுடரநெஞ்சின் மயக்கிலாப்பொலிந்தாயென்ன
பின்றெளிசுடராவிச்சீர் பெற்றியேகொடையின்மிக்கோய்.

உரை. —பொன்மிகச்சுடரும்படி யதைச்சுடுந்தீப்போல நீயும்பொன்றெப்ப நல்லறங்களாலுயர்ந்தாயென்று மிகவுஞ்சுடரும்படி சிறிதுநாட்டுன்பத்தைபடைந்துயருந்தாதின்றியே,வந்தவன்பத்தைத்தாங்கிநிலைகொண்டதெளிவுமாறுதனெஞ்சிலே மயங்காம லுறுதியாய்நின்றாயென்று பிற்காலத்தும் புகழப்படும்படி யிப்பொழுதிச்செல்வங்களையடைந்தாயே கொடையின்மிக்கோயென்றுணர்க. (௭௬)

ஓர்திறத்தின்பந்துன்ப மொருமையாற்பகுத்தநாதன்
பேர்திறத்தனைவாழ்த்திப் பெறும்வினைகளைவென்னக்
கார்திறத்தொளிருமின்போற் கழிவொழித்தொளிப்பவாமென்
சீர்திறத்தருளின்மிக்கோர் திருவுளமிறைஞ்சிவீழ்ந்தார்.

உரை. —ஒருதன்மையா லொருகையா லின்பத்தையுந்துன்பத்தையும் பகுத்துத்தருமாண்டவனுள வல்லமைக்குந்தீழ்

ப்படிந் தவனைவாழ்த்தி யுவருந் துயர்நீங்கக்கடவதென்று மே கத்தின்முகத்து விளங்கத்தோன்றிமறையு மின்னலைப்போல வவ்வானவன் கதிராவீசிமறைந்துபோனான். அப்பொழுத டைந்தசெல்வத்திற்களவாக வருள்மிக்குடையதாதையு மகனு ந்தரையில்விழுந்து தேவதிருவுளத்தை வணங்காநின்றாரெ ன்க. (௭௭)

மிடிமுகத்தெஞ்சாச்செல்வம்விளைமுகத்தோங்காநீரார்
படிமுகத்திணையாவன்பிற் படுங்குறையெவர்க்குநீக்கிக்
கடிமுகத்தடைந்தவாழ்க்கை கனிபொதுப்பயனன்றாக
விடிமுகத்துறைதீதென்ன விமிழுறப்பகுத்துவாழ்ந்தார்.

உரை.—அங்ஙனந் தாரித்திரம்வந்தவிடத்து மெலியாம னதிற்கலங்காமலு மிக்கசெல்வங்கள் வந்தவிடத்து மகிழ்ந் தாங்காரியாமலு மொருகண்டசீராய் நின்றதாய்தகப்பன்ம கனென்னுமிம்மூவரும் பூவுலகினிகராதவன்பினோ டெனவரு மடைந்த துன்பங்களைத் துடைத்துத் தாமடைந்தசெல்வமி குதி யினிதாயெவர்க்கும்பொதுப்பயனாகப்பகுத்து வெருவ விடித்துப்பெய்யு முகிற்குணநல்லதல்லவென்று தாம்வெறு ப்பின்றிமகிழ்ந்து நிறைந்தகொடையைப்பொழிந்து தாமு நெடுநாள்வாழாநின்றாரென்க. (௭௮)

கொடைதரும்பயனேயிஃதேற் குளித்தகாற்கெடுமெ
ன்றீந்து
மிடைதரும்பொருளினாக்க மேவுமினென்றான்குசை
கடைதருமளவற்றன்னார் களிப்புறவிரப்போர்வாழ்க
மடைதருநிறைவிற்றானம் வழங்குநல்லுணர்விற்றேர்ந்தார்.

உரை.—அங்ஙன மிப்பூவுலகிடத்துங் கொடைதரும்பய னித்தன்மைத்தாகையி லொளித்துவைத்தகாலத்துக் கெடும் பொருளிதுவென்றறிந்து திரளாயிரப்போர்க்கீகையால் வரு மப்பொருளின் வளர்ச்சியை மேவக்கடவீரென்றான் குசை. இவையெலாங்கேட்டயாவரு மளவொன்றின்றி மகிழாநிற்க வினிமே லிரப்போர்வாழும்படி மடைதிறந்தாற்போல நி றைந்ததானம்வழங்குவதற்குத் தெளிந்தாரென்க. (௭௯)

வேறு.

கோலமிட்டவங்கக்குடமொத்தவண்
சூலமக்கணிகொக்கணிதொக்கணி
சாலமிக்கதவத்திருத்தாங்கிநற்
சீலமற்றசிவாசிவன்செப்பினான்.

உரை. — சூழக்கேட்டிருந்தவருளங்கப்பானைக்குக்கோலமிட்டதுபோலக் கையிற்சூலமு மார்பிலக்குமணிகளுந் தலையிற்கொக்கிறகுகளு மிவையெலாமணியாநின்று மிக்கதவத்தின்வடிவாய்ப் புறத்துத்தோன்றி யுளத்து நல்லொழுக்கமில்லாத சிவாசிவனென்னு மொருவன்சொன்னானென்க. (௮௰)

அற்றவல்லியறுதுழநூலெனப்
பெற்றவிப்பிறப்பிற்கொடையெப்பிறப்
புற்றதென்னினும்புக்கொழியாதுயிர்
பற்றவந்துபயன்றருமேயென்றான்.

உரை. — சூசைசொன்னதற்கொப்பச் சிவாசிவன்றானுஞ் சொன்னாற்போல - அப்படிதானல்லோ வல்லிப்பூவறுத்தவிடத்து மதினாலறுதுதொடருமாறுபோல வொருவனிப்பிறப்பிலேசெய்ததானமே யவனெப்பிறப்பிற்பிறந்தாலு மவனுயிர்புகுந்தவுடனுள் ளதுவுங்கூடப்புகுந் தெக்காலத்து மொழியாமற்றொடர்ந்துவந்து பயன்றருமென்றானென்க. (௮௧)

பேதைவாய்மொழிகேட்டுளிப்பேரருட்
கோதைவாய்மொழிமாதவன்கூறினான்
காதைவாய்மொழிகண்ணியுளங்கெட
மேதைவாய்மொழிவேதமதென்பவோ.

உரை. — அறியாமற்சொன்னதைக்கேட்டு மாதவன்சூசை யருளினன்மலர்த்தமொழியோடு சொன்னான்: வீண்கதைகளை நினைத் துயிர்கெடும்படி யவற்றைவேதமாகச்சொல்வாயோ வென்றானென்க. (௮௨)

பிறப்பதும்பிறந்தாரெவரும்பின
ரிறப்பதும்பொதுவன்றியிறந்தபின்
புறப்படும்புரம்புக்குமுறுயவை
மறப்பதுந்தவிர்ந்தார்வகுத்தாரென்றான்.

உரை.—பிறந்தலும் பிறந்தயாவருமிறத்தலு மெவர்க்கும் பொதுவாமொழிய வொருவனிறந்தபின்ன ரவனுயிர் மறுவுடலிட்புகுந்து மறுபிறப்பிற் றனக்காயவைமறவாம லிந்நாளவரைக்குஞ்சொன்னவிஞ்ஞானுண்டோ வில்லையேயென்றான்சூநச. (ஆகையால் மறுபிறப்புண்டென்பதற்குக் காரணமில்லையென்றாயிற்றென்க.) (அக)

முன்பிறந்தனர்மறுபிறந்தாரெனிற்
பின்பிறந்திலர்முன்பெறுந்தீவினை
யென்பிறந்தபினெவ்வழிவீயுமென்
றன்பிறந்தசினத்தவன்கூறினான்.

உரை.—அதற்குச் சிவாசிவன் பிறந்தயாவரு மீளவும்பிறவாதபடி முழுதும்பிறப்பாராயிற் றான்கொண்டதீவினையவரிறந்தபின்னை யெங்ஙனமொழியுமென் றன்பில்லாதசினத்தோடு சொன்னானென்க. (அச)

மருள்வினைத்தவமுக்குறைகேட்டவுந்
தெருள்வினைத்திருவிளக்காயினு
னருள்வினைத்தனன்னன்பொடுநான்மறைப்
பொருள்விளைத்தபயன்புகன்றானரோ.

உரை.—சிவாசிவன் சொன்ன மயக்கத்தோடுகூடியபொய்புரைகேட்டுத் தெளிந்தறிவிளக்காயிருந்த தயையோடு வளர்ந்த தன்னன்போடு வேதநூற்பொருளின்பயன்களைச் சொல்லத்தொடங்கினானென்க. (அரு)

வினைமுதிர்ந்தவிளிந்தனராகிப்பொய்ப்
முனைமுதிர்ந்தனமுன்முதிர்ந்துயிற்
கனைமுதிர்ந்தபணிப்பொடிக்காலுறும்
புனைமுதிர்ந்தசிறைபுதைந்தோவுமால்.

உரை.—இவாசிவன் விருவினதற்குப் பிறந்துசெய்த விருவினைக் கிறந்தபின் வரும்பயனைச் சூசைசொல்லத் துடங்கினான், ஆகையால் முதிர்ந்தபெருந்தீவினையோ டிறந்தவருயிர் போய்முதிர்சினத்தழன்ற தீநிறைநரகில்விழுந்து மிகவுமலறியதடுக்கத்தோடெக்காலமு நீங்காதவிலங்கொடு தீச்சிறையிற்புதைபட் டோயாமல் வருந்துவதாமென்க. (௮௬)

செய்தநற்றவவாட்கொடுதீவினை
கொய்தபின்னிறந்தாவிகுளிர்த்தருள்
பெய்தநெஞ்சுபெயர்கிலடேரின்ப
மெய்தவாண்டகைகளொடென்றும்வாழுமால்.

உரை. —செய்தநற்றவமே வாளாகக்கொண்டு தீவினை யாவையுமறுத்தபின்ன ரிறந்தவருயிரோவெனின் மகிழ்ச்சியாற்குளிரும்படி யோயாமற்பொழிந்த வருளாகிய மழையை நெஞ்சினுட்கொண்டு முகமுகமாய்க்கடவுளைத்தெரிசித் தெக்காலத்தும் பெயராதபேரின்பத்துடனே வாழ்ந்திருமென்க. (௮௭)

இருவகைப்படுமிவ்வுயிர்விட்டிடை
வருவகைப்படுமற்றுயிர்தன்வினை
யொருவகைப்படுமொப்பனைத்தீயுல
கருவகைப்படுமெல்லவில்வீயுமால்.

உரை. —சொன்னமுற்றுந்தீயோரு முற்றுநல்லோருமன்றி யவ்விருவகைநடுவேநிற்கு முயிரோவெனி லரியதோர்முறையிலுயிர்களையொப்பரவாக்கி விளக்குந் தீயுளம்வாரிடத்துட்போ யங்கேவெந்துவருந்தித் தன் றீவினையொழியுமட்டேங்கிடக்குமாமென்க. (ஒப்பனைத்தீயுலகெனினு முத்திரிக்குமிடமெனினுமொக்கும்.) (௮௮)

ஏதுகொண்ணிதிபொன்செயுங்கொல்லரோ
பூதுகொந்தழலொட்டனைசெய்தெனத்
தீதுகொள்ளுயிர்தீதளவன்னதீப்
போதுமட்டும்பொருந்தவருந்துமால்.

உரை.—கலப்புளபொன் றங்கமாம்படிபுடஞ்செய்து தட்டாருதி யுலையில்வளர்த்ததீயே யதனையொப்பரவாக்குமாறுபோல வற்பத்தீவினையோ டிறந்தவருயிருடைய தீதினளவாகச் சொன்னநெருப்பே யொவ்வோருயிருக்குப் பொருந்தினநேரமு மட்டுந்தப்பாம லுயிர்களைவருத்துமென்க. (ஆகையாலவனவன் றன்வினைவேற்றுமைபற்றி யங்கேவேகுநேரமும் வேகுமகோரமும் வேறுமென்க.) (௮௯)

பொன்விளக்கியபோதிலக்கொல்லரே
மின்விளக்கியமென்னகைசெய்தென
வின்விளக்கியவவ்வுயிரெம்பிரான்
மன்விளக்கியமார்பணியாகுமால்.

உரை. — பொன்செயுங்கொல்லர் நெருப்பிற்பொன்னை விளக்கினபின் பதனைக்கொண் டரசர்மார்பிற்குரிய நுண்ணிய நகைகளைச்செய்வதுபோல வங்ஙனஞ்சொன்ன வொப்பனைத்தீயாற் றீதுநீங்கிவிளக்கினவுயிர்களு மவ்விடம்விட்டுவான்கதியிற்சென்று மாறுவொளியோடு கடவுளணிந்தமணிநகைத்தன்மையா யெக்காலத்தும்வாழ்வனவென்க. (௯௰)

சொன்னமுற்கதிகள்கடைதோன்றிலா
வின்னபிற்கதியீறுளதாயிறந்
தன்னதீயுறையவ்வுயிர்க்கீங்குநம்
பன்னலாட்சியிற்பாசறைகுன்றுமால்.

உரை. — முன்சொன்னநரகமுமோட்சமுமென்னு மிரண்டுகதிகளுக் கொருமுடிவில்லை, பின்சொன்னவொப்பனைத் தீயுலகாகியகதிக்குமுடிவுண்டாகி யிறந்தபின்னங்கேவெந்துவருந்திக்கிடக்குமுயிர்களுக்குவேண்டி நாமிங்கேசெய்யுந் திவசமுதற் பலதருமங்களா லவ்வுயிர்களுக்குவேதனையு நாளுங்குறைந்து பரமகதியையடைவனவென்க. (௯௧)

அரியவேதவெட்டெட்டுமெண்ணாகமத்
தரியவிவ்வழியொன்றலதில்லையாற்
பிரியமாண்டுயிர்பின்புபிறத்தலே
கரியகங்குல்களெனவோதினான்.

உரை.—வேதத்துள்ளவெழுபத்திரண்டாகமத்துள்ளேயி றந்தவருயிரெலாஞ் சொன்னமூன்றுவழியிலொன்றேயடை யுமொழியவேறேவழியில்லை, ஆகையாலிறந்துடலைப்பிரிந்த வுயிர் மறுவுடலிற்புகுந்துபிறக்குமென்பது தூங்கிஞரிரவிற் கண்ட கனவென்றுலொக்குமென்று சூசைசொன்ஞனெ ன்க. (எழுபத்திரண்டாகமங்களாவன: சனிப்பாகமமுதல்-மோயிசனாகமங்கள்-ரு; சோசுவஞகமம் - க; நீதியராகமம்-க; இரூத்தாகமம் - க; அரசராகமங்கள் - ச; நாளாகமங்கள்-உ; எஸ்திராகமங்கள் - உ; தொபீயஞகமம் - க; சுதீத்தாக மம்- க; எஸ்தேராகமம்-க; சோபாகமம் - க; கீதவாகமம்-க; சாதுரியாகமமுதல் - சாலுமொஞகமங்கள் - ங; ஞானவாக மம் - க; சமூதீதாகமம் - க; புரோகிதராகமங்கள் - ௰எ; மக்கபெயராகமங்கள் - உ; சுவிசேடாகமங்கள் - ச; அற வோர்முயலாகமம் -க; பத்திராகமங்கள்-உக; காணற்புதாக மம் - க- என்னுமிவை வேதத்துள்ளவாகமங்க ளெழுபத்திர ண்டென்க.) (௬௨)

வேறு.

கூடியவிந்நிலையுளதேற்குன்றுடலுமுடல்வனப்புங் கு
றையும்வாழ்வு [யி
மாறியவிந்நிலயுலகில்வழங்கியகானீதியிதோ வழுவேர்கூறு
தேறியவிந்நிலமிக்கோயென்றுசிவாசிவன்கேட்பத் தெளிந்
தவார்வத் [லுரைத்தான்மீண்டே.
தூறியவின்னிலமதுச்சொற் பூங்கொடியோனுரிமறைநூ

உரை.— சொன்னதைக்கேட்டுச் சிவாசிவன்மறுமொழி சொன்ஞன்: நீயுரைத்ததன்மை நல்லதாயினு மத்தன்மையு ளதெனிற் சிலருடற்குறையோடு சிலர்குறையில்லாவழகிய வ டிவோடுபிறப்பதுஞ் சிலர் குறைபாட்டோடுவருந்தவுஞ், சிலர் செல்வத்தோடுவாழவும் பூவுலகிடத்து மாறுது நடக்கு முறையாகையின் முற்பிறப்பிற்செய்தவினையால் வாராதாயி னது நீதியோகேடோ விந்நூலிற்றேறியவுணர்விஞேய் நீ யேசொல்லென் றவன்கேட்பத் தெளிந்தவன்பின்வாயூறிய வின்ப மதுச்சொல்லுடையபூங்கொடியோன்சூசை மீளவு ம் வேதநூலுரைத்தானென்க. (௬௩)

ஆதியிலாவீறுமிலாவிணையின்றியென்றுமுளோனமலன்
றன்றே [லா
பேதியிலாவானவருமெம்முயிரும்படைப்புண்டபின்னீறில்
வோதியிலாமற்றுயிர்கண்முதலீறுள்ளனவென்ன வுரிநூலீ
தாய் [றிலைமையென்றே.
நீதியிலாதவையுமுன்னுதற்படைப்பெம் முயிர்கொண்ட

உரை.— நிகராமுறையோடு தொடக்கமு முடிவுமின்றி யெ
க்காலத்துமுன்னோன் கடவுளொன்றேயென்பதும் வேற்று
மையின்றி வானவருமெம்முயிரும் படைப்புண்டு தொடக்கமு
ண்டாயினு மெக்காலத்து முடிவில்லையென்று மேலறிவில்லா
தமற்றுயிர்கள்யாவிற்குந் தொடக்கமு முடிவுமுண்டென்றும்
வேதத்துரிய நூலாகி நீதிதப்பிவரும் பாவங்களைச்செய்யுமு
ன்னே முந்திப்படைப்புண்டபோது மனிதருயிர்கள்முத
லுடலிற்புகுந்திருந்த தன்மையென்றே வென்றுவெனன்க.
(௬௪)

பார்முகத்துமுதலுடல்புக்கெம்முயிர்கடோன்றியகாற்
பரிவற்றெல்லாச் [சொன்னிற்
சீர்முகத்துவாழரசர்பாவருங்கொல்பன்முகத்துச் சென்று
பேர்முகத்துவயத்திறைமேயானீதியதோற்றியதேற்பிறழாநீதி
மேயார்முகத்துமுன்வினைகளின்றியின்றுமிவ்வுலகிர்த முளதா
மென்றான்.

உரை.—அங்ஙனம் படைப்புண்ட மனிதருயிர்கள் முத
லுடலிற்புகுந்து பூவுலகின் முந்தித்தோன்றினபொழுதே ம
னிதரெல்லாரு மெல்லாச்செல்வங்களையுடையராகித் துன்ப
மின்றி யிராசாக்களாகி வாழாநின்றாரோ வில்லையே, அங்ங
ன நாளுமிழமாய்வந்துதோன்றினாராகி லதுவளவிறந்ததிற
த்துநாத னீதியோ வதுவேநீதியென்று மிக்காலத்தும் பூவு
லகின்மனிதரிடத்துத்தோன்றிய வேற்றுமை முற்பிறப்பின்
வினையின்றிப்பிறழாதநீதியாமென்றான்குறைசையென்க. (௬௫)

முற்பிறப்பின்விடங்கமுறத் தலைவிதிகாரணமென்றான்
முன்பானீதி [தென்னச்
தற்பிறப்பினன்புயர்ந்தோன்வேறுபடவிதியெழுதத்தயவே

சொற்பிறப்பினடங்காதான் றிருவுளமேயெனவன்றான் குரு
சைமீண்டே [யோவென்றான்.
பிற்பிறப்பின்வீற்றியற்றுந்திருவுளமுந்தானென்றாற் பிழை

உரை. — அதற்குச்சிவாசிவன் எம்முதற்பிறப்பிற் றோன்றியவேற்றுமைக் கவனவற்காண்டவன் றலையிலெழுதியவிதியின்வேற்றுமை காரணமாயிற்றென்றான், அதற்குக்குருசை நீதியின்றன்மையா லன்புமுடையகடவு ளொருவனீசனாகவு மொருவனரசனாகவும்வேறுபட வவனவற்குத் தலைவிதியெழுதினது தலையோவென்றான், மறுத்துச் சிவாசிவன் சொல்லிலடங்காத கடவுளின் றிருவுளமே-அத்தலைவிதிவேற்றுமைக்குக்காரணமென்றான். மீளவுங்குருசை-அத்திருவுளமுந்தானே யிக்காலத்துந்தோன்றியவேற்றுமைக்குக்காரணமென்றா லிதுகுறையென்பவோ வென்றானென்க. (கூசா)

வைகறையொத் தள்ளிருளு மொளியுமில சிவாசிவனு
ண் மயங்கிநிற்ப [ன்மிக்கோன்
மொய்கறையற்றுணர்கவெனமுந்நீர்சூழ்பூவலத்தின் முயலி
செய்கறையற்றுயர்நீதித்திறங்காட்டிமைநடிதுண்ட தெளியா
மையல் [ப் பெரியோன்சொன்னான்.
மெய்கறையற்றொளிமொய்ப்பப்பெருஞ்சுருதிவிளக்கேந்தி

உரை.— குருசைசொன்னதற்குத் தப்பும்வழிகாணாமல் விடியற்காலம்வருகையி லடர்ந்தவிருளுந் தெளிந்தவொளியுமில்லாததுபோலச் சிவாசிவனுமுற்றுந்தெளியாமன்மயங்கி யுட்டளம்பாநிற்பப் பெரியோனாகியகுருசை யவனைநோக்கி மனதிற்றிரண்டமாசறும்படிகேளென்று கடல்சூழ்ந்தபூவுலகின்முயற்சியின்மிக்கோனாகியகடவுள் குறையின்றிநடத்திய நீதியின்றிறத்தைக் காட்டினபின்பு சிவாசிவன் பிறந்தநாடுடங்கி யுட்கொண்டமயக்கமாகையிற் றெளியாமன் மனதிற் பொழிந்த விருளற்றொழிய வேதமாகியபெரும்விளக்கேந்தி யுளத்தொளிமொய்ப்ப மீளவுஞ்சொன்னானென்க. (கூஎ)

தெருட்செல்வமிக்கிறையோன்முட்டிலத்தும்பெய்மு
கிற்போற் சிந்திப்பெய்த

பொருட்செல்வம்வறிதென்னப்பூரியர்க்குஞ்சால்பிறைப்பா
ன் பொருவாமாட்சி [மேதந்தான்
யருட்செல்வநசைக்களவாயாவருங்கைக்கொண்டோங்கவய
மருட்செல்வமற்றெவையுமாகியதுவறப்பயனே மதியின்மி
க்கோய்.

உரை. — பூவுலகிற்செல்வரும் வறியருங்கலந்துநிற்பதுக ண்டல்லோ வந்தமயக்கமிது விதைத்தீர்ப்பக்கேள், மிக்கதெ ளிந்த ஞானத்துயர்ந்தகடவுள் முள்ளுள காட்டிடத்தும் பெ ய்தமழையைப்போலத் தானுஞ்சிந்தியெறிந்த பொருளின் செல்வம் வீண்செல்வமென்று பாவிகளிடத்துந்திரளாயிறை ப்பான், நிகராதமாட்சியிற்சிறந்தவருளின்செல்வமோவெனி லவனவன்றன்னுசைக்களவாக வதைக்கைக்கொண்டுயரும்ப டி யெவர்க்கும்வல்லமையைத்தந்தான், ஆகையின் மற்றதெ ல்லாமயக்குவிக்குஞ் செல்வமாகக்கொள்ள மதியின்மிக்கவனு கியநீ யவைமுன்செய்த வறத்தின்பயனாகவருமென்று சொ ல்வாயோவென்றனென்க. (கஅ)

சலத்தெல்லாமோர்நிலையோ தருக்கெல்லாமோர்கனி
யோ தரணியெங்கு [லையும்பல்லாய்க்
நிலத்தெல்லாமோர்விளைவோ நமக்கெல்லாமோர்முகமோ நி
குலத்தெல்லாம்பொதுநின்றுகுன்றாச்சீரறமொன்றே குறை
யொன்றின்றிப் [மைமிக்கார்.
புலத்தெல்லாமாகுமெனிற்புறவிகிர்தமொன்றெண்ணார் புல

உரை. — பெய்தமழைநீரெல்லா மொருவகைநிலத்துச்சே ருவதோ? மரத்திற்கெல்லா மொருவகைக்கனியோ? நிலத்திற் கெல்லா மொருவகைவிளைவோ? நமக்கெலாமொருவகைமுக மோ? இவற்றோடுமற்றதெல்லா மழகினைப்பற்றி வேறுபட த்தோன்றினதுபோல மனிதருந் தம்முள்வேறுபடு நிலையு டையராகி யெல்லாநிலைக்கு மெல்லாக்குலத்திற்கு மெவியாத செல்வமாக நல்லறமொன்றே பொதுவாய்நிற்கும், இது கு றையின்றி யெங்குமெவர்க்குமாகுமென்றமையான் மற்றவிக ற்பமெல்லாஞ் சற்றுமெண்ணு ருணர்வின்மிக்காரென்றனெ ன்க. (கக)

கூறுபடுந்திறத்திவன்கைப்பொருளவற்கே யிவற்கவன்
கைக் கருமம்வேண்டி [ழ்வன்றிக்
வேறுபடுமனுக்குலமேயொருப்படுத்துமிருகையா மிடிவா
கூறுபடுந்திறத்தென்றும்வாழ்ந்தறவோரழத்தீயோர் குவ்வி
ற்காண்கி [பார்.
வீறுபடுநாளில்வருமிருவினைவீயாப்பயன்பின் பில்லையென்

உரை.—மீளவுமொருகண்டசீராயிராமல் வறியருஞ்செல் வருங்கலந்திருப்பது-உலகிற்குநன்மையாம்,அதேனென்னி ல்ளவிட்டாற்போலச் செல்வன்கைப்பொருள் வறியற்குவே ண்டியிருக்கையி லிவன்செய்யுந்தொழில் செல்வற்குவேண் டியதே, ஆகையால் நன்றாய்ப்பார்க்கில் வறுமையுஞ் செல் வமும் வேறுபடாநிற்கு மனுக்குலத்தை யொருப்படத் தழு வாநிற்கு மிருகையாமே,ஆகிலு மறவோரெல்லாஞ்செல்வரு ந் தீயோரெல்லாம் வறியருமாகாமலேனென்னிற் கூறிட்டு ப்பிரித்தாற்போல வுலகி லெப்பொழுது நல்லோர்வாழவுந் தீயோரழவு மனிதர்கண்டா லிதுவேபயனொழிய விறந்தபி ன்பு தீவினைக்கு நல்வினைக்கும்வரு முடியாதவிருவகைப்பய னில்லையென்பா ரென்றுணென்க. (௱)

திறந்தகாவாழ்விதுவாய்த் திறம்பாவான்வாழ்வதென
த் தெளியநாமே [ரின்றி
பிறந்தகா லுயர்குலமுஞ்சீர்த்திறமுந்தெரிந்திங்கண் பிறப்பா
யிறந்தகா லுயர்வான்மேவிணையாவாழ்வுற்றுளு மியல்பொ
ன்றன்றே [ங்குமென்றான்.
மறந்தகா நல்வினைநாஞ்செய்யளவொத்தன்றெவர்க்கும் வழ

உரை.—சொன்னதன்மைத் திவ்வாழ்வுகள்திறமில்லனவா கி வான்மேல்வரும்வாழ்வுகள்மாத்திரங் குறையாதநன்மை யென்று நாந்தெளியும்படி யிப்பூவுலகிற்பிறக்கும்போ துயர்ந்தகுலமு நிறைந்தசெல்வமுந் தமக்குத்தெரிந்துகொண் டு பிறப்பாரில்லாம லிறக்கும்போ தவனவன் வானுலகிலுள் ள நிகராதவாழ்வுகளைத் தான்வேண்டுமளவு மடைந் தங்கே யாளாநிற்குந்தன்மைமாத்திரம் பாவத்தைநீக்கிநல்வினைசெய் தவனாக வெவர்க்குமாகுமென்றான்குருசவென்க. (௱௧)

வேறு.

இற்றெலாமியம்பியு மிவைசிவாசிவன்
முற்றெலாம்விதிவிதி மூயவின்றெமென
வற்றெலாம்பொரு நுமா னதற்கொர்ஞாபக
முற்றெலாந்தீர்ப்பலென் றுரைத்தெழீயினான்.

உரை. — சூதை யிவையெலாவற்றையுஞ்சொன்னபின்பு ஞ் சிவாசிவ னின்னு மவையெலாமாவதற்குக்காரணம் விதி தானேவிதிதானேயென்று மறுத்துச்சொல்ல வதைப்பொ றுக்கமாட்டா தநுமானென்பான் - நானொருஞாபகச்சூட்சி யைக்கொண் டெல்லாவற்றையுந் தீர்த்துப்போடுவேனனெ ழுந்திருந்தானென்க. (௱௨)

பிடித்திழுத்திறுத்திப்பேர் விதியடாவென
வடித்தடித்துதைத்திது விதியடாவென
விடித்திடித்தழற்கநீ விதியடாவென
வெடித்தவர்நகக்கொடும் விதிவிலக்கினார்.

உரை. — நுமானெழுந்து சிவாசிவனைப்பிடித்திழுத்துக் கீழிறுத்தி மனிதரான் மறுக்கப்படாத விதியுண்டென்று யே யிதுபெரியதோர்விதிவினையடாவென்று நன்றாயடித்த டித்துக் காலாலுதைத்துப் பகையிதல்ல விலக்கப்படாதவிதி யடாவென்று மீளவுமிடித்திடிப்ப வவன்கூவென்றழ வழா தே நீசொன்ன விதியின்பயனடாவென்று நகைத்துச்சொ ல்லச் சூழநின்றயாவரும் வெடிப்பச்சிரித்து விலக்கப்படா த வக்கொடியவிதியை விலக்கினானென்க. (௱௩)

கூடன்முகத்தடும்விதிக் கொடுமையீதெனத்
தான்முகத்தொருநகை தருஞ்சிவாசிவ
னான்முகத்துரைத்தவை நுதலித்தேற்றரும்
பான்முகத்தொருமொழி பகர்வகேளென்றான்.

உரை. — சிவாசிவனுமெழுந் தொருபுன்னகைகாட்டி யிவ் விதிமிகவுங்கோணி யென்னைக்கொல்லவிருந்த கொடியவிதி

யாக்குமென்று பின்புசூதைசயைநோக்கிக் கற்றோர்சொன்ன
தையாராய்ந் துறந்தினசந்தேகந்தேறமாட்டாததன்மைத்தி
ன்ன மொருமொழிசொல்வேன், அதைக்கேட்பாயாகவென்
றனென்க. (௱௪)

ஏற்றருமுணர்வினோ யியைந்தநூனலோர்
போற்றருமூழ்வினை யெனப்புகன்றபின்
மாற்றருந்தலைவிதி மறுப்பவோவென்றான்
றேற்றருமயிர்ப்பற வளனுஞ்செப்பினான்.

உரை.—புகழின்மேலுயர்ந்த வுணர்வுடையோனே காக்கப்படாதவூழ்வினையுண்டென்று கற்றோர்சொன்னாரோ, அதின்பின்பு விலகப்படாததலைவிதியில்லையென்று மறுக்கக்கூடுமோவென்றான்சிவாசிவன், அதற்குச்சூதை தேறாதவவன்சந்தேகமெல்லாந்தீரும்படி மீளவுஞ்சொன்னானென்க. (௱௫)

ஊழ்வினையென்னினு முரிமையோர்ந்துழி
மாழ்வினையியற்றநீ வகுத்தவக்கரத்
தாழ்வினையென்பவோ விறைவன்சாற்றிய
கீழ்வினையிலமறை விரும்பிக்கேட்டியால்.

உரை. — சூதை யெங்ஙனஞ்சொன்னானென்னில், கற்றோரூழ்வினையுண்டென்றவு மதினுரிமையாராய்ந்தபோது வதுமயக்கஞ்செய்யு நீசொன்ன தலையெழுத்தின்வினையென்பவோ வல்ல, ஆண்டவன்றந்த வுயர்ந்த வேதநூற்பொருளை விரும்பிக்கேளென்றானென்க. (௱௬)

தீட்டியவிதியலாற் செயப்படாச்செயுங்
கோட்டியவினைவிதிக் கோட்டமாமலால்
வாட்டியமனஞ்செயும் வடுவதோவிவ்வா
றீட்டியவறமற மிரண்டிலாமரோ.

உரை.—எழுதியதலைவிதியுண்டானா லதனைமறுத்துச்செய்யக்கூடா தொருவன்செய்யுங் கோணியவினையென்னும் பாவ மதுதலைவிதியின்வலைவுங்குற்றமுமாமொழியமெலித்த

லவன்மனதின்குற்றமல்லவே, இங்ஙனேயறவினைசெய்தாலு
மது விதியறமொழிய மனத்தறமல்லவாகையா லறமும்பா
வமு மனிதர்க்கில்லையென்னப்படுமேயென்க. (௱எ)

இவ்விதியிலையென வியம்புமூழ்வினை
மெய்வ்விதிமறையினால் விளங்கமாக்களைச்
செவ்விதியிறைவன்முன் சிருட்டித்தாயகா
லவ்விதியிழந்தவர்க் குற்றதோதுவாம்.

உரை. — இத்தலைவிதியில்லாமற் சொன்ன ஊழ்வினையாவ
தென்று மெய்யானவேதநூலால்விளங்கும்படி செவ்வியகு
ணத்துநாதன் முந்திமனிதரைப்படைத்தகாலத்துப் பிழைக்
குந்தன்மையில்லாதபடிக் கம்மனிதர்க்குச் சம்பவித்ததைச்
சொல்வேனென்க. (௱அ)

உருமணிக்குன்றனை யொருவனுணலாற்
றிருமணிக்கொடியனை டெரிவையாக்கினே
னிருமணிப்படலையி னிருவர்சேர்த்தலர்
மருமணிச்சோலைகண் வைத்துவாழ்கென்றான்.

உரை. — ஆண்டவ னுலகம்யாவையும் படைத்தநாளி
லொளிமணிமலையோடொத்தவொருவ னைனன்றித்திருமணி
க்கொடியோடொத்த வொருபெண்ணையுமுண்டாக்கியிருவ
ரை யிருமணிகளை யொருமாலையாகக்கோத்தாற்போல வொ
ருமணமாகச்சேர்த்தி வாசமணிமலர்பூத்த சிங்காரசோலையி
டத்துவைத்து வாழ்வீராகவென்றான் கடவுளென்க. (௱கூ)

காதன்மிக்கிமிழெலாங் கலத்தவாழ்க்கையுண்
டாதன்மிக்காண்டகைக் கிறையதாகவே
சாதன்மிக்குறுமெனத் தகைத்தவோர்கனி
நாதன்மிக்குரைத்துண னிவிலக்கினான்.

உரை. — ஆசையின்மேலு மச்சோலையிடத்தி லின்பங்
களியாவுங்கலந்த செல்வங்களுண்டாகித் தம்மைப்படைத்
தவாண்டவனுக்கீடன் றறிந்துவணங்கி யிடுங்குடியிறை

யாக வொருகற்பனையிட்டுப் பலமரத்தொருமரத்தின் கனி களைத்தடுத் ததனைத்தின்றாற் சாவீரென்றுமிகவுஞ்சொல்லி ய தையுண்ணுதபடி விலக்கினுனுதனென்க. (௱௰)

புண்டகாவிளிவுறுப் புதல்வரோரடுநீர்
மண்டகாநலத்தொடு வாழுவீர்மறுத்
துண்டகாலுவர்ப்புளைப் புலப்புமற்றநோய்
விண்டகாவகன்றுறி விம்முவீரென்றான்.

உரை.—மீளவுஞ் சொன்னபடி நடந்தீராகி னீங்களுமு ங்கள்மக்களாகிய மனிதரெல்லாரு நோயின்றிச் சாவின்றிப் பூவுலகுரிமையின் மேலானசெல்வத்தோ டென்றும்வாழுவீ ராகிலு மென்கற்பனையைமறுத் தக்கனியையுண்டீராகில்வெ றுப்பினையுந் துயரையுஞ் சாவினையு மற்றநோயோடடைந் து மலர்ந்தவிச்சோலையையகன்றுபோ யழாநிற்பீரென்றான் கடவுளென்க. (௱௰௧)

மொய்த்ததோர்வானல முரிந்திழந்துளந்
தைத்ததோர்பழிவிடாச் சவமனுக்குலம்
வைத்ததோரளவில வாழுமோவெனப்
பைத்ததோரரவுருப் படவந்தாயதே.

உரை.— வானவனுய்ப் படைப்புண்டபசாசு தன்னுங்கா ரத்தால் வான்மேன்மொய்த்தநன்மையிழந்து முறிந்து நா கத்தில்விழுந்தமையான் மனதிற்றைத்திருந்த பழியைவிடா ம னீசமனுக்குல மளவொன்றின்றி யிங்ஙனம்வாழுமோவெ ன்று மனிதரைக்கெடுக்கப் படம்விரித்தபாம்பி னுருவாகவந் தங்கேதோன்றிற்றென்க. (௱௰௨)

பேதையாய்ப்பிரிந்தபெண் பிணங்கண்டிக்கனி
கோதையாயுணமையென் குணமிதேயென
வாதையாயிறத்தலாய் வரமிலேமென்றான்
றுதையாய்க்கடவுளென் றரிவைசாற்றினுள்.

உரை.—பேதையாகையிற் புருடனீங்கிப்பிரிந்து விலகின மரத்தினருகேநின்றபெண்ணை வந்தபசாசுகண்டு கோதை

யாய் நீ யிக்கனியையுண்ணாததென்ன? இது மிகநல்லதென்றதற் கவளென்னைப்படைத்த பிதாவென்னுங்கடவு ளிதைத்தின்றாற் றுயருஞ்சாவுமுண்டா யடைந்தவரங்களையிழந்துபோவோமென்று விலக்கினானென்றாளென்க. (வந்தபே யிக்கனியென்றமையா லப்பெண் விலக்கினகனிமரத்தருகேநின்றாளென்று குறிப்பாம், ஆகையா லிக்கேபாட்டுள சொற்பொருளன்றி யுதாரவணியா லிதின்குறிப்புணர்த்திப் பொருணைநிரம்பக்கூட்டிச் சொன்னதென்க.) (௱௰௩)

கழியினமணிநலாய் கலங்கல்தேன்றுளி
தழியினவிக்கனி யருந்திற்சாவிலா
செழியினவுணர்வுறி யிறைவர்மானுவீர்
குழியினவரத்தெனக் கூளிகூறிற்றே.

உரை. — அதற்கு வந்தபேய்-ஒளிபெறக்கழுவப்பட்ட மணிவடிவுள்ளவளே கலங்கல்வேண்டாம், மதுத்துளியுட்கொண்டவிக்கனியுண்டாற் சாகாம லுயர்ந்தவுணர்வோடு திரண்டவரங்களையடைந்து தேவனைப்போல நிற்பீரென்றதென்க. (௱௰௪)

கண்வழிபுக்கவாக் கழுமியக்கனி
பண்வழிமொழியினள் பரிந்துண்டாளது
தண்வழியிமிழலாற் சாவிலாதுமற்
றெண்வழியாடவற் குய்த்துண்மோவென்றாள்.

உரை.—வீணைவாய்க்குரனிகர் மொழியினா ளதனைக்கேட்டக்கனியைப்பார்த்தாள், பார்த்தகண்வழி மனதிற்புகுந்தவாசையான்மயங்கி யொருகனியைப்பறித்துண்டாள், உண்டகனிகுளிர்ந்தினிமைசெய்ததொழியச் சாவுவரவில்லையென்று மற்றொருகனியைப்பறித்துத் தன்னழகியபுருடற்குக்கொண்டுபோயுண்கவென்றாளென்க. (௱௰௫)

கனிமுகங்கண்டுழி வெருவிக்காந்தைதன்
பணிமுகங்கண்டுழிப் பரிவுற்றேங்கினான்
றணிமுகங்கண்டபேய் துறக்கின்மாதிநீத்
தனிமுகங்காண்டியென் றுளத்திற்சாற்றிற்றே.

உரை.—அவனக்கனியைக் கண்டவளவில் லஞ்சாநின்றான், ஆயினுந் தன்றேவிகுளிர்ந்தமுகத்தைப்பார்த்தவளவின் மறுக்கமாட்டாமன் மனநொந்தேங்கினான். அவன்மனத்துள்ளகிலேசத்தைப் பசாசறிந்து நீயிக்கனியை யுண்ணுமன் மறுத்தாயாகி லுன்றேவியிறந்து துணையொன்றின்றித் தனியேநிற்பாயென்று மனதிற்சொல்லிற்றென்க. (௱௰௬)

மண்ணலம்பொறித்ததோர் வதனம்வெஃகியே
யுண்ணலங்கெடவொருங் குலகெலாங்கெடப்
பெண்ணலங்கொடியதோர் பெருநஞ்சாகிமேல்
விண்ணலங்கெடுங்கனி விழுங்கினானென்றான்.

உரை.— அங்ஙன மன்றவன் மண்மேலழகுபெறவெழுதிய வொருமுகவடிவினைவிரும்பித் தன் மனவல்லமைகெடவு மொருங்குட னுலகெலாங்கெடவு மொருபெண்ணழகே கொடியதோர் நஞ்சாகி வான்வீட்டு நன்மைகள்யாவையுங் கெடுத்தொழிக்கு மக்கனியை விழுங்கினா னென்றான்குசையென்க. (௱௰௭)

வேறு.

பொன்னார்மணிப்பூண்சாயலிறேம் பூங்கொம்பனை
யார்திருமுகத்தின் [ஞ்ச
முன்னார்நிற்பாரொன்றெவரு மொழிந்துபனிக்குமுளத்தெ
வன்னாரன்றக்கனியருந்தி யழிவாரென்னவறிந்திறையோ
னின்னாவுகுமப்பணிசெய்வ தென்னையென்றான்விகரனெ
ன்பான்.

உரை.— இவற்றைக் கேட்டயாவரும் பொன்னிற்பதித்த மணியாற்செய்தபூணையு மதுவைப்பொழிந்துபூத்தகொம்பினையுமொத்த மாதரின்முகத்துமுன்னே மயங்காமனிற்பவராரென்று மனதினடுங்கி மெலியாநிற்ப, அவ்விருமுதன்மனிதர் விலக்கினகனியையுண்டு கெடுவாரொன் றுண்டவனறிந்தானே யறிந்து மக்கேடுநுழையும்வழியாக வக்கற்பனைசெய்வானேனென்றான் விகரனென்பானென்க. (௱௰௮)

பூண்டாரரசன்வளர்த்தமதுப் பொழிகாயுண்பாரென்
றறிந்துந் [தெனவோ
தீண்டாதெனவுந்தீண்டினரைத் தெண்டித்திடவுங்கொடி
வேண்டாச்சொல்லாய்சொன்மினென விளம்பிநக்கான்சி
வாசிவன்றான் [ரைத்தான்.
றண்டாவுணர்வின்மறைவாயான் றயவேதளிர்த்துமீண்டு

உரை.— அதற்குச்சிவாசிவன்றானே ஒளிமணிமாலைபூண் டவரசன் றன்கையால்வளர்த்தமரங்காய்த்த மதுவைப்பொ ழியுங்கனியைப் பறித்துண்பாரென்றறிந்தாலு மவனக்க னியைத்தீண்டவேண்டாவென்பதுந் தீண்டினவரைத் தெ ண்டிப்பதுங் கொடுமையோசொல்லு பொருந்தாதசொல் லுடையோயென்றுநக்கான். அதின்பின்பு தாண்டாவுணர் வின்மறைவாயான்ருசை மிக்கதயவோடு மீளவுஞ்சொன்னு னென்க. (௱௰௧)

மானுவிடமுண்டன்றன்னூர் வான்பேறிழந்தேவரமி
ழந்தே
தேனுரலர்க்காவிழந்தேதாஞ் சிந்தைபனிப்பநாமுமழ
நானுநஞ்சுநல்குரவு நகவுநோயுங்கொடுங்கூற்றுங்
கானூர்முள்ளுங்கொல்விலங்குங் கடிதிவ்வுலகிற்படர்ந்தனவே

உரை.— அங்ஙன மவ்விருவ ரன்றுநிகராத நஞ்சினையு ண்டவளவில் வான்வீடடையும்பேறிழந்து வரங்களையிழந் து மதுமலர்ச்சோலையிழந்து தா மனதினடுங்காநிற்ப நாமு மின்றழும்படிக்குப் பலவகைநஞ்சுகளுந் தரித்திரமு நிந் தையு நோய்களுங் கொடியசாவுங் காட்டிலுள்ளமுள்ளுங் கொல்லுமிருகங்களு மிவையெலா முன்னில்லனவாகி யன் று பூவுலகெங்கும் படர்ந்தனவென்க. (௱௨௰)

வாயேயுனுநஞ்சுறப்பெல்லா மருவிவருத்தும்வண்
ணமெனத்
தாயேதாதைகொண்டவினை துணையாநாங்கொண்டழுங்கத்
தீயேவியதிதொடுசெனித்துத் தெளியாவுணர்வின்மனங்கல
ங்க [ம்.
நோயேபாலுண்டிடர்கரத்தி னுடங்கவினையின்விளைவுற்றே

உரை.— வாயுண்டநஞ்சு மற்றுறுப்பெல்லாமுலாவி யெல்லாவற்றையும் வருத்துவதுபோல மனிதர்க்கெல்லா மாதித்தாய்தகப்பனாகிய வவ்விருவ ரன்றுகொண்டதீவினை யவர்க்கு மக்களாகிய நாமெல்லாருங்கொண்டு வருந்தும்படி தீய பாவத்தோடுசென்மித் துணர்விற்றெளியாமன் மனதிற்கலங்கி நோய்களைப்பாலாகவுண்டு துன்பத்தின்கையிலயர்ந்து விடாதவருத்தத்துடனே யத்தீவினையின்விளை வநுபவியாநின்றேமென்க. (௱௨௧)

சொன்னகுரவர்காலமெனத் துதிநூலோர்முற்பிறப் பென்றார்
முன்னம்வராலெமக்குற்ற முதியவினையூழ்வினையென்றா
ரின்னவினையல்லாது தலையெழுத்தும்வேறூழ்வினையுமிலை
யன்னபிறப்பல்லாதிறந்தே யயர்ந்துபிறப்பாரிலையென் றான்.

உரை.— இவையெலாமிங்ஙனேயாகிச் சொன்னவாதித் தாய்தகப்பன்படைப்புண்டகாலமே மனுக்குலத்தின்முதற் பிறப்பாகையி லதனைப்பற்றிக் கற்றோர்முற்பிறப்பென்றார். மீளவு மவ்விருவரன்றுசெய்தபாவத்தா னமக்கெல்லாம்வந்தவினை பழையவினையாகையி லதனையூழ்வினையென்றார். இங்ஙனமொழிய விவ்வினையன்றித் தலையெழுத்தும் வேறேயூழ்வினையுமில்லை, சொன்னவாதித்தாய்தகப்பன் முதற்பிறப்பன்றியிறந்துபிறப்பாரில்லையென்றான்குசையென்க. (௱௨௨)

விரிந்தாய்கதிர்செய்விடியலென விளம்புந்தெளிந்தசி வாசிவனே
பரிந்தாயென்ஞேயுரைவாளாற் பசுமட்பகைவன்கைநாணி
னரிந்தாயுளத்தின்மருளெல்லா மழுதேயுயிரேயூட்டியருட்
புரிந்தாய்புரந்தாய்சுடர்த்தவத்துப் புலமைபுல்லாக்கலைநல் லோய்.

உரை.— இவையாவையுங் கேட்டபின் புதயத்தொளிமுகத்திலங்கும்விடியலொப்பச் சிவாசிவனுமுட்டெளிந்துசொல்வான்: ஐயா! நீயுன்சொல்வாளா லென்றுயர்யாவையு ம

றுத்தாயே, பானைசெய்யுங்குயவ னதனைக்கீழேதோன்றாத
றுக்குங்கயிறுபோல நீயுந்தோன்றா தடியோடென்மனமய
க்கமெல்லாமறுத்தாயே, நீயெனக்கமுதேயூட்டினாய், உயி
ரேயூட்டினாய், தயைபுரிந்திரட்சித்தாயே தவத்தின்விளக்கெ
றிப்ப நால்வகைப்புலமை யடையாக் கல்வியுடையோயெ
ன்றானென்க. (நால்வகைப்புலமையாவன: கவி, கமகன்,
வாதி, வாக்கியென்னு மிவையென்க.) (௱௨௩)

கனியேயுண்டுவந்தவினை கண்ணிக்கற்றோரோதியநூ
லனியேயுணராப்பொய்கலந்தே நன்னீர்கடலுட்கலந்தது
போற் [வோ
றனியேதளிர்ப்பத்தலைவிதியுந் துலையாப்பிறப்பும்புக்கன
வினியேவந்தவினைபரியு மியல்பொன்றிலையோகாணென்றா
ன்.

உரை. — அன்னா ரன்றுவிலக்கினகனியையுண்டதனாற் பூ
வுலகில்வந்தவினையைப்பற்றிக் கற்றோர்சொல்லியெழுதினநூ
லை நன்றாயுணராததனாற் பொய்யேகலந்து நன்னீர்கெடும்ப
டி கடலுட்கலந்ததும்போல வறியாமையா லெமக்குத்துன்ப
ம்வளரும்படி தலையெழுத்துந் துலையாத பிறப்பின்வகைக
ளுஞ் சிலருணர்த்தியிப்பொய்வழங்கினதோ வாகினு மினி
யவ்வினைதீரும்படி வகையில்லையோகாணென்றான் சிவாசிவ
னென்க. (௱௨௪)

விரைசெய்கொடியோன்விழாவணியின் விரும்பிநோ
க்கிமீண்டுய்யப் [டவுள்
புரைசெய்வினையெம்மாலாற்றாப் பொதிரன்பாற்றாவருட்க
மரைசெய்யுடற்கொண்டவதரித்தெம் வடுத்தீர்த்துயர்வீட்
டெமையுய்ப்பக் [யென்றான்.
கரைசெய்கடன்மிக்கிடர்கொண்டு காப்பானென்னமறை

உரை.— சிவாசிவன்றெளிந்து சொன்னதைக்கேட்டு வா
சமலர்க்கொடியேந்தியகூசை மகிழ்ந்து திருவிழாவணியை
ப்பார்த்தாற்போல வவனைவிரும்பிநோக்கிச்சொல்வான்: அ
தின்பின்பு நாம்பிழைக்கும்படி யப்பாவத்தால்வந்தவினை ந

ம்மாற்றிருந்தன்மையல்ல, ஆகிலு மளவிறந்த வன்பிலாற்று த்தையுளகடவுள்தானே தாமனையொத்தவுடலெடுத் தவதரித்து மனிதனாகி நம்முடையபாவத்தைநீக்கி நம்மைவான்வீட்டிற்செலுத்தியேற்றும்படி கரைகாணாக்கடலினு மிக்கதுயர்களைத்தானேயடைந்து நம்மையிரட்சிப்பானென்றுவேதத்திலெழுதப்பட்டதென்றான் சூசையென்க. (௱௨௫)

என்னாட்டெந்நாளெக்குலத்தே யிறையோன்பிறப்பா
னென்னவன்னா [லோர்
னன்னாட்டொளிப்பத்திருவுளமென் றறிந்தசூசைமறைநூ
முன்னாட்சொன்னநிலைநோக்கின் முகைத்தவென்னாட்டெ
ன்குலத்தே
யின்னாட்கடவுள்மகனாகு மென்பதுரியவியல்பென்றான்.

உரை.—அதனைக்கேட்டசிவாசிவன் மிக்கவாசையோ டாண்டவனெந்நாட்டி லெந்நாளி லெக்குலத்தின் மனிதனாய்ப்பிறப்பானென்றான், அதற்குச்சூசையவதரித்தநாதனை யப்பொழுதுதான் கையில்வைத்திருந்தாலுந் தானின்னானென்றுகாட்டாம லெசித்துநாட்டிலொளித்திருப்ப வவற்குத் திருவுளமென் றறிந்ததனா லவதரித்தநாத னிவன்றானென்று சொல்லாமல் வேதத்திற்சொன்னதன்மைபார்க்குமிடத்து மலர்ந்தவென்னாட்டி லென்குலத்தி லிக்காலத்தாண்டவன் மனிதனாய்ப்பிறந்தா னென்னத்தகு மென்றான் சூசை யென்க. (௱௨௬)

பருதிமுன்னியிரவஃகப் பருவமின்றிவனம்பூப்ப
விருதிநாக்காயோர்நவமீ னிலங்கவிறையோனடிவீழ்ச்சி
கருதியரசர்மூவருறக் காட்சியமுதர்கண்டுவப்பச் [ன்.
சுருதிநாதன்பிறந்ததெனத் துணிவிற்றெளிந்தார்சிலரென்றா

உரை. — ஆண்டவன் மனிதனாய்ப்பிறந்தானென்பதற்குக் காரணஞ்சொல்லிக்காட்டி யிக்காலத்தொருநாள் சூரியனுதயநேரத்துமுந்தி யன்றிராத்திரிகுறையவும் பலமரங்கள்பருவமின்றிப்பூப்பவு நூலையுணாக்குநாக்குப்போல வொருநவமீன் வானத்திற்றோன்றிவிளங்கவும் பிறந்தநாதனைவணங்க மூவரசர்தேடிவரவுஞ் சிலவிடையர் கண்டகாட்சியான் மகி

மூவு மிவையெல்லாவற்றையு மனதிலெண்ணி வேதநாதன்ம னிதனுய்ப்பிறந்தானென்று சிலரோதெளிந்து நிச்சயமாகக் கொண்டாரென்றான் ருசையென்க. (ருஉஎ)

காஞர்கொடிமேற்பூவனைய கரத்திற்பொலிந்ததிருமக னு [பத்
மாஞவுறுதிமனத்துணைப்ப மருடீர்ந்தன்றான்றெளிந்துவப் தேஞரிந்நாடிறைஞ்சியபொய்த் தேவரொளித்ததிறங்கண் டே [ன்.
னிஞறொழவான்வேந்துதித்தா னென்னவுளத்திற்றேறுகின்ற

உரை. — வாசபூங்கொடிமேற் பூத்தமலரொப்ப மலர்க் கொடியோன்ருசை யப்பொழுதுகையிலேந்திய திருக்குமா ரனு நிகராதவுறுதிகளைச் சிவாசிவன்மனதி லுரைத்தமையா லவன்மயக்கந்தீர்ந்து முற்றுந்தெளிந்துமகிழாநிற்பச் சிறி துகாலத்துமுன்னே யிந்நாட்டில்வணங்கப்பட்ட பொய்யா னதேவர்களெல்லா மொளித்தகாரண மிப்பொழுதேகண்டே ன், ஐயமின்றி மனிதர்வாழும்படி வானுளு மாண்டவன்ம னிதனுய்ப்பிறந்தானென்று தானுநிச்சயமாகக்கொண்டுதே றினனென்க. (ருஉஅ)

வேறு.

இற்றெலாமியம்பினு னிக்குலாம்பதாகையான்
மற்றெலாமனத்துளாய் வானநாதனேதலா
னுற்றெலாஞ்சிவாசிவ னேங்கியோங்குஞானமுட்
பெற்றெலாம்வெறுத்தனன் பீலிபெற்றபாணியான்.

உரை.— அங்ஙன மிவையெலாந் தேன்மலர்க்கொடியோ ன்ருசைசொல்ல மற்றயாவையும் வானநாத னவன்மனத்து ணர்த்தியமையாற் சிவாசிவனெல்லாவற்றையு முட்கொண் டுணர்வினுயர்ந் துயர்ந்தஞானமேயடைந்து மயில்விசிறி யேந்தியகையினனுகி யெல்லாவற்றையும் வெறுத்தெறிந்தா னென்க. (ருஉகூ)

கரமணிந்தசூலவேல் காதணிந்தகுண்டல
முரமணிந்தவக்கணி யுள்ளணிந்தமாசொடுஞ்

சிரமணிந்தகொக்கிறை தீதணிந்தகோலமாயீப்
புரமணிந்தமற்றெலாம் போட்டுதைத்திரட்டினன்.

உரை.—கையிலேந்திய மயிலிறகன்றிச் சூலமுங் காதின் குண்டலமு மார்பினக்குமணிகளுந் தலையிலணிந்த கொக்கிறகுகளு மற்றயாவையுந் தீவினைவிளைவித்தகோல மென்று மனதின்முற்கொண்ட மயக்கத்தோடெறிந்து காலாலுதைத்துமுழங்கிச் சொன்னான் சிவாசிவனென்க. (௱௫௰)

உற்றகோலம்வீணடா வொண்டவங்கள்வீணடா
கற்றநூலும்வீணடா கையுதாரம்வீணடா
பெற்றபேறும்வீணடா பேரறங்கள்வீணடா
மற்றயாவும்வீணடா மண்ணைபோற்றலாலடா.

உரை.—நானிந்நாள்மட்டுந் தேவரென்று பசாசுகளைவணங்காநின்றதனு லணிந்திருந்தகோலமுஞ் செய்ததவங்களும் படித்தநூலு மீந்தகொடையும் பெற்றகீர்த்தியு நடத்தினவறங்களு மற்றதெலாமும்பயனொன்றின்றி வீணாயினவென்றானென்க. (௱௫௧)

ஆதியீறிரண்டிலோ யாசிலோயமைந்தமுப்
போதிலோயுறுப்பிலோய் பொற்பெலாமணிந்துளோய்
கோதிலோயெதிர்ப்பிலோய் கோவணங்குமொன்றுளோய்
நீதியாதிநீரொலா நீர்த்தணிந்தநாதனே.

உரை. — துடக்கமுடிவென் றிரண்டுமின்றி முக்குற்றமின்றி முப்பொழுதின்றி யுறுப்புடலின்றிக் குறையொன்றின்றி யெதிர்நிகரின்றி யழகியயாவையுமணிந்தோய் வான்மேல் வணங்கப்படுவோய் நீதிமுத லெலாநன்மையியல்பாகக்கொண்டநாதனேயென்று சிவாசிவன் மெய்க்கடவுளைவாழ்த்தத் துடங்கினனென்க. (௱௫௨)

இங்குமங்குமெங்குமொன் றென்றுநின்றெருங்குளோய்
தங்குகின்றவெங்குறை தாங்கிநீங்கிவீடிட
வங்கமொன்றியுற்றியே யங்குருதுநானிவண்
பொங்குகின்றவின்பொடுன் பூம்பதங்கள்போற்றினேன்,

உரை. — எவ்விடத்துமொன்று யொவ்வோரிடத்து முழுதாய் நின்றகடவுளே யடியேன்கொண்டதீவினை நீயேதாங்கியறுத்தொழித் தென்னை வான்வீட்டிற்செலுத்தும்படி யவதரித் துடலோடு மனிதனாய்ப்பிறந்தாயே, நீபிறந்தவிடத் தடியேன் வரமாட்டா திங்கேநின்றுமிக்கவின்பத்தோ டுன் பூந்திருவடியைவணங்குகின்றேனென்று விழுந்தானென்க. (௩௬௫)

தீயளித்தகாமுறித் தீதமிழ்ந்திமூழ்கியான்
பேயளித்தமாவிருட் பெற்றருச்செருக்குறித்
தாயளித்தவன்பினுஞ் சாற்றருந்தயாபரா
நீயளித்தகைக்கொடு நீசரைக்குரங்கினேன்.

உரை. — அழலிற்பொங்குங் காமத்துப் பாவத்தமிழ்ந்தி யுண்முழுகாநின்றவடியேன் பேய்களான்மயங்கி யிருண்ட மனதிற் பொங்கியவாங்காரத்துடனே தெளியாமலிரட்சித்த தாயி னன்பின்மேலுஞ் சொல்லிலடங்காத தயாபரனே நீயேதந்தகையாற் றேவனொன்று நீசபேய்களை வணங்கினேனேனென்றழுதானென்க. (௩௬௬)

கோவில்வீற்றிருந்தநீ கோதுகொள்ளெனைக்கொள
மேவிவீற்றிருந்தியான் வீட்டில்வாழமைந்தனாய்ப்
பூவில்வீற்றிருந்திராப் பொங்கரந்தைபூண்டியோ
நாவில்வீற்றிருந்தநூ னடிவாழ்த்தவன்பிதோ.

உரை. — வானுலகாண்டு வீற்றிருந்தநீயே பாவியென்னைக்கைக்கொள்ளத்தேடிவந்து நான் வான்வீட்டில்வீற்றிருந்து வாழும்படி நீ மனிதனாய்ப் பூவிடத்தாண்டிராமல் மிக்கதுயரைக்கொண்டாயோ? கற்றநூலோரும்வாழ்த்தத்தகு மன்பின்றன்மையிதோ வென்றானென்க. (௩௬௭)

ஆசெனும்பெருங்கட லாழ்ந்துநீந்தியேறினேன்
றேசெனும்பெருங்கதிர் செய்தெறித்தசோதியோய்
மாசெனும்பெருங்கறை மாறினுயெனுநினைத்
தாசெனும்பெரும்பெயர் தாங்கிவாழ்த்துவேனென்றான்.

உரை. —நானே பாவமென்னும் பெருங்கடலிலமிழ்ந்தி யிருந்தேன், இன்று நீந்திக்கரையேறினேனே. ஒளிப்பெரு ங்கதிரையெறித் தளத்துவிளங்கியபரஞ்சோதியே, தீவினை யாகியமாசெலா மென்னுளத்திற் றுடைத்தாயே. இனியுன் றூசனென்னும் பெருமையிற்சிறந்தபெயரைப்பெற் றேயா ம துன்னை வாழ்த்தாநிற்பே னென்றான் சிவாசிவனென்க. (௱௬௬)

வேறு.

தானுயிர்த்ததவத்திறற்
கானுயிர்த்தகொடிக்கையா
னானுயிர்த்தவுருப்பிரான்
மானுயிர்த்தருள்வாழ்த்தினான்.

உரை. — செய்ததவத்தான் மலர்க்கொடியடைந்த சூசை யிவையெல்லாவற்றையுங்கேட் டடலோடுநின்ற நாதனாகிய திருக்குமார னவற்குச்செய்த பெருந்தயையை மனதில்வாழ் த்தினனென்க. (௱௬௭)

தூக்கினான்விழிதூவுநீர்
நீக்கினானிறைமார்புற
வீக்கினான்விளையார்வமாய்
நோக்கினான்மறைநூலினான்.

உரை. — அதின்பின் கீழ்விழுந்துகிடந்த சிவாசிவனைக் கையாற்றூக்கிக் கண்ணீரைத்துடைத்து மார்போடிறுகத்தழு விமிக்கவன்போடுபார்த்தான் வேதநூலோன் சூசையென்க. (௱௬௮)

உருவொளித்துறைநாயகன்
மருவொளித்தமலர்க்கணாற்
றிருவொளித்ததெருட்கொடு
பொருவொளித்தருள்போக்கினான்.

உரை. — எடுத்தவுடலி லொளித்திருந்த தேவகுழந்தையு மதுவுட்கொண்ட தன்மலர்க்கண்ணா லவனைப்பார்த்த நோக்

கத்தோடு திருஞானத்தெளிவு நிகராததயையு மவன்மனத்தி னுட் போக்கிறனென்க. (௱௩௯)

திறங்கொளீத்தெருடாசனுட்
பிறங்கொளீடுறுபெற்றியாற்
புறங்கொளீப்பொதிர்யாவரு
மறங்கொளீத்தெளிவாயினர்.

உரை. — அங்ஙனந் திறங்கொண்டுதெளிந்ததாசன் மன தில்விளங்கிய பெருமையடைந்ததன்மையாற் புறத்துச்சூ ழத்திரண்டுநின்ற மற்றயாவருங்கண்டு நல்லறத்தாசைகொ ண்டு தாமுந்தெளிந்தாரென்க. (௱௪௰)

கனைவருங்கனமின்னென
வினைவரும்பொருள்மேவிலார்
புனைவரும்புகழ்வேதநூ
லனைவருந்துதியாடினர்.

உரை. — இடியோடுதோன்றியொழியு மேகமின்னலைப் போல வினையோடுவந்தொழியு மிப்பொருட்செல்வங்களை விரும்பாமற் புனைதற்கரியபுகழுளவேதத்தை யனைவருந்துதி த்துரைத்தாரென்க. (௱௪௧)

நஞ்சினோடுறுநல்லமிர்
தெஞ்சிநோயிடமாய்த்தெனத்
துஞ்சினர்துணிவோடுபொய்
விஞ்சிவேதநஞ்சாயதே.

உரை. — நஞ்சோடுகலந்தவமிர்தமேகெட்டு நோய்செ ய்துயிரைக்கொல்வதுபோல வமிர்தமொப்ப வாண்டவன் றந்தவேதநூலுந் தூங்கிக்கண்டகனவிற் றுணிந்தவர்தன்மை போ டாராயாம லதிலேபலர்கலந்தபொய்களே மிஞ்சிப் பொய்யானவேதமாகி யுயிரைக்கொல்லு நஞ்சாயிற்றென் றுரைக்க. (௱௪௨)

மெய்வகைப்பொருள்வீக்கிய
பொய்வகைப்பொருள்போர்த்தில

மைவகைப்பொருள்மண்டுள
மூய்வகைப்பொருளொன்றிலா.

உரை. — அங்ஙனம் வேதத்தின்மெய்யோடு மனிதர்கலந்தபொய்யைப்பிரியா தெல்லாமொருங்குட னுட்கொண்டதனுன் மனதின்மயக்கமண்டி மனிதருயிர் பிழைக்கும்வழியில்லாயிற்றென்று சொன்க. (௩௪௩)

இருளடர்ந்தவிராவறத்
தெருளடர்ந்தொளிசென்றென
வருளடர்ந்திவனோதியான்
மருளடர்ந்தபொய்மாய்ந்ததே.

உரை.— இருண்டவிரா வற்றொழியும்படி தெளிந்தபருதியொளியுதித்தாற்போலச் சூசைமாமுனிவந் தருட்புரிந்து சொன்னவுணர்ச்சிகளான் மயக்குவித்த பொய்யெலா நீங்கியொழிந்தனவென்று சொன்க. (௩௪௪)

வேறு.

பேர்நலமணிக்குன்றுச்சிப் பெருவிளக்கிட்டதேபோ
சீர்நலம்பொலிமூதூரிற் சிவாசிவன்விளங்கித்தோன்றக் [ற்
கூர்நலந்தெளிந்தகாட்சி கொளீச்சிலர்குளிர்ப்பத்தேறி
யார்நலம்புதைத்தமெய்ந்நூ லருச்சனைகொண்டதன்றே.

உரை. — அங்ஙன மழகியபெருமணிமலையி னுச்சியில்வைத்த பெரிதோர்விளக்குப்போலச் செல்வத்துயர்ந்த விரவிமாபுரத்திற் பெயர்பெற்ற சிவாசிவன்றிரும்பி மெய்வேதத்தின்முறையில் விளங்கித்தோன்றியதனுற் கூர்ந்துதெளிந்தகாட்சியிற் சில ருட்குளிரத்தேறி நன்மைநிறைந்த மெய்யானவேத மன்றே யந்நகரிடத்து வணங்கப்படத்துடங்கிற்றென்க. (௩௪௫)

குவிமதத்தயிர்ப்பிற்கற்றோர் குழாங்குழா நகரத்தெங்கு
கவிமதத்தெழுந்தவந் நூற் கடக்கிலாதலையவோர்தாள் [ங்

சவிமதத்தலர்ந்தசோலைத் தடத்துறும்வளனைக்கண்டு
செவிமதத்தீஞ்சொல்வெஃகிச் செல்கவீங்கடிகளென்றார்.

உரை.—அங்ஙனமவ்வேதம்வழங்கினதிறன் மிக்கவயிர்ப்போடு கற்றோரெல்லாருங் கூட்டங்கூட்டமா யந்தகரெங்குங்கூடிக் கவிஞர்கருத்தைக் கடந்தெழுந்த வவ்வேதநூலளவறுத் ததனைக்கடக்கமாட்டாது தம்முள் ளலையாநிற்ப வொருநா ளழகுமிக மலர்பூத்தசோலையிடத்துச் சூசைவருகையி லவனைக்கண்டு கேட்டசெவிகளிகூர்வதற்குக் காரணமாகிய வவன்றீஞ்சொல்லைக்கேட்பவாசையா லெதிராய்ப்போய்ச் சுவாமி யிங்கேயெழுந்தருளவென் றழைத்துக்கொண்டுவந்தா ரென்க. (௱௪௬)

நாஞ்செய்தகுறையோபன்னாளிவட்டொழுதேவர்
தாஞ்செய்தகுறையோவிக்கா றளருணர்வெஞ்சவையென்
றாஞ்செய்தமலர்கொய்யிந்நா டகன்றொருங்கொளித்ததென்னோ
தேஞ்செய்தமதுச்சொனல்லோய் செப்புதியென்றார்மாதோ.

உரை.— வந்தசூசையைப்பார்த்துச் சூழநின்றயாவருஞ் சொல்வார்: நாஞ்செய்தகுறையோ நெடுநாளிங்கே நாம்வணங்கினதேவர் செய்தகுறையோ காரணங்காணுதுணர்விளைந்தளர்ந்து மெலியும்படி யிக்காலத்திருந்தாற்போல நீர் மலர்பூத்தவிந்நாட்டைவிட்டுத் தேவரெல்லா மொளித்ததேதோ வாசமதுவி னினியசொல்லுடையோய் நீயேசொல்வாயென்று வினவினாரென்க. (௱௪௭)

உய்வகையின்றிமற்றோ ருழியடுத்துய்வாரென்று
பொய்வகைமுறுவல்காட்டிப் புகன்றனன்சூசையம்
மெய்வகையருளிக்கேண்மோ முதிர்தவத்திறைவவென்று
மெய்வகையுணர்வுநாடி வினதத்தன்சொன்னான்மீண்டே.

உரை.—அதற்குச்சூசை பொய்ச்சிரிப்புக்காட்டி யுங்கள் தேவ ரிங்கேபிழைப்பின்றி வேறோரிடத்தண்டிப் பிழைக்கப்போனாராக்குமென்றான். மெய்யையுணர்வதற்காசையோ

டு விஞதத்தன் சுவாமி நமக்குச் சந்தேகந்தோன்றின வகை யை மனம்பொருந்திக்கேட்பாயாகவென்று மீளவுஞ்சொன்றுனென்க. (௩௪௮)

எல்லையிற்றுயர்ந்தோர்நாத னிவண்வரமற்றத்தேவ [த்
ரொல்லையிற்றளர்ந்தவண்ணத் தொருங்கொளித்தகலுமென்ன
தொல்லையிற்பொறித்தவெந்நூல் சொன்னவாறிந்நாளாகி
வல்லையிற்பொதிர்ந்தவையம் வளர்வினையாயிற்றென்றான்.

உரை. —அளவிறந்துயர்ந்த வோர்நாத னிந்நாட்டில்வந்தவளவின் மற்றத்தேவரெல்லாருமுடனே தம்வலிதளர்ந்தாற்போல வொருங்குடனொளித் திந்நாட்டைவிட்டகலுமென்று பூருவத்தெழுதப்பட்ட வெங்கள்நூலிற்சொன்னபடி யிந்நாளிலாயிற்றென்றுகண்டமையான் மிகவுஞ் சந்தேகம்வளர்ந்ததென்றான் விஞதத்தனென்க. (௩௪௯)

விஞ்சியவயத்தொன்றாகி வென்றனகடவுடானோ
வஞ்சியபலரோவேண்டு மறைதியேயென்றான்சூசை
யெஞ்சியவெமக்கேவேண்டு மிருவகையென்னமுன்பான்
றுஞ்சியகனவிற்சூட்சி சூசைகேட்டுரைத்தான்மீண்டே.

உரை. —அங்ஙனமாகையின் மிக்க வயத்துயர்ந் தொன்றாய்நின்று மற்றத்தேவரையோட்டிவென்ற கடவுள்வேணுமோ வஞ்சியோடின பலதேவர்வேணுமோவென்றான் சூசை. மெலிவுளவெங்களுக்கவ்வொருவனு மிப்பலரும்வேண்டுமென்றான் விஞதத்தன். தூங்கினவன் கனவிற்கண்டசூட்சியொத்த விம்மொழிகேட்டசூசை மீளவுஞ்சொன்னுனென்க. (௩௫௰)

குலநலமெண்ணுவாய்ந்த குணநலமுணராக்காவ
வினலம்விற்குமாத ரிழிப்படுநினைவீதன்றே
வலநலம்புணர்மெய்த்நாதன் மரபுறுதொருவனன்றிப்
பலநலம்பிரிந்ததேவர் பணிதல்பேதமையாமென்றான்.

உரை. —உரிமையைப்பாரா தெல்லாரையும்வேண்டுமென்பது குலமுங்குணமும்பாராம லெவர்க்குந்தம்மழகினை

௰௧

கிற்கு மொருகாவலில்லாத பொதுமகளிர்நீசநினைவிதுதானி ல்லோ, அளவிறந்தவல்லமையுடைய மெய்க்கடவுளுக்குரிய வியற்கையையாராயாமலொருவனன்றிப்பலதேவரைவணங் குவதே யறியாதபேதமையென்றான்குசையென்க. (௱௬௧)

குருசிலர்க்கமைச்சர்வீரர் கொள்கையின்முதல்வற்சூழ்ந்து
வருசிலர்தேவரென்னில் வழுவதோவென்னவன்றான்
குருசிலர்நாமந்தானுங் கோவுரிப்பணிவுஞ்சூழ்ந்து
வருசிலர்க்கிட்டகாலை வழுவன்றேவென்றான்குசை.

உரை.—அதற்கு விஞ்ஞதத்தன் அரசரைச்சூழ்ந்த மந்திரிமாரும் படைவீரரும்போல முதல்வனாய்நிற்குங் கடவுளைச் சூழ்ந்த பலருண்டென் றவரைத் தேவரென்றுவணங்கினாற் குறையோவென்றான். அதற்குச்குசை மந்திரிகளும் வீரர்களு மரசரென்னும்பெயரிட் டரசற்குரியவணக்கமு மவர்க்குச் செய்தாற் குற்றமல்லோவென்றான். (ஆகையான் முதற்கடவுளைச்சூழ்ந்தவருண்டாயினு மவரைத்தேவரென்னவுந் தேவர்க்குரியபூசைசெய்து வணங்கவு மொண்ணாதென்பதாயிற் றென்க.) (௱௬௨)

இரவலர்மாட்சியொப்ப வீடறிவின்மைகாட்டும்
புரவலர்சூழ்ந்தவைவேற் பொருனருமமைச்சர்தாமு
முரவலநாதன்றன்னு ணரவுஞ்செயவும்வல்லாய்ப்
பரவலநாளும்வேணும் பரிசிலாதிழிவாமென்றான்.

உரை.—ஆயினுங் கடவுளுக்கு மந்திரிகளும் படைத்தலைவருமில்லை. அதேனெனில், அரசர்படைவீரரையு மந்திரிகளையும்வைத்திருப்பது பெருமையெனும்பெயர் பெற்றதன்றிப் பலரிடத்திரப்போர் பெருமையதாகி யரசர்தங்கைத்திறத்தின்மையைக்காட்டும்படைகளே, அவரெல்லாவற்றையு முணரா தறிவின்மையைக்காட்டு மந்திரிகளே, அளவிலவல்லமையுள்ளகடவுளோவெனிற் றன்னாலெல்லாவற்றையு மறியவுஞ் செய்யவும் வல்லவனாகையி லவற்கு மற்றொருவனுணரி

வும் வேலு முதலியாகவுண்டென்னி லவற்கியலாம விகழ்ச்சியாமேயென்றான் சூதைசயென்க. (௨௫௩)

அரும்பொருளிருளிற்றேடி யயர்வதென்றேவதன்மை
வரும்பொருளறியாதன்றே மருண்டசொல்வளர்த்திவேதந்
தரும்பொருளனைத்தும்வாய்ந்த தவவிளக்கெறிப்பக்கண்டோ
யரும்பொருளிறைமைசொல்லா யென்றனன்வசிட்டனென்பான்.

உரை. —இவற்றைக்கேட்டு வசிட்டனென்பான் விநுதத்தனை நோக்கி யிருட்டறையுளரும்பொருளைத்தேடி வருந்துவதென்ன? தேவகுணங்களையறியாமலல்லோ மயங்கினவிச்சொல்லை வளர்த்தாயென்றபின்பு சூதையைப்பார்த்து நீசெய்தமிகுந்ததவமேவிளக்காயெறிப்ப வேதப்பொருள்கள்யாவையுங்கண்டவனே யரும்பொருளாகிய தேவதத்துவத்தைச் சொல்லிக்காட்டுவாயென்றானென்க. (௨௫௪)

வேறு.

மற்றவரினிதீதடிகளேயென்னமலர்மதுவாயினனருளிக்
கற்றவர்பருகப்பகர்குவபுகழ்வ காமுறிக்கேட்டனர்களிப்ப
முற்றவர்தெளிகமுளரிவாய்மதுவின் முகைப்பனகுளிர்ப்பனசலமற்
றுற்றவர்வான்மேலுய்ப்பனதெய்வ வோதிகளுவவியவவித்தான்.

உரை. — வசிட்டன்சொன்னபடி சூழநின்றமற்றவருந் தேவனொருவனோ பலரோவென்றறியத் தேவதத்துவங்களையறிவித்தல்வேண்டுமையாவென்றுசொல்ல மதுமொழிவாயினன் சூதை தயைபுரிந்தருளி யுணர்த்தத்துடங்கினவையறிவிற்கொத்தனவாகையாற் கற்றோரொவரு மினிதாய்நுகரவு நுகர்ந்தபின்றமேபிறர்க்குச்சொல்லவும் புகழவுந் தகுவனவாகிப் பொருந்திக்கேட்டவனைவரு மகிழவுஞ் சூழநின்றவர் முழுதுந் தெளியவுஞ் செய்வனவாகி மதுவாய்த் தாமரையொப்ப மலர்ந்தனவுங் குளிர்ந்தனவுஞ் சலஞ்சாதியாமலு

ற்றுக்கேட்டயாவனாயும் வான்வீட்டிற் செலுத்தத்தருவன வும் பலதேவவுணர்ச்சிகளைச் சொல்லத்துணிந்தானென்க. (௱௫௫)

மாறிலநன்மைநிறைவுமோர்குறைமுற் றின்மையுந்தொழத்தகுந்தெய்வ
மாறிலவியல்பேவேரிதாய்க்கிளைத்துவரும்பலசினையெனநூலோ
ராறிலக்கணங்களுரைத்தவையுள்ளே ஞண்டகையிலனலனென்றார்
தாறிலகூடாமையவரிந்தன்ன சாற்றுதும்புன்சொலால்வையே.

உரை. —மட்டின்றியெல்லாநன்மைநிறைவு மெல்லாக் குறையின்மையுமென் றிவ்விரண்டே யெவரும்வணங்கத்தகு மெய்க்கடவுட்குரிய மாறுதகுணமதாமே. இதுவேராகக் கொண்டு கிளைத்தபலகொம்புகளின்றன்மையா விக்குணத் தைவிரித்து நூலோர் மெய்யானதேவனையறிவதற் காறிலக்க ணங்களைச்சொல்லி யவையெலாமுடையோன் றேவனெயென்றார், அவற்றுளொன்றாயினுங் குறைந் தெல்லாவற்றையு மில்லாதவன் றேவனல்லவென்றார். ஆகையா லளவிறந்த கதிருளசூரியனை மையாலெழுதினாற்போல நானு மென்புற் சொல்லா லத்தேவாறிலக்கணங்களைச் சொல்லிக்காட்டுவே னென்றான் குசையென்க. (௱௫௬)

தன்வயத்தாதன்முதவிலனாதல் தகும்பொறியுருவிலனாதல்
மன்வயத்தெல்லாநலமுளனாதல் வயின்றொறும்வியாபகனாதல்
பின்வயத்தின்றியொருங்குடனனைத்தும் பிறப்பித்தகாரணனாதல்
பொன்வயத்தொளிர்வான்முதலெலாவுலகும் போற்றுமெய்யிறைமையினிலையே.

உரை. — தன்னாலாதலுந் துடக்கமின்றி யாதலு மைம் பொறிக்குரிய வுருவிலனாதலு நிலைபெற்றசகலநன்மையுளனா தலு மெங்கும்வியாபகனாதலுந் தன்னையல்லா தோருதவியி ன்றி யெல்லாவற்றையு மொருங்குடன்படைத்தவாதிகாரண னாதலுமென் றிவ்வாறிலக்கணங்கள் பொன்னொளிர் வானுல

குமுத லெவ்வுலகும்வணங்கத்தகு மெய்க்கடவுளின் றேவதத்
துவமிதே யென்றானென்க. (௱௫௭)

மிக்கதுந்தன்னோ டொப்பதுமில்லா மேன்மையேயி
றைமையினியல்பா [யே
யொக்கதுபடைத்தகாரணமின்றி யொருங்குதானாதலுநிலை
தக்கதுந்தன்னாலன்றிமற்றொருவன் றடக்கையால்வரின்வழு
வென்னத் [றே.
தொக்கதுநீக்கித்தன்வயத்தாதல் சொல்லியவாறினும்முதற்

உரை.—தனக்குமிக்காருமின்றி யொப்பாருமின்றி நிற்கு மேன்மையே தேவதத்துவத் தியல்பாகையி லுள்ளதேவதத் துவத்தைப்படைத்த காரணமின்றிக்கடவுடானாதலு நிலைபெ றுதலு முழுதுந்தன்னாலாகுமொழிய வேறொருவனால்வந் தாற் கடவுளுக்கிதுகுறையாமென்றமையாற் குறையொன் றில்லாதகடவுள் தானாயிருப்பது சொன்னவாறிலக்கணங்க ளின் முதலிதுவென்றானென்க. (௱௫௮)

அன்னவாய்த்தன்னையாக்கினோனில்லா தாயினகாலமுமி
ல்லா [ளதா
துன்னவாயாகிவந்தநாளுளதேற் றோற்றுவித்தியற்றினோனு
மென்னவாய்நிலையாச்சிறப்புமெய்யிறையோ னின்றுள
னன்றிலனென்னோ [டந்தோன்.
மன்னவாயென்றுந்தானுளனாகி மாய்ந்தநாளனைத்தையுங்க

உரை.—அங்ஙனங் கடவுளையாக்கின காரணமில்லாமையா ற் கடவுளாகித்துவக்கினகாலமுமில்லை, இங்ஙனே யிராமற்க டவுள்தோன்றின வழியுண்டாகித் துவக்கிவந்தநா ளின்னை தென்றிருந்தா லவனைத்தோற்றுவித்தகாரணமுமுண்டாமெ ன்றமையா னிகரிலாச்சிறப்பிற்பொலிந்தகடவு ளிக்காலத்து ளனாயக்காலத்திலனாயினானென்றுசொல்லாம னிலைகொண் டெக்காலத்துமுள்ளனாகி யநாதியாகி யிறந்தகாலங்கள்யா வையுங் கடவாநின்றோனென்றானென்க. (௱௫௯)

எல்லையேயிதுவோர்காரணமிறைவற் கில்லதாலெல்லையு
மில்லைக்

குல்லையேநின்றெவ்வோருறுப்பெல்லை கொண்டனவில்லதே
ல்வடிவு
மில்லையேயவ்வாறளவுளதன்றி யிடரிடுமுருவுடலென்ன
வல்லையேமிக்கோரளவிலாற்கில்லை வழங்குமைம்பொறிக்குரி
வடிவே.

உரை.—கடவுட்கொரு மட்டிடும்படி யவனைப்படைத்த காரணமில்லாமையா லவற்குமட்டுமில்லை, சிறுமைபெருமை யென்றதற்கதற்குரியவளவோடுநின் றோருடலையுண்டாக்கும் பலவுறுப்புக ளொவ்வொன்று தன்னெல்லைக்குள்ளே நில்லாதேபோனால் வடிவுமில்லை, ஆகையான் மட்டில்லாதகடவுளுக்குடலுமில்லை, இதுவுமன்றி யுடலென்னப்பட்டயாவுந் துன்பம்விளைவிக்குமாகையால் வல்லமைமிக் கொரு துயரில்லாதகடவுளுக் குடலுமில்லை, ஐம்பொறிக்குரிய வடிவுமில்லை, ஆகையா லாண்டவன் கண்ணுக்குரியசோதியுமல்ல, மூக்குக்குரிய வாசமுமல்ல, வாய்க்குரிய சுவையுமல்ல, காதிற்குரியசத்தமுமல்ல, கைக்குரிய கண்டிப்புமல்ல வென்றானென்க.
(௱௬௰)

சீர்வளர்ஞானநீதியன்பூக்கந் திறன்றயையானந்தமற்
றை [றாகி
யேர்வளர்குன்றாநன்னருண்டாகி யெலாமனைத்தாகியொன்
றேர்வளர்பொலிவின்மிகைகுறைபன்மை நீப்பனநிறைப்ப
னவாகிப் [றே.
பேர்வளரிறைவற்குருவிதேயுரிய பிணைவிலவியல்பிதேயன்

உரை. — மீளவுங் கடவுளுக்குச்செல்வமும் ஞானமு நீதியு மன்பும்வீரமுந் திறமுந்தயையு மானந்தமு மற்றவழகிய நன்மையெல்லா மொன்றுங்குறையாமலுளவாகி யிவையெலாமெல்லாமாகி யொன்றுமாகி யொருசீராய்த் தம்முட்பொலிந்து மிகாமலுங்குறையாமலும் பலவையாகாமலு நிறைந்தனவாகிப் பெருமையிற்சிறந்த கடவுளுக்குரிய வுருவிதுவே, பலவைகூடிப் புணராம லொன்றாகிய வுரிய வியற்கையிதுவேயென்றானென்க. அவையெலா மெல்லாமாகி யொன்றுமாகியென்றமையால் ஞானமேநீதியாய்த் தயையாய்

மற்றவையாகவும் நீதியேஞானமாய்த் தயையாய் மற்றவை யாகவு மித்தன்மைத்து மற்றக்குணங்களுமாகி யொவ்வொரு நன்மை யெல்லாநன்மையாகையிற் றம்முள்வேறுபடாம லெல்லாமொன்றுமாகையாற் பலநன்மைகள்கூடிப் புணரப்பட்டதோர்பொருள் கடவுளல்ல, இதுவுமதுவுமென்றது பலகுணமுளவனென்று தொருகுணமா யோரியல்பாய்நின் றோன்கடவுளென்க. (௱௬௧)

எப்பொருளனைத்துமெவ்வுலகனைத்து மிடைவிடாநிறை ப்படநின்றே [ழிவிறுணழியா
யப்பொருடொறுந்தான்குறுகிலாமுழுநின் றப்பொருள
மெய்ப்பொருள்ஞானத்தனைத்தையுமுணர்ந்து வினைதிரனீ தியானடவி [மாய்நின்றோன்.
மைப்பொருடளராச்சோதியாய்நிலையாய் மன்னனுயனைத்து

உரை.—மீளவுங் கடவுளெல்லாவுலகத்திலு மவ்வுலகங்களுள்ள வெல்லாப்பொருளிலு மிராதவிடம் விடாமனிறையநின்றவனு யொவ்வொருகுறகின வத்பப்பொருளாயினுந் தான்குறுகா தநிலேமுழுதுநின்றவனுய்த் தானிற்கும்பொருளழியுங்காலத் ததனோடு தானுமழியாதவனுய் மெய்ப்பொருளுணர்ந்தஞானத்தா லெல்லாவற்றையுமறிந்தவனு யளவிறந்ததிறத்தாலு நீதியாலு மெல்லாவற்றையுநடத்தினவனு யெல்லாவற்றிற்குந்தானே மயங்காதஞானத்தாற் சோதியுமாய்த் திறத்தானிலையுமாய் நீதியாலரசனுமா யனைத்துமாய் நின்றோன்கடவுளென்றுனென்க. (௱௬௨)

இருவகைவழங்குங்காரணமின்றி யியையவினையிக்திநா ளின்றி [ன்றித்
வருவகைகாட்டுமோத்திரையின்றி வரும்பொருளெண்ணளவி
திருவகைபொறித்தவீற்றுவீற்றனைத்துஞ் செய்தளித்தழிப்ப வல்லொருவ [ன்றோன்.
னருவகைவயத்தோர்காரணமுதலா யாதியாயந்தமாய்நின்

உரை.—மீளவுமுதற்காரணமுந் துணைக்காரணமுமென் றிரண்டின்றிப் பிரயாசமின்றி நேரமின்றிச் செயத்தகும்

பொருள்கட்குப் புறத்துமாத்திரையின்றிச் செய்தபொருள்கட்கெண்ணிக்கையு மளவுமின்றி யெழுதியதன்மைத் தழகிற்பொலிந்தனவாய் மட்டிலாவேற்றுமை தம்முளுள்ளனவா யனைத்தையுமுண்டாக்கி நிலைபெறக்காத்துப் பின்னரழிப்பதற்குத் தானொருவன்வல்லவனாகி யரியமுறைதிறத்துயர்ந்த முதற்காரணமாகி யெல்லாவற்றிற்குந் தானேயாதியுமாகி யந்தமுமாகிநின்றோன் கடவுளென்றானென்க. (முதற்காரணந் துணைக்காரணமென் றிரண்டாவன: தச்சர்க்குமரமே முதற்காரணம், வாச்சிப்பலவுந் துணைக்காரண மென்க.) (௱௬௩)

சீரியசவியமிக்கனவமான் சிறப்பனதூயனயாவு
நீரியமுறையிலுளன்வன்றேவ னீங்கிலொன்றவனலனாகிக்
காரியநலத்தவ்விலக்கணமாறுங் கடவுள்வாயுளவென்பாரவ
ற்றோன்
றூரியவனப்பிற்றன்னிடத்தில்லா னுண்டகையவனலனன்றே

உரை.— அங்ஙன நன்மையாயினவு மழகாயினவு மேலாயினவு மளவில்லாயினவுஞ் சிறந்தனவுங் குறையொன்றின்றித் தூயனவுமாகிக் கருதப்படு நல்லனவையாவையு நீர்த்தமுறையோடுடையோ னவனேதேவனும், அவற்றுளொன்றாயினுங்குறைந்தா லவனே தேவனல்லவென்றமையாற் சொன்னவாறிலக்கணங்கள் கடவுட்குண்டென்பார் நூலோர், அவ்வாறினுள்ளு மொன்றகுறைய வெல்லாமில்லாதவ னவன்கடவுளல்லவென்றானென்க. (௱௬௪)

சீரொலாமொருவற்கியல்பெனவாகிச் சேர்த்தியபலவிக்
கெவனுண்டா [ரசோ
மூரொலாமொருவனுளரசாய்மற் றொருவர்கேட்டொழுகுதல
வேரொலாமுளபற்றேவர்வேறாக விவற்குளதொன்றவற்கில
தாய் [யுமில்லென்றான்.
நீரொலாயிலவொவ்வொருவற்கொன்றின்றி நீர்த்தவோரிறை

உரை.— இவையெலாமிங்ஙனேயாகையி லாண்டவனன்மையெல்லா மொன்றினையும் விடாம லுடையனாகவேண்டி

யிருக்க வொருவற்கெல்லாமிருக்கையி லவனோடுபலருண் டென்றுசேர்த்திவைத்தா லவர்க்கென்னவுண்டாம்? அவனே முதல்வனாகி மற்றவரவற்குக் கீழ்ப்படிந்துநடக்குந்தேவரொன்பீராகிலு நாட்டிலுள்ளவரெலாம் பொதுவற வோரரசனாளாநிற்ப வவனேவலைக்கேட்டுநடக்கு மற்றவருமரசரொன்பீரோ வில்லையே, மீளவும் பலதேவருண்டாகி யொவ்வொருவற் கெல்லாநன்மையுளதாயினுந் தம்முள் வேறாகும்படி யொருநன்மையாயினு மிவற்குளவாகி யவற்கிலதாமாகையா லொவ்வொருதேவற் கொன்றுகுறையும், ஒருகுறையுளதெனி லொருவருந்தேவனல்ல, ஆகையிற் பலதேவருண்டென்று லொருமெய்யானதேவனு மில்லையென்றான் சூசையென்க. (ரசுரு)

வேறு.

ஒள்கைநீட்டியல் லொருவிவெஞ்சுடரொழுந்தொளிற
வள்கைநீட்டிய வம்புயமக்கதிரருந்தும்
கொள்கைநீட்டிய கொழுங்கதிரோதியைச்செவியே
விள்கைநீட்டினர் வேட்டுளத்தருந்துபுதெளிந்தார்.

உரை. — சூரியனுதயத்தெழுந் தொளியென்னுங் கைகளைநீட்டி யிராவிருளைத்துடைத்துநீக்கி விளங்கும்போது தன்கையைநீட்டி மலர்ந்ததாமரை யக்கதிரையுண்ணுந்தன்மையி னீட்டியகதிர்களொப்ப நெடிதாய்ச் சூசைசொன்னவுணர்ச்சிகளைச் செவியென்னுங்கையைநீட்டி, யாசையோடுளத்திலுண்டுசூழநின்றயாவருந்தெளிந்தாரென்க. (ரசுசு)

விண்செய்வெஞ்சுடர் விலகவெண்ணிலசுடர்த்திய
மண்செய்மாக்களே வளர்த்தெனக்காப்பியக்கவிகள்
பண்செய்பாவகப் படர்துயரிறைமையையுணரா
வெண்செய்யீறிலா விறைவரைவிகற்பித்தாரொன்றார்.

உரை. — சூழநின்றோர்தெளிந்துசொல்வார்: வானிற் றிரியுமொருசூரிய னத்தமித்தொளித்தபோது மண்மேன்மனிதரொண்ணப்படாத தீபங்களைவளர்த்ததுபோலக் கவிஞருந் தம்மினியபாவினுள்ளகப்படாமற் றேவதத்துவத்தை யுணரா

ததனுலல்லோ வெண்ணப்படாத பலதேவருண்டென்றுவே அபடவிரித்துச்சொன்னுரொன்றுரெனக. (௱௬௭)

நதிதள்ளிக்கரை நாடிலாதலையினேடுறல்போன்
மதிதள்ளிப்பலர் வாரியோடழிவுறவொழுகிக்
கதிதள்ளிக்கெடுங் கடவுளரிறைஞ்சினமின்னே
பொதிதள்ளிக்குணப் பொருவிலானுணர்ந்தனமென்றூர்.

உரை. — வெள்ளத்திலகப்பட்டவ னூற்றுநீரைத்தள்ளிக் கரையைநோக்கிப்பேர்காமல்வெள்ளத்தோடுகெடும்படிபோவதுபோல நாமுமிந்நாள்வரைக்கு மாராயாமற் பலர்போகிறவெள்ளத்தோடழிவாம்படிநடந்து வான்கதியடையாமற் கெடுக்கும் பலதேவரைவணங்காநின்றேமே, இன்றுபொதுமுறையென்றுபாராமற் றள்ளித் தனக்குவமையில்லாவொருமெய்க்கடவுளை யறிந்தோமென்றுரொன்க. (௱௬௮)

இற்றைநாளள விராவிருளிருதுலகுதித்த
வற்றைநாளுள வாரணமெங்கணும்பொழிந்த
கற்றைநாமுநம் முந்தையர்காண்கிலாதென்னே
மற்றைநாதனீ ரிதோவெனவசிட்டனேந்துரைத்தான்.

உரை. — இந்நாள்வரைக்கு நமக்கிராவிருள் நீங்கி விடியாததுபோல வுலகம்படைப்புண்டநாள்முதற்கொண்டுளவாகிய விம்மெய்வேதம்பரம்பி யெங்கும்பரப்பின ஞானக்கதிர்களை நாமு நம்முடையபிதாக்களு மிந்நாள்மட்டுங்காணுதிருந்ததென்னே? மீளவுமிது வாண்டவன்செய்யுமுறையோவென்று வசிட்டன்மிகவும்வருத்திச் சொன்னுனென்க. (௱௬௯)

நினைவரும்பல நளினம்விள்ளாக்கதிர்க்குறையோ
புனைவருங்குண முழுதுளான்பொருவிலான்பொலிந்த
நினைவருந்திற நிமலனென்றறைகிரோயறைந்துஞ்
சினைவரும்பலர் சேர்த்தினிமொனவளன்சொன்னுன்.

உரை. — அதற்குச்சுசை அரும்பாய்நின்றதாமரை யுதயத்துமலராமைசூரியன்குறையோ? அணிவதற்கரிய நற்குண

ங்கள்யாவையுமுடையோனென்று நிகரிலானென்று முண ர்வின்மேலுமுயர்ந்த கடவுளின்றன்மையென்று நீங்களே சொல்லிக்கொண்டிருந்தீர், அவ்வியல்புடையோ னொருவ னென்றுகண்டுபிடியாமற் சூரியன்முகத்து மலராதவரும்பு போலநின்று பின்னர் நீங்களே முதல்வற்குக்கிளையாகப் ப லதேவருண்டென்றுசேர்த்தினீரென்று மீளவுஞ்சொன்னான் குசைமாமுனியென்க. (௱எ௰)

வினைசெய்பாவமுள் விளைத்தநள்ளிருட்புகைமொய்ப்
புனைசெய்யாசையிற் பொறிதளர்ந்தறிவெலாமயங்கச் [பப்
சுனைசெய்பாசியிற் றொகுநிலையிலமனந்தளம்ப
முனைசெய்பேயுறி முழுவதுமருட்டினதென்றான்.

உரை.—சொன்னதையறிந்து கடவுளொருவனேயென் று காணுதிருந்ததேனெனில், செய்தபாவமுள்ளேவிளைவித் த விருண்டபுகையேமண்டி யாசையென்னும்விலங்கிற்பிணி த்த வைந்துபொறிகள்தளர்ந் தவற்றே டறிவுங்கலங்கிக்குள த்துப்பாசியைப்போல நிலையொன்றின்றி மனமுந்தளம்பா நிற்பப் பசாசும்பகைசெய்யவந்து முழுதுமயக்குவித்தெ ன்றானென்க. (௱எக)

வெறியிற்சூழ்ந்தபல் விழைவதேகொடிதெனத்தாழ்ந்
தறியிற்சூழ்ந்துழி தடமுணரொடுங்கெனநசைதாழ் [த
பொறியிற்சூழ்ந்துளம் பொங்கியதுயருறிக்கற்ற
நெறியிற்சூழ்ந்தநன் னிலையுறும்பாலரிதென்றான்.

உரை.—பகைத்தபசாசுகளினு மனத்தைச்சூழ்ந்த பற்ப லவாசைகள் கொடியனவாகித் தாழநாட்டினதறியிற்கட்டப் பட்டவாமை யதனைச்சுற்றிவருகையிற் பயனொன்றின்றி மு ன்வாழ்ந்திருந்த குளும்பூம்பொய்கையை நினைப்பதுபோ ல வாசையாற்றாழ நாட்டப்பட்டவைம்பொறியோடு பிணி த்தமனமு மவற்றைப்பிரியாமற் சுற்றிவருகையில் வருந்திக் கொண்டதுயரின்மிகுதியாற் கற்றநூலோ லோரோரிடத்து நல்லவைநினைக்கினு மந்நினைவிலே நிலைகொண்டவற்றை ய டைவதரிதே யென்றானென்க. (௱எ௨)

சுனையநீகமே துளிமதுவுணுதெனமுன்ஞேர்
நனையதாமரை நவிழ்ந்தவாய்நல்கியதீந்தே
னனையவோதிய வரும்பொருள்கைகொடாப்பொய்யே
புனையவாயின புரைவளர்வெளிறிதேயென்றுன்.

உரை. — அங்ஙனங் குளத்துத்தவளைகள் மலர்வாய்துளித்த மதுவினையுணுதனுபோல வரும்பாய்நின்றதாமரை வாய்மலர்ந்தினிதாய்த்தந்த தேனையொப்ப முன்ஞேரோதினவரிய பொருள்களைக் கைக்கொள்ளா தவற்றுட் பலபொய்க ளலங்காரமென்று கலந்ததனுற் பூவுலகெங்கும் பாவம்விளைவதற்குக் காரணமாக விவ்வறியாமை மூடிற்றென்றுனென்க. (௱௭௩)

நாதன்மிக்குரி நலமுநன்மறையுமீங்குணர்வ
தாதன்மிக்குற வவாவிருளுளம்புகாவேண்டும்
காதன்மிக்குழி கற்றவுங்கைகொடாவென்ன
வோதன்மிக்குழி யுணர்வுமிக்கனைவருந்தெளிந்தார்.

உரை. — உரியதேவதத்துவ மின்னதென்று நல்மெய்வேதமின்னதென்று மிப்பூவுலகிலுணரும்படி யாசையாகியவிருள்மனத்துள்ளே புகாமைவேண்டும். அதேனெனில், ஆசைமிகுந்தகாலத்துப் படித்தநூலுமுதவாதென்று சூசைசொன்னவுணர்ச்சிமிகுதியா லங்கேயிருந்தயாவரு மிகவுமுணர்விற்றெளிந்தாரென்க. (௱௭௪)

சோலைவாய்பறை துவைத்தபுள்களிப்பெழீச்சுடர்
மாலைவாயிருள் விம்மிவான்மீன்பரப்பரும்பும் [போய்
வேலைவாய்பினர் வெஃகுளாவிளைகெனப்பிரிந்து
காலைவாயொளிக் கருத்தெழீயனைவரும்போனர்.

உரை. —இவையெலா நடந்த சோலையிடத்துத் திரண்டுகூடிப் பறவைகள்களிப்போடு பற்பறையடித்தாற்போல முழங்காநிற்பச் சூரியனத்தமித்தாகியமாலை தன்வாய்திறந் திருளைக்கொப்பளியாநிற்ப வானமும்பரப்பின மீன்களைப்பூத்துக்கொண்டுவருகையி லெல்லாருமெழுந்து நாம்விரும்பின

விச்சொல்வினியும் விளையச்செய்வாயென்று பிரிந்துவிடிய
ற்காலத்தொளியொப்பத் தெளிந்தவுணர்வினோ டனைவரும்
போனொன்க. (௱௭௫)

ஞாபகப்படலமுற்றும்.

ஆகப்படலம் - ௨௭- இ -விருத்தம்
௨௲௬௱௫௰௨.

இருபத்தெட்டாவது.

வாமனுட்சிப்படலம்.

வேறு.

தண்டவத்தனையபைம்பூந் தருத்திரணிழற்றிக்கவ்வு
மண்டபத்தொருநாள்வைகி மதுநலம்பொழிவாய்கஞ்சம்
விண்டவத்தொழியுமாந்தர் வீடுறச்செப்பங்காட்டி
யொண்டவத்திறைவன் சூசையுரைவிரித்திமிழிற்சொல்வான்.

உரை. — முன்சொன்னபடி யெவர்க்கும்வேதவுணர்ச்சி களைச் சூசைசொல்லிக்கொண்டுவருகையி லுயிரைக்குளிர்க் கு நற்றவம்போல மதுமலர்பூத்தமரங்கள்சூழ நிழலைச்செ ய்து கவ்வாநிற்கு மொருமண்டபத்திலொருநாள் நற்றவத்தி றைவன்சூசையிருந்து மதுவைப்பொழிந்த தாமரையொத்த தன்றிருவாயைமலர்ந்து மயங்கி யவமாய்க்கெடுமேனிதரை வா ன்வீட்டிற்செலுத்தும் வழியைக்காட்டி யினிதாயுரைகளைவி ரித்துச் சொல்லிக்கொண்டிருப்பானென்க. (க)

போதுவாய்மலர்ந்தபோது பொதிர்த்தளிமிடைதல்போல
வோதுவாய்மலர்ந்தநன்னு லொழுகியவமிர்தத்தீந்தேன்
காதுவாயருந்தல்வெஃகிக் கணங்கொடுவெவருங்கேட்பக்
கோதுவாய்கிழிந்தபுண்மேற் குளுமருந்துறழச்சொல்வான்.

உரை. — அங்ஙனஞ் சூசைசொல்லிக்கொண்டுவருகையி ன் மலர்வாய்மலர்ந்தவளவிலதின்மேல்வண்டுகள்மொய்ப்ப துபோல வவனும்வாய்மலர்ந்தோதின வுணர்ச்சியென்னும் மிர்தத்தைக்காதாலுண்ணும்படிவிரும்பிக் கூட்டமா யெவ ருமொய்த்துக் கேட்டிருப்பப் பாவத்தாலுயிர்பட்ட புண்

மேற் குளிர்ந்தமருந்தினைத்தடவினாற்போல வவரையுணர்த்திக்கொண்டுவருவான் சூசையென்க. (உ)

படம்புனைந்தெழுதப்பட்ட பங்கயமெழுவாய்மைம்பூந்
தடம்புனைந்துறைந்தெஞ்ஞான்றுஞ் சைவலஞ்சிவைகொளாப்போல்
வடம்புனைந்தொளிறுமார்பின் வடுப்புனைந்திருண்டநெஞ்சோ
டெம்புனைந்தவைத்துங்கேட்டொத் தொழுகிலான்வாமனென்பான்.

உரை. — சூசையுணர்வுகளை விரும்பிக்கேட்டவருள் வாமனென்பவன் படத்தையெழுதினதன்மையாற் றாமரைமுதற் பலமதுமலர்பூத்ததடாகத்து நெடுநாட்கிடந்தபாசி யென்றும் வேரைக்கொள்ளாததுபோல வவனு மணிந்தவாபரணங்களால்விளங்கியமார்போ டுள்ளணிந்தபாவத்தா லிருண்டநெஞ்சினையுடையனாகிச் சூசையுணர்த்தினயாவையும் விரும்பிக்கேட்கினு மவற்றோடொப்பநடவானென்க. (௩)

சிலைவளர்தடக்கைவீரன் செருமுகத்தசனியன்னான்
கலைவளருணர்விற்காமங் காய்முகத்தனுங்கமாழ்கி
யுலைவளரழன்முன்மைம்பூ வுலந்தெனமனதிற்சோர
விலைவளர்மகளிர்போரில் வீரமற்றெஞ்சுநெஞ்சான்.

உரை.—வாமனென்பவன் வில்வின்றொழிவிற் றடக்கைவீரனாய்ப் போர்முகத்திடியொத்தவனாய்க் கற்றநாலுணர்வினனாய் மனதிற்காய்ந்த காமமுகத்துமயங்கிவாடித் தீமுன்வைத்த மலரைப்போலச்சோர்ந்து விலைமகளிருடையபோரில் வீரமின்றி மெலியுநெஞ்சுடையானென்க. (௪)

வி துமுகத்தெறித்தகற்றை மிடையிருள்மூழ்கிற்றன்ன
பொதுமுகத்துரைத்தயாவும் பொதுவறத்தனக்கென்றுள்ளி
மதுமுகத்துணர்த்துநூலான் மனத்தறம்விரும்பிப்பின்றை
முதுமுகத்துருத்தகாம முதிர்வினையாற்றொந்தான்.

உரை. —வாமனத்தன்மைத்தானாகையிற் சந்திரனுதித்து வீசினகதிர்கள் மொய்த்தவிரவிருள்முழுகித் தோன்றினது

போலச் சூசைபெவர்க்கும் பொதுவாய்ச்சொன்ன வுணர்ச்சிகள்யாவையும் வாமன் பொதுவறத் தனக்கேசொன்னதாகவெண்ணி யினிதாய்ச்சொல்லிக்காட்டினநூலாலறத்தின்மேலாசையுட்கொள்வானாயினும் பின்புநெடுநாட்கொண்டகாமமே மனதிற்செய்யு மிருந்தவினையாற்றுமல் வருந்தாநின்றுனென்க. (௫)

பொறிகுலாய்க்கிடந்தமார்பிற் புண்ணியமொருபாலோர்பால்
செறிகுலாய்க்கிடந்தகாமஞ் செருப்படநடுவிற்பட்ட
வெறிகுலாய்க்கிடந்தமாலை விகன்றெனநெஞ்சஞ்சோர
நெறிகுலாய்க்கிடந்தசீல நிலைவிழைந்துரைக்கலுற்றான்.

உரை. — அங்ஙன மணியாற்பொறித்த வாமன்மார்பிலோரிடத்துப் புண்ணியமே யோரிடத்து நெருங்கிக்கிடந்தகாமமே தம்முட்போர்செய்ய நடுவேயகப்பட்ட வாசமதுமலர்மாலை மெலிந்தாற்போல வவனதுநெஞ்சஞ்சோர்ந்திருக்கப் பின்புதுணிந்து நன்னெறிவழுவா வொழுக்கநிலையைவிரும்பிச் சூசையைப்பார்த்துச் சொல்லத்துடங்கினனென்க. (௬)

சுருதிநூலுயிர்பெற்றன்ன சுடர்த்தவத்துணர்வின்மிக்கோய்
சுருதிநூலுரைப்பக்கேட்டுக் களிப்புறின்சிலம்பவீரத்
திருதிநூன்மூடவன்கேட்ட தென்னநான்கனிந்ததல்லாற்
பொருதிநூலொழுக்கத்தெஞ்சாப் போதலேயாற்றுதென்றான்.

உரை.—வேதநூலுயிரோ பெற்றாற்போல விளங்கினதவத்துவடிவா யுணர்வின்மிக்கோய் நீமனம்பொருந்தி யுணர்த்திய நூலைக்கேட்டு மகிழ்ந்தாலுஞ் சிலம்பத்தொழிலைப்படிப்பிக்குநூலை மூடவன்கேட்டாற்போல நானு மின்பங்கொண்டதல்லாலந்நூல்காட்டியவொழுக்கத்துக் குறையின்றிக் கூடிநடத்தலே யாற்றுதென்றான்வாமனென்க. (௭)

அறைகெழுமருநூற்கேள்விச்சுருதியின்வடிவோன்கே
தறைகெழுமலங்கன்மார்ப னயப்புறமுகமனேக்கி [ட்டு
நிறைகெழுமரியகாட்சி நிலைமையாலுளமுங்கண்டு [னே.
முறைகெழுவழுவாநீதி முகைத்தநூன்மொழிந்தான்மன்

உரை.— அரியநூற்றுறைக்கேள்வி யுணர்வோடு வேதவடிவாய்நின்றசுக்கிரன் வாமன்சொன்னதைக்கேட்டு வாசமதுமலர்மாலையணிந்த மார்பனாகியவாமனுட்களிகூர வவனைய ன்போடுநோக்கி நிறைந்ததேவகாட்சியா லவன்மனத்தையுங்கண்டறிந்து வழுவாநீதிமுறைகளைமலர்ந்துதரு நூலுரைப்பத்துடங்கினான் சுக்கிரனென்க. (அ)

கற்றநூலெளியதோன்றிக் கற்குமுனரியதன்றே
மற்றநூல்போலவாய்ந்த மறைநெறியொழுகல்வில்லாற்
பெற்றநூல்வீரவல்லோய் பிறந்தபோதறிந்தாய்கொல்லோ
வுற்றநூலுறுமுன்னீயஃ துணர்ந்துனக்கெளிதென்றாயோ.

உரை. —வாமனைநோக்கிச் சுக்கிரனென்பனஞ்சொன்னானென்னில், வீரவல்லோய் படித்தநூலெவர்க்குமெளிதென்றுதோன்றினு மதனைப்படிக்குமுன்னே யரியதல்லோ?மற்றநூல்களைப்போல வேதங்காட்டினநெறியி லொழுகுதலு மத்தன்மைத்துத் தோன்றும், நீயிப்பொழுதறிந்தவில்வின்றொழிலைப் பிறந்தபொழுதறிந்தாயோவில்லையே, அதனையறியுமுன்னே யதனைக்கண் டுனக்கெளிதென்றாயோ வில்லையேயென்றானென்க. (௯)

வில்செய்வார்கொண்டவாறும் வெங்கணைதொடுத்தவாறுங்
கல்செய்தோளிருந்தவாறுங் கண்பொருத்துகின்றவாறுங்
கொல்செய்கோல்பாய்ந்தவாறுங் குறிப்படலன்றிக்காணு
மல்செய்வார்தொழிலைக்கண்டார் மைந்தர்செய்தொழிலோ
வென்பார்.

உரை. — வில்லினாணிபிடித்தபடியையு மதிலேயம்பினைக்கோர்த்தபடியையுங் கல்லொத்திருபுயம் பிறழாதிருந்தப

டியையு மிலக்குநோக்கினபடியையுங் கொல்லுஞ்சரத்தை விட்ட நொய்மையி லதுபோனபடியையுங்காணுமவ் லம்புத ப்பாக் குறிப்படலொன்றைக்கண்டு வில்வல்லார்செய்யுந் தொழிலையறியாதார் கண்டபொழு ததிசயித்து மனிதர்செ ய்யுந்தொழிலிதோ வென்பாரொன்றனென்க. (ய)

புகன்றவம்பெழுதுமாறும் பொருதவைவிலக்குமாறு
மிகன்றமர்நீந்துமாறு மெஃகினுட்காக்குமாறு
மகன்றமர்வளைக்குமாறு மதிரவாள்சுழற்றுமாறும்
விகன்றமர்காணார்கண்டால் வியந்துளமாழ்வரன்றே.

உரை. — அங்ஙனஞ் சொன்னவம்புகளை யெய்யும்படி யையு மெதிராயவற்றைவிலக்கும்படியையும் பொருதுபோ ர்க்களத்தொருவ னீந்திவரும்படியையும் பகைவர்க்குக்காட் டாமற் றன்னுடலைப்பரிசையுள்ளொளிக்கும்படியையுஞ்செ யந்தரும்வழியைத்தேடிப் போர்க்களத்தைச் சுற்றிவரும்ப டியையும் வாளைச்சுழற்றும்படியையு முன்போர்முகத்தை க்காணாதவரிவையெல்லாவற்றையுங்கண்டா லதிசயித்து மய ங்காநிற்பாரல்லோ வென்றனென்க. (யக)

சூற்புறத்தழலமின்னிச் சூழெலாமதிர்ப்பவார்த்து
மேற்புறத்தெழுங்காரொத்த வேழமேலெதிர்த்தபோழ்திற்
கார்ப்புறத்தொளிக்குமாறுங் கைப்புறத்திரியுமாறும்
வாற்புறத்தொழுகுமாறும் வாயுளாவழங்குமாறே.

உரை.—இடிகளுட்கருப்பமாகத் தாங்கிப் புறத்தழல்தோ ன்றமின்னித் திசையெலாமதிரும்படி முழங்கி வான்மேலெ ழுந்துதிரியுங் கரியமேகமொத்த யானைமேலெதிர்த்துப் பொருதன ரதின் முற்காலிலொளித்தலுந் துதிக்கையைச்சு ற்றித்திரிதலும் பிற்காலிட்டுவளைத்தலும் வாயாற்சொல்லு ந்தன்மையோ வல்லவென்றனென்க. (யஉ)

நிரப்பறநெடுந்தேர்ப்போரு நிணமருப்பிபத்தின்போ
பரப்பறவிவுளிபாய்ந்து படர்துகட்போருமற்றக் [ரும்
கரப்பறக்கற்றபோருங் கடிதுனக்கிவையேதோன்று
துரப்பறசருளமூழ்கி பூணுகர்ந்தொளிசால்வேலோய்.

உரை.—அங்ஙனங் குறையாமுறையோ டுயர்ந்ததேரைக் கொண்டுசெய்யும் போரின்வகையு நிணத்தைப்பொழிந்த கொம்புடைமதயானையைக்கொண்டுசெய்யும் போரின்வகையும் படர்ந்ததூசியெழும்படி யகன்றுபாயுங்குதிரையைக் கொண்டுசெய்யும் போரின்வகையு மற்றப்போரின் வகையெலா நீயவற்றைக் குறையறக்கற்றதனாலல்லோ வுனக்கரியனவென்று தோன்றாது பகைவர்மார்பின்மூழ்கியிரத்தத்தையுண் டொளியைக்கொப்பளிக்கும் வேலுடையோனேயென்க. (௰௩)

ஏர்விளைமணியின்சாய லெண்ணியவளவிற்சொல்லுஞ்
சீர்விளையினியயாப்பிற் செய்யுளைப்பொருத்துவாருங்
கூர்விளை துறையினன்னூற் கொளுமுனரன்னோர்தாமே
பார்விளைகுன்றந்தாங்கல் பாடலிவினியதென்பார்.

உரை.—மீளவு மழகியமணிகளைக்கோர்த்தாற்போல நினைத்தவளவிற் சீரோடுகட்டுப்படச்சொல்லும் பாட்டுகளைப் பொருத்தினகவிஞருந் தா மத்துறைநூலைக்கற்குமுன்னே யவர்தாமே பாடலிற் பூமிமேலுள மலையைத்தாங்குவ தெளியதென்பாரல்லோவென்றுமென்க. (௰௪)

ஆடகமொளிறுமாணி யலமரத்திண்கொண்டெங்கு
மாடகநரம்பைநோண்டு மாத்திரைநிறையவீக்கித்
தோடகடிழிதேன்கீதந் தொகுவிரலுலவியார்க்கு
நாடகங்கண்டயாரு நமக்கெளிதென்பார்கொல்லோ.

உரை.—மீளவும் வீணையைக்கையிலேந்திப் பொன்முறுக்காணியைச்சுழற்றித் திண்ணென் றெங்குமோசையெழும்படி வீணையினரம்புகளை யொன்றொன்றாய்த்தடவி வேண்டியமாத்திரை நிறையும்படி யிழுத்தபின்புமுழுவிரலாலவற்றின்மேலுலாவி மலர்பூவிதழினின் றொழுகுந்தேனைப்போல வினியகீதங்களெழும்பிமுழங்கு நாடகத்தைக் கண்டயாவரு நாமுமத்தன்மை வீணையைவாசிப்ப தெளிதென்பாரோ வென்றுமென்க. (௰௫)

பகைபடக்கலந்தவண்ணம் பழுதிலோவியந்தோன்றுந்
நகைபடப்பசும்பொன்வீக்கி நவிரணியமைக்குமாறும்
வகைபடநரம்பின்பாலால் வந்தநோயுரைக்குமாறுந்
தொகைபடப்பழகாத்தன்மை தொழிலெலாமரியதன்றே.

உரை.—மீளவுஞ் சிவப்புமுதலிவ்வகைவண்ணங்கள் பகைபடக்கூடிக் குறையிலசித்திரந்தோன்றும்படியும் பொன்செயுங்கொல்லர் பொன்னையடித்திழுத்துமுறுக்கி யழகியநகைகளாயினபடியு மருத்துவர்பிடித்த நாடிவழியால் வந்தநோயின்னதென்றுரைக்கும்படியு மற்றத்தொழிலெலாம் பழகாதவர்க் கரிதல்லோவென்றானென்க. (௰௬)

பற்றொழிற்கெல்லாமிஃதே பாலெனிலறத்தின்றாய
நற்றொழிற்கிதுவுமன்றி நசைக்கிணைபயனுண்டாமால்
சிற்றொழில்பலநாட்கற்றுந் திருந்திலாதேனுமின்ன [பாம்.
மற்றொழிற்பயன்பட்டோங்க மனத்துணிவொன்றேசால்

உரை.—பலதொழிற்கெல்லா மிதுபொதுவாகி யிதுவுமன்றி யறத்தின்றொழிற்கு விசேடமாக வாசைக்களவாய்ப்பயனுண்டாம், சிலதொழில்களிலே சிலர்நெடுநாட்பழகினுந் திருந்தச்செய்யாராயினு மிவ்வறத்தொழிலிற் பயன்பட்டுடனே திருந்தச்செய்யும்படி மனத்தின்றுணிவொன்றே போதுமென்றானென்க. (௰௭)

வெந்தகிற்சேக்கைநீங்கி வெறுநிலத்தடிகடாமே
வந்ததிற்கிடந்துநோற்ற வண்ணமேயொழுகல்வேண்டா
சிந்தையிற்சான்றோரெள்ளுந் தீவினையொன்றைநீக்கி
நிந்தையிற்றினியதூய்நன் னெறியுறத்துணிதியென்றான்.

உரை. — மீளவு நீயேவெந்தவகிற்புகைகாட்டின மதுமலர்மெத்தையைவிட்டு வெறுநிலத் திரிஷிகள்கிடந்து தவத்தைச்செய்வதுபோல விருப்பவுந்தேவையில்லை, பெரியோரிகழ்ச்சியாகவெறுத்த தீவினையொன்றினைநீக்கி யிகழாததூயவறத்தி னெறியிலொழுகத் துணிவாயாகவென்றான் குருசையென்க. (௰அ)

துணியும்பாங்கரிதன்றே தூயநற்சுருதிவேட
மணியும்பாங்கறத்தின்வாளா லம்பொறிமுழுதுங்கோறிக்
கணியும்பாங்கரியநோன்பின் கடவுளோயெனமீண்டுண்
ணோய்
தணியும்பாங்குயிர்ப்புவீக்கிச் சழுக்கறவாமன்சொன்னான்.

உரை. — அதற்குவாமன் றணிதல்போதுமென்றா யாயினுந் துணிவதேயரிதல்லோ தூயவேதமே வேடமாயணிந் தழகோடுநின் றறமேவாளாகக்கொண் டைம்பொறிகளை முழுவதுகொன்று புதைத்ததன்மையாற் றவத்தின்கடவுளாகநின்றவனேயென்று மீளவுமுட்கொண்ட நோய்தணியும்படி பெருமூச்சினைவிட்டுத் தன்குறைதீரச்சொல்லத் துடங்கினான்வாமனென்க. (௰௯)

வேறு.

நரம்பையென்பின்னிறைபின்னி நற்செம்புனற்றோய்த்துப் [ய
பரம்பைபோர்த்துட்டசைநிரப்பிப் படமேன்மயிர்பொலி
வரம்பையகல்பொற்பிழைத்தொன்பான்வாசலிட்டினிதோர்
குரம்பைசெய்தான்பெருந்தச்சன் குறையென்பவருண்
டோ.

உரை. — வாமனங்ஙனஞ்சொன்னானென்னில், எலும்புகளொழுங்குபடவைத் தவற்றோடுநரம்புகளைப்பின்னித் தோலைமேற்போர்த் துள்ளேதசையைநிரப்பிக் குருதியிற்றோய்த்துத் தோன்றியபடத்தின்மேன் மயிர்களெழும்பவைத் தளவிறந்த வழகினைப்பூசி யொன்பதுவாசலையிட்டுப் பெருந்தச்சனாகியசுவாமி நமக்கினியதா யிவ்வுடலைச்செய்தான், இதற்குக்குறையென்பாருமில்லை யென்றானென்க. (உ௰)

ஆதலேனுநாடியவெந் தகிற்பூட்புகைதவழ்ந்து
காதல்செய்நற்சுதைமூழ்கிக் கதிர்செய்மணிக்கலன்டெய்
தூதல்செய்வண்டலஞ்சூடி யுயிரிற்பேணினுமூ
னீதல்செய்நாறுடற்குயிரை யிறுகப்பிணித்தனனே.

உரை.—குறையில வுடலிதாயினு மிதற்குவெந்து மணக்கு மகிழ்புகைசூழ்ந்து தவழக்காட்டிச் சந்தனமுதல் விரும்பின பலவற்றையும் பூசி வாசநீராட்டி விளங்கினமணிவடங்களைத் தரித்து வண்டினமினாக்கு மதுமலர்மாலையையணிந்துசூடி யுயிரினுமுடலைப்பேணினும் விடாமலூத்தையூறி நாறுமுடலிது, இதனோடிருக வாண்டவனல்லுயிரைப்பிணித் திசைத்தானென்றானென்க. (உக)

மெய்யாலுயிரோ யுணர்வெய்த மெய்யுந்தானுணராப்
பொய்யாலுயிரோ கெடமலிபற் புலாகண்மூழ்கியுடல் [வதோ
மொய்யாலுயிர்கொல் பகைபல்லான் மூனேந்தோர்வேண்டு
வய்யா வுயிருய்வகையரிதுள் ளடுமிப்பகைவினையால்.

உரை.—அங்ஙன முடலோடுபிணித்த நல்லுயி ருடல்வழியாகத் தானுணர்வடையவேண்டி யிருக்கையி லிவ்வுடல்மெய்யைக்காட்டாம லுணர்த்தினபொய்யா லுயிரோகெடும்படி பலபாவங்களின் முழுகியதற் குடல்செய்யும் பெரும்பகையுமன்றி வேறேபகைவர்வேண்டுமோவில்லையே, உள்ளேநின்று கொல்லுமிப்பகைவினையா லுயிர் தப்பிப்பிழைக்குந்தன்மையரிதையா வென்றானென்க. (உஉ)

உள்ளேவைகுமிப்பகையோ டுடன்பட்டெப்புறமு
மெள்ளேவைகும்பெரும்பகைசூழ்ந் திகல்செய்முறையரி
தெள்ளேவைகுங்கவின்காட்டித் தீம்பாற்கலந்தவிடம் [தே
வள்ளேவைகுமுயிர்க்கூட்டி வதைசெய்பகையதுவே.

உரை.—அங்ஙன முள்ளேநிற்குமிப்பகையாகிய வுடலோ டுடன்பட் டெங்குஞ்சூழநின் றிகழப்படும் வேறொரு பெரும்பகையுண்டாம், அதுபோர்செய்முறை யரிதாகித் தெளிந்த வழகுருக்காட்டி வல்லமைபொருந்தின வுயிர்கெடவினிய பாலோடுகலந்த நஞ்சினையூட்டிக் கொல்லும் பகையதுவென்றானென்க. (உ௩)

சொன்னபகையுமியாதென்னிற் சூட்சிநலமிக்கோ
னின்னவுடம்பின் றுணையாக வெழிற்பூங்கொடிச்சாயன்

மின்னவெழுதிச்சுரிகுழலார் மிளிர்ந்தவினஞ்செய்தா
னன்னவினந்தானுயிரறநா லனைத்துங்கொல்பகையே.

உரை.—சொன்னபுறப்பகை யேதெனிற் சூட்சியின்மிக்கநாத னிவ்வுடற்கொரு துணையாக வழங்கியபூங்கொடியின்சாயலாகமின்னும்படி யெழுதப்பட்டுவிளங்கிய மார்தரினத்தை யுண்டாக்கினனே, அவ்வினந்தானே யுயிருமறமுநாலுங்கெடும்படி நம்மைக்கொல்லும் பகையாமென்றனென்க. (௨௪)

மின்னார்வேலூனுமிழ்ந்தொழுதம் வேழமருப்புமெ
திர்த்
தொன்னார்வெம்போர்கடந்துருமொத் துள்ளத்தஞ்சாநான்
பொன்னார்மணிப்பூணணிச்சாயற் பூங்கொம்பனையார்போர்
முன்னார்நிற்பாரென்றெண்ணி முரிந்துட்குழைவுநிற்பேன்.

உரை.—விளங்கியவேலின்முகத்து நிணத்தையுமிழ்ந்த யானைக்கொம்பின்முகத்துமெதிர்த்துப் பகைவர் வெம்போர்கடந் திடியொப்பப் பொருதஞ்சாதநானே பொன்னிற்பதித்த மணிப்பூணு மதுமலர்க்கொம்புமொத்த நங்கையர் செய்யும்போர்முகத் தெவருநில்லாரென்றெண்ணி நானுமுறிந் துட்குழையாநிற்பேனென்றானென்க. (௨௫)

முதிர்செய்யுணர்வுற்றறம்வெஃகி முயனல்வினையுணர்
கா
லெதிர்செய்மதிவெண்முகங்கண்டாலெரிபூண்டேக்கிமின்னக்
கதிர்செய்தழைவில்வீசவிரு கண்செந்தீப்பொழியப் [றே.
பொதிர்செய்யெரிமுன்மெழுகெனவுட் புலனைந்துருகுமன்

உரை.—ஓரோரிடத்து முதிர்ந்த நல்லுணர்வெய்தி யறத்தைவிரும்பி நல்வினைமுடிப்ப நினைத்தபொழுதின் முழுமதியொத்ததோர்முகத்தை யெதிரேகண்டா லணிந்தமணிவடந்தூங்கி மின்னவுங் கோத்தகாதணியசைந்து கதிர்வீசவு முலாவியவிருகண் டையெறிப்பவு மிவையெலாங்கூடியென் மனத்தைச்சுடச்சுட நெருப்பின்முகத்து மெழுகுபோல வென்மனமைந்தும்போயுருகாநிற்குமென்றானென்க. (௨௬)

இருமஞ்சன்னவிருண்டொளிரு மியல்புற்றவிர்கூந்த
மருவிஞ்சகிற்பூந்தவிசிருளே வகைதுஞ்சிடமென்பார் [ல்
செருவிஞ்சொன்னார்கரந்துயிரைச் செகுக்குங்காடதுவே
கருநஞ்சதுவேயுயிருண்ணுங் கடுங்கூற்றதுதானே.

உரை.— மின்னுங்கரியமேகம்போல விருளோடுவிளங்கினகூந்தலே வாசவகிற்புகைசூழ்ந்த பூமெத்தையாகி நல்விருளினிதாய்த்துயிலுமிடமாமென்பா ராயினு முள்ளதைச்சொல்லும்படி யக்கூந்தல் முனிந்தபகைவ ருயிரைக்கொல்ல வொளித்திருக்குங்காடதே, கரியநஞ்சதே, உயிரையுண்ணுங் கொடியகூற்றன்துதானே யென்றனென்க. (உ௭)

புருவவில்லாற்கட்கணைகள் புண்பட்டுள்ளுயிரு
முருவவிட்டாற்பலநாளு முற்றவுணர்வழிந்து
வெருவநெஞ்சமுட்கலங்கி விளைத்தபுண்காட்டி
வருவதல்லாவிச்சமரின் மருளாதெவருண்டோ.

உரை.— அன்னார் தம்புருவமாகியவில்லைவளைத்து நல்லுயிரும்புண்பட்டுருவும்படி தங்கண்ணாகியவம்புகளைவிட்டவளவிற் பலநாளடைந்தவறத்தினைவெலாமழிந்து நெஞ்சம்வெருவி யுட்கலங்காநிற்ப விப்போரினின்றயாவரும் பட்ட புண்காட்டிவருவதொழிய வதிலேமயங்காதவ ரெவருண்டோ வில்லையென்றனென்க. (உ௮)

கடலைக்கடையவமிர்தமொடு கடுவும்பிறந்ததெனப்
படலைக்கதையாயிருந்ததலாற் பயனைக்கண்டதிலை
மடலைக்குடையவூறியதேன் வதைத்தசொல்லமிர்தத் [ழியே.
துடலைக்கொலைசெய்துயிருணு நஞ் சகும்பெண்வாய்மொ

உரை.— மீளவுங் கடலைக்கடைந்தவளவி லமிர்தமு நஞ்சுங் கூடப்பிறந்தனவென்று கோர்த்தகதையின்முறையாற் கேட்டதொழிய வதைப்பயனைக்கண்டாரில்லை, ஆயினு மாதரின்வாய்மொழியோவெனில் வண்டுகள்குடைந்த பூவிதழினின்றூறிய தேனினுமினியசொல்லமிர்தமேகூட வுடலைக்கொன்றுயிரையுண்ணு நஞ்சினைப்பொழிவனவென்ற னென்க. (உ௯)

குழலாற்பிறழா துயிர்விசிப்பார் குரலானஞ்சுயிர்ப்பார்
கழலாற்சிலம்பமருட்டிடுவார் கண்ணாற்கணைதொடுப்பார்
நிழலாற்கலன்கொண்டிருள்மொய்ப்பார் நிறைதம்முறுப்
பெல்லா
மழலாற்சுடச்சுட்டுயிருண்டுண் டாற்றுப்பசிகொள்வார்.

உரை. — அங்ஙனமங்கையர் தங்கூந்தலைப் பாசமாகக் கொண்டு பிறழாதபடி யுயிரைப்பிணிப்பார், இனியசொல்லானஞ்சினைக்கொப்பளிப்பார், அணிந்தசிலம்புகளிடுமோசையான் மயக்குவிப்பார், பார்த்தகண்ணலம்புகளையெய்வார், பூண்டவணிசெய் யொளியான் மனத்திலிருளைக்குவிப்பார், மற்றவுறுப்பெல்லாங் கொடுநெருப்பாகி யுயிர்களைச்சுட்டு விடாதுண் டுண்டாலு மாற்றுதபசியேகொள்வாரென்றுணர்க. (௬0)

போதங்கையாருளரியபண் புழுங்கிச்செய்கொலை
யோ
வேதங்கொண்டாரெண்ணுவர்மற் றெண்ணும்பாங்கரிதே
கீதம்பாலாய்ச்சுரந்தெனத்தீக் கிளையோவேலோ நச்
சோதங்கொல்லோவிருசெவியூ டோட்டியுயிர்கொல்வார்.

உரை. — பூங்கையா லன்னார்தடவிவாசித்தவீணை செய்யுங்கொலையோவென்னி லதினுட்பட்டுவருந்தினு ரதனைமதிப்பாரொழிய மற்றவரெண்ணுவதரிதே, வீணைவாய்க்கீதமே சுரந்த பாலாகத்தோன்றிக் கிளைத்த செந்தீப்பொறியோ கொல்லுங் கூர்ந்தவேலோ நச்சுக்கடலோ. வேதோவதனை யிருசெவியிலூட்டி யுயிரைக்கொல்வாரென்றுணர்க. (௬௧)

என்னேமற்றதியானுரைப்பே னெரிவிண்டிடித்தசனி
மின்னேதுடராக்காவுள்தேல் மின்பெண்ணைசக்கிறுதல்
பின்னேதுடராக்காலமிலைப் பெரும்புண்ணீரொழுக
வன்னேயறிவேனுனல்லா லறியாய்பொறிவென்றேய்.

உரை. — மற்றதியாவையு நானுரைப்பானேன், மின்னிய தற் கிடிதுடராதகாலமுண்டாயினு மின்னுகியமாதரைவிரு

ம்பியதற் குடனேகெடுதுடராதகாலமில்லை, இன்னங் குருதி யொழுகும் பெரும்புண்பட்டநானேயவையெல்லாவற்றை யுமறிவேனென்றிழிய வைம்பொறிகளைவென்றதவத்தோய் நீய றியாயே யென்றானென்க. (ருஉ)

சாதல்மிகவேகார்முகம்வெஞ் சரத்தின்மழைபனிப்ப
ஞாதல்மிகவேவணக்கண்ணா ரணிப்பூஞ்சாயலின்மேற்
காதல்மிகவேகற்றபல கல்வியெவன்செய்யு [ன்.
மோதல்மிகவேநூற்றுறைநீத் துணர்வோயெனத்தொழுதா

உரை.— கொலைத்தொழில்மிகும்படி வளைத்தவில்லெய்த விடாமழையாகிய வம்பினுங் கொடியவம்புகளையெய்யுங் கண்மாதரினழகிய சாயலைவிரும்பி யாசைமிகுங்காலத்துக் கற்றகல்வியெல்லாஞ் செய்வதொன்றுண்டோ வில்லையே யோதிமிகுந்து நூற்றுறையெல்லாங்கடந்த வுணர்வினேயெ ன்று குசையைவணங்கா நின்றான் வாமனென்க. (ருரு)

காதன்மிக்கங்கெவன்செய்யுங் கல்விநலமென்றாய்
நாதன்மிக்கநீதிவளர் நரகத்தெய்தியகாற்
சாதன்மிக்கவின்புண்டார் தாமாங்கெவன்செய்வார்
வீதன்மிக்கமிடல்வேலோ யென்றான்வினைவென்றான்.

உரை. — அவற்றைக்கேட்டகுசை ஆசைமிகுந்தவிடத்து க் கற்றகல்வியென்னசெய்யுமென்றாயே, ஆயினுமாண்டவ ன்மிகுந்தநீதியால் வளருந் தீநரகத்தில் விழுந்தகாலத்துக் கேடுமிகுதற்குக் காரணமாகிய தீயவின்பத்தையுண்டவ ரங் கே யென்னசெய்வாரொன்றுசொல்வாய் கொலைத்தொழில் மிகுந்த வேலின்வல்லோ யென்றான் வினையெலாம் வென்ற குசையென்க. (ருச)

என்றான்குசையென்றிரங்கி யெரிதன்னேய்காட்டி
நின்றான்வனைத்தழுவியழல் நிகர்த்தகாமவிப்பத்
தன்றாயங்கண்ணீராட்டிச் சாற்றிக்காட்டியபுண்
ணன்றாயாற்றுமருந்தன்ன நயந்தேமீண்டுரைத்தான்.

உரை.—அங்ஙனஞ் சூதைசொல்லி யிரக்கம்புரிந்து மன தில்வெந்தநோயைக்காட்டிநின்ற வாமனைத்தழுவிக் காமமா கியவழலையவிப்ப விருகண்டாரை தயையாற்பெய்த மாரி யோ டவனைக்குளிப்பாட்டிச் சொன்ன வுரையிற்காட்டின புண்ணை யினிதிலாற்றுமருந்தினையொப்ப மீளவு மன்னோ டுசொல்லத்துடங்கினன் சூதையென்க. (௩௫)

வேறு.

கைவளர்மருத்துவ ரன்றிக்காய்ந்தநோய்
மெய்வளர்பிணியுள ரறிதல்வேண்டிலாப்
பொய்வளருயிர்கொணேப் பொருந்திக்கொண்டனர்
மைவளர்நோயறிந் தலதுமாறுமோ.

உரை. — உடலைப்பற்றிவருநோய்களை வைத்தியரொழி ய நோவாளியறிதல்வேண்டியதல்லவே, பொய்யானுயிரைப் பற்றிவருநோயோவெனி லவன்வன்மனம்பொருந்திக்கொ ண்டதனு லந்நோயுளவனு மதனையறிந்தாலொழியத் தீரா தென்றனனென்க. (௩௬)

புனஞ்செயும்பங்கமே புனமொழித்தென
மனஞ்செயும்பங்கமு மனநொந்தாற்றவிற்
றினஞ்செயும்புகர்வினை தெரிகிலாரறத்
தினஞ்செயும்பயன்பட மீட்டலேலுமோ.

உரை. — நீராற்செய்தசேறு நீரானொழிவதுபோல மன த்தாற்செய்தபாவ மனநொந்தமையாற்றீரும், ஆகையா லனு தினஞ்செய்த பாவங்களை யறியாதா ரறத்தினால்வரும்பய னையடையும்படி யப்பாவமொழியுமோ வில்லையென்றனெ ன்க. (௩௭)

நசைவழிவிரகநோய் வளர்ந்துநல்கிய
புகைவழியுளத்திருள் பொதுளக்கொண்டநோய்த்
தொகைவழியுணர்வரி தெனினுஞ்சூழ்ந்தவவ்
வகைவழியறிதிநீ யறிந்துமாழ்கலேன்.

உரை.—உயிரைப்பற்றிவரும் பலநோய்களு ளின்பத்தா ல்வருங்காமநோய் வளர்ந்துசெய்யும் புகையான் மனத்திரு ள்மண்டிவந்தநோயாகையி லவற்றையறிவதரிதாயினு நீயவ ற்றைநன்றாயுணர்ந்தாயே, உணர்ந்தபின்னு மயங்குவானே னென்றானென்க. (௩அ)

அள்ளியவிருளறு மலங்கல்வேலினோய்
தெள்ளியவிடத்திலுந் தெளிந்துநஞ்சுண
லுள்ளியபேதைய ரொப்பச்சிந்தையி
லெள்ளியவினையுளத் திவறலாவதேன்.

உரை.— அடர்ந்தவிருளை நீக்கி விளங்கியவேலின்வல்லோ ய், இங்ஙன நீயுட்டெளிந்தவிடத்து மறிந்துநஞ்சினையுண்ண த்துணிந்த பேதையரைப்போல வுணர்விலிகழ்ந்த தீவினைம னதில்விரும்புவானே னென்றானென்க. (௩௯)

நஞ்சமிழ்தென்று நீ நக்கினுமமிழ்
மிஞ்சமிழ்தாகுமோ வினைகொணல்லுயி
ரெஞ்சமிழ்ந்தியபுரை யியைந்துமாழ்கவு
நெஞ்சமிழ்ந்தியநசை நீக்கிலாவதேன்.

உரை. — அமிர்தமென்று நீநஞ்சினை நக்கினு மந்ந ஞ் சினியவமிர்தமாகுமோவில்லையே, வினைகொண்டுன்னுயிர் பாவத்திலமிழ்ந்தி மயங்கிச்சோரவு நெஞ்சிற்கொண்டகாம த்தாசையை விடாமலேனென்றானென்க. (சம)

காதலேபாசமாய்க் கால்கைவீக்குத
லாதலேபிரிவுனக் கரியதாமென்றாய்
காதலேபாசமாய்க் காதல்மிக்குளத்
தாதலேநாடொறு மிறுக்கலாவதேன்.

உரை.—ஆசையேயொருபாசமாகிக் காலையுங்கையையு ங்கட்டினதாகையா லதனைப்பிரிவ துனக்கரிதென்று யாகிலு மாசைபாசமென்னி னுடோறுமாசையைவளர்த்து நீயப் பாசத்தை யிறுக்குவானேனென்றானென்க. (சக)

கொற்றெனவிரகநோய் கொழுந்துவிட்டெரிந்
தற்றிலவழலவிப் பரியதாமென்றாய்
கொற்றெனவெரிந்ததீத் தூண்டிக்கொண்டுநீ
யற்றிலநசைக்கற வீட்டலாவதேன்.

உரை.—கோபித்தாற்போலக் காமநோய்கொழுந்துவிட்டு முடியாதெரிந்ததழலாகி யதனையவிப்ப துனக்கரிதென்றாய், ஆயினுஞ் சினந்தெரியுங்காமத்தீயை நீயே தூண்டிக்கொண்டுமுடிவின்றி யதற்காசையென்னும் விறகுகளைக்குவிப்பானே னென்றானென்க. (௪௨)

பாங்கெழுமெழினலம் பயத்தவின்பினு
லாங்கெழுநசைவெறுப் பரியதாமென்றாய்
பாங்கெழுங்காஞ்சிரப் பழன்விரும்பியுண்
டாங்கெழுமணங்குற வருந்தலாவதேன்.

உரை.— கண்டமுகத்தி னழகுசெய்யுமின்பத்தால் வளருமாசையைவெறுப்ப துனக்கரிதென்றாய், ஆயினு மழகுகாட்டிய காஞ்சிரப்பழத்தைவிரும்பியுண்டால் வருத்தம்வருமென்றறிந் ததனையுண்பானே னென்றானென்க. (௪௩)

நெடிதுநாளுற்றநோய் மருந்தினீர்மையாற்
கடிதுதீர்தலரும் கருமமாமென்றாய்
நெடிதுநாளுற்றநோய் நீளமீண்டுயிர்
கடிதுமாய்ந்தொழிதரக் கடுவுண்பாவதேன்.

உரை.— நெடுநாட்கொண்டநோ யுடனேமருந்தினாற் றீர்ப்பதரிதென்றாய்,ஆயினு நெடுநாட்கொண்டநோய் நீளவுமுயிர்கெட்டொழியவு மீளவு நீநஞ்சினையுண்பானே னென்றானென்க. (௪௪)

கோட்பருமெழிலெனக் கோதையார்முக
மீட்பரும்விடமதை விழித்துய்யாவொன்றாய்
கோட்பருமெழிலுயிர் குழையநாடொறு
மீட்பரும்விளிவுற விழித்தலாவதேன்.

உரை. — கெடாதவழகின்றன்மையாற் றேன்றியமாதரின்முகமே மீளாததோர்நஞ்சாகி யதனைக்கண்டவர்பிழையாரென்றாய், ஆயினுங் கெடாதவழகுளவுயிரேகுழைந்து நாடோறுமீளாதசாவுசாகும்படி யம்முகத்தைப்பார்ப்பானேனென்றனென்க. (சரு)

மால்வளர்விரகநோய் வழங்கும்போரதே
வேல்வளர்சமரினீ நோக்கல்வேண்டிலா
கோல்வளர்போர்வெலு மெதிர்த்தகோலிவண்
கால்வளரோட்டமே வெற்றிகாக்குமால்.

உரை. — இவையெலாமாகையின் மயக்கத்தால்வளருங்காமநோ யுயிர்க்குச்செய்யும்போரோ, ஆயுதங்கொண்டுசெய்யப்படும் போரின்றன்மையா னீநோக்கல்வேண்டா, அம்போடுசெய்தபோரை யெதிர்த்தெய்தவம்புவெல்லுமாம், காமப்போரிலோவெனி லெதிராமற்காலோடோடி யொளித்தலே வெற்றியைத்தருமென்ற னென்க. (சசு)

பட்டிலாக்கடையிலாப் பார்வையார்கட
மட்டிலாவுறுப்பெலாம் வதைசெய்நஞ்சென்றாய்
கிட்டிலாற்காண்கிலாற் கேட்கிலாவது
வெட்டிலாற்கொல்லுமோ வெயில்செய்பூணினோய்.

உரை. — காமப்போரினொளிப்ப தெங்ஙனம்வெற்றியைத்தருமெனிற் கெடாமலுமுடியாமலு மாதரினுறுப்பெலா மட்டின்றியுயிரைக்கொல்லு நஞ்சாமென்றாய், ஆயினு மவர்களையண்டாமலுங் காணாமலுங் கேளாமலும் விரும்பாமலு மிருந்தாயாகி லந்நஞ் சுன்னுயிரைக்கொல்லுமோ விளங்கினமணிவடமணிந்தவனே யென்றனென்க. (சஎ)

வள்ளுறப்பகைத்துயிர் வருத்துமெய்யலா
லுள்ளுறக்கொடுமைகொண் டடும்புறப்பகை
யுள்ளுறக்கண்முத லுள்ளவாயலந்
தெள்ளுறத்திறப்பதே னெரிசெய்வேலினோய்.

உரை.— வலிசாய்ப்பகைத்து நல்லுயிரைவருத்து மிவ்வு டலன்றி நெருங்கிச்சூழ்ந்து கொடிதாய்க்கொல்லும் புறப் பகை யுள்ளே நுழையும்படிவிளங்கினவேலினாய் நீ கண் முதலைம்பொறியாகிய வைந்துவாசலை நிந்தைப்படத்திறப் பானேனென்றானென்க. (௪௮)

இருண்டிருங்கனத்திடை யெரிந்தமின்னென
மருண்டிருண்டுயிர்கெட மயல்செய்வாண்முக
முருண்டிருண்டெறிந்தவெண் டலையதோர்ந்துளந்
தெருண்டிருந்திமத்திடைக் காண்மின்றேறவே.

உரை.— மீளவுந்தேறும்படி யிருண்டமேகத்திடத்துவி ளங்கத்தோன்றியொழியு மின்னலைப்போல விருண்டுயிர்மய ங்கும்படி விளங்கினவழகியமுகமே சுடுகாட்டிலுருண்டுரு ளவெறிந்த வெண்டலைதானென்றெண்ணி மனதிற்றெளிக வென்றானென்க. (௪௯)

பகைத்தகத்துகிர்த்துறை படலைமுத்தெனுந்
தகைத்தகப்பல்லிதழ் பதர்வில்தார்விழி
நகைத்தகப்பிறைநுத னளினவாயென
மிகைத்தகத்துகடரும் விழைந்தபொற்பிதோ.

உரை. — அவ்வெண்டலையைநோக்கிப் பகைபட்டழகு பெறப் பவளத்துறையிற்கோர்த்த முத்துவடமொப்பச்செ வ்வுதட்டுட்டோன்றின பல்லும் வளைத்தவில்லொப்பப்புரு வமும் வான்மீனொப்பவிழிகளு மொளிப்பிறையொப்ப நு தலுந் தாமரையொப்பவாயுமென்றுசொல்லி வருந்தும்படி நீவிரும்பினவழகவ்வெண்டலைதானேயென்றானென்க. (௫௰)

போதெனமலர்ந்தெழில் போதின்வாடியக்
கோதெனமெலிவன மூப்புக்கொண்டகா
லீதெனவுணர்கிலா தின்பம்வேண்டுவர்
தீதெனவிளைத்தபின் றீயதெய்துவார்.

உரை.— பூத்தமலரைப்போல மலர்ந்த முகத்தழகம்மல ர்வாடிக் கோதாய்க்கிடந்ததன்மையான் மூப்புவந்தவளவிற்

ளுமெவிந்துகிடக்குமென்றுணராம லின்பத்தைவிரும்பிப் பாவத்தைவிளைவித்துத் துன்பத்தைக்கொள்வா ரென்றுனென்க. (௫௧)

இன்றுளார்நாளையே யிறப்பரன்றிமற்
றன்றுளார்விழைந்தவை யருகிற்போகிலா
நின்றுளாய்ச்செய்துகள் நெருங்கிப்பின்னுறச்
சென்றுளாய்வினை துயர் செப்பவோவென்றான்.

உரை.—இன்றுயிர்வாழ்வார் நாளையிறப்பார், இதுவுமன்றி முன்வாழ்ந்திருக்கையில் விரும்பினயாவு மவரிறக்குங்காலத்துக் கூடப்போகாமனின்று செய்தபாவமே கூடப்பின்றுடர்ந்ததனால் வினையுந்துயர்கள் சொல்லுந்தன்மையோவல்லவென்றான்குசையென்க. (௫௨)

அளிமுகத்தினையவும் பலவுமாரிய
னளிமுகத்துரைத்தவை யவனுணர்ந்தபின்
வளிமுகத்தலையென மனத்தலைந்தலாற்
றெளிமுகத்துறுதியோர் துணிவுதேர்ந்திலான்.

உரை. — ஆரியனாகிய குசைமாமுனி யன்பினோ டிவற்றோடு பலவற்றையுந் தெளிவாகச்சொன்னதை வாமன்கேட்டபின்பு காற்றின்முகத்துக் கடலே யலைவதுபோல வவனு மனதிலலைந்தானொழிய வுறுதித்துணிவிற் றெளியாதிருந்தானென்க. (௫௩)

வேறு.

ணைக்குமோர்மருந்துபாலர் கனியவுண்டுயிருமுண்ண
விக்குமோர்விளிம்பினீவி யிட்டெனவியம்பலென்னோ
வொக்குமோர்பழம்புண்ணுற்ற வுடன்றழல்வேண்டுமென்ன
வைக்குமோரளவில்விஞ்சை மறைநவோன்வகுத்தான்மீண்டே.

உரை.—அதனைக்கண்டகுசை கசப்புளமருந்தினைப் பாலகரினிதாயுண்டு கூடவுயிரு முண்ணும்படி மருந்துவைத்த

பாத்திரத் தொருவிளிம்பிற்சருக்கரையுந் தடவிக்கொடுப்பது போல நானுமனநோகாதபடி யின்பங்காட்டிப்பேசினதென்ன? நெடுநாட்கொண்டபுண் ணாறும்பொருட்டு நெருப்பேவேண்டுமென் றுணர்ந் தளவிறந்தவிஞ்சை வேதநல்லோன்குரை மீளவுஞ்சொன்னானென்க. (௫௪)

புண்முழுதிறைஞ்சுங்கோட்டுப் புழுங்கியகளிற்றேறன்
விண்முழுதிறைஞ்சும்வேதம் விலக்கியதீமைநீங்கி [ணேய்
யுண்முழுதிருளற்றாக்கத் தொழுகவே துணிந்தாலல்லான்
மண்முழுதிவர்தீதொவ்வா மலிதுயர்நிரையஞ்சேர்வாய்.

உரை.— கழுகுமுதற் பற்பறவை தமக்குவிருந்திடுமென்று வணங்கினகொம்புள சினந்தமதயானையினேறுபோல நின்றவனே வானுலகிடத்து வணங்கப்பட்ட மெய்வேதம்விலக்கின தீவினையாவையும்விட்டு மயக்கமின்றி முழுமனனுக்கத்து நன்னெறியொழுகத்துணிந்தாலொழியப் பூவுலகுள்ளதீதெலா நிகராததுன்பமுள நரகத்திற்சேருவா யென்றானென்க. (௫௫)

தொல்லையிம்மருளினாழ்த்த துகள்விடத்துணிதலொ
ன்றே
வொல்லையிந்நசைநீங்காதே னுழலில்வேதலொன்றே
வெல்லையிவ்விரண்டிலொன்றே யியாவருந்தவிராதென்ன
வல்லையிவ்வுணர்விற்றேர்தி மாற்றலர்வணங்கும்வேலோய்.

உரை.—பகைவர்வணங்கும் வேலுடையோனே நெடுநாட்கொண்டமயக்கத்துப் பழுத்தபாவங்களை விடுவதொன்றாயினு முடனே யித்தீயவாசையைவிடாயாகி லெக்காலத்துந் தீநரகத்தில் வேகுவதொன்றாயினு மிவ்விரண்டிலொன்றே யெவர்க்குந் தவிராதென்றெண்ணி யுறுதிபெற விவ்வுணர்விற்றெளிகவென்றானென்க. (௫௬)

மீய்முகத்துடையிற்றேன்றும்விசும்புகுழ்வரையிற்றா
தூய்முகத்தலைகளோட்டித் துள்ளிவீழருவிபோல [ங்கித்
வேய்முகத்தினிமைகாட்டி விளைவிலோடிளமைநம்பேல்
காய்முகத்தகிர்கால்வீசக் காய்முதல்வீழுமென்றான்.

டரு

உரை.— மீளவு மாகாயத்துடுத்த நல்லாடையாகத்தோன்றி மேகங்கள்சூழ்ந்த மலையிற்றூங்கித் தூயதிரைகளைச்சுருட்டித் துள்ளிவிழு நீரருவிபோல வழகியமுகத்திலினிமைகாட்டிச் சீக்கிரத்தோடியொழியு மிளமைநம்பவேண்டா,அதிர்ந்து கோபித்தகாற்றின்முகத்துக் காய்களுமுதிர்வனவென்றான் சூசையென்க. (௫௭)

காய்நரகென்றபோழ்திற் கணங்கொடுநின்றார்சொல்வார்
தீய்நரகென்பதல்லாற் றீநரகெந்நாடெப்பால்
நோய்நரகரசர்பேயோ னுகர்ச்சியுநிலையும்யாதோ
போய்நரகுறைவர்யாரோ புலமையோய்விரித்துச்சொல்வாய்.

உரை.—சூசை நரகமென்றவளவிற் சூழக்கூடிநின்ற யாவருஞ்சொல்வார்:தீநரகுண்டென்று நாமறிவதல்லா லந்நரகமெந்நாடோ வெவ்விடமோ வதற்கரசர்பேய்களோ வதினுகர்ச்சியுங் குணமுமேதோ வங்கேபோய்க்கிடப்பாரெவரோ நாமறிகிலேமென்றமையா னீயேசொல்வாயாகவென்றொன்க. (௫௮)

வீய்முதிர்மதுவிற்றீஞ்சொல் விரித்தநூற்கல்விமிக்கோய்
தீய்முதிருணர்விற்றீய செருக்கொடெம்முயிரையுண்ணும்
பேய்முதிர்குலம்யார்தோவப் பேய்கள்செய்தவனூர்செய்த
நோய்முதிர்கருமம்யாதோ நுவன்றிவையணியாயென்றார்.

உரை.—மீளவும் பூத்தமலர்வாய் மதுவின்றன்மைத் தினியசொற்களைவிரித்த நூற்கல்வியின்மிக்கோய் தீயவுணர்வோடு நம்மைப்பகைத் தெம்முயிரைக்கெடுக்கும் பசாசினம்யாதென்று மப்பசாசுகளைச்செய்தவனொன்று மவற்றைச்செய்தகருமம்யாதென்றுஞ் சொல்வாயாகவென்றார் சூழநின்றயாவருமென்க. (௫௯)

இனியவேகேட்டீரிந்நா ளெய்தியவுணர்விற்றாழ்ந்து
முனியவேமள்ளற்புக்கு முதிர்ந்தநோயுணர்ந்துகூசிற்
கனியவேபொன்றுங்காலக் கனலுருதுவப்பீரென்னப்

பணியவேயலர்ச்செவ்வாயான் பணித்துமற்றிதனைச்சொன்
னான்.

உரை.— அவற்றைக்கேட்டகுசை நன்றாய்வினவினரோ நீ
யிக்காலத்துணர்வினை னரகிற்றாழ்ந்து சினந்துவேகு மத்தீயி
னுட்புகுந்து முதிர்ந்த வந்நோய்களையிப்பொழுதுணர்ந்து
கூசியஞ்சினாலல்லோ விறக்குங்காலத் தந்நரகிற்புகாம வினி
தாய்மகிழா நிற்பீ ரென்று சொன்னபின்பு குளிர்மதுமலர்ச்
செவ்வாயான்குசை மீளவு முரைத்தானென்க. (௯௰)

ஆடியகடவுளன்றி யனைத்துமேபடைப்புண்டாகி
நீடியவுலகமூன்று நிமலனேயொருவன்செய்தான்
கோடியதெவையுங்கோதாற் கோடியதன்றிமூற்பால்
வாடியகுறையொன்றின்றி வனப்புறமுடித்ததன்றே.

உரை. —சொன்னவாண்டவ னொருவனன்றி மற்றதெல்லா
ம் படைக்கப்பட்ட பொருள்களாங் யெல்லாவுலகங்களையும்
வற்றுளயாவையு மாண்டவன்றானே புறத்துணையின்றி யொ
ருவனா யுளவாக்கினான். மீளவு மிக்காலத்துக்கோணித் தோன்
றினயாவும் பாவத்தாற்கோணினதொழியப் படைப்புண்ட
காலத்துக் குறையுமெலிவுமின்றி யழகோடுமுடித்ததாயிற்
றென்றானென்க. (௯௧)

கட்புலத்துருவிற்புல்லாக் கவினலந்தீட்டிவாய்ந்த
வுட்புலத்துடலமில்லா வுயிரெனவிழுப்பமோங்க
மட்புலத்திணையொன்றில்லா மனங்களையெண்ணினாதன்
விட்புலத்திறைவற்சூழும் வீரரொன்றமைத்தானென்றான்.

உரை.— அங்ஙன மனைத்தையு மாண்டவன்படைத்தபொ
ழுதிற் காணப்படுமுருவினா லடையப்படாதவழகினைத்தீட்டி
யுடலில்லாத வுளமுளவுயிர்களாக வோங்கிய நன்மைமிகுதி
யா லிப்பூவுலகி னிகரில்லா தெண்ணப்படாதமனங்களை வா
னுலகிடத்தாளு மரசனைச்சூழ்ந்த வீரரைப்போல நிற்கும்ப
டி யாண்டவனுண்டாக்கினானென்றான்குசையென்க. (௯௨)

கடவுள்தேவரொன்னுங் களிசெழுங்குலமேதானே
நடவுளர்வணங்குநன்னூற் றகுதியோரென்னவாமன்

மூடவுளர்பறக்கவெஃகு மூயவெனப்பித்தர்காட்டு
மடவுளர்மருளென்கேண்மி னறைகுதுமென்றான்சூசை.

உரை. — அதற்குவாமன் பெரியோர்வணங்கும்வேதநூலோய் நீசொன்னமனங்கள் கடவுளொன்றுந்தேவவொன்று நாங்கள்சொல்லுங் குலமாமல்லோவென்றான். அதற்குச்சூசை மூடவர்பறக்கநினைத்தாற்போலப் பித்தர் சொல்லிக்காட்டினவழியின் மயங்குவானேன், முற்றும்யாவையுஞ் சொல்லக்கேளுங்களென்று மீளவுஞ் சூசைசொன்னானென்க. (௯௩)

விண்ணவரமரரும்பர் மேவினரமுதவாயர்
பண்ணவர்வானோரொன்னும் பற்பெயர்தருவதல்லாற்
றிண்ணவர்படைப்புண்டாகித்தேவரொன்றுரைக்கல்வேண்டா
தண்ணவர்வணங்குந்தேவ நாயகன்றுணையற்றோன்றாம்.

உரை. — நான்சொன்னவர் விண்ணவர்முதலாயின பலபெயருடையவராழிப் படைப்புண்டமையாற் றேவரென்பதொண்ணு தவருமொருங்குடன் கூடி வணங்குந்தேவன் றுணையொன்றின்றி யொருவனாய் நின்றோனென்றானென்க. (௯௪)

வானுறைகுலத்தோராகி வரங்களும்வயமுமிக்கார்
கோனுறைகோயில்வைகிக் கோக்கணமென்னத்தோன்றிக்
கானுறைபுலகினுங்கொள் கசடறவரந்தந்தோம்ப
மானுறைவளமில்லாராய் வணக்குரித்தேவரல்லார்.

உரை. — சொன்னவானோர் வானுலகிருக்குங்குலத்தோராகி யடைந்தவரங்களாலும் வலிமையாலு மிக்கவராகி யெல்லாவற்றையு மாளுங்கோனாகிய கடவுள் விளங்கித்தோன்றுநிற்குங் கோயிலாகிய வானத்திலிருந்த வரசர்கூட்டமாகத் தோன்றினுங் காடுசூழ்ந்தபூவுலகிற்கிடந்த நாமுள்ளகுறைகளைத்தீர்ப்பவிரட்சிக்கவு நமக்குவேண்டினவரங்களைக்கொடுக்கவு மாட்சிமையுள்ளவல்லமையில்லாதாராகையில் வணங்கத்தகுந் தேவருமல்லவென்றானென்க. (௯௫)

வரந்தருந்தன்மைத்தெல்லா வையகத்தொன்றுநாதன்
புரந்தருங்குணந்தன்பாலாய்ப் புகன்றவனேவுந்தன்மைத்

துரந்தருமுறுதிசொல்லி யுதவிபவரங்கள்கேட்டுச்
சுரந்தருத்துயரிற்றேற்றுந் துணைசெயல்வானோர்பாலே.

உரை.— அங்ஙனநமக்குவேண்டியவரங்களைத்தந்து நம்மையிரட்சிக்குந்தன்மை யெல்லாவுலகத்திலு மொன்றாய்நிற்குங் கடவுளினுரிமையாமே. அக்கடவு ளேவினதன்மைத்து நமக்குறுதிகளைச்சொல்லவும் வேண்டியவரங்களை யவனைக் கேட்டுவாங்கிக்கொண்டுவந்து நாமடைந்ததுயரி லாறுதலைச்சொல்லி யரியவழியேநடக்குநமக்குத் துணையாய்நிற்பது சொன்னவானோருரிமையாமேயென்றானென்க. (௬௬)

விண்ணெனும்பதியோராகிமேவிநீருரைக்குந்தன்மை
மண்ணெனும்பதியோர்க்கன்றி வானவர்க்கொவ்வாப்பாலாய்க்
கண்ணெனுமிமையாரென்னுங் கடிமலர்வாடாதென்னும்
பெண்ணெனுமாணுமென்னும் பெயர்தகாதுருவில்லார்க்கே.

உரை.—மீளவுந்தேவனென்னப்படாமல்வான்பதியோராகையி னீங்களுரியல்பினையுரைக்குந்தன்மை மண்பதியோர்க்கல்லாதே வானவர்க்கொவ்வாத வியல்பாகி யவர்கண்ணுடையனென்று மிமையாரென்று மணிந்தமாலை வாடாதென்றுஞ் சிலர் பெண்ணென்றுஞ் சிலராணென்றும் வானவர்க்குடலு முருவுமில்லாமையா லவையெலாஞ் சொல்லத்தகாதென்றானென்க. (௬௭)

திருத்தகுந்தேவரென்று செயிர்தருமதுகாமத்
துருத்தகுங்கதைகள்வீக்கி யுளத்துனைவிரகநோயிற்
கருத்தரும்வினைகள்பாவிக் கைப்படைபலவுந்தோற்றிச்
செருத்தகும்பகையுந்தம்மிற் றிளைத்துளமெலிவரென்பீர்.

உரை.—மீளவு நீங்கள் வானவரைத்தேவரென்றபின்புபாவம்விளைவிக்கு முங்கள்காமத்துரிய பலகதைகளைச்சேர்த்தியத்தேவர்காமநோயில்வருத்தி யவருக்குச்சங்கமுங் கருப்பமும் பிறப்புமுண்டென்றுபாவித்து மீளவும் பலவகையாயு

தங்க ளவர்க்குத்தந்து தம்முட்பகைப்பவும் போாச்செய்யவுந் தோர்த்துமனதின் மெலியவுஞ் சொல்வீரென்றுனென்க. (௬௮)

சிட்டிடைவானின்றுங்கட் டேவர்பொன்னுலகந்தன்னி
னெட்டிடைநெறிகணீண்ட நெற்றியங்குன்றங்குன்று
மொட்டிடைமலர்ந்தபொய்கை மொய்திரைக்கங்கைகாளி
விள்
மட்டிடைமலர்ந்தசோலை வகுத்துமண்ணொப்பச்சொல்வீர்.

உரை.— மீளவுஞ் சிவந்தவானி னிற்பாரென் றுங்கள்தேவரிருக்கும்பொன்னுலகிடத்து நீண்டவழிகளு முயர்ந்தமலைகளு மெலியாமதுமலர்த்தடாகங்களு மதிர்ந்தலைந்தோடுங்கங்கையும் வாசமதுமலர்பூத்த சோலைகளு மிவையெலாமங்கேயுண்டென்றுசொல்லிப் பூவுலகொப்ப வானுலகாக்கிச் சொல்வீரென்றுனென்க. (௬௯)

இனையவேபலவுங்கூறி யிருவிழிக்குருடர்யானை
யனையவேமுசலந்திண்கை யடியுரல்செவிகள்சுர்க்கை
வனையவேயுரைத்தவண்ணம் வடுமனுக்குலத்தின்சாயல்
புனையவேயுயர்ந்தவானோர் புன்மையில்வனைதனன்றே.

உரை.— இவற்றையும் பலவற்றையுஞ்சொல்லி யிருகண்கெட்டகுருடர் யானையைத்தடவி யுவமைசொல்லுமிடத்துத் தாமுன்னறிந்தவற்றைக்கொண்டு துதிக்கையை யுலக்கையென்றும் அடியையுரலென்றுஞ் செவியைச்சுளகென்றுஞ்சொன்னதுபோல நீங்களும் பாவத்தமிழ்ந்தின மனிதர்குலத்தின்சாயலாக மாட்சியினுயர்ந்ததேவரைப் புன்மைபடச்சொல்வது நல்லதல்லவென்றுனென்க. (௭௦)

ஒக்களவகன்றமின்மீ தொத்திராப்புறத்துநீக்கித்
தொக்களவகன்றசீர்கொள் சுடருலகுரிமையங்கட்
புக்களவறிதலன்றிப் புன்கரத்துளருந்தன்மை
தக்களவஃகுமிச்சீர் நயத்தளவுணர்தலாமோ.

உரை. — வான்வீ டெத்தன்மைத்தோவெனில் அளவெ லாமொவ்வாதென்றகன்று வான்மீன்முதலா யதற்கொத்தன வல்லவென்று வான்வீட்டின்புறத்துத்தள்ளி மட்டொன்றி ன்றி யெல்லாநன்மையிற்சிறந்துவிளங்கின வுலகமாங்கையி லதினுரிமையை நாமங்கேசென்று கண்டவளவி லறிவோ மொழியக் குறுகினபுன்கையாற் றடவினாற்போல விங்கே யிருந்து பூவுலகின்வாழ்வுகள் நக்குதற்கும்போதாமையா லி வற்றினளவாக வான்வீட்டுவாழ்வுகளை யெண்ணுவது பேத மையல்லோவென்றானென்க. (எக)

உள்ளுமாறகன்றவாழ்வுய்த் தும்பரைப்படைத்தபின்
றெள்ளுமாறகன்றாங்காரஞ் சிலருறியிறைவனேவிக் [னர்த்
கொள்ளுமாறகன்றதீமை குணித்தளவுரைத்தசாபத்
தெள்ளுமாறகன்றவானோ ரெரியுழிப்பேய்களானார்.

உரை. — அங்ஙன நினைக்கத்தகுந்தன்மையின் மேலாகிய வாழ்வுகளைத்தந்து கடவுள்வானவரைப்படைத்தபின்ன ரவ ருட்சிலரோ தெளியாமயக்கத் தாங்காரத்தைக்கொண்டு தமக் காண்டவனேவினபடியிற் செய்யமாட்டாமற் றீவினைமன திற்கொண்டமாத்திரத் தாண்டவனிட்டசாபத்தினா லிகழா தருணைத்தோடு படைப்புண்டவானவருட் சிலர் தீநரகத்தின் பசாசுகளானாரென்றானென்க. (எஉ)

பேய்வினைவெருவக்கண்டப் பேய்கள்செய்தவனொ
ன்றீர்
தூய்வினையத்தோன்செய்த தொழில்கெடவுணர்ந்தபாவம்
போய்வினைகொணர்ந்துபேய்தம் புழுங்கினஞ்செய்ததென்
தீய்வினையுளத்துட்புக்காற்செய்பகையறிதீரென்றான். [னுத்

உரை. — நீங்கள் பசாசுகள்செய்யும் வினையைக்கண்ட ஞ்சி யவற்றைப்படைத்தவனொன்றறிகிலீர், தூயமுறை யோடெல்லாவற்றையு முடித்தகடவுள்செய்தொழில் கெடு ம்படி நினைத்தபாவ நுழைந்து வினையைக்கொண்டுவிட் டது தானே புழுங்கினபசாசினமாக்கினதென்று தீவினைமனதிற் புகுத்தவளவிற் செய்யுங்கொடியபகையை யிதிலே யறிவீரா கவென்றான் குசையென்க. (எங)

வானவராகவான்மேல் வாழ்ந்தநல் லுயிர்கள்கெட்டுத்
தானவராகச்செய்த தகுதிமேற்கொடியபாவ
மூனவரொமைப்பகைத்தா லுறுஞ்சிதைவளவோவென்றுங்
கானவ்ரஞ்சிக்கூற வருந்தவனிவையசொன்னான்.

உரை. —சூழநின்றயாவரு மவற்றைக்கேட்டு வானுலகிட த்து வானவராகவாழ்ந்திருந்த வுயிர்கள்கெட்டழிந்து தீயவ சுரராகப் பாவமேசெய்தபின் பக்கொடியபாவ முடலோ டனமுள்ள நம்மைப்பகைத்தால் விளையுங்கே டளவுளதோ வென்றஞ்சாநிற்ப மீளவுஞ்சூசையிதனைச்சொன்னானென்க. (வடநூலோர்க்குப் பேயெனினு மசுரரெனினுமொக்கும்.) (எச)

வேறு.

வானவரையுரைக்குங்கால் வாய்மையறவுணர்ந்தது போ
ருனவரையென்னுங்காற் றடநீங்கிமயல்வேண்டா
மானவரைவேறெண்ணி யழற்கிடக்கும்வெறிவேறாய்
நானவரைமறைவிதித்த நன்னூலாலெண்ணேனே.

உரை. — வானவரைச்சொன்னவிடத்து மெய்மைதப்பி நீங்கள்நினைத்ததுபோல வசுரரைச்சொல்லும்போதும் வழி தப்பிமயங்கவேண்டா, ஆகையால்சுரர் வேறே நரகத்திற்கிட க்கும்பசாசுகள்வேறேயென்று வேதநூலைப்பற்றி நானெ ண்ணு திரண்டொன்றாக நினைக்கத்தகுமென்றானென்க. (எரு)

விண்ணோர்க்குப்பகைசெய்து வெல்லறியாவறங்குன்ற
மண்ணோர்க்குவினைசெய்து மன்னுயிர்கணரகுய்ப்பப்
புண்ணோய்க்குவைத்தனதீப் புழுங்குமெனத்தாங்கதிநீத்
துண்ணோய்க்குத்தகப்பகையோர்ந்துயிரடுந்தீதுணர்குலமே.

உரை. — பேயின மெத்தன்மைத்தோவெனில், வானவரை ப்பகைத்து வெல்லமாட்டாம னல்லறங்கெடும்படி மனிதர்க் குவினையைச்செய்து நரகத்திற்செலுத்த மிகவும்வருந்திப் பட்டபுண்மேல்வைத்த தீக்கோபித்தாற்போலத் தாம்வான்வீ ட்டுக்கதியை யிழந்ததனு லுட்கொண்டதுயரளவாக நாமு

மக்கதியையடையாதபடி நம்மைப்பகைத்துப் பாவம்விளை
விக்குமுணர்வினையுடைய குலமேதேயென்றானென்க. (எசு)

நற்செய்கையனைத்துமற நலம்பகைத்தோர் தூயதவந்
தற்செய்கைநெடுநாளுந் தாமுடிப்பவரம்பெற்று
விற்செய்கையமர்பூட்டி விண்ணவரைப்புண்படுத்தி
மற்செய்கைவழங்கசுர ரென்றறைதல்மருளன்றே.

உரை. — இங்ஙனமாகையி னல்வினையாவையுங் கெடுக்கப் பகைத்தவசுரர்தாமே நெடுநாள்தவஞ்செய்தாரென்றுஞ் செய்ததவத்தால் வரங்களையடைந்தாரென்று மடைந்தவரங்களால் வில்லைக்கொண்டுசெய்த போர்முகத்து வானவர்க்குப் புண்ணைப்படுத்தினரென்று மித்தொகைப்பட்ட வல்ல தொழில்களை யசுரருடையரென்பது மயக்கமல்லவோவென்றானென்க. (எஎ)

வீடிழந்ததீயினமே விளைத்தசெருக்குளத்தொழியாப்
பீடிழந்ததன்மையெரி பிளிர்ந்திடித்துப்பிளந்தமுகி
னீடிழந்தவசனிகள்போ னீதிபரன்வயப்பயத்தாற்
சேடிழந்தநரகூழித் தீவீழ்ந்துபுதைத்தனவே.

உரை. — நீங்கள்மயங்கிச் சொன்னவற்றைவிட்டு - அசுரராகியபேய்கட்கடுத்த சிலசெய்திகளைச்சொல்வேன்: வான்வீடிழந்த தீயபேயினங்கொண்டவாங்காரத்தைவிடாமன்மாட்சியுமிழந்து செந்தீக்கொப்பளித் திடித்துப்பிளந்தமேகத்தினின்று விழுந்தவிடிகளைப்போல நீதிபரனாகிய கடவுளின்வல்லமையா னன்மையொன்றில்லா தவியாதநரகத்தீயில் விழுந்தெக்காலத்து மங்கேபுதைக்கப்பட்டன வென்றானென்க. (எஅ)

திரையுடுத்தபாரகட்டுச்சேண்படர்தாழ்குழிதோண்டி
கரையுடுத்தகடல்பொங்கிக் கடந்தெழுவபோலலைகொண் [க்
டுரையுடுத்தநிகர்கடந்த வூழித்தீக்குடிவைகப்
புரையுடுத்தவுருக்கொடும்பேய்ப் புதைத்தலறுநரகன்றே.

உரை. — பாவமேயுருவாகநின்றபேய்கள் புகைக்கப்பட்டலறுநிற்கு நரகமேதெனில், கடல்சூழ்ந்த பூவுலகின்வயிற்றி லாழமாய்த்தோண்டின பாதாளமாக வொருகுழியுண்டாகி யதிலேகடல்பொங்கிக் கரையைக்கடந்து மேலெழுந்தாற்போலச் சொல்லுந்தன்மையைக்கடந்த கொடியவூழித்தீ யலையோடுபொங்கிக் குடியாயிருக்குமிடமே நரகமென்றுணர்க. (எக)

இடிகடவமேழோசைமறத் தெரிந்தயர்வோரோசைபெருகிகடவழிநிம்மையொடு கொடியதெலாமொய்த்தடர [ழக்நொடிகடவழ்போழ்துபல நூறுண்டென்றுணர்ந்தலறக்கடிகடவழிருடவழ்தீக் காணியெனுமருஞ்சிறையே.

உரை. —சொன்னநரகத்தேரயாதிடித்தவிடிகள் வெடித்தவோசையைமறுப்ப வங்கே வெந்துவருந்தின யாவருங்கொடிதாய்முழங்க விடும்பைமுதலுள கொடியதெல்லா மங்கே குடிகளாகவடர்ந்துமொய்ப்ப வொருநொடிநேரமே நூறுவருடமாகவெண்ணி யெவருமலறுநிற்கப் பசாசுகள்திரண்டுதிரியு மூழித்தீயின்காணியாகநிற்கும் கொடியதோர்சிறையே நரகமென்றுணர்க. (அ0)

கண்மல்குந்துயர்பனித்த கலுழியவியாக்கனலாய்
மண்மல்குந்துயர்வெள்ளம் வாழ்வுருவாயினிதென்ப
வுண்மல்குந்துயராற்று துளைந்தழத்தாமற்றுயிரைப்
புண்மல்குந்துயர்படுத்தல் புதவிடத்துப்பேயரசே.

உரை. —மீளவும் பேய்கள் நரகத்தரசரோவென்றீர், அவ்வரசேதெனில்,அங்கேவருந்தினோர் விடாமழையாகப் பொழிந்தகண்ணீர் வெள்ள மவிக்கப்படாத நெருப்பதாகிப் பூவுலகுள்ள துன்பங்களொருங்குடன்றிரண்டுகூடினு மிவையெலாமினியவாழ்வென்றுதோன்றும்படி யிவற்றிலு மளவொன்றின்றிக் கொடியதாய் மனதினிறைந்த துயர்களாற்றுமற் பசாசுகள்தாமே வருந்தியலறுநின்று மற்றமனிதருயிர்களை வருத்திக்கொண்டுவருவதே பேய்கள்நரகத்தாளாநிற்கு மரசுதானென்றுணர்க. (அக)

ஓரென்பான்றனையேத்தா ரொன்றுமெய்ச்சுருதிவழி
சேரின்பானடவாதார் சினங்காமங்களவுகொலை
பாரின்பானச்சியடும் பாவமுடித்தவரெல்லாஞ்
சூரின்பானரகெய்திச் சோகினத்தோடுளைந்தெரிவார்.

உரை. — மீளவும் பசாசுகளன்றி நரகத்திற்கிடப்பவராரென்றுவினவினீரோ, ஒன்றாய்நிற்கு மெய்க்கடவுளைவணங்காதவரு மவனருளிச்செய்த வொன்றாய்நிற்கு மெய்வேதங்கற்பித்தமுறையினடவாதவருங்கோபமுங்காமமுங் களவுங்கொலையு மென்றிவையெல்லாவற்றையும்விரும்பிச் சாவானபாவங்களைமுடித்தவரு மிவரெல்லாரு நரகத்தில்விழுந்து பசாசுகளோடெக்காலத்தும்வருந்தி வேவாரென்றாரென்க. (அ௨)

வீய்த்துணையுமகித்துணையும் வேழமுடனரித்துணையுந்
தீய்த்துணையுஞ் செயிர்த்துணையுஞ் சீறியதீமையார் துணையு
நோய்த்துணையுஞ்சினத்துணையு நாறியடித்துரஞ்சினந்த
பேய்த்துணையுமன்றிநலம் பெறுந்துணையற்றிருப்பரிதே.

உரை. — நரகில்விழுந்தமனிதர்க்குள்ள துணைகளோவெனிற் கொல்லும்வேங்கைகளுஞ் சீறினபாம்புகளு மதத்தயானைகளுங் கொடியசிங்கங்களு மவியாதசெந்தீயு மீளாததம்பாவங்களு மலறினகர்த்ததுரோகிகளுந் தீராதநோய்களுந் தாம்பிறரைவெகுண்டகோபமுந் தாந்தம்மைச்சினந்த வெகுளியுந் தம்மையோயாதடித்துபாதிக்கும்பசாசுகளு மென்னுமித்துணைகளன்றி நற்றுணையொன்றின்றி யங்கேயிருப்பதரிதேயென்றானென்க. (அ௩)

புல்லவையேபூரியராய்ப் புழுங்கியவெஞ்சினத்தினராய்க்
கொல்லவையேகுணுக்கினங்கள் கொத்தழலிற்சீறியுடன்
றல்லவையேசெவிக்கேட்ப தல்லதடுத்துயராற்ற
நல்லவையேயொன்றனைக்கு நற்றுணையற்றிருப்பரிதே.

உரை.—அங்ஙனந் தம்மைச்சூழ்ந்தயாவருஞ் சண்டாளரும் புழுங்கினசினத்துக்கொடியருமாகித் தம்மையடித்துக்

கொல்லும்பசாசுக ளழவினுமழன்று சீறிமுழங்க வகோரத்
தீயவோசைகள் செவிபிளக்கக்கேட்பதொழிய வடைந்தது
யரையாற்றவிரங்கி நல்லதொன்றினைச்சொல்லு மொருநற்
றுணையுமின்றி யெக்காலத்துங் கிடப்பதரிதேயென்றுனெ
ன்க. (௮௪)

இத்துணைகொண்டுளமாழ்கி யெய்தியதன்செயிர்செ
ய்யு
மத்துணைகொண்டொழியாதா லலைந்தலைந்துட்டுயர்பொங்க
மைத்துணைகொண்டிருண்டபுகை மண்டியெழுமிருட்சிறை
யாய் [னரோ.
மொய்த்துணைகொண்டெரிப்பீடை முறைமொழிவகேண்மி

உரை. — இத்தன்மைத்துள்ள துணைகளோ டவனவன்செய்தபாவங்கள் துணையாய்நின் றெக்காலமுமொழியாமையானரகில்விழுந்தயாவரு மலைந்தலைந்தெந்நாளுந் துயர்கள்மிகவு முளத்திற்பொங்க மயக்குவித் திருண்ட புகையேமண்டியிருட்சிறையாகிப் போர்க்களமாகி பெரியுநரகத்துள்ளபீடைகளின்முறையை நான்சொல்லக் கேட்பீராகவென்றுனென்க. (௮௫)

வேறு.

நோய்நிலைநிரயங்கொண்டபற்பீழை நுதலினுட்ப
னிப்பவேயூழித் [டா
தீய்நிலையென்றுலுதவியவின்ன தீயெனவுணர்தலும்வேண்
வேய்நிலைவரையைநக்கினுலைத்தீ வெந்துகண்ணிமைக்குமுன்
னுருகக் [தீயே.
காய்நிலைகொண்டுநரலைநிலையிற் காய்கொழுந்தெழுந்தெரி

உரை. — சகலநோய்நிலையாய்நித்து நரகத்துள்ள பலபீடைகளை நினைத்தமாத்திரத் துள்ளநடுங்கியஞ்சாநிற்ப நரகமே யூழித்தீயினிலையதென்று விப்பூவுலகின்மனிதர்க்குதவுந் தீயைப்போலவென் றுணர்தல்வேண்டாம், அத்தீநரகினின்று மேற்கிளம்பிக் குளுமைமிகுதியான் மூங்கினிலையாய்நிற்கு முயர்ந்தமலையை யத்தீயினொருகொழுந்து நக்கினுற் கண்

ணிமைக்குமுன்னே யம்மலைவெந்துருகும்படி கொடிதாய் வேகுங்குணத்தையுடையதாகு நரகத்திற் கொழுந்துவிட் டெரியுஞ் செந்தீயென்றானென்க. (அசு)

ஆதிதன்னருளித்தழலைநல்லவர்க்கு மாதரவுதவியிற்ப
டைத்து
நீதிதன்மலிந்தசினத்திறங்காட்டி நெறிதவிர்தீயரைத்தீக்கப்
பூதிதன்னழலைப்படைத்தனனென்றாற் பொருவவிவ்விருதழ
லேக்கிற் [நிலையே.
சோதிதன்முகத்துமின்மினிபோன்றச் சுடர்முகத்திச்சுடர்

உரை.—ஆண்டவ னிப்பூவுலகுள நெருப்பினை நல்லவர்க் குமுதவியாகத் தயைபுரிந்துண்டாக்கி நரகிலுள்ளநெருப் போவென்னி லளவிறந்தநீதியின்சினத்தையுந் திறத்தையுங் காட்டிப் பாவிகட்காக்கினையாக வத்தீயைப்படைத்தானென் றபொழுதே யிவ்விருவகைத்தீயொப்பநோக்கிற் சூரியன்மு ன்னே மின்மினிப்பூச்சிபோல நரகத்தீமுன்னே யிவ்வுலக ழலே தோன்றுமென்றானென்க. (அஎ)

பொறிப்படப்புழுங்கிக்கொழுந்துவிட்டெரிந்து பு
கைத்திரளிருண்டெழமண்டி [வெந்து
நெறிப்படச்சுடராச்சுடச்சுடச்செந்தீ நீறுமாகாதெலாம்
குறிப்படப்புணர்ந்தசெயிரளவுடற்றிக் குடைந்துடல்கிழித்
தவாய்புக்குச் [கெரியுமிழ்ந்தெரிவார்.
செறிப்படத்திரண்டுவெளிப்படக்கண்வாய் செவிகள்மூக்

உரை.— அத்தன்மைத்தாகிய செந்தீப் பொறிகள்சிதற ச்சினந்து கொழுந்துமேலெழவெரிந்து புகைதிரண்டிருண் டுமண்டி நீதியின்றன்மையாற்சுடராமற் சுடச்சுட்ச் சுட்ட பொருளு நீறாகாமல்வேகாநிற்பக் குறியறிந்துசுட்டாற்போ ல வவனவன்செய்த பாவத்தளவாக வத்தீயும்வெகுண்டுவே கக் குடைந்தவுடலிற் கிழித்தவழியிற்புகுந்து கூடித்திரண்டு வெளிப்படும்படி கண்ணும் வாயுஞ் செவிகளு மூக்குந் தீ யைக்கொப்பளியாநிற்ப வென்றும்வேவாரென்றானென்க. (அஅ)

படுப்பதற்கமைந்தபூவணைதீயே படும்பசிக்குணவுகடீ
யே
யுடுப்பதற்கணியுங்கலிங்கமுந்தீயேயுயிர்ப்புளியாவியுந்தீயே
கடுப்பதற்கெரிந்ததீப்புனலாட்டிக் கனற்கடனீங்கிலநீந்தி
யடுப்பதற்கணையுங்காண்கிலமூழ்கி யலைந்தலைந்தெரிந்துளைந்
தயர்வார்.

உரை.—அங்ஙனம் படுத்துக்கொள்ளும்படி பூமெத்தை தீயே, பசித்துண்பதற் குணவுதீயே, உடுத்தணிவதற்காபரணமுஞ் சீலையுந்தீயே, மூச்சினைவிட்டால் வருமாவிதீயே, குளிப்பதற்காறுகக் கடுத்தெரிந்ததீயே, அங்ஙனந்தீக்கடற் பிரியாமனீந்திநீந்திச்சேருங்கரையுங்காணமன் முழுகியலைந்தலைந்து வெந்தெரிந்து நொந்துளைந்து தாமென்றுமயர்வாரொன்றுனென்க. (அகூ)

சூளையிலடுக்கித்துறுவியகல்லோ சுழன்றனபூட்டையி
ற்றிலமோ [ட்கழையோ
மூளையிற்புதைமூட்பிணங்கலோ நாணி முறுக்கதோகதிரினு
பாளையிற்றுவன்றமுழுகைகளோதம்மிற் பதைப்பவுண்ணெரு
ங்கிய தன்மை [வெந்தெரிவார்.
பூளையினெய்யங்குரம்பையயர்பிறழாப் புதவெரிபுதைத்து

உரை.—பாவிகளத்தீயி லெங்ஙனங்கிடப்பரென்னிற் சூளையிலடுக்கப்பட்டு வேகுங்கல்லுக்களைப்போலவுஞ் சுழன்றுவருஞ் செக்கிலிட்ட வெள்ளுப்போலவுந் தம்முட்பின்னப்பட்டுச் சேற்றிற்கிடக்குமுள்ளுப்போலவும் விசைபடமுறுக்கின வில்லினுணிபோலவு மாலைக்கதிரினுட்பட்டு நெருங்கின கரும்புபோலவுந் தென்னம்பாளையின் மிகவுநெருங்கிக் குவிந்தவரும்புகள்போலவு மிலவம்பஞ்சினு நொய்யவுடலோர் நரகில்விழுந்தவளவிற் றம்முண்ணெருங்கி யடுக்கப்பட்டுச் சற்றும்பிறழமாட்டாமற் றீயிற்புதைக்கப்பட்டென்றும் வெந்தெரிவாரொன்றுனென்க. (கூ0)

தூய்வளர்மலர்ப்பூஞ்சேக்கையைப்பரப்பிச் சூழகின
றும்புகைதோய்த்து [யங்கண்
மீய்வளர்செல்வோர்விளைத்தஞ்செயிரின் வினையினுனரகுழி

டீவளர்சுள்ளைபுதைத்துளிகால்கை திருப்பவுநீட்டவுமாற்று
நோய்வளர்வண்ண நூல்வளருணாயா னுதவிநானியம்பிடறே
ற்றேன்.

உரை. —அங்ஙனந் தூயமலர்ப்பூமெத்தையைப் பரப்பி வாசவகிற்புகைசூழத் தவழக்காட்டி யதின்மே லிங்கேகிடக்குஞ் செல்வமிக்கோர் செய்தபாவத்தா னரகில்விழுந்து கொடுந்தீவளர்ந்த சூளையுட்புதைக்கப்பட்டவளவிற் காலுங்கையுந் திருப்பவு நீட்டவுமாட்டாமலவர்க்குவளரும்பீழையின்றன்மை நூல்தருஞ் சொல்லிலடங்காமையா னினைத்து நான் சொல்லுந்தன்மையல்லவென்றானென்க. (௯௧)

மிடைந்துதாந்தம்முட்டுபர்செயவொருபான் மிடைந்
தனகுணுக்கினமொருபா [னைத்து
லடைந்துதாமுடற்றிச்சிறியபகையோ டாகுலக்கடல்களைய
முடைந்துபாய்வெள்ளமுனிவொடுதீயோ ருடல்பதைத்து
ளைந்ததிர்ந்தலற [ந்துளைவார்.
விடைந்துபாய்வெறிகள்படுத்தியபீடை விட்டொழியாதெரி

உரை. — அங்ஙனரகில்விழுந்தவர்கிடக்கு நெருக்கத்தாற் றாந்தம்மு ளொருமுகத் தரிய துன்பங்களைச் செய்யவு மொருமுகத் தலறிமொய்த்தபசாசுகள் சினந்துசீறிப்பகையைச்செய்யவுங் கரையெலாமுடைத்த துன்பக்கடலேபாய்ந்து திரண்டவெள்ளமொய்த்த சினத்தோடு பாவிகள் தம்முடல்பதைப்பத் தாமதிர்ந்தலறக் கொடிதாய்ச்சினந்துபாய்ந்தபசாசுகள்விளைவிக்குந் துன்பங்களைவிடாமலுந் தாஞ்சாகாமலு மென்றும்வெந்து வருந்துவாரென்றானென்க. (௯௨)

சொரிவனமழைபோலழல்விடவொருபால் தோலுரி
த்தெரிப்பனவொருபா [ருபால்
லெரிவனவணைமேல்விரிப்பனவொருபா லீயநீராட்டுவதொ
கரிவனவுடல்கடுமிப்பனவொருபால் கனற்றிரளூட்டுவதொ
ருபால் [பேயே.
திரிவனவுருவால்வெருட்டுவதொருபால் தேறிலபகைத்தன

உரை.— பசாசுகள் பாவிகளையெங்ஙனம்வருத்துவதென்னில், விடாதுபெய்தமழையைப்போல வழலைப்பொழிவனவொருபால், ஒருபாற் றோலுரித்துடலையெரிப்பன, ஒருபாற் றீயாலழன்றமெத்தைமேற் பாவிகளைக்கிடத்துவன, ஒருபாலுருகினவீயத்தாற் குளிப்பாட்டுவன, ஒருபாற் றீயிற் கருகினவுடல்களைக்கண்டங்கண்டமாயறுப்பன, ஒருபாற் றிரண்டவழலைவாயிலூட்டுவன, ஒருபாற் றிரிந்துகாட்டின வெருவிடும் பலவுருவங்களைக்கொண்டு மனமிகநடுங்கச்செய்வன தேறுதபஞகையுள பசாசுகளென்றுனென்க. (கூரு)

வாசநெய்யென்னவுருக்கியவீயம் வலித்துடலொருங்
குடன்பூசிக் [பைபோர்த்துப்
கோசரநீரொன்றழற்புனலாட்டிக் கொற்றெரிச்சயமெய்ப்
பூசணமாகநச்சரவணிந்து பூந்தவிசுச்சிவாழ்கென்ன
வீசழல்விரிந்தமஞ்சமேலிருத்தி விரகரைவருத்துவதன்றே.

உரை.—மீளவும் வாசவெண்ணெயாகவுருக்கினவீயத்தையுடம்பிலெங்கும்பூசி வாசமலர்நீராக வழலுண்முழுக்காட்டிச் சினந்ததீயாகக்காய்ந்த விருப்புச்சட்டையையிட்டுப் பூஷிணமாக நஞ்சுபொழிந்தபாம்புகளைச்சூடி யிப்பூமெத்தைமேல்வாழ்கவென்று நெருப்பினைவிரிவாய்வீசின மஞ்சமேலிருத்திப் பசாசுகள் காமாதுரரைவருத்துவனவென்க.
(கூச)

சொறிபடரரியுமூரகமுமலமுஞ் சுடச்சுடவயிர்தென
ஆட்டி [மென்னப்
வெறிபடர்மலர்பூந்துகிற்கொடுபைம்பூ மெல்லுடனீவுது
பொறிபடர்கொழுந்திற்கனன்றகூனிரும்பாற் புண்படவுட
லெலாங்கீறிச் [ங்கடியே.
செறிபடர்விரகநோய்மருந்தென்னச் சினந்தணங்கியற்றுமா

உரை. — அங்ஙனங் காமாதுரரை யழன்றமஞ்சமேலிருத்தினபின்பு சொறித்தவனைகளையு நச்சுப்பாம்புகளையு நாறினமலங்களையு மயிர்தமென்று சுடச்சுடவூட்டி வாசமலரோடொத்த விப்பூம்பட்டாற் பூவினுநொய்யவுன்னுடலைத்

தடவுவோமென்று பொறிகள்புறப்படக் கொழுந்துவிட்டெரிந்த விருப்புத்துறட்டிகளா லுடலெலாம்புண்ணாகக் கொடிதாய்க்கீறி மிகநீர்கொண்ட காமநோய்க்கேற்ற மருந்திதுவென்று நகைத்தசினத்தோ டவரைமிகவும் வருத்தஞ்செய்வன பசாசுகளென்றனென்க. (கூ௫)

அள்ளுமாறிருண்டபுகைதுறுஞ்சிறையு டலகைகள்வருத்தியவண்ண [மாறகன்று
முள்ளுமாறகன்றநூலினுறகன்றங் குறைந்தவர்பொறுக்கு
தெள்ளுமாறகன்றீங்கவனவன்செய்த செயிரளவாகுவித்தங்க
ணெள்ளுமாறியற்றுந்தீவினைசெய்யு மிரும்பகையன்றதோ
ன்றுவதே.

உரை.—அங்ஙனங் கையாலள்ளத்தகும்படி புகையடர்ந்திருண்ட கொடுஞ்சிறையாகிய நரகிற் பாவிகளைப்பசாசுகளுபாதிக்குந்தன்மையே நாநினைக்குந்தன்மையுமல்லக் கற்றநூலிலடங்குந்தன்மையுமல்ல வங்கேகிடந்து வேகாநின்றவர்பொறுக்குந்தன்மையுமல்லவாகி யிப்பூவுலகில்வாழ்ந்தநாளிலவனவன் றெளியாமற்செய்தபாவத்தளவாய் வருத்தப்பட்டு நரகிற்கிடந்தபோதல்லோ நிந்தைக்குக்காரணமாகிய தீவினைமனிதருயிர்க்குச்செய்யும் பெரும்பகையங்கேதோன்றுமென்றனென்க. (கூசா)

வேறு.

மெய்முதற்பொறியைந்தொடுமேவிய
பொய்முதற்புணாபூரியர்பூத்தென
வைமுதற்பொறியின்வழியாங்கதிர்
மொய்முதற்புதவாகுலமொய்க்குமே.

உரை.—பாவிகள்தமதுடற்குவேண்டி யைம்பொறிகள் காட்டின பொய்யைப்பற்றிப் பாவங்களைக்கட்டிக்கொண்டமையாற் பஞ்சேந்திரியங்கள்வழியே வதிர்ந்தபோர்க்களமாகியநரகின் மிகவுந் துன்பமொய்த்து விளையுமென்றனென்க. (கூள)

நாறுபூம்புகைநாறுமகிற்புகை
யூறுநானமற்றூறியவாசமோ
டேறுகாமம்வளர்த்தவியற்கையாற்
பாறுபூதிபடர்கடன்மூழ்குவார்.

உரை.— அங்ஙனம் வாசபூம்புகையு மகிற்புகையும் புழுகு நானமற்றப்பரிமளமூறினநெய்களுந் தீயகாமத்தைவளர்த்தனவென்று நரகினீண் டகன்றதுர்க்கந்தக்கடலின் முழுகுவார் பாவிகளென்க. (௧௮)

பூதிநாறுபுகைத்திரளுசியூ
டேதியூதியுலகமுலாமல
மாதிநாறுமியாவுமலைக்கொடு
மோதிமோதவுடையருமூழ்குவார்.

உரை.— அங்ஙனந் துர்க்கந்தநாறித் திரண்டபுகையை நாசியுள்ளூதி யூதினதுமன்றிப் பூவுலகிலுள்ள வெல்லாமலமுதற்கொண்டு துர்க்கந்தநாறு மற்றவசுத்தங்களெல்லா நரகிலொருங்குடன்கூடி ஒருதுர்க்கந்தக்கடலாகி யலைகளைக் கொண்டு சூழமோதாநிற்பப் பாவிகளுள்ளேமுழுகிக்கிடப் பாரென்றானென்க. (௧௯)

கோதின்வாயுளங்கோடவின்பென்றடுந்
தீதின்வாய்வளர்தீயுரைகேட்டன
காதின்வாய்கடுங்கோல்கடுத்தேற்றிய
போதின்வாய்வழிபொங்கழலூற்றுமால்.

உரை.— மீளவும் பாவத்தைக்கொண்டு மனமேகோணும்படி யின்பத்தைக்காட்டிக்கொல்லுந் தீயவுரைகளை யினிதாய்க்கேட்டகாதிலே கோபித்தபசாசுகள் சுடுநெடுங்கோலை யேற்றினவளவி னரகிற்கிடந்தபாவிகள் வாய்வழியாக வோயாதழலைக்கொப்பளிப்பா ரென்றானென்க. (௱)

மாழ்வரோதையுமெள்மலியார்ப்பொடு
சூழ்வரோதையுஞ்சுட்டெரியாழியை

யாழ்வரோதையுமங்கணிஞெடொறுந்
தாழ்வரோதையுஞ்செய்துயர்சாற்றவோ.

உரை. — மீளவு மயங்கிப்புலம்புவாரோசையு நிந்தை சொல்லி முழங்கிச்சூழநிற்பாரோசையு மழன்றதீக்கடலி லமிழ்ந்துவரரோசையு நாடோறுநரகிற்புதிதாய் விழுவாரோசையு மிவையெலா மகோரமாய்த்திரண்டுகூடிக் காதிற்குண்டாகியதுன்பஞ் சொல்லுந் தன்மையல்ல வென்றுணென்க. (௱க)

இனியவுண்டலுமின்னலுரைத்தலுங்
கனியவின்பொடுகாசுமலிந்தவாய்
நனியழன்றநஞ்சுண்டுபகைத்தபேய்
முனியவந்ததுயர்முடியாதரோ.

உரை. — விலகின வின்பத்தையுண்டதனுந் தீயவை சொன்னதனுந் தமக்கின்பமென்று பாவிகள்குற்றங்களைச்செய்த வாய் மிகவுமழன்று நஞ்சினையுண்டு பகைத்த பசாசுகள்சினத்தோ டடைந்ததுன்ப மெக்காலமு முடியாதென்றுணென்க. (௱உ)

கைத்தயாவையுங்காய்கவும்புழு
மொய்த்தலூத்தையுமுற்றியபூதியுந்
துய்த்தவாயிரத்தஞ்சொரியத்துமித்
துய்த்ததீயுமிழ்ந்தோவியரற்றுவார்.

உரை. — அங்ஙனம் வாய்க்காக்கினையாகக் கசந்தயாவையு மழன்றநஞ்சினையும் புழுத்தவூத்தையையு நிறைந்ததுர்க்கந்தங்களையும் வாயா லுண்டு வுண்டவா யுதிரங்களைச்சொரிய வதையறுத் தறுத்தவாயிற் றீயிட்டமுக்கி யமுக்கினதீப் புறப்படப் பாவிகள்கொப்பளித் தென்றும்வருந்திப் புலம்பியழுவாரொன்றுணென்க. (௱௩)

காவிக்கண்வழிகாமமுண்டாரொன
வாவிக்கண்மலிவண்டுறழ்மொய்த்தபேய்த்

தாவிக்கண் கிழித் தூடுதழற்பொறி
தூவிக்கண்ணரூங் கண்டுயர்தோன்றுமே.

உரை.—கருங்குவளையொத்த கண்வழியாகப் பாவிகள் காமத்தையுட்கொண்டாரென்று பூத்ததடாகத்திடத்து மொய்த்தவண்டுகளைப்போலப் பசாசுகளூந்திரண்டு கண்களைக்கிழித்துக் கிழித்தவழியி லழலின் பொறிகளைப்போக்கி மதிக்கப்படாததுன் பங்களைக்கண்ணாலடைவாரென்றனென்க. (௱௪)

அஞ்சிவீமமழுங்குருக்காண்டலு
மெஞ்சிலாநிறைநீரிழிந்தோடலுந்
துஞ்சிலாவிழிதோயழறாவலும்
விஞ்சிநேரிலவெய்துறிமாழ்குவார்.

உரை. — அங்ஙனங் கண்ணுக்காக்கினையாகவஞ்சும்படியோயாமல் வெருவிடுமுருவங்களைக்காணவும் விடாமலழுதநீர் திரண்டோடவுந் துயிலாமற்கிடப்பவு மழலிற்றேய்ந்த கண்ணழலைப்பொழியவு நிகரொன்றின்றிக் கண்ணாங்மிகுந்ததுயரை யடைந்தபாவிகள் மயங்காநிற்பாரென்றனென்க. (௱௫)

நால்வகைப்பொறிநண்ணியைந்தாம்பொறிப்
பால்வகைப்புரைவிஞ்சியபான்மையாற்
சால்வகைப்புதவெங்கணுஞ்சாற்றுரை
மேல்வகைத்துயர்மெய்த்துயராகுமால்.

உரை. — சொன்னநாலுபொறிகளுங்கூடி யைந்தாம்பொறியாகியவுடலுக் கின்பத்தைத்தேடிவருகையி லுடலின்வகையால்வரும் பாவங்கள் மிகுவனவென்று நரகிலெங்குமிகுதியாய்த் திரண்டு சொல்வின்மேலுங் கொடியதுன்பங்களியாவு முடலுக்காக்கினையாவன வென்றனென்க. (௱௬)

ஏறுமொன்றிலவின்னணந்தீயரோ
மாறுமொன்றிலமாழ்கியழுங்குளந்
தேறுமொன்றிலதீக்கடன்மூழ்குவார்
காறுமொன்றிலவேகவெக்காலுமே.

உரை.—இங்ஙனந்தீயோர் முடியாமலு மாறாமலு மொன் றிற்றேறாமலு மயங்கிவருந்தி யெக்காலமு மளவொன்றின் றி வெந்துவெந்து தீக்கடலினுண்முழுகியமிழ்ந்துவா ரொன் றானென்க. (௱எ)

உலைகொடையிலிரும்புறழ்வெந்துவெந்
தலைகொடையிலமிழ்ந்தியமிழ்ந்தியே
கொலைகொடையுகங்கோடிகள்கோடி போய்ப்
புலைகொடையவர்பூதியில்வேகுவார்.

உரை. — அங்ஙன நீசப்பாவிகள் தீவளருமுலையிற்போட் ட விரும்பினைப்போலவெந்துவெந்து திரைகொண் டலையுந் தீக்கடலில்லமிழ்ந்தியமிழ்ந்திக் கொலையிற்கொடிய கோடா கோடியுகங்கள்கடந்துபோயினு மின்னமுநரகில் வேவா ரொன்றானென்க. (௱அ)

பாடியாடியின்பாதல்பகற்பல
நீடிலாகுலமாமெனநீங்குவாய்
வாடிலாவளர்நோய்கள்மலிந்துகங்
கோடிகோடிபொறுப்பதுகொள்கையோ.

உரை. — அங்ஙனம் பாடியுமாடியு மினியநாடகம் பல நாள்முடியாதாயி னதுதான் றுன்பமென்று பொறுக்கமாட் டாம னீங்கிப்போவாயே, குறையாமனரகில்வளர்ந்த சகலது ன்பங்களைக் கோடாகோடியுகங்கள் பொறுப்பது கூடுந்த ன்மையோவென்றானென்க. (௱கூ)

இலைகளெண்ணிமுகிற்றுளியெண்ணிநீ
ரலைகொணுண்மணலெண்ணியுமத்துணை
புலைகொள்பூதியிலாண்டுகள்போயினு
நிலைகொள்பீடையணீங்கிலவேகுவார்.

உரை. — அங்ஙன மரத்திலைகளையு மழையின் றுளிகளையு ங் கடலினுண் மணல்களையுமெண்ணி யவ்வளவாகநடுக்கம்வி ளைவிக்கு நரகத்திடைத் தத்தனைவருடம்போயினு முடியாமனி

லைகொண்டதுன்பங்களை நீங்கமாட்டாதபாவிக ளென்றும் வேவாரென்றானென்க. (௱௰)

நல்லதொன்றிலவாகுலநல்கிய
தல்லதொன்றிலவாவியமேற்கதிச்
செல்லதொன்றிலதீவினைசெய்பகை
வெல்லதொன்றிலயாண்டையும்வேகுவார்.

உரை.— அங்ஙன நன்மையொன்றின்றித் துயரைச்செய் யுங் காரணங்களல்லாதொன்றின்றி யாவலோடுவிரும்பின வான்வீட்டுக்கதியை யடையும்வழி யொன்றின்றித் தாங்கொ ண்டதீவினை தமக்குச்செய்யும்பகையைவெல்ல வழியொன் றின்றி யென்றென்றைக்கும் வேவாரென்றானென்க. (௱௰௧)

வேகவேகவிளிவுறவேண்டுவார்
நோகநோகவும்பொன்றிலர்நோன்றில
ரேகவேகவருந்துயரெஞ்சிலா
வாகவாகுலமாற்றிலர்விம்முவார்.

உரை.— அங்ஙனம் பாவிகள்வேகவேக வேதனைமுடியும் படி சாகவேண்டுவாராயினு மனமிகவருந்தி யென்றுஞ்சா காமலு மொய்த்ததுயரைப்பொறாமலு நாள்போகப்போ கத் துயர்கள்குறையாமற் றாமேநரகில்விழுந்த முதனாட்போ ல வெந்நாளுந் தோன்றாநிற்குந் துன்பங்களையாற்றா தழு துவிம்முவாரென்றானென்க. (௱௰௨)

வேறு.

அந்தோவந்தோவீட்டையிழந்திங் கழல்மூழ்க
வந்தோமந்தோபுன்னிமிழ்நக்கி வரைவின்றி
வெந்தோமந்தோமாறிலவேவோம் வினைமுற்றி
யெந்தோமந்தோவிப்பகையிட்டிற் றெனவார்ப்பார்.

உரை.— நரகில்விழுந்தவ ரிங்ஙனம்புலம்புவா ரெனி ல்; ஐயையோ வான்வீட்டுநன்மையிழந்து செந்தீயிலெஞ்

று முழுகாநிற்பநரகில்வந்தோம், ஐயோ-அற்பவோரினிமை நக்கினதிறு லிங்கேயளவொன்றின்றிவெந்தோம், இனிமாறு ததுயரோடென்றும்வேவோம், ஐயோ நாஞ்செய்த தீவினை முற்றி யெம்முயிர்க் கிப்பகைகூடித்திரண்டதல்லோவென் று புலம்பிமுழங்குவாரென்றுனென்க. (௱௰௩)

கெட்டோமந்தோமின்னனவொல்கிக் கெடுநன்றி
யிட்டோமந்தோவீட்டினிஃதே பயனந்தோ
பட்டோமந்தோபுன்னயனக்கிப் பரவீட்டை
விட்டோமந்தோவேகுதுமந்தோ வெனவேவார்.

உரை.—கெட்டோமே மின்னலைப்போலத் தோன்றியொழியும் பொய்யானநன்மைகளை வாழ்ந்தபொழுதிற் றேடிக்குவித்தோம், அவற்றைக்குவித்தபயனிதே. ஐயோபட்டோமே, நக்கினபுன்னன்மையாற் பரமவீட்டுவாழ்வுகளைக் கைவிட்டோமே, ஐயோ வென்றுமிங்கேவேவோமென்று புலம்பி வேவாரென்றுனென்க. (௱௰௪)

கண்மேல்வைத்தமாசெனவாசை கவருள்ளம்
விண்மேல்வைத்தவான்றிருவெண்ணு வெருள்வீங்கி
மண்மேல்வைத்தவாழ்வினையீட்ட மலிகள்வாய்ப்
புண்மேல்வைத்ததீத்திரள்சேர்த்தோம் புதவென்பார்.

உரை. — கண்மேல்வைத்தமாசுபோல மயங்கும்படியாசையை மனதிற்கொண்டமையால் வான்மேல்வைத்தசெல்வங்களையெண்ணுமன் மயக்கமிஞ்சிப் பூவுலகுள்ளபொய்யானவாழ்வுகளைக்குவிப்பதற்குப் பிறர்கைப்பொருளைத் திருடிப் பட்டபுண்மே லழலைக்குவித்தாற்போல நரகிலெமக்கித்துய ரெல்லாவற்றையுஞ்சேர்த்தினோமென்று வருந்துவாரென்றுனென்க. (௱௰௫)

ஆறுக்கொண்டேம்வெம்பகையாறு தடுகோபந்
தேறுக்கொண்டேம்வெங்கொலைசெய்தே பழிதீர்ந்தே
மீறுக்கொண்டேந்தீநரகந்தோ வெரிகின்றே
மாறுக்கொண்டேம்பேய்ப்பகையென்றே மருள்கிற்பார்.

உரை.—மீளவும் விடாதவெம்பகையைக்கொண்டு தேரு து கொல்லுங்கோபத்துடனே யெம்பகைவரைக்கொன்று பழியைத்தீர்த்தோமே, அதன்பயனாகமுடியாதநரகமடைந் தையோ இங்கேவெந்தெரிந்து தீராத பசாசுகள் பகைகொண் டோமேயென்று மயங்குவா ரொன்றனெனக. (ாயசு)

காதன்மிக்காக்கற்றவைகண்ணுக் கசடுள்ளத்
தாதன்மிக்காப்பற்றியகாமத் தமிழ்கின்றேம்,
நாதன்மிக்காநீதிவளர்த்த நரகெய்திச்
சாதன்மிக்காவேகுதுமென்றே தளர்கிற்பார்.

உரை.—மீளவு மாசைமிகுதியாற் கற்றவுணர்வுகளையுமெண் ணுமென் மனதிற்பாவமிகும்படி பற்றியகாமத் தமிழ்ந்தினே மே, அதின்பயனாக வாண்டவனடத்தின மிகுந்தநீதியின் முறையால்வளருநரகில்விழுந்து சாகாதசா வெந்நாளுஞ் செத் தவரா யிங்கே வேவோமேயென்று தளர்ந்துமயங்குவா ரொ ன்றனெனக. (ாயஎ)

மெய்யார்நன் னூல்வேதநகைத்து விழைவொத்த
மையார்புன் னூற்பற்கதையெண்ணி வடுமல்கப்
பொய்யார்மையார்தேவரோடந்தோ புதவெய்தி
மொய்யார்தீயின்மூழ்கினமென் றுண் மூரிகிற்பார்.

உரை.—மீளவுமெய்யான நூலையோதினவேதத்தைநா மேநகைத்துநமதாசைக்கொப்ப மயக்குவிக்கும்படி புல்லறி வாளர்கட்டின பலகதைகளை வேதமாயெண்ணிப் பாவமிகும் படிவணங்கின பொய்யுமயக்கமும்விளைவித்த தேவரோடுநா மு நரகில்விழுந்து விடாதுபொருதா நிற்குங்கொடுந்தீயின் முழுகிக்கிடக்கின்றோமேயென்று முறிந்துவருந்துவாரொன் றனெனக. (ாயஅ)

ஆய்வாரொண்ணூநல்லறநீத்துத் தழிவுற்றார்
நோய்வார்நஞ்சுண்பார்பசியாற்றார் நுகர்வாற்றார்
காய்வாரார்ப்பார்வீழ்ந்தெரியாழ்வார் கரைகாணுத்
தோய்வார்நீந்தாரூழியும்வேவார் துகடையார்.

உரை.—மெய்யை யாராய்ந்தவர்வாய்மொழிகளை யெண்ணாது நல்லறத்தைநிந்தித் தழிந்தபாவிகளெக்காலமுநோயை விளைவிக்குநஞ்சினையுண்பார், உண்டும்பசியையாற்றார், அதனையுண்பதும்விடார், மிக்கசினத்திற்காய்வார், முழங்கியார்ப்பார், விழுந்துதீக்கடலின்முழுகுவார், கரையுங்காணாமலுநீந்தமாட்டாமலுந்தோய்ந்துதோய்ந்தென் றும்வியாததீயோடெல்லாரும்வேகாநிற்பாரென்றானென்க. (௱௰௯)

அணியும்பாங்கேகாம்மறுத்தீங் கறமெய்தத்
துணியும்பாங்கேநிற்கரிதென்றாய் சுடுமழற்
கணியும்பாங்கோநிற்கெளிதென்பாய் கணைவார்வில்
பணியும்பாங்கோடொன்னலரோற்றும் பரிசன்னோய்.

உரை.—பொதுமொழியாக விவையெலாஞ்சூசைசொன்னபின்பு வாமனைநோக்கிச்சொன்னான்: தப்பாதம்பெய்தவுன்வில்லைவணங்கி யுன்பகைவர்புகழுங்குணத்துமிக்கோனே யின்பமென்று நீமனதிலணிந்த காமத்தாசையை மறுத்து நல்லறமடைதற்குத்துணிவ துனக்கரிதென்றாயே, ஆயினுஞ்சுடுந்தீநரகிற்புதைக்கப்பட் டெக்காலமுமெரிவ துனக்கெளிதென்பாயோ வென்றானென்க. (௱௨௰)

நசையுற்றுற்றதீதறநொந்தே நடையொன்றே
வசையுற்றுற்றதீயுறியென்றும் வயாவொன்றே
தசையுற்றுற்றயாவருமிஃதே தவிராதென்
றிசையுற்றுற்றநூல்விதிசொன்னா னிசைமேலான்.

உரை.—ஆசையாற் கொண்டபாவங்களைத்தீர்ப்பமனநொந்து நல்லொழுக்கம்வேண்டும், இல்லாதாயி னிந்தைபட்டுத்தீநரகமிழ்ந்தி யெக்காலத்தும் வருந்தல்வேண்டும், இவ்விரண்டிலொன்றே யுடலோடுதோன்றினமனிதர்க்கெல்லாந் தவிராதேயென்று பொய்யாதநூலாகச்சொன்னான் சொல்லுத்தன்மையின் மேலானசூசையென்க. (௱௨௧)

வீண்டாரோறுட்பட்டெனவன்னான் விரிநன்னூற்
கொண்டாரன்னார்கொண்டவையுள்ளிக் குழைகின்றார்

கண்டாரொன்றுக்கண்கள்புதைத்தார் கலுழ்கின்றார்
மண்டார்வேட்கைத்தீயறவிஃதே வழியென்பார்.

உரை.— மேகத்தினின்றிழிந்தவிடி யுளத்திற்பட்டாற்போலச் சூசைவிரிவாய்ச்சொன்ன வேதநூலையுட்கொண்டுகேட்டயாவரு மவற்றைமனதிலெண்ணிக் குழையாநிற்பக்காதாற்கேட்டவை கண்ணாற்கண்டதன்மைத்தாகி வெருவிக்கண்களைப்புதைத்தழாநிற்ப மனதின்மொய்த்தவேட்கை யென்னுந்தீயை யவிப்பதற் கிதுவேவழி யென்பாரென்க. (௱௨௨)

இன்பாற்கொண்டபாவமியற்று மியல்பிஃதேற்
றுன்பாற்கொண்டநோன்பினிதென்பார் துகள்மல்கிப்
பின்பாற்கொண்டவாகுலமெண்ணார் பிறழாதோ
ரன்பாற்கொண்டதீதினிதென்பா ரதுவென்பார்.

உரை.— இன்பமென்று கொண்டபாவத்தால்வரும்பயனரகமாயிற் றுன்பமுகத்தைக்காட்டினதவ மினிதென்னத்தகுமே, பாவங்கள்மிகுந்தபின்பு நரகில்வருந்துயர்களையெண்ணாதவரல்லோ விடாதவாவலோடுதேடினதீவினை யின்பமென்பாரென்று சூழநின்றவர்சொன்னாரென்க. (௱௨௩)

பொன்னேரொள்பூஞ்சாயலைவெஃகல் புதவுய்த்தே
லன்னேருண்டோவோர்பகைகாத லலதென்பார்
மின்னேரொல்கிமாறியவின்ப வினைகாட்டிக்
கொன்னேமாளும்வாழ்வுயிருண்ணுங் கொலையென்பார்.

உரை.—பொன்னொப்பக் கதிரைச்செய்தபூமுகத்தின்சாயலைவிரும்புத லெரிநரகத்திற்குவழியாகி லாசையின்மேலுயிர்க்கொருபகையில்லையென்பார், தோன்றியொழியுமின்னலைப்போலவின்பமுகத்தைக்காட்டி வீணாயழியுமிப்பூவுலகின்வாழ்வுகளுயிலாக்கொல்லும்பகையேயென்பாரென்க. (௱௨௪)

நரகங்கொண்டதீநிலையிஃதேல் நனியோர்ந்தால்
விரகங்கொண்டதீயையவிக்கும் வினையென்பார்
பிரதங்கொண்டதீயவர்வைகும் பெரிதாழல்
வரதங்கொண்டதாமுறும்வீட்டின் வரமென்பார்.

உரை,— நரகத்தின் றன்மையிதாகி லதனை நன்றுயாராய்ந் தகாலத்துக் காமமெனுந்தீயையவிக்குமே நரகத்தீயென்பார், தீயோர்கலங்கிக்கிடக்குநரகமேகற்றகல்விமுறையோடுநாம் வான்வீட்டிற்சேரும்படிவழியதாமென்பாரொன்க.(௱உ௫)

என்னநொந்தார்நொந்துணர்வெய்தி யெரியத்தீ
யுன்னவுள்ளார்தீயறவுள்ளத் துறுதண்ணந்
துன்னவாழ்ந்தார் நல்லறமெய்தத் துணிவுற்றார்
மின்னவிண்ணில்வீழ்துளியொப்ப விழிநீரார்.

உரை.—அங்ஙனஞ் சூழநின்றயாவரு மனதினொந் துணர்விற்றேறி யெரிநரகத்தீயை யாராய்ந்ததன்மையி னுள்ளே பாவத்தாற்பற்றினதீ யவிந் தினிதாய்க்குளிர்ந்து வாழ்ந்து நல்லறவொழுக்கத் தொழுகத்துணிந்தார் மின்னோடு மேகத்தினின்றெழுகு மழைத்துளியொப்ப வழுங் கண்ணுடையாரொன்க. (௱உ௬)

வேறு.

மதுக்கலத்தலர்பூவாயான் வழிந்ததேனொத்தசொல்லால்
விதுக்கலத்திழிந்தவில்போல் விரித்தநூலனைத்துங்கேட்டுப்
புதுக்கலத்தெரித்ததீம்பால்பொங்கல்போ லுளத்திற்பொங்கி
யொதுக்கலற்றருவிக்கண்ணீ ருயிர்த்தனன்வாமன்மாதோ.

உரை. — இவையெலாமாதையின் மதுமலர்வாயான் சுசைபொழிந்ததேனோடொத்த வினியசொல்லாற் சந்திரனுமிழ்ந்த தெளிந்தபாற்கதிரையொப்ப விரித்தவேதநூலனைத்தும் வாமனேகேட்டுப் புதுக்கலசத்தெரித்தபால் பொங்குவதுபோல மனத்தாபத்துள்ளேபொங்கி யதனையொடுக்க மாட்டாம லாறுகக்கண்ணீராவிடாநின்றனனென்க. (௱உ௭)

நூற்கடற்றுறையின்கேள்வி நுணுங்கியபுலமையோன் சொற்
பாற்கடற்பதும்மன்ன படர்ந்தகண்ணிமையாக்கேட்டு
மேற்கடற்றிரைகள்பொங்க மேல்வளியடித்ததேபோ
னூற்கடற்றுணையேறு னவையறுத்தெழுந்துசொன்னான்.

உரை. — நூற்கடலனைத்தையுங் கடந்தபுலமையோன் குசைவாய்மொழி பாற்கடலாகக்கொண் டதிலேமலர்ந்ததாமரையாகத் தன்கண்ணிமையா துரைத்தயாவையுங்கேட்டுக் கடலோடொத்தநால்வகைத்தானைக் கோரேருகநின்றவாமன் மேற்காற்றடித்து மேற்கடல்பொங்கினதுபோலத் தன்னைப் பாவத்திவிருத்தின நினைவெலாமறுத்தெறிந்தெழுந்துசொன்னானென்க. (௱உ௮)

தீயவர்செல்லுஞ்செந்தீத்தேக்கிருணிலத்தைக்காட்டித்
தூயவர்செல்லும்வீட்டைத் துடர்வழிகாட்டல்செய்தாய்
காயவர்குளிர்ப்பத்தண்ணங் கருணையோயெனவங்கண்வான்
மீயவருவப்பத்தாண்மேல் வீழ்ந்துநீராட்டினானே.

உரை. — வாம னெங்ஙனஞ்சொன்னானென்னில், காயுமனத்தவரைக் குளிர்ப்பிக்குங் கருணையுடையோனே தீயோர் செல்லு மிக்கழன் றிருண்டநிலமாகிய நரகத்தைக்காட்டி நல்லோர்செல்லும்வான்வீட்டுக்கதியின்வழியைக் காட்டினாயென்று வாமன்றிரும்பினதற்கு வானவருமகிழாநிற்ப வ்வவன் குசைபாதத்தின்மேல்விழுந் தழுங்கண்ணீரா லவற்றைக் கழுவினானென்க. (௱உ௯)

விழுந்துறவெடுத்துடாபம் விளைத்தகட்கலுழிப்போற்
யழுந்துறத்தழுவிமெய்யோ டார்வமுமுயிருமொன்றச் [றி
செழுந்துறவிறைவன்சொன்னதேறியவுணர்விற்றேறி[தோ.
யெழுந்துறத்தெளிந்தநெஞ்சா னிதனைமீண்டுரைத்தான்மா

உரை. — அங்ஙனங் காலில்விழுந்தவாமனைச் குசையெடுத்து மனதிற்கொண்ட தாபமிகுதியா லவனழுதகண்ணீரைத் துடைத்து மார்போ டிருவரன்புரூயிருமொருப்பட விறுகக்கட்டிக்கொண்டு துறவோர்க்கெல்லா மிறைவனாய்நின்றகுசை யப்பொழுதுரைத்தவுறுதிகளா லவன்முழுவதுந்தேறியெழுந்து தெளிந்தநெஞ்சினனாயவாமன் மீளவுஞ் சொன்னானென்க. (௱௩௰)

கான்முழுதிறைஞ்சுநோன்பின் கடற்கரைகண்டதல்
லோய்

தேன்முழுதிறைஞ்சுந்தீஞ்சொற் றேறலைத்துளித்துநீயே
வான்முழுதிறைஞ்சு நன்னூல் வழங்கியவோதிகேட்க
ஊன்முழுதிறைஞ்சுங்கோட்டி னுவாமதமாறிற்றன்றே.

உரை.—வாமனெங்ஙனஞ்சொன்னானென்னில், கானகம் வணங்குந் தவக்கடற்கரையைக் கண்டநல்லோய் நீதேனினு மினியசொல்லால் வானுலகத்தோர்வணங்கும் வேதநூலைவிரித்த வுணர்ச்சிகளைக்கேட்டமையாற் கொலைக்கஞ்சி யூன்வணங்குங் கொடுங்கொம்புடைய விந்தயானைமதமேமாறிற்றென்றானென்க. (தன்னைமதயானையென்றான் வாமனென்க.) (௱௬௧)

உள்ளுறத்தெளிநூலாற்கீழுலகமேசுடுந்தீயென்றா
யள்ளுறக்காமத்தீயை யவித்ததண்பொய்கையன்றே
வள்ளுறப்புகைமொய்த்தங்கண் மண்டிருள்தவழுமென்றாய்
தெள்ளுறக்கண்முன்னிட்ட திருவிளக்காயிற்றன்றே.

உரை.— நீயேதெளிந்தநூலான் மனதிற்றைக்க நரகமே சுடுந்தீயென்றாய்,ஆயினு மனதினிறைந்தகாமத்தீயை யவிப்பதற்குரிய குளிர்ச்சியுள்ளதடாகம்தாகி நரகிற்புகையேமண்டியிருண்டநிலமதென்றா யாயினு மெனக்குமனந்தெளியும்படி கண்முன்வைத்த திருவிளக் காயிற்றென்றா னென்க. (௱௬௨)

சூழல்தரப்புகைகணாறுந் தூய்மலர்த்தவிசிறேம்பூ
நிழல்தரத்தொடலைக்கூந்த னீர்மையார்தோண்மேற்றுஞ்சி
யழல்தரக்கனன்றமஞ்சத் தழன்றழன்றாழிகாலம்
புழல்தரப்புண்பட்டங்கம் பொடிபடவினிதோநெஞ்சே.

உரை.—வாமன்றெளிந்தினித் தன்னைநோக்கிச்சொல்வான்: அகிற்புகைமுதற் பலபூம்புகைகளைச் சூழக்காட்டி வாசமதுமலர்மெத்தையிற்கிடந்து விளங்கின மணமலர்மாலைசூழ்ந்த கூந்தலாரதுகையின்மே லிக்காலத்துறங்கினதன்மையா விறந்தபின்ன ரெரிந்தசெந்தீமஞ்சமேற்கிடந்து வெந்தழன் றாழிகாலத் துடலெல்லாம்பொடியாகத்துளைத்து நெடும்புண்படுவதினிதோவென்னெஞ்சே யென்றானென்க. (௱௬௩)

உலைவைத்தபொறிச்செந்தீயோ டென்றவேனுருவிப்
மலைவைத்தவருவிக்கண்ணீர்மலிந்தழுதினியதென்றே [பாய
சிலைவைத்தபகழிச்சாயற் றிருநுதல்விழியைவெஃகி
விலைவைத்தமகளிர்வஞ்ச வினைக்கொடுமேருண்டாய்நெஞ்சே.

உரை.—ஊதுமுலையிற் பொறிகளைவிட்டெரியுஞ் செந்தீயுஞ் சினந்தழன்றகொடியவேனு மிருகண்ணுருவிவிடாமற் பாய்ந்து மலையினின்றெழுகுமாறுபோல வவியாதகண்ணீரை நரகிலென்றுமழாநிற்ப தினிதென்றே வில்லிற்றொடுத்த வம்புகளொப்ப வழகிய நுதற்கீழ்வைத்தகண்களை விரும்பி விலைமாதர் வஞ்சத்தோடுமேயங்கினு யென்னெஞ்சே யென்றுனென்க. (௩௯௪)

தீய்த்திரடளிர்த்தநோயாற் றீயவர்புலம்புமோதை
பேய்த்திரடளிர்த்தவோதை பிளந்தகாதுணவின்பென்றே
வீய்த்திரடளிர்த்ததேன்போல் விளம்பியசொல்லென்றெண்ணிப் [நெஞ்சே.
போய்த்திரடளிர்த்தபொய்யிற் போழ்ந்தவாய்விழைந்தாய்

உரை. — நரகிற்றிரண்ட செந்தீவிளைவித்ததுயர்களைப் பொறுக்கமாட்டா தங்கேதீயோரோயாமற் புலம்பிமுழங்குமோசையும் பசாசுகள்திரண்டு சினத்தோடதட்டிக் குமுறுமோசையு மதிர்ந்தமிகுதியாற் பிளந்தகாதுகளோயாதவற்றைக்கேட்ப தின்பமென்றே மலர்வாய்திரண்டொழுகுந் தேனைப்போல வினியசொல்லென்றெண்ணி நிறைந்தபொய்பா லுயிரைக்கொல்லும் வாய்மொழிவிரும்பினுயென்னெஞ்சேயென்றுனென்க. (௩௯௫)

அலைவிரவூழல்வைகி யரவினஞ்சயிர்ந்தெஞ்ஞான்றுங்
கொலைவிரவூழிச்செந்தீக் குளித்தலேயினியதென்றே
வலைவிரவணியிற்பின்னி மலர்தவழ்கூந்தல்வெஃகிப்
புலைவிரவுணர்ந்தகாமப் புணரியிற்குளித்தாய்நெஞ்சே.

உரை.—கடலோடொத்த தீநரகத்தென்றுங்கிடந்துபாம்புகளுமிழ்ந்தநஞ்சினையுண்டுண் டெக்காலத்துங் கொல்லா

து கொல்லுமூழித்தீயிற்குளிப்ப தின்பமென்றே நல்லுயிரகப்படும்படி யாபரணங்களைக்கொண்டு வலையின்றன்மையாற்பின்னப்பட்டு மதுமலர்சூழ்ந்தகூந்தலைவிரும்பித்தளர்ந்தவுணர்வோடுநினைத்த காமக்கடலிலமிழ்ந்திக்குளித்தா யென்னெஞ்சேயென்றானென்க. (௱௯௬)

கோடிழந்தழியும்பைம்பூங் கொள்கைவாடெழிலைப்
பேணி
யேடிழந்தொழுகுந்தேன்போ லியைந்தபுல்லின்பநக்க
வீடிழந் தாழிச்செந்தீ வீழநல்லறங்கள்செய்யும்
பீடிழந்தொழுகுவாரிற் பேதையரில்லைநெஞ்சே.

உரை.—பூத்தகொம்பிற் பிரிந்த மதுமலரழிவதுபோலநில்லாதழியுமழகினைப்பேணிச் சிறியதோர்பூவிதழ்மேலேதூங்கிவிழுமோர்தேன்றுளியொத்தசிற்றின்பத்தைநக்கி வான்வீட்டுவாழ்வுகளிழந்து முடியாத செந்தீநரகில்விழும்படிக் கறத்தினால்வருமாட்சிமையின்றி நடக்கும்பாவிகளைப்போலேயிப்பூவுலகிற்பேதையரில்லையென்னெஞ்சேயென்றானென்க.
(௱௯௭)

கால்வழிகாயும்பூவுங் கடியுமென்றிளமைநம்பா
மால்வழிதளிர்த்தகாம வழிவளர்நிரையந்தந்த
நூல்வழியொழுகல்விள்ளா நுகர்ந்தநஞ்சுமிழ்ந்தேயுய்தி
சூல்வழிசனித்தபாவத் துடர்பினோடீழ்த்தநெஞ்சே.

உரை.—பெருங்காற்றின்முகத்து முதிராதகாயுமலராதபூவுமுதிருமென்றறிந் துள்ளவிளமையைநம்பாமன்மயக்குவிக்குங்காமத்தால்வளரு நரகவேதனை யொருநூலாகக்கொண் டதைநினைத்து நன்னெறியொழுக்கம்விடாம லிந்நாள்வரைக்குமின்பமென்று நீயுண்டநஞ்சினைக்கக்கிப் பிழைப்பாயாகச்சென்மத்திற்கொண்டபாவத்தைத் துடர்ந்துவந்த பலதீவினைகளோ டழியாநிற்குமென்னெஞ்சே யென்றானென்க.
(௱௯௮)

வள்ளியவுருவத்தீமுன் வல்லையேயுருகும்வண்ணத்
துள்ளியவருமையாவு மூழன்முற்கணாந்துநீங்கி

யெள்ளியவுள்ளங்கொண்மா சிசைத்த நூற்பளிங்கிற்கண்டு
தெள்ளியதவநீராட்டிச் செயிரறத்தெளிதிநெஞ்சே.

உரை. — மெழுகினாற்செய்தபாவை தீமுகத்துருகியழி வதுபோல நான்முன்றருமவழியி னினைத்தவருமையெல்லா ங் கெட்டநரகத்தீமுகத்துக்கரைந்து நீங்கினதாகி நிற்கைப ட முன்மனதிற்கொண்டபாவமாகியமாசுகளைச் சூசைமா முனிசொன்ன நூலாகிய தூயகண்ணாடியிற்கண்டபின்பு ந ற்றவமாகிய தெளிந்தநீரிற்குளித்துப் பாவமலங்களொழிந் து தெளிவாயாகவென்னெஞ்சேயென்றானென்க. (௱௩௯)

தொல்வினையினியவென்று துகளுறத்தோன்றுங்காலு
நல்வினையரியவென்று நலங்கெடத்தோன்றுங்காலுங்
கொல்வினைநிரையச்செந்தீக் குளிப்பநல்லுணர்விற்றாழ்ந்து
வல்வினையூக்கம்பூண்டு மருளலென்னெஞ்சேயென்றான்.

உரை.— முன்னர்விரும்பினதீவினை யின்பமென் றினிப் பாவம்விளையும்படியே தோன்றுங்காலத்துஞ் செய்யத்து ணிந்த நல்வினையரிதாய்த்துன்பமென் றினியொழுக்கங்கெ டும்படி தோன்றுங்காலத்துங் கொல்லாதுயிரைக்கொல்லு நரகத்தீயிற் குளிப்ப வுணர்வினோடங்கேதாழ்ந்து தளரா ததுணிவோடு மனவூக்கத்தைக்கொண்டு மயங்காயென்னெ ஞ்சேயென்றான் றெளிந்தவாமனென்க. (௱௪௰)

வேறு.

என்னவியம்பினகா
லுன்னருமின்பமுறித்
துன்னவர்சூழ்மகிழும்
பன்னரும்பான்மையதே.

உரை.—வாமனிவையெலாஞ் சொல்லுமளவிற் சூழநின் றவருணர்தற்கரியவின்பத்தோடடைந்தமகிழ்ச்சி சொல்லு ந்தன்மையல்லவென்க. (௱௪௧)

இனையவியற்றிய நூ
லனையவெமக்களவோ

வனையவருஞ்சுடரைப்
புனையவோர்பூணுளதோ.

உரை. — சூழநின்றவர் மகிழ்ந்துசொன்னதேதெனில், மனத்தைத்திருப்பி யிவையெலாமாவதற்குக் காரணமாகிய விவ்வேதநூலை யுவமைசொல்லித்துதிக்க நாம்வல்லவரோ? எல்லாவற்றையு மலங்கரித் துதித்து விளக்குஞ்சூரியன்வடிவுக்கு மற்றோராபரணமுண்டோ வில்லையென்றுரென்க. (௱சஉ)

ஐவழியாசுதரும்
பொய்வழிபோக்கியற
மெய்வழிமேவிநர
குய்வழியொன்றுளதே.

உரை.— பாவம்விளைய வைம்பொறிகாட்டிய பொய்யானவழியைவிட்டுமெய்வழியாகியவறத்தைவிரும்பி யெம்முயிர்பிழைக்கும்வழியா நரகமொன்றேயென்றுரென்க. (௱சஙூ)

காதலலாதுகடுஞ்
சாதவிலாதுதகு
மோதமொளித்துநர
காதலும்வித்ததுவே.

உரை.—ஆசையேயன்றி யுயிரைக்கொல்லும் பகையுமில்லை, ஆசையே கற்றநூலைமறக்கச்செய்து நரகவேதனைவிளைவதற்கு வித்தாகுமே யென்றுரென்க. (௱சச)

இறந்தனர்வேகுமெரி
பிறந்தனரோர்ந்துபெறிற்
றுறந்தனர்துஞ்சுளிவான்
சிறந்தனர்சீர்த்துவப்பார்.

உரை.—பாவிகளிறந்தபின் பெக்காலமும் வேகாநிற்கு நரகத்தீயைப் பிறந்துவாழ்பவர்நினைத்தா லவருமிறக்கும்பொழுதி லகிலேலவிழாமனீங்கிச் செல்வத்திற்சிறந்து வான்மேலென்று மகிழ்வாரென்றுரென்க. (௱சரு)

என்றனனொன்றெவருங்
கன்றினர்காட்சியுறி
நின்றனர்வீட்டுநெறி
சென்றனர்சீர்பெறவே.

உரை.— அங்ஙனஞ் சூழநின்றயாவருஞ் சொல்லிறைந்து காட்சியிற்றெளிந்து வான்கதியடையுநெறியிற் சென்று சிறந்தாரென்க. (௱௪௬)

அள்ளியவாமனரி
லெள்ளியயாவருமே
தெள்ளியசீரிறுதி
யுள்ளியன்றேத்தினரால்.

உரை.— மீளவு மூன்னேவாமன் மிகவடைந்தயாவத்தாலவனை மனதினிந்தித்தயாவரு மவனிப்பொழுது தெளிந்ததன்மையைக்கண்டு நினைத்ததுதிகளைவாயாற்சொல்லிப் புகழ்ந்தாரென்க. (௱௪௭)

செல்வருறுஞ்செயிரும்
வல்வருமாண்பறமு
மெல்வருமொத்தெவணுஞ்
சொல்வருதோற்றமதே.

உரை.— செல்வத்துயர்ந்தோர் மயங்கிக்கொண்டபாவமூந் திறத்துயர்ந்தடைந்த வறமுஞ் சூரியன்கிரணமுமொளியும்போலவாகி யெங்குந்தோன்றி யெவராலுஞ்சொல்லத்தகுவன வென்க. (௱௪௮)

வேறு.

தெளித்தகாலுரைத்தவிஞ்சை சிறப்புறவுழுதபூமி
யுளித்தகால்வித்தவென்னத் துணிவுறத்தெளிந்தவாமன்
விளித்தகாலுணர்ந்தஞானங் காய்ந்தகாற்சிதையுமோவென்
றளித்தகாலிதுவென்றாய்ந்த வருந்தவனினிதிற்சொன்னான்.

உரை. —இவையெலாமாகி யொருவன்றெளிந்தகாலத் தவற்று மீளவுமுறுதிகளைச்சொல்லுவதே நன்றாய்ப் புழுதியாகவுழுதபின் மழைபெய்தகாலத்ததிலே விதைப்பதுபோலவாகுமென்றுந் துணிவோடுதெளிந்தவாமன் மகிழ்ந்தவின்பத்துணர்ந்த ஞானம் பின்புதுன்பம்வந்து தன்மனங்காய்ந்தாற்கெடுமோவென்று மவனைமுழுவது மிரட்சிக்குங்காலமிதுவேயென்றுங் கருதினதன்மையா லருந்தவனாகியகுநைச மீளவுஞ்சொன்னனென்க. (௱சகூ)

ஐம்பொறிப்பகைகண்டஞ்சி யடக்கவினமைபோல்வாய்
[ணேல்
வெம்பொறிப்புதவையோர்ந்து விளைபகைசிறிதென்றெண்
பைம்பொறிப்பாந்தடங்கூர் பல்படமதநீர்க்குன்றிற்
செம்பொறிப்புகைக்கண்யானை சிதைந்துயிர்மாளுமன்றோ.

உரை. — குநைசயெங்ஙனஞ் சொன்னனென்னில், ஐம்பொறி யுயிர்க்குச்செய்யும்பகையைக்கண் டவற்றையடக்கினதன்மையி லாமையைப்போலவாகி யவியாதசெந்நீநரகத்தையாராய்ந்ததன்மைத் தப்பொறியால்வரும்பகை சிறிதென்றெண்ணல்வேண்டா, பொறிகள்படர்ந்த படநாகத்தின் கூர்ந்த சிறியதோர்பல்லுப்பட்டவளவின்மதமாகிய புனலிழிந்தோடு மலையொத்துயர்ந்து வெஞ்சினத்தெரிந்த கண்ணுடைய யானைமுதலாய்க்கெட்டுச் சாகுமல்லோவென்றனென்க. (௱ருய)

பிரிந்ததென்றொழித்தபாவம் பெறுமிடத்தணுகேல்
வேலோ
யரிந்ததென்றுறங்குமாசை யமைதியால்விழித்துக்கொவ்
மெரிந்தநின்காமத்தீயை யிற்றறவவித்ததென்னேல்
கரிந்ததென்றிருந்தபல்காற் கால்முகத்தெரியுந்தீயே.

உரை. — மீளவும் வேல்வல்லோனே யுன்னைப்பிரிந்துவிட்டொழித்ததென்று வெறுத்தபாவந் திரும்பிவிளைவதற்குரிய விடத்துப்போகாதே, வேரோடறுக்கப்பட்டதென்று தோன்றி யருது மனதிலுறங்குமாசை தனக்கேற்றசமயம்

வந்தவளவின் மிழித்தெழுந்துயிரைக்கொல்லுமே, இதுவும ன்றி யுன்மனத்தெரியாநின்ற காமத்தீயை முழுதுமவித்தா யென்றுநம்பாதே, அவிந்தாற்போலக் கருகிக்கிடந்ததீயுங் காற்றின்முகத்துப் பலமுறைகிளம்பியெரியுமல்லோ வென் றுனென்க. (௱௫௧)

அசும்பிடையொளித்தசெந்தீ யறலெனவெடுத்தார்யூத
சசும்பிடையெடுத்தநீரைச் சமிதைமேறெளித்துவாரி [ர்
விசும்பிடைநீங்கிவெய்யோன் வெங்கதிர்படத்தீப்பற்றிப்
பசும்பிடிசூழவாட்டிப் படர்நெருப்பாயிற்றன்றே.

உரை.—மீளவும் வேதாகமத்தெழுதப்பட்டபடியே (†) யூதர்முன்னாளிற் பாழ்ங்கிணற்றிடத்திலொளித்துவைத்த நெ ருப்பு நெடுங்காலம்போய்க்குழம்புநீராகி வைத்தவர்மக்கள் போயெடுத்தார்,குடத்திற்கொண்டுவந்த வந்நீரைக்குவித்தவி றகின்மே லூற்றினபின்பு தன்னைமறைத்த மேகத்தைவிட்டு வந்தசூரியன்கதி ரதின்மேற்பட்டவுடனே தீப்பற்றிக்கொ ண்டு சூழப் பச்சிலைவெந்துவாடும்படி மிகவுநெருப்புப்ப டர்ந்த தென்றுனென்க. (௱௫௨)

தண்ணுறுங்குணங்கொண்டாலுந் தழலுதன்குணத் தைக்காட்டி [ற்
விண்ணுறுங்கதிரொன்றுண்கால் வெங்கனலெரிந்ததேபோ
கண்ணுறுங்கனலங்காமங் கண்டவோர்கவின்முற்காய்ந்து
புண்ணுறுங்கசடுளாகப் புழுங்கிவெந்தெரியுமன்றே.

உரை.—சொன்னபடியே குளுமைபொருந்திய நீர்போ லத்தோன்றினுஞ் சொன்னதீ வேகுந்தன்குணத்தைவிடாம ற் காட்டி வானினின்றுபட்ட வொருகதிருட்கொண்டவுட னே பெருநெருப்பாகி யெரிந்ததுபோலக் கண்வழியாகமன திலெரிந்த காமத்தீயும்விந்ததென்றுதோன்றினுங் கண்ட வ ழகியவோர்முகத்துமுன்னேகாய்ந்து பாவத்தான் மனம்பு ண்படும்படி சினத்தோடெரிந்து வேகுமேயென்றுனென்க. (௱௫௩)

(†) II Machab. cap.1, vers.19. மக்கபேயராகமம், க-அதி. ௰௯-வசனம்.

குலம்புரிகொடியபேய்கள் கொலைத்தொழிற்கருவிசூழ்ந்து
சலம்புரிவலையைவைக்கத் தளைப்படிற்பிரிதலாற்று [ந்து
வலம்புரிதவத்தினுமவ் வலையுருவிலகல்வேண்டுங்
கலம்புரிபைம்பூமூழ்கிக் கதிர்த்தபொற்குன்றின்மார்போய்.

உரை. — மீளவுமுயிரைப்பகைத்துத் திரண்டகொடிய பேய்களுயிரைக்கொல்வதற்குரிய பலவெத்தனங்களைச்சூழப்பரப்பி நடுவே தீவினைக்குக்காரணமாகிய வலையைவைத்தமையா லதினுள்ளகப்பட்டாற் பிரிதலரிதாமாகையாற் றிறத்ததவத்தின் றுணையைக்கொண்டநாமவ்வலையுட்படாமல் விலகியொழுகல்வேண்டு மணிவடத்தணிந்த பூமாலையின்முழுகாநின்று மதுமலர்பூத்து விளங்கினபொன்மலையொத்தமார்பனே யென்றுனென்க. (௱௫௪)

மூற்படவுரைத்தவிஞ்சை மொழிகுதுந்தளிர்ப்பமீண்டே [டா
விற்படவெதிர்த்துச்செய்போர் வினையிதுநோக்கல்வேண்
மற்படவெற்றிவேண்டின் மருள்படாதொடுங்கல்வேண்டுங்
கற்படவாவிசால்பு காவெனத்தெளிகவேலோய்.

உரை. — முன்சொன்னவுறுதியை மீளவுமிங்கேசொல்வேன்: பகைவரையெதிர்த்து வளைத்தவில்லாற் செய்யப்படும்போர்போலக் காமப்போரையெண்ணவேண்டாம், இப்போரிற் றிறங்கொண்டு வெற்றியைவேண்டுமாகின் மயங்காதபடி யெதிராதோடி யொடுக்கமேவேண்டும், கற்புக்கொல்வதற் கோராவியேபட்டாற் போதுங்காணென்று மனதிற்றெளியக்கடவாயென்றுனென்க. (௱௫௫)

கச்சொன்றிட்டுணர்வோடேக்கங் கட்டிமெய்ச்சகட்டையோட்டி
நச்சொன்றிட்டேதச்சேற்றுண் ணல்லுயிரச்சிற்றுய்மற்
றச்சொன்றிட்டோர்தறேற்று தழும்பலர்கண்டீர் நல்லோர்
மெச்சொன்றிட்டச்சிறுமுன் வீடுறவூர்மின்பாகீர்.

உரை.—அதின்பின் சூழநின்றயாவரையுநோக்கிச் சூசை சொல்வான்: உடலெனும்வண்டியை நடத்தும்பாகரேயொருகட்டாக ஞானமு மனவூக்கமு மேரொன்றுபூட்டி யுடலின் வண்டியையோட்டிவருகையி லதின்சரக்காக வாசையொன்றையேற்றிப் பாவமென்னுஞ்சேற்றிலமிழ்ந்தி நல்லுயிரென்னு மச்சுமுறிந்தபின்பு வேறோரச்சாக வேறுயிரைக்கொண்டு நடக்கக்கூடாமையில் வீணேயென்றென்றைக்கு நரகிலழுந்திருப்பர்பலரேகண்டீர், ஆகையா னீங்கள் நல்லோர்வாழ்த்தினசரக்காகிய வறங்களைமாத்திரமேற்றிக்கொண்டுயிராகியவச்சுமுறியுமுன்னே சாவதானமாய்ப் பரமகதிவீட்டிற்குச்சேரும்படி நடப்பீராகவென்றான் சூசையென்க. (வழுவா துடலின்வண்டியைநடத்தற்குரிய நல்வழியறியும்படி மெய்ஞ்ஞானமு நல்வழிநடந்துவருகையி லெதிர்வருமிடையூறுகளைக்கண்டு மயங்காதபடி மனவூக்கமும்வேண்டுமென்றதனு லிவ்விரண்டு மேராக வொருப்படப் பூட்டல்வேண்டுமென்றானென்க.) (௱௫௬)

விண்டுளிகமழக்கஞ்சம் வெங்கதிருண்டதேபோற்
பண்டுளியுரையிற்சொன்ன பயனெலாமுண்டயாரும்
விண்டுளிமுத்தமாக வெள்வளையுண்டதேபோற்
பண்டுளிமருணீத்தோதி பரிந்தறமாகச்செய்தார்.

உரை. — அங்ஙனம் விரிவாய்ச்சூசையுணர்த்தினவளவில் வாசனையொழியத் தாமரைமலர்ந்து சூரியன்கதிரையுண்டதுபோல வீணையொழிந்த வினியவுரைகளோடிரங்கிச் சூசைசொன்னபயன்கள்யாவையுஞ் சூழநின்றவனைவரு மனதிலுட்கொண்டார், அதுவுமன்றி வான்விடுந்துளியை வெண்முத்தாக்கும்படி சங்குகொண்டாற்போல வவரும் பழையமயக்கத்தைநீக்கிக் கேட்டவுணர்ச்சிகளையுண்டமனதிற்பேணி யறமாகச்செய்தாரென்க. (௱௫௭)

கயல்பொருதுகளிப்பாயக் கலங்கியகுமரியன்ன
மயல்பொருசேவலோடு மதிர்ந்தெழச்சாய்த்தசெந்நெல்

வயல்பொருவொழிந்தநாடு வளன்றருமோதிதன்றாற்
புயல்பொருதுயர்வான்வீட்டைப் புகுமறுகாயிற்றன்றே.

உரை.—அங்ஙனங் கெண்டைகள் தம்முட்பொருது குதித்துப்பாய்தலிற் கலங்கினகன்னியன்னமு மதனோ டருகே பொருதசாவலு மதிர்ந்தெழுந்து பறக்கக் காய்த்தசெந்நெல் சாய்ந்துகிடக்கும்வயல்கட் சிறப்பினிகரா வெசித்துநாடு குசைசொன்னவுபதேசத்தான் மேகங்கட்குப் போர்க்களமாகியவான்மேல்வீட்டுக்கதியைப்புகும்படி பெரும்பாதையாயிற்றென்க. (௱௫௮)

வாமனுட்சிப்படலமுற்றும்.

ஆகப்படலம் - உ௮ - ௯ - விருத்தம்

உ௩௮௱௰.

இருபத்தொன்பதாவது.

வேதக்கெழுமைப்படலம்.

தாயணியாகமார்பிற் றனயனே துஞ்சும்போல
வேயணியாகவேய்ந்த வேதநூல் துஞ்சுமார்பன்
காயணியாகவாய்ந்த காவின்மீண்டொருநாள்வைகி
வாயணியாகவோதி வகுத்துநீடுரைத்தான்மாதோ.

உரை. — மணிவடச்சாயலாரய்த் தாயின் மார்பிடத்தினி தாய் மகனே துயின்றாற்போல வாபரணமாகவணிந்த வேதநூ லினிதாய்த்துயிலாநிற்குமார்பனாகியகுசைமாமுனி மற்றொருநா ளணிந்த பூஷணமாகக் கனிகளைக்காய்த்த சோலையிடையிலிருந்து வாய்மணிமாலையாகப் பலவுணர்ச்சிகளைச் சேர்த்தி விரிவாய்ச்சொல்லிக்கொண்டிருந்தானென்க. (க)

வீழ்வருங்கதிரைத்துய்ப்ப வேடவிழ்கமலம்போலச்
சூழ்வருங்குழாத்தியாருஞ் சுருதிநூல்செவியின்மாந்திக்
கேழ்வரும்பதுமம்பெய்தேன் கீடமுண்டிமிரும்போலத்
தாழ்வரும்புரைகணீக்கித் தகவுறிப்புகழ்ந்துநின்றார்.

உரை. — உதயத்தெழுந்த சூரியன்கதிரை யுண்பதற் கிதழைவிரித்ததாமரைபோலக் கூட்டமாய்ச் சூழநின்றயாவருஞ்குசைசொன்னவேதநூலை மலர்ந்தசெவியுட்கொண்டபின்பு நிறத்ததாமரைபொழிந்ததேனையுண்டவண்டுகள் பாடினதன்மையா லவருந்தாழ்வினையாகிய தம்பாவத்தைத்துடைத்து மனதின்மாட்சிமையயடைந்தவராய்க் குசையைப்புகழாநின்றாரென்க. (உ)

கூனுருக்கோலினூன்றிக் குனிந்தியசென்னியாட்டி
யூனுருக்கழிந்தநீண்டோ லுடுத்தவென்பொழுங்கிற்றேன்றி

மீனுருக்கழிந்தகட்புண் மெலிமுகச்சுரமியென்பாள்
வானுருத்தவத்தோன்சொன்ன மறைமொழிபழித்துச்சொ
ன்னாள்.

உரை. — அங்ஙனமனைவருஞ் சூசையைப்புகழாநிற்பக் கோணிவளைந்தவுடலை யொருகோலிலூன்றித் தலையோயாமற் குலுக்கியாட்டிச் சதையுமின்றித் தூங்கினதோலான்மூடின வெலும்பெலா மொழுங்கோடுதோன்றி மீனொத்தவடிவிழந்த குருட்டுக்கண் ணிருபுண்ணாகநின்று மெலிந்தமுகத்துச்சுரமியென்றொருகிழவி வானுருவாகநின்ற தவத்தோனாகியசூசை சொன்ன வேதமொழிகளைப் பழித்துச் சொன்னாளென்க. (௩)

விள்ளியபுதித்தேன்பைம்பூ விரும்பிநற்கனிநீத்தன்ன
தெள்ளியதவத்திற்பன்னா ளடையபயன்கள்யாவு
மெள்ளியவவத்தினீங்க விறைஞ்சியதேவர்நீக்கி
யுள்ளியநவநூலெண்ணி யொழுகலோவுறுதியென்றாள்.

உரை. — இனிக்காய்க்குமென்று புதிதாய்மலர்ந்த பூவைவிரும்பிக் கையிலுள்ளகனியை யெறிந்தாற்போலப் பலநாளொருவன்செய்த தெளிந்ததவத்தாலடைந்தபயனெலா மிகழ்ச்சியோ டவமாயழியும்படி தான்வணங்கினதேவரைவிட்டு நவமாய்நினைத்தநூல் வேதமென்றெண்ணிநடப்பதுநல்லதோவென்றாள்சுரமியென்க. (௪)

குடக்குநேர்வைகுந்தேயங் குணித்தனர்செப்பமாறி
வடக்குநேர்நெடுநாட்செல்ல வழியதன்றென்றுகேட்கிற்
றுடக்குநேர்தடஞ்செல்லாதாற் றுயராலாற்காட்டுகின்ற
கிடக்குநேர்நெறிசெல்லாரோ கேள்வியரென்றான்சூசை.

உரை. —அதற்குச்சூசை: நேர்மேற்கிருக்குந்தேயத்தைச் சேரும்படி நினைத்துப்போய் வழிதப்பி நெடுநாள் வடதிசைநோக்கிநடந்தபின்பு வழியதல்லவென் றொருவன்சொல்லக்கேட்கின் முந்திநேர்வழிபோகாமையால் வருந்துவாரொழியப் புதிதாய்க்காட்டின செவ்வனேகிடக்கு நெறியி

லுடனேபோகாரோநல்லறிவுடையோனென்றான் சூசைபெ
ன்க. (ஆகையா லவமாய்க்காட்டினவழி வான்வீட்டிற்செ
ல்லுஞ் செவ்வழியாகிற் றப்பிமுன்னடந்தவழிவிட் டிவ்வழி
நடப்ப தறிவாமென்பது கருத்து.) (௫)

நின்னெறிகதியைச்சேரு நெறியெனவறியநாங்க [ள்
ளென்னெறிவழாமைசெல்லு மென்னினீசால்போவென்றா
நன்னெறியுரையிற்கேட்கி னணுகிலீருரைத்தஞானத்
தன்னெறியுரியதென்றா லறிந்துளந்தெளிகவென்றான்.

உரை.—அதற்குச்சுரமி நீ காட்டினவழி வான்மேற்கதி
யைச்சேருதற் குரியவழியென்று நாங்களறியும்படி யென்
வழிதப்பாதுசெல்லும்வழியென்று நீசொன்னாற்போது
மோவென்றாள். அதற்குச்சூசை யிதுநன்னெறியென்றுநா
ன் சொன்னதினான்மாத்திர நடக்கவேண்டாஞ் சொன்ன
வழி ஞானத்தொத்ததாயினதனைப்பிடித்துநடக்கும்படிதெ
ளிவீராகவென்றானென்க. (௬)

பண்மறைத்தினிதினீயேபணித்தசொன்மறுக்கலாற்றாக்
கண்மறைத்திருட்டுமாயைக் கட்டெனத்தோன்றுமென்றா
புண்மறைத்திட்டபாலாற் புண்ணறமாயையென்றே [ள்
வுண்மறைத்தொளித்தநன்றியுறும்பயன்காட்டுமென்றான்.

உரை.—அதற்குச்சுரமி வீணைவாய்க்குரலைமறைத்து நீயி
னிதாய்ச்சொல்லுமொழிகள் மறுக்கப்படாமற் கண்ணைம
றைத்துக்கட்டு மாயவித்தையாகத்தோன்று மிதென்றாள். அ
தற்குச்சூசை புண்வாய்மேலேமறைந்ததன்மைத் தப்புண்
ணுள் ளூடமாறினதாகி லதுமாயவித்தையென்பாயோ வங்ங
னேநாஞ்சொல்லும் வேதவழியுட்கொண்டநன்மையை ய
திலேநடந்தவ ரடையும்பயனே காட்டுமென்றானென்க.
(௭)

சுனைவளர்குவளையாதி சொரிமதுமலர்கள்வாடி
நனைவளர்பொய்கைவற்ற நானின்றுகனவிற்கண்டேன்
வினைவளர்நவங்கள்காட்டி விரித்தநின்சொல்லைக்கேட்டுப்
பனைவளர்நாடுறைந்த பரிசிதேயென்றான்மூத்தாள்.

உரை. — அதற்குச்சுரமி குவளைமுதற்பல மதுமலர்யாவு ம்வாடி நறும்பூந்தடாகம்வற்றுநின்றது நாணிவ்விரவிற் கனாவாகக்கண்டேன், வினையைவிளைவிக்கு நவங்களைக்காட்டிநீ விரிவாகச்சொன்னவற்றைக்கேட் டிந்நாடுமெலிவோ டழிந்ததன்மை யதுதானல்லவோவென்றாள் கிழவியென்க. (அ)

தெருடவழ்பகலினோக்கச் சிதைந்தகண்கிழவியில்லா
திருடவழிரவினோக்க வியல்பெனவெவருநக்கார் [யோ
மருடவழ்சினங்கொண்டன்னாள் வடிவுறுங்கனவும்பொய்
பொருடவழ்கிலதேற்றென்றப் பொருட்டெனோசொன்மி
னென்றாள்.

உரை. — அதற்குச்சூழநின்றயாவரு மொளியோடுதெளிந்தபகலிற்காணும்படி கண்ணில்லாதகிழவி யிருண்டவிராத்திரியிற் காட்சியைக்காண்பது குணந்தானென்றுநக்கார். அதற்குக்கிளம்பினசினத்துமயங்கினசுரமி வடிவினைக்காட்டுங் கனாவும்பொய்யோ வதிலேபொருளில்லாதாயிற் கனாத்தோன்றும்படி காரணமென்ன சொல்லுங்களென்றா ளென்க. (௯)

சினவிடைமருண்டவுள்ளந் தெளிவறப்பொங்கல்வேண்
டா
கனவிடையுணர்ந்தகாட்சிகனவிடையடைந்தபொன்போன்
மனவிடையெண்ணிக்கொன்னே வடுவலாற்பயனென்றுண்
டோ
வெனவிடையுரைத்தசூசை யியல்படவிரித்துச்சொன்னான்.

உரை. — அதற்குச்சூசை மயங்கின மனத்தெளிவழியும்படி கோபமுட்பொங்கவேண்டாங் கனாவிலொருவனடைந்த திரவியமுங் கனாவிற்கொண்டகாட்சியுமொன்றாகி யதனைமனதிலெண்ணினாற் குற்றமாகுமொழியப் பயனொன்றில்லையென்று மீளவுங் கனாவின்குணங்களைக்காட்ட விரிவாய்ச்சூசைசொல்லத் துடங்கினானென்க. (ம)

படம்புனைந்தெழுகினாற்போற் பகலிடையிருகண்ணோ
டைந்

திடம்புனைந் துணர்ந்தயாவு மெழுதிய நினைவிற்றோன்றிக்
கடம்புனைந்ததிர்கைம்மாவுங் காகமுங்கண்டதோன்றிச்
சடம்புனைகனவில்யானை தலைகமேற்பறக்கக்காண்பார்.

உரை.—கனாவைத்தோற்றுவிக்குங் காரணங்களைக்காட்டச் சூசையெங்ஙனஞ் சொன்னானெனில், சித்திரப்படத்தையெழுதினாற்போலப் பகலிலே கண்முதலைம்பொறிவழியாலுணர்ந்தயாவு நினைவிடத்தெழுதப்பட்டபின்பிராவிருளோடுவளர் கனா வந்நினைவுகள் மயங்கக்கூட்டிப் பொய்யைத் தோற்றுவித்துப் பகலின் மதயானையும் பறக்குங்காக்கையுங்கண்டபின்பு கனாவில்யானை யாகாயத்திற்பறப்பதுகாண்பார் சிலரோ வென்றானென்க. (ஆகையாற் கண்டநினைவு கனாமுதற் காரணமென்றானென்க.) (௰௧)

தெருள்புறங்கொண்டவத்தனுஞ் சேர்ந்தடுத்தவற்றைக்
காட்டு
மருள்புறங்கொள்கனாவு மனங்கடுத்தவற்றைக்காட்டி
யருள்புறங்கொண்டதாயே யகன்றதன்மகவைக்காண்பாள்
வெருள்புறங்கண்டபேதை வினைப்படையெதிர்ப்பக்காண்
பாள்.

உரை. — சொன்னகாரணமன்றித் தெளிந்தகண்ணாடி தன்னையடுத்தபொருளைக்காட்டுவதுபோல மயக்குவிக்குங்கனாவு முளத்தைக்கடுத்த பொருளைக்காட்டி யதனாலன்புடைய தா யகன்றதன்மகனைக் கனாவிற்காண்பாள், வெருவாநின்ற பேதை தன்டயத்திற்குரிதாய்க் கனாவிலெதிர்த்தபடைகளைக் காண்பாளென்றானென்க. (ஆகையான் மனப்பற்றுதலிரண்டாங்காரணமென்க.) (௰௨)

காய்ந்தவோர்சுரமெய்நொந்தார் கடிமலர்ச்சுனைகள்
காண்பார் [ண்பார்
வேய்ந்தவோர்பழியைக்கொண்டார் வினைப்பகைமுரியக்கா
தீய்ந்தவோர்மிடியின்மிக்கார் திருநலமருவக்காண்பார்
வாய்ந்தவோர்பற்றல்பாலால் வருங்கனவுருவமாதோ.

உரை. — அங்ஙனஞ் சொன்ன விரண்டாங்காரணத்தாற் காய்ந்தசுரத்து மெய்வாதையாய்க்கிடந்தவர் தாகமிகுதியாற் கனவின்மதுமலர்பூத்த தடாகங்களைக்காண்பார், பிறர்மேற் பழியை மனதில்வைத்தவர் கனவி லப்பகைவர்கெட்டுமுறியக்காண்பார், வறுமையான் மெலிந்தவர் கனவிற்றமக்குச்செல்வங்கள்வருவதைக்காண்பார், அங்ஙன மனதிலுள்ளபற்றுதலின்றன்மையாற் கனவிலுமுருவந்தோன்று மென்றனனென்க. (௰௩)

இருட்படப்புகைமொய்த்தென்னவெஞ்சியவறிவுகுன்ற
மருட்படப்புகைந்துமண்டி மலிந்தபித்தேறுங்காலத் [று
தெருட்படத்தெளிந்ததேபோற் சிலகனவுகாட்டி [றே.
வெருட்படப்பதைத்துள்ளஞ்சி வினைகொள்வார்பித்தரன்

உரை. — மீளவு மிருளாம்படி புகைமொய்த்ததுபோல வறிவுமெலிந்து மயங்கும்படி புகைத்து பித்துமிஞ்சியேறினாற் றெளிவாக வொழுங்கில்லாத கனவைக் காட்டியதனால் வெருவிப்பதைத்துவினைகொண்டஞ்சாநிற்பார் பித்தரொன்றெனன்க. (ஆகையால்பித்துமூன்றாங்காரணமென்க.) (௰௪)

விஞ்சியகாலைப்பித்து வினையினாற்பித்தர்செம்மை
யெஞ்சியநினைவுற்றயா திழிவுறப்பிதற்றுஞ்சொல்லுந்
துஞ்சியகாலைமெய்போற் றேன்றியகனவுமொன்று
யஞ்சியவுளத்திஃதெண்ணி லறிவிதோவென்றான்சூசை.

உரை. — சொன்னபித்து மிகவுமிஞ்சினான் மிழித்தகாலத்து மொழுங்கில்லாதநினைவுகளைக்கொண் டொன்றுமாராயாமற் பித்தரிகழப்படுஞ்சொல்லைப்பிதற்றுவார், அச்சொல்லுந் தூங்குகிறபோது மெய்போலத்தோன்றின கனவுமொக்கும், ஆகையான் மனதிலஞ்சும்படி பித்தர்பிதற்றினதை யெண்ணினாற்போலக் கண்டகனவையு மெண்ணுவதறிவோவில்லையென்றான் சூசையென்க. (௰௫)

நோயுடையிருகண்வெய்யோ னோக்கிலாமூடிற்றென்னத்

தாயுடையன்பிற்சூசை தந்தநூ லளத்திற்கொள்ளாத்
தீயுடைவெகுளிபொங்கச் சீறியசுரமிசாய்ந்து
போயுடைவஞ்சமுள்ளிப் புகைந்தநெஞ்சாற்றாளன்றே.

உரை.— நோயுளகண்ணான் வெயிலைக்காணாதபடி யவ ற்றைமூடினாற்போலத் தாயினன்பினைக்கொண்டு சூசைமா முனிசொன்னதை யுட்கொள்ளாம லெரியிற்பொங்கின சின த்தோடு சுரமிசீறிக்கொண் டப்புறம்போய்ப் புகைந்தமன தி னினைத்தவஞ்சனை யாற்றாதிருந்தாளென்க. (௰௬)

காழ்வளர்தருவின்கோட்டங் கைக்கொடுநிமிர்க்கலாற்
ஆழ்வளர்புண்ணுமாறா வாழூழிக்கிழவர்கொண்ட [று
தாழ்வளர்கசடுமாற்றார் சாற்றியவவரினாங்கு
மாழ்வளர்கடலின்வஞ்சத் தறிவிலாரொன்றுந்தேறார்.

உரை.— வயிரம்பாய்ந்தமரத்தின்வளைவு கையாணிமிர்க்க ப்படாததுபோலவும் பழம்புண்ணாறாததுபோலவும் கிழவர் நெடுநாட்கொண்ட தாழ்வினையாகியபாவங்களைத்தீர்ப்பதரி தாம், இதனினு மரிதாய்த்தாழ்ந்தகடலோடொத்த வஞ்சனை கொண்டவறிவிலா ரொன்றுந்தேறமாட்டாரென்க. (ஆகை யால் வஞ்சனைகொண் டறிவில்லாத கிழவியாகியசுரமி தேறா தேபோனாளென்க.) (௰௭)

வேறு.

விரைவாய்ப்பூந்தாமரைமுகைகள்விண்டவெறிவிம்முங்
கரைவாய்ச்சங்கங்கள்கதிர்முத்தீன்ற கடல்சூழுந்
தரைவாய்ப்பூணாக்கவெசித்துநாட்டிற் றகவுய்க்கு
முரைவாய்க்கதிர்வெள்ளமொளிப்பச்சுரமி யுணர்ந்தாளே.

உரை.— மணவா யரும்புகளை மலர்ந்ததாமரைகளுமிழும் வாசனைபொருந்தியகரையிடத் தூர்த்தசங்குகள் முத்துக்க ளையீனாநிற்கும் கடலாற்சூழப்பட்டபூவுலகிற்கெல்லா மோ ராபரணமாக வெசித்துநாடுநிற்கும்படி யோதின வேதநூ லா லதற்குமாட்சிமை பயக்குஞ்சூசை சொன்ன வுணர்வுக ளாகியகதிர்வெள்ளஞ் சுரமிமறைக்கநினைத்தாளென்க. (௰௮)

உள்ளங்காய்த்துளையப்பசும்பொற்கோயிலொருங்கற்
பள்ளங்காணடியேவீழக்கண்டேன் பழிப்புய்க்குந் [தோ
கள்ளங்ஈட்டியவோர்மறையும்யாருங் கனிந்துள்ளி
வெள்ளங்காட்டழிவுமினிக்காண்பேனோமெலிந்தென்பாள்.

உரை.—அங்ஙனம் வஞ்சனைநினைத்தசுரமி தன்னோடுசொல்வாள்: என்னுள்ளங்காய்ந்துளையும்படி பொன்னாற்செய்ததேவர்கோயிலெல்லா மையோ பள்ளமாகவடியோடுதகர்ந்துவிழுந்ததுகண்டேன், நவமாய்முளைத்துக் கேடுவிளைவிக்குங் கள்ளவேதத்தை யெவருமுட்கொண்டு வெள்ளமாகவினிவருமழிவுகாணப்போகிறேனோ வென்பாளென்க. (௰௯)

பொன்னுலகொப்பப்பசும்பொன்னிஞ்சிப்புகைத
மின்னார்மணந்தேக்கித்தொழுததேவர் வெறுத்தந்தோ [வழு
கொன்னார்முனிவேடத்தொருவன்மாயைக்கொடுஞ்சொல்லா
லொன்னார்கண்டுவப்பவொழிந்ததிந்நாடொருங்கென்பாள்.

உரை.—பொன்னுலகொப்பநின்றகோயிலின் பொன்மதிள்களைச்சூழ நறும்புகையோயாமற்றவழ்ந்து மின்னுமணமுந்தேக்கி முன்னாள்வணங்கப்பட்டதேவரை யிப்பொழுதையோ வெவரும்வெறுத்து வீணாய் முனிவேடத்தைக்காட்டிவந்த வொருவன்சொன்ன மாயச்சொல்லாற் பகைவர்கண்டுமகிழும்படி யிந்நாடெல்லா மழிந்ததென்பாளென்க. (௨௰)

என்னாடெக்குலமெம்முறையொன்றறியா திரந்தொரு
சொன்னாடினனஃதேசுருதியாகத் தொடர்ந்தெண்ணி [வன்
முன்னாடுணையில்லாவாமன்றானு முயங்குகின்ற
பின்னாடொடாரார்வொழுக்குந்தன்மை பிழையென்பாள்.

உரை.— நாடுங் குலமு முறையு மேதோவென்றறியாம லிரந்தொருவன்சொல்லுமொழிகளைவிரும்பி வேதமாகவெண்ணிக்கொண்டு முன் னிகரில்லாதவாமன்றானே யப்புது வேதத்தையுட்கொண்டபின் பெவ ரதனைத்தொடரார், இனியிது வொழுப்பது பாவமென்பாளென்க. (௨௧)

என்னவஞ்சனைகள்பலவுங்கூறி யீர்த்தறநா
னன்னநவமறைக்குக்கேடின்றுய்ப்பே னரிதென்று
சொன்னதன்மைத்தேவெகுளிவிம்மூந் தகள்பொங்கி
முன்னமெலிந்தலைந்தபின்னர்ப்பள்ளி முயங்குகின்றாள்.

உரை. — இவையெல்லாவற்றையும வஞ்சனையாகச்சொல்லி யின்றுநானப்புதுவேதம்வேரோடறும்படி யரியமுறையோ டதனை யெப்படியாகிலும் கெடுப்பேனென்று நிச்சயித்துணர்ந்து சினத்தாற்பொங்கியமனமே மெலியவலைந்து பின்பு சோர்ந்து துயிலைக்கொண்டாளென்க. (உஉ)

மூன்னாளுற்றவரசிழந்தபேயம் முனிதன்மேற்
பன்னாளுற்றபகைசெலுத்துந்தன்மை பழிப்பின்றி
யின்னாளுற்றபகையாகுமென்னக் கனவிற்று
னன்னாளுற்றசினந்தூண்டவங்கண் டோன்றிற்றே.

உரை.—அங்ஙனஞ்சூரமி தூங்குகிறபோதுமுன்னாளங்கே வணங்கப்பட்டாளாநின்ற விராசாங்கத்தையிழந்தபசாசு பலநாட் சூசைமாமுனிமேல்வைத்தபகையைச்செலுத்தும்படி யிவள்கொண்டபகை குறையின்றியாகுமென்றெண்ணியவள்கோபத்தைத்தூண்ட வப்பசா சன்று கனவிலவட்குத் தோன்றிற்றென்க. (உரு)

வரிந்தமயிலகவிமலர்ந்தமூகைவாய் மதுவூழ்த்துச் [யித்
சொரிந்தநெடும்பொழிற்கண்மெலிந்துவாடுந் துயர்முகமா
திரிந்தவண்ணந்தானிறைஞ்சுந்தெய்வஞ் சென்றெதிர்ப்பக்
கரிந்தகனவிடையிற்கண்டாள்கண்டு கைதொழுதாள்.

உரை. —பசாசு கனவிலெங்ஙனந்தோன்றிற்றேவெனில், எழுதப்பட்டதோகைமயில்கள் கூப்பிடாநிற்ப விரிந்தமலர் மதுமழையைச்சொரியாநிற்ப நெடியதோர் பூஞ்சோலையிடத் தப்பசாசு சூரமிவணங்குந் தெய்வத்தின் வடிவைக்காட்டி வாடினதுக்கமுகத்தோ டேலாவிக்கொண்டு தனக்கெதிராகவரக் கனவிற்கண்டாள், கண்டுதொழுதாளென்க. (உச)

உலகிற்களிசெய்தோய் துயரம்பூத்த வுணர்வென்னோ
வலகிற்றருந்திறலோய்பகைநிற்கென்னோ வரிதென்னல்
விலகித்தவிர்தன்மையென்னோவென்ன விழுந்திறைஞ்சி
யிலகித்தகுமின்போனோக்கியுயிர்ப்போ டியம்பிற்றே.

உரை. — சுரமி தன்றேவனைக்கண்டுதொழுதவுடனே சுவாமி யுலகிற்கெல்லா மின்பம்விளைவித்தவனியாகி வருந்துவதென்ன வளவிறந்ததிறத்தவனியாகி யுனக்குவந்தபகையென்ன வப்பகை விலகும்படி யென்னாலாவதென்னவென்று வணங்கிவிழுந்தவளவின் மின்னிறற்போல வப்பசாசவளை நோக்கிப் பெருமூச்சினைவிட்டுச் சொல்லத்துடங்கினதென்க. (௨௫)

வேறு.

மின்னுயிர்த்தெரிவிளக் கேற்றிவெந்தகி
வின்னுயிர்த்தெழும்புகை தேக்குமிஞ்சிசூழ்
பொன்னுயிர்த்தடமணிக் கோயில்போயெனை
மன்னுயிர்த்திறைவனாய் வணங்கிலாரரோ.

உரை.—அப்பசாசெங்ஙனஞ்சொல்விற்றேவெனில், மின்னியெரிந்தவிளக்குகளையேற்றி யகில்வெந்துமிழ்ந்த நறும்புகையடர்ந்தமதில்சூழநிற்கப் பொன்னுக்குயிராகப்பதிக்கப்பட்ட பருமணியான் முன்னலங்கரித்த கோயிலெல்லாந் தகர்ந்துபோய் நிலைகொள்தேவனாக வென்னைவணங்குவாரில்லையென்றதென்க. (௨௬)

நாடிலகுலமில நயந்தவாழ்வுசெய்
பீடிலமுனிவரன் பிதற்றுஞ்சொல்லினாற்
கோடிலவுனையலாற் குழைந்துநோகநா
னீடிலவனைவரு மென்னைநீக்கினார்.

உரை. — நாடின்றிக் குலமின்றி வாழ்வினாற்பெருமையின்றி முனியென்றொருவன் பிதற்றியசொல்லைக்கேட்டுக் குழைந்து நானோகும்படி குறையில்லாதவுன்னையல்லான் மற்றெவரு மென்னைக்கைவிட்டாரென்றதென்க. (௨௭)

பெய்தவோர்மாரியாற் பெருகுவெள்ளமுன்
செய்தவோர்ணையெனத் திரைத்ததீதெலாங்
கொய்தவோருதவிநீ குணித்துச்செய்கிலா
லெய்தவோர்பயனினி யிலையென்றிட்டதே.

உரை.—பெய்தமாரியாற் பெருகியோடும்வெள்ளத்துமுன் னணையிட்டதுபோலத் திரண்ட தீத்தின்மையெல்லாம றுத்துவிலகும்படி நீயுதவிசெய்தாலொழிய வினிவரும்பய னொன்றில்லையென்ற தப்பசாசென்க. (உ௮)

கொல்லெனவலறியுட் கொலைந்தெழுந்தனள்
வில்லெனவுருவென வொன்றும்வேய்ந்திலா
தல்லெனவிருண்டநெஞ் சழுங்கநொந்தன
ளொல்லெனவருவிநீ ரொழுகுங்கண்ணினள்.

உரை. — தூங்காநின்றசுரமி கனவி லிவற்றைக்கேட்ட வளவிற் கொல்லென்றலறி வெருவினதன்மைத் தெழுந்து க னவிற்கண்டவொளியு முருவுமொன்றுந்தோன்றா திரவொ த்திருண்டநெஞ்சில் வருந்திநொந்தா ளொல்லென்றோடு ம ருவியொப்ப விடாதநீரழுங்கண்ணிணையுடையாள் சுரமியெ ன்க. (உ௯)

ஒளித்ததன்னுயிருடல் தேடுமொத்தவா
வளித்தபல்லுணர்வெலா மாய்ந்துதேறிலள்
சுளித்தநெஞ்சுளைந்தபின் றேன்றுஞ்சூட்சியாற்
களித்ததன்னுளத்திவை கனியக்கூறினள்.

உரை.—நெடிதாயழுதபின்ன ரொளித்துப்போன தன் னுயிரை யுடலேதேடினாற்போலச் சுரமியுந் தன்னுசைக்க ளவாகப் பற்பலவுணர்வுகளை யாராய்ந்து தேறமாட்டாமற்சி னந்தநெஞ்சினெடுநேரம் வருந்தினபின்பு தோன்றினவொ ருசூட்சியாற் றேறிமகிழ்ந்து தன்மனத் திதனைச்சொன்ன ளென்க. (௩௰)

விண்டொழும்விதியென வளன்விளம்பிய
பண்டொழுமுரைக்குரை மறுக்கும்பாலதோ

புண்டொழுமயிற்கொடு பொருததன்மையான்
மண்டொழுமரசுசெய் வலியிதாமரோ.

உரை.—சுரமியெங்ஙன மனதிற்சொன்னானென்னில், வான்மேல்வணங்கப்படு மெய்வேதமாகச்சூதைசொல்லுமொழிகள் தன்குரலினு மினியனவென்று வீணைவணங்குமொழிகளாகியவற்றைமறுமொழிகொண்டு மறுக்குந்தன்மையல்ல னுஞ்சிவணங்கும் வேலைக்கொண்டு பூவுலகில்வணங்கப்பட்ட வரசன்செய்பத்தரும் வல்லமை யிதுவென்றானென்க. (௫௧)

பூவகன்மாலையோ டேக்கம்பூண்டுகோல்
தூவகன்முகிற்கையான் சுளித்தநெஞ்சினு
னாவகனென்னுநன் னாமவேலொரு
சேவகனுறுதியாற் செயங்கொள்வாமரோ.

உரை.— அகன்றபூமாலையு மன்னூக்கமு மணிந்தமார்பினனு யம்பினைப்பொழியு மேகமொத்தகையனுய் வெகுளிபொங்கினநெஞ்சினனுய் நாவகனென்னு நாமவேலினனுயொருசேவகனுண்டாம், அவனுதவியால் வெற்றியைக்கொள்ளவாமென்றானென்க. (௫௨)

நான்முகத்துணைநல நுதல்கிலானொளி
வேன்முகத்தெரிந்தமுன் வெகுளிநீதியான்
வான்முகத்தசனியான் மனத்திலோர்ந்தவை
கோன்முகத்துகந்தனுய் முடிக்குங்கொள்கையான்.

உரை.—நினைத்தநாவகனெக்குணத்தோனெனில், நால்வழியாகச்சொன்னவற்றைப் பாரானுய் வேலோடழன்ற முன்கோபமே நீதியாகக்கொண்டவனுய் வானிடியொப்பக்கொடியனு யிராசாவிற்குகந்தவனுய் மனதினினைத்தயாவையு முடிக்குந்தன்மையுடைய நாவகனென்றானென்க. (௫௩)

ஆயினுனருகுபோ யழுதுகாட்டிய
நோயினுவிரங்குள நுழைந்துவெஞ்சினத்
தீயினுலைமற்றது மென்றுதேறியே
பேயினுளரும்பகை புழுங்குநெஞ்சினுள்.

உரை. — அக்குணத்துடையநாவகன் கிட்டப்போய் நாணழுதுகாட்டினவருத்தத் தவனிரங்கச்செய்வே னிரங்கினவழி யவன்மனதி னுழைந்து சினத்தின்றீயா லழலவுஞ்செய்வேனென்று தேறித்துணிந்து சினந்தபகையிற்பொங்கின நெஞ்சினாள்சுரமி யெழுந்துபோனாளென்க. (௩௪)

வேறு.

சுதையொளியுச்சியாடுஞ் சுடர்க்கொடிமாடத்தேகிப்
புதையொளிபரப்பிநாறும் பொன்மணித்தவிசிற்சாய்ந்த
ததையொளிவைவேல்வல்லோன் றண்முனரழுதுவீழ்ந்தா
ளுதையொளிமுன்னர்வீழ்ந்த வொருங்கிருளருந்துநெஞ்
சாள்.

உரை. — அங்ஙனஞ் சுரமிபோய் வெண்சுதைதீட்டின வுச்சிமேற் கொடிகள்விளங்கியாடாநிற்கு மாளிகைசென்று கதிரைப்பரப்பின மணிகள்பதித்த பொன்மெத்தையிலங்கே சாயாநின்ற விளங்குவேல்வல்லோனாகிய நாவகன்பாதத்துமுன்னேயழுதுவிழுந்தா ளுதயத்தெழுந்தகதிர்முன் னொருங்குடன்விழுந்த விராவிருளுண்டநெஞ்சினாள் சுரமியென்க. (௩௫)

சென்றுவீழ்சுரமிநோக்கிச் செப்புதிகொடியவந்த
வென்றுநாவகனுங்கேட்ப வெழுந்துகூனுடற்கோலூன்றி
நின்றுபேருயிர்ப்புவீக்கி நீர்மழையிருகண்டூவிக்
கன்றுவாள்சோர்வாள்வஞ்சங் கக்கியேயினையசொன்னாள்.

உரை. — நாவகனுஞ் சென்றழுதுவிழுந்த சுரமியைக்கண்டு வந்தகொடுமையைச் சொல்லென்றுகேட்ப வவளெழுந்து வளைந்ததன்னுடலைக் கோலின்மேலூன்றிநின்று பெருமூச்சினைவிட் டிருகண்மழைநீர்பொழிந்து கன்றிச் சோர்ந்து துயரங்காட்டினபின்பு தன்வஞ்சத்தைக்கக்கிச் சொல்லத்துடங்கினாளென்க. (௩௬)

சிலைவைத்தபகழிமாரி சிந்துபுகடந்தவெம்போர்க்
கொலைவைத்தகுருதிக்கோட்டுக் குஞ்சரத்தன்னோய்முன்னூ

ளலைவைத்தவுலகங்காத்தா யவிர்ந்தபொன்னுலகங்காக்கக்
கலைவைத்தவுணர்வோயின்று கருதலேவேண்டுமன்றே.

உரை.—சுரமியெங்ஙனஞ் சொன்னாளென்னில்:வில்லின்வாய்பொழிந்த வம்புமாரியாற் கடந்தவெம்போர்க்களத்துக் கொலைமிக்கக்குருதிபொழியுங்கொம்போடு சினந்தமதத்தயானையொப்பநின்றோய் நீமுன்னே கடல்சூழ்ந்தபூவுலகினைக்காத்தாய், இன்றுகல்வியிற்பொலிந்த வுணர்வோய் பொன்னுலகத்தையுங்காக்கக் கருதல்வேண்டுமென்றாளென்க. (௩௭)

மூந்தழல்தருகண்வே மூரட்படைமுரிக்கும்யானை
வந்தழல்பரப்புஞ்சீற்ற மயக்கியவீரவல்லோய்
சிந்தழனுடனின்னேன்னார் சிதைத்தனைதேவர்க்குற்ற
கொந்தழலொன்னார்தம்மைக் கொன்றினிவெல்வாயன்றே.

உரை. — வீரக்கண்ணழல் புறப்படத்தூவிப் பகைவர்படைகளை முறிக்கும்படி மதயானையெதிர்த்துவருங் கோபத்தைமறைத்த வீரவல்லோய் போர்முகத்தழலைச்சிந்தியுன்னைப்பகைத்தவரைக் கெடுத்துவென்றாய், இனியெந்தேவரைப்பகைத்தகொடியாரை நீ வெல்லல்வேண்டு மென்றாளென்க. (௩௮)

வேய்நிறக்கரும்புநக்கும் விரிதலைக்கதலியூழ்த்துத்
தூய்நிறத்தேறல்பாய்ந்து துணர்வயல்விளையிந்நாடே
தீய்நிறக்கரிந்துவாடத் தேவரையொருங்குநீக்கி
நோய்நிறக்கருத்தில்யாரு நூதனமணுகினாரோ.

உரை. — மூங்கிலொப்பவளர்ந்த கரும்புகள்நக்காநிற்கும் விரிந்தவாழைக்கனிகள் பதனழிந்தொழுகிய தூயதேன்றிரண்டுபாய்தலின் மலைப்பூத்தவயல்கள்விளையு மிந்நாடேதீயாகக்கருகிவாடும்படி யெல்லாருமெலிந்தகருத்தின் மயங்கி வணங்கினதேவரை. முழுதுங்கைவிட்டு வேதமென்றுமுளைத்தநவத்தை விரும்பினாளென்றாளென்க. (௩௯)

மூனியுருக்காட்டியாரோமுறைகுலமொன்றுமில்லான்
பனியுருக்காட்டித்தண்ணம் பயத்தவன்பெழுவகூறாந்

கனியுருக்காட்டித்தீஞ்சொற் கன்னியருளத்தைவீக்கி
நனியுருக்காட்டிவாய்ந்த நான்மறைமொழியச்செய்தான்.

உரை.— ஆரோவொருவன் முனியுருக்காட்டி முறையுங் குலமுமில்லாதான் பனிபோற்குளிர்ந்த வன்பினைக்காட்டிச் சொல்லுங் கனிந்தசொல்லாகிய கன்னியா லெல்லாமனங்களையும்பிடித்து முன்னிங்கேவழங்கின தெளிவிற்பொலிந்த நாலுவேதமொழியச்செய்தா னென்றுளென்க. (௬௰)

மாகையோமயலோயாதோ வறுமையானுரைகள்வெ
ஃகி [ட்பத்
யோகையோடெவரும்போய்வே றொருமறைவிரும்பிக்கே
தோகையோடொழிந்துவீழ்ந்த துணைமயிலென்னக்கோயி
லீகையோடினியெத்தேவ ரென்றழுதுரைசேர்ந்தாளே.

உரை.—மாயையோ மயக்கமோ வேதோகாரணமறியேன், வறியோன் மொழிகளைவிரும்பி மகிழ்ச்சியோடெவரும் போய் மற்றொருவேதத்தைக்கேட்டதினு லழகியதோகையோடிறந்துவிழுந்த மயில்களைப்போலப் பொன்னாற்செய்தகோயில்விழுந்தபின் பினியெந்தேவரு மென்றவளவில், எந்தேவரும் விழுந்தழிவாரோவென்று சொல்லநினைத்தசுரமி துன்பமிகுதியாற் சொல்லமாட்டாம லுரைசோர்ந் தழுதுவிழுந்தாளென்க. (௬௧)

வீங்கிய துயரிற்சோர்ந்து வீழுளிசுரமிகையாற்
றூங்கியசுடர்செய்வேலோன் றழுவினனுறுதிசொன்னு
னேங்கியவுளத்திற்றேற விரவலரீனர்நால்வர்
நீங்கியதன்மைத்தென்னை நீயழுதயர்வாயென்றான்.

உரை. — அங்ஙனந் துன்பமிகுதியாற்சோர்ந்து சுரமிவிழும்போ தவளைச்சுடர்வேலோனாகிய நாவகன்றூங்கித்தழுவியுறுதிசொல்லி யவள் தேறும்படி நாலுவறியரு நீசருமெந்தேவராராதனைவிட்டதனு னீயழுது மயங்குவானேனென்றானென்க. (௬௨)

பூமனுமுணர்விற்றேர்ந்த புரட்டனுஞ்செல்வத்தோங்
காமனுஞ்சீர்த்தன்றானுந் தரும்புகழ்கடந்தவீர [குந்
வாமனும்பலருஞ்சேர்ந்து மாரிநாள்வெள்ளமொத்தார்
காமனுமெஞ்சப்பைம்பூங் கவினலோயென்றுசொன்னாள்.

உரை. — அதற்குச்சுரமி நாலுவறியரு நீசருமாத்திரம ங்கேசேர்ந்தாரென்றாயே, பேர்போனபூமனும் கல்வியிற் றேர்ந்தபுரட்டனுஞ் செல்வத்துயர்ந்ததாமனுஞ் சீர்த்தனு ம் புகழெலாங்கடந்தவீரவாமனு மிகுதியாய்ப்பலருமாரிகா லத்து வெள்ளம்போலத்திரண் டவ்வேதத்துட்பட்டாரோ ம ன்மதனினு மழகுடையோனேயென்று மீளவுஞ்சுரமிசொ ன்னாளென்க. (சஙு)

துஞ்சியகனவிற்றெய்வந் துயர்முதிர்ந்தெஞ்சித்தோன்
யஞ்சியவென்னைநோக்கி யனைவருந்தன்னைநீத்து [றி
விஞ்சியமாயையீர்த்தல் வேண்டுமென்றிரங்கிச்சொல்ல
வெஞ்சியபின்னர்நின்னை யெண்ணியுட்டேறினேனே.

உரை. — இன்று நானுறங்கும்போது நம்முடையதெய்வ ந் துன்பமிகுதியான் மெலிந்தவடிவோடு கனவிற்றோன்றிய தற்கு நான் வெருவாநிற்ப வென்னைநோக்கி யனைவருந்தன் னைவிட்டுவணங்காம னவமாய்முளைத்தமாயை மிஞ்சினதெ ன் றதை வேரோடறுத்தல்வேண்டுமென்று துயரத்தோடுசு வாமி யென்னோடுசொன்னவளவின் மிகவு மெலிந்தமனதில் வருந்தாநின்றேன், அதின்பின் புன்னைநினைத்தமையாற் றே றினேனென்றாளென்க. (சச)

பொன்வளருலகத்தேவர்பொருந்தியீங்குனக்குத்தந்த
மின்வளர்மணியும்பொன்னும் வீரமும்புகழும்யாவும்
கொன்வளர்செல்வமாகக் கொடுத்ததோகொடுத்ததேவர்க்
கின்வளருதவியாக வியற்றலேவேண்டுமின்றே.

உரை. — பொன்னுலகாளுந்தேவ ருனக்குத்தந்ததிரவியமு ம் வீரமுங்கீர்த்தியு மற்றயாவும் வீண்செல்வமாகத்தந்ததல்ல, தந்ததேவர்க்குதவும்படி யின்று நீ செய்யல்வேண்டுமென் றாளென்க. (சரு)

நூல்வழிபோதல்வேண்டா நுண்மதிமுனிவன்வெல்
வேல்வழிகுருதிபாய வேந்தனேவெகுளிகாட்டிற் [வான்
கால்வழிதழைகளென்னக் கலங்கியவெவருமீண்டு [பாய்.
கோல்வழிவில்லோய்தேவர் கொண்டவெம்பகைையைத்தீர்ப்

உரை.—ஆயினுமிதிலே தர்க்கவழியாகப்போதல்வேண்டாம், போறு வுணர்விற்பொலிந்த முனிவனுகியகுசைவெல்லுவான், வேல்வழியாகக்குருதியோட விராசாக்கோபத்தைக் காட்டினுற்போதும், காற்றின்முகத்தாடின தழைகளைப்போல வெவருங்கலங்கிப் பழையவழியிற்றிரும்பித் தேவர்க்குவந்தபகையைத்தீர்ப்பா யம்புமாரிமாறு வில்லோ யென்றுளென்க. (சசு)

பண்முழுநிறைஞ்சுநின்சொல் பாத்திபன்மறுக்கல்செய்யான்
மண்முழுதயிலாற்காத்தாய் வளங்கொளிம்மறையுநீத்தால்
விண்முழுதின்றுகாப்பாய் வேண்டுமேலரிதொன்றின்றி
யுண்முழுதுணர்ந்ததன்மையொல்லுமென்றிறைஞ்சினளே.

உரை.—வீணைவாய்க்குரலினு மினியவுன்னுரையை யிராசாமறுக்கமாட்டான், ஆகையா லவற்குச்சொல்லி வேலாற்பூவுலகெல்லாங்காத்திரட்சித்தநீ மிகப்பரம்பு மிப்புதுவேதத்தை யின்று நீக்கினுயாகில் வானுலகத்தையுங் காத்திரட்சிப்பாய், வேணுமாறு னுனக்கரிதொன்றின்றி நினைத்தயாவையுநினைத்ததன்மைத் தினிதாய்முடிப்ப துனக்கேகூடுமென்று சுரமி யவனைவணங்கா நின்றுளென்க. (சஎ)

தொன்னெறிவாமனீக்கிச் சூசையாங்குணர்த்துமோ
நன்னெறியாகக்கொண்ட நவத்தொடுபலவுமோர்ந்தே [தி
யுன்னெறிபோதியெந்தா யுவப்பநீசெய்வேனென்னச்
சென்னெறியசனியொத்தான் சிந்தையிற்பொங்குகின்றான்.

உரை.— சுரமிசொன்னயாவையுங்கேட்டுப் பழையவழியைவிட்டு வாமன்முதலாய்ச் சூசைமாமுனி சொன்னதை வேதமாகவெண்ணி யதினுட்பட்டானென்றதையும் பலவற்

றையுமனதிலெண்ணி மேகத்திடியொத்த சினத்தைக்கொண் டநாவகன்சுரமியையேநோக்கித் தாயேயுன்வீட்டுக்குப்போ, நீ களிகூரும்படி செய்வேனென் றவளையனுப்பினபின் பவன் மிகவுமனதிற்பொங்கா நின்றானென்க. (சஅ)

வே று.

கள்ளார்மலர்மணமோகனலார்புகையோ கடுத்தொருவ
னுள்ளார்வினைமுகமே லுருவுந்தன்மைத் தவனுணர்ந்த
வெள்ளார்வினையிருகட்படமேற்கண்டா னிவன்றாதை [ன்.
கொள்ளாராதிருபத்தாண்டாய்க்குன்றாக் குண்ணனென்பா

உரை.—அங்ஙன நாவகன் சினத்திற்பொங்கினதன்மைத் துள்ளேமதுவைக்கொண்டமலரோ புறப்பட வாசனைவிடுவ துபோலவு மழலைக்காட்டப் புகைபுறப்படுவதுபோலவுமொ ருவன்கடுத்த மனதிற்கொண்டவினையே முகத்திலுருவிப்பு றப்படுமென்றமையா லவனினைத்தநிந்தைக்குக் காரணமா கிய சினத்தின்வினைகளை யிருகண்ணாகிய படத்தின்மேலெழு தினதாகக்கண்டா னவனையீன்றதாதையாகிய நிறையக்கொ ண்ட நாற்றிருபதுவயதின் மெலிவில்லாத குண்ணனென்பா னென்க. (சகூ)

பால்செய்கடற்கிடந்துநுரைசூழ்பவளக் கட்டையெ
னக்
கால்செய்நரைமூத்தோன்வெண்டுகிலைப்பூந் தவிசெழுந்து
நூல்செய்புலன்மிக்கோனுனித்தவன்பி னோன்றீன்ற
வேல்செய்திறநம்பிவினைகண்டற்க வெனவிளித்தான்.

உரை. — நுரையாற்சூழப்பட்ட பவளக்கட்டை பாற்கட லின்மேற்றோன்றிக் கிடந்ததுபோலத் தூயவெண்டுகில்பர ப்பின பூமெத்தைமேற்கிடந்து மூற்றியவயதான் முழுநரை கொண்ட சிவந்தமேனிமூத்தோனாகியகுண்ணன் கற்றநூலா லுணர்வின்மிக்கோனாகி யன்பின்மிகுதியாற் றவஞ்செய்தீன் ற வேலின்வல்லநம்பியாகியநாவகன்மனதின்வினை யவன்மு கத்திற்கண்டவளவி லருகழைத்துரைத்தானென்க. (ருo)

நெஞ்சேகொள்பிணியைமுகந்தந்தென்ன நின்முகமு
நஞ்சேகொள்வினையுண்ணாட்டிற்றென்ன நல்குமதே
யஞ்சேலெனக்குரைமோவரிகண்ணிட்ட வஞ்சனம்போற்
செஞ்சேடுருவோய்தன்செயிரார்காண்பார் தெளிந்தென்று
ன்.

உரை. — மகனைநோக்கித் தாதையெங்ஙனஞ் சொன்னு
னென்னில்,நெஞ்சிலொருவன்கொண்டபிணியை மெலிந்த
வவன்முகங் காட்டுவதுபோல வுன்முகமு நஞ்சுளவினையுன்
மனதினாட்டினதாகக்காட்டிற் றுகையா லஞ்சாமலதைநீயெ
னக்குச்சொல்வாயாக, அதேதெனிற் கண்ணுக்கிட்டமையை
யக்கண்காணாததுபோலத் தன்குற்றங்களைத் தெளிவாகவிங்கே
காண்பாரில்லை யழகுவடிவுள்மகனே யென்றானென்க. (௫௧)

இடக்கைத்தொகுவிரலாலெதிர்தோளிட்ட வளைகவ்வி
தடக்கைவிரலால்வாய்புதையாச்சாற்று தடிகளென
நுடக்கைமுதிர்சுரமி நுவன்றதெல்லா நுவன்றிருதாட் [ன்.
படக்கைதொழுதினிச்செய்பணியேயணிப்ப வெனநின்று

உரை. — நாவகனேவெனி லிடதுகையால் வலக்கையணிந்
த பொன்வளையைப்பிடித்து வலதுகையால் வாயைப்புதை
யாநிற்பச் சொல்வேன் சுவாமியென்று வயதிற்றளர்ந்த சுர
மிசொன்னயாவையு மொழுங்குடன்றுதைக்குரைத்தபின் ப
வனிருபாதத்திற் கைபடவணங்கி யினியடியேன்செய்யுந்த
ன்மை யருளிச்செய்கவென்று நின்றானென்க. (௫௨)

ஈங்குநீயுரைமோவுணர்ந்ததென்றுற் கிளையோன்மற்
றோங்குதேவர்பழியென்னவேந்தற் குரைத்துநவத்
தீங்குகொய்தனலதென்றுன்னைமேற் சேர்த்திறுத்தி [ன்.
வீங்குகேள்விநலோன்மெலியாத்தீஞ்சொல் விரித்துரைத்தா

உரை. — அதற்குத்தகப்பன் இதிலேசெய்யும்படி நீ நினை
த்ததைச் சொல்வாயென்றான். அப்பொழுதிளையோனாகிய
நாவகன் பெருமையிலுயர்ந்த தேவர்பழியிதாகையி விராசா
வோடேசொல்லி நவமாய்முளைத்ததீமையை வேரோடறுப்

பது நல்லதென்றான். அதனைக்கேட்டுத் தாதை தன்மெத்தை மேலவனையிருத்திக் கல்வியின்மிக்கவனாகி மெலியாவுணர் வோடிதனை விரித்தானென்க. (௫௩)

விள்ளாவரும்பொப்பவிளை நன்றாகின்வேற்கடன்முன்
னெள்ளாவிற்றலைவனியூதர்நாட்டி விருந்தேனு
னள்ளாமதிதாழ்ந்தானையவாங்கநீ நாளருகே
யுள்ளாவயத்துற்றதுனைப்பப்போற்றி யுணர்கென்றான்.

உரை.—குண்ணனாகியதகப்ப னெங்ஙனஞ்சொன்னானெ ன்னில், மலராவரும்புபோல விளமையெனக்குளநாளில் வேற்கடலாகிய பெரும்படைக்கிகழாத வில்லின்வல்லதலைவனாகி நெடுநாள் யூதர்நாட்டிலிருந்தேனானே, நானங்கேயிருந்தத ற்குச் சிறிதுகாலத்துமுன்னே யூதரைப்பகைத்த மதியிற்று ழ்ந்தவொருவனைந்துகெடும்படி யுணராத் திறத்தவற் கங்கே சம்பவித்ததை நான்சொல்ல வுற்றுக்கேட்பாயாகவென்று மீளவுஞ்சொன்னானென்க. (௫௪)

வேறு.

கனக்கரந்தழுவமேற் கதிர்கொள்குன்றின்வீழ்
புனக்கரந்தழுவமேற் பொலியசீரிய
மெனக்கரந்துறைநல மியைந்தநாட்டையாள்
சினக்கரனெனும்பெயர் சிறந்தவேந்தர்கோன்.

உரை.— தழுவினகையாக மேகங்கள்சூழ்ந்திருக்க வுச்சி யிற் சூரியன்கதிர்பட்டிலங்கு முயர்ந்தமலையினின் றிழிந்தவ ருவி பலவாய்ப்பிரிந்து கையாற்றழுவினாற்போல வெங்கும் படர்ந்து செல்வத்திற்பொலிந்த அசீரியமென்று நன்மை யெல்லாமடைக்கலமாக வொளித்துவந்திருக்கு மொருநாடு ளதாம், அதனையாளாநின்று னரசர்க்கரசனுய்ச் சிறந்தசினக் கரனென்பா னென்றானென்க. (௫௫)

மாற்றரசினமெலாம் வணங்கும்வாகையான்
வேற்றரசினமுடி விளக்குந்தாளினு

னேற்றரசினங்கொண ரிறைகொள்கையினா
னாற்றரசினமெலா நடுக்குமாணையான்.

உரை.— சொன்னசினக்கர னெத்தன்மைத்தோவெனிற் பகைத்தவரசர்யாவரும் வணங்கும்வாகைக்கொடியான் வேற்றரசரவனைவணங்கும்போ தவர்முடிபட்டுத் தேய்தலின்விளங்கும்பாதத்தான் றன்கீழ்ப்பணிந்தவரசர்கொண்டுவந்த விறையைக்கொள்ளுங் கையினான் பொலிந்த மற்றரசரெல்லாரு நடுங்கச்செய்யு மாணையானென்றானென்க. (௫௬)

ஓடைமால்மதகரி யுயர்த்தவாகையான்
கோடைநாளசனியைக் குழைத்தவில்லினான்
பாடையாயிகலுரம் பழக்கும்வாளினான்
வாடையால்வரும்விசை வாட்டுந்தேரினான்.

உரை.—மதயானைக்கொடியான், கோடையிடியொத்தம்பு தளிர்த்தவில்லினான், சாணைக்கல்லாகப் பகைவர்மார்பிற்றீட்டிய வாளினான், காற்றின்விசையை வெல்லுந்தேரினா னென்றானென்க. (௫௭)

ஆலமுமழலும்விட் டதட்டிச்சீறினால்
ஞாலமுநடுக்கிய நச்சுக்கண்ணினான்
மாலமுமறவியும் வஞ்சமாலையுஞ்
சீலமொன்றிலதவை செறிந்தநெஞ்சினான்.

உரை.—நஞ்சையுமழலையும் விழியால்விட்டுச் சீறினாற் பூவுலகெல்லா நடுங்கச்செய்யுஞ் சினந்தகண்ணினான், பேயுங்கூற்றனும் வஞ்சமுநெருங்கிக் குடியாய்க்கிடந்து நல்லொழுக்கமொன்றில்லாத நெஞ்சினானென்றானென்க. (௫௮)

அருளிடுமொழிமறுத் தழன்றவாயினான்
வெருளிடுபொய்ப்புகழ் விழுங்குங்காதினான்
பொருளிடுமுடியொடு புன்கண்பூத்தவாத்
திரளிடுமுறையெலாஞ் சுமந்தசென்னியான்.

உரை. — அருள்பொருந்திய மொழிகளைமறுத்துச் சுடுமொழிவாயினான், வெருவி மனமறியச்சொன்ன பொய்த்து

திகளைவிரும்பி யிழுக்குங்காதிஞன், பொன்முடியோடு தன்னூற்றுயரையடைந்தவ ராற்றுதிடு மூறைகளைச்சுமந்த சென்னியா னென்றுனென்க. (௫௯)

ஆற்றுநீரலையினீ ரலத்தைநீரொலாஞ்
சேற்றுநீருவர்குழை வெனச்செருத்தவ
னூற்றுநீரிலசல மாற்றிலார்விழி
யூற்றுநீரொன்றினை யுவப்பென்றுவான்.

உரை.—ஆற்றுநீரழுக்கென்றுங் கடலினீ ருவரென்றுங் குளத்துநீர்சேறென்றும் வெறுத்துத் தான்செய்தவஞ்ஞாயங்களாற்றுதவ ரழுங்கண்ணீர் பிரியமென்று குளிப்பானென்றுனென்க. (௬௰)

கின்னரம்பயிலியாழ் கிளர்பொன்மரடக
வின்னரம்புளரலு மினிதன்றென்றுதன்
வின்னரம்பொலிக்கணை வினையிற்கைமையார்
துன்னரம்பயிலொலி சுவையென்றுவுவான்.

உரை.—மீளவுங் கின்னரமுங் குழலு முறுக்காணிவீணையுமிவையெலாந்தருமோசை தனக்கினிதல்லவென்று வெறுத்துயிர்களைக்கொல்லும் வில்லினரம்புக ளம்புகளையுதைத்திடுமோசையு மதனூற் புருடனையிழந்தமங்கையரழுமோசையுமின்பமென்று விரும்புவானென்றுனென்க. (௬௧)

கோதிலார்தனக்குவேற் றென்றுகூட்டிலான்
றீதுளார்தனக்கெதி ரென்றுசேர்க்கிலா
னேதிஞவிணையிலா னெதிர்ந்தியாரையும்
பேதிலாமறத்தொடு பகைக்கும்பெற்றியான்.

உரை. — தனக்குவேற்றுமையென்று நல்லோரைக்கூட்டான், தனக்கெதிரென்று தீயோரைச்சேர்க்கான் றீமையிலொரவ்வாதான், பின்னமின்றி யெல்லாரையுஞ் சினத்தோடு பகைத்தன்மையா னென்றுனென்க. (௬௨)

அத்திறத்தாயினு னரசர்யாரையு
மொய்த்திறத்தடக்குபு முதிர்ந்தவேதநூன்
மெய்த்திறத்தியூதர்சீர் விளைந்தநாட்டுறிப்
பொய்த்திறத்தருஞ்செய முணர்ந்துபோயினான்.

உரை.— அத்தன்மைத்தோனாகிய சினக்கரன் மற்றவேந்த ரியாரையும் போர்முகத்தடக்கித் தன்கீழ்ப்படுத்தினபின்பு மெய்ம்மையிற்சிறந்த வேதத்தாற் செல்வத்துயர்ந்தயூதர் நாட் டிற்குப்போகப் பொய்யுணர்வோடு வெற்றியையெண்ணி நடந்தா னென்றானென்க. (௬௩)

வேற்கடல்பரிக்கடல் வேழத்தேரொடு
நாற்கடலொருப்பட நடுங்கநாற்றிசை
நீற்கடலெதிர்த்தென நினைப்பினெய்தின
னாற்கடல்வேந்துறை நகரைநோக்கினான்.

உரை.—அங்ஙனம் வேலேந்தியகாலாள் பரி கரிதேரென் னு நாற்கடற்றானைக ளொருப்படச்சேர்த்தி நாற்றிசைநடுங் கும்படி கருங்கடலெதிர்த்தாற்போல நினைத்தமாத்திரத் தங் கேசென்றசினக்கர னாற்கடலாய்நின்றயூதாரசனிருந்த எரு சலேமென்னுமாநகரைக்கண்டா னென்றானென்க. (௬௪)

கார்விளையிடிமொழிக் கதத்தில்யூதர்தஞ்
சீர்விளைமறைநலஞ் செகுத்துவந்துதன்
னீர்விளைமலரடி பணிதனேர்கிலாற்
போர்விளைசுடுமொழித் தூதுபோக்கினான்.

உரை.—அந்நகர்கண்டவளவின் மேகத்திடியோடொத்த மொழியோடுசினந்த சினக்கரனொருதூதனுப்பி யூதர் தமது வேதத்தைவிட்டுத் தன்றாமரைப்பாதத்தை வணங்கிக்கீழ்ப்ப டிய வுடன்படாராகிற் போர்முகத்தழிப்பானென்னுஞ் சுடு மொழி சொல்ல விட்டானென்றானென்க. (௬௫)

வேறு.

கோனலமூன்றுநலமுங் குலத்துரியதொற்சுருதி
நானலமுமவர்தொழுத நுனித்தவொருநாயகன்றன்

ஊனலமுமொன்றெண்ணு வளைவறுத்தன்கடருனை
வேனலமொன்றான்றிய சொல் வெடித்தான்றூதுரைகொ
ண்டான்.

உரை.—தூதுசொல்லப்போனவன் யூதர்க்கரசன் முகத்
திற்சென்றவளவி லவன்பெருமையு மவர்குலத்துயர்ச்சியு ம
க்குலத்துரிய வேதநன்மையு மவரால்வணங்கப்பட்ட கடவு
ளின்மாட்சியு மென்றிவையாவையு மெண்ணுமற்பேசித் த
ன்னளவிறந்தகடலோடொத்த தானையின்றிறத்தை யூன்றின
கொடியசொற்களை வெடித்தானென்க. (௬௬)

தீய்முகத்துப்பொங்கியபால் தெண்ணீரிட்டாற்றுவர்
போல்
வீய்முகத்துச்சுடுஞ்சொல்லான் விளைத்திட்டவெம்வெகுளி
காய்முகத்துக்கோனுணர்ந்த கருணையினீர்கொண்டாற்றி
யாய்முகத்துத்தேறியயிர்ப் பறவீரவுரைவலித்தான்.

உரை. — அதனைக்கேட்ட யூதர்க்கரசன் வெந்தீயிற்குதியா
ற் பொங்கினபாலை நீரைவிட்டாற்றினாற்போலப் புலியின்மு
கத்துச் சுடுஞ்சொல்லுரைத்ததூதன் றன்மனதில்விளைவித்த
கோபங்காய்ந்து பொங்கிவருகையி லவ்வரசனினைத்த குளுந்
தயையாகிய நீரைக்கொண் டச்சினத்தையாற்றி யாராய்ந்த
வுணர்வினடுக்கமின்றித் தேறினவீரவுரைகளை நினைத்துச்சொ
ன்னனென்க. (௬௭)

உன்னல்லாவிவ்வுரைசெய் துய்வாராருன்னரச
னென்னல்லாலென்னிறைவனிகன்றனபின்னென்னிறைவன்
றன்னல்லால்விடையிங்கட் சாற்றுவரார்சடுதிப்போய் [ன்.
வின்னல்லாயிம்மொழியை விளம்பென்றுன்மறைக்கோமா

உரை.— நீ தூதாகக்கொள்ளத்தப்பி யுன்னையல்லா தெ
ம்வேதத்தையு மெங்கடவுளையு நிந்தித்துரைத்தபின் பெவர்
தப்பிப்பிழைப்பார்? உன்னிராசாவு மென்னையல்லா தெந்
நாதனைப்பகைத்தபின்ன ரவற்குமறுமொழி யெந்நாதனே
சொல்வான், இவனையல்லாதே சொல்வாருமில்லை, இதுவேஉ

றுமொழியாக வுடனேபோ யுன்னரசற்குச்சொல்வாய் வில்
லின்வல்லோயென்று னவ்வேதத்தரசனென்க. (௬௮)

பாரிறைஞ்சுந்தேவர்களெம் படைமுகத்துத்துஞ்சின
நீரிறைஞ்சுந்தேவன்வலி மிக்கதுகொல்நெடிதெங்கும்[ரோ
யோரிறைஞ்சும்வேல்வேந்தன் புகைந்துகுத்தபுன்கணுறுக்
காரிறைஞ்சுமுன்னாட்டைக் காமினென்றான்கடுஞ்சினத்
தான்.

உரை.— அதற்குக் கடுஞ்சினத்தானாகிய தூதன் பூவுலகெ
ங்கு நாங்கள்கெடுத்துவென்ற பலதேயங்களில்வணங்கப்ப
ட்ட தேவர்களெல்லாருந் தூங்கினாரோ? நீங்கள் வணங்குந்
தேவ னவரினு மிகவும்வல்லவனோ? ஆகையாலிந்நினைவினைவி
ட் டெப்போர்முகத்தும் வணங்கப்பட்டவேலையேந்தியவெ
ன்னரசன் சினந் தெங்கும்விளைவித்ததுயரை யடையாதப
டிக்கு மேகங்கள்வணங்கினாற்போலப் பொய்யாமற்பெய்
து சிறந்தவுன்னாட்டைக் காப்பாயாக வென்று னென்க.
(௬௯)

துஞ்சினரோமற்றெவருந் தொழுந்தேவர் நும்படை
முன்
னஞ்சினரோவறிகிலனு னென்னிறையோன்வலிகுன்று
விஞ்சினனோகண்டுணர்க வினைவெம்போர்வேண்டினு நா
னஞ்சினனேவத்திறத்தின் றமர்கென்றானறநீரான்.

உரை. — அதற் கறக்குணத்தோனாகிய வரசன் மற்றயாவ
ரும் வணங்குந்தேவர் தூங்கினாரோ வுங்கள்படைக்குமுன்
னே யஞ்சாநின்றாரோ நானேயறியேன், அத்தேவரினுமெ
ன்னாண்டவன் மிகவல்லவனோவில்லையோ நீகண்டறியக்கடவா
ய், இக்காரணத்தா லனும் வெம்போர்க்கஞ்சேன், ஆகையா
ல்வேண்டினு மின்றே போரமைகவென்று னென்க. (௭0)

அருள்புரிந்த தூதுனாத்தே ரார்ந்தமணிமுடிநல்லோ
மருள்புரிந்தமனத்தெண்ணு மன்னனருண்மறுத்தாயே [ய்
வெருள்புரிந்தவெஞ்சினப்போர் வினைநின்பாலென்றிறை
ஞ்சி
யிருள்புரிந்தவிரவிற்சென் றினவயிறைவற்கியம்புகின்றான்.

உரை.—அதனைக்கேட்ட தூதன் அருளேபொருந்திய தூதுரைத்தேனுன், மணியாணிறைந்த முடியைப்பூண்ட நீயோவெனின்மயங்கி யதனையெண்ணுமை லென்னரசன்றனையமைறுத்தாயே,இனிவெருவிடுங் கொடும்போ ருனக்காகட்டென்று வேந்தனைவணங்கிப்போ யிரவிருள்படர்ந்தபின்பு பாளையத்திற்சென்று தன்னரசனுக்கு நடந்தயாவையுஞ்சொன்னுனென்க. (௭௧)

சீர்மீதாடியசெருக்கிற் றெளியாக்கோனிவைகேட்டுப்
போர்மீதாடியசேனைப் பொலிவெண்ணுமறுத்தானே
கார்மீதாடியகொடிநீண் மாடநகர்காடாக்கிப்
பார்மீதாடியவெருவே படுநாளையெனத்துயின்றான்.

உரை. — கொண்டசெல்வத்தினு மிக்காங்காரத்தாற் றெளியாதகோனுகிய சினக்கரன் றன் றூதுரைத்தயாவையுங்கேட்டுப்போரொல்லாவற்றையும் வென்ற வென்சேனையின்மாட்சியையெண்ணுமன் மாற்றரசனென்சொல்லை மறுத்தானே? மேகத்தின்மேலாடாநிற்கும் கொடியின்மாளிகையுள்ள வந்நகர் நாளைக் காடாகவழித்துப் பூவுலகெங்கும்வெருவுபடரும்படிசெய்வேனென்று துயிலைக்கொண்டான். (௭௨)

குன்றுச்சிச்சுடர்ப்பழியாய்க் கொளுத்தியபுன்விளக்
வென்றுச்சிவாளுளும் வேந்தனெதிர்பூவுலகி [கென்றே
னின்றுச்சிறுவரசர் நினைத்தபகையாங்காண
யன்றுச்சிமுடிகவிழ வவற்காங்கரயவைகேண்மோ.

உரை. — மலையினுச்சிமேற் சூரியற்கோர்பழியாகச் சிறியதோர்விளக்கிட்டாற்போல வென்றும்வெல்லுந்திறத் துயர்வா ளுளாநிற்கும் வேந்தனுகிய கடவுட்கெதிராய்ப் பூவுலகரசர்தலையெடுத் தவன்மேற் பகையைநினைப்பதாமகனேயாகையா லன்றுசினக்கரன்புனைந்தமுடி கவிழும்படியங்கேயவற் காயவற்றைக் கேளென்றுனென்க. (௭௩)

ஓ நரறு நூறெளிவளவின் னிதிவலோன்பகைத்திரவிற்
பாரறுநூங்கிரதமுகள் பரிகரிவாள்வில்வேலென்

னூராறு நூறாங் கடற்றானை யற்றறக் கண்ணிமையாமுன்
னூரறு நூறுறழ்ந்நூ றுடையையாயிரர் மாய்ந்தார்.

உரை. — அங்ஙன நிகரில்லாதஞானத்தளவோடு நீதிவல்லோனாகியகடவுள் சினக்கரனைப்பகைத்தமையா லவ்விராவிடத்துப் பூமியைக்கீறு முயர்ந்ததேரும் பாய்ந்தகுதிரையு மதத்தயானையும் வீசியவாளும் வளைத்தவில்லுங் கூர்ந்தவேலு மென்றிவ்வாறுவகைத்தானைகள் முழுவது மறும்படி நிமையோடு நிமைபடுமுன்னே நூற்றெண்பத்தையாயிரம்பேரு மிறந்துபட்டா ரென்றனென்க. (௭௪)

பானிறைவன்செக்கர்வான் பந்தற்கீழ்விளக்கேந்த
வீனிறைவனாறுதானை யிற்றழிந்தநிலைகண்டான்
வானிறைவன்றிறங்கண்டான் வாழ்க்கையறநகைகண்டான்
றானிறைவனலனென்னத் தளர்ந்தஞ்சியோடினனால்.

உரை. — இவையெல்லா மிரவிலாகி விடியற்காலத்துச் சிவந்த வானமாகியபந்தலின்கீழே சூரியன்றோன்றித் தன்கதிராகிய வொளிவிளக்கேந்தாநின்றவளவிலினங்கொண்டசினக்கரன் றன்னாறுதானைகளழிந்ததன்மையைக்கண்டான், உயர்வான்கடவுளின் றிறத்தைக்கண்டான், வாழ்விழந் தன்று தனக்குவந்த விகழ்ச்சியைக்கண்டான், ஆண்டவற்கெதிராய்த் தானிராசாவல்லவென்று தளர்ந்தவுணர்வோ டஞ்சியோடினானென்றனென்க. (௭௫)

நெடிதழுங்கிப்பெருங்களவனீதிதிறத்திறந்தென்னக்
கொடிதழுங்கியெஞ்சவன்றக் கொலைகாணவிளியாக்கோன்
கடிதழுங்கியோடவெதிர் கடுகிநகையுய்த்தாயென்
றிடிதழுங்கிவீழ்ந்தனைய விருமைந்தர்கரத்திறந்தான்.

உரை. — நீதிமுறையோடு பெருங்கள்ளன் நெடுநாள்வருந்தப்பட்டு வெட்டுண்டாற்போலக் கொடிதாய்வருந்தி மெலிந்துளத்துளையத் தன்படையழிந்த கொலையைக்காணும்படி யவ்விரவிற்கூடச் சாகாதசினக்கர னஞ்சி விரைவோ டோடினவளவி லவனிருமக்க ளெதிர்வந்தெமக்கு நிந்தை

யையவிளைவித்தாயென்று கோபித்து முழங்கினவிடி மேல்விழுந்தாற்போல வவர்கையால் வெட்டுண்டுபட்டா னென்றுணர்க. (௭௬)

வேறு.

மஞ்சிவர்குன்றிற்றெண்ணீர்வழங்குமந்நாட்டிற்பின்னு
ணஞ்சிவர்சினத்திற்காய்ந்த நபூக்கனென்றரசன்செங்கோ
னெஞ்சிவர்செருக்கிற்கோட நீண்டநாட்டெங்கும்பூதர்
விஞ்சிவரிறைவற்றாழ்தல் வினைமிகவிலக்கினானே.

உரை.—மீளவு மிவையெலாமாகிச் சிறிதுகாலம்போனபின்பு மேகங்கள்தவழு மலையினின்றிழிந்ததெண்ணீ ருலாவுஞ் சொன்ன அசீரியநாட்டையாளாநின்று நஞ்சினையுமிழுஞ் சினத்திற்காய்ந்த நபூக்கனென்னுமரசன் றான்கொண்ட வாங்காரத்தாற் றன்செங்கோலுங் கோணிக்கெடும்படி யகன்றதன்னாட்டிலெங்கும் யூதர்தொழுங் கடவுளைவணங்கவேண்டாமென்று தன்வினைவிளையுங் காலமாகி விலக்கினனென்க. (௭௭)

கொன்வளர்தருக்கிற்பொங்குங் குணத்தவன்பினர்தன்சாயற்
பொன்வளருருவமாக்கிப் பூண்வளர்சிறப்பின்மண்ணிப்
பின்வளரிழிவெண்ணாத பேதமைத்திறத்ததொன்றை
மன்வளர்தேவனாக வணங்கவென்றேவினானே.

உரை.—அங்ஙனம் வீணாய்வளர்ந்த வாங்கார முட்பொங்கினபின்பு சொன்னநபூக்கன் றன்சாயலாகப் பொன்னாலோருருவத்தையுண்டாக்கி மணிகளாலலங்கரித்து வருங்கேடெண்ணாதபேதமையால் வேறேதெய்வத்தைவணங்கா தவ்வுருவமொன்றினைத் தெய்வமாக வெவரும் வணங்கக்கட்டளையிட்டானென்க. (௭௮)

சீர்தங்கும்வயத்தொன்றுமெந் தேவனையன்றிமற்ற
வேர்தங்குமுருவத்தேவ ரிறைஞ்சிலேமென்னமூவர்

கார்தங்குமிடியிற்காய்ந்தோன் கடுகியவ்வியூதர்தம்மைப்
பீர்தங்குமுருத்தீச்சூளை பெய்மினீண்டென்றான்மாதோ.

உரை.— அங்ஙன மவனேவினவளவி லங்கேயிருந்தமூன்றாயூதர் திறத்தின்செல்வத்தொன்றாய்நிற்குமெங்கள்கடவுளையன்றி யழகுபெறச்செய்த வுருவுளதேவரை வணங்கேமென்றார், அதற்கு நபூக்கன் மேகத்திடிபோற்கோபித் திம்மூன்றாயூதரை வெருவிடுந்தன்மைத்தெரித்தசூளையி லுடனேபோடுங்களென்றானென்க. (௭௯)

வம்மியபுகையிற்சூளை வாயங்காந்தெரிந்தசெந்தீத்
தும்மியவ்வேவல்செய்தோர் தொகுவுயிர்நக்கிக்கோறிப்
பொம்மியவுவப்பின்மூவர் புணர்ந்தகட்டன்றிவேகாப்
பம்மியபைம்பூஞ்சோலைப் பதியெனவங்கண்வாழ்ந்தார்.

உரை.— அரசனிட்டவேவலைச்செய் தம்மூவரைக்கட்டிச் சேவகர் சூளையிற்போட்டவளவி லச்சூளைவாய்திறந் துமிழ்ந்தபுகையோடுபுறப்படவிட்ட செந்தீக்கொழுந்துக ளச்சேவகருயிரை நக்கிக்கொன்றபின் னுள்ளேகிடந்தயூதர் மிகவுமகிழாநிற்ப வவர்கட் டெரிந்தவொழியத் தாமெரியாமற் படர்ந்த மதுமலர்ச்சோலையிற்கிடந்தாற்போல வங்கேவாழாநின்றாரென்க. (௮௰)

அந்நிலைகேட்டமன்ன னதிசயித்தணுகிநோக்க
வெந்நிலைச்சூளை நால்வர் மெலிவறவுவப்பக்கண்டே
யிந்நிலையியப்பிற்பொங்கி யீண்டிவண்வம்மினென்னப்
பைந்நிலைமலரின்மூவர் பணிமுகத்தெய்திநின்றார்.

உரை.— இச்செய்தியைக்கேட்டரச னதிசயித்தணுகிப்பார்த்தவளவி லெரிந்தசூளையி னால்வர் மெலிவொன்றின்றிமகிழக்கண்டான், நால்வரைக்கண்டதனா லதிகமாயதிசயித்துடனே யிங்கேவாருங்களென் றவரை யழைத்தான், அவரும் குளிர்ந்த தமதுமலர்முகத்து மூவராகவந்து நின்றாரென்க. (௮௧)

நால்வருங்கண்டேன்மற்றோர் நவியனெங்கென்னவ
ன்றோர்
மேல்வருந்திறத்தெந்தேவன்விட்டவிண்ணவன்றனென்றார்
போல்வருமின்றியூதர் போற்றியகடவுள்மாண்பு
நூல்வருமறையின்சால்பு நோக்கினன்மருளுநீக்கான்.

உரை. — மூவர்நிற்பக் கண்டவரசன் ஞானியிருல்வரைக் கண்டேனே, அழகிற்பொலிந்த மற்றொருவனெங்கேயென்றான். அதற்கவர் திறத்தினுயர்ந்தவெம்பிரான் - நமக்காதரவாகவரவிட்டவானோ னவனேயென்றார். அங்ஙனம் யூதர் வணங்கிய நிகரில்லாதகடவுளின்மாட்சியும் வழுவாநூலினுயர்ந்த வவர்வேதத்தின்பெருமையுந் தோன்றக்கண்டநபூக்க ஞங்காரத்தாற் கொண்டமயக்கத்தை விடாதிருந்தா னென்க. (அஎ)

தீன்றிறத்தூக்கித்தேவன் றனெனவுணர்ந்தபாலாற்
பின்றிறத்தெவருமஞ்சப் பெருஞ்சினத்தன்னதேவன்
மன்றிறத்துயிரோமாறு மாவுருக்கொளீத்தள்ளுண்டு
கொன்றிறத்தெஞ்சிக்காவிற் குனிந்துபுன்மேய்ந்துநின்றான்.

உரை. — அங்ஙனம் விடாதவாங்காரத்தாற் றன்னெல்லைக்குமே லுயர்ச்சிநினைத்தநபூக்கன் றன்னைத்தேவனென்றுணர்ந்தபாவத்தாற் பிற்காலத் தெவருமஞ்சுந்தன்மைத் தன்னகடவுளவன்மேல்வைத்தகோபமிகுதியா லவன் சாகாமற்பழைய தன்னுயிரிருக்க வுடலினுருவமாறி மிருகவடிவாய்த்தோன்றி யெவருமஞ்சித்துரத்த வரசிழந்துநகருமிழந்து வீணெய்வருந்திக் காட்டிற்றிரிந்து குனிந்தவுருவோடங்கே புல்லை மேய்ந்து நின்றானென்க. (அ௯)

ஏழ்வரும்வருடத்திவ்வா றிழிபடவிலங்கின்சாயற்
போழ்வருநெஞ்சினோகப் புணரறிவெஞ்சான்றன்னைத்
தாழ்வருமுளத்தந்நாதற் றாழ்ந்தபினுரித்தன்மெய்யுங்
கேழ்வருமுடியும்பெற்றுக் கெழும்விளக்கெவர்க்குமாணன்.

உரை. — அங்ஙன மேழுவருடமுநிந்தைப்பட்டு மிருகச்சாயலாகத்திரிந்து மனிதற்குரியவறிவு குறையாமனின்ற நபூ

க்கன் றுயராற் பிளந்தநெஞ்சில் வருந்தினபின்பு நல்லுணர் வடைந்து தன்னைத்தாழ்த்தி யூதர்வணங்கியநாதனைத் தானும் வணங்கினன், வணங்கினதன்மையாற் பழையதன்வடிவையு மிராசாங்கத்தையு மடைந்தவனா யன்னகடவுளின் மாட்சியை யுலகெலாமறியும்படி தான்பெருவிளக்கானா னென்றா னென்க. (அச)

மீட்டன்னாரிறைஞ்சுங்கோயின் மிக்கருந்திருவுண்டெ
ன்னக்
கேட்டந்நாட்டரசனேவ வெல்லியோதூரன்போய்க்கேழ்த்த
நாட்டன்னார்வெருவிநைய நண்ணியெண்ணில்கொல்வேங்
கூட்டன்னாரயபர்சூழக் கோயிலைவிரவிற்புக்கான். [கைக்

உரை.—(†) மீளவும் யூதராண்டவனை வணங்குங்கோயிலிடத்துத் திரவியமிகுதியா யுண்டென்றுகேட்ட வந்நாட்டரசனதின்மேலாசைவைத் தெல்லியோதூரனென்பவனை யனுப்பினான். அவனும்போ யந்நாட்டிலெல்லாரும் வெருவி வருந்தும்படி கொல்லும்வேங்கையின் கூட்டம்போல வெண்ணப்படாத கொடியசேவகர்சூழவரச்சென்று கோயிலுட்புகுந்தானென்க. (அரு)

புக்கனவளவிவ்வானிற் பொற்பரத்தொருவனேறு
மிக்கனசினக்கொக்கன்னான் வியன்றமார்புதைத்துவீழ்த்தத்
தொக்கனவெவருமோடச் சூழிருவானோர்தோன்றி
நக்கனகதத்தன்னானை நண்ணிமத்திகையாற்பெய்தார்.

உரை.—அங்ஙன மவனக்கோயிற்புகுந்தவளவி லாகாயத்திலொருவன் பொற்கவசமணிந்து வெண்குதிரைமேற்றோன்றி யக்குதிரை மிகுந்தசினத்தோ டெல்லியோதுரனை மார்பிலுதைப்ப விவனுந்தரையில்விழுந்தான், கூடவந்தசேவகரெல்லாரு மொருங்குடனோடிப்போனார், மீளவு மிருவானவரிருபுடையிற்றோன்றிக் கையிலேந்திய குதிரைச்சம்மட்டியா லெல்லியோதுரனை நகைப்பச்சினந்து மிகவுமடித்தாரென்க. (அசு)

(†) II Machab. cap. 3, vers. 14... மக்கபெயர். உ-ம்ஆகமம், ௩-ம்அதி. ௰௪-வசனம்....

ஏறுயிராகநிற்ப வினைந்திருங்குரவன்வேண்டி
வீறுயிராகத்தேற்றி விண்ணவரிருவரிவ்வாய்த்
தேறுயிரிறைவன்வாழ்த்தத் திசையெலாமுணர்த்தியென்ன
ஆறுயிருய்ந்துவாழ்நா ளுள்ளளவேத்தினானே.

உரை.— அங்ஙனமவன் சாகநிற்ப வக்கோயிற்பெரியகுரு வவன்மேலிரங்கி யாண்டவனைவேண்டினதினாற் சொன்னவி ருவரானவ ரவனைத்தேற்றி யிவன்வேண்டுதலினாற் றேறினவு ன்னுயிராண்டவனைவாழ்த்தி நடந்தயாவையுமெங்குஞ்சொ ல்வாயாகவென்றார், அவனுமுயிர்பிழைத்தெழுந்துசாந்தனையு ம் யூதர்வணங்குநாதனை மிகப்புகழ்ந்தேத்தா நின்றானென்க. (அஎ)

இத்திறத்துயரவ்வேத மிகன்றனவரசீரா
றத்திறத்திழிபட்டெஞ்ச வழிதுநானன்னதேவன்
மைத்திறத்திகன்றயாரும் வையகத்துய்யார்காளாய்
பொய்த்திறத்துணர்ந்ததீமை போக்குதியென்றான்மூத்தோன்.

உரை.—இங்ஙனே யுயர்ந்தயூதர் வேதத்தைப்பகைத்த ப ன்னிருவரசர்திறத்தைப்பட்டு மெலிந்ததாகவறிவேனானே, அ வர்வணங்குந்தேவனை மயக்கிப்பகைத்தயாவரு மிப்பூவுலகி னெடிதுயிர்வாழார்மகனே, ஆகையாற் பொய்யுரைகேட்டு நீயவ்வேதத்திற்குச் செய்யநினைத்த தீமையை விடுவாயாக வென்றான் வயதின்முற்றிய தாதையென்க. (அஅ)

வேறு.

பானிமிர்கனியருட் பவளக்குன்றிழி
தேனிமிர்மொழிப்புனற் செறிந்தவாரியுட்
கோனிமிர்வில்லினன் குளித்தின்புண்டலா
னினிமிரிருளுள நீங்கிலாயதே.

உரை.— அங்ஙனம் பாலோடொப்பக் கனிந்ததயையாகி யபவளமலையினின் றிழிந்த மதுமொழியாகிய தெண்ணீர்வெ ள்ளத்து ளம்பெய்யும் வில்லோனாகியநாயகன் குளித்துத் தா

னின்பமுண்டாகுழிய மனதிற்கொண்ட விருண்ட மயக்க
த்தைமுழுதும் விடாதிருந்தானென்க. (அ௯)

திங்கணீர்க்கதிரணி தியங்குமார்பினேன்
றங்கணீர்க்கடவுளு மறையுந்தாமுணர்ந்
தங்கணீர்த்தொழுகமற் றருளிக்கேட்டியொன்
றிங்கணீர்த்தடிகளே யென்றுசெப்பினன்.

உரை. — சந்திரனுமிழ்ந்த பாற்கதிரொப்ப முத்தாரமா
டாநிற்கு மார்பனாகியநாவகன் றகப்பனைநோக்கி யூதருடை
யதெய்வமும் வேதமு நீர்த்ததென்று தாமேபோற்றித்தம்ம
ட்டோ டொழுகக்கடவாராகினு நான்செய்யும்விண்ணப்ப
ங்கேட்கச் சுவாமியென்று மீளவுஞ்சொன்னானென்க.(௯௰)

உய்வகையின்றிவந் துலைந்தெந்நாட்டுரி
யையவகைமுறையற வணுகியோர்முனி
மைவகைமொழியொடு மருட்டிநாடெலாம்
பொய்வகையழிப்பது பொறுப்பவோவென்றான்.

உரை. — பிழைக்கும்வகையொன்றின்றி யிங்கேவந்திரந்
தொருமுனி நமதுநாட்டிற்குரிய ஐவகைமுறைகளைக் கெடு
த்துமயக்குவிக்கு மினியமொழியோடு பொய்யின்றன்மை
யா விந்நாடெல்லாமழிப்பது பொறுக்குந்தன்மையோ வெ
ன்றுனுவகனென்க. (ஐவகைமுறைகளாவன: தெய்வமுறை,
குலமுறை, நூன்முறை, வழக்குமுறை, ஒழுக்கமுறை யெ
ன்றிவையைந்துமென்க.) (௯௧)

தாதைநெட்டுயிர்ப்பினோ டிரங்கிச்சாற்றினன்
மேதைகெட்டிருண்டிரு விழிகெட்டெள்ளிய
பேதைமட்டுண்டெனப் பிதற்றிப்பில்கிய
காதையுட்கொண்டுநீ கலங்கனீர்மையோ.

உரை.—அதனைக்கேட்டதாதை பெருமூச்சினைவிட் டிர
ங்கிச்சொன்னான்: மதியுங்கெட்டுக் கண்ணிரண்டுமிருண்டு
கெட்டு நிந்தைப்பட்டபேதையா யொருகிழவி கள்ளுண்

டார்போல வெறியிற்பிதற்றிச்சொன்னமொழிகளையுட்கொண்டு நீகலங்குவது நல்லதோவென்றானென்க.   (௬௨)

காற்றிறத்தாடிய கலைப்பதாகைபோன்
மாற்றிறத்துரைப்பவர் வழுதுகேட்கிலாய்
வேற்றிறத்தங்கணு ணிருந்தவேலையி
னாற்றிறத்தவர்முறை நோக்கிவாழ்த்தினேன்.

உரை.— காற்றின்றன்மையாற் றிரும்பியாடாநிற்குஞ் சீலைக்கொடிகளைப்போலக் கொண்டமயக்கத்தின் றன்மையாற் சொல்பவர்பொய்யுரை கேட்கவேண்டாம், படைத்தலைவனு யூதர்நாட்டி னெடுநாள்நானிருந்தபோ தவர்முறைகள் தேர்ந்த நூல்வழுவா முறைகளென்றுகண்டு மிகவும்வாழ்த்தினேனென்றானென்க.   (௬௩)

தம்முறையெவர்க்குநீர்த் தகுதியாய்ப்பொது
மெய்ம்முறைச்சுருதியும் வினைகடீரறத்
தம்முறையனைத்துநன் றாகக்காண்டியேல்
வெம்முறைவெருளொடு வெறுத்தல்வேண்டுமோ.

உரை. — மீளவுந் தன்னாட்டுமுறையுந் தன்குலமுறையும் வன்வற்குரியனவாகவிட்டு மற்றெவர்க்கும்பொதுவாய் நிற்கு மெய்வேதமும் வினைகள்தீர்ப்பதற்குக் காரணமாகிய நல்ல றமுறைகளும் யூதரிடத்து நன்றாகநிற்பக்கண்டாயாகி லவர்கள்சொன்னதினு னன்றாய்த்தோன்றினவேதத்தையும்-அறமுறைகளையும்பகைத்து மயங்கிவெறுத்தல்வேண்டுமோ வென்றானென்க.   (௬௪)

பூநகப்புண்ணகப் புனல்செய்பொய்கைகண்
டேநகமலர்ந்தகாச் சென்றன்னான்சொலும்
பாநகவுணர்வுகேட் டறத்தின்பாலதோ
கூநகவிழிவதோ கூறநீயென்றான்.

உரை.— இவையெலா மங்ஙனமாகையிற் பூவும்பறவையு மகிழும்படி நீர்நிறைந்ததடாகத்தருகே வாசமதுமலர்பூத்த

மஅ

சோலையிடத்துச் சூசைமாமுனியனுதினம் பாவினு மினிய மொழியோடு சொல்லுமுணர்ச்சிகளைக்கேட்டபின் பவை யறத்தோடொத்தனவோ வுலக நகைத்திகழத் தகுவனவோ வென்று நீயேசொல்வாயென்றான் றூதையென்க. (௬௫)

அய்யநன்றிதுவென வடியைத்தாழ்ந்துபோ
யுய்யநன்றருமறை யுணர்வவாவிலா
வெய்யநெஞ்சுணர்ந்ததீ வினைமுடித்திட
மையநெஞ்சுணர்விலேன் வளனையண்டினன்.

உரை.— ஐயா நல்லதிதென்று நாவகன்றகப்பன்பாதத்தைவணங்கிப்போ யுயிர்வாழ்வதற்குரிய பயன்றரும்வேதத்தைக்கேட்க வாசையொன்றின்றிக் கொடியதன்னெஞ்சினினைத்த தீவினைமுடிப்பதற் கிடத்தைத்தேட மயக்கம்விடாதவுணர்வினனாகிச் சூசை வேதநன்னூலுணர்த்தா நின்றவிடத்துச் சென்றானென்க. (௬௬)

வேறு.

தீயவுள்ளொளித் தினியவைமுகத்திடைத்தீட்டிப்
போயலர்ந்தபூம் பொழிலிடத்தவன்வரக்கண்டு
தூயநற்றவ விளக்கெதிர்திருளிலசூசை
யாயயாவையு மாசறக்கண்டெனவறிந்தான்.

உரை.— அங்ஙன நாவகனினைத்ததீமையை யுள்ளேயொளித்து முகத்திலெழுதிய வினியவன்பினைக்காட்டி மதுமலர்ச்சோலையிடத்துவருவதைக்கண்டசூசை தூய நற்றவமாகிய திருவிளக்கவியாதிடு மொளிமிகுதியா லிருளில்லாதவனாகிச் சுரமிசொன்னது மிவன்றூதைசொன்னது மிவனுள்ளுணர்ந்ததுமென் றிவையாவையு மறைவொன்றின்றிக் கண்ணாற்கண்டாற்போல வறிந்தானென்க. (௬௭)

வரைகிடந்தின மணிகொழித்தொழுகியநதிசூழ்
கரைகிடந்தமா வழைமகிள்சண்பகங்கமழ்கா
திரைகிடந்தவர்க் குரைத்தெனநாவகனெஞ்சிற்
புரைகிடந்தவை பற்றிமாமுனியிவைபுகன்றான்.

உரை. — மலையினின்று நவமணிகொழித்துவந் தோடிய வாற்றின்கரைமேன் மாவும்புன்னையு மகிளமுஞ் சண்பகமு ங்கலந்து கமழாநிற்குஞ்சோலையிடத்தி லொழுங்கோடுகூட் டமாய்க்கிடந்த யாவர்க்கும்பொ துவாய்ச் சொன்னாற்போல நாவகனினைத்த தீமையைப்பற்றிச் சூசைமாமுனியிவற்றைச் சொன்னானென்க. (௯௮)

உயிரொன்றேயுடை யீரெனவுயிருணுங்கூற்றுஞ்
செயிரொன்றேமுழு தொருவுமின்வித்தியசெயிரோ
துயரொன்றேவிளைத் தடுமெனச்சூழ்ந்துளிதுகடன்
பெயரொன்றேபெற லஞ்சுவர்பெருந்தகைநீரார்.

உரை. — சூசை யெங்ஙனஞ்சொன்னானெனில், உங்களு க்குயிரொன்றுமாத்திர முண்டென்றறிந் தவ்வுயிரைக்கொல் லுங்கூற்றனுகிய பாவமொன்றினைப் பகைத்துவிடுவீராக, வி ளைத்தபாவமே தீராததுன்பம்விளைவித் துயிரைக்கொல்லு மென்றுணர்ந்தமையாற் பெருமையுடையோர் பாவத்தின் பெயரையும் பெறுதற்கஞ்சுவா ரென்றுனென்க. (௯௯)

அண்டமீவரை நெற்றியிற்பனியிலையறமே
மண்டவாழ்பவர் மருளவோர்கேடிலையன்று
ருண்டநஞ்சுமவ் வுயிர்க்கமுதாகிமற்றுயிர்தங்
கொண்டதீயவர்க் கஃதுயிர்கொலுவிடமாமால்.

உரை.—மேகமண்டலங்கடந்துயர்ந்த மலையினுச்சிமேற் பனியில்லை, அத்தன்மைத் தறத்தா லுயர்ந்துவாழ்பவர்க் கொ ருகேடில்லை, அவர்நஞ்சுண்டாலுந் தமக்கமுதாம், தீயோர்க் கோவெனி லமுதுங் கொல்லுநஞ்சாமென்றுனென்க. (௱)

பொன்றும்யாவுமே புரைசெயும்பகையொன்றே
சென்றுசென்றடிசென்றதன்னிழலெனநீங்கா[பொன்றுச்
தின்றுதீமையை யிவன்பிறர்க்கெண்ணியதன்மைத்
தன்றுதீமையே யவன்றனக்கமைவதுகாண்பான்.

உரை. — பூவுலகுள்ளயாவு மிறந்துபடுவன, பாவத்தால்வ ரும் பகைமாத்திரமொழியாது தன்னிழல் தன்னடியைவி

டாததுபோல வென்றுந்தன்னை நீங்கா வின்றுதான் பிறர்க்குத்தீமையை நினைத்தானுளோத்தனக்குத் தீமைவருவதைக் காண்பானென்றுனென்க. (ாக)

தீயகாஞ்சிர நட்டபின் றீங்கனிகொயவோ
தீயவித்தினர் தீயவைவிளைவதுகாண்பார்
தீயசெய்தனர் தீயவரொன்பவர்மருளாத்
தீயபட்டனர் தேவரொத்தாரெனப்படுவார்.

உரை. — எட்டிமரத்தைவளர்த் ததிலே யினியகனிகளையறுத்துண்பாருண்டோ? தீமையை விதைத்தயாவருந் தீமையேதமக்குவிளைவதுகாண்பார். மீளவுந் தீயவைபிறர்க்குச்செய்தவர் தீயோரென்னப்படுவரொழிய மனதிற்றளராமற் றீயவைபட்டவர் தேவரோடொத்தாரென்னப்படுவாரென்றானென்க. (ாஉ)

அடுஞ்செந்தீயினு மட்டகின்மணமினிதன்றே
சுடுஞ்செந்தீயினுஞ் சுட்டொளிநிதியினிதன்றே
கொடுஞ்செந்தீயெனக் கொதித்தின்னுவாக்கலினினிதாம்
படுஞ்செந்தீயெனப் பாசுறைபடுவதேயென்றான்.

உரை. — அகிலக்கட்டையைக்கொல்லுந் தீயினுங் கொல்லப்பட்ட வகிலின்மணமினிதல்லோ? பொன்னைச்சுட்டதீயினுஞ் சுடப்படும்பொன்னொளி யினிதல்லோ? ஆகையாற் றீயோடொத்தசினத்துடன் பிறர்க்குத் துயரைவருத்தலினுந் தீயோடொத்த துயரைப்படுவதே யினிதாமென்றான் சூசையென்க. (ாஙா)

இனையசாற்றலு மெரிநெஞ்சான்வியப்புறநினைத்த
தனையகேட்டலு மயர்ந்தபின் றீயவர்தீய
புனையவாக்கலே புண்ணியமென்றுளம்புழுங்கி
முனையவோதினன் முனிவனுமீண்டிவைமொழிந்தான்.

உரை.—சூசையிவற்றைச் சொன்னவளவி லழன்றநெஞ்சானாகியநாவகன் றுனினைத்தயாவையுஞ் சொல்லக்கேட்டு

மனதிலயர்ந்தபின்பு தீயோர் தீயவைநுகரும்படி செய்வ தேபுண்ணியமென்று மிருந்தசினத்தோடுசொன்னான், அதற் குச்சூசைமாமுனி மீளவு மிதனையுரைத்தானென்க. (௱௪)

மெய்நினைந்துபொய் விளைத்தெழுதியபடம்போல
மைவளர்ந்துள வஞ்சகர்மெய்யொன்றையூன்றிப்
பொய்விளைந்தசொற் பொருந்தியுட்கொள்வதும்வேண்டா
மொய்மலிந்துளி முழுதொன்றிறைஞ்சியவேலோய்.

உரை.— நாவகன் தீயவர்க்குத் தீயவைசெய்வது நலமெ ன்றபோ தவ்வேதத்தாரைத் தெண்டிப்பதினிதென்று நினை த்தான், அதனைச்சூசையறிந்து சொன்னதைவிட்டு நினைத்த வைபற்றிச்சொல்வான்: மெய்யைநினைத்துப் பொய்யைக்கா ட்டுஞ் சித்திரமெழுதினவனைப்போல மயங்கினமனதில் வ ஞ்சங்கொண்டவ ரொருமெய்யையூன்றிப் பொய்யைக்காட் டிச்சொன்னதைப்பொருந்தியுட்கொள்ளவேண்டாம்போ ர்முகத்துப் பகைவர்வணங்கும்வேலோ யென்று னென்க. (௱௫)

நிலத்தின்றன்மையா னீர்திரிந்தனையபற்றுளந்தன்
புலத்தின்றன்மையாற் புறத்தவைதோன்றலாலன்பி
னலத்தின்றன்மையாற் றீயவுநல்லவாம்பகைகொள்
சலத்தின்றன்மையா னல்லவுந்தீயவாஞ்சகத்தே.

உரை.— மீளவும் பெய்தநீர்சேர்ந்தநிலத்தின்றன்மையா ற் றிரிந்ததுபோல மனமுங் கொண்டபற்றுதலின்றன்மை யாற் புறத்துக்கண்டயாவுந் தனக்குத்தோன்றுமென்றமை யா லொருவன்மேலன்புண்டாகி லவன்செய்த தீயவுநல்லவா கத்தோன்றும், பகையுண்டாகி லவன்செய்தநல்லவுந் தீய வாகத்தோன்றும் பூவுலகெங்கு மென்றனென்க. (௱௬)

கட்புறத்தெழில் காட்டியகாஞ்சிரமினிதோ
முட்புறத்திலுண் முதிர்சுவைச்சுளைப்பலாவினிதோ
விட்புறத்தெரி மின்னொளிவிரும்பிலனாகி
யுட்புறத்துநல் லவையுமல்லவையுமென்றுணர்வாய்.

உரை.—புறத்தழகுகாட்டிய காஞ்சிரங்கனியினிதோ? புறத்துமுள்ளுளதாயுள்ளேயினியசுளையுள பலாக்கனியினிதோ? ஆகையான் மேகத்தில்விளங்கியொழியு மின்னலை விரும்பாமலெப்பொருளினு முட்கொண்டதன்மையை யாராய்ந்து நல்லதுமாகாததுமென் றறியக்கடவா யென்றானென்க. (௱௭)

செய்ததீமையே செய்தவர்மேல்வருந்தன்மை
பொய்தகாதெனப் பொன்மணிவீங்கியதோளா
யெய்தவோர்ந்தவை யிழுக்கெனவிடுதியென்றுரைத்தான்
மைதகாமறை வளர்கொழுகொம்பனை நீரான்.

உரை. — செய்ததீமை செய்தவர்மேலேவருவது பொய்யாதென்று நிச்சயித்துப் பொன்னுமணியுமணிந்ததோளாய் நீ முடிப்பநினைத்தவற்றைக் கேடென்றுவிடுவாயாகவென்று மறைவின்றிச்சொன்னான் வழுவாவேதமாகியபூங்கொடிபடருங் கொழுகொம்பாகியகுசைமாமுனியென்க. (௱௮)

வேறு.

விண்டெனவீங்குதோளான் விளைவொளித்துணர்ந்தயாவுங்
கண்டெனமுனிவன்சொல்லக் கனன்றுளம்புழுங்கச்செந்தீ
யுண்டெனவியப்பிற்கேட்ப வுடைந்தெனநாணிப்பின்னுட்
கிண்டெனவெழுந்தசீற்றங் கிளைத்தெரியிடியிற்பாய்ந்தான்.

உரை.—மலையோடொத்த புயத்தானவகன் கருத்தைக்காட்டா துளத்தினினைத்தயாவையுங் குசைமாமுனி கண்ணாற் கண்டாற்போலச் சொல்லக்கேட்டுத் தீயுட்கொண்டதன்மையாற் சினந்துபுழுங்கவு மதிசயித்துணரவு முள்ளுடைந்து நாணவு மனத்தைக்கிண்டினகோபம் பொங்கிக்கிளைத்துமேலெழத் தானு மோரிடிபோல முன்னேபாய்ந்தானென்க. (௱௯)

பண்ணொன்றுபாடலொன்றப் பகர்வொன்றுசெய்கை
நன்மீற

புண்ணொன் றுபடனன் றென்றாய் புண்படுகென்னவெள்ளிக்
கண்ணொன் றுகதத்திற்சீறிக் கன்னமேற்புடைத்தானன்னான்
விண்ணொன் றுமதியிற்சூசை மிகமகிழ்ந்திலங்கிநின்றான்.

உரை. — அங்ஙனஞ் சினந்து முன்னேபாய்ந்தநாவகன் வீணைவாய்க்குரலோ டிசைபடப் பாடலைப்போல வொருவன்சொன்னதற் கிசைபடத்தானேசெய்வது நல்லதேயாகையாற் புண்படுவதினிதென்றாயே, புண்ணேபடுவாயென்றுநிந்தையாய் நகைத்துக் கண்ணிற்றீயெழச்சினந்துசீறிக் கன்னத்திற்சூசையையடித்தான், அதற்குச்சூசை மிகவுமகிழ்ந்தமுகத்து வான்மதியொப்பக் குளிர்ந்தகதிரைவீசி விளங்காநின்றானென்க. (௱௰)

தனிக்கதிருணர்வின்மிக்கோன் றனையுறிமகிழநோக்கிப்
பனிக்கதிர்ப்பகையாங்கஞ்சம் படுத்தியமுகஞ்செய்வில்லா
னுனிக்கதிர்சுரக்கும்வேலோ னொந்துளந்தெளியத்தேறித்
துனிக்கதிரொழியவீழ்ந்து துணையடிதொழுதுசொன்னான்

உரை. — அங்ஙன நிகராவுணர்வின்மிக்கோன்சூசை தனைபுரிந் தவனை மகிழ்வோடுநோக்கிப் பகைத்தசந்திரன்முகத்துத் தோர்த்துக்குவியுந்தாமரையைவென்று பட்டவடியால் வாடாச்சூசைமுகமே வீசினகதிரால் விளங்கினவேலோனாவகன் றெளிந்துதேறித் தன்மனத்துயர்தீர வவனிருபாதத்து விழுந்துவணங்கிச் சொன்னானென்க. (௱௰௧)

தூய்ப்படவினியசொல்லாற்சுட்டியவுணர்விறேற்றேன்
பொய்ப்படவுரைக்கின்றோரும் பொருந்துநூலெளியசொல்வார்
மைப்படவிவனான்செய்த வடுவினைப்பொறுத்தசால்பே
மெய்ப்படவுரைத்தவேத விதியெனத்தெளியக்கண்டேன்.

உரை. — சூசையைநோக்கி நாவகனெங்ஙனஞ் சொன்னானென்னில், தூயவினியசொல்லா னீகாட்டின வுணர்ச்சியா னானேதெளியவில்லை, பொய்யைச்சொல்கின்றாரு மெளிதாய்ப்பொருந்தச்சொல்வார்; நானிங்கேமயங்கிச் செய்த

குற்றத்தை நீ பொறுத்ததன்மையே மெய்யானவேதத்தின் விதியென் றுதெளிந்தேனையா வென்றானென்க. (௱௰௨)

வில்பொருவாவலெல்லவிழுங்குவதுணர்ந்ததேபோற்
சொல்பொருவெளிற்றிற்சொன்ன பொய்யுணர்ந்துயிரிவ் வேதத்
தெல்பொருப்பேதைநானு மிகன்றதையொழிக்கவோர்ந்தே
னல்பொருதிலங்குநின்றன் னருளினுலுணர்வுற்றேனே.

உரை.— ஒளியைப்பொருதவவ்வால் சூரியனைவிழுங்க நினைத்தாற்போலத் தெளியாவறியாமையாற் சொன்னபொய்யையுட்கொண் டுயர்ந்தவிவ்வேதத்தொளியைப் பொருத பேதைநானு மூட்பகைத் ததனையொழிப்ப நினைத்தேன், இருளைப்பொருமல் விளங்கின வுன்றயையா னல்லுணர்வடைந்தேனென்றானென்க. (௱௰௩)

நாவலினிழல்செய்யின்ன நாடலாலறியாவேற்றுக்
காவலின்றுட்டிலுள்ள கலைநலமுளத்திலெள்ளிப்
பூவலினின்றமீன்போற் பொவியுணர்வின்றிப்பாவக்
கூவலினின்றவென்னைக் குணுக்கினமருட்டிற்றன்றே.

உரை.—நாவன் முதற் பலமரநிழலைச்செய்யு மிந்நாடன்றி யொன்றுமறியாமல் வேற்றுநாடுகளிலுள்ள நூலுநன்மையு மெண்ணுமன் மனதினிந்தித்துக் கிணற்றுமீன்போல வுயர்ந்தவுணர்வொன்றின்றிப் பாவக்கிணற்றிற் கிடந்தவென்னை முழுதும்பசாசுமயக்குவித்ததென்றானென்க. (௱௰௪)

கரைகொன்றகடலிற்பொங்கிக் கதத்துண்மையுணராப் பாலா
விரைகொன்றமனத்திலோர்ந்த நினைவெலாநிரையிற்கண்டு
புரைகொன்றதவத்தின்மிக்கோய்புகன்றபோதுளத்திருணில்
வரைகொன்றதிண்ணமார்பில் வடுவறவுருகாதானேன்.

உரை.— கரைமேற்பொங்கின கடலோடொத்த சினத்து மெய்யையுட்கொள்ளாமையா லொழுங்கில்லாத மனதினுன்கொண்ட நினைவெல்லாவற்றையுந் தீவினையறுத்ததவத்தின்

மிக்கோய் நீகண்டொழுங்கோடுசொன்னபோ தவற்றைக்கே
ட்டு நானுண்ணுணினேன். ஆயினுந் தீவினையொழியும்படி
கற்பாறையினுந் திண்ணியநெஞ்சி னுருகாதிருந்தேனென்
றானென்க. (௱௰௫)

உணங்கியமரத்திற்செந்தீ யுடன்றெனக்கொண்டநா
ணத்
தணங்கியநெஞ்சிற்சீற்ற மழன்றனைப்புடைத்தக்கானீ
வணங்கியதன்மைகாட்டு மாட்சிகண்டொருங்குபாவத்
திணங்கியமுறைக்கல்லூரி யென்வழியொழியத்தேர்ந்தேன்.

உரை. — காய்ந்தமரத்திற் செந்தீச்சினந்து பற்றுமாறு
போல நாணத்தால்வருந்தின வென்னெஞ்சிற்பற்றின கோ
பமிகுதியா லன்னையடித்தபோது வணங்கினதன்மையானி
ன்று நீ மகிழ்ந்தமுகத்துக் காட்டின மாட்சியைக்கண்டு ச
கலபாவங்களைப் பயிற்றும் பள்ளிக்கூடமாக நானிந்நாள்வ
ரைக்குமனுசரித்த பொய்யானவேதமொழிவதற் குணர்விற்
றெளிந்தேனென்றானென்க. (௱௰௬)

காமமேயன்றிநன்னூற் கல்வியொன்றறியாப்பூண்செ
தாமமேயன்றிவாய்ந்த தகவிலபாவிநானே [ய்
வீமமேயன்றியுற்ற வினையறுத்தளித்திமற்றன்
ஞமமேயன்றிநானு நயப்பவொன்றுரைக்கறேற்றேன்.

உரை. — காமமேயறிந்தவொழிய நற்கல்வியொன்றறியா
மலணிந்தவாபரணங்கள் செய்யுமொளியேயன்றி விளங்கி
னமாட்சியில்லாத பாவிநானே யஞ்சாமற்கொண்ட தீவி
னைநீயறுத்திரட்சித்தாயே, இனி நானுமுன் ஞமமேயொழிய
வாதரவாகவேறென்றுஞ்சொல்லத்துணியேனென்றுனவக
னென்க. (௱௰௭)

என்றியையுணர்விற்சொல்லோ டெரிவினையவிப்பக்க
ண்ணீர்
குன்றியையருவிபோலக் கூர்ந்தெழுந்தொழுகிற்றுகிச்
சென்றியையன்புமார்புஞ் சென்றென்றத்தழுவிச்சூசை
யன்றியையெவருந்தம்முள் ளதிசயித்துவப்பின்மிக்கார்.

உரை.— நாவகனடைந்த வுணர்வோ டிவற்றைச்சொல்லி மனதிலழுன்ற தீவினையவிப்பதற் கழுதகண்ணீர் மலையினின்றொழுகு மருவிபோலமிகவுமோடாநிற்கச் சூசைவந்தன்பும் மார்புமொருப்பட வவனையிறுகவணைத்துக்கொண்டு சூழவன்று கூட்டமாய்நின்றபாவருந் தம்முளதிசயித் துளத்தின் மிகவு மகிழாநின்றாரென்க. (௱௰௮)

தெளிவளரழலிட்டூதிச் செற்றிரும்பிரதப்பாலா
லொளிவளர்பசும்பொன்னாத லுண்டெனவுரையிற்கேட்டே
மிளிவளர்கொடியநீரா னின்றுநற்பொறையின்பாலாற்
களிவளர்தருமனாதல் கண்டதுதெளிந்தோமென்றார்.

உரை,—மகிழ்ந்து சூழநின்றவர்சொல்வார்: தெளிந்தநெருப்பிலிரும்பினைவைத்தூதி யதுசெற்றபருவத்திட்ட விரதத்தா லவ்விரும் பொளியைச்செய்யும்பசும்பொன்னாவதென்று சொல்லக்கேட்டோமொழியக் கண்டதில்லை, இன்றோ வென்னி யிகழப்பட்ட கொடியகுணத்தோ னிம்முனி பொறுமையா னுங்களிகூரும்படி நல்லறவோனானதுகண்டு தெளிந்தோமென்றாரென்க. (௱௰௯)

தொல்வினையென்னுஞ்சூலாற் றுடர்வினைதளிர்த்துவிம்மும்
புல்வினைபுல்லாதோற்ற புலமையோனொருவன்செய்த
வல்வினையுலகம்யாவும் வளம்பெறப்பயத்ததன்றோ
நல்வினைவிளைவுகாண்மி னயப்பவென்றெவரும்வாழ்ந்தார்.

உரை. — தொல்வினையாகிய சென்மப்பாவந்தளிர்த்துவளரும் புல்வினையாகிய தீவினையாவுந் தனக்குச்சேராதபடி தவமுடித்தமாமுனியொருவன் செய்தவல்லறவினையே யுலகெலாமாட்சியைப்பெறும்படி பயனைத்தந்ததல்லோ? எவருமகிழும்படி நல்வினைபிறர்க்கும் விளைவிக்கும் நன்மையிதென் றுபாருங்களென்று மிகவும்வாழாநின்றாரென்க. (௱உ௰)

வேறு.

குடம்புரையிருபுயங் குழைத்தசாந்தினை
நடம்புரையசைகுழை நக்கிவில்செயப்

படம்புரையருளெழில் பரப்பினூத்திவை
வடம்புரைசுருதிசூழ் வளன்விளம்பினன்.

உரை.—அங்ஙனமெவருஞ்சொன்னபின்பு கும்பமொத்த விருபுயத்திற்பூசினசாந்தினை யாடாநின்றகாதணிகள் நக்கியொளியைவீச வெழுதப்பட்டபடம்போ லடைந்தவருளினலழகுபரப்பாநின்றநாவகற்கு மணிவடமாக வேதநூலணிந்தசூசை யிதனைச்சொன்னானென்க. (௱௨௧)

நாடலேயருந்தவ நலத்தைக்கண்டுநீ
நீடலேபுகழ்வது நீர்மையோவினி
தாடலேமுடவற்கு மினியதாமன்றே
கோடலேகுணமெனக் குறிப்பிற்றேறுவாய்.

உரை.—தேடற்கரிய தவத்தின்மாட்சியைக்கண்டு நீயதை நெடிதாய்ப்புகழ்வது கருமமோ? அசையமாட்டாதமுடவனு நன்றாயாடினதைக்கண்டு புகழ்வானல்லோ? ஆகையா லறத்தின்மாட்சியுட்கொண்டு தானேநடப்பது குணமென் றுணர்விற்றேறக்கடவாயென்றானென்க. (௱௨௨)

மின்னிழலெனமிளிர்ந் தொழிவெறுக்கைசெய்
கொன்னிழல்வெறுத்தறங் கொண்டுநின்றியேல்
நின்னிழலெனநினை யிறைவனீங்கிலா
தின்னிழலியற்றிநீ யினிதில்வாழ்கென்றான்.

உரை.—மின்னொளிபோலத்தோன்றி யொழியுஞ்செல்வத்தின்வடிவு வீணென் றதனைவெறுத்து நல்லறங் கைக்கொண்டுநின்றாயாகி லுன்னிழலுன்னைநீங்காததுபோல ஆண்டவனு முன்னைக்கைவிடாமற் செய்யுநிழற்கீழினிதாய் வாழாநிற்பாயென்றான் சூசையென்க. (௱௨௩)

படைப்பதற்கரியநற் பரிவிற்றூதையுங்
கிடைப்பதற்கரியதோர் பொருள்கிடைத்தெனா
வுடைப்பதற்கரியவின் புளத்திலுண்டுளத்
தடைப்பதற்கரியவன் பருளைக்காட்டினான்.

உரை. — இவையெலாமாகியதன்மையை நாவகன்றாதை யுமறிந்து பெறுதற்கரியவன்போடு கிடைக்கப்படாத நற் பொருள்கிடைத்தாற்போல மெலியாமகிழ்ச்சியோ டுண்ட வின்ப முளத்திலடக்கமாட்டா தருளேக்காட்டினுனென்க.
(௱உச)

கழீயினமணியெனக் கசடற்றாரருள்
தழீயினநாவகன் மயங்கியந்நகர்க்
கெழீயினதிருவிளக் கெனநின்றேத்தினர்
குழீயினநல்லோரெலாங் குழாங்குழாங்கொடே.

உரை. — ஒளிபெறக்கழுவப்பட்ட திருமணிபோலத் தீ வினைநீங்கித் தேவவருளேயடைந்த நாவக னந்நகர்க்கெல்லா முயர்ந்தவோர் விளக்காகத் தோன்றுநிற்ப நல்லோரியாவரு ங் கூட்டங்கூட்டமாய்த் திரண் டவனைப் புகழ்ந்தாரென்க.
(௱உரு)

வேன்முகத்தொத்தநல் வீரநாவக
னூன்முகத்தொத்தென நோக்கிவாமனுந்
தேன்முகத்தலர்ந்தநெஞ் சுவப்பச்சேர்ந்துதாம்
வான்முகத்திருசுடர் மருளத்தோன்றினர்.

உரை. — வாமனும் வீரவேற்கொற்றவிற் றன்னேடொத்த நாவக னிப்பொழுதரியவேதநூற்கேள்வியி லொத்தானென் றுகண்டு தேனேடுமலர்ந்த நெஞ்சின்மகிழ்ந் தவனேடுசேர் ந்து சேர்ந்தவிருவரும் வானிற்றிரியு மிருசுடர்போல வந்ந கரிடத்துத் தோன்றினொன்க.
(௱உசா)

மேதகாரணத்திவை சுரமிகேட்டவி
ளுதகாரிடித்தென நைந்தரற்றிநு
ணீதகாதலின்மிகு நீரநாவகா
ஆதகாதிதுவென வகடதுக்கினள்.

உரை. — வருந்தும்படி யிவையாவையுஞ் சுரமிகேட்டு மேகமுழங்கினாற்போல மெலிந்துபுலம்பிக்கூப்பிட்டு நீதி மொழியிற்பொலிந்தநாவகனே! ஆ நீசெய்தது தகாதென் றழுது வயிற்றிலடித்துக்கொண்டாளென்க.
(௱உஎ)

தீய்ந்தவோர்கறலெனக் கருகிச்சிந்தைகெட்
டாய்ந்தவோர்நிலைப்பய னிதோவென்றூர்த்துணைக்
காய்ந்தவோர்சுவாவெனத் தனைக்கடித்தழற்
றோய்ந்தவோரரவெனச் சுருண்டுவிம்மினாள்.

உரை.—அங்ஙனந் துன்பமிகுதியால் வெந்துகருகினவி றகுபோல வுடலுங்கருகிச் சிந்தையுங்கெட்டு நானினைத்தவு பாயத்தாலையோ வந்தபயனிதோவென்று முழங்கிப் பசி யாற்காய்ந்தநாய்போலத் தான்றன்னைக்கடித்து நெருப்பிற் போட்டபாம்புபோலச் சுருண்டுருண் டழுதுவிம்மினாளெ ன்க. (௱உஅ)

தீவிழுக்குறவிவற் சென்றுயாவரும்
பூவிழுக்குறவுளம் பொறுப்பதோவெனு
நாவிழுத்திறந்தெரி நரகிற்றன்னெருழ
மோவிழுக்கிடுங்குணுங் குவப்பமூழ்கினாள்.

உரை.— தேவர்க்கிகழ்ச்சியாக விவனையெல்லாரும் பின் சென்று பூவுலகெல்லாங்கெடுவது பொறுக்குந்தன்மையோ வென்று நாக்கைப்பிடுங்கிச்செத்துத் தான்றேவராகவணங் கி யுயிரைவருத்தும்பசாசுகள் மகிழ்வதற் கன்று நரகில்விழு ந்து முழுகினாளென்க. (௱உ௯)

தீயவையுணர்ந்தன டையவுண்டெரி
போயவைபுகழ்ந்தநூற் புதைப்பவுள்ளிய
வாயவைவளர்மறை வழங்கிற்றுயதே
தூயவைதூயவாய்த் துளங்கும்பீடையால்.

உரை. — அங்ஙனந் தீமையைநினைத்தசுரமிதானே தீமை யையடைந்து நரகில்விழுந்துபோ யறிஞர்புகழப்பட்டவே தநூலையொழிப்பதற் குணர்ந்தவழியாற் றிருச்சபைவளர்ந் தவ்வேதம்வழங்கினதாம். அத்தன்மைத்தே வருந் துன்பத் தாற்றூயவினைகெடாமன் மிகவுந்தூயதாகி விளங்காநிற்கு மென்க. (௱௩௰)

வேதக்கெழுமைப்படலமுற்றும்.

ஆகப் படலம் - உ௯ - இ - விருத்தம்

உ௩௯௪௰.

முப்பதாவது.

மீட்சிப்படலம்.

வேறு.

ஏழ்படவருடமிவ்வா றியல்படவொழுகிற்றாகிப்
போழ்படக்கல்லுஞ்செசர்தீப் புழுங்கியவனம்போற்பாவத்
தாழ்படவழன்றவந்நா டாரணவருவிபாயக்
கேழ்படமலர்ந்தசோலைக் கிழமையினெழுவிற்றன்றே.

உரை. — இங்ஙன மேழுவருடமுஞ் சூசைமாமுனி யெவர்க்கும் வேதநூலையுணர்த்தியதனாற் கல்லும்பிளக்கக் கொடிதாய்வேகுங்கானகமொப்பப் பாவத்தமிழ்ந்தி யழலாநின்ற வெகித்துநாடு சூசைபோதித்தவேதமாகிய வருவி யங்கே பாய்தலா லழகோடுமலர்ந்த பூஞ்சோலையின்றன்மையா லந்நா டினிதாய்த்தோன்றினதென்க. (க)

தீவிற்றுயலைந்தமுந்நீர் திரையினுள்ளலைவிலாதா
ரேவிற்றயோவல்செய்தார்க் குளத்தினைந்தருளிற்பேணிக்
காவிற்றயெவர்க்குநீழல் காத்தமாமுனிவன்றானே
யாவிற்றய்த்தெய்வமைந்த னருணிழற்கொடுங்கிவாழ்வான்.

உரை. — அங்ஙனஞ் சூசை யெவரையுமுணர்த்திவருகையிற் கடலிற்கிடக்குந் தீவின்றன்மைத்தாகி யுலகவலைவினுட் டானலையாமல் வருத்தினும் வருத்தஞ்செய்வார்க்கிரங்கி யன்போடவரைப்பேணிக் குளிர்பூஞ்சோலைத்தன்மையா லெவர்க்குநிழலைச்செய்தசூசைமாமுனி தானேவிரும்பித் தேவதிருக்குமாரன்றன் றயையாகிய நிழற்கீ ழொடுங்கி வாழாநிற்பானென்க. (உ)

உள்ளுறவின்னோர்க்காற்ற வுயராருட்கடலாமைந்தன்
றென்னுறவகன்றமார்பிற் சிதமுடித்தாயுந்தானு

மள்ளுறவன்பின்மூழ்கி யாங்கவரருந்துஞான
மெள்ளுறவெஞ்சுமென்சொல் வியம்பிடத்துணியுங்காலை.

உரை.—அங்ஙனம் வானவர்முதலாய் நீந்தி யுள்ளேமூழ்கப்படாத தயைக்கடலாகிய திருக்குமாரனது தெளிந்தமார்பிடத்து மீன்முடிசூழ்ந்த தாய்மரியென்பவளுஞ் சூசைதானு முள்ளே யாழமாய்முழுகி யங்கேயுண்ட ஞானமிகுதியை நான்சொல்லத்துணிந்தா லென்சொல் விகழப்பட்டுப் போதாது மெலியுமென்க. (௩)

கூர்த்துராயுவப்பின்மூழ்கிக் கொழுந்தவனுண்டஞானம்
பேர்த்துராயுமிழ்வதேபோற் பெரும்பயனெவர்க்குமாகச்
சீர்த்துராய்நாட்கடோறுந் தேமொழிவாயாற்கூற
நீர்த்துராயெழீயநாடு நிகரிலகேழ்த்ததம்மா.

உரை.—அங்ஙனஞ் சிறந்ததவனாகியசூசை தேவமார்பி லினிதாய்முழுகி யங்கேயுண்டஞானத்தைப் புறத்துமிழ்ந்தாற் போல வெவர்க்கும் பெரும்பயனாக மதுமொழிவாயா னாடோறு முணர்த்தினதன்மையா லந்நாடு நன்மையிற்பொலிந்து நிகரொன்றின்றி விளங்கிற்றென்க. (௪)

வினைப்பகையொழிந்தயாரு மெய்ம்மறைவிளைவுகாணன
வெனைப்பகலேறும்வீயா வின்பமுற்றுவந்தபோழ்திற்
சுனைப்பகைக்கோடைமுற்றித் துதைந்தபைங்கூழ்காய்ந்தன்
முனைப்பகைத்தன்மைத்தன்றோர்முரியவுற்றதுசொல்வாமால்.

உரை.— அங்ஙன மிரவிமாபுரத் தெவருந்தீவினைசெய்யும் பகையைநீக்கி மெய்வேதம்விளைவிக்கும் பயனைக்கண்டு நாடோறுங்குறையாதவின்பத் தனைவரு மகிழ்ந்துவருகையின் மதுமலர்த்தடாகத்துப் பகையாகவருங் கோடைமுற்றின பொழுது நெருங்கிவளர்ந்த பசும்பயிர்காயுமாறுபோல வங்கேயாவரு மனதின்முறிந்து வாடும்படிபகையின்றன்மையா லவர்க்குவந்ததுயரைச் சொல்வாமென்க. (௫)

வானிருந்தெவனுமாள்வோன் வளனிடத்தேவுகின்ற
தேனிருந்தலர்சொல்வானோன் றிருமகற்கொல்லவோர்ந்தான்
றானிருந்தொழிந்தானீண்டே தாயொடுமகவுங்கூட்டிக்
கானிருந்தலர்கோலோய்முற் கடிந்தநாடடைதியென்றான்.

உரை. — இரவிமாபுரத்தார்க்குத் துன்பம்வந்தவழியைக் காட்டத்துடங்கினான். ஆகையால் வானினின்றெங்கு மாளாநிற்குங்கடவுள் சூசையண்டைக்கேவினதேன்மொழிவானோன் சென்று திருக்குமாரனைக்கொல்லநினைத்த வெரோதனிறந்துபட்டானாகையாலுடனே தாயும்பிள்ளையுங்கூட்டிக்கொண்டு வாசமதுமலர்க்கொடியோய் நீமுன்விட்டுவந்த வுன்னாட்டைச்சேர்வாயாகவென்றானென்க. (௬)

பணிமொழிபணிந்துதாயும் பாலனுமுறையுட்சென்று
மணிமொழித்தேவதூது வகுத்தவைவளனேகூற [த்
வணிமொழியிளவனன்றென் றயனமோர்ந்தெவர்க்குங்கூறு
துணிமொழியுறுதியாகச்சொல்லினான்மதுப்பெய்கோலான்

உரை. — வானோன்சொன்ன வேவலைப்பணிந்து சூசை தாயுந் திருக்குமாரனு மிருந்தவிடத்துப்போய்த் தேவதூது சொன்னயாவையு மவர்க்குத் தான்சொன்னவளவிற் றேவு பாலனல்லதென்றமையாற் போகநினைத்ததனையெவர்க்குஞ் சொல்லாமன் மதுமலர்க்கொடியோன்சூசை யெவர்க்குந் துணிவாம்படி சிலவுறுதிகளைச்சொன்னானென்க. (௭)

வரையெனத்துயரிற்போன்மின் வாருதிநாடியோடுந்
திரையெனவிறைவற்சேர்மின் றீயெனவகன்மின் றீய
நுரையெனவாழ்க்கைகாண்மின் றேயெனவுயிரைக்காமின்
கரையெனக்கதியைவெஃமின் கசடறுநெறியிதென்றான்.

உரை. — சூசை யெவர்க்குஞ்சொன்னவுறுதியேதெனில், காற்றின்முகத் தசையாத மலையைப்போலத் துயர்முகத் துறுதியாய்நிலைபெறவுங் கடலைநோக்கி யெங்குநில்லாதோடு மாறுபோல விப்பூவுலகி லாசைவையா தாண்டவனைத்தேடிச்சேரவுஞ் சுடுஞ்செந்தீயைப்போலத் தீயவையண்டாதக

லவும் பயனின்றித்தோன்றியழியு நுரையைப்போல விவ்வா ழ்வுகளையெண்ணிநோக்கவு முடற்கு நோய்வராதபடிக்கும் வந்தநோயைத்தீர்ப்பதற்குஞ் சவியாமற்காப்பதுபோலத் தீ வினையண்டாமலு மண்டினவளவி னில்லாமலு முயிரைப் பேணிக்காக்கவு நீந்தும்யாவருங் கரையைநாடுவதுபோல வான்வீட்டுக்கதியைவிரும்பவு மிதுவே வழுவாநன்னெறி யென்றான் குசையென்க. (அ)

வேறு.

பண்டேண்டிலேங்குதல்போலன்பும்பூசல் பரவுமெனக்
கண்டேண்டிமருட்டியகாரிரவிநாப்பண் கரந்ததுபோல்
விண்டேண்டியாடுகொடிமாடநல்லூர் விட்டகன்று
புண்டேண்டியாற்றுமருந்தொத்தநீரார் போதலுற்றார்.

உரை.—தொட்டவளவில் வீணையேங்கிச்சத்திப்பதுபோ லவன்புதானு நோகத்தொட்டா லெங்கும் புலம்புமோசை மிகுமென்றமையாற் கண்ணைமூடி யிருண்டவிராவின் யாம த்தொளித்தாற்போல வான்மேலாடுங் கொடிமாளிகையுள வி ரவிமாபுரத்தைநீங்கிப் புண்ணைத்தொட்டமாத்திரத் தாற்று மருந்தோடொத்தகுணத்துமூவ ரகன்றுபோகத் துணிந்தா ரென்க. (௯)

நதிதள்ளிநீந்தறியாச்சுழிபட்டார்போ னந்தெசித்தார்
பதிதள்ளிப்போவதறிந்தயர்வாவொன்றுட் பரிந்திரங்கிக்
கதிதள்ளிநடுநிற்பார்கயவவொன்பின் றேறிவளன்
மதிதள்ளியிடுமன்பிற்பகைநன்றென்றே வழிநடந்தான்.

உரை.— நதியைத்தள்ளி நீந்தவறியாம னீர்ச்சுழியுட்ப ட்டவரைப்போல வெசித்தாரு மிவர்போனதறிந்து மிகவு நொந்து மயங்குவாவொன்று மனதிலெண்ணிச் குசை யவர் மேலிரங்கிநின்றபின்பு காரியத்தின்கடைப்பிடியாது நடுவே நிற்பா ரீனவொன்று மாண்டவனேவினைதைத்தவிர்ப்ப மயக் குவிக்குமன்பினும் பகைநலதென்றுந் தானேமனதிற்றேறி க் கூடநடந்துபோனானென்க. (ய)

ஊராழியகன்றிவர்போந் துயர்த்தீப்பட்டென் றுஞ்
நீராழியகன்றிரவிதோன்றிமூவர் நீங்கினரென் [சிவப்ப
நீராழியுட்கவிழ்ந்தகலமொத்தந்தோ வென்றலறிப்
பேராழியொத்தநகர்புலம்புமோதை பெரிதன்றே.

உரை.— இரவிமாபுரத்தகன் றிம்மூவர்போனதனா லிரவி யடைந்ததுன்பமாகியதீயால்வெந்ததுபோல வன்றுசிவந்த வுருவாய்க் கடல்மேலெழுந்து தோன்றினவளவின் மூவர் போனாரென் றெவருமறிந்து மரக்கலமோடியறுத்த கடலு ட்கவிழ்ந்த துபோல வையோவென்றலறிப் பெருங்கடலொ த்த வந்நகரெங்கும் புலம்புமோசை மிகவுங் கிளம்பிற்றெ ன்க. (௰௧)

பொய்ம்மறுத்தீர்புரைமறுத்தீர் பொய்த்தகொன்னூ
ல் புகைந்துளங்கொள் [னக்
மைம்மறுத்தீர்மறையுரைத்தீர்பிள்ளையைத்தாய் மறத்தென்
கைம்மறுத்தீர்போயொளித்தீரந்தோவென்னக் கைமறுத்து
மெய்ம்மறுத்தீர் துயராற்றுயிர் நீத்தன்ன மெய்மறந்தார்.

உரை.— அனைவரு மொளித்தமூவரைநோக்கிச்சொன்னா ற்போல வெங்ஙனம்புலம்பினாரென்னில், எங்களிடத்து முன் வழங்கினபொய்யும் பாவமும் பொய்யைக்காட்டின பயனி லநூலான் மனதிற்புகையாநின்றமயக்கமு மிவையெலா நீங் கமறுத்து மெய்யானவேதம்விளங்கவுரைத்தீர், இப்பொழு து தன்பிள்ளையைத் தாய்கைவிட்டாற்போல நம்மைக்கை விட் டொளித்துப்போனீ ரையோ வென்று கைவிரித்தழுது துயரின்வாளாலறுத்தவுடலைமறுத் துயிர்பிரிந்ததுபோல மெ ய்மறந் தெவரு மயங்காநிற்பாரென்க. (௰௨)

இன்றொளித்தசுடரொடுமுச்சுடரா நீவி ரிராவிருட்கண்
ணின்றொளித்ததிறமென்னோவெங்கட்டீங் கினிலைதானோ
குன்றொளித்தமணியொத்தீரந்தோவென்னக் குழைந்தலறிக்
கன்றொளித்தகறவையனாருளைந்துவிம்மிக் கலுழ்கின்றார்.

உரை.— சூரியனொளித்தபின்பு முச்சுடரொத்தநீங்கள்மூ வரு மிவ்விராவிருளிடத் தொளித்தகாரணமேதோ! நாஞ்செ

ம்தபாவத்தாரோ? நீங்க ளையோ மலையிற்புதைத்த மணிகளை யொத்தீரென்று மனங்குழைந்தலறி யொளித்தகன்றைத்தே டி யிரங்குங் கறவைபோலவாகி நொந்து விம்மியழுவரெ ன்க. (௰௩)

வரைநாட்டி நீர்கடைந்தாங்கமுதுநஞ்சும்வந்தனவென் றுரைநாட்டியுண்டெனமுற்கதையிற்கேட்டே மொண்டவு ஞ்செய்
கரைநாட்டியறக்கடலாமிவர்தம்மன்பின் கனிவுண்டாய்
விரைநாட்டிலகன்றிடராலுண்டாநஞ்சின் விளைவென்பார்.

உரை. — மத்தாகநாட்டினமலையாற் கடலைக்கலடந்தவள வி லமிர்தமு நஞ்சுங் கூடப்பிறந்தனவென்று நாட்டினகதையாகக்கேட்டிருந்தோம், இப்பொழுதோவெனிற் றவமே கரையாகக்கொண் டறக்கடலாகிய விம்மூவரிடத்து முன்னவ ரன்பாகிய வமுதுண்டாகிப் பின் பிந்நாடகன்றதனு லின் று துன்பமாகியநஞ்சு விளைந்ததென்பாரென்க. (௰௪)

கான்சுரக்குமிள்முல்லைநட்டுப்பொன்றுற் கடைகோ வான்சுரக்கும்பனிமாலைப்பந்தர்முத்த மணற்பாய்த்தித் [வி
தேன்சுரக்குநீரூட்டிவளர்த்தபூங்காத் தீந்தறவோ
மீன்சுரக்குமிராவொளித்துப்போதிர்நம்மைவிட்டென்பார்

உரை. — மீளவு மிள்வாசமுல்லைக்கொடிகளைநட்டுச் சூழ ப்பொன்னால்வேலியையவளைத்து மேலே வான்பனியொப்ப க் குளிர்ந்தபூமாலைகளாற் பந்தலையிட்டுக் கீழேமணலாக மு த்துக்களைப்பரப்பி நீராகமதுவையூட்டி நீங்களரிதாய்வளர் த்தபூங்காவனந் தீந்தழியவோ மீன்வழங்கின விராவிடத் தொளித்து நம்மைவிட்டுப்போனீ ரென்பாரென்க. (ஒட் டென்னு மலங்காரவகையான் மூவரோ தம்மைவளர்த்தவரு மையைக்காட்டச் சொன்னவுவமையென்க.) (௰௫)

தாளெழுந்தகஞ்சமெஞ்சக்கதிர்போய்நாளைத் தானு வப்பக் [தும்
கோளெழுந்ததேரொழுமேநீர்போய்நெஞ்சங் குடைந்தழுத்

வாளெழுந்தபுழைபுழுங்கும்பெரும்புண்ணுறி மகிழ்வதற்
கெந்
நாளெழுந்தநுமைக்காணக்கடவேமந்தோ நாமென்பார்.

உரை. — தாமரைமெலியும்படி சூரியனத்தமித்தாலு நாளை மீளவுந் தான்மகிழும்படி யச்சூரியன்வந்துதிக்குமே, நீங்களோவெனி லெந்நெஞ்சினைக்குடைந் தழுந்தினவாளாகிய துன்பஞ்செய்தபெரும்புண் ணினிதாயாறி நாமகிழும்படி யெக்காலத்தோ வுங்களைக்காணக்கடவோ மையோவென்பாரென்க. (௯௬)

அன்புகுக்குங்கண்ணீரோயன்பிற்காற்றுப் பெருந்தளை
யென்
றின்புகுக்குமோரிருசொற்கூறுதந்தோ விராவொளித்தீர் [டு
துன்புகுக்குங்கான்றூறுங்காற்றுணையின்மஞ்ஞைத்துயர்கண்
டன்புகுக்குநெஞ்சுருகியிரங்கீர்கொல்லோ நமக்கென்பார்.

உரை. — அன்பினாலொருவனழுதகண்ணீர் மற்றன்புடையான்றுக்கப்படாத பெரும்விலங் கென்றல்லோ நாமழுங் கண்ணீரைக்காணாதபடி யாதரவாகவோரிரண் டினியமொழிகளை நமக்குச்சொல்லா தையோ விராவிலொளித்துப்போனீர். ஆயினுந் துன்பம்விளைவிக்குங் கான்வழிபோகையிற் றுணையையிழந்தமயில்கள் வருந்துந்தன்மையைக்கண்டவளவிற் கைவிட்டநம்மைநினைத்து நெஞ்சினுருகி நமக்கிரங்கீரோவென்பாரென்க. (௯௭)

கூண்டுண்டாங்குஞ்சகலாதோம்பும்பறப்புட் குலமுங்
கார்
கீண்டுண்டாமிடிக்கஞ்சும்பிடியைத்தாங்குங் கொழுங்கரியு
மாண்டுண்டாங்கான்றூறுங்காற்காண்பீர்காண்கி லாதரவற்
றீண்டுண்டாநமைநினைமினென்பார்ஆஅ தகாதென்பார்.

உரை. — மீளவுங் கான்வழிபோகையிற் கூட்டிலுள்ள குஞ்சுகளை யகலாமற்பேணும் பலவகைப்பறவைகளையு மேகத்தைக்கிழிவிழு மிடிக்கஞ்சாநின்ற பெண்ணானையைத்தாங்

கியாறுதல்செய்யுமதயானையையுங்காண்பீர், கண்டவளவிலா தரவின்றி யிங்கேநீர்கைவிட்ட நம்மை நினைப்பீராக, ஆஅ வி து தகாதென்பானென்க. (௰அ)

சீலநீர்க்கருமுகில்கள்மின்னியார்த்துச் செய்யாவு
நீலநீர்க்கடலரவுமெஞ்சவெஞ்சி நெடிதழுதார்
சாலநீர்க்கடன்மடையைத்திறந்தாற்போலத் தணர்ந்தாணக்
கோலநீர்க்கடலாமந்நகர்நீத்தீட்டங் கொடுதுடர்ந்தார்.

உரை.—அங்ஙனங் கரியமேகங்கள் மின்னியிடித்திடு முழக்கமுங் கருங்கடலிரைத்திடுமுழக்கமு மொவ்வாமன் மிக முழங்கிமெலிந் தனைவருநெடிதழுதபின்பு நிறைந்தகடலின் மடையைத்திறந்தாற்போல வெல்லாருந்திரண்டு செல்வக் கடலாகிய விரவிமாபுரத்தினின்று கூட்டமாய்ப்புறப்பட்டு ப் போனமூவரைத் துடர்ந்தாரென்க. (௰௯)

வேறு.

தேனார்தெளிவார்திருவார்மொழியார்
போனாருயிர்பின்னுடல்போவதெனக்
கானார்வழிபோவமெனக்கடலும்
வானார்கனமுங்கலிமங்குவன.

உரை. — அங்ஙன மனைவருநகரைவிட்டுப் போகையிற் சொல்வார்: மதுவுந்தெளிவுஞ் செல்வமுநிறைந்த மொழி யையுடைய மூவர்போனாரே, நாமும் போனவுயிரையுடலே துடர்ந்தாற்போலக் கான்வழி யவரைத்துடர்ந்துபோவோ மென்று கடலுமேகமுமிட்ட முழக்கத்திலு முழங்கிப்போ னாரென்க. (உ௰)

மிக்கார்துயர்கண்டனமேன்மையிலார்
நக்காரெனமுல்லைகணக்கலரப்
புக்கார்பொழில்தோகைம்யிற்புடையிற்
றெக்காரனையத்துயராலுவன.

உரை. — அங்ஙன மவர்போகையிற் பெரியோர்கொண் ட துயரைக்கண்ட சிறியோர்நகைத்தாற்போல முல்லைகள் ந

கைத்து மலர்ந்தசோலையிற்புகுந்தார், அங்கேதோகைமயில்க ளூழமுறையார்வந் தழுதாற்போலக் கூப்பிட்டுத்திரிவனவெ ன்க. (உக)

பயி லுண்டநரம்பிளகும்பரிசின்
மயி லும்மகவச்சிறைவண்டுமழ
வயி லுந்துயராய்ந் துதகாதெனக்
குயி லுங்குயில்கின்றுகுரங்குவன.

உரை. — அங்ஙனம் பேசும்வீணையினரம்புக ளிளகியேங்கி னாற்போல மயில்கள்கூப்பிடவும் வண்டுகளழவுந் திரண்டு போனவ ருண்ட துயரையுணர்ந்து தகாதென்று குயில்களு ங்கூவி யிரங்கினவென்க. (உஉ)

மயில்காளளிகாள்வரிகாள்சிவல்கா ள்
குயில்காள் கிளிகாள் கொடிகாளுரையீ
ரொயில்காளவனத்திணையெஞ்சநலோர்
வெயில்காளமறைந்தெனமேவிடமே.

உரை. — அதனைக்கண்டவர் மயில்களே, பலவகைவண்டுக ளே, காடைகளே, குயில்களே, கிளிகளே, காக்கைகளே! நம து நகர்சுடுகாடாக மெலியும்படி மேகத்துண்மறைந்த சூரிய னைப்போல மூவர்மறைந்திருக்குமிடத்தைச் சொல்வீராகவெ ன்றுசொன்க. (உ௩)

வரையீர்புனலேமழையீர்வரையே
விரையீரமருவிரிபூந்தடமே
சுரையீரமலர்த்தொடைசூழ்பொழிலே
யுரையீருயிரின் னுயிருள்ளுழியே.

உரை. — மலையையீர்த்து விழும்புனலே, மேகத்தையீர்த்து யருமலையே, குளிர்ச்சிவிடாத வாசமதுமலர்பூத்த தடாகமே, புன்னைமூதற் குளிர்பூமாலைசூழ்ந்தசோலையே! எம்முயிரினு மினிய வுயிராகிய மூவரிருக்குமிடத்தைச் சொல்வீராகவெ ன்றுசொன்க. (உ௪)

உருடேர்வழியொண்கொடியாடுமென
மருடேர்வழியற்றமனந்தளர
வருடேர்வழியாயினவையெவணும்
பொருடேர்வழிதேடினர்போறுருவார்.

உரை. — அங்ஙன முயர்ந்ததேரோடுமளவி லதின்மேல் விரித்தகொடியாடுவதுபோல வவருங்கொண்ட துன்பமயக் கந்தீரும்வழியின்றி மனந்தளர்ந்தாடாநிற்ப வருளினுற்றெ ளிவித்தகாரணமாய்நின்றமூவரை யெங்கு மரும்பொருளைத் தேடினாற்போலத் துடர்ந்துதேடினரென்க. (உ௫)

விண்டார்மதுவிள்ளியபூம்பொழில்போய்த்
தண்டாரர்தகைநேர்தயைதாங்கியமார்
புண்டாரவர்போமுழியோவிதெனக்
கண்டார்கமலக்கழலஞ்சுவடே.

உரை.— அங்ஙனமூவரைத்தேடி மதுவைப்பொழிந்து மலர்ந்தபூஞ்சோலையிற்போய்க் குளுமாலையாகத் தயையை யணிந்தமார்புடைய மூவ ரிவ்வழிபோனரோவென்று பார்த் தவளவி லவர்கமல பாதத்தடியைக் கண்டாரென்க. (உ௬)

எல்லோவிதுவோவுடுவோவிவையோர்
வில்லோடுறுமோர்நகையோவிரிநூற்
சொல்லோடடையாச்சுடர்செய்சிறுவன்
புல்லோரடிபோஞ்சுவடேயிதென்பார்.

உரை. — சூரியனோ சந்திரனோ வான்மீனோ விம்மூன் றேரொளிநகையாகச் சேர்ந்தபொருளோ கற்றநூலாற்புக ழப்படாததன்மையின் விளங்கினதேவபாலனடந்து வைத்த சிற்றடிச்சுவடிதென்பாரென்க. (உ௭)

உண்மைச்சுருதிக்கொழுகொம்புருவாள்
பெண்மைப்பெரிதாயவிளக்கனையாள்
தண்மைக்கனநேர்தயையாளவள்போய்
மண்வைத்தனமன்னடியேயிதென்பார்.

உரை. — மெய்வேதமோர்கொடியாகப்படரும் கொழு கொம்பின்வடிவினுள் பெண்மைக்கெல்லாம் பெரும்விளக் கொத்தனளாய் மழையாற்குளிர்ந்திருண்டமேகத்தொத்த தையயாள் மரியென்பவள் நுண்மணவிமெனுந்து வைத்தவடி யிதென்பாரென்க. (உஅ)

அருள்வீங்கியமார்பணியீரறனே
தெருள்வீங்கிய நூற்றுறையேதிருநூற்
பொருள்வீங்கியபோதகனேகிமலர்ச்
சுருள்வீங்கியகாற்சுவடேயிதென்பார்.

உரை. — அருளானிறைந்த மார்பணியாக வில்லறந் துறவ றமென் றிரண்டையும் பூண்டவனாய்த் தெளிந்தசகல நூற் றுறையாய் வேதநூற்பொருளில் வளர்ந்தபோதகனுய்ச் சூ சைமாமுனிநடந்து வைத்ததாமரைப்பாதச்சுவ டிதென்பா ரென்க. (உகூ)

அடிகாணுளியாருயிர்கண்டதெனக்
கொடிகான்மலருங்குளிர்கொம்பருயர்
முடிகான்மலரும்முளிநீர்மலருங்
கடிகான்மலரங்கழல்மேலணிவார்.

உரை. — அங்ஙன மூவர்வைத்த வடியைக் கண்டறிந்த வ ளவிற் றம்முயிரைக்கண்டாற்போலமகிழ்ந்து கொடியின்ம லரையுங் கொம்புச்சிப்பூத்தமலரையுந் தடாகத்துநீர்மலரை யுஞ்சேர்த்தி மூவர்வைத்த மலர்ப்பாதத்தடிமே லணிந்தாரெ ன்க. (௩0)

பூக்காவலனுயபொலந்தவனே
நீக்காதுனைதேடியவெந்துடர்பைத்
தூக்காமையினேதுடராமையினே
நோக்காதமைநூக்குபபோதியென்பார்.

உரை. — மீளவுந் தம்மையுணர்த்தின சூசையைப்பற்றிச் சொல்வார்: இப்பூவுலகிற் காவலனாகநின்றமாதவனே விடா ம லுமுன்னைப்பற்றின வெமதன்பினை நீயாராயாமலோ ம

ற்றன்போடு துடராமலோ யாராம னம்மைத்தள்ளிப்போ வாயோ வென்பாரென்க. (௩௧)

இனியாருயிர்தேற் றுவரீர்த் துயிர்கொல்
துனியார்புரிவோர்ந்து துடைத்திடுவார்
தனியார்வினைவென் றுதகைபெறுவார்
கனியாருயிர்நாடெரிகாயுமென்பார்.

உரை.—சூசையே நீபோயினி யெம்முயிரைத் தேற்று வாரார்? எம்முயிரைக்கொல்லவருந் துயரை யினித்தயைபுரிந்து துடைப்பாரார்? உன்னையின்றித் தனியேயார்வினையை வென்று மாட்சியைப்பெறுவார்? ஐயோ! உன்னு வினிதாய்க் கனிந்த வெந்நா டினித் தீப்பற்றிவேகுமே யென்பாரென்க. (௩௨)

திணைபோலிடர்வந் துதிரண்டனகால்
வரைபோன்மினியொன் றுவகுத்தனையே
நுரைபோ லுயிர்பொங்க நுகர்ந்தவழற்
கிரைபோ லுருகுங்க லுமென்றயர்வார்.

உரை.—நீயேபோகுமுன்ன ராருகத்திரண்ட துயர்வந் தவளவி லசையாத கல்லுமலையின்றன்மையி னிற்பச்சொன் னாயே, ஆயினு மெம்முயிர் நுரையாய்ப் பொங்கும்படியுட் கொண்ட துன்பவழலின்மிகுதியாற் கல்லுமுருகி யதற்கிரை யாகுமென்று வருந்தினரென்க. (௩௩)

அயர்வாருருமேற் றினரற்றினராய்த்
துயர்வாரிருகண் மழைதூவியழ
மயர்வார்மெலிவார்மனமோங்கியபின்
பெயர்வார்தசையுட்பெயராத்துடர்வார்.

உரை.—அங்ஙன மனைவருமயர்ந்து மேகத்திடியொத் ததிர்த்துமுழங்கி விம்மித் துன்பமிகுதியாலிருகண் மழை பொழிந்தழுது மயங்கிமெலியாநின்றார், பின்னையுமனந் துணிந் தோங்கியெழுந்து தம்மாசையைவிடாம லனைவருமீள வுந்துடர்ந்தாரென்க. (௩௪)

வேறு.

பேர்வளரன்பின்மிக்கார் பிரியுங்காற்றம்மிற்றேறிற்
கூர்வளரழலைத்தூண்டிக் கொந்தல்போ லுரையிற்பொங்கு
சூர்வளர்தன்மைத்துள்ளஞ் சுடுமெனவொளித்தமூவ [ஞ்
ரார்வளர்துயர்கொண்டிஃதாங் காகிநீடகன்றுபோனார்.

உரை. — மிகுந்தவன்புடையோர் பிரியுங்காலைத் தம்முட்பேசி யாறுதல்சொல்லுவதே பெருநெருப்பினைத்தூண்டினகாலத் ததுமிகக்கோபிக்குமாறுபோல வவருந் தம்முட்சொன்னமொழியாற் றன்பம்வளர்ந்து மிகவு மனத்தைச்சுடுமென்றறிந்து பேசாதொளித்துப்போன மூவரோ யிவையெலா மற்றவர்கண்டவடியிடத்தாகையிற் றுமிகத்தூரத்தகன்றுபோனாரென்க. (௫௫)

மாணெறிவளர்ந்தவன்பின் மனந்தலையருள்மிக்கார்க்
சேணெறியுணர்வினார்க்குஞ் சேணிலையாகாவன்னார் [குஞ்
வாணெறிகுடைந்தநெஞ்சில் வருந்தியாங்காயயாவுஞ்
சேணெறியகன்றமூவர் சென்றுகண்டன்னகண்டார்.

உரை. — மாட்சியிற்பொலிந்த வன்போடுநிறைந்த தயையுள்ளோர்க்கும் வான்வழங்குங்காட்சியிற்பொலிந்த வுணர்வுடையோர்க்குந் தூரமில்லையாம், ஆகையாற் றொடர்ந்து வந்தவர் துன்பவாளாற்குடைந்தநெஞ்சின் மிகவும்வருந்தியடியைக்கண்டவிடத்தி னடந்தயாவையுந் தூரத்தகன்ற மூவர் கூடநின்று கண்ணாற்கண்டாற்போலக் காட்சியிற்கண்டாரென்க. (௫௬)

தேனகமலர்ந்தகோலான் றெளியுளத்திரங்கியையா
கானகமன்னார்நண்ணிற் காய்துயர்காமினென்ன
வானகமிளிர்மீன்வாகை மணிமுகிலூர்திகொண்டு
பானகவருள்கொடெய்வப் பாலனைவேண்டினானே.

உரை. — மூவ ரவற்றைக்கண்டவளவின் மதுமலர்க்கொடியோனுகை தெளிந்தமனத்திலிரங்கி யையாவவரெல்லா

ரும் காரணகவழியேவந்தா லடையுந்துயரை விலக்கிக்காப்பா
யாகவென்று வான்மீன்கொடியு மணிமேகலூர்தியு முடை
யனுக்குப் பாலினுமினிய தயையுள தேவபாலனைவேண்டினு
னென்க. (௩௭)

மூச்சகமுழுவெண்டிங்கண் முக்குடைநிழற்றியாரு
மெச்சகமனைத்துமேத்து மிளவல்செய்யாசிதன்னுற்
கச்சகம்வீக்கினுற்போற் கானெறியுணர்வற்றன்னூர்
நச்சகமமிர்தமாக நயக்கடலமிழ்ந்தினுரே.

உரை.—குசைசொன்னதைப் பொருந்திக்கேட்டு மூவுல
கனைத்தையுஞ் சந்திரமுக்குடையோடு நிழல்செய் தாளாநி
ன் றெவ்வுலகத்தாராலும் வணங்கப்பட்டதிருக்குமாரன் று
டர்ந்துவந்தவர்க்கிட்ட வாசீர்வாதத்தா லவர்மனங் கச்சினுற்
கட்டப்பட்டதுபோலக் கான்வழிபோவதற் கெடுத்தநினை
வினைவிட்டு மனதிலுண்டநஞ்சு நல்லமுதானுற்போலக் கா
ரணமறியா தின்பக்கடலிலமிழ்ந்தினுரென்க. (௩௮)

கரையுடைத்தரவுய்த்தோடுங்கடற்கரையிட்டதேபோற்
புரையுடைத்தவன்செய்யேவல் புணர்ந்தநீள்கூலமாகத்
திரையுடைத்துடர்பின்வந்தார் திறனுணர்கிலராய்நின்றே
யுரையுடைத்துயர்ந்தஞானத் தொளியெழீத்தேறினுரே.

உரை. —அங்ஙனங் கரையையுடைத்து முழங்கியோடிவ
ந்தகடற்குக் கரையையிட்டுநிறுத்தினுற்போலப் பாவங்களை
யொழிப்பவந்த திருக்குமாரனிட்டவேவலே புணர்ந்த நீண்
டவணையின்றன்மைத்தாகி யாற்றின்வெள்ளமொப்பத் துடர்
ந்துவந்தயாவருங் காரணமறியாம லப்புறம்போகாதுநின்
று சொல்லிலடங்காத ஞானவொளியுட்டோன்றித் தேறினு
ரென்க. (௩௯)

தீயவுநல்லவாமே திருவுளமாகவந்தாற்
றூயவுந்தீயவாமே துகள்வழிவந்தாலென்னுக்
காயவுண்மெலிந்தநெஞ்சார் கருத்திடைக்குளிரத்தேறிப்
பாயவுண்மலியின்பாற்றம் பதிநகர்மீட்டல்சூழ்ந்தார்.

உரை. — அங்ஙனந் தோன்றியஞானவுணர்வினூற் றிருவுளமாகவந்ததின்மையு நன்மையாம் பாவத்துவழிவந்த நன்மையுந் தின்மையாமென்று மனதிலெண்ணி மூவரும்போனது திருவுளமாகையி லன்னோர் துயராற்காய்ந்த கருத்திற் குளிரும்படிதேறி மனதிற்பாய்ந்தவின்பத்தோடு தம்பதியாகிய விரவிமாபுரத்துமீண்டுபோகநினைவெடுத்தாரென்க. (௪௰)

அம்மையேமகவேவாய்ந்த வருந்தவத்திறைவனுசை
நும்மையேயுயிரொன்றாக நுதவிநுற்றிழலில்வாழ்ந்த
நம்மையேயகன்றுபோதீர் நட்பிடையகலாதன்பின்
செம்மையேபேண்மினென்னாச் சென்றுமீண்டெவரும்
போனார்.

உரை. — அங்ஙனந் திரும்புதற்குத் துணிந்தவளவில், தாயே, திருக்குமாரனே, அருந்தவத்திறைவனுசையே யும்மை யுயிராகவெண்ணி யுந்நிழலில்வாழ்ந்த நம்மைவிட்டுப்போனீரோ, நட்பும்விடாமற் பிரியாதவன்போடு நம்மை யெங்கேயாயினும் பேணுவீராகவென்று திரண்டெல்லாருந் திரும்பித் தந்நகர்க்குப்போனாரென்க. (௪௧)

வேறு.

இப்புறத்தினையன விவருமெல்லையின்
முப்புறத்திணையில மூவரொங்கணு
மொப்புறத்துணையில வுவகைசெய்தெசித்
தப்புறத்தமரர்சூ ழணுகிப்போயினர்.

உரை.—இங்ஙன மிரவிமாபுரத்தாரிடத் தினையெல்லாமாகி மூவுலகொவ்வாத மூவர்ப்பாய் நிகரொன்றின்றி யெங்கு முவகைசெய்துகொண் டெசித்துநாட்டைக்கடந்து வானோர்சூழவரப் போனாரென்க. (௪௨)

தீயினாறுறவெனச் சிறுகும்பன்னெறி
போயினரமரர்சூழ் புடைபுடைப்புணர்ந்
தாயினரருத்தியோ டளாயாயிரர்
தூயினர் துயர்க்கறத் துடர்பிற்போயினர்.

உரை. — அங்ஙனம்போய்த் தீயோருறவுபோலப் போகப்போகச் சிறுகும்பலவழிகளைக்கடந்து துன்பம்வந்தவிடத்து நல்லோரறத்தைவிடாததுபோல வானோர் பதினாயிரரும் புடையிற்பிரியாம லிவரைச்சூழ்ந்துபோனாரென்க. (௪௩)

விண்ணுளேபிறந்ததோர் தளத்தின்விண்ணவர்
பண்ணுளேபிறந்ததோ ரிசைகள்பாடியே
மண்ணுளேபிறந்ததோர் வடுவைமாற்றினர்
தண்ணுளேபிறந்ததோர் தடத்தினண்ணினார்.

உரை. — அங்ஙனம் வான்றளங்களாக வானோர்சூழ்ந்து வீணைவாய்க்குரலோ டிசைகளைப்பாடாநிற்பப் பூவுலகத்தோர்கொண்ட பாவங்களைத்தீர்ப்பவந்தமூவர் குளிர்ந்தவோர் தடாகத்தையண்டினாரென்க. (௪௪)

மைக்கொடுகுவளைக்கண் ணோக்கிவாரிசக்
கைக்கொடுவிளித்தபூம் பொய்கைகண்டுளி
பொய்க்கொடுமருட்டவோ வென்றுபோயினார்
மெய்க்கொடுசுருதிநூல் விளைத்தவிஞ்சையார்.

உரை. — அப்பூந்தடாகத்தை யண்டினவளவின் மையைப்பூசினகண்களாகக் குவளைகள்நோக்காநிற்ப வலர்ந்ததாமரைகள் கைகளாகத் தம்மையழைத்தாற்போலத் தோன்றினதடாகத்தைக்கண்டு பொய்யைக்கொண்டு மயக்குவிக்கவோ வழைக்கின்றாயென் றப்புறம்போனார் மெய்யிற்பொலிந்தவேதநூல்விளைவிக்கும் விஞ்சையுடையமூவரென்க. (௪௫)

தூவியஞ்சிறையனந் துடர்குடைசெயக்
கூவியங்குயிலியாழ் குளிரமஞ்ஞைக
ளோவியஞ்சிறைவிரித் துவப்பிலாடமூன்
பூவியந்துணர்த்தடம் பொருந்திப்போயினார்.

உரை. — அங்ஙன மழகியசிறகுகளைவிரித் தன்னங்கள் மேற்பறந்து பின்றொடருங்குடையாகவுங் குயில்கள் வீணைவாய்க்குரலோடுகூவவு மயில்களெழுதினதோகையைவிரித்து மு

ன்றொடிக்கொண்டு போகவும் பூத்ததோர்வழியே போனாரெ
ன்க. (௪௬)

ஆவிநோய்செயும்புனா யழிக்குமூவர்போய்க்
காவிநோய்செயுந்தம கழற்குநோய்செயாப்
பூவினைச்செயுமளி குடைந்தபூமதுத்
தூவிநோய்செயுந்தடத் துணைற்றாயதே.

உரை. — அங்ஙன முயிரைவருத்தும் பாவங்களைத்தீர்ப்பவ
ந்த மூவர்போகையி னீர்மலரினுநொய்ய தம்பாதநோகாத
படிக்கு வண்டுகள்வருத்திக் குடைந்தமலர்வாய் தேனொழுகி
நோய்செய்யாநின்றதடமே யன்று பூவிதழொப்பச் சீர்த்த
தென்க. (௪௭)

தனங்கிடந்தெனக்கிளி தாங்கிலாத்தினைப்
புனங்கிடந்தனபரப் பகன்றுபோய்த்துளிக்
கனங்கிடந்தெனக்கரி கிடந்தகாடும்போய்
வனங்கிடந்தனவழி மருவிற்றாயதே.

உரை. — செம்பொன்கிடந்தாற்போலக் கிளிகள்சுமக்க
லாற்றாப் பெருங்கதிராகக்காய்த்த தினையின்கொல்லைகள் பல
வுங்கடந்து துளிமேகங்கள் கீழ்கிடந்தாற்போல மதயா
னைகள்கிடக்குங் காடொன்றினையுங்கடந்து பாலைவனஞ்சே
ரும்வழி கிட்டினதென்க. (௪௮)

தீரருஞ்சிலையினான் முறுக்கின்சீர்மையாற்
பேரருந்தவத்தொடு பிறந்தஞானம்போற்
சோரருங்கருத்தினோர் தொடர்ந்ததங்கதி
நேரருஞ்சுரத்திடை நெகிழ்விலாயினார்.

உரை. — மாருதவில்வினாணிமுறுக்கின் றன்மையாற் றவ
த்தோடடைந்த ஞானம்பிறழாததுபோலச் சோர்வில்லாதக
ருத்தின்மூவர் தொடர்ந்தவழிக்கு நேரெதிர்த்த கொடுஞ்சுரத்
தைக்கண்டு மனதிற்குழையாமற்போனாரென்க. (௪௯)

நீர்முகத்திரவிகை நீட்டிப்பொற்புறப்
பார்முகத்திரவிருட் படத்தைநீத்தெனக்

சூர்முகத்தழற்றுயர் துடைத்தமூவர்வந்
தேர்முகத்தெழுந்தகா னிலங்கிற்றாயதே.

உரை.— கடன்மேலெழுந்தசூரியன் றன்கதிராகிய கையைநீட்டிப் பூமியழகுபெற வதின்மேற்போர்த்த விருளின் படத்தையெடுத்துத்தள்ளினாற்போல விவருமப்பாலைவழிநுழைந்தவளவி லழன்றமுகத்துக் கிடந்ததுயர்களைத் துடைத்தமையா லழகின்முகத் தக்கானகம்விளங்கிற்றென்க. (௫௰)

புடம்புனைந்திரும்புசெம் பொன்னின் றன்மையா
மிடம்புனைந்திட்டதோ ரிரதத்தாலென்பார்
தடம்புனைந்திவர்வரத் தழன்றகானலர்ப்
படம்புனைந்தெழுதிய பரப்பிற்றாயதே.

உரை.— இரும்பினைப்புடஞ்செய் துரியபருவத்துக்கூட்டின விரதவயத்தா லவ்விரும் பொளிசெய்செம்பொன்னாகுமென்பார், அத்தன்மைத் திவர்பாலைவழியேவருகையின் முன்னழன்ற கானக மலராலெழுதப்பட்ட படத்தின்பரப்புப்போலத் தோன்றிற்றென்க. (௫௧)

சொற்றிறத்தொருகணத் துலகந்தோற்றிமுன்
பற்றிறத்தெழினலம் படைத்தடான்மையான்
முற்றிறத்தழன்றகான் மூவர்கண்டுளி
பொற்றிறத்தரிதினிற் பொறித்ததாயதே.

உரை.—மீளவுமாண்டவன் முன்னாகட்டென்றுசொன்ன தன்மையி லொருகணத் துலகெலாந்தோன்றச்செய்து பலவகையழகோடு யாவையும்படைத்தான், அவ்வண்ணமே முன்றீயெரிந்த கொடியகானக மிவர்முகத் தரிதாய்ப் பொன்னாலெழுதினதன்மையிற் றோன்றிற்றென்க. (௫௨)

மைமறுத்தலரணி வனங்கண்டாவெனக்
கைமறுத்ததிசயித் தலர்ந்தகாந்தளைப்
பைமறுத்தவிழரா வென்றுபாய்மயில்
பொய்மறுத்தினநக நாணிப்பாயதே.

உரை. — அங்ஙனந் தன் மாசொழித்து மலராயணிந்த வனத்தைக்கண்டு கைவிரித் தாவென்றதிசயித்தாற்போலமலர்ந்தகார்த்திகைப்பூவைக்கண்டவொருமயில் படத்தைவிரித்த பாம்பென் றதின்மேற்பாய்ந்தபின் னதுபொய்யென்றுகண்டு மற்றமயில்கள்நகைப்ப நாணிப்போயிற் றென்க. (௫௩)

தோகையினெருத்தெனத் துணர்விள்காசைகண்
டோகையின்மயிலொளித் தாகவுட்குறி
யேகையில்வண்டுகண் டிளையமுல்லைக
ளோகையினக்கென வெயிறுடைந்ததே.

உரை. — மீளவு மயிலின்கழுத்தினிறத்துமலர்ந்த காசாவைக்கண்டு மயில்களங்கேயொளித்தனவென் றுள்ளஞ்சி வண்டுகளோடிப்போகையி லவற்றைக்கண்ட விளமுல்லைக்கொடிகளுண்மையறிந்துகளிகூர்ந் தெயிறுகளைக்காட்டிச் சிரித்தாற்போல வரும்புகட்டினவென்க. (௫௪)

மிகையுடைத்தகவினர் மெலிவுகாண்டுளி
பகையுடைத்தகவிலார் பரிசினக்கதோ
நகையுடைத்துகுக்குவ மென்னநண்ணிமென்
முகையுடைத்துதிர்த்தன மொய்த்தவண்டரோ.

உரை. — அதனைக்கண்ட வண்டுகள் மிகவுஞ்சினந்து பெருமையோரடைந்த மெலிவினைக்கண்டு பகைத்த நீசரைப் போல நீங்களு நாமஞ்சினதைக்கண்டுசிரித்ததோ வுங்கள்பல்லுக்களை யுடைத்துப்போடுவோமென்று வந்துமொய்த்து முல்லையினரும்புகளையுடைத் துதிர்த்தனவென்க. (௫௫)

பைச்சுடர்மரகதப் பலகைபாய்த்திமே
லைச்சுடர்மணிப்பரப் பாகப்பைம்புன்மே
ஞெய்ச்சுடரலர்த்தட நொய்தென்றேகினார்
மூச்சுடர்நடந்தென நடந்தமூவரே.

உரை. — பச்சைமரகதமணிப்பலகைநீட்டி யதின்மேற் பலவகை யழகியமணிகளைப்பரப்பினதன்மையாற் பச்சைப்

புல்வின்மேலே நொய்யமதுமலர்பூத்ததடத்து முச்சுடரொப்ப மூவர் சீக்கிரமாய் நடந்துபோனாரென்க. (௫௬)

உண்முழுதருள்முகத் துகளத்தோற்றிய
விண்முழுதிறைஞ்செழில் காணவேட்கையாற்
கண்முழுதுடல்பெறக் கலாபமஞ்ஞைகள்
தண்முழுதலர்ந்தகான் றதும்பியாடுமால்.

உரை. —அங்ஙனமூவர்போகையி லவர்மனத்துள்ள வருளே முகத்திற்றோன்றி வானுலகெல்லாம்வணங்கு மிவர்முகத் தழகினைக்காண வாசையாலுடலெலாங்கண்ணாகத் தோகையைவிரித்தமயில்கள் குளிர்ச்சியோ டலர்ந்தகானகத்தெங்குந்திரண்டு நன்றாயாடாநின்றனவென்க. (௫௭)

கற்றெனத்தகா துரைத் தன்புகைக்கொளப்
பற்றெனப்பொருளினைப் பற்றும்பூரிய
ரற்றெனத்தும்பிக ளலர்க்கண்ணட்பினைச்
சொற்றெனக்கனைந்துசூழ் துணர்குடைந்தவே.

உரை. — அங்ஙன மலர்ந்தகானகத்தெங்கும் படித்தவரைப்போலத்தோன்றித் தகாதவுரைகளைச்சொல்லி யொருவனட்பினை விரும்பினதன்மையைக்காட்டி யவன்கைப்பொருளைத்தேடுநீசரைப்போலப் பூத்தமலர்களோடூறு மொய்த்தவண்டுகளன்பினைக்காட்டிப் புகழ்ந்தமுறையி னெடிதுபாடியம்மலரிதழ்களைக்குடைந்து தேனை நுகர்வனவென்க. (௫௮)

சாற்றினவுரைகள்பொய்த் தன்பின்றன்மையாற்
போற்றினபொருளறப் புலம்புபுல்லர்போ
லூற்றெனவடிந்ததே னுண்டுமாறவிற்
றூற்றினவருகளி துவைப்பப்போயினர்.

உரை. — மீளவு மன்பினைக்காட்டிச் சொன்னவுரை பொய்யாகப் பிறரன்பினைத்தேடினதன்மையாற் றேடினவவர்கைப்பொருள் முடிந்தபின் பவர்மேன்முறைப்பாடுகளைச்சொல்லிப் புலம்பாநிற்கு நீசரைப்போல மிகவூறினதே

னையுண்டவண்டுக ளத்தேன்மாறினபின்ன ரருகேநின்றுதூ
ற்றிமுழங்காநிற்ப மூவரோநடந்துபோனரென்க. (ருகூ)

வல்லுருத்தகவினர் கடந்தவாயெலாந்
தொல்லுருத்தகவனஞ் சுடவழன்றதால்
வில்லுருக்கணவனை விழித்தகண்ணினாற்
பல்லுருக்காண்டில பாவைபான்மையே.

உரை. — அங்ஙனந் திறத்துப்பெருமையுடையமூவர் நட
ந்துகடந்தவழியெங்கும் பழையவுருவாக வவ்வனந் தீப்பற்
றியழன்றதாம், அதெங்ஙனமென்னி லழகியதன்புருடனைக்க
ண்டகண்ணால் வேறுருவடிவினைப் பார்க்கமாட்டாத கற்பு
டையாள் செய்யுந்தன்மையிற் றோன்றிற்றென்க. (சூ௰)

வேறு.

நண்பகமலர்ந்தமூவர் நடுவனஞ்சென்றோர்நாளி
லொண்பகனெற்றிபோகி யுயர்திடற்றகட்டில்வேய்ந்த
சண்பகநிழலின்வைகித் தரணியாளிளவனல்யாழ் [ன்.
பண்பகவுரைகொண்டம்பூப் பதுமவாய்மலர்ந்துசொன்ன

உரை. — அங்ஙன மன்பினான் மனமலர்ந்தமூவர் பலநா
ள்நடந்து நடுவனத்துச்சென்றபின் பொருநாளுச்சிநேர
த் துயர்ந்தமேட்டினடுவேதோன்றின சண்பகஞ்செய்த
நிழற்கீழிருந் துலகாளுந் தேவதிருக்குமாரன் வீணைவாய்க்கு
ரலினு மினியவுரையைக்கொண்டு கமலவாய்மலர்ந்து சொ
ன்னானென்க. (சூக)

நேரலர்மறுத்துச்செந்தீ நிறைகினும்பலகால்வைகி
நேரலர்வனத்தினூடே நிகழ்ந்தடிவைத்தபாலா
னேரலர்நேருநேரா நீணிதிதுஞ்சுங்கோயி,
னேரலரிக்கான்றுஞ்சு நெடுத்தவத்தறங்கடாமே.

உரை. — நாம்வருகையிற் றந்தமலரை மறுத்து நாங்கடந்
தவிடமெங்கும் பழையபடி தீப்பற்றிநிறைந்தாலும் பலகா
லம்போனபின்பு நீண்டலர்ந்தவிவ்வனத்தி னூடிவைத்துந

டந்ததனுற் பகைவர்பணிந்துதந்த நேரிலா நிறைந்தநிதியே யரசன்கோயிலிடத்துக் குவிந் துகிடப்பதுபோல மலர்ந்தவி வ்வனத்தினு நெடுந்தவத்தோடு பலவறங்கள் குடியாயிருப் பன வென்றுனென்க. (சூஉ)

பேர்நலம்பொறித்தகான்றேன் பெயர்க்குமோருற்ற யார்நலம்பொலிதனேக்கி ராயவிவ்வனப்பும்வாட்டிப்[தாகி பார்நலந்துறந் திங்கார்ந்த படிவரொண்ணின் றிவைகிச் சேர்நலம்விரும்பிவானேர் சென்றுவாணுக்குங்கானே.

உரை.—இன்றுபெருஞ்சீ ரழகினேடெழுதப்பட்ட விக் கானக மதுவைக்கொப்புளிக்குமூற்றதாகி நிறைந்த செல்வ மிகுதியைக்காண்மி னிவ்வடிவினு முயர்ந்தநலமாம்படி பூவு லகினைத்துறந் திங்கே யெண்ணப்படாதமுனிவர் தவத்தைச் செய்யவந்திருப்ப,விங்கேசேருநன்மையைவிரும்பி வானே ருங்கூடவருவதொன்றமையால் வானுலகொக்கு மிக்கானெ ன்றுனென்க. (சூ௩)

காவுளனுகியென்மேற் கருத்தில்வான்குடியன்வேத நாவுளன்றவத்தின்வாய்ந்த நவ்வுளன்வினைநீர்நீந்தி மேவுளன்வளர்ந்தெந்நாளும் வேண்டுமுண்காகமுய்ப்பப் பாவுளனென்பானீடப் பறம்படிமுழையுள்வாழ்வான்.

உரை.—பிற்காலத்தங்கேவிளங்குந் தவத்தோருட் சிலரை யுரைத்துத் திருக்குமாரன் காட்டத்துடங்கினன், ஆகையா லிங்கேயுடலின்வகையாற் காட்டிவிருந்து மாருதென்மேல் வைத்த வாசையின்வகையால் வான்குடியாகி வேதம்விரித்த நாவுளனுகித் தவத்தின்மரக்கலத்தேறி வினையின்கடலை நீந்தி ப்போகையி னுடேறும் வேண்டியவுணவினை யொருகாக் கைவந்துகொடுக்கப் பாவுளனென்பா னெடுநாளம்மலைய டியுளகுகையுள் வாழ்வானென்றுனென்க. (சூச)

இவாவியலடியினீழ லெனவுடுங்கசடுநீங்கா வவாவியல்பரிந்ததன்மைத் தமரரொத்தெனக்கடாம்பெய் யுவாவியல்முதற்பன்மாவு மூவந்தவற்கேவல்செய்யத் தவாவியல்முனிவர்க்கெல்லாந்தலைவனென்றெளிமிக்காவான்

உரை. — சொன்னபாவுளனென்பானொருவன் செல்லு ந்தன்மைத் தடியிற்பின்றுடருந்தன்னிழல்போல வுயிரைக் கொல்லும்பாவம் விடாமற்றுடரப்பட்ட வாசையையறுத்த மையாற் றூனொருவானவனெப்பநின்று காட்டுமதயானைமு தற் பலகொடியமிருகங்களு மவனிட்டவேவலைக்கேட்டுப்ப ணிந்துதிரிய மாறுததவத்து முனிவர்க்கெல்லாந் தலைவனாகப் புகழப்படுவா னென்றானென்க. (௬௫)

வேளரிதமர்போர்வென்று வியன்றகானெய்திப்பேய்க
கோளரியுழுவைமற்றக் கொடியமாவுருவிற்றோன்ற [ள்
நீளரிதுயுத்தத்தெஞ்சா நெடியவம்மலைகண்ணொன்பின்
வாளரிதேந்திவெல்வான் வரங்கொளந்தோனியென்பான்.

உரை.—மீளவு மந்தோனியென்பான் மன்மதன்செய்யு மரியபோரைவென்று நீண்டவிவ்வனத்தில்வந்தவளவிற் ப சாசுகள் சிங்கபுலி மற்றக்கொடிய மிருகவடிவாய்த்தோன்றி நெடுநாளவற்குச் செய்தபோரின் மெலியாதுயர்ந்து நீண்ட வம்மலையிடத்துத் தவத்தின்வாளாற் செயங்கொண் டுரியவர ங்களைக் கொள்வானென்றானென்க. (௬௬)

நீரின்பாவிரவிமூழ்கி நினைத்தோர்தியானம்விள்ளாத்
தேரின்பாவிரவிமீண்டுந் தீர்கிலனுணர்ந்தகாட்சி
காரின்பாலுயர்ந்தவீட்டிற் கனிந்துறைகாட்சியொப்பப்
பாரின்பால்வரைமுகட்டோர் படர்விளக்காகநிற்பான்.

உரை.— சொன்னவந்தோனியென்பான் சூரியனத்தமித் தபோது தொடங்கினதியானத்தைவிடாமற் சூரியனுதயமட் டு முடியாதவனு யடைந்தகாட்சி மேகமண்டலத்துயர்ந்த வரன்வீட்டுரியகாட்சிபோலவாகி யவன்பூவுலகின் மலைமேல் வைத்த பெருவிளக்காகநிற்பா னென்றானென்க. (௬௭)

மீயிரவரசற்சூழ்ந்த மீனெனமுனிவரோர்மூ
வாயிரர்தொடரநெஞ்சத் தவாவறத்தனித்துநிற்பப்
பாயிரவுரையின்றூதற் பார்த்தவணிலிரியோனே
தேயிரவாசின்வெற்றிச் சிலையிறாண்முறுக்கிற்போல்வான்.

உரை.—மீளவுமங்கே யிலரியோனென்பான் சந்திரனைச் சூழ்ந்த மீன்கள்பரப்புப்போலத் தன்னைமூவாயிரமுனிவர் விடாமற்றொடர்ந்துவந்தாலுந் தாளுசையைவெறுத்ததன்மையான் மனதிற்றனித்துநிற்பப் பாயிரமாக வாண்டவனையெண்ணி யெடுத்ததவத்தைவிடாம விளம்பிறையொத்த வெற்றிவில்வி ளுணிமுறுக்குப்போலநிற்பானென்று னென்க. (பாயிரமில்லாதது நூலன்றென்றதுபோல வாண்டவனில்லாதது நன்மையன்றென்று நினைத்தானென்பதற்குப் பாயிரமாக நாதனையெண்ணினுனென்பதாயிற்றென்க.) (௬௫)

உரிவளர்தவத்தின்சால்பி னுறுத்தமெய்யுருவந்தானே
யெரிவளருலைகொன்றீன்ற விலைப்பலியாகமாறி
யரிவளரங்கண்கொன்ற வைம்பொறிபுதைத்துப்பல்கால்
சொரிவளர்வானுங்காணுச் சோணமாமுனிவனேற்பான்.

உரை.— மீளவுஞ் சோணமாமுனி தீயின்முகத்துப்பச்சையிலைசெத்துச் சாம்பலாவதுபோலத் தவத்தின்மிகுதியாலுடலின்வடிவுமாறிச் சிங்கங்கள்வள ரவ்விடத்திலிருந்து தனதைம்பொறிகளைக்கொன்று புதைத்து நெடுங்காலத்து வானத்தையுங்காணுமை லரியதவத்தைச்செய்வானென்றுனென்க. (௬௬)

உறப்பகைநுழைவாயென்றைந்துட்பகைதவமேகாக்
புறப்பகைப்பகழிதாங்கும் பொற்பரமாகச்சீலம் [கப்
பெறப்பகைசெகுக்கும்வைவாட் பெற்றியின்விரதமோச்சி
யறப்பகைவெறியைவென்றங் கயோதரனெடிதுநோற்
பான்.

உரை.— மீளவு மங்கே அயோதரனென்பா னுட்பகையாயிருந்து மறுபகைநுழையும்வாசலாகிய வைம்பொறிகளையடக்கித் தவமேகாத்துக்கொண்டு புறப்பகையெய்யு மம்பினைத்தாங்கும்பொற்கவசமாக நல்லுணர்வின்ஞானத்தைக்கொண்டு பகையைவெட்டும்வாளாக விரதத்தையேந்தி யறத்தைப்பகைத்தபேய்களைவென்று நெடிதாய்த் தவத்தைமுடிப்பானென்றுனென்க. (௭௰)

அவாவெனமதத்தின்சீற்றத் தறிவெனப்பாகன்வீழ்த்த
வுவாவெனவுடலைக்கைக்கொண் டேக்கநற்றோட்டிமாற்றி
யிவாவனதவக்கவட்டை யிட்டிருவிரதத்தூணின்
மவாவனமுனிவன்சேர்த்தி வானமும்வியப்பச்செய்வான்.

உரை.—மீளவு மவாவனமுனியென்பா னாசையாகிய ம
தத்தின்சினத்தோ டறிவாகியபாகனை விழத்தாட்டின யானை
யாகியவுடலைக்கைக்கொண்டேறி மனவூக்கமாகிய வங்குசத்
தைமாற்றித் தவமாகியகயிற்றோடு முறியாவிரதமாகிய தூணி
ற்சேர்த்தி வானுலகத்தோரு மதிசயப்படும்படி தவத்தைச்
செய்வானென்றானென்க. (எக)

வீட்டருநாட்டிற்கேற்ற விழுப்பொருளாகநாடி
யீட்டருஞ்சீலக்குப்பை யேற்றிநல் லுயிரோடாக்கை
பூட்டருமேராய்ப்பூட்டிப் புரைநசைச்சேற்றுட்செல்லா
வாட்டருந்தவத்தின்பண்டி மதித்தகன்கதியிற்சேர்ப்பான்.

உரை.—மீளவுமங்கே மதித்தகன் வாடாததவத்தை வண்
டிலாகக்கொண்டு அதிலே வான்வீட்டுநாட்டிற்குரிய செல்
வப்பொருள்களை நாடிச் சேர்த்தற்கரியபுண்ணியங்களைச்சம்
பாதித் ததிலேயேற்றி யுயிருமுடலு மொருப்பட வேராக
ப்பூட்டி யிரண்டுங்கூடித் தவவண்டிலையிழுக்கப் பாவமென்
னுஞ் சேற்றிற்போகாம லதனை வான்கதியிற் சேர்ப்பானெ
ன்றானென்க. (எஉ)

தேனிமிர்முல்லையாகத் திருந்தறத்தொகுதிநட்டு
நானிமிர்தவத்திற்காத்த நெறிப்பொறிவேலிகோலி
மேனிமிரொழுக்கநீரா விட்டருண்மணலைப்பாய்த்தி
யானிமிருலகினுறும் வனத்தினுங்கசோரன்பூப்பான்.

உரை. — மீளவுமங்கே யசோரனென்பான் றேனையொ
த்த மாறாமுல்லைக்கொடிகளாக நல்லறங்கள்யாவையு நட்டு
மவை நால்வழுவாததவத்தினு லடக்கிக்காத்த வைம்பொறிக
ளாகியவேலியைச் சூழவளைத்து உயர்ந்தவொழுக்கமாகிய த
ண்ணீராயிறைத்து விடாதநசையாகிய மணலைப்பரப்பி வா

ன்மேலுலகுமட்டும் பரிமளமாகவீசும் பூந்தோட்டம்போல
ப் புண்ணியமாகியமலரைப் பூப்பானென்றுனென்க. (எ௩)

ஆற்றியதவச்செந்தீயி லைம்பொறியிரும்பிட்டூதி
யேற்றியதெருளின்ஞான விரதமிட்டரயபைம்பொன்
றேற்றியமறையச்சாகச் சீலநன்மணிகள்சேர்த்திப்
போற்றியதேவமார்பிற் புரோதரனணிப்பூணுவான்.

உரை.—மீளவும் புரோதரனென்பான் செய்ததவமாகிய செந்தீயிற் பஞ்சேந்திரியங்களாகிய இரும்பிணைப்போட் டூதித் தெளிந்தஞானமாகிய இரதத்தை யிட்டமையா லவ்வி ரும்பு தூயதங்கமாகி யாகியதங்கத்தையுருக்கி வேதமாகிய வச்சிலேவார்த்துப் பலவகைப்புண்ணியமாகிய பலவகைம ணிகளையதிலேபதித்துத் தான்வணங்கு மாண்டவன் மார்ப ணியாகநிற்பானென்றுனென்க. (எ௪)

மீனெனவிளங்கித்துஞ்சு மின்னெனவாழ்க்கைநோக்கி
யானெனதென்னும்பற்ற லியாவுமற்றெண்ணென்றின்றி
வானெனவிளங்கவிக்கான் வருந்தியென்னடியைவைத்தே
றுனெனவுணர்ந்துமொய்ப்பார் நற்றவத்துயர்ந்தநீரார்.

உரை.—இவர்களுமன்றி யெண்ணப்படாத நற்றவத்துய ர்ந்தமுனிவர் வான்மீனைப்போலத்தோன்றி மின்னலைப்போ லவொழியு மிவ்வுலகவாழ்வுகளென்றறிந் தநுகளைவெறுத்து நானுமெனதுமென் றிருபற்றுதலை முழுதுமறவிட்டு வானு லகொப்ப விந்தக்கானகவிளங்கும்படிக்குநானிவ்விடத்துவ ருந்தி யென்னடியைவைத்தேனென் றுணர்ந்திங்கேமொய ப்பா ரென்றுனென்க. (எ௫)

போர்பொருள்பலவுநாடிப் போதலாண்டொழிலாய்ப்போகி
லேர்பொருணாடில் விருத்கல்பெண்டொழிலதாகித்
தேர்பொருளறங்களூடச் செய்தவாண்டுறவினுங்கும்
பேர்பொருள்வாழ்க்கைநாடாப் பெண்டுறவரியதன்றே

தீயவுநலவுமுள்ளிற் றேறியபெண்ணிற்றேற
வாயவுமரிதேமுன்ன ரழிந்தநாண்வேலிதாவி
யேயவுங்காமத்தாழ்ந்த வெசிசியமரியாள்பின்னர்
தூயவுமரிதிலோர்ந்து துறந்திவணெடுநாணிற்பாள்.

இவ்விரண்டொருதுடர்.

உரை. — இதுவுமன்றி வெம்போர்செய்யவும் பொருளைத்தேடவும் பலவற்றைமுடிக்கவு மங்கங்கேபோவது-ஆண்மக்கட்குரியதொழிலாகவு மவர்கள்மனைவிட் டங்ஙனம் போகையிற் பெண்ணழகாகியநாணந்தேடும் வீட்டைவிடாமவிருப்பதே பெண்மக்கட்குரிய தொழிலாகவுந் தேர்ந்தவறங்களை நாடி யாண்மக்கவெல்லாத்தையுந்துறந்து தவஞ்செய்வதெளிதே, அதிலேமிகவுமரிதாம் வாழ்க்கைதேடாமற்பெண்மக்கள் துறவுசெய்தாலல்லோ? ஆயினுந் தின்மைக்கு நன்மைக்கும் பெண்ணினந்துணிவதுபோலத் துணியநினைப்பதுமரிதே,அப்படி யெசிசியமரியாளென்பவள் முன்னழிந்த நாணமாகிய வேலியைத்தாண்டிப்போய்க் காமத்தமிழ்ந்தினளாயினபின்பு தூயவறநெறியு மரியமுறையோடுணர்ந்து தேறி யருந்துறவாகவிங்கேவந்து நெடுநாணிற்பாளென்றுனென்க. (௭௭)

கண்மையின்மற்றியாருங் கண்டதன்பிழைகாண்பாரார்
நுண்மையினுற்றபாவ நுதலியுட்டானேகண்ட
வுண்மையினுணர்ந்தவூக்க முளத்திறகாகவெய்திப் [பாள்.
பெண்மையின்போர்வைநாணம் பிரிவிலள்போர்த்துநோற்

உரை.— சொல்லப்பட்டவளெங்ஙனந்துணிந்து துறவுகொண்டாளென்னில்,கண்ணுக்கிட்டமை பிறர்க்கொழியவக்கண்ணுக்குத் தோன்றாததுபோல மற்றயாவருங்கண்ட தன்குற்றங்களைத்தானே காண்பாரில்லை, அவளோவென்னினுண்மனவினு மதிகமாய்ச்செய்தபாவங்களைத் தானே யறிந்து கண்டவுண்மையினு னினைவிலெடுத்த மனவூக்கத்தையிறகாகக்கொண் டிங்கேவந்து நாணமாகிய பெண்மைக்குரிய போர்வையைவிடாமற் போர்த்துக்கொண்டு தவஞ்செய்வாளென்றுனென்க. (௭௮)

காமமேபறவைத்தேர்மேற் கசடெனும்பாலைசேர்ந்தா
வீமமேபறவைத்தேர்மேல் விளைதவக்குறிஞ்சிஞான [ள்
வாமமேபறவைத்தேர்மேல் வளரறமுல்லைசேர்ந்தென்
னுமமேபறவைத்தேர்மே னயப்பவாறுட்டைச்சேர்வாள்.

உரை. — அங்ஙன முன் னவள் காமமாகியபறக்குந்தே ரைக்கொண்டு பாவமாகியபாலைநிலத்திற் சேர்ந்தவளாகிப் பி ன்னர் தேவபயமாகிய தேர்மேற்பறந்துவந்து தவமாகியகு றிஞ்சிநிலத்திற் சிறிதுநாளிருந்து தெளிந்தஞானமாகிய தே ர்மேல்விசைபடவோடி யறமாகிய முல்லைநிலத்திற்சேர்ந்து கடைசியி லென்னுமமாகிய பறக்குந்தே ரேறிக்கொண்டு வான்கதியாகியமருதநிலத்தில் வாழச்சேர்வா ளென்றனெ ன்க. (எக)

இனைவரும்பலருமெண்ணில் வீட்டமும்வேறுமாகி
நனைவறும்பொழிலினிற்பார் நயப்பொடுநெடுங்காலெஞ்சா
கனைவருந்திரண்டதீயிற் கனன்றகானேற்றீங்கென்னை [ங்
யனைவரும்புகழுமோதை யலையுநீன்முகிலுமாற்று.

உரை. — அங்ஙன மிவரும்பலரு மெண்ணிக்கையின்றிக் கூட்டமாகவுந் தனித்தனியாகவு மரும்புகளைமலர்ந்த சோ லையி னிற்பாரைப்போலக் கணகணவென்றுவிடாமற் செந் தீயெரியு மிக்கானகத் தின்பமாய்த் தவஞ்செய் தனைவருமி ங்கே யென்னைத்துதிக்குமோசை கடலினு மேகத்தினும் பெரிதாய் முழங்குமென்றனெனன்க. (அ௰)

துறவினு லுடலினுக்கை துறந்ததோருயிர்களொப்பா
ருறவினலன்பின்மிக்கோ ருயிர்க்கெலாமுடல்களொப்பா
ரறவினுவெறீயதன்மைத் தருள்மலியமரரொப்பார்
நறவினுல்லர்ந்தகானு நலத்தில்வானுலகொப்பாமே.

உரை. — அங்ஙன மிங்கேயிருக்குந்தவத்தோரெல்லாருங் கொண்டதுறவினுற் கட்டவிழ்ந்தொழிந்த வுடலில்லாதவுயிர் களைப்போலவு மன்புறவாடினதன்மையா லெல்லாவுயிர்க்கு ந் தாமேயுடல்களைப்போலவு மறத்தின்விழைவோடு மனதினு

யர்த்ததன்மையா லருளினிறைந்தவானோர்களைப்போலவு ம வரேதோன்றி யிப்பொழுதலர்ந்து தேனைப்பொழியு மிக்கா னகம் வானுலகெரப்பாக விளங்குமென்றானென்க. (அக)

உள்ளியதவநவ்வேறி யூக்கநீண்மரத்தைநாட்டி
விள்ளியவன்புமுட்கும் வியனிருபாயும்பாய்த்தித்
தெள்ளியவரக்கால்வீசத் தியானமீகாமனாக
வள்ளியவினைநீர்த்தூர்ந் தரிதில்வீட்டுலகிற்சேர்வார்.

உரை. — அங்ஙன நினைத்த நற்றவமாகியகப்பலேறி யதி லேமனவூக்கமாகிய நீண்டமரத்தைநாட்டி மலர்ந்ததேவப த்தியும் பயமுமாகிய வகன்றவிருபாய்களைவிரித்துக் கடவுள் தருந் தெளிந்தவரங்களாகிய காற்றுவீசி நாடோறும்விடா ததியானமாகியமாலுமி யக்கப்பலைநடத்திக்கொண்டு நிறை ந்தவினைகளாகிய கடலையறுத்து நடந்துபோய் மோட்சமா கியவானுலகி லரியமுறையோடு சேர்வா ரென்றானென்க. (அஉ)

வவ்வியதவங்கெட்டம்மா மரக்கலங்கவிழ்ந்ததேபோ
லெவ்வியமுந்நீர்மூழ்கி யழுந் துவர்பலரிவர்க்குட்
கவ்வியவுணர்வின்றெப்பங் கண்ணிீர்க்கடலைநீந்திச்
செவ்வியகதியின்வீட்டைச் சேர்வரோரிருவரொன்றான்.

உரை. — ஆயினு மத்தவக்கப்ப லங்ஙனமோடிவருகையிற் பலரேபிடித்த தவங்கெட்டமையா லம்மரக்கலங்கவிழ்ந்த துபோலப் பாவமாகியகடலில்மிழ்ந்திக்கெடுவார்பலரே, இ வர்களுக்குள்ளே மனத்தாபமாகிய தெப்பத்தையுணர்வோடு பிடித்துக் கண்ணீராகியகடலைநீந்திச் செவ்வனேபோய் வா ன்கதியி லொருவரிருவர்மாத்திரஞ்சேர்வாரொன்றான் றேவ திருக்குமாரனென்க. (ஆகையாற் றவஞ்செயத்துணிவதரி தாயினு மதிலேயுமரிதாம் பிடித்ததவங்கைவிட்டவர் மோட் சகரையேறாத லென்பதாயிற்றென்க.) (அ௩)

மெய்க்குடத்தமிர் துண்டன்ன விரித்தசொற்செவியின் மாந்திப்
பைக்குடத்தனையதீயார் பான்மையென்றானுஞ்சுட்ட

வக்குடத்தழிவுதீர்த்த லரிதெனத்தவநீத்தாரு
மிக்குடத்தனையதேற்று ரென்றனன் மதுப்பெய்கோலான்.

உரை. — திருக்குமாரன் சொன்னயாவையு மதுப்பொழியுங் கொடியோனுகிய சூளைகேட்டு உண்மையாகிய குடத்தோ டேற்றினவமிர்தத்தையுண்டாற்போல வதுகளைச்செவியின் வரயா லுண்டுசொல்வான்: தீயோர் பச்சைமட்குடத்தோடொத்தவரொன்று லு மதுவுடைந்தகாலத்துந் திரும்பிக் கூடுவதுந் தவமாகியசூளையிற்சுடுவதுமெளிதே, சுட்டகுடமோவெனின் மீளவுங் கூடாததுபோலப் பிடித்ததவத்தைவிட்டவருந் தேறிமீண்டு நல்லவராதலரிதாமென்ருன் சூளைமாமுனியென்க. (அச)

வேறு.

உரைத்தனமதுத்துறையுரைகள்கேட்டலு முளத்தெழுவப்பெரடுவரைவிலாப்புடை
நிரைத்தனவிருட்கெடவெயிலையாக்கிய நிறத்தணியுருக்கொடுவமரர்கோக்கணம்
வரைத்தனகுருக்கதிரவிநீர்க்கடல் மறத்தெழவுடுக்கணம்விழுவபோற்றிரை
யிரைத்தனகடற்கவிமெலியவார்த்துட லெடுத்துலகளித்தவ ரெழுதுசாற்றினூர்.

உரை. — அங்ஙனந் திருக்குமாரன்சொன்ன மதுத்துறையாகிய வினியமொழிகளைக்கேட்டு மனமகிழ்ந்தெண்ணப்படாத வானவரொழுங்குபடப் புடைபுடையிற்சூழ்ந்து மண்டிருள்கெட விளங்கதிரைப்பரப்பின வழகியவுருவோ டரசர்கூட்டமாகநின்றவராகி யெழுதியகதிரைவீசிச் சூரியன்கடலைவிட்டெழுந்தமுகத்து வான்மீனெல்லாம் விழுவதுபோலத் தாமும்விழுந்து திரைகளைச்சுருட்டி யிரைத்தகடலின்முழக்கத்திலுமதிர்ந்து பாடி யுடலெடுத்தவதரித் துலகினையிரட்சித்ததிருக்குமாரனை வணங்கிச் சொன்னுரென்க. (அரு)

திகைத்தகுவனப்பெழுமணிகளிட்டுபு தளிர்த்தனதிருத்தகுநகரின்வாழ்க்கையு,

நகைத்தருவனத்துரிவளமிதாக்கலி னசைக்கொடுபகைத்தன
பொறிகள்மாய்த்துளி
மிகைத்தருதவத்துருவெருவுகாட்டினும் விளைத்தனவரத்தரு
ள்மலியவீட்டுயர்
திகைத்தருநலத்தெழுவனமிதாய்ப்புகழ் திளைத்தனகவித்தொ
டைநிகருமாட்சியோ.

உரை. — வானவரெங்ஙனம் பாடினாரென்னில், மணிகளைக்குவித்து மிக்கழகொளிபெறக்குயிற்றிச் செல்வநிறைந்ததிருநகர்வாழ்க்கையு நகைத்துவெல்ல வித்தன்மை செல்வமிவ்வனத்திற்குரியதாக்கிப் பகைத்தவாசையோ டைம்பொறிகளையுங்கொன்று துயர்தருந்தவத்தின் முகத்தை வெருவிடக்காட்டினு மலிந்தவருளும் வரங்களும்விளைந்து வான்வீட்டுலகமொக்கும்வனமிதாகிப் புகழ்ந்துபாடினபாவோடு நிகரப்படுமாட்சியோ வில்லையென்றாரென்க. (௮௬)

கொலைப்படுசெருப்படைகொடுமைபோற்கொலை கு
ணித்துயிர்செகுத்தனபொறிகளாக்கிய
வுலைப்படுநெருப்பினுமழலுவேட்கையை யுறுத்தியதவத்தி
னோடியமாற்றலி
னிலைப்படுவனத்தழறிரளுமாற்றுபு நிரைப்படவறத்தொகை
வளருமாட்சியோ
டிலைப்படுநிழற்கொடுமலருபூத்திர ளிசைத்ததோர்பொழிற்
கிணைவனமிதேத்தவோ.

உரை. — கொல்லும் போர்ப்படைசெய்யுங்கொடுமைபோலக்கொலைத்தொழில்கருதி யுயிரைக்கெடுக்குமைம்பொறிகள் தூண்டி விளைவிக்குமாசை யுலைநெருப்பினுங் கொடிதாயழன்றுவேக வுடலைவருத்தினதவ மதையவித்துமாற்றலாலிவ்வனத்தினிலைகொண்டதீத்திரளுமாறியொழுங்குபடவெல்லாவறத்தொகையு மிங்கேவளருமென்றமையாற் றழைத்தநிழலோடு மதுமலர்பூத்தசோலையோடொக்கு மிவ்வனத்தைப் புகழவோவென்றாரென்க. (௮௭)

உடுத்தனவுடற்கொடுவுலகுகாத்தரு ளொளிக்கெழுநிலத்
தினர்தொழுதபாத்திப

வெடுத்தனமலர்ப்பதநலமிதாய்த்திர ளிருட்டிரவொளிப்பக
லனைய நீர்த்தலுங்
கடுத்தனபொறித்தழல்குளிரமீட்டலுங் கடுத்தடும்விடத்தினை
யமிர்தமாக்கலும்
விடுத்தனகடற்றிரை நிலையின்வாய்த்தலும் விருப்பெழவடுத்த
நினடியினுக்கமே.

உரை. — அவதரித்துடுத்த வுடலோ டுலகங்காத்தவனாகிக் கதிருலகில்வாழும் வானோர்வணங்குமரசனே யிங்கேயெழுந்தருளின வுன்மலர்ப்பாதஞ்செய்யு நன்மையிதாகித் திரண்டவிருளிராவும் பகலைப்போலவிளங்கவுஞ் செம்பொறிவீசினவழலும் பனியைப்போலக்குளிரவுங் கடுத்துயிர்கொல்லு நஞ்சு முயிர்தருமமிர்தத்தைப்போலவாகவுஞ் சுருட்டினகடற்றிரையும் பாறைபோலநிலைக்கவு மிங்கேயடுத்த வுன்றிருப்பாதம்விளைக்குஞ் செல்வமல்லோவென்றானென்க. (௮௮)

விதுப்படவுருப்படுமமரர்பாத்தொடை விளைத்திசை
யிசைத்தடிதொழுதுவாழ்த்துளி
சதுப்படவகுப்பொடுபரவதாய்ப்பல சதத்தணியொருப்ப
டவெமவிணைப்படப்
புதுப்படவனப்பொடுவரிதிலாக்கிய புழைக்குழல்குரற்கல
முளரிவாய்த்தன
மதுப்படவிசைப்படுமினியபாப்புகழ் வகுத்தனர்துதித்தனர்
தொழுதுவாழ்த்தினர்.

உரை.—அங்ஙனந் திங்களொளியினு மழகியவுருவோடு தோன்றிய சிலவானவர்பாடி யிவற்றைச்சொல்லித் திருமலர்ப்பாதத்தைவணங்கி வாழ்த்தினபோது சதுக்கமாய்வகுக்கப்பட்டுப் பூரவின நூறு நூறாய்ப் பலவணிகளொருங்குடன் கூடி நா நினைக்கப்படாத புதியவனப்போ டரிதிற்செய்யப்பட்ட துளையுளகுழலு நரம்புளவீணையும் வாசித்ததி னினிதேற்றியமதுவினு மினியவிசைப்பாட்டுகளோடு திருப்புகழ்களைப்பாடித் துதித்துவணங்கி வாழ்த்தினானென்க. (௮௯)

ஒலித்தனகலக்குரமொனிகள்மாற்றிட மலர்த்துறையடுத்
தளியினிதிலார்த்தலு

மொலித்தனமடக்குயிலிசைகணிர்த்தலு மொளிச்சிறைபுடைத்தெனைபறவைபார்த்தலும்
பொலித்தனவிழித்தழைவிரியநோக்கிய பொறிக்கெழுமயிற்றிரளரியகூத்தெழக்
கலித்தனவிடைத்தொறுமுவமைநீக்கிய களிப்பொடுவனப்பெழுவனமதாக்கமே.

உரை. — வானவரங்ஙன மகிழாநிற்ப வீணைநரம்பினோசையைமறைக்கப் பூத்த மலர்த்துறைகிடந்தவண்டினங்களினிதாய்முழங்கவு மடக்குயிலினங்களொலித்ததற் கிசைகளைப்பாடவும் விளங்கினசிறகுகளைப்புடைத்து மற்றப்பறவைகள்பார்க்கவும் பொன்படர்ந்த விழிகளுள்ளதோகையை விரித்துநோக்கிப் பொறிபொறியாயெழுதப்பட்ட மயிலினங்களரியகூத்தாடவு மிடங்கடோறுமுழங்கி யுவமையின்றிக்களித்து வனப்பிற்சிறந்த வவ்வனஞ் செல்வமுடையதாயிற்றென்க. (௬௰)

வேறு.

எழுகவென்றனனேழுலகாள்பவன்
மெழுகவிட்டனமென்மலர்ப்பூந்தட
மொழுகமூவருமுள்ளுவப்பின்கடல்
முழுகவேகுபுமொய்வனநீங்கினார்.

உரை.—இவையெலாமாகையிலேயேழுலகாளாநின்ற திருக்குமாரனெழுகவென்றமையால் மூவருமெழுந்து மெழுகினாற்போல மெல்லியமலரைப்பரப்பின தடத்திநடந்து மனதின்பக்கடலிலமுழ்கி யக்கானகங்கடந்து நீங்கினாரென்க. (௬௧)

நீங்கினாரெனத்தம்மைநினைத்திலா
ரோங்கியாகுலத்தீயிலெரிந்தெனப்
பாங்கினாரிவர்பாதமகன்றகான்
வீங்கியாரழல்தொல்லையின்மேய்ந்ததே.

உரை. — அங்ஙன மூவர் கானத்தைக்கடந்து நீங்கினவுடனே யிவரைநினையாமல் வணங்காதபாவிகள் துன்பத்தீயிலே

ங்கியெரிவதுபோல அழகியவிவர் பாதமகன்றதன்மையால க்கானகமும் பழையபடி மிக்கழல்பற்றி யெரிந்த தென்க. (௧௨)

நெட்டிடைத்தடம்பற்பலநீந்தினர்
மொட்டிடைக்கனைவண்டினமொய்த்ததண்
மட்டிடைக்குளிர்காட்டினுள்வான்கதிர்
பட்டிடைக்கடல்பாய்ந்தெனப்போயினார்.

உரை. — மூவரோவெனிற் பலநெடும்வழிகளைக்கடந்து பூமுகைகடோறு முழங்கினவண்டினநிறைந்துபொழியுமதுவினாற் குளிர்ச்சிபொருந்திய பெருங்காடெதிர்கொண்டு சூரியனத்தமித்து நடுக்கடலின்முழுகினாற்போல வவரு மக் காட்டுக்குள்ளே நுழைந்துபோனாரென்க. (௧௩)

பகையதுள்ளெனப்பாந்தளின்செல்வென
நகையமின்னெனநங்கையர்நெஞ்செனத்
தகையதோர்நெறிசெம்மைதகாதுறந்
திகையதெய்தினர்செம்மையுளத்தினார்.

உரை. — கோணாதசெவ்வுளத்தோராகியமூவ ரக்காட்டினுழைந்து பகைவர்நினைவுபோலவும் பாம்புகளூர்ந்துவரும் வழிபோலவும் வளைந்துதோன்று மின்னல்போலவு மடந்தையரொன்றி னிலைகொள்ளாக் கோணுநெஞ்சுபோலவுஞ் செம்மையொன்றின்றி வளையுங்காட்டுவழியே போனாரென்க. (௧௪)

தேங்கொள்பூமலிநீண்டிமிசச்சிமே
றாங்கொள்வாவலிருலறத்தூய்மட
லோங்கொள்பூகநன்முத்துதிரோங்கலைத்
தாங்கொளத்தடஞ்சாய்ந்தருகண்மினார்.

உரை. — அங்ஙனம் போகையின் மதுமலர்பூத்த வேங்கைமரங்களுச்சிமேற் றொங்கின பெருந்தேனிறாற்றுக்கீறிய றம்படி மடல்விட்டோங்கின வழகியகமுகு பழுத்தகாய் முத்துக்களாகவுதிராநிற்கு மலையையடையும்வழியே மூவர் சாய்ந்துபோய்க் கிட்டினாரென்க. (௧௫)

ஆலம்விற்பனகண்பொதுவாட்டியார்
ஞாலம்விற்பனவாய்த்துகிர்நட்பென
வேலம்விற்பனவெற்படியீட்டிய
கோலம்விற்பனகாஞ்சிரக்கொள்கையே.

உரை.—எலமவிவாய் விற்பதற்குக்காரணமாகிய வம்மலை யடியிற் றிரளாய்நின்றழகினைக்காட்டி நஞ்சுள்ளகனிகளைக் காய்த்த வெட்டிமரங்க ளெங்ஙனந்தோன்றினவென்னில், நஞ்சாகியகண்பார்வைவிற்கும்பொதுமகளிர் ருலகினைவிற்றும யக்குவிக்குஞ்சொற்கொண்டு பொய்நட்புகாட்டின சிவந்த தம்வாயுதட்டின் பவளம்போலத்தோன்றினவென்க. (௬௬)

வல்லவகங்கிரிவைத்துநடந்துபோய்க்
கல்லமஞ்ஞைகளிப்புறத்திங்குழ
லுல்லவாயர்நிரைக்கொடுமைக்குலங்
குலவமுல்லைநிலங்கொளவேகினர்.

உரை. — அம்மலை கிட்டினவளவி லதனை வலதுபுறத்து வைத்துப்போய்த் தோகைமயில்கள்மகிழ்ந்தாடவு மாயக்கு ழல்வாசித்தவிடையர் பசுக்களோடேகலந்த மான்களைமேய்க்கவுஞ் செல்வமுடைய முல்லைநிலத்திற் சேரப்போனாரொன்க. (௬௭)

கரவநெஞ்சுணர்காமமோர்மூரலே
பரவக்காட்டினபான்மையிலங்கணிற்
குரவநீண்டகுடங்கைகரந்தபூ
விரவநக்கமுல்லைவிணாகாட்டுமால்.

உரை.—நெஞ்சிலொருத்தியொளித்தகாமவாசையை யவள்சிரித்தசாயல்காட்டுவதுபோல மூவர்நடந்தவழியில் வெவியாகநின்ற நீண்டபேரீந்துகுடங்கைக்குள்ளே யொளித்திருந்தபூந்தோட்டத்தைச் சிரித்தமுல்லைக்கொடிகள் பூத்துவீசின வாசனைகாட்டினவென்க. (௬௮)

மூகையணிந்தளிமொய்ப்புவிகூந்தலின்
வகையணிந்தமுல்லைப்பினர்மற்றதன்

றகையணிந்தமுகத்தகும்யூதர்தந்
திகையணிந்தசிலம்பெதிரெய்தினர்.

உரை. — அங்ஙன மூவர்நடந்துபோய்ப் பூமாலைசூழ்ந்து வண்டுகள்மொய்க்கும் புவியின்கூந்தலைப்போலத் தோன்றின முல்லைநிலத்தைக்கடந்தபின்ன ரப்புவியி னழகியமுகத்தைப்போலத் தோன்றின யூதருடையநாட்டைக்கண்டு சிறந் ததிலுள்ள வொருமலை யெதிராய்க் கொண்டா ரென்க. (௬௧)

புக்கயாவரும்போக்கரிதாயெழில்
தக்கதோர்பொழிற்சாய்ந்தடிநோயற
மிக்கதேன்றுளிசெய்தளிர்மேவிவந்
தொக்கவெண்மணறிண்ணையிலோங்கினர்.

உரை. — தந்நாட்டைக்கண்டவளவிற் புகுந்தயாவரு மப்புறம்போவதரிதாம்படிக்குச் சிறந்தவழகுபொருந்தியவொருபூஞ்சோலைகண் டதிலேபோய் நடந்துகொண்ட கால்வருத்தமாறத் துளித்ததேன்மிகுதியாலாகிய குளிர்ச்சியைப்பற்றிவந்து மூவரு மொக்க வெண்மணலாகிய திண்ணைமேலிருந்தாரென்க. (௭)

வேறு.

பொதிர்தரும்பூந்தருப் பொலித்துநாறியாங்
கெதிர்தருமோரிய மென்னும்வெற்புகண்
டுதிர்தருமலர்மது வொப்பக்கண்ணினீர்
கதிர்தருமுகத்துக விளவல்காட்டினன்.

உரை. — அங்கே மூவருமிருந்தவளவி னெருங்கியபூந்தருமேலெழுந் தெங்கும் வாசனைவீசி யெதிராய்த்தோன்றின மோரியமாமலையைத் திருக்குமாரன் கண்டவுடனே மலர்பூத்துதிர்ந்ததேனைப்போல விளங்கியதன்முகத்திற் கண்ணீர் விழும்படி யழுதானென்க. (௭௧)

தீயுமிழ்மலையிலங் கோதைதீர்த்தென
நோயுமிழ்நீரொன நுதலிநொந்ததாய்

வீயுயிழ்தேனினும் விழைந்தநீஞ்சொலாய்
நீயுமிழ்நீருக நிலைமையாதென்ருன்.

உரை. — அதனைக்கண்டதாயானவள் திருக்குமாரன் மன நொந்ததனுல் விட்டகண்ணீ ரதென்று தானுந் தீயிற்போ ட்டமாலை தீந்தாற்போல மிகவுநொந்து மலர்தருந்தேனி னு மினியசொல்லுடையமகனே நீ யழும்படிக்குக் காரண மேதென்ருளென்க. (௱௨)

மின்னியகார்குழல் தாங்கிவீழ்புனல்
துன்னியகலையெனச் சூட்டியாங்கெதிர்
கன்னியதிருமலை காண்மினம்மலை
யுன்னியதிறத்தழு துயிர்நொந்தேனென்ருன்.

உரை. — அதற்குத்திருக்குமாரன் கூந்தலாக மின்னிய மேகங்களை யுச்சியிற்றாங்கி உடுத்தநல்லாடையாக வுச்சியி னின்றுவிழு மருவி யிடையிற்சூழ்ந்துவர வங்கெதிராய்நிற் கு மழிவில்லாதசெல்வத்துயர்ந்த மோரியமாமலையைக்காண் மி னம்மலையைநினைத்து நானொந்தழுதே னென்ருனென்க. (௱௩)

நொய்யவாய்மதுமலர் நொதுத்தகோவினன்
வெய்யவாய்முகிறவழ் வெற்பில்யாதென
வுய்யவாய்நமக்கிட வுதித்தநாயகன்
செய்யவாயம்புயந் திறந்துசெப்பினன். .

உரை. — நொய் மதுமலலாவிரித்த கொடியையேந்திய குசை யதனைக்கேட்டுச் சினந்திடிக்குமேகங்க ளுச்சியிற்றவ ழாநிற்கு மம்மலையிலாய விசேடமென்னவென்ருன். அதற் கு நா முயிர்பிழைக்கும்வழிதர மனிதனுய்ப்பிறந்த திருக்கு மாரன் சிவந்த தன்வாய்தாமரைமலரத்திறந்து மறுமொழி சொன்னனென்க. (௱௪)

தேனலந்தோய்தயை சேர்த்தியாபிரும்
கானலந்தோய்தவத் தீன்றகாதலன்
வானலந்தோய்மகிழ் வுய்த்தமைந்தனுய்
நானலந்தோய்திரு நகுலனென்பவே.

உரை. — ஆபிராமென்பவன் றேனினுமினிய தயைச் சேர்த்தி நாட்டின்முடித்த கானகத்துரிய தவத்தினாலீன்ற வொருமகன் நெடுநாட்பிள்ளையின்றி யற்புதமாய்வந்ததனா ல்வானுலகொத்தமகிழ்ச்சி தனக்குக்கொண்டுவந்தானென்று நால்வகை நலத்துயர்ந்த செல்வமகனை நகுலனென்றானெ ன்க. (தமிழ்மொழியா னகுலனெனினும் வடமொழியா வி சாக்கெனினுமொக்கும். நால்வகைநலமாவன: அறநலம், அ ருணலம், பொருணலம், கல்விநலமெனநான்கும்.) (௱௫)

கலைபுறங்கண்டசேய் கனிவளர்ந்தபின்
கொலைபுறங்கண்டவாட் கொண்டுகொல்லென
வலைபுறங்கண்டநோய் தாதைக்காண்டகை
புலைபுறங்கண்டதீ யொப்பச்செப்பினான்.

உரை. — அங்ஙன மற்புதமாய்ப்பிறந்தவொருமகன் கல் வியெல்லாங்கற்று வளர்ந்தபின்பு கடவுள்தானே துன்பச் சாகரத்தமிழ்த்தின தகப்பனைநோக்கி நீயேயுன்மகனையெ னக்குப்பலியாக வெட்டிக்கொல்வாயென்று மனதிற்றீயை யூட்டினாற்போலச் சொன்னானென்க. (௱௬)

அப்பணியுயிரறுத் தருந்திற்றாயினும்
வெப்பணிபணிபணிந் தியற்றவெய்தென
விப்பணியில்லவட் கிசைக்கிலாப்பிரான்
செப்பணிமலைமகற் சேர்த்திநாடினான்.

உரை.—ஆண்டவனிட்டபணி தன்னுயிரையறுத்துண்டா லு மாபிராமென்பவன் சுடுந்தன்மையுள்ளபணியைப் பணி ந்துநிறைவேற்றும்படிக் குடனேபோய்த் தன் மனைவியோ டேயுஞ்சொல்லாம லப்பலிக் காண்டவன்சொல்லிக்காட்டி ன வழகியமோரியமாமலையைநாடி மகனைக் கூட்டிக்கொ ண்டுபோனானென்க. (௱௭)

நாகமேலேறினர் நாதற்கப்பலி
யாகமேவிருவரோர் பீடமாக்கினர்
வேகவேல்விறகழல் மெய்யனேந்துபு
சாகவேபலியெவ னென்றுசாற்றினான்.

உரை. — அங்ஙனம்போய் மலைமேலேறி யங்கே யாண்டவற் கப்பலியிடும்படி யிருவருங்கூடி யொருபீடத்தைச் செய்தேற்றினார், ஆண்டவனிட்டகற்பனை யின்னமறியாதமகன் வாளும் விறகுந் தீயுங்கையி லேந்திச் சாகத்தகும்பலி யெங்கேயென்று தகப்பனைக்கேட்டானென்க. (௱௮)

பொன்னையேகாட்டிய தழலைப்போன்றநோய்
தன்னையேகாட்டிய தருமனிப்பலிக்
குன்னையேகாட்டின னென்றுரைப்பிதா
மின்னையேகாட்டிய மகனைவிள்ளினான்.

உரை. — பலி யெங்கேயென்று மகன்கேட்டதற்குப் பொன்னிலத்தைக்காட்டுந்தீயைப்போல வோரோரிடத்து நமக்குத்துன்பங்களைவிளைவிக்குமாண்டவ னிப்பொழுது முன்னை மகனே பலியாகக்குறித்தானென்று மனமுடைந்தழுதுகொண்டு தகப்பன் மின்னையொப்பவிளங்கின மகனைக்கட்டிக்கொண்டானென்க. (௱௯)

உயிர்தந்தா ளுளமறுத் தழுங்கக்கைப்புறுந்
துயர்தந்தாலரியவோர் சுடர்படத்தோற்றுவித்
துயிர்தந்தானவற்குநா னுயிர்தந்தாலெனோ
வயர்தந்தாயெனமகன் வலித்துச்சொல்லினான்.

உரை. — அதற்குமகன் மகிழ்ந்தமுகத்தோடு தகப்பனை நோக்கி இன்பந்தந்தாலு மனத்திலழுந்து கசக்குந்துன்பந்தந்தாலு மரியமுறையோ டொரோநட்புக்காட்டாநிற்கு மாண்டவன்றா னெனக்குத்தந்தவுயிரை யவற்கு நான்றந்தா லென்ன வருந்திநொந்தபிதாவேயென்று துணிந்துசொன்னானென்க. (௱௰)

காதைபெய்கண்மழை யோம்பித்தாண்டிசை
கோதைபெய்திறைஞ்சியென் குறைபொறுப்பவென்
றோதைபெய்முகிலறு முச்சிப்பீடமேன்
மேதைபெய்திறத்தெழீ விழுக்கைகூப்பினான்.

உரை.—நகுலனிங்ஙனஞ்சொல்லித் தன்பிதா வாற்றாதழுங்கண்ணீர்மழையைத் துடைத்துத் தானவற்காறுதல்சொன்னபின்பு தகப்பன்பாதத்தில்விழுந்து மாலைகளைச்சாற்றி யடியேனுனக்குச் செய்தகுறைகளைப் பொறுப்பாயாகவென்று வணங்கினபின்பு துணிவோடெழுந்து தெளிந்தவறிவினாற் றிறங்கொண் டிடிக்குமேகங்களையறுக்கு மலையுச்சியில்வைத்தபீடத்தின்மேற் றானேயேறி யிருமலர்க்கையைக் கூப்பிநின்றானென்க. (௱௰௧)

செவ்வியதிருவுள மென்றுதேறியுள்
ளவ்வியமறுத்தரி தோங்குமாபிறாங்
கவ்வியசிகைத்தலை கவிழ்ந்துவீழ்ந்தற
வவ்வியவாட்கொடு மகனைவீசினான்.

உரை.—அதின்பின்பாபிறாமென்பவனு நீதிமுறைதப்பாத திருவுளமிதுவென்றெண்ணி மனதிற்றேறி வருந்துமனக்கோட்டம்விட் டரிதாய்த்துணிந்து தன்மகன்குடுமியைப்பிடித்துத் தலைகவிழ்ந்துவிழும்படி யேந்தியவாளை வீசினானென்க. (௱௰௨)

வீசினவாளொடு வினைக்கைதாங்குபு
கூசினவுலகெலாங் களிப்பக்கோதறத்
தேசிலமகிழ்வுற விருவர்சால்பென
வாசியையிறைவன் றளவினல்கினான்.

உரை.—அங்ஙனம் பிதாமகனென் றிருவர்துணிவுகண்ட கடவுள் வீசினவாளையுங் கையையுந்தாங்கிக் கூசாநின்ற வுலகெலாமிதனையறிந்து களிப்பவுங் குறையொன்றின்றி யவ்விருவர்வாழவுந் துணிந்ததுபோதுமென்று மட்டில்லாத வரங்களை யாசீர்வாதத்தோ டன்றவர்களுக்குத் தந்தானென்க. (௱௰௩)

மன்னுயிரளிப்பநான் மற்றோர்வெற்புமே
லென்னுயிரளிப்பலென் றிவையங்காயதே
பின்னுயிரளிக்குங்கால் பெற்றலாதெனக்
கின்னுயிரிலையென வழுதியம்பினான்.

உரை.— நானே மன்னுயிர்யாவையுமிரட்சிக்க வேறொருமலைமே லென்னுயிர்தந்து தேவபலியாவேனென் றடையாளமாய்க்காட்டுதற் கம்மலைமே லிவையெல்லா மன்றுநடந்தமுறைதானே, இனிநான் மனிதரைவேண்டி யென்னுயிர் தருங்காலம்வருமளவு மிங்கேயெனக்கு நல்லுயிரில்லையென்று திருக்குமாரன் றயைமிகுதியா லழாநின்றானென்க. (௩௱௰௪)

வேறு.

கரைகொன்றதயைகண்டு கலுழ்ந்திரங்கித்தவத்திறைவ
புரைகொன்றவவ்விருவர் புணர்துணிவேசால்பென்றால் [ன்
திரைகொன்றமன்னுயிர்க ணீயளிப்பவிறப்பானேன்
றிரைகொன்றவருள்விளக்குந் திருவல்லோயென்றழுதான்.

உரை.—திருக்குமாரன் சொன்னதைக்கேட்ட தவத்திராசாவாகியகுசை கரைகாணாக்கடலாந் தயையைக்கண்டு மனதிரங்கியழுதுசொன்னான்: முன் னீசொன்ன தந்தைமகனென் றிருவர்சாதற்குத் துணிந்ததுபோதுமென் றங்கே சாகவில்லையென்று அரிய நீதியைத்தப்பினமனிதரை யிரட்சிக்க வுன்றுசைபோதாமல் நீ யிறப்பானேன் கடலினும்பெருகியவருளின் செல்வவல்லோனேயென்று விம்மியழாநின்றானென்க. (௩௱௰௫)

துப்புங்காயெரியென்றுஞ் சுடுங்கொல்லோசொற்றியவோ [த்
ரொப்புங்காட்டியபொருளு மொன்றெனவோவவனிகராய்
தப்புங்காசினியளிப்பச் சாகுதலென்பாலென்னச்
செப்புங்காலெமக்கிரங்கித் திருமைந்தன்மீண்டுரைத்தான்.

உரை. —அதற்குத்திருக்குமாரன் செம்பவளத்தையுங் காயுநெருப்பென்பா ரென்றாலும் பவளமுஞ்சுடுமோ வில்லையே, சொன்னவுவமையு மதனாற் காட்டினபொருளுமுழுது மொன்றாகவேண்டியதல்ல, ஆகையி னதுலனென்பானென் னைக்காட்டு முவமையாகக்கொள்ளக் சாகாமற்றுணிந்தது

போதுமென்றாலுங் காட்டப்பட்டபொருளுளைகயி'லு
லகங்கொண்டபாவத்திற் குயிரைத்தந் திறக்கக்கடவேனென்
று திருக்குமார னமக்கிரங்கியழுது மீளவுஞ் சொன்னானெ
ன்க. (௱௰௬)

அன்னாளும்வந்தொழிய வகமகிழ்வீங்கெனக்குண்
பன்னாளுநானிறப்பப் பற்றியநீண்மரந்தன்னை [போ
யின்னாளுங்காணாதா விடர்க்கெல்லையில்லையென்றான்
பின்னாளுந்துணையற்றுப் பெருகுதயைக்கடலன்னோன்.

உரை. — நான் மனிதர்க்குவேண்டி யிறக்குங்காலம்வந்
தாலொழிய விங்கேயெனக்கு மகிழ்ச்சியொன்றுண்டோ? உ
லகளித் திறக்கும்படிக்கு நெடுநாள்விரும்பின சிலுவைமரத்
தையிப்பொழுதுகாணாமையாலல்லோ முடியாததுயர்கொ
ண்டேனென்றான் பிற்காலத்து முவமையின்றிப் பெருகியத
யைக்கடலோனாகிய திருக்குமாரனென்க. (௱௰௭)

மண்விளக்குஞ்சுடரன்னோன் வருத்தமறவானவர்தாம்
விண்விளக்குங்கதிர்திரட்டி மேல்வனைந்தவோர்சிலுவை
கண்விளக்கும்பகலினுஞ்செங் கதிர்பரப்பக்காட்டினரால்
பண்விளக்குந்தேமொழியான் பரிவற்றுள்ளுவந்துரைத்தான்

உரை. — பூவுலகிற்கொருசூரியனாகவந்த திருக்குமாரன்
ங்ஙனங் கொண்டவருத்தமாறும்படிக்கு வானவர்தாமே வா
ன்மேற்றிரியுஞ் சந்திரசூரியநட்சத்திரங்கள் விட்டகதிர்க
ளை யொன்றாய்த்திரட்டி யங்கேதானே யலங்கரித்தவொரு
சிலுவையைக்கொண்டுவந்து பகலினுங் கதிரைப்பரப்ப வ
தனையாகாயத்தினின்றுகாட்டினார். அதனைக்கண்டவளவில் வீ
ணைவாய்க்குரலினு மினியசொல்லுடைய திருக்குமாரன்று
யரெலாநீங்கி மகிழ்ந்துசொன்னானென்க. (௱௰௮)

ஏரணியேயென்னன்பே யென்னன்பிற்கிரதமிதே
சீரணியேயுயர்வீட்டைத் திறக்குங்கோலிதேயின்பத்
தாரணியேயெங்கணுநா ளுண்டோச்சுஞ்செங்கோலே
பேரணியேயெனதுயிரித் யேருயிரோவாழிபவே.

உரை. — சிலுவைகண்டதிருக்குமார னெங்ஙனமதனைப் புகழ்ந்தானென்னில், எனக்கழகிதே, அன்பிதே, என்னன் பிற்கமைந்த விரதமிதே, நானணியுஞ்சிறந்த வாபரணமிதே, நான்வான்வீட்டைத் திறக்குங்கோலிதே, இன்பம்பொருந்தி நானுண்டேந்துஞ் செங்கோலிதுவே, நானென்பகைவரைவெல்லும் பேரணியிதுவே, என்னுயிரினு மெனக்கினியவுயிரிதுவே வாழிவாழியென்று புகழ்ந்தானென்க. (௩௰௯)

என்றான்றானன்புவிசை யேந்தியதன்னுடலுமெழீச்
சென்றான்றானச்சிலுவை திருமார்பிற்சேர்த்தணைத்தா
னின்றான்றானமூதாழி நீர்முழுகியின்பத்துக்
குன்றான்றன் சுடர்குன்றக் கொழுங்கதிர்சூழ்பரப்பினனால்.

உரை. —திருக்குமாரனிவற்றைச் சொன்னவுடனே தன்னன்பின்விசையாலேந்தப்பட்ட தன்னுடலுமெழுந்துபோய்ச் சிலுவையாகாயத்திற் றோன்றினவிடத்துச்சென் றச்சிலுவையைத் தன்றிருமார்போ டிறுகச்சேர்த்தியணைத்து வமூதாநிறைந்தகடலின் முழுகினாற்போல வசையாதிருந்து நுகர்ந்தவின்பங் குறையாமற் சூரியனொளியினுங்கதிர்களைச் சூழப்பரப்பாநின்றானென்க. (௩௨௰)

அலையீன்றசெஞ்சுடர்போ லாங்கெழுஞ்சேயுயிர்செல்
கொலையீன்றவெற்றுடம்பாய்க் கூற்றுமிலாதசைவுமிலா [லக்
திலையீன்றபூங்கொடிகொள் ளெழுந்தவனுந்தாயுமழு
துலையீன்றதீயுருகு மோவியங்களெனநின்றார்.

உரை. — அங்ஙனங் கடல்மேலெழுந்த சூரியனைப்போலத் திருக்குமாரனாகாயத்திற்பொலிந்து விளங்கத் தளிர்த்துப் பூத்தகொடியையேந்திய வெழுந்தவனாகியசூசையுங் கன்னித்தாயாகிய மரியென்பவளு மிருவர்தம்முயிர்களெழுந்த தேவமகனைப்பின்சென்றுபோய்க் கொலைசெய்த வெற்றுடம்புகளாகிப் பேசாமலு மசையாமலு மழுதுகொண்டிருக்கத் தீயிலுருகின விருசித்திரங்களைப்போல நின்றாரென்க. (௩௨௧)

அழுதன்னார்துயர்நோக்கி யருட்கடலோன்மீண்டிற
முழுதன்றருவப்பவொரு மூரலையிட்டியங்கவெனத் [ங்கி
தொழுதன்னார்தடங்கொண்டு துதிபாடிநெடும்வழிபோய்ப்
பழுதன்னார்மனத்தினிருள்பாய்சுரஞ்செல்வெற்படைந்தார்

உரை.— அங்ஙன மிருவ ரழுதுகொண்டதுயரைக் கண்டமையா லருட்கடலோனாகியதிருக்குமாரன் மீளவு மவரிடத்திறங்கித் துன்பந்தீர்ந்து முழுதுமவர் களிகூரும்படிக் கொருபுன்னகையைக்காட்டி நடக்கவென்றான், அவருந்தேவகுமாரனைவணங்கித் துதித்து நெடும்வழிநடந்தபின்பு பாவிகள்மனம்போல விருண்டவழியோ டொருமலையையண்டினரென்க. (௩௨௨)

வேறு.

தூசனைமின்னியாடுந் துளிமுகில்தவழ்ந்துசூழக்
காசனைமுகைத்தசாந்தங் கலந்தநீண்டிமிசபூத்துப்
பூசனையெனக்கற்பூரம் புழுகுடனமற்ற
தோசனைகமழக்குன்றத் துதயமேலேறினரோ.

உரை.— அங்ஙன மூவரண்டினமலையடியி விரவெலாம் போக்கி விடிந்தபின்பு பட்டாடைபோல மின்னியாடாநிற்குந் துளிபெய் மேகங்கள்சூழத் தவழ்ந்திருக்க மணிகளையொப்ப மதுமலர்பூத்த சந்தனமு நீளவேங்கையும் விட்டவாசனையும் பூசைமுகத்திற்போலக் கற்பூரம் புழுகு நான மற்றப்பலவும்விட்ட வாசனையு மொருயோசனை தூரம் வீசாநிற்கக் கமழு மலையிலேறினரென்க. (௩௨௩)

சால்வளர்முகிலின்வேழஞ் சந்தனமேய்ந்துசீற
வால்வளர்கலாபநீட்டி மயிலினமுலவியால
நூல்வளர்கலனிற்றூங்கி நுரைவளரருவியோடக்
கால்வளருழைகள்பாயக் காவதமெரவிக்குங்குன்றே.

உரை. — மீளவு மேகங்களையொப்பவளர்ந்த யானைகள் திரண்டு சந்தனத்தழைகளைமேய்ந்து சீறிமுழங்காநிற்கவுந் தோகைநீட்டியமயில்கள் கூட்டமாயுலாவிக் கூப்பிடாநிற்க

வும் கோர்வைமாலைபோல வுச்சியினின்றுதொங்கி நுரையாய்விழு மருவிழுழங்கியோடவு முயர்காலுடைய மானினங்கள் துள்ளிப்பாயவு மொருகாததூரத் திரைக்குமுழங்கு மலையதுவேயென்க. (௩௱௨௪)

வருக்கையின்கனிகடோறும் வானரமுலவிப்பாயச் [ப்
செருக்கையின்குருதிபோலச் சிந்துதேன்பெருக்குற்றோடி
பருக்கையின்விளங்குற்தெண்ணீர் பரப்புமாறிடத்திட்டேகி
தருக்கையின்வணைந்தமாலைச் சாரல்கண்போயினாரே. [த்

உரை. — அங்கே திரளாய்ப்பழுத்த பலாக்கனிகடோறுங் குரங்குகளுலாவிப்பாய்ந் ததுகளைக்கீறினதனால் வெம்போர்செய்யுங்கையா லொழுகுங்குருதிபோலத் திரளாய்ச்சிந்தினதேனும் வெள்ளமாகவோடிப் பெருகும்பளிங்கினுந் தெளிந்தநீரருவியை மலையிலேறும்போ தவரொதிராய்க்கொண் டதனையிடத்திலேவிட்டு வலமாய்ப்போய் மரங்கள் தங்கொம்பாகிய கையாற்பின்னி யலங்கரித்தேந்திய மாலைகள்தொங்காநிற்குமலைச்சாரல்வழியேபோனாரொன்க. (௩௱௨௫)

சண்பகமலர்ந்தசோலை சந்தனநிழற்றுஞ்சோலை
விண்பகலொளிப்பச்சூழ்ந்து விழைந்தவரொவரும்பேணு
நண்பகமவிதல்போல நாண்மலர்பொதுளும்வாவி
யொண்பகனெற்றிபோகி லொத்தொளிர்மூவர்சென்றார்.

உரை.— அங்ஙனம் போகையிற் சண்பகச்சோலையுஞ் சந்தனச்சோலையுஞ் சூழநிழல்செய்து வெயிலையொளிப்பவன்போடிம்மூவ ரொவரையும்பேணுநிற்கு நட்புள்ளதன்மனம்போலக் குளுமலர்நிறைந்த தடாகத்திடத்தி லுச்சிப்பகனேரமே யப்பகலொப்பவிளங்கின மூவருஞ்சென்று ரொன்க. (௩௱௨௬)

விண்முழுதிறைஞ்சுந்தக்கோர் விரிகனாவதிந்தபோழ்
பண்முழுதொழிக்குந்தீம்பாப் பறவைசூழிமிழிற்பாட [திற்
மண்முழுதன்றிவானு மாற்றரும்வனப்புக்காணக்
கண்முழுதுடம்புற்றன்ன கயமெலாம்பூத்ததன்றே.

உரை.— அத்தடாகத்தின்கரைமேல் வானுலகத்தோர்வண ங்குமாட்சியுடைய மூவரிருந்தவளவில் வீணைவாய்க்குரலினு மினிய பாவாகச் சூழப்பறவையெல்லா மினிதாய்ப்பாடாநி ற்கப் பூவுலகும் வானுலகுமொவ்வாத விவரழகினைக்காணு ம்படிக் குடம்பெல்லாங்கண்ணானாற்போலத் தடாகமெல்லா ம்பூத்ததென்க. (௱௨௭)

எல்லினைக்காணமாலைக் கிருள்குணக்கெதிர்ந்ததேபோல்
வில்லினைச்சுமந்தகையால் வேடருந்தழைத்தூசேந்தி
யல்லினைப்போனல்லாரு மடைந்தரிதருள்மீக்கூறச்
செல்லினைப்பொருக்குங்குன்றின் றீங்கனிபரப்பினாரே.

உரை.— அவராரறியாமலவர்வந்ததறிந்து மாலைநேரத்து ச்சூரியனைக்காணக் கிழக்குநின்றுவரு மிருளைப்போலக் கை யில்வில்லேந்தியவேடருந் தழைகளாற்பின்னப்பட்ட சீலையு டுத் திராவோடொத்தநிறத்தவர்மாதரும்வந்து தங்குலத்தார்க் கரியதயையைக்காட்டி மேகங்களைச்சுமக்கு மம்மலையிடத் துக்காய்த்ததீங்கனிபலவகைபரப்பிவைத்தாரென்க. (௱௨௮)

சூழகத்தன்புகாட்டச் சூசைவந்தவரைநோக்கி
வாழகத்தெவரிக்குன்றில் வைகுநீரொன்றுகேட்பக்
காழகச்சேற்றூட்டிம்பால் கலந்தெனச்சரைகொள்மூப்பன்
மேழகக்குரலிற்சொன்னான் வெண்மணற்றிண்ணைசேர்ந்தே.

உரை.— அங்ஙனமவர்சூழமொய்த்துவந்தவளவி லன் பாகச்சூசையவரைநோக்கி யிம்மலையிடத்துவாழு நீங்களா ரென்றுகேட்டதற்குக் கருஞ்சேற்றினுள்விழுந்த பால்போ லக் கரியமேனிநரைத்த கிழவனொருவன் வெண்மணலாகிய திண்ணையிலிருந்து கிடாய்க்குரலோடுமறுமொழிசொன்னா னென்க. (௱௨௯)

களித்தனமுகத்திற்பொய்யாக் கனிகடந்தெழுமிக்குன்ற
தொளித்தனமக்கபேயர்க் குதவியகுலத்தினோத் [த்
துளித்தனமதுவிற்றண்ணஞ் சுள்ளியினிழற்கீழ்சாய்ந்தாண்
டளித்தனதலைவனோனே யவிர்முகத்திரவிபோன்றீர்.

உரை.—சொன்னமுப்பனெங்ஙனமறுமொழிசொன்னானென்னில், நன்முகத்தொளியான் முச்சுடரொத்தமூவரே நாங்களாமொன்றறியக்கேட்பீராக, மகிழ்ந்தமுகத்துப் பொய்யாமற் கனிகளைத்திரளாய்த்தந்து சிறந்த விம்மலையிடத்து முன்னாளின் மக்கபேயரொளித்திருந்தபோ தவர்களுக்குதவினகுலத்தாரைத் துளிமனுக்குளிர்ச்சிபொருந்தின மராமரத்துநிழலின்கீழாளாநிற்குந் தலைவனானேயென்றானென்க. (மக்கபெயராமொனிவியூதருள்ளொருகுலத்தாமென்க.) (௱௩௰)

பாங்கொளித்துணர்விட்டோங்கும் படர்ந்தபற்காவுக
வ்வி
யாங்கொளித்தலர்ந்தபொய்கை யடுத்தகல்பரப்புநோக்கி
ரீங்கொளித்துளத்திலோங்கி யெதிர்பகைசெகுத்துப்பின்னா
வீங்கொளித்தடக்கைவீரர் வென்றனவிடமதாமே. [ன்

உரை.—மீண் டம்மூப்பன் றாழச்சீர்மையோடுபடர்ந்துநிற்குமிடத்தை விரலாற்காட்டிச்சொன்னான்: அழகொளிவீசினமலரைப்பூத்துப் படர்ந்தெழும் பலசோலைகள் கவ்வப்பட் டங்கேயொளித்துமலர்ந்ததடாகத்தருகேயகன்றவொருவெளிநோக்கீர், இங்கேமுன்னொளித்திருந்த மக்கபேயர்பின்பு மனதிலோங்கி மிகவும்புகழப்பட்ட வலத்தவீரராகியெதிர்த்த தம்பகைவரைக்கொன்று வெற்றியடைந்தவிட மதுதானென்றானென்க. (௱௩௧)

† வானினின்றிழிந்தவாளால் மன்னவன்பொருங்கால்வா
ன் றன்
பானினின்றிழிந்தவில்போற்படர்சுடர்செயப்பாய்மாமேன்
மேனிநின்றிழிந்தகற்றை விண்ணவரைவர்வில்லா
லானினின்றிழிந்தசெந்நீ ருகக்கடற்படையைவென்றார்.

உரை.—அவரங்கேசெயங்கொண்டதெங்ஙனமென்னில், வானத்தினின் றாண்டவனனுப்பின திருவாளடைந்த மக்கபேயர்தலைவனாகிய யூதசென்பவன் வெம்போர்செய்யுமளவில் வானிற்றிரியுஞ்சூரியன் விட்டகதிர்களைப்போல வைந்

† II Machab. cap. X, vers. 29; et cap. XV, vers. 15. மக்கபேயர்-௨-ம். ஆகமம், ௰-ம். அதி. ௨௯-ம். வசனம்; ௰௫-ம். அதி. ௰௫-ம். வசனம்.

துகிரைகள்மேனின்று மேனியெல்லாஞ் சுடரைவீசத்தோன்றின வைந்துவானவர்வில்லாலெய்த வம்புகள்வழியாகத்திரளாயிரத்தமோடும்படிக்குக் கடலொத்தபகைவர்படையை வெட்டிச் செயங்கொண்டானென்க. (௱௩௨)

பன்னியபடலையாய்மேற் பண்பெலாமடைந்தநாதற்
றுன்னியகாலைத் துன்னுத் தோன்றியவரிதொன்றுண்டோ
கன்னியகுலத்தோரேற்றுங் கடவுளைப்பணிந்தபோழ்தே
பின்னியமுறையாலிங்கட் பிணிகளும்பெறலேதென்றான்.

உரை. — அங்ஙன நெருங்கிக்கோர்த்தமாலைபோல வெல்லா வுயர்ந்த நன்மைக்குணங்களையுடையநாதனை யண்டினகாலத்தண்டாம லடைவதற்கரியதொன்றுண்டோ வில்லையே, ஆயினுஞ் செயங்கொண்டழிவில்லாத வக்குலத்தோர்வணங்கியண்டினகடவுளை நாங்களு மண்டிவணங்கக்கொள்ள வெங்களோடு பின்னப்பட்டாற்போல விடாதபிணிதுன்பங்களை நாம்பெறுவதென்னவென் றந்தமூப்பன் சொன்னானென்க. (௱௩௩)

இன்வளருவப்பிற்கேட்ட விவைமறுத்துரைக்குஞ்சூசை
கொன்வளர்பொருளின்செல்வங் கூவிடத்தெறிந்ததேபோற்
பொன்வளர்திருமிக்கூர்தல் பூரியர்கண்ணுங்கண்டால்
மின்வளருருவிற்றோன்றி விளிநலம்விரும்பல்வேண்டா.

உரை. — இன்பம்பொருந்திமகிழ்ந் திவையெல்லாங்கேட்டசூசை யவற்றைமறுத்துச்சொல்வான்: பயனொன்றின்றி வளரும்பொருளின்செல்வங்களை யாண்டவனொண்ணாமற் பூவுலகிலெறிந்தாற்போல வச்செல்வங்கள் பாவிகளிடத்துந்திரளாகக்கண்டோமே, கண்டபின்பு மின்னலைப்போலத்தோன்றியொழியுநன்மைகளை யாசைப்படவும்வேண்டாமென்றானென்க. (௱௩௪)

சலத்தெலாநிலையுமொன்றே தருக்கெலாங்கனியுமொன்றே
நிலத்தெலாம்விளைவுமொன்றே நிலைபலநமக்குமுண்டாய்க்

குலத்தெலாம்பொதுவாய்நிற்குங்கொழுந்தகவறத்தின்மாட்சி
புலத்தெலாமொல்லுமொல்விற் பொருளிலாக்குறையொன்
றுண்டோ.

உரை. — மீளவு மேகங்கள்பொழியுமழைநீர் நிற்குமிட
மு மரங்கள்காய்க்குங்கனிகள்வகையு நிலந்தரும் விளைவின்ற
ன்மையு மொன்றாகாமற் பலவையாவதுபோல நமக்கும்ப
லநிலையுண்டாகிச் செல்வரோ டில்லோரும் வாழ்வாரோடுயி
ர்நொந்தாருங்கலந்திருக்க வெக்குலத்திற்கு மெந்நிலைக்கும்
பொதுவாய்நிற்குஞ் சுகிர்தபுண்ணியத்தின்மாட்சி நாமே
வேணுமிடத்துச் சேருமல்லோ? அதுசேர்ந்தபின்பு பொரு
ளின்மை குறையென்றெண்ணவோ? வேண்டாமென்றென
ன்க. (௱௯௫)

கார்முகத்தலருமுல்லை கதிர்முகத்தலருங்கஞ்சஞ்
சீர்முகத்தலருநெஞ்சிற் சிலர் துணிந்தறத்தைச்செய்வார்
சூர்முகத்தலருமூக்கத் துணிவொடுசிலரேநோற்பார்
பார்முகத்தாசொன்றல்லாற் பயன்படா தில்லையொன்றே.

உரை. — எந்நிலையி லு மெக்குலத்திலும் புண்ணியமாகு
மென்பதற்கு மேகத்தின்முகத்து முல்லைகள்பூப்பச் சூரிய
ன்முகத்துத் தாமரைமலருமல்லோ? அதுபோலச் சிலர்செல்
வமடைந்தவளவிற் றுணிந்துதருமங்களைச்செய்வார், சிலரோ
வென்னிற் றுன்பமடைந்தவிடத்து மனதிலோங்கி நற்றவ
முடிப்பத்துணிவார், அங்ஙனம் பூவுலகிடத்துப் பாவமொன்
றொழியப் பயன்படாததில்லையென்றுனென்க. (௱௯௬)

மெய்மறந்துணர்வைக்கொல்லும் வெறிமதுவுண்ணு
க்கள்வைக்
கைமறந்தொழுகிக்காதற் கசடுறப்பொறிகள்காட்டும்
பொய்மறந்தின்றுதெல்லாம் போக்கிநல்லறமேபூண்டு
மைமறந்தவிர்த்தீராகில் வானின்மேற்குலமாய்வாழ்வீர்.

உரை. — ஆகையி னீங்களும் வேடராயினுந் தான் றன்
னுடலைமறக்க வறிவினைக்கொல்லும் வெறிதருங்கள்ளுமுண்

ளுமே னுங்கள்கையுங் களவுதொழில்மறந்து தீயவாசைவிளை விக்க வைம்பொறிகள்காட்டிய பொய்யையெண்ணுமற் காம கோபகொலைமற்றப்பாவங்கள்யாவையுநீக்கி நல்லறமணியாகக்கொண்டு மறத்தொழில்விட்டீர்களாகி னீங்களும் வானுலகின் மேற்குலத்தோராகி யென்றென்றைக்கும் வாழ்வீ ரென்றுனென்க. (௩௫௭)

பிறந்தகால்குலமுஞ்செல்வப் பெற்றியுந்தெரிந்தாருண்
மறந்தகாதொழுகுஞ்சீரால் வான்பிருத்தகுவதென்றே [டோ
யிறந்தகாலிங்கட்டோர்ந்த வியல்புடனெவரும்வாழ்வார்
சிறந்தகால்வேண்டின்வேண்டுந் தீதகன்றறத்தின்மாட்சி.

உரை. — அவனவன்பூவுலகிற் பிறக்கும்போது தனக்குக் குலமுஞ் செல்வமுந் தெரிந்துகொள்வாருண்டோ வில்லையே, வானுலகுசெல்வமோவெனி லவனவன் பாவத்தைநீக்கி யறநெறிநடந்ததன்மையா லெவர்க்குமாகுமென்றதனு லிறக் குங்காலத் திங்கேநாநடந்து தெரிந்துகொண்டதன்மையா லங்கேவாழ்வோம், ஆகையி லன்றுசெல்வத்திற் சிறந்தவராக வேண்டுமாகி லின்றுபாவத்தையொழித் தறத்தின்மாட்சியைத் தேடல்வேண்டு மென்றுனென்க. (௩௫௮)

வருணமேமக்கட்பேதம் வகுத்திடுமிங்கணல்லா
லருணமேயிறந்தபின்ன ரவரவர்தமில்வேறுக்குங்
கருணமேதிரியுங்குன்றிற் கடிதுறைநீருமோர்ந்து
தருணமேகாத்துச்சீலந் தவிர்கிலீரொன்றுன்சூசை.

உரை. — அங்ஙனம் பலவகைக்குலங்க ளிங்கேமனிதருக்குள்ளே வேற்றுமைகாட்டுவதொழிய விறந்தபின்பெல்லாருஞ் செய்தவறத்தின்றன்மையால்மாத்திரம் வேறுவார்களல்லோ? ஆகையால் யானைகள்மேய்ந்துதிரியு மிம்மலைமேலே துன்பத்தோடிருக்கு நீங்களு மிவற்றை மனதிலெண்ணிச் சமயங்காத்துக்கொண்டு நல்லொழுக்கமுறை விடாதிருப்பீ ராகவென்று சூசைமாமுனிசொன்னுனென்க. (௩௫௯)

வேறு.

கழையிடைக்குளித்ததேன்வடிந்தென்ன கனிந்திவைவ
ளன்விதித்திடுங்கால் [வோடிக்
தழையிடைக்குளித்தநீனிறமேனித் தையலார்பொருக்கென
குழையிடைக்குளித்தகுளுமதுமுகைகள் கொய்துகொய்திமி
ழ்த்தவோர்கண்ணி
மழையிடைக்குளித்தமின்னெனத்தோன்ற மழையொத்தா
ரதைக்கொணர்ந்துய்த்தார்.

உரை.— அங்ஙனங் கரும்பிடத்தொளித்த தேனொழுகினு
ற்போல வினிதா யிவையெலாஞ் சூதை வேடர்க்கிங்கேசொ
ல்லும்பொழுதி லங்கேதழைகளையுடுத்தபெண்டிர் விரைந்
தோடித் தளிருள்ளொளித்துக் குளிர்ச்சிபொருந்தின மலர
ரும்புகளைப்பறித்து மாலையாகக்கட்டி மேகமொத்தமேனி
ய ரம்மேகத்திற்றோன்றின மின்னலொத்தமாலையை யேந்
திக்கொண்டுவந்து திருக்குமாரன்முன்னே வைத்தாரென்க.
(௩௪௰)

வாடுமோர்மலரைச்சேர்த்தியபடலை மாலையைக்கொண
ரவோவோடிக் [நாதன்
கூடுமோர்பயனிதோவென நக்கான் குழவியாய்த்தோன்றிய
கூடுமோரிணையற்றிலங்குநீயையா கூவில்வாடிலமலரல்லால்
வாடுமோர்மலருமன்றியீங்குண்டோ மலரெனவொருத்திநக்
குரைத்தாள்.

உரை.— அதனைக்கண் டேழுவயதுகுழந்தையாய் நின்ற
நாதன்சொன்னான்: வாடுமலரைச்சேர்த்திய மாலையைக்கொ
ண்டுவரவோ வோடிப்போ யுங்களாலாய திதுதானோவென்
றுசிரித்தான். அதற்கொருத்தி - ஐயா நிகராதழகுள நீயே பூ
வுலகில்வாடாதமலராவதொழிய விங்கேவாடுமலரைவிட்டு ம
லருமில்லையென்று சிரித்துச்சொன்னாளென்க. (௩௪௧)

கோடியகொம்பிற்பூவதோபடரும் கொடிமலர்தான்
கொலோநீரி

லாடியபூவோவாடிலமலரொங் காவதென்றறைதிநீயென்று
ளாடியதவமென்றடவியிற்பூத்த வரியகற்பாதியேமற்றக்[ன்.
கோடியகுறைதீர்சீலமேவாடாக் கொழுமலராயினவென்று

உரை. — மீளவு மவள்சொல்லி வளைந்த கொம்பின்மேலோ படருங்கொடியின்மேலோ வாடுநீரின்மேலோ வாடாத மலரொங்கேயாகுமென்று நீயேசொல்வாயென்றாள். அதற்குத் திருக்குமாரன் புணர்ந்ததவமாகிய காவிடத் தரிதாய் மலருங் கற்புமுதன் மற்றக்குற்றமில்லாத நல்லொழுக்கப்புண்ணியங்களே வாடாதமலராயினவென்றான். (௱௪௨)

காவிபட்டொளிறுங்கண்ணினார்காணி கற்பதேபளிங்
கினுநொய்தா [யாவொன்று
யாவிபட்டழுக்குற்றொழியுமென்றறைவா ரரியநூற்புலமை
ளாவிபட்டொழியுங்கற்பதேயாகி லாண்மைகொண்டுறுதி
யேநிற்பக் [றான்.
காவிபட்டொளிறுநீண்டகண்ணுறுதி காமினீநாந்தையுமென்

உரை. — குவளைமலரினு மழகியகண்ணுடையார்க்குக்காணியாகியகற்புத்தானே தூயபளிங்கினு நொய்யதாகி யோராவிபட்டமாத்திரத் தழுக்கடைசிக் கெடுமென்பாரே கற்றவரென்றாள். (ஆகையா லதுவாடா மலரொன்னலாகாதென்பது கருத்து.) அதற்குத்திருக்குமாரன்: ஆவிபட்டமாத்திரத்தழியுங்கற்பென்று லதுகெடாமல்நிற்கும்படி யாவிபடாததற்கு மனதிற்றுணிந்து கண்முதலைம்பொறிகளை நன்றாய்க்காப்பீராக வென்றானென்க. (௱௪௩)

நகையெழவெதிர்ந்தவின்பமைம்பொறிக ளுடலிற்கா
வலேயாற்றுப் [த்ததேதென்றாள்
பகையெழவைந்தும்பரமனேமுன்னாட் படைத்தெமக்களி
பகையெழமுனிந்துபழுதுறவெவையும் பருகழலுமக்கு
வேண்டாதோ [ன்றான்.
நகையெழவுதவுந்திறத்தவைபேணி நவையுறுக்காமினீரெ

உரை.— ஐம்பொறிகளைக் காக்கச்சொன்னையாயினு மன தின்மகிழ்ச்சியெழும்படிக் கெதிர்வருமின்பத்தையப்பொ றிகள் நாடியவிடத்தி லதுகளைக்காத்தலாற்றுதே, அங்ஙன மா கையி லாண்டவன்றானே நம்மைப்பகைக்கு மைம்பொறிக ளையுண்டாக்கி நமக்குத்தந்ததென்னவென்றாள். பகைசெய்ய ச் சினந்தெதிர்த்தயாவையுங் கெடுத்தழித்துண்ணுந் தீயாயி னு மதுங்களுக்குவேண்டாதென்பீரோ? அங்ஙனம் பகைத் தானு மைம்பொறிவேண்டியதுதானே யாயினு மத்தீயு மிப்பொறிகளு முதவும்பருவத்ததுகளைப்பேணி யதுகளாற் கேடுவராதபடிக்குக் காத்தல்வேண்டுமென்றான் றிருக்குமார னென்க. (௱௪௪)

இனையவும்பலவுங்கூறியதன்மைத் தெவரும்வேறுய்ம
னவூக்கம் [பெலாம்பூத்த
புனையவுமுணர்விற்றெளியவுமோங்கிப் புதிதுயர்பொருப்
தனையவுமலர்ந்தநெஞ்சறம்வெஃகி யடிதொழுதனவரும
ழப்போய் [ரூர்.
வனையவுமரியமாட்சியின்மூவர் வாய்ந்தவவ்வளை கடந்தகன்

உரை. — அங்ஙனந் திருக்குமா ரனுஞ்சூசையு மிவற்றோ டுபலவையுஞ் சொன்னதன்மையால் வந்த வாணும்பெண் ணு மெல்லாரு மனதிலூக்கமடைந்து நல்லுணர்வாகத்தெ ளிந் துளத்தோங்கி யம்மலையெல்லா மன்றுபுதிதாய்ப்பூத்த துபோல வவருநெஞ்சில்மலர்ந்து நல்லறத்தின்மே லாசை கொண்டுநிற்க வந்தமூவர்பாதத்தி லனைவரும் விழுந்தழும்ப டிக்குப் பூணற்கரிய மாட்சியுடையோரெழுந்துபோ யம்ம லையைக்கடந்தகன்றா ரென்க. (௱௪௫)

வேறு.

நாவியின்னறையும்பூம் பொழிலினூற்றமும்
வாவியின்வாசமு மல்கிவாய்தொறு
மேவியின்பெழவெதி ரெதிர்விருந்துசெய்
தேவியின்புறவிவ ரேகினாரரோ.

உரை.—அங்ஙன மூவர்போகையின் மலையிலுவிலும்வா சனையும் பூத்தசோலைகள்செய்யுமணமும் பூந்தடாகங்கள்வீ சும்வாசமுமொருங்குடன்கூடி யவ்வழியெங்குமாசையோ டெதிரெதிராய்வந்து செய்தவினியவிருந்து முன்னிட்டுவீச மகிழ்ச்சியோடிவர்போனரென்க. (௩௪௬)

தேன்விளைமலர்விழி திறந்துநோக்கிய
கான்விளைகாவெலாங் களிப்பவன்றிவர்
தான்விளைதிருவெழத் தகுந்தந்நாடுறி
வான்விளைமகிழ்ச்சியுண் மலியப்போயினர்.

உரை.—அங்ஙன மிவரைக்காண மதுமலராகியகண்ணைத் திறந்து காவெல்லாம்பார்த்துக் களிகூர்ந்திருக்க முன் றாங் கொண்டசெல்வம் வளரும்படிக்குத் தந்நாட்டிற்சென்றுவா னுலகிற்குரியமகிழ்ச்சியோ டன்றவர்போனரென்க. (௩௪௭)

தகைமலிநாடுறித் தளிர்த்தவோகையிற்
பகைமலிகோமக னாளும்பான்மையை
முகைமலிமுல்லையார் மொழியகேட்டனு
மிகைமலிகுசையுள் வெருவினன்ரோ.

உரை.—அங்ஙனம் பெருமைபொருந்திய தந்நாட்டிற் சென்றமையாற் களிகூர்ந்துபோகையிற் றம்மைப்பகைத்த விராசாவாகிய வெரோதன்செத்து அவன்மக னங்கே யா ளாநிற்குஞ்செய்தியைச் சிலவிடையர்சொல்லக்கேட்டுச் கு சைமிகவும்வருந்தி யஞ்சினனென்க. (௩௪௮)

நிலத்திலாளரசனா யாளுநீதியோன்
வலத்திலாள்பவனருள் வழங்குமென்றவிண்
டலத்திலாள்விடைதூ தணுகிச்சாற்றிய
நலத்திலாழ்துயர்வள னயப்பநீக்கினன்.

உரை. — வருந்தியஞ்சினகுசையிடத்து வானரசனாகிய கடவுள்விட்டதூதுவந்து பூவுலகாளுமன்னவரைத் தாளாளா நிற்கு நீதிபரன் வல்லமையினுலிங்கேயாளு மெரோதன்மக

ன் பகையாமலருள்செய்வானென்று சொன்னதிறத்தினாற் றுசைமகிழும்படிக்கு மனதிலாழ்ந்த துயர்களைநீக்கினானென்க. (௱௪௯)

மாலையாய்நயந்துயர் மயங்கிச்சேர்ந்துறக்
காலையாயிரவிகாண் கஞ்சம்போலறச்
சாலையாநாசரேத் தென்னுந்தந்நகர்
பாலையாய்மலர்ந்தெழப் பற்றியண்டினார்.

உரை.— அங்ஙன மின்பந்துன்ப மாலையாகக்கலந்துவரவே நடந்துபோய் விடியற்காலத்தெழுந்த சூரியன்முகத்தைக்கண்டதாமரை மகிழ்ந்து மலர்வதுபோல நாசரேத்தென்னுந் தந்நகரவரகன்றதனாற் பாலையாய்க்கிடந்தபின் னவரைக்கண்டமாத்திரத் தறச்சாலையாய் மலர்ந்தெழும்படிக் கதனைப்பற்றிக் கிட்டினாரென்க. (௱௫௰)

வேறு.

ஆடிப்பலகொடி யாகவசையவு
நேடிப்பலகர நீட்டிவரவென
வோடிப்பலதுய ரோயக்கடிநகர்
நாடிப்பலவர நல்கக்குறுகினார்.

உரை.— அங்ஙன மந்நகருள்ள பலகொடிகளசைந்து மூவரைத்தேடிப் பலகைகளைநீட்டி வரச்சொல்லியழைத்துக்கொண்டிருக்க அங்கேயிருந்ததுயரெலா மோடியொழியவுந் தாம் பலவரங்களை யங்கேகொடுக்கவு மந்நகரைநாடிக் குறுகினாரென்க. (௱௫௧)

வானார்குடைகொடி மல்கப்புடைபுடை
வானார்வருவது காணாரனைவருங்
கானார் துயரிவர் காப்பக்கடிநகர்
கானார்மலரடி கண்டார்புகுதுக.

உரை.— மூவர்வருகையில் வான்றிசையெங்குநெருங்கிக் கொடிகளையுங் குடைகளையுமேந்தி விண்ணவர்சூழவருவ

தை யொருவருங்காணமல் வந்தகாட்டுவழியிற்கொண்டவரு த்தமாற விவர்வாச மதுமலர்ப்பாத மந்நகரிற்புகுவதுமாத்தி ரங் கண்டாரென்க. (௱௫௨)

தேன்றேய்முகைமுகச் செல்வன்புகுதுக
மீன்றேய்மிளிர்முடி வேய்ந்தாள்புகுதுகக்
கான்றேய்கொடிவளர் கையான்புகுதுக
வான்றேய்மகிழ்வொடு கண்டார்வடுவற.

உரை.— அங்ஙன மதுமலர்முகத்தழகுடைய செல்வனாகி யதிருக்குமாரனு மீன்முடியைச்சூழ்ந்த கன்னித்தாயு மலர்க்கொடியேந்தியகுசையு நகரிற்புகுவதுதேவமகிழ்ச்சியோடு தங்குறைதீரும்படிக்குக் கண்டாரென்க. (௱௫௩)

அறமேபுகுதுக வருளேபுகுதுகத்
திறமேபுகுதுகத் தெளிநூல்புகுதுகப்
புறமேயொழிநல மெவையும்புகுதுக
வுறவேவெனநக ரெதிர்கொண்டுற்றுமே.

உரை. — இவரைக்கண்டவளவில் நகரொலாந்திரண்டுகூடி யிவரோடறமு மருளுந் திறமுந் தெளிந்தவேதநூலும்புறத்துநின்ற மற்றநன்மையெல்லாங் கூடநுழையும்படிக்கு வாருமென் றிவர்க்கெதிர்கொண்டு நகரொலாமுழங்கினதென்க. (௱௫௪)

வளைகொள்ளொலியெழ வயிர்கொள்ளொலியெழத்
துளைகொள்குழலொடு தொனியாழொலியெழ
வுளைகொள்முரசொடு பலவுமொலியெழ
விளைகொள்ளொலிநக ரெதிர்கொண்டுற்றுமே.

உரை.—அங்ஙனஞ் சுரிமுகச்சங்கு மூதிடுங்கொம்புந்துளைத்தகுழலுந் தொனிவாய்வீணையு முழங்குவாய்முரசும் பலவுமொருங்குடன்கூடியொலிப்ப வெதிர்கொண்டுவந்த நகரொலாமேகமொப்பமுழங்கினவென்க. (௱௫௫)

துன்னுந்திரையலை தொனியேயெழிதர
மின்னுங்கருமுகி லொலியேமெலிதரப்
பொன்னுங்கெழுமணிப் பொலிவுங்கிளைகட
லென்னுந்திருநக ரெதிர்கொண்டுறுமுமே.

உரை. — அங்ஙனந் திரைகளைச்சுருட்டி யிரைக்குங்கட லு மின்னியிடிக்குமேகமு மிவையிடுமுழக்க மெலிந்துமறை யும்படிக்குப் பொன்னுமணியு நிறைந்த கடலோடொத்த செல்வநகரெதிர்கொண்டு முழங்கினவென்க. (௩௱௫௰௬)

கானீர்மலர்வனங் காய்ந்தாலெனமுனர்
நாநீரழுதுக நம்மைப்பிரிதரப்
போனீர்மெலிபயிர் போற்றுந்துளியென
வானீரருளிட வந்தீருயிரென.

உரை. — எதிர்கொண்டவரெங்ஙனஞ் சொன்னாரென்னி ல், வாசமதுமலர்க்காவு காய்ந்துவாடினாற்போல நாங்கள்வ ருந்தியழாநிற்க முன்னேயெங்களைப்பிரிந்துபோனீரே, இப் பொழுதுகாயும்பயிரைப்பேணவருந் துளிமழையைப்போ லவெங்களுக்குயிராய்த் தேவவரங்களையிடும்படி மீண்டுவந் தீரென்றாரென்க. (௩௱௫௰௭)

எரிசேர்சுரவழி யெஞ்சாமதமிழி
கரிசேர்மலைவழி காவாதுயிரடும்
வரிசேர்வனவழி வந்தேமெலிவில
புரிசேருமதடி கண்டேம்பொலிவுற.

உரை. — கொடுந்தீப்பற்றியெரியும் பாலைச்சுரத்துவழி யும் விடாமதம்பொழியும் யானைகள்திரியு மலைகளின்வழியு ங் காத்தலாற்றாமலுயிரைக்கொல்லும் கொடியவேங்கைகள் குடியாய்நிற்குங்காடுகள்வழியுங் கடந்துவந்து மெலிவொ ன்றின்றி யிந்நகரிடத் துங்கள்பாதத்தை நாங்கள்மகிழ்ந்தெ ழக்கண்டோமே யென்றாரென்க. (௩௱௫௰௮)

பண்டேர்மொழியுறப் பன்மாட்டணிவன
கண்டேரழகுறக் காய்கான்மலர்வன

மண்டேறுமதடி வந்தேவடுவில
வெண்டேரொழுகிடம் விண்ணேரொழுகுவார்.

உரை.— ஆயினு மக்கொடியவழியெலாங் கேடின்றிக்க டந்த ததிசயமல்ல. அதேனெனில், வீணையுந்தோற்தற்குக்கா ரணமாகிய வுங்களினியவாய்மொழிகளைக்கேட்பப் புலிமு தற் பலகொடியமிருகமெல்லா முங்களைப் பணிந்துவருமே, கண்டோர்ந்தின்புறும்படிக் குங்களழகினைக்காணவெரியுங்கா னகமும் விழித்தாற்போல மலருமே, அழகிற்பொலிந்த வுங் கள்மலரடிசேர்ந்த விடமெலாந் தன்குறைதீர்ந்து முன்பே யித்தேரோடினவிடமுதலாய் வானோர்திரியு மிடமாகுமல் லோ வென்றுரெொன்க. (௱௫௯)

நகர்நீத்தகலவு நாமேமெலிவுறி
நிகர்நீத்தரசிடு நீங்காப்பகையொடு
மகர்நீத்தழவழ வாழ்நீரருமகன்
புகர்நீத்துடையினி ரென்றேபுகழுவார்.

உரை. — நீங்களே யிந்நகர்விட்டகன்றவுடனே நிகரொ ன்றின்றி யெரோதன்விடாமற் செய்தபகையினாற் கொன்ற மக்களெல்லாமிழந்து நாங்களே வருந்தி மெலிந் தழாநிற் போம். நீங்களோவெனி லகன்றபோனதினு விதோவாழ்ந் து மகிழும்படிக் கரியவிம்மகனைக் குறையில்லாமல் வைத்தி ருக்கிறீரென்று மிகவும்புகழ்ந்தாரென்க. (௱௬௰)

மீட்சிப்படலமுற்றும்.
ஆகப்படலம் - ௩௰ - ௯ - விருத்தம்
௩௲௱.

முப்பத்தோராவது.

பிரிந்தமகவைக்காண் படலம்.

வேறு.

ஆழிசூழுல கனைத்திலுமாழியொன்றருட்டி
வாழியாவரும் வளம்பெறத்தோன்றினநாத
னேழியரக்கையோ டீங்கிருமருளெழுந்தன்மை
சூழியாப்புள தொடையினுளியாப்புறும்பாலோ.

உரை.— நாசரெத்தென்னுந் தம்மூதூரின் மூவர்சென்ற பின்பு கருங்கடல்சூழ்ந்த பூவுலகனைத்தையு மொருவனுயா ளாநிற்குந் திருக்குமாரன்வந்து சரணெடுத்தமனுவுடல் வளர்ந்துடன் ருன்காட்டினவருளும் வளருநிலைமையே யதனையா ராய்ந்து நான்சொல்லும் பாவின்றொடையினுள்ளடங்குந் தன்மையல்லவென்க. (க)

வளிகொண்டோடிய மரக்கலம்போயினவழியுங்
களிகொண்டோதிமங் ககனமேற்பறந்தனவழியு
மொளிகொண்டோதினு முலகிடைவதிந்தநாளுத
னளிகொண்டோகையி லயர்ந்தவையடைந்தவருண்டோ.

உரை.— காற்றைக்கொண்டு மரக்கலம் நீர்மேற்போனவழியுங் களித்தவன்னங்கள் வான்மேற்பறந்து போனவழியு மிதுவென்றறிந்து சொல்வாரில்லை, கண்டுசொன்னாலு மிப் பூவுலகின் மனிதனுய்த்தோன்றியிருந்தநாளிலே யாண்டவன் றயைபுரிந் தினிதாய்ச்செய்தவற்றை யளவறுத்தடைவாருண் டோ வில்லையென்க. (உ)

மதியெழுந்ததாண் மடந்தையுமலர்க்கொடித்தவனும்
கதியெழுந்தவான் கணங்களுமன்றியீங்குண்டோ
நிதியெழுந்தமே னிலநிகர்சிறந்தவம்மனையின்
பதியெழுந்தகா லாயவைகண்ணியபாலார்.

உரை. — அங்ஙனம் பொன்னுலகொப்பச் சிறந்த வச்சிறுமனையிற் றிருக்குமாரனிருந்தகாலத் தங்கேயானதெல்லாவற்றையும் பிறைமேலெழுந்த பதத்தாளாகிய மரியு மலர்க்கொடியேந்திய வருந்தவனுகியசூசையும் வான்கதிபடைந்து வாழும் விண்ணோர்கூட்டமு மறிவதல்லாதே யிங்கேயவற்றைமதிக்க வல்லவருண்டோ வில்லையென்க. (௩)

ஏமஞ்சானுல கிணைமனைமல்கியகருணை
தாமஞ்சால்பொடு தான்றிலடங்கிலபிரண்டு
நாமஞ்சாலருள் நாடெலாம்வெள்ளமாய்மொய்ப்ப
வாமஞ்சானில மன்னவன்றோன்றினன்புறத்தே.

உரை. — அங்ஙனம் பொன்னுலகொத்த வச்சிறுமனையினிறைந்துசெய்த கருணைவிடுமொளி மிகுதியாகி யதினுள்ளடங்காமற்பெருகிப்பிரண்டு-அவன்றிருநாமத்தருளே வெள்ளமாக நாடெலாமொய்த்துப்பரவும்படிக்குக் கதிருலகாளு மன்னனுகிய திருக்குமார னம்மனைப்புறத்துத் தோன்றினனென்க. (௪)

ஒளிப்படப்படுங் கேவணநிறைமணியொப்ப
விளிப்படப்படு மெங்குறைதீர்ப்பவீங்குதித்தோன்
வெளிப்படப்படும் விழிமழைவழியிழிகருணைத்
துளிப்படப்படுஞ் சுட்டெரிதுகடியரொருங்கே.

உரை. — அங்ஙனங் கல்லுப்பதிப்பவைக்கப்பட்டகுழியைநிறைத் தொளிபடுவதற்குக் காரணமாகிய வயிரமணியைப்போல நிந்தைபட நாங்கொண்டகுறைகளை நிரவித்தீர்ப்ப மனிதனாய்ப்பிறந்தநாதன் புறத்துத்தோன்றித் தன்கண்பட்டவிடத்திலெங்கு மக்கண்ணுகிய மேகத்தின்வழியால் விட்டகருணையாகிய குளுமழைபடவே யெங்கும்பற்றி யு

யிரையெரித்த பாவங்களுந் துன்பங்களு மொருங்குடன்ப
ட்டொழிந்தனவென்க. (௫)

அருளின்முற்றிய பன்னிருவய துளனம்பொற்
பொருளின்முற்றிய புரிசைசூழ்யெருசலநகரிற்
றெருளின்முற்றிய திருமணிக்கோயிருன்செல்ல
விருளின்முற்றிய விரவறக்கதிரோனவெழுந்தான்.

உரை.—திருக்குமாரனெடுத்தவுடலின்முறையா லருளோ
டுநிறைந்த பன்னிருவயதுளனாகிப் பொன்மதில்சூழ்ந்தயெ
ருசலமென்னு மாநகரிடத்துத் தெளியொளிபரப்பின வ
ழகியமணிகளோ டலங்கரித்ததேவாலயத்துச்செல்லத் தா
னெழுந்தருளி யிராவிருள்பட்டற்றொழிய வெழுந்தசூரியனை
ப்போலப் போனனென்க. (௬)

பூவும்வாசமும் பொதுளியதாமமுமணியுங்
காவுநீழலுங் காயமுமுயிரும்போற்பிரியா
மேவுங்கேண்மையின் மிடைந்தகைத்தாதையுந்தாயு
நீவுந்தாளினை நீங்கிலர்பின்செலச்சென்றார்.

உரை.—அங்ஙனந் திருக்குமாரனெழுந்தருளிப்போகை
யிற் பூவோடுமணமு மணியோடுவொளியுங் காவோடுநிழ
லு முடலோடுவுயிருஞ் சேர்ந்ததுபோல வெக்காலத்தும்பிரி
யாதவன்போடு திருக்குமாரனைவளர்த்த கைத்தாதையாகிய
சூசையு மீன்றதாயாகியமரியு மவன்திருப்பாதத்தைத் தடவி
க்கொண்டு நீங்காதவரா யவனைப்பின்செல்ல மூவருமொரு
ங்குட னக்கோயிலிடத்துச் சென்றாரென்க. (௭)

விண்ணுளோரிவண் மிடைந்துறவருத்திசெய்தங்கண்
மண்ணுளோருற வழியெனநின்றவக்கோயில்
புண்ணுளோர்மருந் தொத்தனபுதல்வன்காண்பொழுதிற்
பண்ணுளோதையிற் பனிமொழிமதுவுகப்பணித்தான்.

உரை. — அங்ஙன மூவர்சென்று வானவரிங்கேயிறங்க
வவர்களுக்காசையைவருத்துவித் தங்கேவரன்மேற் பூவுலகத்

தா ரேறுதற்குவழியாகிய வத்தேவகோயிலைப் புண்ணியா
ற்றவந்தமருந்துபோல வவதரித்ததிருக்குமாரன் கண்டவள
வில் வீணைவாய்க்குரலோடு குளறுமொழி மதுவைப்பொழிந்
து சொன்னானென்க. (௮)

வேறு.

மண்மேலடியைவைத் தெற்றைவலக்கையால்
விண்மேல்விருப்பொடு தாங்கவிண்ணவர்வந்
தெண்மேலிழிந்தெழுந் துலவவியாக்கோபன்
கண்மேலறிவிலிங் கேணிகண்டனனால்.

உரை.—திருக்குமாரன் சொன்னகாதையேதெனில், முன்னிருந்த இயாக்கோபென்பவ னிங்கேதானே யோரேணியைக்கண்டான், அதினடி மண்மேலிருக்க நுனி வானமட்டுஞ்சேர்ந் தென்பிதாத்தானே தன்கையின்றிறத்தா லதைத்தாங்கியிருக்க அதிலேவானவர் மட்டின்றியிறங்கவு மேறவு முலவாநிற்கக் கண்கடந்தவறிவுளகாட்சியிற் கண்டானென்க. (௯)

சீர்மீதாடிய காட்சிச்சிறப்புள்ளிக்
கார்மீதாடிய கொடிகொள்கவின்சிகரத்
தேர்மீதாடிய வெரிவாய்மணிகுயிற்றிப்
பார்மீதாடிய படரிவ்வாலயமே.

உரை.— அங்ஙன மவன்முன்கண்ட புகழ்வதற்கரியகாட்சியின் சிறப்பினைக்குறித்து அதனைக்கண்டவிடத்தின் மேகமண்டலங்கடந்து கொடிகளாடாநிற்குஞ் சிகரத்தழகோ டெரிவாய் மணிகளைக்குயிற்றி யித்தேவாலய மிப்பூவுலகில் விளங்கச்செய்யப்பட்டதென்க. (௰)

முன்னானிவையிவண் காண்கான்முற்றுவப்பப்
பின்னாளுனதினத் துதிக்கும்பிள்ளையருட்
டன்னாலுனக்கொளி தளிர்ப்பக்கண்டதெலா
மன்னான்முடிக்குவ னென்றானன்றிறையோன்.

உரை. — முன்சொன்ன-இயாக்கோப னிந்தக்காட்சிகண்டவளவின்முழுதுமனங்களிகூரும்படிக்கு-இனியுன்குலத்திற்

பிறக்கும்பிள்ளையா லுனக்குமிக்கபுகழாக நீ கண்டவதிசயமெல்லா மப்பிள்ளை நிறைவேற்றுவானென் றாண்டவன்சொன்னானென்க. (௰௧)

அன்னபிள்ளை நா னன்னவேணியுநா
னின்னநகரிடை யிறக்குமரந்தானே
சொன்னமுறையிலீ ருலகுந்துடர்ந்தொன்றாய்
மன்னமகிழ்வுற மாள்வேனனென்றான்.

உரை.— ஆண்டவ னியாக்கோபுக்குச் சொன்னபிள்ளை நானே, அவன்கண்டவேணி யிந்நகரிடையினுனிறக்குஞ் சிலுவைமரந்தானே, அங்ஙனமவன்காட்சியிற்கண்டபடி வானுலகும்பூவுலகுமொன்றுபட்டு நிலைகொண்டமகிழ்ச்சியடையும்படி சிலுவையிலுயிர்தந்திறப்பேனென்றான் திருக்குமாரனென்க. (௰௨)

வேலேர்நுழைந்தசொல் விளைத்தபுண்ணிடுநீர்
போனேரிலவயிர்ந் திருவர்புலம்பியழத்
தேனேர்மலரெனச் சிறுவனகைத்துலகம்
வானேர்மகிழ்வதாகாதோ வளர்ந்தென்றான்.

உரை.— திருக்குமாரன்சொன்னவசனம்: வேலைப்போலக் காதினுழைந்து மனதிற்செய்தபுண் ணுமிழ்நீரைப்போல நிகராதுவருந்திய மரியுஞ்சூசையு மிருவர்புலம்பியழாநிற்பத் தேனைப்பொழிய மலர்ந்தபூவொப்பத் திருக்குமாரன் புன்னகைகாட்டி யிப்பூவுலகும் வானுலகொப்பவளர்ந்து மகிழ்ந்தாலாகாதோ வென்றானென்க. (௰௩)

எஞ்சாத்திருவுள மிதுவென் றுளந்தேறி
மஞ்சார்வரையென மணிப்பூம்புகைக்கோயில்
துஞ்சாத்தயைமகற் றொடர்ந்துபுக்குநமை
நெஞ்சாரருளொடு நினைத்தேவேண்டினரால்.

உரை. — இவ்வுலகளிப்பத் திருக்குமாரனிறந்துபடுவது மாறாததிருவுளமென்று மனதிலிருவருந்தேறி மேகஞ்சூழ்ந்

துதவழுமலையொப்ப மணிப்பூம்புகைகள்தவழ்ந்துமூடுமக் கோயிலுள் ளோயாத தயையிற்பொலிந்த தேவபுதல்வனைத் துடர்ந்து புகுந்துபோய் நெஞ்சினிறைந்த வருளாலங்கே மூவருநமக்குவேண்டிக் கடவுளைமன்றாடினரென்க. (௰௪)

வேறு.

விரிந்தனகடற்றிரை மயங்கிவீழ்ந்தெனத்
திரிந்தனமனுத்திரள் செறித்துப்போகையி
லரிந்தனமனத்தரு ரழுங்கவாங்கிவர்
பிரிந்தனனியாண்டையும் பிரிவிலானரோ.

உரை.—அங்ஙன மூவர்கோயிலிலேவேண்டினபின்பு பெருங்கடல்சுருட்டியதிரைகள் தம்முள்மயங்கி யொன்றின்மேலொன்றுவிழுந்து நெருங்கினதுபோல வன்றக்கோயிலைச்சேவிக்கத் திரளாய்ச்சாய்ந்த மனுக்கூட்டத்தையழுத்துக்கொண்டுவருகையிற் சூசையுமரியுந் துன்பத்தாலறுத்தமனதின்மிகவும்வருந்துவதற்குக் காரணமாக வெங்கும்பிரியாத்திருக்குமார னங்கேயவரைவிட்டுப் பிரிந்தானென்க. (௰௫)

ஏர்வழிமாதருள் ளிவள்சென்றுடவர்
சேர்வழியருந்தவன் செல்லவேறுபோ
யோர்வழிசேர்ந்தபின் னுயிரெங்கெங்கென
நீர்வழிமுகங்கெட நேடியஞ்சினர்.

உரை. — அவன்பிரிந்தவகையேதென்னில், அழகியமாதரோடு மரியென்பவளு மாண்மக்களோடு சூசையும் வேறுவேறுய்ப்போ யொருவழியிலிருவர்கூடினபின்பு நமக்குயிராகியமகனெங்கே யிவனும்வளுந்தேடக்கண்ணீர்விட்டுமுகத்தழகொழிய வெருவிநின்றாரென்க. (௰௬)

உன்னிடையிலைகொலென் றிவளுமோதினுள்
நின்னிடையிலைகொலென் றவனுநேடினு
னென்னிடையிலையென விருவர்சாற்றினர்
மின்னிடையசனிபட் டெனவெந்தேங்கினர்.

உரை. — திருக்குமார னுன்னேடில்லையோ வென்றனள் தாயு முன்னேடவன் வரவில்லையோவென்றனன்குசையு மத ற் கிருவரில்லையென்க மின்னிவிழுந்தவிடிபட்டாற்போல வு ளம்வெந்தேங்கி நின்றாரென்க. (௰எ)

பத்தியமணிவிழப் படர்ந்தகேவண
மொத்திய வுயிர்மணி மகனெளித்தலா
னித்தியநயநல நீங்கிவாடினர்
சத்தியவுயிரில்வெற் றுடம்பின்றன்மையார்.

உரை. — அங்ஙன நிரைபடப் பத்தியாய்வைத்த மணிகள் கழன்றுவிழுந்தவளவி லவற்றின்குழிகள்தோன்றின சிறப்பி ன்மைபோல-அவருயிர்மணியாய்நின்ற தேவமைந்தன்பிரிந் ததனு லவன்விளைவித்த நித்தியவின்பமிழந்துவாடி யப்பாற் றண்டிய வுயிரில்லாதவெற்றுடம்பினராயினரென்க. (௰அ)

குன்றொளித்தகல்கதி ரொத்தகொள்கையா
னன்றொளித்தவன்றனைத் தேடற்காங்குவேண்
டென்றொளித்தனவுயி ரியாக்கைமீண்டுறிக்
கன்றொளித்துளிகரை கறவைமானினர்.

உரை.—அங்ஙன மலையிலொளித்தசூரியனைப்போலத் திரு மகனன்றொளித்தமையா லிருவர்மனமிருண் டுயிரில்லாதவெ ற்றுடம்பாகநின்றபின்ன ரவனைத்தேடுதற் குயிர்வேண்டுமெ ன்று முன்னொளித்தவுயிர் மீண்டவருடலினுட் புகுந்தவளவி ல்முன்னமுழாமல்மயங்கிநின்றவ ரொளித்ததன்கன்றைத்தேடு ங்கறவைபோலக் கனைந்து கலங்கியழாநின்றாரென்க. (௰௯)

செல்லகத்தனைத்திலுஞ் சென்றுதேடினர்
தொல்லகத் துறவினோர் தொடர்ந்துநாடினர்
வல்லகத்துலகமாள் மகவைக்காண்கிலார்
கல்லகத்தாருமுட் கலங்கவிம்மினர்.

உரை.— அங்ஙன மீண்டுயிர்வந்தவுடனே முன்னடந்தவ ழியெலாந் திரும்பிவந்துதேடினதொழியப் பழையவுறவின்

முறையாரிடத்துந்தேடினார், அளவில்லாத திறத்தைக்கொண் டுலகெலாமாளாநின்ற தந்திருக்குமாரனையெங்குங்காணாமையாற் கல்லுநெஞ்சினர்முதலா யிரங்கிக்கலங்கும்படிக்கு விம்மியழுதாரென்க. (உ௰)

தாயுநீசேயுநீ தவறிநாஞ்செயுந்
தீயுநீபொறுப்பவன் சிறுவவெம்விழி
பாயுநீருடனுயிர் பறிப்பவோவிதோ
போயுநீயறாத்துயர் புகுத்தினாயென்பார்.

உரை. — அங்ஙன மிருவர்புலம்பித் திருமகனை நினைத்துச் சொல்வார்: நீயேயெங்களுக் கொருதா யொருபிள்ளை நீயே, தவறி நாங்கள்செய்யும் பிழைகளைப்பொறுப்பவனீயே, இதோமகனே நாங்கள் நீங்காதழுங்கண்ணீர்வழியாகக் கூடவெங்களுயிரை நீபறிக்கவோ வின்றொளித் தகன்றுபோய்த் தீராததுயர்களை யெங்கள்மனதிற் புகுத்தினாயென்பாரென்க. (உக)

எல்லையிலெங்கணு மிருந்தடங்கிலோ
யொல்லையில்வரும்பொழு தொன்றிலோயெலாந்
தொல்லையிலறிந்துளோய் துதைந்தவெந்துயர்
வல்லையிலறாதெமை மறந்தியோவென்பார்.

உரை. — மட்டிலனாகி யெங்குநிறைந்தவனாகி யெவ்விடத்திலு மடங்காதவனாய்த் தம்மைத்தொடர்ந்துவந்தோடு நிகழிறப்பெதிரென்னு முக்காலங்களைக்கடந்தவனாகி யெல்லாவற்றையு முற்காலத்தறிந்தவனாகிய திருமகனே யுன்னா னாங்களடைந்த வருத்தமறிந்து நீயதை யுடனேயாற்றாதபடிக் கெங்களை மறந்தாயோ வென்பாரென்க. (உஉ)

இனையவும்பலவுமோர்ந் திரிந்துறுந்துயர்
கினையவும்பொருதொளி திணையிறாழ்ந்திருள்
புனையவுமிராவெலா மிசலிப்பொங்கலை
யனையவும்படவள ரனாரில்விம்மினார்.

உரை. — இவையும் பலவுநினைத்துச்சொல்லிக்கொண் டிருவரெங்குந்திரிந்தடைந்ததுயர்மிகுதியை யாராய்ந்து மன

திற்பொறுக்கமாட்டாததுபோலச் சூரியன் கடலின்முழுகிப் பேரயிருளைமேற்போர்த்திருக்க வீரவெலா மவர் தம்முள் ளிசவிக்கொண்டு பெருங்கடல்நிகராத தம் வருத்தத்தைச் சொல்லி விம்மியழுதாரென்க. (௨௩)

வேறு.

கருணாகரனேகளியாலயனே கவினூர்மகனே
மருணானூர்மாகடலில்வருந்தக் கரையேற்றிடநீ
யருணாடியகன்றனைகின்றகமே யருளாய்கொல்லோ
தெருணாயகனேயென்றழுதம்பர வருவிக்கண்ணாள்.

உரை.—தாயுஞ்சூசையுந் தம்முள் ளிசவிக்கொண்டு புலம்பினமுறையிற் றாயே தொடங்கினதெங்ஙனமென்னில், கருணாகரனே பேரின்பமிருக்குந் தேவாலயமே யழகிற்பொலிந்த வென்மகனே நானுண்மயங்கித் துன்பக்கடலிலமிழ்ந்தி வருந்துந்தன்மைக்கிரங்கி யென்னைக்கரையேற்றத் தயைபொருந்தி நீயகன்றிருக்கு மிடத்தைக்காட்டாயோ வெல்லாவற்றையுந் தெளிவோடறிந்தநாயகனேயென்று ளழுதுவற்றாத வருவிக்கண்ணாளாகிய மரியென்பவளென்க. (௨௪)

இறந்தான்கொல்லோமுதலீறில்லோன் றனதார்தயையை
மறந்தான்கொல்லோமறவாவன்போன் கடல்சூழ்வையந்
துறந்தான்கொல்லோவுன்னையென்னைத் துறந்தோனிதுவே
யறந்தான்கொல்லோமகனேயறைகென் றழுதான்வளனே.

உரை.— ஆதியந்தமில்லாததிருக்குமார னிப்பொழுதிறந்தானோ? மறவாதவன்புடையோ னின்று தன்றயையை மறந்தானோ? கடல்சூழ்ந்த விப்பூவுலகினைவிட்டகன்றானோ வுன்னையு மென்னையு மகன்றுவிட்ட தேவகுமாரன்? ஆயினு மிது வறந்தானோ? மகனே! நீசொல்வாயென் றழுதான் சூசையென்க. (௨௫)

மெய்யார்தவமேதிருவின்றிருவேயென்போன்வெந்தீ
மொய்யார்வனமேமுடுகி முனியாயினனோவென்றாள்

பொய்யார்புரையே துடைப்பப்பொன்றல்காதவித்தோ
னையாருயிரோயவனின்றளித்தான்கொல்லோவென்றான்.

உரை.— உடலைவாட்டுந்தவமே செல்வத்துட் செல்வமெ
ன்று சொல்லிக்கொண்டிருந்ததிருக்குமாரன்றானே செந்தீ
ப்பற்றியெரியும் வனத்திற்போய் முனியானானோவென்றா
ள்மரியே. பொய்விளைவித்த மனிதர்பாவங்களைத்துடைப்பத
ற்குத் தானிறந்துபடவாசையின்று தன்னழகியவுயிரை
த் தந்திறந்தானோவென்றான் குசையென்க. (௨௬)

தேருவன்போன்றேறச்சிலுவைகொணரவானோ
ராருமொய்ம்பானீங்காண்டோச்சியகோவிதுவே
மாறுநலஞ்செய்யிதின்மேன்மாய்ந்தாலல்லால்வாழ்நா
ளீறுகவருந்தினனேயென்றானன்றேவென்றாள்.

உரை.— நாமீண்டிந்நாட்டிற்குவருகையிற் றிருக்குமா
ரன்றேறுமற் கொண்டவாசையையாற்றும்படிக்கு வானவ
ரொருசிலுவைகொண்டுவந்து காட்டினவளவி விதேயசை
யாததிறத்தைக்கொண்டு நானிங்கேயாண்டு கையிலோச்சுஞ்
செங்கோலென்றுமெனக்குமாறுதவின்பற்தரு மிச்சிலுவை
மேலிறந்தாலொழிய மகிழ்ச்சியொன்றின்றி வருந்தாநிற்
பேனென்றானல்லோவென்றாள்மரியென்பவளென்க. (௨௭)

வையத்தடிவைத்துயர்வான்மன்னன்கையிற்சாயப்
பொய்யற்றவருந்தவன்மூன்பொலியக்கண்டவேணி
யுய்யத்தரணிநானேயுலக்குஞ்சிலுவைக்கொப்பாய்
மெய்யற்றிவணேவிளிவேனென்றானன்றேவென்றான்.

உரை.— மீளவும் பொய்யாதவருந்தவனாகிய-இயாக்கோ
பென்பவன் பூமியிலடிவைத்து வான்மேலிறைவன்கையா
னுனியிற்றாங்கப்பட் டுயர்ந்துதோன்றக்கண்டவேணியேநா
னுலகமிரட்சிக்க விறக்கும்படிக்கு வைத்திருக்குஞ்சிலுவைக்
கிணையதாகி நானேயிந்நகரிடத்திற் சாவேனென்றானல்லோ
வென்றான்குசையென்க. (௨அ)

பற்றாப்பழையம்பழியைப்பரிவான்படுவாயென்னுக்
கற்றாரணங்காட்டியகாட்சியறிந்தன்றேவுன்னைப்
பெற்றாயினதேபிரியாவவ்போய்ப்பெயராமுன்வந்
துற்றாசியெனக்குரைத்தாலாகாதேயோவென்றாள்.

உரை. — யகைவராகியபசாசுகள் மனுக்குலத்தார்மேல் வைத்தபழம்பழியைத்தீர்ப்ப நீயேபாடுபடுவாயென்று வேதவுதாரணங்களால் நானேயறிந்தல்லோ வுன்னைப்பெற்றேன், ஆகையாற் பிரியாவன்புடையமகனே! சாகப்போவதற்கு முன்னேவந் தெனக்காசீர்வாதந்தந்துபோகி லாகாதோவென்றாள் மரியென்பவளென்க. (௨௯)

இன்றேவன்றேவென்றேவொருநாளெம்மைக்காக்க
மென்றேயொன்றெள்ளுடல்வீவுறவேண்டியதேவிருவர்க்
கொன்றேயொன்றாத்தனவன்புளதேல்மகனீபிரியா
துன்றேளென்றேள்மரமொன்றுறலாகாதோவென்றான்.

உரை. — இன்றோ நாளையோ வெப்பொழுதாயினு மொருநாள் நம்மையிரட்சிக்கப் பூமடலொத்தவுன்னுடல் பாடுபட்டிறத்தல்வேண்டினமகனே யுனக்கெனக்கொத்த வன்பு நமக்குண்டாகி னின்றேளுமென்றேளு மொருப்பட வொருமரத்தி லறையுண்டாலாகாதோவென்றான் சூசையென்க. (௩0)

மடவாரிலனந்தமலிந்துமகிழ்ந்தமடந்தையெனத்
தடவானிலுயர்ந்ததளங்கடணிந்துமொழிந்தனிரோ
நடவாமுறையானடலைநரலைநடுவேயடியாள்
கடவாமலலைந்துகலங்குபகண்டிலிரோவென்றாள்.

உரை. — உயர்ந்தவான்மேல்வாழுந் தளங்களாகிய வானவரே! நீங்களேவந்து களிகூர்ந் தெல்லாமாதருள்ளுமிக்கசெல்வி யென்னைச்சொன்னீரல்லோ, இப்பொழு தோர்நிகரின்றித் துன்பக்கடலினடுவே யகப்பட் டதனைக் கடக்கமாட்டாம லடியாளலைந்து கலங்குந்தன்மையைக் காணீரோவென்றாள் மரியென்பவளென்க. (௩௧)

அஞ்சேரஞ்சீரடையித்தலமண்டியகாலடியாற்
கஞ்சேலஞ்சேனயமாமெனவாடினவானவனே
யஞ்சேழஞ்சேழ்கடலாறெவ்வாதவனூர்க்கடலாழ்ந்
தஞ்சேறெஞ்சாநயனிங்கணகன்றதுவேயென்றான்.

உரை. — நீரின்மிகுதியாலழகுஞ் செல்வமும்பொருந்தி யவிந்நாட்டிலண்டினபொழு தஞ்சாநின்ற வடியாற் கஞ் சாதஞ்சாதே யிதிலேயுனக்கின்பமேவிளையுமென்று சொன் னவானவனே யிதோ வெழுபதுகடல்களொன்றாய்க்கூடினு நிகரப்படாத துன்பக்கடலிலமிழ்ந்தி யெனக்கழகுமின்பமு மாய்நின்ற தேவகுமாரனிங்கேயென்னைவிட்டுப்போனனெ ன்றான் சூசையென்க. (௬௨)

என்றானிவனுமென்றாளவளுமென்றோளென்றுங்
கொன்றாவுரைகொண்டுபுலம்பினருட்டுயர்கண்டதனாற்
குன்றாநயவானவருங்குழைந்தாகுவித்தாலெனநின்
றன்றாரிடராறவிவற்குமவட்குமறைந்தனரால்.

உரை. — அங்ஙனஞ் சூசையுமென்றாளுடையமரியு மிவ ற்றேடுபலவற்றையுஞ்சொல்லித் திருக்குமாரனிறந்தானென் று மெய்க்கொவ்வாதநினைவோடு மிகவுமிருவர்வருந்தினதை வானவர்கண்டு தாங்கள் கெடாதபேரின்பமுடையாராயினு ங் கூடவருந்தினாற்போலத்தோன்றி யன்று முற்றியதுயர்க ளையாற்றச் சூசைக்குமரியென்பவட்கு மிவற்றைச்சொன் னார்கள். (௬௩)

தூயரோனருரோனுளமாழ்ந்துறுதொன்னயமாக்கடலிற்
பெயரோல்பெயரோல்பெயராப்பெருமைத்தனையன்பிரிவால்
மயரோன்மயரோன்வளனேமரியேமருளெஞ்சுருகா
தயரோலயரோல்மகன்மாண்டலன்மாண்டலனென்றறைந்தார்.

உரை. — அன்றுவானவ ரவர்க்குச் சொன்னதேதெனில், மரியே சூசையே! நீங்கள் துக்கமுற்றுத் துன்பமுமடைந்துவரு ந்துவானேன்? உங்கள்மன முன்னினிதாய்முழுகி வாழ்ந்திரு ந்தபேரின்பக்கடலைவிட்டுப் பிரியவேண்டாம், கெடாதபெ

ருமையுடையதிருக்குமாரன் பிரிந்ததனால் மயங்குவானேன்? நெஞ்சுருகமயங்கிவருந்தத் தேவையில்லை, உங்கள்குமாரனிற ந்தவனல்லவல்லவென்று சொன்னாரென்க. (௫௪)

ஐயன்போகவவரொய்தியவாகுலமச்சொல்லா
லையம்போகத்தணிவாமெனினுமன்றுங்கிரவி
மையல்போகவினுமனமேவிளக்குஞ்சுடரா
மெய்யன்போகவொளிபோய்விழிபோயிற்றென்றழுதார்.

உரை. — அங்ஙனந் திருக்குமாரன் பிரிந்ததனால் வந்த துன்பமே யவன்செத்தானோவென்னுஞ் சந்தேகம் வானவர் சொன்னதன்மையாற்போய்த் தணிந்தாலு மப்பொழு தங்கே சூரியனிருளை நீக்கி யுதயஞ்செய்தாலு மெங்கள்மனத்தைவிளக்குஞ் சுடராய்நின்ற தேவகுமாரன்பிரிந்துபோகையி லெங்களுக்கொளியும்போ யிருகண்ணும்போயின வென்றழா நின்றாரென்க. (௫௫)

வேறு.

செம்மாமணியிற் செல்வனைத்தாய்தேடியக
லம்மாநகர்க்கண் ணழுதன்றேயலையுங்காற்
பைம்மாமலர்செய் காவழியிற்டரிவோங்கத்
தம்மாமகனைத் துருவுகின்றான்றவவல்லான்.

உரை.—அங்ஙனம் விடிந்தவுடனே தாயானவள் திருமணியொத்த செல்வனாகிய திருக்குமாரனை யம்மாநகரிடத்தெங்குந் தேடிக்கொண்டு திரியுமளவிற் றவத்தின்வல்லோன் சூசையந்நகர்க் கப்பாலேபோய்ப் பூத்தகாவெங்கு மவனைத் தானுந்தேடினானென்க. (௫௬)

புள்ளும்புலம்ப வண்டுமெழப்பூவுறைய
விள்ளுங்காவும் வினைகொண்டுண்மெலிந்திரங்கக்
கொள்ளுந்துயரிற் கண்டதெலாங்கொழுந்தவன்று
னுள்ளுந்தன்மைத் துருகியழவினவினனே.

உரை. — அங்ஙனஞ்சூசை காவழியேபோய்ப் புலம்பியழுததன்மைத்துப் பறவைகளும்புலம்ப வண்டுகளுமழ மலர்

ந்தபூவுநொந்துவாடப் பூத்தகாவெலாம் விலைகொண்டாற்
போல மெலிந்தவற்கிரங்கத் தானு நினைத்தவன்பின்றன்
மையா லுள்ளுருகியழாநிற்கக் கொண்டதுயர்களையாற்றக்க
ண்டதெல்லாத்தையுங் கேட்டுத்திரிந்தானென்க. (௩௭)

என்றன்சிந்தை போனிலையாதிரிசிந்தே
நின்றன்சிந்தை போற்கடறானேடியலைந்
தின்றென்சிந்தை யெஞ்சவிவணருட்கடலோ
னுன்றன்சிந்தை யெழவுற்றானோவென்றான்.

உரை. — அங்ஙனஞ்சூசை யோராற்றைக்கண் டதனைக்
கேட்டுச்சொன்னான்: நானேசிந்தையி லலைவதுபோல நிலை
யொன்றின்றியலைந்துதிரியுமாறே நீ கருங்கடலைநோக்கிப்
போவதுபோல நானுமோர்மாகடலைத்தேடியலைந்து நான்
மனநொந்துமெலியவு நீ வளர்ந்தோங்கவு மவ்வருட்கட
லோ னிங்கே வந்தானோவென்று கேட்டானென்க. (௩௮)

கண்ணோமணியோ கமழ்மதுப்பெய்மலர்க்காவே
பண்ணோதேனோ பணிந்திணையாக்கனிசொல்லா
னுண்ணோயுருக்கென் னுளம்வாடவருட்பூத்து
விண்ணோர்மலர்போல் வேய்ந்தனனோவிவணென்றான்.

உரை. — அப்புறம்போ யொருபூங்காவனத்தைக்கண்டு
சொன்னான்: கண்ணைப்போலவு மணியைப்போலவுந்தோன்
றி வாசமதுமலர்பூத்தபூங்காவனமே! பேசும்வீணையு மினிய
மதுவுமொவ்வாமையாற் பணிந்துவணங்கு மினியசொல்லை
யுடையான் மனதி னுண்டநோய்பொறாமல் வாடும்படிக்
கு வான்வாழ்மலரொப்ப வருளைப்பூத்திங்கே வந்தானோவெ
ன்றானென்க. (௩௯)

என்னெஞ்சொப்ப விருபொழுதுமிருட்பொழிலே
புன்னெஞ்சொப்ப வுயிரொல்லாநிழற்றியருள்
தன்னெஞ்சொப்பத் தற்றோம்புந்தயைப்பெருமா
னின்னெஞ்சொப்ப நிறுத்தினையேற்காட்டென்றான்.

உரை. — அப்பாலொரு நிழற்சோலையைக்கண்டு சொன்ஞன்: என்மனம்போலப் பகலிராவு மிருண்டுகிடக்குஞ் சோலையே! உன்கருத்துப்போல வெல்லாவுயிர்க்குங் குளுநிழல் செய்து பிறராலளவறுக்கப்படாமற் றன்னெஞ்சளவாகமட்டில்லாதவருளைத் தந் துயிர்களையோம்புந் தயையி னரச னிங்கேவந்தவிடத் துனக்கொத்தானென் றவனை நிறுத்திஞயாகி லெனக்குக் காட்டுவாயாகவென்றுனென்க. (௪௰)

இரவிற்குன் றா மிதழ்க்கஞ்சமணிதடமே
யிரவிக்கொப்பா னிருபொழுதும்மலர்மரைத்தாள்
விரவிற்கிங்கண் வைத் துன்னைமேவியருட்
புரவித்தெண்டீம் புன லுண்டாஞேவென்றுன்.

உரை. —பின்பொரு பூந்தடாகத்தைக்கண்டுசொன்ஞன்: இராவிடத்தெழுந்தமதிமுன் றேற்றுக் குவியுந்தாமரையணிந்தபூந்தடமே! சூரியஞெத்தவடிவாஞெருவன் மதிமுன்றேலா திராப்பகலென்றிருபொழுதினு மலராநிற்குந் தன்றிருப்பாததாமரை யிங்கே சீக்கிரத்தில்வைத் துன்மேலிரங்கி யுனக்குத்தயைசெய் துன் றண்ணீராத்தானே யுண்டுபோஞேவென்றுனென்க. (௪௧)

மனமொத் துயர்மா மலையே நீதலையிலணி
கனமொத்திருளென் மனங்கரியக்கனைத்திழியுன்
புனமொத்திழிசீர் துறந் துன்கண்புக்கனஞே
வினமொத்திலனே ரிலஞேவொன்பானென்றுன்.

உரை. —அங்ஙன முயர்ந்தமலையைநோக்கிச்சொன்ஞன்: பெரியோர்மனத்தைப்போல வுயர்ந்தமாமலையே! உன் னுச்சிமேலணிந்த கரியமேகங்களைப்போல வென்மனமிருண்டு கருகுதற்குக்காரணமாக வுன் னுச்சியினின் றிழிந்தொழுகு மருவியையொப்ப விரைந்திழிந்தோடு மிச்செல்வங்களைவெறுத்துத் தவத்தைமுடிப்ப வினமு மிணையுமின்றி யோரொன்பா னுன்குகைக்குள்ளே புகுந்தாஞேவென்று கேட்டானென்க. (௪௨)

பொன்னார்சிறகாற் புட்கரஞ்சேர்புட்குலமே
யென்னாருயிரே யென்னெஞ்சத்தாளரசே
யொன்னார்மனநேர் வனஞ்சேரவுற்றவழி
யன்னாருட வறையீரோவெனக்கென்றான்.

உரை. — அங்ஙனம் பறவைகளைநோக்கிச்சொன்னான்: அழகியசிறகுகளைக்கொண் டாகாயத்திற்பறக்கும் பறவையினமே! எனக்குயிரு மென்னெஞ்சிலிருந்தாளுமரசனுமாய் நின்றோன் பகைவர்மனத்தைப்போலச் சுடும்வனத்திற்செல் லப்போன வழியேதென்று நானவனைத் தேடும்படிக்குச் சொல்லீரோ வென்றானென்க. (சரு)

குயிலேகிளியே வெண்குருகேகோவனமே
மயிலேயினத்தென் மனங்குளிர்ப்பவன்றான்கொள்
ளெயிலேவனமே யியம்பீரோற்போயவற்கே
துயிலேயிலநான் றுஞ்சுவனென்பீரென்றான்.

உரை. — மீளவுஞ் சிலபறவைகளைநோக்கிச்சொன்னான்: குயில் கிளி வெண்ணாரை யரசன்ன மயிலென்னப்பட்ட பற வைகளே! எனக்கிரங்கி யென்மனங் குளிரும் படிக்குச் சொன்னநாத னிருக்குமூராகிலுங் காடாகிலுஞ்சொல்லமா ட்டீராகில் நீங்களேயவனையணுகி நான்றுயிலுமிழந் துயிரு மிழந் தவனைக்காணேனாயி னிறப்பேனென் றவற்குச் சொ ல்லக்கடவீரென்றானென்க. (சகூ)

கிளியோடன்ன மழக்குயில்கள்கெழுமியழ
வளியோடலரு மழப்புனலும்விம்மியழ
வளியோடங்கா வருந்தியழவளனழுவான்
களியோடகன்றான் காவலனென்றேதையினான்.

உரை.— அங்ஙனஞ் சூசையழுதுகொண் டென்னைக்காத் தநாதன் மகிழ்ச்சியெல்லாங் கூட்டிக்கொண்டகன்றுபோ னானென்று புலம்பிச்சொல்லுமோசையினாற் கிளிகளுமன் னங்களுங் குயில்களும் வண்டுகளு மலர்களு மாற்றுப்புனலு ங் காற்று மற்றக்காவெலாங் கூடவருந்தியழாநின்றன வெ ன்க. (சுW)

பொய்யாவரத்தோன் போய்ப்பூங்காத்திரியுங்காற்
கையானையுங் கஞ்சமெனவாடியதா
யுய்யாவணைத் துருவிநகர்த்தெருவெல்லா
நையாவன்பா னாடிக்காணாதழுவாள்.

உரை. — அங்ஙனம் பொய்யாதவரத்துயர்ந்தகுசை காவழியெங்கும் புலம்பித்திரியும்பொழுதே கையான்முறுக்கின விளந்தாமரைவாடினாற்போல மெலியாநின்றதாயு மினியுயிர்பிழைக்குந் தன்மையில்லாளாகி மெலியாதவன்பின்றிறத்தா லந்நகருள்ளதெருவெலாந்திரிந்து திருக்குமாரனைத்தேடிக் காணாமையால் மிகவழாநின்றாளென்க. (௪௬)

வேறு.

படமேயெழுதிப்படர்பங்கய நீண்
டடமேயணுகித்தடமேவியபூ
வடமேயிணையாமகவுள்ளினளவ்
விடமேமதுவின்னிசைதாயறைவாள்.

உரை.— அங்ஙனந் தாயானவள் நகரிடத்துத்திரியும்போதெழுதப்பட்டதொருபடமேபோல வெங்கும்பரவின செந்தாமரைபூத்ததடாகத்தருகேசென்றனள், அத்தடாகம் பூண்டபூவணியொத்ததன்மகனை நினைத்துக் கரைமேலிருந்து மதுவினுமினியவிசைகளோ டிவற்றைச் சொல்லத்தொடங்கினாளென்க. (௪௭)

தேன்றோய்மலர்நீட்டியசேடலவிக்
கான்றோய்தடமேகளிகூர்ந்துனைநேர்
வான்றோயெழில்தோய்மதுமாதிலபூத்
தான்றோயெனதுட்டடமோங்கினதே.

உரை.— தாயானவட் குளத்தின்கரைமேனின் றிங்ஙனஞ்சொல்லிப்புலம்பினாளென்னில், எழுதப்பட்டாற்போலப் பூத்தமதுமலரா லழகுபெற்றுக் கமழுந்தடாகமே யுன்னைப்போல நாளுங்களிகூர்ந்துவப்ப வானுலகுரிய வழகுடைய

தாகி மதுமாருத வொருதேவமலரோ யென்னெஞ்சிடத்திற்பூ
ப்ப வென்னுள மொருபூந்தடாகமாகவோங்கிவாழ்ந்ததென்
றுளெனக.   (௪௮)

பூமாறினதோபொருவாப்பகையோர்
தாமாறிலதாதெழில்கொய்தனரோ
தேமாறிலபூவிலதேம்பியுளம்
வேமாறிலவெப்பொடுகோய்ந்ததுவே.

உரை.—அங்ஙன நானிருக்கக்கொள்ள வந்தமலர்தான்மா
றினதோ மாருதமலலாப் பகைவர்வந்தறுத்தாரோ தெரியப்
படாமல் வாசங்கெடாததிருமலரில்லாம லென்னுளம் வே
கம்விடாத நெருப்புட்பற்றியெரியக் காய்ந்ததென்று ளெ
ன்க.   (௪௯)

துளிமாரியிழந்துளிகாய்சுனையோ
நளிவாசமிழந்தழிநைநனையோ
களிநானுளிழந்தயரக்கடிதிவ்
வுளிநீயுமிழந்துறைவாய்மகனே.

உரை. —அங்ஙனமகனே! மழைத்துளியின்றிக் காய்ந்தகு
ளத்தைப்போலவுங் குளிர்ந்தவாசனையின்றி வாடினமலலாப்
போலவு நானுமுட்களிப்பின்றி வருந்துதற்குக்காரணமாக நீ
யேயிவ்விடம்விட் டென்னைப் பிரிந்திருப்பாயோ வென்று
ளென்க.   (௫௰)

அன்னச்சிறைநீயலர்தாமரை நா
னென்னச்செறியின்பொடிருந்தனமே
முன்னச்சியதேன்முறுகில்லதென
மன்னச்சவியோய்வனமேகினையோ.

உரை.—மகனே! நீயோரன்னமு நானோர்தாமரையுமாக
மிக்கவின்பத்தோடு பிரியாதிருந்தோமல்லோ? ஆயினுமுன்
னீ விரும்பின மதுவின்வாசனையில்லாததென்றோ விட்டொ
ழு தழியாதவழகுடையோ யென்னைவிட்டு வனத்திற்போனு
யென்றுளென்க.   (௫௧)

இன்பீரமருந்தியிருந்தனையே
யன்பீரமகன்றுடகன்றனையோ
முன்பீரமுலர்முளரித்துணரோ
பின்பீரமிலாததுபோர்குவதோ.

உரை. — மகனே! முன்ன ரின்பமாயென்னிடத்திருந்தா யே யிப்பொழு தன்பினீரமில்லாததென்றேபோனாய்? ஆயி னு முன்னே நீரில்வாழ்ந்ததாமரை யந்நீர்போ யீரமில்லாயி னுமவ்விடம்விட்டகலுமோ வில்லையென்றுளென்க. (௫௨)

மடலொத்தடிவாடநடந்துசெலே
லடலுற்றெனதாவியிலாண்டுறைவாய்
கடலொத்துயிர்கெட்டனகாலலைகொள்
ளுடலொத்தினிநானுளையப்பெயரேன்.

உரை. — மென்மலரிதழினு மெல்லியவும் பூவடிகள் வா டவகன்றுபோகாதேமகனே! என்னுயிரிடத் துன்றிறத்தை க்கொண்டாண்டு வீற்றிருக்கக்கடவாய். இங்ஙனஞ்செய்யாம லுயிர்கெட்டகன்றவளவிற் கடலைப்போலொருநிலையுமின்றி யுடலேவருந்துந்தன்மையா னனுமுளைந்து வருந்துதற்குக் காரணமாகநீபிரிந்துபோவானே னென்றுளென்க. (௫௩)

தருமத்தழலுந்தகுதித்தருமோ
வுருமத்தழலுந்தழலொப்பறநீ
மருமத்தழலும்வகைசெய்தொடிதோ
விருமத்திரிகொண்டெரிபற்றியதே.

உரை. — சுடுங்குணந் தருமத்துக்குரியதோ? ஆயினு நீ தருமநாதனுகி யுருமத்திலெரியும்வேகமு நிகராதநெருப்பி னை யென்னெஞ்சிடத்து நீயேமூட்டுவித் திதோ விரண்டுது ருத்திகொண்டூதினற்போல வுள்ள மிக்கழல்பற்றி யெரியுமெ ன்றுளென்க. (௫௪)

வெண்ணைக்கிரிவெந்தனபோலழுதென்
கண்ணைக்கிழிநீர்கடிதோடநெடும்

புண்ணைக்கிழிதீயையுளுற்றியபின்
விண்ணைக்கிழிமின்னெனவேகினையோ.

உரை.—வெண்ணெயாற்செய்தமலைவெந்துருகின்றதுபோ
ல நானுமுருகியழு திருகண்ணைப்பிளந்து திரளாய்நீர்விழுந்
தோடும்படிக் கென்னெஞ்சிற்செய்த புண்ணைக்கிழித் துள்
ளே கொடுஞ்செந்தீயைப் புகுத்தினபின்பு மேகத்தைக்கிழி
த்துத் தோன்றிமறையுமின்னலைப்போல நீயுமறைந்துபோ
னாயோவென்றுகொள்க. (௫௫)

இன்போதமமிழ்ந்தியிருந்தனகா
லுன்போதவியாதெரியென்னுளமே
துன்போதமுறிச்சுழியின்முழுக
வன்போதமகன்றேகன்றனையோ.

உரை.— முன்னாயிருவ ரின்பக்கடலிலமிழ்ந்தியிருந்தகா
லமிப்பொழுதுநினைக்கும்போ தவியாமற்பற்றியெரியு மெ
ன்மனமே துன்பக்கடலின் சுழியிற்பட் டமிழ்ந்திக்கிடக்கு
ம்படிக்கு நீயன்பில்லாமலகன்றுபோனாயோ வென்றுகொ
ள்க. (௫௬)

கதிராயமணிக்கலமேந்தியபா
லெதிராயவருட்கிளர்என்மகனே
பொதிராயவிருட்கதிர்போக்கெனவந்
ததிராயவகத்துயராற்றிலையோ.

உரை.— ஒளிபெறுமணிக்கலத்துள்ள வமிர்தமொப்ப மி
க்கருளேந்திய வென்மகனே! நிறைந்தவிருளைச் சூரியன்வ
ந்துதுடைப்பதுபோல நீயும்வந்துதோன்றி யதிர்ந்தவென்
மனக்கவலை யாற்றாயோ வென்றுகொள்க. (௫௭)

கயலாம்விழியேகடலாமவனை
யயலாடவிலாகியகன்றனனே
யியலாதவிடுக்கணியைந்திநிநா
னுயலாம்வழியொன்றுளதேனுமையீர்.

உரை. — என்கண்களே! நீங்களொருகயல்மீனுகவு மவ னொருபெருங்கடலாகவு மவனிடத்தெந்நேரமு மாடாதிருந் தீரொன்றல்லோ பிரிந்துபோனான். இனியடையாததுன்பங்க ளையடைந்து நானுயிர்பிழைக்கும்வழியுண்டாகில் நீங்களே காட்டக்கடவீரென்றுளென்க. (௫௮)

மஞ்சேமருளாமதுவேகுறையா
விஞ்சேடவிழ்வீயனைவிள்முகனை
நெஞ்சேநனிபேணிலநீங்கினனே
நஞ்சேயினியுண்டுணைநைந்தழல்வாய்.

உரை. — என்னெஞ்சமே யழகுங்கெடாமன் மதுவுமா றுமற் பொன்னிதழ்விரித்த மலரைப்போலமலர்ந்த முகந ல்லானை நீநன்றாய்ப் பேணாமையாலல்லோ நீங்கிப்போனா ன். இனிநீ யுண்பதற்கமிர்தமின்றி நஞ்சினையுண்டு நைந்து வாடி வெந்துகிடப்பாயென்றுளென்க. (௫௯)

என்றத்தடமோங்கவினைந்தழுவாள்
குன்றத்தருவித்திரள்குன்றுகணாள்
பொன்றத்தகநொந்துபொறாமனுமீண்
டன்றத்தெருயாவினுமாய்ந்தனளே.

உரை.— இவையெலா மரியென்னுந்தாயேசொல்லி யந் தத்தடாகம்பெருகும்படிக்கு மலையினின்றோடுமருவியினுமி கக்கண்ணீர்விடும் விழியுடையளாகித் திரளாயழாநின்றாள். மீளவுஞ் சாதற்குரிய துயரோடுநொந்தது பொறாம வின்ன மந்நகர்த்தெருவெலாமாராய்ந்து மகனைத் தேடப்போனா ளென்க. (௬௰)

வேறு.

மீயுலாவியமின்முடியாணகர்
போயுலாவியபோழ்தொருகோதையாள்
தீயுலாவியபுண்ணெனத்தீந்துளத்
தாயுலாவியதேதெனவண்மினாள்.

உரை. — அங்ஙனம் வான்மீன்முடியைச்சூடின மரியெ ன்பவ ளந்நகரெங்குந்திரியும்போதொருத்தி யவளைக்கண்டு பட்டபுண்ணிற் செந்தீப்பாய்ந்ததுபோல நீயே துன்பத் தோடு தீர்ந்துகிடப்ப மனதிலாகிய வருத்தமென்னசொல்வா யாகவென்று கிட்டினாளென்க. (௬௧)

தேசிகத்துயர்சேடமைந்தோதிய
தேசிகத்துயர்சேடனைத்தேடிநான்
றேசிகத்தயர்வேனெனச்செஞ்சுடர்
தேசிகத்துயர்செங்கலையாளரோ.

உரை. — அதற்குச்சூரியன்கதிரைக் கலையாயுடுத்தவளாகி யமரியென்பவள்மறுமொழிசொன்னாள்: பொன்னினுமழகு பெற்றச் சொல்லப்பட்டபுகழினு முயர்ந்தபாலனை நானே தேடி நாற்றிசையெங்குமலைந்து திரிவேனென்றாளென்க. (௬௨)

நினையரீன்றனனானெனத்தாய்படு
மனையயாவுமறிந்தகத்தேங்குவே
னனையலர்ந்தெனவீன்றநின்னந்தன
னெனையனோவெனச்சாற்றுதிநீயென்றாள்.

உரை. — அப்பொழு தந்தப்பெண்சொன்னதாவது: மக் களைப்பெற்றதாய் நானாகையிற் றாய்படும்வருத்தத்தையறிந் திரங்குவேனே, ஆகையாற் பூவரும்பலர்ந்தாற்போல நீபெ ற்றமக னெத்தன்மைத்தானோவென்று சொல்வாயாகவென் றாளென்க. (௬௩)

அரியதோர்வினைகேட்டியந்தோவெனாப்
பெரியதோருயிர்ப்பிட்டனள்பின்றனக்
குரியதோர்நசையூங்குளந்தூண்டலாற்
சரியதோர்மதுப்போலுரைசாற்றினாள்.

உரை. — அதற்குமரியென்பவள் ஐயோவரியவினையைக் கேட்டாயென்று பெருமூச்சிட்டபின்பு மகனைக்காணத்த னக்குள்ளவாசை மனத்தைத்தூண்டினதனாற் பூவிதழிற்சாய்

ந்தொழுகிய மதுவைப்போல வினியவுரைகளைச்சொல்லத்துடங்கினளென்க. (௬௪)

பாவிதந்தமகற்குரியான்மைகேள்
வாவிதந்ததண்டாமரைவாயினான்
காவிதந்தகளிப்புமிழ்கண்ணினா
னாவிதந்தவருளருட்சொல்லினான்.

உரை. — மரியென்பவ ளெங்ஙனமறுமொழி சொன்னாளென்னில், பாவிநான்பெற்றபாலனுக்குரிய குணமுஞ் சாயலுங்கேட்டாயே யதுகேள், குளுந்தடாகத்திற்பூத்த செந்தாமரையொத்தவாயு மதிலேபூத்த கருங்குவளையொத்த களித்தகண்ணு முயிர்தருமருளைப்பொருந்திய வினியசொல்லுமுடைய தென்மகன்றானென்றாளென்க. (௬௫)

பானுயிர்த்தகதிர்ப்படப்பங்கியான்
வானுயிர்த்தமதிப்படநெற்றியான்
றேனுயிர்த்தமுல்லைச்சிறுமூரலான்
கானுயிர்த்தமலர்முகக்காமரான்.

உரை. — மீளவுஞ் சூரியன்கதிரினும்விளங்கினகுஞ்சியும் வான்மேற்றிரியு மதியினும்விளங்கின நெற்றியழகும் வாசமதுப்பொழிமுல்லையரும்பினுஞ் சிறியபல்லின்வடிவும் வாசமலரினு மகிழ்ந்த முகத்தினலமுமுடைய தென்மகன்றானென்றாளென்க. (௬௬)

பொருளில்வீங்கியபொச்சைப்புயத்தினா
னருளில்வீங்கியவார்கலிமார்பினான்
றெருளில்வீங்கியசீர்முகிற்கையினான்
சுருளில்வீங்கியதோடலர்த்தாளினான்.

உரை. — மீளவும் பொன்மலையொத்தபுயமுந் தயைக்கடலொத்தமார்புந் தெளிந்தமணிமுகிலொத்தகையுந் தாமரையரும்பொத்தபாதமு முடையதென் மகன்றானென்றாளென்க. (௬௭)

ஈரஞ்சாம்வருடத்திரண்டாண்டுளா
னீரெஞ்சாவருளானிறைமாட்சியான்
காரஞ்சாவொளிகாட்டியகாட்சியான்
சீரெஞ்சாவுரைவெல்லுயர்சீர்த்தியான்.

உரை. — மீளவு மவனுருச்சாயலினொழிய வவன்குணத் தையுங்கேள், பன்னிருவயதுடையனுகி யன்பின்குளிர்ச்சி விடாதவருளும் குறையொன்றின்றிநிறைந்தமாட்சியு மிரு ளுக்கஞ்சாத வொளிபெறுங்காட்சியுஞ் செல்வத்துயர்ந்து சொன்னபுகழின்மேனின்றகீர்த்தியு முடையதென்மகன்று னென்றுளென்க. (௬௰௮)

முகத்தின்றமழுகிழ்ந்தெனப்பார்த்தகா
லகத்தின்றமைாயுள்ளவிழ்கண்ணினுன்
செகத்தின்பாசறைதேய்ந்துளமின்புறச்
சுகத்தின்றுய்வினைதுற்றியவன்பினுன்.

உரை. — மீளவுந் தன்றுகக்கதிர்பட மலர்ந்துபார்க்கிற் பிறர்மனமாகிய தாமரை மலர்தற்குக்காரணமாகிய கண்பார் வையும் பூவுலகுள்ள துயர்களைத்துடைத்து நமக்குமனங்களி கூரும்படிக்குப் பெற்றதாயினு நம்மைச்சுகத்திற்பேணு ம ரியவன்புமுடைய தென்மகன்று னென்றுளென்க. (௬௰௯)

நளிமுகத்தலர்நல்கியதேனெனு
வளிமுகத்தவன்சொல்லறைந்தாற்பக
லொளிமுகத்திருளோடியவாறுபோல்
விளிமுகத்துறும்வெந்துயர்நீங்குமால்.

உரை. — மீளவுங் குளிர்ச்சியோ டலர்ந்தபூக் கொப்புளிக் குமதுவேபோல வன்பின்முகத்தொருசொல் லவனுரைத்த மாத்திரத்துச் சூரியனொளிமுன் னிருளெலா நீங்குந்தன் மையாற் சாவின்முகத்தின்முன்னே வந்ததுயரெலா நீங்கி யொழியுமென்றுளென்க. (௭௰)

உடனக்கிசைத்தினியென்னுரைப்பேனிவண்
டனக்கெதிர்த்திணைதானிலனுகையா

னினக்கெதிர்த்துநின்றாலறிவாயென
வெனக்கியற்றருடாயிவைசாற்றினாள்.

உரை. — மீண்டுபலவற்றையுமுனக்குநான்சொல்வானேன்? அவன்றனக்கிங்கே யெதிருநிகருமில்லானாகக்கொள்ள வொருமுறைமாத்திர முனக்கெதிராய்நின்றவனைக் கண்டிருந்தாயாகி லறிவாயென்று எனக்குத்தயைசெய்யுந்தாயானவளிவற்றைச் சொன்னாளென்க. (௭௧)

இனையகேட்டலுமின்புறக்கோதையாள்
வனையவேட்டுருமாண்பொடுகாட்டின
வனையனீங்குகண்டேனருளன்னைநின்
றனையனுமவன்றானெனச்சாற்றினாள்.

உரை. — சொன்னயாவையு மகிழ்ந்துகேட்டவள் மறுமொழிசொல்வாள்: புகழ்ந்தலங்கரிப்பதற் காசைவிளைவிக்குமாட்சியையுடையனாக நீசொல்லிக்காட்டினதன்மையுடையபாலனை யிங்கேகண்டேன், நான்கண்டவ னுன்மகன்றானே யன்புடையதாயே யென்றாளென்க. (௭௨)

பண்டழன்றுளிவாடியபூந்தரு
வுண்டநல்லுயிருற்றநீரொத்தசொற்
கொண்டதன்மையிறாய்களிகூர்ந்தவற்
கண்டதெவ்விடங்கண்டதெப்போழ்தென்றாள்.

உரை. — நிலம்வெந்தாற்போலக் காய்ந்தவளவில் வாடினபூந்தருவுண்ணு நல்லுயிராகப் பெய்தமழைத்துளியொப்பவன்னாள்சொன்னசொற்களைக் கேட்டதன்மையான் மரியென்பவள்களிகூர்ந்தவாசையோ டவனைநீகண்டவிடமும் பொழுதுமேதென்று சொல்வாயாகவென்றாளென்க. (௭௩)

மின்னலேநனிகேளெனவேட்புறுங்
கன்னலேகடந்தின்பஞ்செய்காதல
னென்னலேயிருணேரியகாலென
தின்னலேயறவென்மனையெய்தினன்.

உரை. — அதற்கவள் பின்னலாகியபெண்ணே! நன்றாய்க்கேளென்றுசொல்வாள்: விரும்பினகரும்புசெய் யினிமைகடந்த வின்பத்தைவிளைவிக்கத் தகுவதோர்பிள்ளை நேற்றேயிராவிருள்வரும்போ தென்றயொல்லா நீங்குதற்குக்காரணமாகவென்மனையிடத்தே வந்தானென்றுளென்க. (எச)

புரிந்ததாமமுகச்சுடர்ப்பொற்பினால்
விரிந்ததாமரைக்கையைவிரித்துமே
லெரிந்தமீன்விழிதாழ்ந்திணையாவருள்
சொரிந்ததானுணுந்துப்பிரந்தானரோ.

உரை.—அங்ஙனம் வந்துதோன்றிய பாலன்முகத்தில்வீசியகதிர்மிகுதியாற் செந்தாமரை மலர்ந்ததேபோ லிருகையையும்விரித்துச் சூரியன்முன்னே வான்மீனொளித்ததேபோ லிருகண்ணுந்தாழநோக்கித் தான்பிறர்க்கிணையாத வருளைக்கொடுப்பவனாகித் தானுண்பதற் குணவினை யிரந்தானென்றுளென்க. (எரு)

அன்னதன்மையினாற்கிரவாவதே
தென்னவுண்டியையீந்தளித்தேனவன்
மன்னமிர்தமனத்தளித்தாதலால்
முன்னமன்றுமுகிழ்ந்தெனவோங்கினேன்.

உரை. — அதனைக்கண்டு நானிம்மாட்சியுடையா னிரப்பதேதென்றிரங்கி யுணவினைத்தந்தேன், அவனு மென்மனதிலழித்தற்கரிய வமிர்தத்தையூட்டினதனு லன்றென்மனமலர்ந்தோங்கினே னென்றுளென்க. (எசு)

அள்ளம்பாடியவாசமோடாடிய
கள்ளம்பாடியைகட்டுரையானும்போய்ப்
புள்ளம்பாடியதொத்தவன்பூமுகம்
விள்ளம்பாடியவென்விழிபோர்கிலேன்.

உரை. — அங்ஙனந் தந்ததைக்கைக்கொண்டு நெருங்கினதாமரையிதழில் வாசனையோடாடாநிற்கு மதுவின்றன்மை

யா வினியசொற் பாலன்போயினும் பூத்ததாமரைமொய்த்துள்ளாடினவண்டுகளைப்போல வென்கண்களு மவன்மலர்ந்தமுகத்தாமரையின்மொய்த்துக்கிடப்பவதுகளைப்பெயர்க்கமாட்டாதிருந்தேனென்றாளென்க. (௭௭)

மாசறுத்துமனத்திவையாக்கிய
வாசறுத்திணையற்றன்னையமற்
றேசறுத்தநின்றன்மகனென்றனள்
காசறுத்தசங்கேந்தியகையினள்.

உரை.— என்மனத்துள்ள மாசெலாமறுத்துநீக்கி யிவற்றைச்செய்து குற்றமுநிகருமில்லா னையமின்றிக் குறையில்லாதவுன்மகன்றானேயென்றா ளறுப்பறுப்பாய்வகுத்து நிரையிற்பதித்த மணியாலலங்கரித்த சங்குவளைபூண்ட கையாளென்க. (௭௮)

பருகிவாழுயிர்பற்றியவூணெலாம்
பெருகியீந்தபிரானிரந்தானென
வுருகியாசியவட்குரைத்தன்னைபோய்
மருகியாண்டினு மைந்தனைத்தேடினள்.

உரை.— இவற்றைக்கேட்ட தாயாகியமரியென்பவள் உண்டுவாழுமுயிர்கள்யாவும் விரும்பினவுணவெலாம் வேண்டினதின்மேலு மீந்தநாதன்றானுண்பதற் கிரந்தானென்று மனதினொந்துருகினவளாகி யச்செய்தியைச்சொன்னவளைத்துதித்துப்போய் மீளவு மெங்குமண்டி மகனைத்தேடினளென்க. (௭௯)

வேறு.

கழீயினமணியிலன்னை களித்திவையோர்ந்துபோகில்
விழீயினவுயிரைக்காணு வெய்துறமுடவிற்கூசை
யெழீயினநகரிற்சேர்ந்தாங் கெதிர்படவுயிர்ப்புவீக்கிக்
குழீயினதுயர்தீர்பாலற் கொணர்ந்தனையிலையோவென்றான்.

உரை.—அங்ஙன மொளிபெறக்கழுவப்பட்ட மணியைப்போலக்கேட்டசெய்தியாற் களித்ததா யதனையோசித்துப்

போசையில் விழுந்ததன்னுயிரைக்காணுமல் வருந்தினவுடலைப்போலக் காடெலாந்திரிந்து மகனைக்காணுமற் சூசை யுயர்ந்தநகரின் மீளவுஞ்சேர்ந்துவருகையின் மரியென்பவளையெதிராய்க்கண்டு பெருமூச்சிளைவிட் டையோ திரண்டவெந்துயர்தீர்ப்ப வல்லபாலனைக்கண்டு கூட்டிக்கொண்டு வந்தாயில்லையோவென் றவளைக்கேட்டானென்க. (அ௰)

ஆயவையுரைத்தீங்குள்ள ளுயவற்காணேனென்னத்
தாயவைவருந்திச்சாற்றத் தமணியக்கோயிற்சேர்ந்து
தீயவைதுடைக்குநாதன் செம்மலைக்காட்டவேண்டி
நோயவணீப்பனென்று னுண்மறைவடிவம்பூண்டான்.

உரை. — அதற்குமரியென்பவள் கேட்டயாவையுஞ்சொன்னபின்மே லெம்மகனிந்நகர்விட் டகன்றவனல்லனுயினுமெங்குமவனைக்காணேனென்றாள், அதற்குவேதமேவடிவாகக்கொண்டசூசை பொன்னுற்செய்யப்பட்ட தேவாலயத்துக்கிருவரும்போய்த் தீவினையெல்லாந்துடைக்குந் தயையுள்ளநாதனை யெம்மகனைக்காட்டச்சொல்லி வேண்டிக்கொண்டா லவனேநாம்பட்டதுயரைத் தீர்ப்பானென்றுனென்க. (அக)

மூப்பகலிவரிவ்வாறே மூற்றியதுயர்கொண்டேங்க
வொப்பகல்மாட்சிப்பால ளெளிமணிக்கோயிறன்னிற்
றப்பகல்மறையின்வல்லோர் சவையினுட்பலவைக்கேட்ப
வப்பகல்மூன்றும்வைகி யனைவரும்வியப்பச்செய்தான்.

உரை. — அங்ஙன மிவர்மூன்றுநாளு மிக்கதுயரோ டேங்கித் திரியாநிற்க நிகராதமாட்சியுடைய திருக்குமாரன் விளங்கியமணியோ டலங்கரித்த தேவாலயத்திலே மூன்றுநாளுமிருந்து தப்பாதவேதநூலோர்கூட்டத்திற் பலவற்றைத் தான் வினவிக்கொண்டிருந் தனைவருமதிசயப்படச் செய்தானென்க. (அ௨)

உற்றநாலூன்றிநாத னுருவொடுற்றன்றேவென்னப்
பெற்றநூல்தெளியாநீரார் பிதற்றலின்மூன்றுநாளிற்

கற்றநூலிலநூல்வல்லோன் கற்கவந்தெனச்சேர்ந்தோரொப்
பற்றநூற்படிதானுற்ற தல்லவென்றறையக்கேட்டான்.

உரை. — அங்ஙனஞ் செய்துகொண்டுவருகையின் மூன்
றுநாளிலே வேதநூலோர்கூடிப் படித்தநூற்கொண்டாராய்
ந்து நம்மையிரட்சிக்கக் கடவுள்தானேயுருவத்தைக்கொண்
டு மனிதனாய்ப்பிறந்தானோ வில்லையோவென்றுயோசித்து
ப் படித்தவேதநூலி லன்னார்தெளியாமையால் நிலைகொள்
ளாமற்பிதற்றிக்கொண்டுவருகையி லொன்றும்படியாம லெ
ல்லாத்தையுமறிந்தவனாகிய திருக்குமாரன் படிக்கவந்தவனை
ப்போலவணுகி யவர்களொருப்படத்தேறி நிகராதவேதநூ
லைப்பார்க்கி லின்னமிரட்சிப்பவன் பிறந்ததல்லவென்றுசொ
ல்லக்கேட்டானென்க. (௮௩)

கேட்டலுமிரங்கியன்னார் கிளத்தவைமறுத்துநீக்க
வேட்டலுந்தன்னைக்காட்டா மெல்லிசையிரங்குநல்யாழ்
கூட்டலுங்கனிபால்மற்றக் குளுஞ்சுவைதிரட்டிக்காதி
லூட்டலுமனையதீஞ்சொல் லோரொன்பானோதலுற்றான்.

உரை. — இவற்றைத்திருக்குமாரன்கேட்டு மனதிவிரங்கிய
ன்னார்சொன்னவழுவினை மறுத்துநீக்க வாசைகொண்டு தன்
னையின்னானென்றுகாட்டாம லினியவீணையிரங்கிய குரலோ
டுவிளைவிக்குஞ்சுவையுந் தீங்கனிச்சுவையுந் தீம்பாற்சுவையு
மற்றக் குளிர்ந்தசுவைகள்யாவையு மொன்றாய்த் திரட்டிச்
செவியிலூட்டினாற்போல வோரொன்பானாகியதேவகுமார
னினியசொல்லைக்கொண்டு முந்நி மனிதரைப்படிப்பிக்கத்து
டங்கினானென்க. (௮௪)

வேறு.

உளாட்டரக்குண்டபதுமம்விண்வேப்ப வொளிச்சுடரு
தித்ததுபோன்றே [ட்டேன்
தீட்டரக்குடவினுதனுமுவப்பச் சிறுவனாய்ப்பிறந்ததுங்கே
மீட்டரக்கொளிம்பாய்வருடமீராறுமுன் வெயிலெனவிராவு
மாய்க்கீதம் [ட்டேன்.
கேட்டார்ந்திடையரரியதோர்காட்சி கிளரொளிகண்டதுங்கே

வான்றந்தநன்னர்வானமேகாட்ட வழுக்கிலநரவென நவமீன் [றிறைஞ்ச
ருன்றந்தநிலைமூவரசர்கண்டெழுந்து தரணிகாப்பவனைவந்
மீன்றந்தவழிவந்தெவணவனென்ன விளங்கியபெத்திலந்தன்னி [றேவென்றான்.
லூன்றந்தவுருவோடிங்குதிப்பவனென் றுரைத்தநீரன்

இவையிரண்டுமொருதொடர்.

உரை. —திருக்குமாரனெங்ஙனஞ் சொன்னானென்னில், ஊட்டியசிவப்புண்டதுபோலச் செந்தாமரைமலர்ந்து மகிழும்படிக்குச் சூரியனுதித்ததன்மையாற் சிவப்பாலெழுதப்பட்ட வுடலைப்போர்த்தநாதனே நாமெல்லாரு மகிழும்பொருட்டாகக் குழந்தையாய்ப்பிறந்தானென்று கேட்டேன். மீளவும் பன்னிருவருஷத்துக்குமுன்னே யொருநாட் செஞ்சுடரத்தமித்துப்போனபின்பு மிராக்காலத்து மிக்கொளியாகிச் சங்கீதங்களைக்கேட்டவிடையர ரற்றிக்கொண் டரியகாட்சியி னொளியைக்கண்டாரென்றுகேட்டேன். இதுவுந் தவிரவன்றுதானே வானநமக்குத்தந்த நன்மையைத்தானே நமக்குக்காட்டப் பொய்யாதநாவைப்போல வொரு புதுமீனைத்தோற்றுவித் ததனைக்கண்ட மூவரசரெழுந்து பூவுலகளிப்பப்பிறந்தநாதனைவணங்க வாசையா லம்மீன் காட்டினவழியேவந் திங்கேசென்று பிறந்தநாதனெங்கேயென்று தேடினதற்கு விளங்கினபெத்திலநகரி லாண்டவன் மனுவுடலோடுபிறப்பானென்று நீங்களேசொன்னீரல்லோ வென்றான். (அ௬)

கான்முகத்தலர்ந்தமதுமலர்வடிவோய் களிப்பநீயுணாத் தவைநாமோர்ந்
தூன்முகத்தெந்தையுற்றதென்றையமூற்றனமாயினும்வேத
நூன்முகத்தரசிறைஞ்சவந்தெங்கு நுதல்வருமாண்மையி லாள்வான் [னமென்றார்.
வான்முகத்திறைவனென்றதாய்ந்தல்லோ வந்ததன்றென்ற

உரை. — அதற்கவ்வேதநூலோர் சொன்ன மறுமொழியாவது: வாசங்கொட்புளித்தலர்ந்த மதுமலரொப்ப முகவ

டிவுடையபாலனே! நாங்கள்களிகூரும்படி நீ சொன்னயாவையு முன்னேயாராய்ந் துடலோடாண்டவன்பிறந்தானென் றையந்தோன்றினதாமே: ஆயினு மற்றவரசர்சூழவந் திவனைவணங்காநிற்பப் பிறந்தநாத னெங்குழுணர்தற்கரிய வாண்மையோடாளுவானென்று வேதநூலிற் கண்டதென்று நாங்களிவையெலாங்காணாமையா லவனும்பிறந்தவனல்ல வென்றேமென்றனக. (௮௭)

சொல்லியதன்மைத்தன்றியுமன்னன் றுறந் துயர்க்க
 டையிலன்மிடியே [னுலகி
புல்லியதன்மைத்துறவிலனைசெய் பொருளிலன்மனையில
லொல்லியதன்மைத்தெளியனாய்த்தோன்றி யொருமரத்திற
 ப்பதவ்வேதத் [னன்றே.
தில்லியதன்மைத்துளதன்றேவென்று னிளமுகத்தனுதியா

உரை. — அதற்குச் சிறுவன்முகத்துத்தோன்றி யெக்காலத்திலு முன்னிருந்த வனாதியாகியதிருக்குமாரன்சொல்வான்: நீங்கள்சொன்னதன்மையுமன்றி யுலகமிரட்சிக்கவருநாதன்னுடையுந் துயரின் முடிவுமின்றி வறுமைகொண்டமிகுதியா லுறவுமின்றி விரும்பினபொருளுமின்றி யிருக்குமனையுமின்றிப் பூவுலகிற்றிரியுமுறையா லெளியனாய்த்தோன்றினபின் பொருமரத்திலறையுண் டிறப்பானென்று வேதத்திலுள்ளதன்மையல்லோ வென்றானென்க. (௮௮)

வேறுபட்டெதிர்த்தமாற்றமொன்றாக வெளிற்றிள்ஞ்
 சொல்லொருவீரோ
வீறுபட்டனைத்துங்கற்றவர்சொன்ன தியம்புதுமெனத்தொ
 ழுதுரைப்பான்
மாறுபட்டழிந்தமனுக்குலத்தறநூல் வகுத்தளித்துற்றபின்
 னுலக [ன்றே.
நீறுபட்டிடநாட்பயன்றரவருவா னிமலனென்றதுமறைய

உரை. — அங்ஙன மவதரித்தநாதனுளவும் படவும்வருவானென்று வேறுபட வெதிர்த்துச்சொன்னமொழிக ளொன்றாகும்படி யறியாதசிறுவன்வாய்ச்சொல்லை வெறுத்துத்தள்

ளீராகிற் கல்வியின்கடைப்பிடித் தெல்லாத்தையுங் கற்றவர் சொன்னதைச்சொல்வேனென்றபின் பவர்களைவணங்கி மீளவுஞ்சொல்வான்: கொண்டநன்மைமாறுபடப் பாவத்தாலழிந்தமனுக்குலத்தார்க் கறநெறிகாட்டி யெல்லாரையு மிரட்சிப்ப வாண்டவன் மனிதனு யிங்கேயொருமுறைவந்தபின்பு மறுபடி யுலகம்வெந்தழியும்போது தீர்வையிட் டெவர்க்கு முரியபலனைத்தர விரண்டாமுறை யிங்கே வருவானென்று வேதத்திற்சொல்லப்பட்டதல்லோவென்றுனென்க. (௮௯)

படிமுடித்தெவர்க்கும்பயன்றரவருங்காற் பரமனீர்சொ
ல்வியவண்ணத் [னவீசக்
திடியிடித்தெரிந்தவிசும்பெலாமுழங்க வெங்கணும்வெருவி
கொடிபிடித்தமரர்முன்னமற்றெவருங் குழைந்துகுழிறைஞ்
சவானரசாய்க் [றே.
கடிதிடித்தெரிகாராசனத்தெழுந்து கதிர்முகத்தியல்வதுநன்

உரை. — அங்ஙன முலகமுடியுநாளி லெவர்க்குந்தீர்வையிட்டுப் பலனைத்தருவதற் காண்டவன்மனிதனாயெழுந்தருளி வரும்போது வேதநூற்படி நீங்கள்சொன்னதன்மையால் வானரசனாகத்தோன்றி யிடிக டிரளாயிடிப்பவும் விசும்பெலாமெரிந்துமுழங்கவு மச்சமே யெங்குந்தோன்றவும் வானவர்கொடியையேந்திமுன்போகவு மற்றமனிதரும் பசாசுகளுநடுங்கித் தெண்டனாகவணங்கவு மிக்கிடித்தெரியு மேகவாகனத்தெழுந்தருளிக் கதிரைவீசியமுகத்தோ டவனன்று தோன்றுவதியலுந்தன்மையல்லோவென்றுனென்க. (௯௰)

ஒளிபொருளின்பம்வெஃகியவினையா லுயிர்கெடநுழை
ந்ததீதொழிப்ப
விளிபொருளிவையென்றெளிமையேபொறையே வெறுமை
யேமெய்த்திருவென்னத்
தெளிபொருள்மறையாய்ப்பயிற்றவந்தவன்றன் றிருவெறு
த்தெளியனுற்றெவர்க்கு
நளிபொருளோதல்தலைதளிர்த்தளிப்ப நண்ணுங்காலுரித
ன்றேவென்றான்.

உரை. — அக்காலத் தத்தன்மைத்தெழுந்தருளுங்கடவுள் தானே யதற்குமுன்னே மனிதனுய்த்தோன்றிக் கீர்த்தியும் பொருளு மின்பமும் விரும்பினதன்மையால் மக்களுயிர் கெடும்படிக்குப் பூவுலகிற் பாவநுழைந்ததென் றதனையொ ழித்துநீக்க வம்மூன்று மழியுஞ்செல்வங்களென்று வெறுக் கச்சொல்வி யெளிமையும் பொறுமையும் வெறுமையு மிம் மூன் றழித்தற்கரிய மெய்யானசெல்வங்களென்று தேடச் சொல்வித் தெளிவாய் வேதமாகப்போதிக்கவருவானல்லோ? அதற்கு வந்தநாதன் றானும் பூவுலகுள்ள பொய்யானசெல் வங்களைவெறுத்துத் தானுமெளியனுய்வந் தெல்லாருக்கு ம னங்குளிர்ப்பிக்குஞ் சொல்லைக்கூறி யோதுவதே தன்றயைத ளிர்ப்ப நம்மையிரட்சிக்கும்படிக்கு மனிதனுய்ப்பிறக்குங் காலத் துரியமுறையாமல்லோ வென்றானென்க. (௬௧)

இத்திறத்தெதிர்த்தகாதைகள்பொருந்தி யெய்தியநவங் கள்கண்டளிப்ப [றனன்பால
மெய்த்திறத்திறைவன்பிறந்தனனென்னில் வெளிறதோவென் னத்திறத்தெவருந்தாந்தமைநோக்கி யதிசயித்தெவர்மகனெ வ்வூ [ளுன்.
ரெத்திறத்துரியகுலத்தனீயென்றா ரிளவலுமறைவுறச்சொன்

உரை. — இத்தன்மையாற் றம்முள்ளெதிர்படத்தோன்றி ன வேதவசனங்களொருப்படப்பொருந்தி முன்சொன்ன படி பன்னிருவருஷத்தின்முன்னே தோன்றினநூதனங்களை ப்பற்றி நம்மையிரட்சிக்க வாண்டவன் மனிதனுயுடலோடி ங்கே பிறந்தானென்றாற் பேதமையென்பவோவென்றான் றிருக்குமாரன். இவையெல்லாங்கேட்டுக் கூடினநூலின்வல் லோரதிசயப்பட்டுத் தாமே தம்மைநோக்காநின்றபின்பு பாலனே யுன்றாய்தகப்பனுரொன்று நீ பிறந்தவூரெவ்வூரென் று முன்குல மெவ்வகைக்குலமென்றுஞ் சொல்வாயாக வென்றுகேட்டார். அதற்குத்திருக்குமாரன் றன்னைக்காட்டா மல் மறைவாகமறுமொழி சொன்னானென்க. (௬௨)

தாதையுண்டென்னிற்றாயிலையவனுந் தாயுளதெனிலி லையுதித்த

காதையுந்தெளிப்பவெனக்கொரூரில்லைக் கலந்திருகுலத்துதி
த்தில்லைக் [ரிலையென்
கோதையுண்டழிந்தகுலமெனக்கென்றான் கூவிடத்தின்னவ
ரோதையுண்டெவரும்வியப்புறிநக்காங் குணர்ந்தவையோர்
ந்துபோயினரே.

உரை.— திருக்குமாரனெங்ஙன மறைந்தமறுமொழிசொன்னானென்னில்: எனக்குத்தகப்பனுண்டானாற் றாயில்லைத் தாயுண்டானாற் றகப்பனில்லை, நானுளவாகிய தன்மையார்க்கிலெனக்கூரில்லை, நானேகலந்தவிருகுலத்திற்பிறந்து மென்குலங் குறைகொண்டழிந்த குலமுமல்லவென்றான். அதனைக் கேட் டெல்லாருமதிசயப்பட்டு மகிழ்ச்சியோடுசிரித் திப்பூவுலகிலிவனைப்போல்வாரில்லையென்று புகழ்ந்தபின்பவன் சொல்லக்கேட்டநியாயங்களை மனதிலோர்ந்து போனாரென்க. (திருக்குமாரனுக் கிருதத்துவமுண்டாகித் தேவதத்துவத்திற் பிதாவன்றித் தாயில்லாமையாற் பிதாவிருக்கத் தாயில்லையென்று மனுத்தத்துவத்திற் கன்னிமாரா தாணுதவியின்றித் தன்னையீன்றதாயன்றிப் பிதாவில்லாமையாற் றாயிருக்கப் பிதாவில்லையென்றான். பின்னையுந் தேவதத்துவத்தி லெங்குமுள்ளனாகவு மனுத்தத்துவத்திற் காட்டுள்ளகுகையிற் பிறந்தவனாகவுந் தான்பிறந்தவூரில்லையென்றான். மீளவுந்தேவகுலமுமனுக்குலமுந் தன்னிடத்தழிவொன்றின்றி யொருப்படச்சேர்ந்தமையாற் கலந்தவிருகுலமாகி யழிந்தகுலமுமல்லவென்றானென்க.) (௯௩)

வேறு.

தப்படுமுரையுணர்ந்தெவருஞ்சாய்ந்துபோய்
வெப்படும்வேலையாய்த் தாயுமெய்யனு
மொப்படுமொளிமணி பதித்தவொண்டுகிர்ச்
செப்படுஞ்சிறுவனைச் சென்றுநோக்கினார்.

உரை. — அங்ஙனந் திருக்குமாரன்சொன்ன தப்பாதவுரைகளை மனதிலோர்ந் தந்நூலோரெல்லாரு மெழுந்திருந்து போகையிற் பட்ட துயரின்வேகத்தையாற்றுங் காலமாகித்

தாயுந் தவனுகியகுசைசயுங் கோயிலிற்சென்று நிகராவொளிம ணிபதித்த பவளச்செப்பினைத் தன்னேடுவமிக்கிலொப்பினை க்கெடுக்குமழகினையுடைய பாலனைக்கண்டாரென்க. (௬௪)

எல்லொளிபடமலர் கஞ்சமேயென
வில்லொளிமுகத்துமுன் விண்டலர்ந்துள
மல்லொளிபடத்துளி யளித்தகாந்தம்போற்
செல்லொளிவிழியினு ரழுதுசேர்கின்றார்.

உரை.—அங்ஙனந் திருக்குமாரனைக்கண்டவுடனே சூரிய னைக்கண்டதாமரை மலர்வதுபோல வவன்முகத்தொளியைக் கண்ட விருவர்மனமு மலர்ந்ததாய்ச் சந்திரனைக்கண்டகாந்த நீரைத் துளிப்பதுபோல மின்னியமேகத்தொத்த வவர்கள் கண்ணு மகிழ்ச்சியாலழாநிற்பக் கிட்டினுரென்க. (௬௫)

சுனையனைவிழிவிடாத் தொடுத்தநீரினு
னனையனைமுழுமெயு நனைப்பவன்னவர்
புனையனையன்புயிர் புணர்ந்தொன்றாகவுந்
தனையனைமுறைமுறை தழுவினாரரோ.

உரை. — கிட்டினவுடனே யூற்றுச்சுனையின்றன்மையா ல் விடாதழுதகண்ணீரால் பூவரும்பொத்த வவன்றிருமேனி யெல்லா நனையும்படி யிருவர்முறைமுறையாக வன்புமுயிரு மறுதகட்டோடுபுணரப்பட் டொன்றாகும்படிக் கிறகத்தி ருமகனைக் கட்டிக்கொண்டாரென்க. (௬௬)

கற்றைநாண்முகத்தினேய் பிரிந்தகாரணத்
தற்றைநாளாதியா யுயிரற்றுகுலித்
திற்றைநா நுகரநீ யிரங்கிலாயதேன்
மற்றைநாளொன்றினும் வாழவோவென்றாள்.

உரை. — அங்ஙன மகனைக்கட்டிக்கொண்டு தாயானவள் சொல்வாள்: கதிரைவீசியமுகத்தின்மகனே! நீ பிரிந்ததனலன் றுமுதற்கொண்டு நாங்களுயிர்பிரிந்தாற்போல வருந்தாநின் றோம். இத்தனை துயர்நாங்கள்பட்டிருக்க வெல்லாத்தையும றிந்தவனீ யெங்களுக்கிரங்கி யுன்னைக்காட்டாதிருந்ததென்

ன? இன்னமொருநாளுன்னைக்காணேமாயிற் சாவதுநிச்சய ந்தானேயென்றுளென்க. (கூஎ)

பட்டவையறிந்தினந் தேனும்பற்றெலா
மட்டவைபுதைத்தென வருளியெந்தைதான்
சுட்டவைசெயென்கொலோ வென்றுசொன்னபின்
னட்டவையோம்புநீ ரானநட்பூட்டினான்.

உரை.—அதற்குத்திருக்குமாரன் நீங்கள்பட்டயாவையு மறிந்ததற்கிரங்கினேனாயினு மற்றப்பற்றுதலெல்லாங் கொன்றுபுதைத்தாற்போல மறுத்து - என்றிவ்வியபிதா வெனக்கருளிச்செய்து செய்யக்காட்டினவற்றைச் செய்யாதிருப்பேனோவென்றபின்பு புதிதாய்நட்டபயிரையோம்பிப் பெய்தமழைத்துளியொப்ப விருவர்க்காறுதலாகவரியநட்பினைக்காட்டி யின்பத்தையூட்டினானென்க. (கூஅ)

மருவணிமலர்மழை வாரியாழ்குரல்
வருவணியிசையொடு மதுரவாய்க்குர
லுருவணியும்பர்சூழ் வந்துபாடிவான்
றெருவணிவிழாவருஞ் சிறப்பில்வாழ்த்தினார்.

உரை. — இவையெலாங்கண்டவானவர் மூவரோகாண வுருவெடுத்தங்கேதோன்றி வாசமதுமலர்மழையைப் பொழியவு மினியயாழ்நரம்பினைத்தடவிப் பல்லிசைகிளப்பவு மதுகளோடொன்றின மதுரவாய்க்குரலோடேவந்துபாடவும் வானுலகிற்குரிய திருவிழாவாக வாழ்த்தினாரென்க. (கூகூ)

விட்டிடைக்கிறுகியன் பின்பமிக்கவர்
கட்டிடைக்காப்பியக் கவிகள்போலவு
மட்டிடைக்கமழ்மலர் மாலைபோலவு
நெட்டிடைப்பழம்பதி நேடிப்போயினார்.

உரை. — முன்பிரிந்தவென்று பின்பும்பிரியாதபடிக் கிறுகக்கட்டப்பட்ட வன்பினின்பத்தின்மிக்கமூவருந் தொடர்நிலைப்பாவோடுசெய்யப்பட்ட காப்பியங்களிற் பலபாவி

னிதாய்ப் பிரிக்கப்படாம லொன்றுபடுவதுபோலவு மதுவி ன்வாயாற் கமழும்பலமல ரொருப்படக்கட்டின மாலைபோ லவு மூவருமொருவராகி நெடும்வழியகன்ற தம் மூதூராகி யநாசரேத்தை நோக்கிப்போனாரென்க. (௱)

பிரிந்த மகவைக் காண் படல முற்றும்.

ஆகப்படலம்-௩௧-இ-விருத்தம்

௩௲௨௱.

முப்பத்திரண்டாவது.

புரோகிதப்படலம்.

வேறு.

மேகமாலையிடைந்துறைமேல்வளை
மேகமாலையிடைந்தளைக்கீழுறை
நாகமாலைநடந்தெனநீணகர்
நாகமாலைநடந்தகன்றாரரோ.

உரை.— அங்ஙன மூவரு மேகங்களணிந்த மாலையாகச் சூழ்ந்துநிற்கு முயர்ந்தமலையிலுள்ள குளிர்ந்தமலனையணிந்த சார்பின்கீழிருந்து அம்மலையோடு பலமலைகள்தொடர்ந்தாற்போலத் தோன்றும்படி மலைகளொத்த மாடங்களுங் கோபுரங்களுமுடைய நீண்ட நகராகிய பெருசலேமாநகரை விட்டு வான்மேல் மாலைக்காலம்வருகையி லகன்றுபோனாரென்க. (க)

காவிஞடியகானலராடுகள்
காவிஞடியகான்மணமாடுமால்
பாவிநாடியபொற்பறவைக்குலம்
பாவிஞடியபொற்பறப்பாடுமால்.

உரை.—அவர்கள்போகையில் வீசினகாற்றிஞலாடின வாசமல ருள்ளிருந்தமதுவைக்கொப்புளித்தமையா லாடினகாற்றும் வாசனைவீசுமால். மீளவு மப்பொழுதிற் பாவியாகியமரக்கொம்புகடோறு நாடிச்சேர்ந்த வழகிய சிறகுள்ளபறவைகள் பாவிலுள்ள வினிமையினு மினிதாய்ப் பாடாநின்றனவென்க. (உ)

சேதகந்தருமாசயிற்சென்றவச்
சேதகந்தருமாசையிற்செந்தழற்

சேதகத்தருஞ்செவ்வொளிநீத்தவான்
சேதகந்தருஞ்செவ்வலர்நீர்த்ததே.

உரை.— அப்பொழுது செந்தழலைப்போல வானஞ்சிவக்கும்படிகாரணமாகியசூரிய னத்தமித்துப்போய் மனிதர் சன்மத்தால்வரு மாசுகளைத்தீர்த்து வெல்லும்படி வேலாக வந்த வத்திருக்குமாரனுடைய மாட்சிவிளைவிக்குமாசையினுல் வானமெல்லாஞ் சேற்றின்மலர்ந்த தாமரைமுதற் பலநீர்மலரொப்பத் தானு மீன்களைப்பூத்ததென்க. (௩)

தெண்கண்ணுடியசந்திரஞ்சேர்வனத்
தெண்கண்ணுடியசந்திரனின்றிமீன்
மண்கண்ணுகமலர்ந்தருட்காணியார்
மண்கண்ணுகமலர்ந்துறக்காணுமால்.

உரை.— அங்ஙனந்தெளிந்தகள்ளை நாடின சந்திரமாகிய வண்டுகள்மொய்க்கும் பூங்காவனத்தைப்போல வெண்கலையுள்ளசந்திரனொழிய வெண்ணப்படாதமீன்களை யழகிய கண்களாகமலர்ந்து கருணைக்காணியாராகிய மூவர் பூவுலகிற்கொரு கண்களாக மகிழ்ந்துவரப் பார்த்ததென்க. (௪)

பல்லியங்கனிபாடவிண்ணோங்கிய
பல்லியங்கனிபாடுவிண்ணோர்செயு
மெல்லியங்கவிலங்குமட்பான்மையே
யெல்லியங்கவிலங்குவிட்பான்மையே.

உரை.— மீளவு மூவரைச்சூழ்ந்தவானவ ரினியசங்கீதங்கள்பாடத் தாமும் வானுலகேற்றவோசையோ டினிதாய்ப்பாடாநின்ற விடுங்கதிர்மிகுகியா லன்றங்கே பூவுலகமே சூரியனடந்துவீசுங் கதிர்களால்விளங்கிய வானுலகின்றன்மையாற் றோன்றிற்றென்க. (௫)

உளரியங்கொலியோதியுலாவுவிண்
ணுளரியங்கொளிசோதியொளியெனு
விளரிபங்கயமாலையில்விள்ளவே
விளரிபங்கயமாலையில்விள்ளுமால்.

உரை.—அங்ஙனம் வீணைகளைத்தடவியும் பாடியுந்திரிந்த வானவர்விடுமொளி சூரியன்விட்டவொளியென்றுநினைத்து விளரியென்னுமிருதியாய்த் தாமரைகள் மாலைநேரத்தின் மலரவே யிளங்கொம்புகளுங் குளிர்ந்தமாலைகள் தொங்கினாற் போலத் திரளாய்மலர்ந்தனவென்க. (௬)

கைப்படங்கமருந்தகக்காந்தனுங்
கைப்படங்கமருந்தகக்காந்தையுஞ்
செப்படங்கவிருந்தவச்சேடனுஞ்
செப்படங்கவிருந்தனர்சேடியே.

உரை. — அங்ஙன நெடும்வழிநடத்தபின்பு கையாகிய வொழுக்கத்தையுடன்பட் டங்கே யமர்ந்தமாட்சியுடையவி றைவனாகிய திருக்குமாரனுங் கைப்பாகிய வெந்துன்பமெல்லாமடங்கும்படி மருந்தாகத் தயைநிறைந்த நெஞ்சுள்ள காந்தையாகிய மரியென்பவளுஞ் சொல்லுந்தன்மை போதாமலடங்கும்படி யுயர்ந்த தவமுள்ளதுணைவனாகிய சூசையுஞ் சேடியாகிய விடையர்வீதியிலே பயணநிறுத்தியிருந்தாரென்க. (௭)

தீத்தன்பள்ளியைநீத்தெழிச்செய்துயிற்
றீத்தன்பள்ளியைநீத்தெழிற்சேயுயிர்த்
தீத்தன்கைபணியப்படிசேர்ந்தகாற்
றீத்தன்கைபனியப்படிசேர்ந்தவே.

உரை. — அங்ஙனமிராவெலாம்போய்த் தீயாகியசூரியன் றன்பள்ளியைவிட்டெழுந்து துயிலைவிட்டவுடனே யன்பிணையள்ளிக்கொண்டு மற்றவழகெலாநீக்கிய வரியதோர்வனப்புள்ளதிருக்குமார னுயிர்தருந் தேவகுருவாகவந்தென்றவனைத் தன்கையாகியகதிரைக்கொண்டு தெண்டனிட வன்று பூவுலகிற்சேர்ந்தபோது தன்கைசுடுந்தீயென்று பனியோடிகலத்து பனியின்றன்மையாற்குளிர்ப்ப வன்றுசேர்ந்தனவென்க. (௮)

ஈரநீரவிழத்துணரேவரை
யீரநீரவிழத்திரையேவனத்

தீரநீரவெழச்சிகியேயறத்
தீரநீரவொழித்தடமேகினர்.

உரை. — அங்ஙன முதயமாகிக் குளிர்ந்தமதுவை மலர்ந்து பூப்பொழியவு மலையையறுத்துச் செல்வத் தீம்புனலாறுவிழுந்தோடவும் பூத்தகாவினமருகுமிக மயில்களெங்குமெழுந்தாடவு மறத்தின்றகுதியாராகிய மூவரொழுந்துபோனாரென்க. (௬)

ஆதிமாலையகற்றியழற்றுமென்
றாதிமாலையகற்றியளிப்படச்
சீதமாலைசெறிந்தனமேலெலாஞ்
சீதமாலைசெறிந்தனகீழெலாம்.

உரை. — அங்ஙனம் போகையி லாதியாகிய சூரியனிராவொழிப்ப விளங்கிச் சுடுமென்றெண்ணி யாதியாகிய தேவ திருக்குமாரன் மாலாகியவாதையைநீக்கிக் குளிர்ச்சிபடும்படி மேலெங்குந் துடர்ந்த மேகங்கள்பரவாநிற்பக் கீழெங்கும் பூமாலைகளைப்பரப்பினாற்போல வழியெலாம் பூத்ததென்க. (௰)

வேறு.

சுனையநீலமுங் கமலமோடாம்பலுந்துளித்தே
னனையநாகமு நாறியகோங்கமுநறும்பூஞ்
சினையசாந்தமுஞ் செண்பகமுங்கனிவிருந்தாங்
கினையயாவுமிட் டிமிழில்வந்துறைபதியடைந்தார்.

உரை.— அங்ஙன நடந்துபோய்த் தடாகங்கடோறும் பூத்தகுவளைகளுந் தாமரைகளு மாம்பல்களு மொருபால் மதுவைப்பொழிந்த வரும்புவிரித்தபுன்னையுங் கோங்குமுங் கமழும்பூங்கொம்புகளைநீட்டிய சந்தனமரங்களுஞ் செண்பகமு மிவையெலாமொருபா லொருங்குடன்கூடி வழியிலெங் குமிவர்களுக் கினியவிருந்துசெய்யாநிற்க நடந்து தாமிருக்குமூருக்குச் சென்றாரென்க. (௰௧)

வேல்செய்யாகுலத் திருவர்முன்பட்டநோய்விழுங்கிச்
சால்செய்யோகையிற் றளிர்த்துளமுவப்பவான்றளங்கள்
பால்செய்யாவியிற் பைந்துகிலுடுத்தொளிபரப்பிக்
கால்செய்யாவியிற் கவரிகள்கமழவீசினரே.

உரை.—அங்ஙன மூவர் தம்மனையிற்சென்றவுடனே திருக்குமாரன் பிரிந்ததனாற் சூசையுமரியு மென்றிருவர்முன்னே மனதிலுருவிவருந்தின வேலைப்போலப் பட்டவருத்தத்தை மறைக்க வதிலேயுமிக்கமகிழ்ச்சியோ டவர்கள் மனங்களிகூரும்படிக்கு வான்றளங்களாகிய வானோருருவத்தோடேநின்று பாலாவியின்றன்மையாற் றூயவெண்சீலைகளையுடுத்துக் கதிர்களையெங்கும்பரப்பி யினியதென்றல்வீசினாற்போல வாசனைவிடும் வெண்சாமரைகளைவீசாநின்றாரென்க. (௰௨)

எரிமணிப்புகை யெடுத்தனர்மலர்மழையொழிந்தா
ரரிமணிக்குரல் யாழெடுத்துளர்ந்திசையேற்றி
யுரிமணிக்குர லொருப்படப்பாவிசைகூட்டி
விரிமணிக்கதிர் விண்டிருவிழாவினைவிளைத்தார்.

உரை. — அங்ஙன மங்கேதோன்றின வானவ ரெரிந்துகமழும் பூம்புகைகளையுங்காட்டி மதுமலர்மழையையும்பெய்து சில ரினிதிரங்கு மணிநரம்புடையவீணைகளைக்கையிலேந்தி யின்னிசையெழும்பத்தடவிச் சிலருரியமுறைமையோடு மணிமிடற்றோசை யவ்விசைக்கொருப்படப் பாட்டிசைகளையுங்கூட்டிப்பாடாநிற்பக் கதிரைவிரித்துவிளங்கும் வானுலகுரியதோர் திருவிழாவைக்கொண்டாடினாரென்க. (௰௩)

வினைவிளைத்தன வெப்பறக்குளுமுகத்துதித்தோன்
றனைவிளைத்தன தயைவழியளவறப்புகழ்ந்து
கனைவிளைத்தன களிப்பிலோராயிரநாம
நினைவிளைத்தன நெறிவருங்கனிநயமளவோ.

உரை.—அங்ஙன மவ்வானவரே பாவத்தானமக்குவந்த சுடுந்தீ வருத்தத்தைத்தீர்த்து நம்மைக்குளிர்ப்பிக்குமுகத் திங்கேபிறந்ததிருக்குமாரனை யவன்காட்டின தயையின்வழியா

லளவொன்றின்றிப் புகழ்ந்து மகிழ்ச்சியாற் கிளம்பினவோ சையோ டவன்றிருநாமங்களாயிரமுஞ்சொல்லி யவற்றினி னையெடுத்ததன்மையாற் கேட்டவர்க்குவந்தவின்பத்தின்றன் மை யளவறுக்குந்தன்மை யல்லவென்க. (௰௪)

முருகுவாய்ச்சுளை முட்புறக்கனியொடுபூங்கா
வருகுவாய்க்கனி பலவுமுழ்த்தளித்ததீந்தேனு
முருகுவாயிறு லுடைந்துமிழ்தேனுமார்ந்தொழுகிப்
பெருகுவாய்ப்புனற் பெற்றியோடோங்கினன்வளனே.

உரை.— சூசையிவையெலாங்காணவுங் கேட்பவும் வாச தீஞ்சுளையுட்கொண்டு புறத்துமுள்ளுடைய பலாமுதற்கொ ண்டு பூங்காவனத்தண்டிப்பழுத்த பலவகைத்தீங்கனிகளும் பதனழிந்துகுத்த பலவகைத்தேனின்றிரளும் பலவிறுட்டு டைந்துவிட்டதேன்றிரளுங்கூடியொழுகிப் பெருகுமாறு போல வவனு மினிதாய் மனதிலோங்கி மகிழ்ந்தானென்க. (௰௫)

வினைகெடப்பெரும் வெறுக்கையர்பொழிநிதிக்குப்பை
தனைகெடத்திருத் தாண்மிசைநவமணிகூப்பி
நனைகெடக்கனி னந்தனசால்பதோவென்றான்
சுனைகெடக்கலுழ்ந் தூற்றதாய்த்துளித்தகட்சூசை.

உரை.—உள்ளங்கொண்ட மகிழ்ச்சியுள்ளடங்காமற் றிரு க்குமாரனைநோக்கிச் சூசைசொன்னான்: தம்வினைகெடும்ப டி பெருஞ்செல்வமுடையோர் மட்டின்றிப் பொன்மழை யாகப் பொருளைப்பொழியுந்தன்மைமறைப்ப வுன்றிருப் பாதத்தில் நவமணிகளைத் திரளாய்க்குவித்தாலும்போதுமோ பூவரும்பழநுமறைக்கும் வடிவளமகனேயென்று னூற்றுச் சுனையினும் பெரிதோரூற்றுப்போல மகிழ்ச்சியால் விடா தழுங்கண்ணுடைய சூசையென்க. (௰௬)

மூற்றிவேமழற் பாலையிற்காய்ந்தெரிமுள்ளி
னெற்றிமேனறை நீலமுங்கமலமும்பூப்ப
வுற்றியேயென வொழுக்கமொன்றில்லநானுயர்வான்
பெற்றியேயுனற் பெற்றனனிதற்குமாறுளதோ.

உரை. — முதிர்ந்தவழலேபடர்ந்த பாலைநிலத்திற்கிடந்து தானும்வெந்து காய்ந்த முள்ளுமரத்தினுச்சியிலே வாசம்பொருந்தியகுவளையுந் தாமரையுமலர்வதற்குக் காரணமாகவந்தாயென்றதுபோல வொழுக்கமில்லாதநானே வானுலகடைந்ததன்மைமகனேயுன்னாலல்லோவடைந்தேன், இதற்குக் கைம்மாறுண்டோ வில்லையென்றானென்க. (௰எ)

உன்னைச்சேர்ந்தநா னும்பருள்ளொருவனேயானே
னென்னைச்சேர்ந்தநீ யியலுமில்லில்லானயினையோ
தன்னைச்சேர்ந்தகாற் றாழ்வினைவிளைவிதேயென்னப்
பொன்னைச்சேர்ந்தகாற் போற்றினனன்பளவற்றான்.

உரை. — இங்ஙனே நானுன்னைச்சேர்ந்தமையால் வானவர்க்குள்ளே நானுமொருவனைப்போலவானேன், நீயோ வென்னி லென்னைச்சேர்ந்தமையா லுனக்கேற்றவீடுமின்றித் தரித்திரனானையே. தீவினையொருவனைச் சேர்ந்தபோதே யிப்படியல்லோ தீயவைவிளைவிக்கு மென்றுசொல்லி யழகியதிருக்குமாரன் பொற்பாதத்தை வணங்காநின்றா னளவில்லாதவன்புடைய சூசையென்க. (௰அ)

ஆசவாவறு மருந்தவனறைந்தசொற்கேட்டு
வாசவாய்த்தென்றல் தீண்டியமுல்லைகள்மதுவை
வீசவாய்மலர்ந் தெனநகைகாட்டியவிமலன்
பேசவாய்மலர்ந் தெதிர்த்தகாற்பெரும்பயன்விரித்தான்.

உரை. — ஆசையால்விளைந்த மாசுகளைத்துடைத்த வருந்தவனாகியசூசை சொன்னதைக்கேட்டு மணவாய்த்தென்றல் வீசித்தீண்டப்பட்டமுல்லைகள் தீந்தேனொழுகி வாய்மலர்ந்தாற்போலத் திருக்குமாரனு மினிதா யொருபுன்னகையைக்காட்டித் தன்றிருமலர்வாய்மலர்ந் தினிவருங்காலத்தாகும்பெரும்பயன்களை விரிவாகச்சொல்லத்துடங்கினானென்க. (௰௯)

தேனருந்தினர் தீயவேம்பின்பமென்றருந்தார்
வானருந்திய வளத்தநான்வாழவோமண்மே
லூனருந்திய வுடலொடுதோன்றினேன்மிடிநோய்
நானருந்திட நண்ணியுன்மனைதெரிந்துதித்தேன்.

உரை. —திருக்குமாரனெங்ஙனஞ் சொன்னானென்னில்: இனியதேனையுண்டுவாழ்பவ ரின்பமென்று கைக்கும்வேம் பினைவிரும்பாரல்லோ. வானுலகுள்ளசெல்வத் தகுதியினுயர் ந்தநான் பூவுலகிடத்தில்வாழவோ விந்தவிடக்குடலையெடுத்து த்தோன்றினேன். இன்மையுந்துன்பமும் வேணுமென்றல் லோ நான்பூவுலகில்வந்தமையா லுன்வீட்டைத்தெரிந்து கொண் டிதுலேபிறந்தேனென்றானென்க. (௨0)

மனைசெயுந்தகந் தேடுவர்தகவிலார்மலர்ந்த
நனைசெயுங்கடி நறைவனத்தெழிலென நண்ணி
வினைசெயும்பகை வீழ்த்தநான்றெரிந்தவிம்மனையே
தனைசெயுந்திறன் றவிர்ந்தெழுந்தகுதிகேளென்றான்.

உரை.— தமக்குப்பெருமையில்லாதா ரிருக்குமனையின் சி றப்பினாற் பெருமைபெறத் தேடுவாரல்லோ, பூங்காவனந்தா ன் மலர்க்கழகாகாமற் பூத்தமலர்தாமதற்கழகாவதுபோல நா னுமிங்கே பாவப்பகையைத் தீர்ப்பவந்தவளவி விச்சிறுமனை யெனக்குத்தெரிந்ததனா லளவொன்றின்றி யிம்மனைதானே சிறப்புபெறுந்தன்மையைக்கேளென்று மீளவுஞ்சொன்னானென்க. (உக)

வேறு.

சென்னகநீர்பொழியத்தேன்பொழியும்புன்னகந் தி
ருவிற்பூப்பக்
கன்னகநீருமிழக்கவிநாகம்வெருண்டஞ்சக் கல்லூடுர்ந்த
கொன்னகமொப்பமணிகொழித்தருவிபாய்ந்தோடக் கொ
ழுஞ்செய்வாய்ப்பப் [ன்றே.
பொன்னகமொப்பவளர்புகழித்தாவியநாட்டுப் பொலிவித

உரை. — திருக்குமாரனெங்ஙனஞ் சொன்னானென்னில்: மலையினுச்சிமேற் சென்னகமென்னு மேகங்கள் மிகப்பெய் தமையா லங்கேதிரண்டபுன்னைமரங்கள் தேனைப்பொழித் துப்பூப்பவுங் கன்னகமென்னு மம்மலையுண்ட மழைநீர்கொ ப்புளித்தமையாற் கவிநாகமென்னுங்குரங்குகள் மிகவுமஞ் சி வெருளும்படிக்குக் கல்லிலூர்ந்த கொன்னகமென்னும்

பெரும்பாம்புபோல மணிகளைக்கொழித்தவருவி மலையினூர்ந்து கீழ்பாய்ந்தமையாற் செல்வமிகும்வயல் சிறந்துகாய்ப்பவும் பொன்னுலகமென்னுந் தேவலோகத்திணையாய் வளர்ந்து புகழப்படுமித்தாலியநாடு கொண்டமாட்சிமையிதென்றுணர்க. (௨௨)

விரைவாய்ப்பூந்தாழையுலாம் வெள்வளைபூவயலூர்ந்து மிளிர்முத்தீன்ற [களிகூர்ந்தாடுஞ்
கரைவாய்ப்பூஞ்சுனைபூப்பக் கனியாழ்வண்டிமிர்ந்தொகரங்
சுரைவாய்ப்பூம்பொழில்காய்ப்பவீரறமுமுச்சீருஞ் சுகமோரேழு
நிரைவாய்ப்பூங்குடியாகநிமிரித்தாலியநாட்டுநிலையிதன்றே.

உரை.— பின்னையுமாகடலிடத்து மலர்ந்தவாயால் வாசனைகொப்புளித்த தாழைக்காட்டிலுலாவித்திரியுஞ் சங்குகளங்கே நடுநாட்டிற் பூவயலிடத்திலூர்ந்துவிளங்கிய முத்துக்களையீனுகிற்குங் கரையிற்சூழ்ந்த தடாகங்கள்பூப்பவுமினிய வீணைக்குரலோடு வண்டுகள்பாடிக்களித்தமயில்களாடாநிற்கு மலர்ந்தவாயரன் மதுவைக்கொப்புளித்த சோலைகளினிய கனிகளைக்காய்ப்பவுமிருவகையறங்களு மூவ்வகைச்செல்வங்களுமெழுவகையின்பங்களு மொழுங்குபடக்குடியாகநிற்ப மாட்சியிற்பொலிந்த வித்தாலியநாடுள்ள நிலைமையிதென்றுணர்க. (இருவகையறங்களாவன: இல்லறந்துறவறமென்றிவை; மூவ்வகைச்செல்வங்களாவன: அருட்செல்வம், பொருட்செல்வம், கல்விச்செல்வம் - என்றிம்மூன்றும்; எழுவகையின்பங்களாவன: இடத்தாலும்-உண்டியாலும் -உடையாலும்-அறத்தாலும்- கல்வியாலும்-பொருளாலும்-துணைவராலும்- வருவனவேழுமென்க.) (௨௩)

பொருளீன்றபெருஞ்செல்வப் பொலிவொழிக்கும்வளம்புணரப் புகன்றநாடு [ன்றேதுந்
மருளீன்றவவாவொழிப்பவையகத்திஞனுதித்து மறைவெ
தெருளீன்றநூலொருங்கேதிருவிளக்கென்றேற்றியெலாத் திசைக்குத்தானே [ன்றே.
யருளீன்றவிளக்காகியவணியெலா மாளுமித்தாலியநாடன்

உரை. — சொன்னநாடு பொருட்செல்வமிகுதியாற்கொண்டபெருமைமறைக்க ஞானத்தால் மாட்சியடையும்படிக்கு மயக்குவிக்குமாசையையொழிப்ப நானே யிப்பூவுலகிற்பிறந்து வேதமாகவிதிக்கும் தேவநூலெல்லாந் தனக்கொரு திருவிளக்காக வேற்றிக்கொண்டு தானு மற்றத்திசைக்கெல்லாமருள்பொருந்திய விளக்காய்த்தோன்றி யுலகெலாமாளாநிற்குமித்தாலியநாடுதானென்றனென்க. (௨௪)

ஓராழியுருட்டியநான்வீற்றிருக்குங்கோயிலெனக் குல
    கிலாகிப் [தென்ன
பாராழியொன்றிணையாப்படர்செல்வநாட்டியல்யான் பகர்வ
நீராழிகடந்தங்கணிம்மனைசென்றடைக்கலமே நிலத்திற்
    செய்தாங் [றே.
கோராழியிரவியினிவ்வில்லிலங்கச் செயுமித்தாலியநாடன்

உரை. — மீளவும் பொதுவறவாண்டு நீதிச்சக்கரத்தையொருவனுருட்டி நான்வீற்றிருக்கு மரண்மனையாகப் பூவுலகிடத் தெனக்கமைந்ததாகி மற்றவிராசாங்கமெல்லா நிகரப்படாத செல்வத்துயர்ந்த வந்நாட்டியல்பினை நானேவிரித்துச்சொல்வதென்ன? அந்நாட்டுச்சிறப்பொன்றினைமாத்திரஞ்சொல்வேன். அதேதெனில்: இச்சிறுமனையேகடலைக்கடந்தந்நாட்டிற்சென் றிதற்கது வடைக்கலந்தந்து விளங்கழகொளிச் சக்கரமாகியசூரியனைப்போல விச்சிறுமனையும் விளங்கச்செய்யு மித்தாலியநாடுதானென்றனென்க. (௨௫)

பிறைதந்தகொடியுயர்த்தோர் பின்பிங்கண்ணுண்டெவ
    ரும்பெரிதழுங்க [ந்திச்
மறைதந்தநெறிநீத்திம்மனைக்கழிவாமென்றிதனை வானோ
சிறைதந்தவிசையொடுபோய்த்தெண்கடலைக் கடத்தித்தாலி
    யநன்னாட்டி [ப்பார்.
விறைதந்தவிளக்காகமலைநெற்றியிரவியைப்போ விலங்கவுய்

உரை. — சொன்னதெங்ஙனமாகுமென்னில், இளம்பிறைவிருதாகவேந்தியசிலரோ பின்னொளி விங்கே கொடுங்கோன்மையோடாண் டனைவரு மிகவருந்தும்படி வேதநெறியைவி

ட்டுக் கொடியராகநடந்ததனு விம்மனக்கு மழிவாகுமென்று வானவர்வந் திதைக்கையிலேந்திப் பறந்தவிசையோடு போய்க் கடலுங்கடந்து சொன்னவித்தாவியநாட்டி லாண்டவர்தந்த திருவிளக்காகச் சூரியனைப்போல விம்மனையங்கேவிளங்க வொருமலையுச்சிமேல் வைப்பாரென்றுனென்க. (உ௬)

ஓங்கியதோருடன்முகமோமுகக்கண்ணே கண்மணி
யோ வொளிசெய்மார்பிற்
றாங்கியதோர்பூண்கலனேசுடர்முடியோமுடிமணியோசொ
ல்லுந்தன்மை [னில்
நீங்கியதோர்வனப்பிவ்வில்நிலத்தெல்லைநிகரில்லா நேமிதன்
வீங்கியதோர்பேரின்பவீடதுவேமேல்வீட்டு வாயலஃதே.

உரை.— அங்ஙன மலைமேல்வைக்கப்பட்ட விச்சிறுமனையே பெரிதோருடம்பிற் றோன்றியமுகத்தைப்போலவோ, அம்முகத்திற்றோன்றிய கண்ணைப்போலவோ, அக்கண்ணிடத்திற்றோன்றிய மணியைப்போலவோ, விளங்கியமார்பிற்றுங்கியவாபரணத்தைப்போலவோ, தலைமேற்சூடின முடியைப்போலவோ, அம்முடியிற்பதித்த மாணிக்கத்தைப் போலவோ, சொல்லுந்தன்மையெல்லாங்கடந்த சிறப்பி விச்சிறுமனையே யெங்குநிகரொன்றின்றித் தோன்றிப் பூவுலகிடத்திற் பேரின்பவீடதுவாகி மேற்கதிவீட்டைப்புகுவாயலதுவேயாகுமென்றுனென்க. (உஎ)

அடிகோடிதாங்கியெழுந்தந்தரமேன்மணிச்சேகரத் த
கன்றநெற்றிக் [பாட
கொடிகோடியாடிடவுட்குழல்கோடிகுரல்கோடி குயின்று
முடிகோடிகீழ்பணியமுன்விளக்கோர்கோடிபகல் முற்றிமி
ன்னத் [றமன்றே.
துடிகோடிசூழ்முழங்கத்துணையறுமாங்கிம்மனையின் றேற்

உரை.—அங்கேவைத்த விம்மனைக்குச்செய்யப்படு மலங்காரமேதெனில்,காலாகக்கோடிதூண் கீழ்தாங்காநிற்கவும் வானமட்டுமெழுந்த மணிச்சேகரத்தகன்ற வுச்சிமேற் கோடி

கொடிகளாடாநிற்கவு முன்னேவாசித்த கோடிவீணைகளும் புகழ்ந்த கோடிகுரல்களு மிசைபடப்பாடாநிற்கவும் வணங்குவார்முடிகளொருகோடி கீழ்ப்பணியாநிற்கவு முன்னேமணிவிளக்கொருகோடி பகல்செய்தெறியாநிற்கவுஞ் சூழ முரசுமுதற்பலவாச்சியங்க ளொருகோடி முழங்காநிற்கவு நிகரொன்றின்றிச்சிறந்துதோன்று மிம்மனையென்றனென்க. (௨௮)

மிடிசென்றவீடென்னவிருப்புடனு னிவட்சென்றேன்
மேவியென்றன் [யெல்லாங்
னடிசென்றவீடென்னவாசையெழுந்தனைவரும்போ யவனி
குடிசென்றவீடென்னக்கொழுமணிபொன்பூந்தொடைகள்
குவித்துப்போற்றப் [ர்நூல்வல்லான்.
படிசென்றவீடென்னவளம்பெறுமிம்மனையென்றான் பட

உரை.— ஆசையா விலம்பாடுள்ள வீடிதென்று நானேவிரும்பி யிங்கேபிறந்தேன். இனியென்பாதந் தங்கினவீடிதென்று மற்றவராசையோ டிதனைவணங்க வித்தாலியநாட்டிற் சென்று நாற்றிசையெங்கும் யாவருஞ்சாய்ந்துபோவ தொன்றமையா துலகெலாங்கூடிக் குடியாய்நிற்கும்வீடிதென்று தோன்றி வந்தயாவரு நவமணிகளையும் பொன்னையு முள்ள மூவ்வகைப்பூமாலைகளையுமேற்றி வணங்காநிற்பப் பூமியில் வந்தவான்வீடிதென்று மாட்சியிற்பொலிந்துவிளங்கு மிச்சிறுமனையேயென்றான் முக்காலங்களைக்கடந்துபடரு மறிவின்வல்லானாகிய திருக்குமாரனென்க. (௨௯)

எனையீன்றவிணையாவித்தாலியநாடளவின்றி யியலுமா
ட்சி [லாற்சொன்ன
சுனையீன்றமலர்வாயான் றுளிமதுப்போலின்பமுகுஞ் சொல்
லினையீன்றவியப்புடனுண்மிகவேய்ந்தவையமற வினவித்த
ண்டே [ன்றான்மாதோ.
அனையீன்றநறுங்கொடியோனளினமடுந்தாடொழுதே நவி

உரை. — அங்ஙனந் தாமரைவாயானாகிய திருக்குமாரன் மதுவைத்துளித்தாற்போல வினியசொற்கொண் டென்னையீன்றநாடாகிய வித்தாலியநாடு நிகருமின்றியளவுமின்றிக்கொ

ண்டமாட்சியையச்சொன்னவினையாற் குளுமலுமலரைப்பூத்த கொடியையேந்தியசூசை யதிசயப்பட்டு மனதிற்றோன்றினவையந்தீர்ப்பதற்குத் திருவடித்தாமரைவணங்கி யொன்றினைவினவிச்சொன்னானென்க. (பாடினவ னித்தாலியநாட்டிற்பிறந்தானாகையி லெனையீன்ற வித்தாலியநாடென்றானென்க.) (௩௰)

ஏமுற்றுக்காத்தனகாலெவன்னில்லாமற்றடிக ளிடைநீ
காய்ந்தாற் [ந்தநாடர்
பூமுற்றும்பெயர்ப்பதரும்பொருளன்கோவாயினுநீ புகழ்
காமுற்றுச்சீலமறக்காசினிமுற்றழிந்திறைஞ்சுங் கடவுளெல்
லாந் [தென்றான்.
தாமுற்றுப்போற்றுவராம்பின்புரைத்ததகுதியுறுந் தடமே

உரை. —சூசையெங்ஙனஞ்சொன்னானென்னில்: சுவாமீ! தயைபுரிந்திரங்கி நீ பாதுகாத்தகாலத்து நிலைபெறாததுண்டோ? மீளவுநீ சினந்தகாலத்துப் பூவுலகனைத்தையு மொருங்குடன்பெயர்த்தசைப்ப துனக்கரியகருமமோ? அப்படியேயுன்னாலாகாததொன்றில்லையாயினு நீ புகழ்படச்சொன்னவித்தாலியநாட்டுள்ளோ ருலகினாசைமிகுதியா லொழுக்கமிழந்து பூவுலகெங்குமறியாதவர் தமக்குக்கேடாம்படி வணங்கும் பொய்யானதேவர்களெல்லாரையு மொருங்குடன்சேர்த்திச் சொன்னநாடர்வணங்குவதொன்றுகேட்டேன். இதிப்படியாயபின்பு நீ சொன்னதன்மையாகும்வழி யேதென்றான் சூசையென்க. (௩௧)

வேறு.

செவ்வழியுளத்துச்சான்றோன் செப்பியவுரைகள்கேட்ப
வெவ்வழியனைத்துந்தாவி யெல்லையைக்கடந்தகாட்சி [ட்ப
யவ்வழியணுகியாவு மணுகுமுன்முன்னு நூலோன்
மெய்வழிவிதிப்பமென்பூ விள்ளெனவிளம்பலுற்றான்.

உரை.—அங்ஙனஞ் செவ்வியவழியிற் கோணாமனதிற்பொலிந்தமாதவன்சூசை சொன்னதைக்கேட்டு வழியெலாந்தா

ண்டி யளவெலாங்கடந்த காட்சியால் வரும்பொருளெல்லா ம்வருமுன்னே முந்தி யவற்றைக்கண்டறியு நூலோனாகியதி ருக்குமார னினிவரும் மெய்ப்பொருளைவிரித்துரைப்பப் பூ வரும்பலர்ந்தாற்போலத் திருவாய்திறந்து சொல்லத்துடங் கினானென்க. (௩௨)

கண்கடந்தறிந்தயாவுங் கடந்துநானரூபியாய்நின்
றெண்கடந்தேதங்கொண்ட விவ்வுலகனைத்துங்காத்து
விண்கடந்தெவரும்வீட்டை மேவுதற்குருவாய்த்தோன்றி
மண்கடந்தரசாமாறு வகுத்தலேகேண்மோவென்றான்.

உரை. — திருக்குமாரனெங்ஙனஞ்சொன்னானென்னில்: மனிதர்கண்டதையு மறிந்ததையுங்கடந்ததன்மையோ டரூபி யாய்நின்றநா னளவுங்கணக்குமின்றித் தீவினைகொண்ட வி ப்பூவுலகம்யாவையுமிரட்சித்துவான்றிசைகடந்த மேற்கதிவீ ட்டை யாவருஞ்சேரும்படி யுருவெடுத்திங்கே மகனாய்த் தோன்றிப் பூவுலகெலாங்கீழ்ப்படுத்தி நானரசுகொள்ளும் படியைச்சொல்வேன், கேளாவென்றானென்க. (௩௩)

மழைக்குலம்பொழியுமாரி வழங்கிலாநாளினுண்ணீ
ருழைக்குலங்கண்டுவீழு மொத்தெலாத்துகண்மேல்வீழப்
பிழைக்குலமாகமாக்கட் பேருயிர்வினைகொண்டெஞ்சித்
தழைக்குலம்வளிநாள்வீழுந் தன்மையேநரகில்வீழ்வார்.

உரை.—மழைமாரியில்லாதநாளின் மானினங்களோரோ விடத்துண்ணுந்தண்ணீரைக்கண்டா லதனைப்பற்றியோடுமோ வலோடே மனிதரு மெல்லாப்பாவத்தின்மேலாசைவைத்து விழுகையிற் பாவிகளாகித் தமதுயிர்வினைகொண்டுகெட்டபி ன்பு காற்றுநாளிலே தழைகளுதிர்ந்து வீழுந்தன்மையா ல னுதினந் தீநரகத்தில்வீழ்வதுள்ளதாமல்லோவென்றானெ ன்க. (௩௪)

தீயவைவிழைந்தமாக்க டூயெரிவீழ்வரொன்றாத்
தூயவையிரங்கிக்காட்டத் துன்னிநான்றன்பமின்ப
மாயவைவிழைந்துவேதத் தருநெறியோதிச்சீற்றங்
காயவையியற்றும்யாவுங் காதலித்திரியாநிற்பேன்.

உரை. — அங்ஙனந் தீயபாவங்களைவிரும்பினமனித ரோய்வின்றித் தீயெரிநரகத்தில்விழுவாரென்றிரங்கித் தூயவறத்தின்வினைகளைக்காட்ட மகனாய்வந்து நானே துன்பங்களை யின்பமாகவிரும்பித்தேடி யெவர்க்கும் வேதத்திற்காட்டப்பட்ட நன்னெறிமுறைகளையோதி யென்னைப்பகைத்தயாவரும் கோபத்திற்காய்ந்து செய்யத்தகும் வருத்தம்யாவையும் விரும்பித்திரிவேனென்றானென்க. (௫௫)

தாய்வினையியற்றியாருந் தமரினுமினியராகத்
தீய்வினைநோயுஞ்சாவுந் தீர்த்துநானுழுதும்வேலை
தூய்வினைசெய்தபாலாற் சுடுவினைதீயோர்செய்ய
நோய்வினைமகிழ்ந்துநானே நுகர்கிற்பேனளவிற்றன்றே.

உரை. — அங்ஙன நானொருதாயைப்போல வனைவரு மென்னினத்தாரினுமேலே யினியராகப்பேணி வந்தநோயுஞ் சாவு மற்றத்தீதெல்லாத்தையு மவர்க்குநான் நீர்த்துக்கொண்டுவருகையி னுனவர்க்கு நன்மைசெய்யுந்தன்மையாற் பாவிகளெனக்குச்சுடும்வினையாகத் தின்மையே செய்துகொண்டுவர மட்டில்லாததுன்பங்களை மகிழ்ச்சியோடனுபவிப்பேனென்றானென்க. (௫௬)

பொருந்தலர்தடிந்துவீழ்த்துப் புட்குலத்தினிதெஞ்
ஞான்றும்
விருந்தமரமர்செய்கிற்பார் வெற்றியேயிங்கண்கொள்வார்
வருந்தலரியாருமுய்ய வருந்திநானொருவன்றெய்வ
மருந்தமரிரத்தஞ்சிந்தி மாண்டவிற்கொற்றங்கொள்வேன்.

உரை. — இப்பூவுலகிற் பகைவரைவெட்டிக்கொன்று கழுகுமுதலியபறவைகளுக் கெந்நேரமு மினியவிருந்தினைச்செய்யுங் கொடும்போராடினவரல்லோ செயத்தைக்கொள்வார். நானோவெனில், மற்றயாவரும் வருந்தாமல்வாழ்ந்திருப்பநானொருவனே வருந்தித் தெய்வமருந்தாகவென்னிரத்தத்தைச்சிந்தி யுயிர்விட்டிறந்த வினையின்பயத்தா லரியவெற்றியைக்கொள்வேனென்றானென்க. (௫௭)

என்றனனிளவலென்ற வினைவயெலாஞ்சூசைகேட்டுப்
பொன்றனனெனநீபொன்று பொன்றிலாவெற்றிகொள்வா
வென்றனனென்னவேகி விலக்கருமிடுக்கட்பாரி [யி
னின்றனருறுதிநிற்ப நெறியெனோவுணர்த்தியென்றான்.

உரை. — திருக்குமாரனிங்ஙனஞ் சொன்னதெல்லாத்தையுஞ் சூசைமாமுனிகேட்டபின்பு நீபட்டிறந்தாற்போலவிறந்து சொன்னபடி முடியாத வெற்றியைக்கொள்வது சரியே. ஆகிலுஞ் செயங்கொண்டாயென்று நீ போனபின்பு மறுக்கப்படாத துன்பநிறைந்த பூவுலகிடத்தினின்றமனிதர் நீகாட்டின தருமநெறியில் வழுவாதுறுதியாய்நிற்கும் வகையேதென்று காட்டுவாயாகவென்றானென்க. (௩௮)

வேறு.

தேன்செயுமாலையின்வாடுபுநீர்செயுந் திரையினாடித்தி
றனில்லா [லயாக்கள்
தான்செயுமீனமுற்றெஞ்சியதன்மையி லுளத்தோர்நிலையுமி
நான்செயுநல்லருள்பெற்றனரேலவர் நலநிற்பதுவேவாவரி
தென்னத் [வுணர்கொண்டான்.
தான்செயுநன்முறையின்றயைகாட்டிடத் தனயன்மீண்டிவ்

உரை.—சூசைகேட்டதற்குத் திருக்குமாரன்சொல்வான்: மனிதனென்னப்பட்டயாவரு மதுவைப்பொழிந்த பூமாலையைப்போல வுடனேவாடி யோடுமாற்றுத்திரைகளைப்போல வோயாமலலைந்தாடிப் பெலனொன்றின்றி யூனுள்ளவுடலாலீனராகி மெலிந்ததன்மையா லுளத்திலு நிலையொன்றில்லாமற்கிடப்ப துள்ளதுதானே. ஆயினு நான்செய்யுந்தயையினுறுதியைப்பெற்றாராகி லம்மனிதர்தாமே யறநெறிவழுவாமல்நிற்ப தரிதோவென்றுசொல்லி மீளவுந் தானக்காலத்திற்செய்யவிருந்த வளவில்லாதகிருபையின் முறைகளைச் சூசைமாமுனிக்கு வெளிப்படுத்தத் துடங்கினானென்க. (௩௯)

ஞாலம்வான்பொருள்செய்நலமின்றியு நுனிவேல்
சூழ்ந்துநிலமாளுங் [தமைத்தேர்ந்து
சோனலமின்றியுமீங்கெனக்கொத்தன குறும்பாட்டில்லோர்

வானவர்நான் றரத்தந்தன நூன்மறை வையத்தெங்கும்வகுத்
தோதச் [ள்வேன்.
சூனலங்கொண்முகிலொத்தவரோகியென் சுருதிபரவுற் றுலகா

உரை.—திருக்குமாரன் தான்செய்யநினைத்ததை வெளிப்படுத்த வெங்ஙனஞ்சொன்னு னென்னில்: கற்றநூற்செல்வமுங் குவித்தபற்பொருட்செல்வமும் வேலேந்திச் சேவகர் சூழ்ந்துகாவல்செய்யக் கோலேந்தி மனிதருலகாளு முத்தியோகசெல்வமு மென்றிவையெல்லாமின்றி யெனக்கொத்த தரித்திரர் சிலரைத்தெரிந்துகொண்டு வான்வீட்டுநன்மைகளை யெவர்க்குந்தரும்படிக்கு நான்றந்தவேதத்தை யெங்கும் போதிக்கச் சூலாக நிறைமழைகொண்டமேகங்கள் திரிந்தாற்போல வவர்களேயெங்கும்போகையி லென்வேதமும் பரம்பி நானேயுலகெலா மாள்வேனென்றானென்க. (௪௰)

இத்திறத்தோர்தமைவேந்தரும்போற்றுப வெல்லையில்
லரக்கலைவல்லோர் [ம்வியந்தஞ்சு
பொய்த்திறத்தாய்ந்ததற் நூன்மறுத்தேத்துப புவனம்யாவு
மெய்த்திறத்தற்புதராவொடுநூலெலாம் விண்ணின்றெய்தி
வரத்தோங்கு [பார்.
மத்திறத்தெத்திரத்தற்புதமாட்சியு மன்னூர்காட்டிநிலமீட்

உரை.—சொன்னதரித்திரரை நான்றெரிந் தவர்களை யரசர் முதலாய்ப்பணிந்துவணங்கவு மெல்லா நூலு மளவின்றிக் கற்றவர்முதலாய்த் தாம்படித்ததுபொய்யென்று மறுத்துத் தாமு மவர்களைப்புகழ்ந்துவணங்கவு முலகெலா மவர்கள்செய்வதைக்கண்டதிசயித்துவெருவவு மவர்களேவானினின்றுவந்த பொய்யாதவற்புதநாக்குஞ் சகலதேவநூற்களு மடைந்து கொண்டவரங்களின்றன்மையாலெங்குமெவ்வகையற்புதங்களையுங்காட்டிப் பூவுலகத்தை மீட்டிரட்சிப்பாரென்றுனென்க. (௪௧)

பாடியவோதையும்வீணைசெய்யோதையும் பகையற்
றொப்பவெவர்களோ [முக்கத்தாற்
றாடியநூன்மறையொத்தறநன்னெறி யன்னார்நீங்காவொ

கோடியவுள்ளமுமின்புறிச்சொன்னதுட் கொண்டுகுன்றாத்
தெளிவெய்தி [வேன்.
நேடியநன்றாறவுற்றவைநீங்கில நிலையேபெறவேழ்வரமீ

உரை. — அங்ஙனம் பாடினவர்வாய்க்குரலும் வாசித்தவீணைவாய்க்குரலும் வேறுபடா திசைந்தெழும்பியகாலத்தினிதா யெவருங்கேட்பதுபோல நான்றெரிந்தவர்கள் பிறர்க்குச்சொல்லிக்காட்டின வேதமுறைகளோடொப்ப நன்னெறி வழுவாது தாமுநடந்தொழுகுவாரொன்றமையாற் பாவிகள் முதலா யின்பங்கொண் டுள்ளுருகிச்சொன்னதைக்கேட்டு மனந்தெளிந் தறத்தின்மேலாசைவைப்பார். இங்ஙனம் விரும்பினநன்மை யெவருமடையவு மடைந்தநன்மைகளி னிலைபெறவு நானே யெவர்க்கு மேழுபொதுவரங்களைத் தருவே னென்றானென்க.

(௪௨)

வெண்ணிறத்தூசுகொள்மாசறவெண்மதிகதிருட்டோ
ய்த்தவினையென்னப் [முதற்கீந்து
புண்ணிறத்தார்புரைபோக்கியுட்டேவருள் பொழிநீராடன்
தண்ணிறத்தெய்தினுமுட்சுடுமாசையிற் றவறிமீண்டேதள
ர்ந்துள்ளந் [சவிடச்செய்வேன்.
தெண்ணிறத்தாசுகொள்ளாநிலையாண்மைசெய் திருநெய்ப்பூ

உரை. — நானிடு மேழுவரங்களாவன: தூயவெள்ளாடைகொண்டமாசுபோகச் சந்திரகதிர்களில்லைத் துவைத்தாற்போல மனிதரும்புண்பட்டதன்மையாற் செய்தபாவத்தோடு கொண்டமாசுகளைப் பிரயாசமின்றிப்போக்கி யவர்களுக்குத் தேவதிருவருளைத்தரும்படி ஞானஸ்நான முதல்வரமாகத்தந்தபின்ன ரின்பஞ்செய்துகுளிர்ப்பித்தாற்போல வந்து மனத்தைச்சுடுந் தீயவாசையிலுட்பட்டு மீளவுந்தளர்ந்துதவறி ஞானஸ்நானத்தா லடைந்த தூய்மைக்கு மாசு கொள்ளாமன் மனமேயுறுதியாய்நிற்ப வுறுதிப்பூசுதவிரண்டாம் வரமாகத்தருவேனென்றானென்க.

(௪௩)

தாய்விளையன்பிணையாதெனப்பின்புறத் தயையின்மி
க்கோர்முறையுள்ளி [ருந்தாவேன்,
மீய்விளையின்பொடியாவரும்வாழ்ந்துண விரும்பிநானேவி

நோய்விளைநஞ்சுறழ்தீயவைவயின்பென நுகர்ந்துமீண்டே
புணர்கொண்டாற் [செய்வேன்.
தீய்விளையப்பிணிதீர்க்குமருந்தெனச் சிறந்தோர்தேவமுறை

உரை. — மீளவுந் தாய் தன்பிள்ளைமேல்வைத்த வன்புமு
தலாய் நிகராமற் பின்னேகிடக்க வதனைக்கடந்ததயையை நா
னே நினைத்து வான்வீட்டின்பத்தோ டெல்லாருமினிதாயுண்
ணும்படிக்கு மூன்றும்வரமாக நரனேயவர்களுக்கு நற்கரு
ணையென்று தேவவிருந்தாவேன். இவையெலாமாகி யின்ன
ம் வருத்துநஞ்சோடொத்தபாவங்க ளின்பமென்று யாதா
மொருவனுட்கொண்டாற் பாவவிமோசனமென்னு நாலாம்
வரமாகப் பாவநோய்களைத் தீர்க்குந் தேவமருந்தினைத் தரு
வேனென்றனென்க. (௪௪)

துஞ்சியகாற்பழிப்பேயமர்வென்றெழத் தூய்நெய்
பூசற்றிறன்றந்து [ந்தே
விஞ்சியமாயிருணீக்குவிளக்கென விதிசெய்யத்தர்விளைவீ
யஞ்சியகோதிலவாழுமன்றலை யருள்செய்யாக்கையெனச்
செய்வே [நிற்பார்.
னெஞ்சியமாக்களுமித்திறத்தேழ்வர மெய்திக்குன்றத்தினை

உரை.— மீளவு மவனவனிறக்குங்காலத்துப் பழம்பழிப்
பேய்க ளவன்மேற்றொடுத்தபோரிற் செயங்கொள்ளும்படி
க்குத் திறத்தைக்கொடுக்கு மற்றொருதேவநெய்பூச வைந்தா
ம்வரமாகத்தந்து பூவுலகெங்குமொய்த்த பாவவிருளை நீக்குந்
திருவிளக்காக வேதநன்னெறிகாட்டுதற்கு மெய்யானகாரண
குருக்கள்விடாமலுண்டாகக் குருத்தத்துவ மாறும்வரமாகி
க் கடைசியிற் சிற்றின்பவாழ்வுகளை நுகரும்போதுமுதலா
யஞ்சத்தகும்பாவம்வாராதபடிக் கேழாம்வரமாக வுடலைவா
ழ்விக்கும்விவாகமே யுயிருக்குத் தேவவருளைப்பயக்குங் கட்
டாகச்செய்வேன். இத்தொகைப்பட்ட வேழுவரங்களைக்
கொண்டு திறமில்லாதமனிதராயினும் வயிரமலையோடொப்
ப நன்னெறிவழுவாது நிற்பாரென்றனென்க. (௪௫)

காருருவென்னுடல்மாமலைக்கோட்டுயர் கருணைச்செ
ந்நீர்மழைபெய்யப் [வோடித்
பேரொருவெள்ளமுமோடவிவ்வரம் பிரிந்தவேழாறென
தேரொருநன்றியில்லாமையிறீவினை தீக்கும்பாலையெனவை
கும்
பாரொருபூங்குளிர்சோலையென்றாக்கலும் பரிவற்றுய்வார்
நரரொன்றான்.

உரை. — அங்ஙன மென்னுடலே யொருமேகமாக வுயர்ந்தவோர் மலையுச்சிமேற் கருணையாற்பொழிந்த வென்னிரத்தமழையைப்பெய்து பெரிதோர்கருணைவெள்ள மோடிக்கொண்டுவருகையிற் சொன்னவேழுவரங்க ளேழாறாக வதிலேபிரிந்துபரவித் தேர்ந்தநன்மையொன்றின்றிப் பாவத்தீப் பற்றியெரியும் பாலைதன்மையினின்ற பூவுலகங் குளிர்ச்சிபொருந்திப் பூத்தசோலைதன்மையாகச்செய்து மனிதரெல்லாருந் தந்துயர்நீங்கிவாழ்வாரென்றான் றிருக்குமாரனென்க. (௪௬)

வானுகும்வாமையிறோன்றியவானவர் மகிழ்ந்தியாவு
மனத்துள்ளித் [ழ்பாடக்
தேனுகுந்தீங்குரல்யாழிசையேற்றபு திருச்சேய்நாமப்புக
கானுகும்பூங்கொடியோனுமத்தாண்மிசை கமழ்பூவேற்றித்
தொழத்தானு [கின்றான்.
மூனுகுமாக்கையையேந்தியநாதனை யுணர்ந்துபாடத்துடங்

உரை.— இங்ஙனந் திருக்குமாரன் சொன்னதெல்லாவற்றையும் வானுலகுரியவழகோடங்கேநின்ற வானவர் மகிழ்ச்சியோடேமனதிலெண்ணித் தேனொடொப்ப வினியகுரலுள்ளவீணைக ளிசைந்தொலிப்பத்தடவி யவன் றிருநாமங்களைப்புகழ்ந்துபாடாநிற்ப வாசனைபொழி பூங்கொடியோனாகியகுசையுந் திருக்குமாரன்பாதத்திற் கமழும் பூமலரேற்றி வணங்கினபின்பு தானு மூனுடலெடுத்தநாதனைத் துதித்துப் பாடத் துவக்கினானென்க. (௪௭)

வேறு.

ஒன்றில்லாதெல்லா முளவாக்கினேனல்லா
னன்றில்லாவையத்தி நன்றிசெய்வான்யாரோ
நன்றிசெய்வாரில்லா நாம்வாழத்தானிறந்து
வென்றிசெய்வானெமக்கு நீயல்லால்வேறியாரோ.

உரை. — ரூசை திருக்குமாரனைநோக்கி யெங்ஙனம்பா டினனெனில், ஒன்றில்லாதிருக்க வுதவியொன்றின்றி யெல்லா வற்றையு முளவாக்கினசுவாமியல்லா விப்பொழுது மொரு நற்குணமில்லாதபூவுலகி லித்தநன்மையெல்லாத்தையுஞ்செ ய்யத்தகுவனுமொனில், தனக்கு நம்மாலொருபயன்வாராதிருக் கக்கொள்ள நாமேவாழும்படிக்குத் தானுயிரிறந்து நமக்கு ச்செயங்கொள்பவனாகிய நீயேயல்லால் வேறுண்டோவெ ன்றானென்க. (இச்செய்யுள்முதல் மூன்றும் வெண்பாவிற் கேற்ற செப்பலோசையால் வருவனவென்றறிக.) (சஅ)

அன்புடையரென்பு மரிந்தளிப்பார்தன்னுயிரோ
டென்புடையமெய்யெல்லா மீந்துணவென்பான்யாரோ
யீய்ந் துணவென்றெவ்வுயிர்க்கு மெவ்வுணவுமீட்டியிவண்
வேய்ந்துணத்தானுண்ணிரந்த நீயல்லால்வேறியாரோ.

உரை. — மீளவு மிக்கவன்புடையோர் வேண்டும்பொ ழுது தம்முறுப்புகளி லொன்றினை யறுத்துச் சிநேகிதர்க்கீ வாரென்பார்களல்லோ? ஆயினுந் தன்னுயிரோடே தன்னு டலு மொருங்குடன் கூட்டித்தந் துண்ணச் சொல்லத்தகு வனுமொனில், எல்லாவகையுணவுகளைத் திரளாய்க்குவித் தெ ல்லாவுயிர்களு முண்ணத்தந்தபின் றானிவ்வுலகிற்றேன்றித் தனக்குணவிரந்தவனாகிய நீயேயல்லால் வேறுண்டோவென் றானென்க. (சகூ)

ஐகம்மாறிவண்வெஃகாக் காமுற்றிவையெல்லா
மெய்ம்மாறெமக்களிப்ப விஞ்சருட்சென்றேன்யாரோ
விஞ்சருட்சென்றுசறநா மீவாழத்தானொந்து
நெஞ்சருட்சென்றீங்கிறக்கு நீயல்லால்யார்யாரோ.

உ௬ா

உரை. — தனக்கிங்கேயொருகைம்மாறுவிரும்பாமற்றன்னன்பினளவாக வினையெல்லாவற்றையு முண்மையறியாதநமக்குச் செய்யும்படிக் கித்தொகைமிக்கதயை கொண்டவனானில், அந்தமிக்கதயையாற் குறையொன்றின்றி நாமேல்வீட்டில்வாழும்படிக்குத் தானே வருந்தித் தன் னெஞ்சுள்ளதயைபின்சென் றுயிர்தந்திறக்கத் தகுவனாகிய நீயேயல்லால் வேறுண்டோவென்றனென்க. (௫௰)

வேறு.

இனையவும்பலவுமாங் கியலநாடொறும்
வனையவும்புவிநிகர் மடியவானுல
கனையவுமம்மனை யரியதேவநூல்
புனையவுமாமுனி பொருவற்றோங்குவான்.

உரை.— இவையு மித்தொகைப்பட்டபலவு நாட்டோறு மங்கேநடந்துவருகையி லச்சிறுமனையைப்புகழும்படிக்குப் பூவுலகுள்ளநிகரெலாங்கடந்து வானுலகிற்கொப்பாகிச் சூசைமாமுனியு மேன்மேலு மரியதேவநூற்களை யறிவிலணிந்து நிகரொன்றின்றி யோங்குவானென்க. (௫௧)

பூவதுகொடியினோன் பொலியமீட்டொர்நா
ளாவதுமாயது மொன்றுமாயெலாந்
தாவதுவுணர்பிரான் றந்தகாட்சியை
நாவதுவருந்தினு நவிலும்பான்மையோ.

உரை. — அங்ஙனம் பூங்கொடியோன்சூசை மிகவுமாட்சியைப்பெறும்படியாக மீளவுமொருநாள் முன் னானதையறிந்ததுபோலப் பின்னாகுவதைக்கடந்தறியுங் கடவுளாகியதிருக்குமார னவனுக்குக்காட்டினகாட்சியை வருந்தினு நாவினாற்சொல்லுந்தன்மையோ வல்லவென்க. (௫௨)

மண்ணிடத்திருளறு மாவிநாணவும்
விண்ணிடத்துலாவிவில் விளங்குவேந்தனா
யெண்ணிடவிடமுமொன் றின்றியெண்டிசை
கண்ணிடத்தகவில கனியக்கண்டுளான்.

உரை.—அங்ஙனஞ்சூசையன் றுகண்டகாட்சியேதெனில், பூவுலகிடத்தின் மொய்த்தவிருளை நீக்கி யுதிக்குஞ் சூரியனு நாணும்படிக்கு மிக்கவொளியோடாகாயத்தில்விளங்கிய வெண்ணப்படாதவரசரை யெட்டுத்திக்கிலு நாங்கருதுந்தன்மை கடந்தவின்பத்தோடே கண்டானென்க. (௫௩)

பொன்னெடுங்குடைகளும் பொன்னம்பூண்களும்
வன்னெடுமிரதமு மணிக்கொடிஞ்சியுந்
துன்னெடுங்கொடிகளுந் தொகுதியொன்றிலா
மின்னிடும்வெயிலிடு மீனின் வில்லிடும்.

உரை.—அங்ஙனஞ் சூசைகண்ட நெடியபொற்குடைகளும் பொன்னாற்கட்டின வாபரணங்களு நெடியதேர்களு மணிகளாலழகுபெற்ற தேர்க்கொடிஞ்சிகளு நெருங்கியநெடுங்கொடிகளுந் தொகையொன்றின்றித் தோன்றிச் சூழமின்னவும் வெயிலைச்செய்யவும் வான்மீனினும் விளங்கவுஞ் செய்வனவென்க. (௫௪)

அரியினம்பூட்டிய வணிவிமானமும்
வரியினம்பூட்டிய விரதவையமும்
பரியினம்பூட்டிய திகிரிபான்மையுங்
கரியினம்பூட்டிய தேருங்கண்டுளான்.

உரை.— அங்ஙனங் கண்டபலதேர்வகையிற் சிங்கங்களைப்பூட்டினசிலதேர்களும் புலிகளைக்கட்டினசிலதுங் குதிரைகளைப்பூட்டினசிலதும் யானைகளைப்பூட்டினசிலதுங் கண்டானென்க. (௫௫)

பைம்மணிப்பசுங்குடை பவளச்செங்குடை
யைம்மணிச்சிதங்குடை தரளவங்குடை
செம்மணிக்குருங்குடை திங்கள்வெண்குடை
மைம்மணிக்கருங்குடை மயங்கித்தோன்றின.

உரை.—கண்டகுடைவகையோவெனில், மரகதப்பச்சைக் குடைகளும், பவளச்செங்குடைகளும், வச்சிரமணிக்குடை

களும், முத்துவெண்குடைகளும், சிவந்தமாணிக்கக்குடைகளும், சந்திரகுடைகளும், நீலமணிக்குடைகளு மிவையெலாங்கலந்து தோன்றினவென்க. (ருசு)

மயில்கல்தோகையு மணியும்வில்செய
வெயில்கல்நிழல்செயும் வெயில்செயுங்குடை
துயில்கவொளிமணி தொடுத்தயான்மையால்
வெயில்கல்வளிசெயும் வெயில்செயுங்கொடி.

உரை. — சொன்னகுடைகளிற் கட்டப்பட்ட நீண்டமயில்களின்றோகைகளு நவமணிவகைகளு மொளியைப்பரப்பினதினு லக்குடைகள் சூரியனொளியைமறைத்து நிழலைச்செய்து தாமே யொளியைச்செய்வன. மீளவுங் கொடிகளில்விளங்கின பலமணி சீலையோடுகட்டப்பட்டமையா லக்கொடிகளாடிச் சுடும்வெயிலையாற்றுங் காற்றுச்செய்து தாமேவெயிலொளி செய்வனவென்க. (ருஎ)

பேரொலிமுரசொடு பிறங்கும்பல்லியத்
தாரொலிபரியொலி யதிர்கைம்மாவொலி
தேரொலிகொடியொலி தியங்கும்பூணொலி
காரொலியொளித்தொலி கலந்தொலித்தவே.

உரை. — மீளவு முரசுமுதற்கொண்டு பலசங்கீதவாச்சியங்கள் செய்யுமொலியுங் குதிரையானை தேர்கள் விடுமொலியுங் கொடிகளாடிச் செய்யுமொலியு மணிந்தவாபரணங்களசைந்திடுமொலியு மிவையெலாமொருங்குடன்கூடி மேகமுழக்கத்தைமறைத்து முழங்குவனவென்க. (ருஅ)

மீனிகர்வெயிற்றிர ளெறிக்குமேனியார்
வானிகர்மகிழ்வுறி மகரயாழொடு
தேனிகர்தொனிக்குழல் திளைத்தவோதைசெய்
பானிகரிசைக்கொடு விசைகள்பாடுவார்.

உரை.— மீளவும் வான்மீன்களொப்ப விளங்கிய மேனியுடையசிலர் வான்வீட்டொத்த மகிழ்ச்சியைக்கொண்டுமக

ரயாழுந் தேனொத்தவினியகுரற் பலவீணைகளுந் திரண்டுசெய்யுமோசையாவியற்றிய பலவிசைகளுக் கிசைகளைப்பாடாநிற்பாரென்க. (௫௯)

நண்ணிலவணிகமே நயந்துசூழ்வர
வொண்ணிலவெறித்தபூ ணுலாவுமார்பினர்
தெண்ணிலவிமைத்தபொன் மகுடச்சென்னியா
ரெண்ணிலகுருசில ரிரிந்துலாவுவார்.

உரை.— அங்ஙன நள்ளொளிபரப்பின தானைகள் மகிழ்ந்துசூழவர வெண்ணப்படாதவரசர் வெயிலையெறிக்குமணிக்கலன்கள் மார்பி னுலவாநிற்கத் தெளித்தவொளிப் பசும்பொன்முடிசூடி யங்கங்கேயுலாவித்திரிவாரென்க. (௬௰)

மேகமொத்திழிமத வேழமீசிலர்
நாகமொத்தெழுந்ததேர் நவிரமீசில
ராகமொத்தகன் றுபா யயங்கள்மீசிலர்
யூகமொத்தணியணி யுலவியேகுவார்.

உரை.— சொன்னவரச ரிளமேகமொப்பமதத்தைப்பொழிந்த யானைகள்மேலேசிலரோ, உயர்மலையொப்ப வெழுந்த தேரி னுச்சிமேற்சிலரோ, மனவேகத்தோ டகன்றுபாயுங் குதிரைகள்மேற் சிலரோ படையூகங்களைவகுத்ததன்மையா லணியணியாக வுலாவித்திரிவாரென்க. (௬௧)

மின்னிறத்துருச்சிலர் விரிவில்வீசிய
பொன்னிறத்துருச்சிலர் பொறிசெய் தூயழல்
நன்னிறத்துருச்சில ரலர்ந்தநாண்மல
ரின்னிறத்துருச்சில ரேந்தியேகுவார்.

உரை.— மீளவு மவர்களுக்குள்ளே சிலர் மின்னுருவாகவுஞ் சில்ரொளியைப்பரப்பிவீசிய பொன்னுருவாகவுஞ் சிலர் பொறிவிட்டெரியுந் தூயநெருப்பினுருவாகவுஞ் சிலர் மலர்ந்தபலவகைப்பூவி னினியவுருவாகவுந் தோன்றித்திரிவாரென்க. (௬௨)

தோட்டழகலர்ந்தபூந் தொடைதொடுத்தொளி
திட்டழகமர்ந்தபூண் டியங்கிச்செஞ்சுடர்
காட்டழகுருக்கொடு கலந்தன்று நடன்
வீட்டழகரிவையர் விளங்கக்கண்டுளான்.

உரை.— மீளவுஞ் சொன்னவரசரோடேகூட வழகியவிதழ்கள்மலர்ந்த மாலைகளையுங் கதிர்களாலழகுபெற வெழுதப்பட்டதன்மையா லமைத்த பலமணிக்கலன்களையுமணிந்து சூரியனழகினைக்காட்டு முருவோடுகலந்துதோன்றிய வான்வீட்டுரிய வழகுள்ளபலமாதர்களு மங்கேவிளங்கக் கண்டான் சூசையென்க. (௩௩)

பானுரைத்ததுகிலைப் பழித்தவாடையுந்
தேனுரைத்தலர்தொடை செறிந்தபூண்களு
மீனுரைத்தொளிமணி மேனிமாமையும்
யானுரைத்திணைசெய வியலும்பான்மையோ.

உரை.— அங்ஙனந் தோன்றினமாதருடுத்த பாலினுரையினு மெல்லியவாடையு நுரை நுரையாக மதுப்பொழிந்தலர்ந்த மாலைகளோடே நெருங்கிக்கலந்தணிந்தமணிக்கலன்களும் வான்மீன்களையுமொத் தொளிபெற்ற வவர்கள்மணிமேனியழகுமிவையெல்லாவற்றையு முவமித்துரைப்ப வென்றலாகுந்தன்மையோ வல்லவென்க. (௩௪)

வாவிசேர்முளரிசேர் வதனவாமமுங்
காவிசேர்வடிவுசேர் களித்தநாட்டமு
நாவிசேர்குழலுஞ்சேர்த் திலங்குநங்கையா
ராவிசேரழகுசேர்த் தனுக்கஞ்சேர்க்கிலார்.

உரை.— தடாகங்களிற்பூத்த தாமரை முகவடிவுங் குவளையோடொத்த களித்தகண்களு நாவிமுதற் பலவாசனைபூசின கூந்தலு மிவையெலாங்கொண்டு விளங்கியவம்மாதரோ கண்டவருயிர் பின்செல்லச்செய்யு மழகுடையராகி யவ்வுயிர்தீயவாசையால் வருந்தச்செய்யார்களென்க. (௩௫)

முடிமணிதுளங்கவு மார்பின்மொய்த்துலாங்
கடிமணிவிளங்கவுங் கையங்காந்தள்சூ
ழிடிமணியிலங்கவு மெழின்முகத்தினர்
வடிவணியுடுவினூர் மதியமானுவார்.

உரை.— சொன்னமாதர் சூடினமுடியின் மணிகளு மார்பினெருங்கியுலாவின மணிகளுங் கையிலணிந்த வளைகளின்மணிகளு மின்னிக்கதிரைப்பரப்பினதினு லவ்வழகியமுகத்தினர் வான்மீன்களி னடுவேயூர்ந்த பலசந்திரன்களொப்பாரென்க. (௬௬)

உந்துமேகழ்மதியவெண் குடைகளூர்ந்துயர்
வந்துகீழணிவரு மணிமுகத்தொளி
சிந்துகேழினமணி திளைபொற்பாவையா
ரிந்துகீழிந்துவந் திரியமானுவார்.

உரை.— மேலேவிளங்கித் திங்கள்வெண்குடை பலவும்வரவே யதுகளின்கீழே யணியணியாக மணிமுகத்தோடொளி வீசியநவமணிநிறை யணிந்திலங்கும் பொற்பாவைகளாகவருமம்மாதரோ பலசந்திரன் கீழே பலசந்திரன்வருவதுபோலத் தோன்றுவாரென்க. (௬௭)

வன்மலைசிறைக்கொடு வான்பறந்தெனு
மின்மலையுருக்கொடு விளங்குதேர்மிசை
சொன்மலைபழித்தெழுந் தோன்றுமங்கையர்
பொன்மலைமுடியுறை சுடரைப்போலுவார்.

உரை.— மீளவு மிறகுகளைக்கொண்டு பருப்பதங்கள் வானத்திற் பறந்தாற்போல மின்னின மலைகளொத்ததேர்கள்மேலே சொல்லத்தகுமுவமையெல்லாம்பழித்துத் தோன்றிவருமம்மாதரோ பொன்மலையுச்சிமே லுதித்துவிளங்கினசூரியனையொப்பாரென்க. (௬௮)

எண்டிசையிருந்துவந் தின்னவாறெழில்
கொண்டிசையரசரோ டெழிலிக்கூந்தலார்

விண்டிசைநெருக்குற மிடையக்கண்டபூஞ்
செண்டிசைகொடிநலோன் வியந்துசெப்பினான்.

உரை.— அங்ஙன மெண்டிசையிலெங்குஞ் சொன்னவர சர்கூட்டத்தோடு மேகங்களொத்த கருங்கூந்தலுடைய மாதர்கள்திரிந்து வானமேநெருங்கத் திரளாய்வரக்கண்ட பூங்கொடியோன்குசை யதிசயப்பட்டுச் சொன்னானென்க. (சுசு)

மின்னினமெனநனை விரித்தகொம்பனார்
மன்னினமெனநிமிர் வயிரக்குன்றனார்
பொன்னினங்கண்டமேற் போவதேதெனு
வென்னினம்புரக்குநீ யியம்பென்றனரோ.

உரை.— மீன்களைப்போலப் பூவரும்பலர்ந்துபூத்த கொம்பினையொத்த மாதரு மிராசாக்களைப்போல வுயர்ந்த வயிரமலையினையொத்தமைந்தரு மழகிற்பொலிந் தங்கே வான்மேற்போவதேதென் றென்னினமாகியமனிதரை யிரட்சிக்கவந்த நீயேகாட்டுவாயாகவென்றான் குசையென்க. (எ0)

மைத்திறத்தொளித்தெதிர் வருவதாதியே
மெய்த்திறத்தனைத்தையும் விழுங்குங்காட்சியா
னத்திறத்தவவெவ வொன்னவரம்பல்வா
யித்திறத்தலர்ந்திவை யியம்பினனரோ.

உரை.— இருளிலொளித்துக்கிடந் தெதிர்காலத்தில் வருவதைமுதலாய்த் தப்பிதமின்றி யெல்லாவற்றையுமறிந்து கடந்தகாட்சியுடைய திருக்குமார னங்ஙன மங்கேதோன்றினவவெவவொன்றுகாட்டச் செவ்வாம்பலொத்த திருவாய்மலர்ந்திங்ஙனஞ் சொல்லத்துடங்குகின்றானென்க. (எக)

வேறு.

மீன்செய்தசுடரோய்க்குமேனியொடாங் கொளிசெய்
யவ் வேந்தரீட்டம் [கண்
கான்செய்தமலர்மொய்க்குங்கடிநாடுபலவாண்டு கசடற்றிங்

யான்செய்தமன்றநலமோர்ந்தினிவரும்பின்காலையிரு மெ
ன்னைச்சேர்ந்து
வான்செய்தமறைமுறையின்மனம்வழுவா தெஞ்ஞான்றும்
வான்வீட்டாள்வார்.

உரை. — வான்மீன்களினும் விளங்கினமேனியோ டங்
கேதிரியு மவ்வரசர்கூட்டமாரெனில், மதுமலர்பூத்த பலசெ
ல்வநாடுகளை யாள்பவராகி நானிங்கேதந்த கசடில்லாதவேத
மே நல்லதென்றாராய்ந் துட்கொண் டினிவருங் காலங்களி
லென்னைச்சேர்ந்தவராகி வானினின்றுவந்த வேதமுறைகளி
ற் சார்ந்தனையும்வழுவாமல் வான்வீட்டிற்சேர்ந்து முடியாக்
காலத் தங்கே யரசராய் வாழத்தக்கவர்தாமேயென்று னெ
ன்க. (எஉ)

இருள்பாய்ந்தநிசிபருகுமிரவியெனச்சுடர்வெள்ள மி
மைத்துப்பைம்பொற்
பொருள்பாய்ந்தமுடிசூடியாகிலப்புள்விருதேந்திப் பொ
விந்தாங்குள்ளோர்
தெருள்பாய்ந்தமணிகொழித்ததெண்டிரைபாய் செழுங்கழ
ணி திருவிற்பூப்ப [ரீட்டம்.
வருள்பாய்ந்தவிரோமைநாடாண்டளிக்கும்பல்லரசர்க் கரச

உரை. — தொகையிற்சொன்ன வரசரைவகுப்பறுத்திங்
கேகாட்டத்துடங்குகின்றான்: இராவிருளைமிழுங்கி நீக்குஞ்சூ
ரியனைப்போலத் திரட்கதிர்வெள்ளம்பரப்பித்தூயபொன்னா
ற்செய்த முடியைச்சூடி யிருதலைப்பறவையென்னு மாகில
ப்புள்விருதாகவேந்தியங்கேநிமிர்ந் தெல்லாரினுமேற்றோன்
று மவ்வரசராரெனில், ஒளிதெளிந்தமணிகளைக்கொழித்த பு
னல்பாய்ந்தவயல்களே செல்வத்திற்பூப்பத் தேவருட்செல்
வத்துயர்ந்த விரோமைநாட்டை யாளாநிற்கும் பலவரசர்க்
கரசராகிய விராயர்கூட்ட மவர்தாமென்றனென்க. (எரு)

வாமஞ்சாலோடைநுதன்மாவெருத்தமீதிங்கண் வரு
மிவ்வேந்தர் [பு
காமஞ்சால்விளைசெல்வங்கவருங்காரியநாட்டைக் காக்குமீட்

மேமஞ்சாலணிதியங்கவெறிவேல்கொண்டங்கண்பா யிவுளி
மேலோர் [டரீட்டம்.
நாமஞ்சால்வெற்றிதரநண்ணார்தொழும்புலோனியநன் ஞ

உரை. — விளங்கிய பட்டமணிந்தயானைகள்மே லிப்புற த்தில்வரு மிவ்வரசராரெனில்,பிறர்க்காசைவிளைதற்காரணமா கச் செல்வங்களை மிகவுங்கொண்ட வுங்காரியராச்சியத்தரசர்கூட்டமாமே; அங்கே யெறிவேலேந்தி யணிந்தபொற்கலன்கள் தியங்கியாடப் பாயாநிற்குங்குதிரைமேலே தோன்றினவரோவெனில்,வீரநாமத்தால் வெல்லப்படும்பகைவரஞ் சிவணங்காநிற்கும் புலோனியராச்சியத் தாசர்கூட்டந்தானேயென்றனென்க. (எச)

மேய்ந்தகதிருயிர்த்திமைக்கும் விருதெனவேல்முன்னி யிவண் மிடைந்தவீரர்
வாய்ந்தகதிர்ப்படையொன்னார்வணங்கயில்கொள் பாவரர்தம் மன்னரீட்டம் [லந்துய்ப்போர்
பாய்ந்தகதிருணுங்குடையார்பாயிருளுண்முடிசூட்டிப் பக
தோய்ந்தகதிொறிமணிகொய்சுவேசியநாடினிதாள்வார் தொகுதியீட்டம்.

உரை. — இப்பாலே கதிரைமேய்ந்து கொப்புளித்தாற்போல மின்னுநிற்கும் வேல்விருதாகமுன்போக நெருங்கிவரு மிவ்வீரராரெனில், ஒளிசெய் பலவகையாயுதங்களைக்கொண்டெதிர்த்தபகைவரால் வணங்கப்படும் வேலேந்தியபாவரரையாளுமரசர்கூட்டந்தானே; அங்கே சூரியன்கதிரைமிழுங்கி மறைத்தகுடைகள்செய்யு மிருளைமிழுங்கிப் பகலைச்செய்யு மணிமுடிசூட்டினவரோவெனில், கதிரிலேதோய்ந்தொளிவிடும் பலமணிவிளைவுள்ளசுவேசியநாட்டரசர்கூட்டந்தானே யென்றனென்க. (எரு)

செய்பரந்தமணிக்கொடிஞ்சித் திண்டேர்மீதாங்கரி போற் றிறத்தவல்லோர் [ட்ட
மைபரந்திழற்சோலைமதுமலர்கொய்தானியமாள் மன்னரீ

மெய்பரந்தகலன்மின்னமீன்பரந்தவிசும்புளர்போல் வேய்
ந்தவன்று [டம்.
ரைபரந்தவெற்பருவியதிர்ந்தரிகொய்யாச்சியநாட் டரசரீட்

உரை. — அங்கே சிவந்த மாணிக்கமணியழுத் தழகுபெ
ற்ற கொடிஞ்சியுள்ள தேர்கள்மேற் சிங்கங்களைப் போலத்
தோன்றினவராரொனில், இருண்டநிழலைச்செய்யுஞ்சோலைகள்
பூத்த தானியநாட்டரசர்தாமே; மறுபடியங்கே யுடலெலாம
ணிந்த மணியாபரணங்களிடுங்கதிர்களாற் பரவினமீன்களோ
டொளிரும் வானுலகத்தோ ருருவாகத் தோன்றினவரோ
வெனில், அழகியமலையினின் றதிர்ந்தொழுகுமருவியாற்பழுத்
தசெந்நெல்வினைவுள வாச்சிய நாட்டரசர்கூட்டமாமே யெ
ன்றுனென்க. (எசு)

மீன்முழுகுங்கொடித்திண்டேர் மீவரிமாவிருதேந்தி
வேய்ந்தவேந்தர் [ட்ட
கான்முழுகுங்குன்றஞ்சால்கவ்வுமுடிமுராவியமே காக்குமீ
மூன்முழுகுமொளிமுழுகுமுவணியைக்கொண்டுவந்திப்பா
லுறைந்தகோமார் [செல்வரீட்டம்.
தேன்முழுகும்பூம்பொழில்வாய்சிலீமுகமார் சிலேசியமாள்

உரை. — வான்மீன்களுட்கலந்த கொடியைவிரித்ததேர்
களின்மேலெழுந்து வேங்கையை விருதாகவேந்தி யங்கே
தோன்றினவராரொனில், பூவினுனு நாவியானு முதலியவற்று
னும் வாசனைமிக்க மலைகள்முடியாகச்சூழ்ந்த முராவியநா
ட்டரசராமே; பகைவர்மார்பி னுண்ட ஆனினு மொளியினு
ந்தோய்ந்த வெற்றிவாளையேந்தி யிப்பானுவந்துநிற்பவரோ
வெனில், வண்டுகள்நிறைந்த தேன்மலர்ச்சோலைகளை மிகக்
கொண்ட சிலேசியமாளு மரசர்கூட்டமே யென்றுனெ
ன்க. (எஎ)

செற்றுறுகடந்தனிலவிசைகடந்ததேமொழுமைச் செல்வ
வல்லோர் [டஞ்
பற்றுறுகடந்திருசேர்யயத்திணையாப்புவேமியர்தம் பதிகளீட்

சொற்றாறுகடந்தசினஞ்சூட்டாளியேந்தியவண் டோன்று
மன்னர் [ட்டம்.
கற்றாறுகடந்துரத்துக்கருணைமிகுஞ்சசோனியமே காக்குமீ

உரை. — உயரத்தால்மேகங்களையும் விசையினாற் காற்றையுங்கடந்த தேரின்மேலெழுந்தவவ்வரசராரெனில், பற்றினவாசையைக்கட்ந்த விருவகைச்செல்வமாகிய பொருட்செல்வமு மருட்செல்வமுங்கொண்டு நிகரில்லாதபுவேமிய வரசர்தாமே; மீளவுஞ் சொல்லுந்தன்மைகடந்த கோபத்தைக்காட்டின யாளியை விருதாகவேந்தி யங்கேதோன்றினவரோவெனில், கல்வினுங்கலங்காதநெஞ்சின் வீரத்தோடுதயையில்மிக்க சசோனியவரசர்கூட்டந்தா னென்றானென்க. (எஅ)

சினம்பழுத்துச்சீறிவிரிசிறைச்சிங்கமுயர்த்திங்கட் செல்லுஞ்செல்வர் [தலைவரீட்ட
தனம்பழுத்துத்திருவாய்ப்பத்தாழ்கடல்சூழ் வினேசியர்தம்
மனம்பழுத்துக்களியார்ந்தவடிவுற்றாங்கிவுளிமிசை வாய்ந்த
மன்னர் [குமீட்டம்.
கனம்பழுத்துப்பனிவரைசூழ்கலைமிக்கெத்திறாரியரைக் காக்

உரை. — சினத்திற்சீறியமுகத்தோ டிருசிறகுகளைவிரித்தசிங்கமே விருதாகவேந்தி யங்கே வருமரசராரெனில், பசும்பொன்மிகுதியாற் செல்வமிக்கோங்கக் கடலாற்சூழப்பட்ட வினேசிய நாட்டரசர்தாமே; மீளவுமங்கே பூரித் தகமலர்ந்தருங்களிகூர்ந்தவடிவோ டினிதாய்த்தோன்றிக் குதிரைமேல்வரு மவ்வரசரோவெனில், பொய்யாமழைபெய் தினிதாய்க்குளிர்ந்த மலைகளாற்சூழப்பட்டு மிகக்கல்வியிற்சிறந்த வெத்திறாரிய நாட்டரசர்கூட்டமே யென்றானென்க. (எகூ)

மையொக்கமின்னலெனமதகரிமீதொளிவயிர மணிக்குன்றன்னார்
பொய்யொக்கவளர்கருப்பம்பொழில்மொய்க்குஞ் சிசீலியமாள் பொருனரீட்ட [மே
நெய்யொக்கக்கதிர்தம்முநீடியவாளேந்தியவந் நிருபர்தா

மெய்யொக்கத்திருவொடறம்விசித்தொளிகொள் நாப்புலியா
ள் வேந்தரீட்டம்.

உரை. — மேகத்தோ டொழியா மின்னல் தோன்றினாற் போலக் கரியயானையமே லொளிவிடும்வயிரமணிமாலையொத் த வன்னாரரெனில், சொன்னபொய்யே யளவறவளர்வது போல வளர்த்தகரும்புகள் காடாகமொய்க்கப்பட்டசிவிய நாட்டரசர் கூட்டமே; பகைவரைவெட்டியுண்ட விரத்தத் தையு மின்னியகதிர்களையும் விட்டொளிறு நீண்டவாளை யே ந்தித்தோன்றின வவ்வரசரோவெனில், சொன்னமெய்யே யழிவின்றிவழங்குவதுபோல வழியாதசெல்வங்களையு மறங் களையு மொருப்படக்கொண்டு மிக்கபேர்பெற்ற நாப்புலி யையாளு மரசர்கூட்டமே யென்றுனென்க. (அ௰)

கண்கடந்தகவின்காட்டிக்கமழ்கமலக்கண்ணியணி களி
மார்பன்னார் [ரிவோரீட்டம்
பண்கடந்தகுரலனங்கண்படும்வயல்கொய்மாந்துவமாள் ப
விண்கடந்தபூங்கொடியைவிரித்தார்க்குந்தேர்நடவி மிளிரச்
செல்வோ [வரீட்டம்.
ரெண்கடந்தநிரைத்தீம்பாலினிதொழுகும்பார்மநலத் திறை

உரை. —அங்கேகண்கடந்த வழகினைக்காட்டிக் களிமிக்க லர்ந்தமார்பிற் கமழுந் தாமரைமாலையையணிந்தவராரெனி ல்,வீணைவாய்க்குரல்கடந்த வின்னிசைகளைப்பாடின வன்ன ங்கள் தூங்காநிற்கும் வயல்களுள்ளமாந்துவநாட்டை யாள் பவர்தாமே; மீளவு மேகங்களைக்கடந் துயர்ந்தமலர்க்கொடி யேந்தி முழங்கு மிரதங்களை நடத்தி யங்கேவிளங்கினவரோ வெனில், எண்ணப்படாதபசுக்கூட்டங்கள் திரளாய்த்தந்த வினியபா லொழுகாநிற்கும் பார்மநாட்டை யாள்பவர்கூட் டந்தானே யென்றுனென்க. (அக)

திரைபுறங்காண்கடற்பவளச் சிலுவைவிருதுயர்த்திவுளி
செலுத்துமன்னர்
புரைபுறங்காண்டுகிர்க்கொடியே புணரியிற்கொய்சேனுவமா
ள் பொருனரீட்டம்

விரைபுறங்காண்டொடைமார்பில்வெண்புறவுக்திர்பரப்பவே
யிந்தவன்ஞர் [னரீட்டம்.
வரைபுறங்காண்கோநதிசார்வளம்பெறவாழ்சாவோய மன்

உரை.— அங்கேதிரைகொண்டலைந்த கடலிலுள்ள பவள
ச்சிஞுவை விருதாகவேந்திக் குதிரைமேல்வரு மவராரொனில்,
குறையில்லாத தூயபவளக்கொடிகளைக் கடலின்முழுகியெடு
க்குஞ் சேனுவநாட்டரசர்தாமே; மீளவும்வாசனைவீசினமா
லையணிந்தமார்பின்மேலே விருதாக வெண்புறுவிளங்காநி
ன்று தோன்றுமவரோவென்னில், மலையினின்றெழுகு மிரா
சபுனலால்வந்த செல்வங்களைக்கொண்டுவாழுஞ்சாவோயநா
ட்டரசர்தாமே யென்றுனென்க. (அஉ)

மீனலங்கொள்மணித்திண்டோள் வீங்கியரித்தேரேறி
வேய்ந்தாங்கன்ஞர் [ன்னரீட்டந்
வானலங்கொள்படமுயிர்பெற்றென்னவளர்கல்வியமாள் ம
தேனலங்கொள்ளலங்கல்வேற்சேவகர்சூழ்ந்தாங்குலவுந் தி
ண்டோர்ச்செல்வோர் [ரீட்டம்.
நீனலங்கொள்கடல்பிரித்தநிலஞ்சேர்த்தாளிசிப்பாரு நிருப

உரை. — வான்மீனொத்த மணிகள் திரண்டது போலத்
தோன்றுந் திறத்தபுயங்களையோங்கிச் சிங்கங்களைப்பூட்டி
னதேரினின் றங்கே தோன்றினவராரொனில், வானுலகிலுள்
ளவழகினை யொருபடத்திலெழுதினபின்ன ரப்படமுயிர்பெ
ற்றிருந்ததுபோலத்தோன்றுங் கல்வியராச்சியத்தரசர்தா
மே; மீளவு மதுப்பொழிமாலைசூழ்ந்த வேலையேந்திய சேவ
கரிருப்புடையில்வரவே யங்கேதேரின்மேலுலாவு மச்செல்வ
ரோவெனில், கருங்கடல்நடுவேநின்று பிரித்த விருமாநிலத்
தையொருப்படத் தங்குடைக்கீழேசேர்த்தி யாளாநிற்கு மி
சிப்பாருராச்சியத்தரசர்தா மென்றுனென்க. (அரு)

போரொல்லைகடந்துகளும் பொற்கலினமாவேறிப்
பொலியக்கோமார் [ட
சேரொல்லைவாழ்வுறச்சீரொல்லையிலவிபெரியமாள் செல்வரீட்

நேரொல்லையில்லையென நிமிர்கவிகைநெடுஞ்செங்கோற் கொற்
றமன்னர்
பாரெல்லையல்லதிலபடரிஞுசித்தானியமாள்பரிவோரீட்டம்.

உரை.— பகைவர்தம்போர்க்களத்தைக் கடந்து பாயாநிற்கும் பொற்கடிவாளமுள்ள குதிரைகள்மேலிருந் தங்கேபொலிந்துதோன்று மவராரென்னில், கொண்டசெல்வ மெல்லையில்லாத்தாகையிற் றன்கொண்டவெல்லைகடந்து சூழச்சேர்ந்தமற்றியாரையும்வாழ்விக்கு மிபெரியராச்சியத்தரசர்தாமே; மீளவு நிகரொன்றின்றி யெவரையுநிழற்று நிமிர் வெண்குடையும் வளையாதநெடுஞ்செங்கோலுமுடைய வந்தவெற்றி வேந்தராரெனில், பூவுலகிற்குள்ளவெல்லையன்றி வேறெல்லையில்லாமற் படருமரசுள்ள விஞுசித்தானியராசாக்களே யென்றனென்க. (அச)

கொக்கொக்குந்தேரினெழீக்குணக்கொக்குஞ்சுடரொக்கக் குணத்தக்கோமா [ட்டம்
ரிக்கொக்குமலர்மணிசேரிழையொக்குமங்கிலியதீ விறைவரீ
புக்கொக்கும்புயலொக்கப் பொழிமதமால்களிறொக்கும்
பொலிகோலன்னூர் [ளீட்டம்.
திக்கொக்குஞ்செல்வமெலாந்திரண்டொக்குமீர்லாந்த தீவா

உரை. — அங்கே பரிகளைப்பூட்டிய தேர்மேலிருந்துகீழ்திசையிலுதிக்குஞ் சூரியனையொத்த வடிவோடுதோன்றின வரசராரெனில், மதுப்பொழிமலர்களுங் கதிர்விரிமணிகளுமிசைபடச்சேர்த்தியமாலையொத்த வங்கிலியதீவரசர்தாமே; மீளவு மேகத்திற்புகுந் தம்மேகமொப்ப மதம்பொழியானைகள்மே லங்கேயுயர்ந்த செங்கோலுடையவரோவெனில், எண்டிக்கிலுமுள்ளசெல்வங்களை யொருப்படத்திரட்டிக் கொண்டவீர்லாந்த தீவரசர்கூட்டமே யென்றனென்க. (அரு)

கோலுண்டேவிசையங்கொள் கோலுண்டவப்பசும்
பொற் கோல்கையுண்டோர் [டங்
பாலுண்டேபூந்துகில்தம்பாலுண்டபாத்தவராள் பதியரீ

காலுண்டேவிசைகடுத்தகாலுண்டவிரதமிசைகளித்தவன்றோர்
நூலுண்டேநீதிவழாநூலுண்டநேரவெற்கர் தலைவரீட்டம்.

உரை. — எய்தவம்பினை விசையில்வென்றோடுங் குதிரை மேலங்கே பசும்பொற்செங்கோலுடையராரெனில், பாலாவியினு மெல்லிய துகில்களைத் தம்பாலாகவுடைய பாரத்தவரையாளு மரசர்தாமே; மீளவுங் காற்றின்விசை வென்றோடுமுருளைத்தேர்மேன் மகிழ்ந்துநின்றவரோவெனில், நூலினுஞ் செவ்வையில்வளையாத நீதிமுறைகளுள்ள நேரவெற்காரச்சியத்தரசர்கூட்டந்தானே யென்றானென்க. (அசு)

விண்டீண்டியாடுகொடிவிமானமிசை விரிகதிர்ப்பூண் வேய்ந்தவன்றோர் [னரீட்டம்
மண்டீண்டியுலாங்கடல்சார்வயமெஞ்சாப்பிறாசியர்தம்மன்
பண்டீண்டியெழுங்குரலிற்பாடினர்சூழ்வரவானோர் பரி சொத்தன்றோர் [குமீட்டம்.
கண்டீண்டியின்புகுக்குங்கவின்றீட்டும்பவோனியராக் காக்

உரை. — வானோடொட்டியாடுங் கொடிகளைவிரித்ததேர்களின்மேலிருந்து கதிரைப்பரப்பின வணிகலன்களைப்பூண்டவன்றாரெனில், ஓர்புறத்துத் தொடுங்கடலாற் சூழப்பட்டு வீரதிறத்தான் மெலிவறியாத பிறாசியவரசர்தாமே. மீளவும் வீணைவாய்க்குரலோ டிசைபடப்பாடினவர் சூழ்ந்து வரவே யங்கேவானோரொத்தவரோவெனில்,கண்டவளவி லின்பத்தைப்பயக்கு மழகிற்சிறந்த பவோனியநாட்டரசர் கூட்டமென்றானென்க. (அஎ)

துப்பப்பாலுருச்சிவப்பத் தொக்கும்பரெனவிருதாய்ச் சுடர்மீன்கொண்டா
ரொப்பப்பாலுலகணிகொள்ளொளிச்செப்பாஞ் சிப்புருதீவுடையரீட்டம்
வெப்பப்பாலொளியெறிக்கும் வெண்மணிமார்பிடைத்தூங்க வெயில்செய்யன்றோர்
தப்பப்பாற்றீங்கனிகட்டத்துவக்குங்கான்றியதீவதிபரீட்டம்

உரை. — பவளநிறத்திலுஞ் சிவந்தவடிவைக்கொண்டு முழுதும் வானோர்க்கிணையாகவான் மீனவிருதாயேந்தியவன் றானொனில், இங்கே நிகர்வேறின்றிப் பூவுலகுள்ள வணிகலனெல்லாத்தையுங்கொண்டடக்கு மொருசெப்பாகத்தோன்றுஞ்சிப்புரென்னுந் தீவரசர்தாமே; மீளவுஞ் சுடாமற் சுடர்ந்து குளுங்கதிர்வீசும் பெரிதோர்வயிரமணி மார்பிலணிந்துவிளங்கு மன்னரோவெனில், பொய்யாமலினியகனிகளை நாடோறுந்தந் தின்பத்தை விளைவிக்குங் காண்டியதீ வரசரோ வென்றனென்க. (அஅ)

ஐயறுமோர்வகுப்பல்லாலிலகிலநாட்டரசரைத்தா னங்கண்காட்டி [த்தோதும்
மையறுமோர்விளக்கென்னவந்திவணன்மனத்திரங்கி வைய
பொய்யறுமோர்மறைநன்னூல் பொற்சுடரோன்கதிர்பட்ட புவனத்தெங்கு [முருகுச்சொல்லான்.
மொய்யறுமோர்முறைதானு முற்றுலவிவழங்குமென்றான்

உரை. — தேனேடொத்த வினியசொல்லுடையதிருக்குமார னிங்ஙனஞ்சொன்ன முப்பத்தொருவகுப்பரசரையன்றியே யெண்ணப்படாத வேறேநாட்டரசரைக்காட்டி யிருளறவைத்த திருவிளக்காக நான் பூவுலகிற்பிறந்து மனதிவிரங்கி யோதித்தரும் பொய்க்கலப்பில்லாதவேதமே சூரியன்கதிர்பட்டவிடம்விடாம லெங்குந் தானுங்கட்டாயமின்றி யினிதாய் நுழைந்து முழுதுமுலகெலா முலாவிவழங்குமென்றனென்க. (அகூ)

வேறு.

பண்கடந்தினியசொல்லான் பகர்ந்துகாட்டியவக்கோ
கண்கடந்தியலுமாமை கண்கடவாமைநோக்கி [மார்
யெண்கடந்தரியவின்ப மீதியென்றடியைப்போற்றி
மண்கடந்தமரரொத்தான் மதுக்கடந்தலர்ந்தகோலான்.

உரை.— அங்ஙனம் வீணைவாய்க்குரலினு மினியசொல்லுடைய திருக்குமாரன்சொல்லிக்காட்டிய வவ்வரசருள்ளவெ

ங்குங்காணாத வழகின்மிகுதியை மதுக்கடந்தொழுக மலர்ந்தகோலுடையகுழைச தன்கண் பிரளாமனோக்கி நீயேயெண்ணப்படாத வரியவின்பத்தை யெனக்குத்தந்தாயென்று திருக்குமாரன்பாதத்தைவணங்கி நுகர்ந்தவின்பமிகுதியாற் பூவுலகத்தைவிட்டு வானோரிலொருவனாகநின்றானென்க. (௯௰)

கனிவருமினையவாகிக் கதங்கொடுகடலுங்காருந்
தொனிவருமுழக்கத்திப்பார் துணுக்கெனப்பிளந்தவாயா
லணிவரும்புகைமொய்த்தெங்கு நடுக்கிருள்பரவச்செந்தீ
முனிவருநரகபூத முழங்கிமேற்றோன்றிற்றன்றே.

உரை. — இவையெலா மிந்தவின்பத்தோடாகையிற் கடலுமேகங்களுஞ் சினமிகுந்திட்ட முழக்கத்தின்றன்மையா லிப்பூவுலகமுழங்கிப் பிளந்தவாயாற் றிரளாயெழுந்த புகையோடெங்குநடுக்கமாக மாயிருள்பரவி நரகத்தினின்று தீயைமுனிந்தமுகத்தோ டொருபூதமெழுந்து முழங்கித்தோன்றிற்றென்க. (௯௧)

நோய்விளைசினங்கொடாவி நுகரவந்தெதிர்த்தகூற்றோ
தீய்விளைநரகப்பேயோ வவற்றிலுந்தீயதொன்றோ
மீய்விளைதலையேழ்கொம்பேழ் விரிசிறைச்சற்பமேறி
வாய்விளையழல்விட்டார்ப்ப மண்பிளந்தெழுந்ததன்றே.

உரை. — சொன்னபூதமோவெனில், வருத்தஞ்செய்யுஞ் சினத்தோ டுயிரையுண்ண வெதிர்த்துவந்தகூற்றன்றானோ, தீநரகத்திலுள்ளபேயோ, அவ்விரண்டிலுங் கொடியதொன்றோ வேதோவென்று நிச்சயிக்கப்படாமற் பிரிந்ததலைகளேழு மேந்தியகொம்புகளேழும் விரித்தசிறகிரண்டுமுள்ள பெரிதோர்சற்பத்தின்மேலேறிக்கொண்டு வாயாலழலைத் திரளாய்விட்டுமுழங்கி மண்பிளந்தவழியாலெழுந்ததென்க. (௯௨)

தேரொன்றுமிலதிவ்வாறே நினைப்பினும்பனிப்பவுள்
காரொன்றுமுழக்கத்தஃதே கதத்தரசாகவெய்தப் [ளங்
பாரொன்றுந்திகைகளெஞ்சப் படர்ந்ததற்கொத்தவீரர்
சீரொன்றுமலகிலாத சேவகர்மருங்கிற்சென்றார்.

உரை. — இங்ஙனே நினைத்தவளவின் மனமுநடுங்கிப் பதைப்பதற்குக்காரணமாகி நிகரொன்றின்றி யிடித்தமேகத்தினுமுழங்கிச் சொன்னபூதங் கோபத்தரசனுகத்தோன்றிவருகையிற் பூவுலகநெருக்கப்படத் திரளாய்ப்பரவி யவ்விராசாவுக்கொத்த வீரர்தன்மையா லெண்ணப்படாதசேவகரிருபுடையிற் சூழ்ந்துவந்தாரென்க. (கூ௩)

நாயினமென்னச்சீறி நலமெலாம்பகைத்தவன்ஞர்
பேயினமுவப்பவேதப் பெயரறவெகுண்டுதாக்கித்
தூயினமொருங்குங்கோறச் சூழெங்குமரவம்பொங்கி
வேயினமழிப்பப்புக்க வெந்தழற்கதத்திலொத்தார்.

உரை. — அங்ஙனந் தோன்றினவரோவெனில், சினந்தநாய்களைப்போலக் குலைத்துச்சீறி நல்லதெல்லாவற்றையும்பகைத்துப் பசாசுகள்மகிழும்படிக்குச் சத்தியவேதத்தின்பெயருமழிப்பவருந்திச் சினத்துடன்றாக்கித் தூயினமாகிய நல்லோரெல்லாரையுங் கொல்லத்துணிந்து சூழவெங்கு மாரவாரமிகப்பொங்கி மூங்கிற்காடழிப்பப் புகுந்தசெந்தீயோடொத்தாரென்க. (கூ௪)

இடத்திடத்தலகினல்லோ ரிறந்துயிரொஞ்சமாய்ந்து
சுடச்சுடப்புதுக்கலத்திற் சுவையபால்பொங்கற்போலப்
படப்படச்சிலரொண்ணின்றிப் பலரெதிர்த்துவப்பிலாவி
கெடக்கெடத்தந்துவான்மேற் கேழ்முடிசூடிநிற்பார்.

உரை.— அங்ஙன மத்தீயோர்கையா லெங்குமெண்ணப்படாதநல்லோ ருயிரொத்தற்து பட்டிறப்பாராயினும் புதுக்கலத்தில்வைத்த வினியபால் சுடச்சுடப்பொங்குவதுபோல வந்நல்லோருஞ் சிலர்பட்டிறந்தவளவாக வெண்ணிக்கையிலடங்காதபலரு யஞ்சாமற்றுணிந்தெதிர்த்துமனமகிழ்ந் துயிரைவலியக் கெடுப்பவர்கையிற்றறந்து சாகையில் வான்மேல் விரியொளிமுடியைச்சூடி வாழாநிற்பாரென்க. (கூ௫)

சேர்பகையெஞ்சவெஞ்சாப் பெருமையோர்வாய்ப்பக்கண்டு
சேர்பகையாதென்றையா செப்புதியென்னச்சூசை

யார்பகைக்காதைகேண்மோ வருந்தவவென்றுசொல்வா
னேர்பகைமறுப்பநேரா நிமிர்நெடுங்காட்சிநிராள்.

உரை.— அங்ஙனம் பெரும்பகைசெய்த தீயோர்மெலிவ தொழியப் பகைக்கப்பட்டநல்லோர்மெலியாது மேன்மே லும்வளர்ந்துவாழச் சூதைகண்டு வந்தபகையிதேதென்றை யாகாட்டுவாயாகவென்று கேட்டதற்குக் கண்டநிறைபகைச் செய்தியை யருந்தவகேளென்று மீளவுஞ் சொல்லத்துடங்கி ளுன் பகையாயெதிர்த்தயாவையுநீக்கிக் காலமெல்லாங்கடந் தெழு நிகராக்காட்சியுடைய திருக்குமாரனென்க. (௬௬)

வேறு.

சூடவில்வந்துநான் குணுங்கரசெங்கணும்பறிப்பப்
பூவில்வந்துதா னமரெலாம்பகைத்ததிர்புலிகள்
காவில்வந்துமான் கடுத்தெனமக்களுமப்பே
யேவிவந்துமா பகைவிளைந்தெங்கணுமாமால்.

உரை.—திருக்குமாரனெங்ஙனஞ்சொன்ணுனென்னில், நா ன்பூவுலகிற்பிறந்து பசாசிங்கேயாளாநின்ற கொடுங்கோன் மைபிடுங்குவேனென்றமையாற் பசாசும்பூமியில்வந்து நம் மைச்சேர்ந்தயாவரையுந் தான்பகைப்பதொழியக் காட்டி லதிர்ந்த கொடும்புலிகள்வந்து மான்களைச்சினந்து கெடுத் தாற்போலப் பசாசாலேவப்பட மனிதருங்கூடி யென்வேத த்தார்மேலெங்கு மாபெரிதோர் பகைவிளையு மென்றுனெ ன்க. (௬௭)

கடையரென்பவர் கசடரென்பவர்கலைகடிந்த
மடையரென்பவர் மறைமுறைகுலந்திருவிழந்த
புடையரென்பவர் புரைதுயரிழிவுநோயொருங்கே
யுடையரென்பவர் தூயவென்சுருதிநூலுடையோர்.

உரை.— அங்ஙனம் பகைக்கப்பட்ட சுகிர்தவென்வேத த்தை யனுசரித்தயாவரும் கீழ்மக்களென்றும் கசடரென்று மொன்றுமறியாதமடையரென்றும் வேதமுமுறையுங் குல

முஞ் செல்வமுமிழந்தவரொன்றுங் குறைதுயர்நிந்தைநோ யிவையெல்லாமுடையரென்றுஞ் சொல்லப்படுவார்களென் றுணர்க. (கஅ)

தாயுந்தந்தையுந் தமரொலாம்பகைசெயவென்று
மோயுந்தன்மையு மொன்றிலநகைத்தடித்தகற்றி
நோயுந்துன்பமு நுகர்ந்தெதமர்யாவருஞ்செம்பொன்
காயுந்தன்மையிற் கதிர்செயற்போல்வளங்கொள்வார்.

உரை.— அங்ஙனந் தாய்தந்தைமுதற்கொண் டுறவின்மு றையாரனைவரு நம்மைச்சேர்ந்தவர்களைப் பகைத்ததன்மை யி லோயாம லவர்களைநகைப்பவு மடிப்பவுந் தம்மினத்தி னின்றகற்றவுஞ்செய்து நோயுந்துன்பமுமடைந்தநமரோ வென்னிற் செம்பொன் னுலையிற்காய்ந்ததன்மைத் தொளி பெறுவதுபோல வவர்களும்பட்ட துயரின்றன்மைத் துயர் ந்தமாட்சியைப்பெறுவா ரென்றுணர்க. (கக)

கோனுங்கொடிய கோக்கணமும்பகைத்தன்ன
நானுங்கோடரு நானுடையாவருமடிய
வேனுங்கோனுமற் றடும்படைக்கொடுமிகவெகுண்டெட்ப்
பானுங்கோதிலர் குருதியோடுயிர்நலம்பறிப்பார்.

உரை.— சொன்ன வுறவின்முறையார் பகையுமன்றிச்செ ங்கோல்கோனும்படிக்கு நீதிமுறைகளைத்தப்பின பற்பலவ ரசரும் பகைகொண் டென்வேதமுமென்வேதத்தையனுசரி த்தயாவருங் கெடும்பொருட்டாக வேல்களுமம்புகளுங்கொ ல்வதற்குரிய மற்றவகையாயுதங்களையுங்கொண்டு மிக்கசின த்தோடெங்குங் குற்றமில்லாதவருடைய குருதியோ டுயிரும் பறித்துக்கொல்வா ரென்றுணர்க. (ஙா)

கொடியவேவினர் கொடுமைசெய்தபருவாரயரார்
நெடியவேதனை நீர்த்தவின்னமுதென நுகர்ந்தோர்
கடியரேயுமக் குரியதோர்கருமமித் துணையோ
மடியவேயுடல் மடியுமோவுயிரென நகைப்பார்.

உரை. — அங்ஙனங் கொடியசேவகர் கொடுமையோடவர்களைவருத்தவருத்த வச்சேவகரயர்ந்து மெலிவாரொழியமுடியாதவேதனை யினியநல்லமிர்தமாகவெண்ணி வருத்தப்பட்டநல்லோர் மெலிவொன்றறியார், மீளவுமச்சேவகரை நோக்கிக் கொடியரோ யும்மாலானகருமமிவ்வளவுதானோ வுங்கள்கையா லெங்களுடல்விழுந்து சாவதொழிய வுயிருஞ்சாகுமோவென் றவர்களை நகைப்பாரொன்றுனென்க. (ருக)

எரிந்தவெந்தழ லிக்குகும்பனிமலரென்பா
ரரிந்தவெம்படை யணிந்தபொற்பணிநலமென்பார்
பிரிந்தநல்லுயிர் பருகுநஞ்சமுதென்பார்பெருகப்
புரிந்தவெந்துயர் புரிமணவின்பமேயென்பார்.

உரை. — அங்ஙனம் வேதத்துக்காகப் பாடுபடுந் துணிவின்மிகுதியாற் சூழெரிந்தவழலே மதுப்பொழி பனிமலராகுமென்பார், தம்முறுப்புகள் வேறுவேறாகவறுத்த வாயுதங்களே யணியத்தகுமாபரணங்களென்பார், உடலினின்று பிரிந்தவுயிரை யுண்ணத்தகுநஞ்சே யுயிர்தருமமிர்தமென்பார், திரளாய்த்தமக்குச்செய்த வருத்தமே திருக்கலியாணவின்பமாகுமென்பா ரொன்றுனென்க. (ருஉ)

இத்திறத்தவ ரிறத்தல்காண்பலருமம்மறைசெய்
மெய்த்திறத்திலிவ் வீரமாமெனவுளத்தேறி
யத்திறத்திலங் கொருவர்மாய்ந்தாயிரர்தெளிந்து
பொய்த்திறத்தநூற் போக்கிமெய்ச்சுருதிகைக்கொள்வார்.

உரை. — இங்ஙன மெலியாததுணிவோ டவர்கள்சாகக்கண்டபலரு மவர்களனுசரிக்கும் வேதமெய்யாகையிலல்லோ வவர்களுக் கிந்தவீரம்வந்ததென்று நிச்சயித்ததன்மையா லங்கங்கே யொருவர் வேதத்துக்காகச்சாகையி லாயிரமேதெளிந்து தா முன்னனுசரித்த பொய்ம்மதங்களைவிட் டென்வேதத்தைக் கைக்கொள்வார்க ளென்றுனென்க. (ருங)

விளைத்தவேலியே விளைவுறப்பாய்புனல்போன்றே
நிளைத்தசோரியா லென்மறைவிளைவுநீள்வதுமற்

றுரைத்தவோகையா லுலந்தவராசுறிவான்மேல்
வரைத்தமாண்மையால் வளாவிலவாழ்வதுநோக்காய்.

உரை. — அங்ஙனம் விளைத்தவயல்விளைய நீர்பாய்வது போலச் சொன்னதன்மையிற் கொடியர்நிறைத்த நல்லோரி ரத்தத்திலு லென்வேதமும் விளைந்துவளர்வதாமே. மற்றப் படி சொன்னமகிழ்ச்சியோடு பட்டிறந்த நல்லோரெல்லா ரு மிதோவரசராகி யாகாயத்திலின் றெழுதப்பட்டதன்மை யா லரியவழகினைக்காட்டி மட்டின்றி வாழ்வதுயாரென்று ணென்க. (ாச)

பொன்னைக்காட்டிய பொறியழற்போல்வதேயல்லாத்
கொன்னைக்காட்டிய கொடுமைநொந்தெஞ்சதன்மறையோ
டென்னைக்காட்டிய வீடுளோர்பகைவெல்வாரென்றுன்
மின்னைக்காட்டிய விரிமணிமேகவாகனத்தான்.

உரை. — அங்ஙனந் தீயோர்தமரைப்பகைத்துச் செய்யு ங் கொடுமையெல்லாஞ் சுடச்சுடச் செம்பொன்சுடாச்செ ய்யுந் தீப்போலாவதொழியப் பயன்வேறின்றி நொந்து மெலியும்படிக் கென்வேதத்தினுண்மையு மென்வல்லமையு ங்காட்டுந் தைரியமுடையோர் தம்பகை வெல்வாரென் று சொன்னன் மின்னுமணிமேகத்தை வாகனமாகக்கொண்ட திருக்குமாரனென்க. (ாரு)

என்னைப்பற்றிநீ யிறந்துலகளிப்பமற் றமர்தா
நின்னைப்பற்றிமாய்த் திகல்வெலநினக்கினிதிகர்யா
ருன்னைப்பற்றிநா னுதிரந்தந்தாசுறவிரங்கிப்
பின்னைப்பற்றிநீ தருகெனப்பெருந்தவன்றெழுதான்.

உரை. — இவையெலாங்காணவுங் கேட்கவு மதிசயப்ப ட்ட பெருந்தவனுகியகுசை திருக்குமாரனைவணங்கிச்சொல் வான்: எனக்குவேண்டி நீ யிங்கே யுயிர்பட்டிறந்தாற்போல விறந்து பூவுலகெல்லாமிரட்சிக்கவு மீளவு முன்னைச்சேர்ந்த வரு முன்னைப்பற்றிச் செத்தாற்போலச்செத்துத் தம்பகை வரவெல்லவு மிதின்பின்புனக்குநிகருண்டோ? மற்றப்படி

நானுமுன்னைப்பற்றி யென்னிரத்தத்தைத்தந்திறந்து நானரசடைய வினியெனக்கிரங்கிச்செய்வாயென்று வணங்காநின்றானென்க. (ாசு)

களிப்பவானமு நாயகனோர்புன்னகைகாட்டி
யளிப்பவார்வமு மாவியுமொன்றுறத்தழுவித்
துளிப்பவாதுவந் துணர்விரிகொடிநலோயுன்னைத்
தெளிப்பவரசையிற் செப்பியதகுதிசால்பென்றான்.

உரை.— அதற்குநாயகன் வானுலகமுதலாய்க் களிகூர்தற்குக் காரணமாகியவொருபுன்னகையைக்காட்டி யிருவரன்புமுயிரு மொருப்படச் சூசையையிறுகத்தழுவி மதுவைப்பொழிய மலர்ந்தகொடியோ யுன்னன்புதெளிவாய்க் காணப்படும்படிக்குச் சாதல்வேண்டுமோ? நீ யாசையோடிந்தவரத்தைக்கேட்டதுபோதுமே யென்றானென்க. (ாஎ)

தீய்வரும்படை சிந்துசெந்நீரரசெனக்காய்
நோய்வருந்துயர் நுகர்பொறையரசனக்கென்றான்
மீய்வருந்திரு வுளம்வளன்மேவியுள்வலிப்பத்
தூய்வரும்படுந் துயரறிவன்பிணிசொல்வாம்.

உரை.— மற்றப்படி கொடியவாயுதங்கள் திறந்தகாயங்களிரத்தஞ்சிந்திவரு மிராசாங்கமெனக்கேயாகிப் பிணிநோய்செய்யுந் துயர்களைப்பட்டுக் காட்டினபொறுமையால்வருமிராசாங்க முனக்குத்தானேயென்றான் திருக்குமாரன். அதற்குச்சூசை திருவுளத்தைவணங்கியுடன்பட்டமையாலோரோரிடத்து நல்லோரும் படுந்துன்பத்துக்காறுதலாகச் சூசையனுபவித்த பிணிநோயின்னதென்றினிச்சொல்வோமென்க. (ாஅ)

புரோகிதப்படலமுற்றும்.

ஆகப்படலம்-ஙஉ-இ - விருத்தம்

ஙதுஙாஅ.

—oooo oooo—

முப்பத்துமூன்றுவது.

பிணிதோற்றுபடலம்.

வேறு.

வேன்முகத்தசடர்கையால் வீழ்ந்திறப்பரிதென்கேனே
நான்முகத்துறுநோய்க்கெஞ்சாநயத்தமைவரிதென்கேனே
கோன்முகத்தீண்டேசாதல் குணமெனப்பலநாள்வெந்நோ
பரன்முகத்தவலமாற்றுப் பலர்தமைக்கொல்வாரன்றே.[ய்ப்

உரை. — தீயோர்கையால் வெட்டுண்டு வேவின்முகத்தி விறப்பத்துணிவ தரிதென்பேனே, நானுமுகத்துவருநோய்கள் மொய்த்தவிடத்தி லுட்டுணிவுகெடாம லவற்றைமகிழ்ச்சியோடே பொறுப்பதரிதென்பேனே? ஆயினு மதிலு மிது வரிதென்றமையா லல்லோ பலரோயுற்றநோயினால்வரும் வருத்தத்தைப்பொறுப்பதாற்றாம லம்புமுனைமேல் விழுந்து தாமதமின்றிச்சாதலே குணமென்று தாந்தம்மைக் கொல்வ தறிவோமென்க. (க)

தீங்கியன்றுயதுன்பந் திரிந்தறவிளைவுகாண
வீங்கியன் றுதித்தநாத னெளியனாய்த்தனக்குமற்றை
யாங்கியன்றமைகைத்தாதை யனைத்திலுமரியதுன்பப்
பாங்கியன்றரசுகொள்ளப் பலபிணிபடச்செய்தானே.

உரை. — பாவவினையா லுலகில்வந்ததுன்பங்கள் தங்குணந்திரிந்துமாறி நல்லறம்விளைவதற்குதவும்படிக்குப் பூவுலகின் மகனாயுதித்தநாதன்றானே யெளியனானதுந்தவிரத் தனக்கிங்கே யமைந்தகைத்தாதையாகியசூசையு மெல்லாத்துன்பங்களி லரியதுன்பத்தைநுகர்ந்து பொறுமையி னரசுகொள்வதற் கவன் பலபிணிநோய்களை யனுபவிக்கச்செய்தானென்க. (உ)

மேன்மையேபொருளாலாகி மிக்கவையிங்கணுண்டேற்
கோன்மையேமனிதர்க்காகுங் குன்றுமஃதென்றுவான்மே
னாண்மையேயரசீந்தங்கண் ணுண்டகைமேன்மையாகும்
பான்மையேசூசைபுன்கண் பட்டதோர்நிலையிற்கண்டோம்.

உரை.— இப்பூவுலகிற் பொருளளவாக மேன்மையுமாகி யப்பொருட்செல்வத்தின்மிக்காரே யிங்கேயரசராவார், ஆயினு மிவ்வரசு நில்லாதுகெடுமென்றமையால் வானுலகிற் பொறுமையா லரசாகியதனா லங்கே யரியமாட்சியிற்சிறந்த மேன்மையாகுந்தன்மையைச் சூசைவருந்தினதன்மையாற் கண்டோமல்லோவென்க. (௩)

வெவ்வினையனைத்தும்பாவ விளைவுதான் மீண்டத்துன்ப
செவ்வினைவளர்வுகாட்டத் திருவுளமெனநல்லோர்கண் [ஞ்
டவ்வினை நுகர்ந்துமாழ்கா வருந்தவன்றானும்பன்னோய்
மொய்வ்வினைகொண்டுள்ளெஞ்சா முற்றிவண்டிலதமானான்.

உரை.—முன்சொன்னபடி சுடும்வினையாகிய துன்பங்களியாவும் பாவத்தால்விளைந்தன, ஆயினு மத்துன்பங்களே தான் நல்வினைவளர்ச்சியைக்காட்டற்குதவத் திருவுளமாயிற் றென்று நல்லோர்கண்டு தமக்குவருத்தம்வந்தபோ துளத்தின்மயங்காததற்கு மாதவனாகிய சூசைதானே பலநோய்கொண்டுவருந்தி மனதிற்றளரா திப்பூவுலகின் முழுதொரு திலதமாகநின்றானென்க. (௪)

இறைக்கொருதாதையாகவெழுந்தெலாவறங்கள்பூத்து
மறைக்கொருகொழுகொம்பன்னான் வருந்திநோயுற்றபா
லாற் [டை
பொறைக்கொருநிலைச்சார்பல்லாற் புலம்பிநாமெய் தும்பீ
மூறைக்கொருமருந்துமாகி முற்றுநாமுவப்பநொந்தான்.

உரை.— அங்ஙன மவதரித்தநாதனுக் கொரு தகப்பன்றன்மையாகநின்று சகலபுண்ணியங்களை மலராகப்பூத்து வேதமாகியகொடி மேற்படர்வதற்கொருகொழுகொம்பாகநின்

றசூசை பிணியைக்கொண்டுவருந்தினதன்மையாற் பொறு மைதளர்ந்துவிழாததற் கதனைத்தாங்கு நிலைச்சார்பாவதன்றி யே நாமேபுலம்பி யடையுந்துன்பங்களுக்கெலா மினிய தோர்மருந்தாகி நாந்துயர்முகத்தின் மகிழும்படிக்குத் தா னேநொந்தானென்க. (ரு)

விரைகிடந்தலர்ந்தபைம்பூ வெந்தழற்பட்டதேபோ
னுரைகிடந்திரிந்தமூப்பி னைந்துடல்தளர்ந்துவாட
வரைகிடந்திழிந்துமல்கும் வாரியின்மலிந்தநோய்கள் [ல்.
சிரைகிடந்திழுத்தென்பெல்லாஞ் சினங்கொடுகுடைவதாமா

உரை. — அங்ஙனம் வாசனைவீசிமலர்ந்த குளிர்ம்பூச் செந் தீப்பட்டுவாடினதன்மையிற் சூசையு நரைகொண்டுசாய்ந் தமூப்பிலே தன்னுடல்தளர்ந்துவாடற்காரணமாக மலையி னின்றேடும்வெள்ளம்போல மலிந்தபலநோய்மொய்த்து நரம்புகளையிழுக்க வெலும்புகளைக்குடைய வருத்திற்றென் க. (அந்நோய் துடங்கினமுகத்திற் சூசைக் கைம்பத்திருவ யதாயின தென்றமையா னரைகொண்டுசாய்ந்த மூப்பெ ன்றொன்க.) (சு)

போர்முகத்தஞ்சாவீரப்புழைக்கையோபுணரிமோத
நீர்முகத்தசையாக்குன்றோ நெடும்பிணிமுகத்தெஞ்சாதான்
கார்முகத்தலர்ந்தமுல்லைக் காவெனத்திரண்டபன்னோய்
சேர்முகத்தலர்ந்துதேவ திருவுளந்துதித்தல்வி்ள்ளான்.

உரை. — வெம்போர்முகத்தி லஞ்சாத வீரயானையைப் போலவோ, கடற்றிரைபொங்கிமோதுமுகத்தி லசையாதவ யிரமலையைப்போலவோ, நெடுநாள்வந்துநீங்காதபிணிமுக த்து நெஞ்சிற்றளராதசூசைமாமுனி யிடிக்குமேகத்தின்மு கத்தில் மலருமுல்லைக்காவுபோலத் திரண்டுசேர்ந்தபலநோ ய்முகத்திற் றனுமனமலர்ந் திதுவேதிருவுளமென் றதை யோயாமற் றுதியாநின்றனென்க. (எ)

தீய்வருந்துகள்கள்வெஃகித் தீயவோவருந்தலாற்றே
மாய்வரும்புரைதீதல்லால்வழுவுமொன்றுண்டோவென்பான்

மீய்வருந் துன்பமின்பம் வீற்றுவீற்றாகக்கொள்ளா
ராய்வருந்திரியாத்தேவ வன்புணர்நீராரென்பான்.

உரை. — ரூசைவருந்தினதன்மையிற் றேறிச்சொல்லுந் தன்மையாவது : மனிதரென்னப்பட்டநாமெல்லாருந் தீய பாவங்களைவிரும்பித்தேடினபின்பு வருந்தியவருத்தத்தைப் பொறுக்கலராற்றுதிருப்பவோ? ஒழிதற்கரியபாவமே தீதா மொழிய மற்றொருகேடிங்குண்டோவென்பான். மீளவு மாண்டவன்றிருவுளமாக நமக்கு மேனின்றுவரும் பலதுன் பமு மின்பமு மொன்றென்று கைக்கொள்வாரொழியத் துன்பமிது வின்பமதுவென்று வேற்றுமையாகக்கொள்ளா ராராய்வதற்கரியமுறையாற் றிரியொன்றின் றிதிற்குந் தேவ நட்பின் றன்மையை யுணர்ந்தவரென்பானெனக. (அ)

பொய்க்குமோரின்பமாந்திப் புரையெனுநஞ்சுட் கொண்டாற் [பான்
கைக்குமோர்மருந்துண்ணுதோ கடுத்தநோயொழியுமென்
றைக்குமோரம்பிற்பீடை தகைகெடமிகுங்கால்வான்மேன்
மொய்க்குமோரின்பமுள்ளி முற்றெலாமவியுமென்பான்.

உரை. — பொய்யின்பத்தையுண்டு பாவமாகிய நஞ்சுட் கொண்டபின்னர் கசக்குமருந்தினையுண்ணும லந்நஞ்சினால் வந்துகடுத்த நோயொழியுமோவென்பான். மீளவுந் தைத்த வம்புபோல் வந்தவருத்த முயிரின்மாட்சிகெடும்படி மிகுந் தகாலத்துப் பொறுமையால் வானுலகின்மொய்த்துவரும் பேரின்பத்தை யுணர்ந்துநினைக்கவே முழுதத்துன்பமெல் லா மவிந்தாறுமென்பானெனக. (கூ)

முக்குடைநிழலில்யாவு முற்றுமாளிறைவன்பாரிற்
புக்குடைப்புணகடீர்த்துப் பொன்றவேயுதித்தபின்ன
ரிக்குடையின்பமல்லா லெமக்கிடர்தகாதென்பாரோ
மிக்குடைச்செல்வவல்லோன் விரும்பியநன்றிதென்பான்.

உரை.— முக்குடைநிழலாகிய வளவில ஞானத்தாலுந் தி றத்தாலுந் தயையாலு மனைத்தையும் பொதுவறத்தனியே

யாளாநிற்கு மிறைவன்றானே யிப்பூவுலகின் மகனாய்ப்புகுந்து நமக்குள தீவினைதீர்த்து வருந்தியிறப்ப வந்தருளினபின்ன ரினியதேனொழுகுமின்பமொழியத் துன்பநமக்குத்தகாதென்பாருண்டோ? மிக்கசெல்வனாகியகடவுளிங்கேவந்து விரும்பித்தேடினநன்மையே துன்பந்தா னென்பானென்க. (௰)

அத்திறத்தின்பமாக வழுங்கிய துன்பந்தாங்கிக்
கைத்திறத்தியற்றலின்றிக் காற்றிறத்திரிதலின்றி
மெய்த்திறத்துருகிவாடி மேற்றிறத்தூக்கம்வாடா
வெத்திறத்தாலுமொவ்வா விருமையிற்பொலிந்தான்சூசை.

உரை. — அங்ஙனஞ் சூசைமாமுனி வருத்தஞ்செய்த துன்ப மின்பமாகத்தாங்கிக்கொண்டு கையாலொன்றுஞ்செய்யவுங் காலாலோரடிவைக்கவுமாட்டாமற் சரீரமுருகிவாடவுயர்ந்தமனவூக்க மென்றும்வாடாம லெத்தாலுநிகரப்படாத மாட்சிமையடைந்து பொலிந்தானென்க. (௰௧)

வேறு.

வரிந்தமாமையுருக்கொடுவானவ
ரிரிந்தவோகையிலேந்தியவீணைவாய்
சொரிந்தவோதைதுடர்ந்திசைபாடவில்
விரிந்தவாமவிழாவணியாயதே.

உரை.— அங்ஙன முடலிலேவருந்தின சூசை யுயிரிலே மகிழும்படி பலவானவரழகினுலெழுதப்பட்ட வுருவினைக்காட்டி வந்துதோன்றினமகிழ்ச்சியோடே கையிலேந்தியதிருமணிவீணைவாயிற்சொரிந்த வினியவோதைக் கிசைகளைப் பாடாநிற்ப வழகியதோர் திருநாளாயிற்றென்க. (௰௨)

ஆடுவார்திருநாமங்களாடுவார்
பாடுவார்பிணியோன்றுதிபாடுவார்
தோடுவார்வெறித்தொங்கலிட்டோடுவார்
வீடுவார்நயஞ்செய்குவர்வீடிலார்.

உரை.—வந்தவானவராடவுந் தேவதிருநாமங்களைப்புகழ்ந்துசொல்லவும் வருத்தஞ்செய்யு நோயுற்ற சூசை தன் றுதிகளைப்பாடவு மிதழ்களின்வாயால் வாசனையுமிழ்ந்த மாலைகளாச்சிந்தியோடவும் வான்வீட்டுரிய வின்பத்தைமுடிவின்றி விளைவிப்பானென்க. (௯௫)

ஆயவின்பமருமையருந்தவு
நேயவண்டவனேரிசைபாடவுங்
காயவெந்துயர்காண்டலனத்துய
ரோயவும்பருளும்பனென்றுயினான்.

உரை.— அங்ஙனம் விளைந்தவின்பத்தைவிடாமல் நுகரவு நேயமுள்ளமாதவன் வானவர்பாடினதற்கிசை தானேபாடவு மனஞ்சுடவந்ததுயர்கள் தோன்றாமலொழிந்ததாக வானவருள்ளொருவனைப்போல வாயினானென்க. (௯௬)

துனிவருந்துயராக்கைதுகைத்துளி
நனிவருங்களிநல்லுயிருண்டலான்
முனிவருந்தழல்மொய்த்தெரிபாலையிற்
பனிவருந்துணர்பூத்தனபான்மையே.

உரை.— அங்ஙனம் வந்ததுன்பநோ யுடலைவருத்தஞ்செய்துகொண்டுவருகையின் மிக்கமகிழ்ச்சியை யுயிருண்டமையாற் சினந்தெரி செந்தியழன்ற பாலைநிலத்திற் குளுமதுமலர்கள் பூத்ததன்மைத் தாயிற்றென்க. (௯௭)

துகைத்தநோய்தணிவுந்தொகையும்படாப்
பகைத்தபான்மைபணிப்பதமங்கைகண்
டுகைத்தவேவலிலோரிருபோதது
தகைத்தபின்புசினங்கொடுதாக்குமால்.

உரை.— வருத்தஞ்செய்தநோய் தொகையுந் தணிவுமின்றிச் சூசையதுடலைப்பகைத் துபாதித்ததன்மையைப் பொற்பாதமங்கையாகிய மரியென்பவள் கண்டிரங்கிச் செய்த வேவலினாலோரிருபொழுது தந்நோய்கள்தடுக்கப்பட்டுநின்

றபின்பு மீளவு மிக்கசினத்தோடெதிர்த்து மொய்ப்பனவெ ன்க. (மசு)

விதுப்படும்பதமென்மலர்ச்சுந்தரி
மதுப்படுங்கொடிவாட்டிடர்முற்றறப்
பொதுப்படுந்தனிக்கோற்சுதற்போற்றினள்
புதுப்படும்பனித்தேனுரைபோக்கினாள்.

உரை.— இளம்பிறைமேலேந்திய மலர்ப்பாதத்தழகுடை மரியென்பவள் தன்னேவலானின்றநோய் மீளவும் வருத் தவருவதைக்கண்டு மாதவனேந்திய பூங்கொடிமதுமலர் வா டற்காரணமாகவந்தநோய் முழுவதுநீங்கும்பொருட்டுத் த னிக்கோலோச்சிப் பொதுவா யெல்லாத்தையுமாளாநிற்குந் தன்றிருக்குமாரனைவணங்கிப் புதுமலர்வாய்த்தேனொப்பவி னியவித்தீஞ்சொல்லைச் செலுத்தினாளென்க. (மஎ)

வேண்டுமென்பதும்வேண்டுவதாக்கலும்
யாண்டுமொன்றெனயாவுமியற்றினோய்
நீண்டுநொந்துநின்றாதைபடுந்துயர்
காண்டுளங்கனியாதுகொலோவென்றாள்.

உரை.— மகனே! வேண்டுமென்பதும் வேண்டுவதை முடிப்பதுமொன்றாக வெக்காலமுமெல்லாவற்றையுஞ்செய் யாநின்றநீயேயாகி யுன்றகப்ப னெடுநாட்கொண்டுவருந்தி ப்படுந்துயர்களைக்கண்டுமனதிலிரங்காயோவென்றாளென்க (மஅ)

துவர்க்கும்வெம்பகையோர்க்கருள்சூட்டிமற்
றெவர்க்குநோயொழித்தின்னுயிரீகவந்
தவர்க்குஞ்செய்தயையீங்களியாய்கொலோ
வுவர்க்கும்வேலையொவ்வாவருளோயென்றாள்.

உரை.— மீளவுந்துவர்படப் பகையைச்செய்வார்க்கெல் லாநீதயைசெய்யநினைத் தியாவர்க்குந் துயர்களைநீக்கி நல்லு யிர்தரும்படிக் கிங்கேவந்தவனீயேயாகி மற்றவர்களுக்குச் செய்யுந்தயை யிங்கேயுன்றகப்பனுக்குச்செய்யாயோ பெ ருங்கடனிகராதவருளுடையோயென்றாளென்க. (மகூ)

அல்லதன்புடையாவலர்க்காகுல
நல்லதென்றிவற்கித்துயர்நல்கினேல்
வல்லநந்தனவந்தவிந்நோய்கணான்
புல்லவன்புடனீகெனப்போற்றினாள்.

உரை.— அல்லதுனக்கு மித்திரரானயாவர்க்கும் வருத்தமேநல்லதென்றமையா விவற்கித்துன்பங்களைத் தந்தாயாகில் வல்லமைமிக்க வென்மகனே! இவற்குவந்த நோய்களை நானேநுகரும்படி செய்வாயாகவென்று தாயேவணங்கினாளென்க. (உ௰)

மீனினின்றொளிமேய்முடியாட்கவன்
வானினின்றிவனான்வந்துதேடிய
ஊனினின்றுறுந்துன்பநன்றாயினுந்
தேனினின்றுயர்ச்செய்தியைக்கேளென்றான்.

உரை.— சூழ்ந்தமீனினின் றொளிமேய்ந்து விளங்கினமுடியாளாகியமரியென்பவள்சொன்னதற்குத் திருக்குமாரனுரைத்ததாவது: வானுலகினின்று நானிங்கேமகனாய்ப்பிறந்து தேடவந்தவுடலால் விளையுந்துயர்களே நல்லதாயினுந் தேனினுமினியதுன்பத்தின் செய்தியைக் கேட்பாயாக வென்றானென்க. (உக)

நோயருந்தலிவற்கெனநொந்துடல்
காயமுண்டலெனக்கெனக்கண்டுளந்
தீயருந்தலுனக்கெனச்சேர்த்தவோர்
தூயருந்தயைச்சூட்சியிதாமென்றான்.

உரை.— துன்பவகை பலவாகவகுத்துப் பிணிநோய்கொண்டு வருந்துவது சூசைக்குப்பங்காகிக் காயம்பட்டுவருந்துவ தெனக்கேயாகி யவனுநானும் படுவதைக்கண்டு மனந்தீயுண்டாற்போல விரங்கிவருந்துவ துன்பங்காமே, தயையின்சூட்சியாற் றுன்பங்களைவகுத்த முறைமை யிதுவேயென்றானென்க. (உஉ)

வேறு.

இனையகேட்டவந்தாயேயிதுதிருவுளமெனவிணங்கித்
தனையனேத்தினடணியாத் தலைவனேய்க்கினைந்தழுதாற்றுச்
சுனையதாமரையிருகண் சுட்டெரியழற்றிரளுண்ட
தனையவாடினளந்நோ யாற்றவும்வருந்தினள்மாதோ.

உரை. — தாயோவென்னி விவற்றைக்கேட்டுத் திருவுள மிதுவென்றிணங்கித் திருக்குமாரனைவணங்கித் தனக்கொரு தலைவனாகநின்றகுசை யுற்றநோய் தணியாததற்கிரங்கி யாற்றுதழுது தன்னிருகண்டாமரை தீயாற்சுட்டதுபோலவாடா நின்று தான்வனேய்களையாற்ற வருந்தினளென்க. (௨௩)

இனியதேனினுமினிய யாவினுமினியதீஞ்சொல்லைக்
கனியவாடுவளுயிரைக் காத்தமெய்யெனவிருபொழுதே
நனியவாவொடுபிரியா நயந்துசெய்யேவலானுடலை
முனியவந்தநோய்முத்தி முற்றுகும்வாழ்வினுமினிதே.

உரை. — இனியதேனினு மற்றவின்பங்கள்யாவினு மிக்க வினியசொல்லை யன்போடுகுசைக்குரைத்துத் தன்னுயிரைக்காத்த வுடலைப்போலப் பகலிரவாக மிக்கவாசையோ டவனைப்பிரியாமல் மகிழ்ச்சியோ டவற்குப் பணிவிடையூழியஞ் செய்யுந்தன்மையா னுடலைச்சினந்து கெடுக்கவந்தநோய் மோட்சவாழ்வினு மினியதாயிற்றென்க. (௨௪)

தேன்கலந்ததோசுவையிற் சீரியதெளிந்தபாகதுவோ
வான்கலந்தநல்லமுதோ வான்மலர்மதுவதோயாதோ
மீன்கலந்தநீண்முடியாள் விளைந்ததன்னன்புகூட்டியதோர்
கான்கலந்ததீம்விருந்தைக் கனிவிலெந்நாளுமோம்புவளால்.

உரை.— மீளவுந் தேனைக்கலந்துகூட்டினசுவையோ?தெளிந்தசுவையின்மிக்க திவ்வியபாகோ! வானுலகுரியவமிர்தமோ? அங்கேமலர்ந்தபூவுமிழ்ந்தமதுவோ வேதோ!மீன்முடிசூழ்ந்தமரியென்பவள் தன்னன்பின்குட்சியாற் கூட்டின

வகையி ஞூடோறுங் கடிழுமினியதோர் விருந்தோம்பி யிடு வாளென்க. (உ௫)

ஆவல்செய்யருடாயு மனைத்தையுந்தொக்குளவாக்கிக்
காவல்செய்திருமகனுங் கண்ணினைக்காத்தகண்ணிமைபோ
லோவல்செய்பிணிமாறு வுளைந்தமாதவனைக்காத்திருவ
ரேவல்செய்தனர்வானு மியம்பரும்வியப்புறமாதோ.

உரை.— அங்ஙன மாசைவிளைவிக்குந் தயையுளதாயு மொருங்குடனெல்லாத்தையுமுண்டாக்கிக் காத்தளிக்குந் திருக்குமாரனு நிமையே கண்ணைக்காத்ததன்மையா விருவராகப் பிணியால்வருந்தின மாதவனைக்காத்து வானுலகுமதிசயப்பட வவற் கேவல்செய்யாநின்றுரென்க. (உ௬)

உண்டுவாழுயிர்க்கெல்லா முணவெலாமளித்தவனுண்பப்
பண்டுதானுழைத்துணவு பகுத்தலேசெல்வமென்கேனே
வண்டுழாய்க்கரத்தேந்தி வான்றெழுமாசிடுமுணவு [னே.
கொண்டுதானுயிர்வாழ்ந்த கொள்கையேசெல்வமென்கே

உரை.— அங்ஙன முண்டுவாழுமுயிர்க்கெலாம் வேண்டியவுணவுகளனைத்தையும் பகுந்திடுநாதனாகிய திருக்குமாரனெடுத்த மனுச்சுபாவத்திலுண்ணும்படிக் கவற்குவேண்டியதை முன்சூசையுழைத்துத்தந்தது செல்வமென்பேனோ? அல்ல திப்போது வானுலகிடத்தும்வணங்கப்பட்டவரசனாகிய வத்திருக்குமாரன் றன்றுமனைக்கையாற் றந்தவுணவு சூசை வாங்கியுண் டுயிர்வாழ்ந்திருப்பது செல்வமென்பேனோவென்க. (உ௭)

நடலையோடருந்தேவ நயங்களுமின்னணமாறுப்
படலைமாலையாய்ப்புணரப் பகைப்பிணிசுடச்சுடத்துகைத்த
வுடலைவாட்டியதன்மைத் துயிரொழச்சூசையேபொறைக்கோர்
விடலையாயினதகுதி விளம்பவோபுலமையின்வல்லோர்.

உரை. — அங்ஙனந் துன்பமின்பம் விடாதகோர்வைமாலையாகப்புணர்ந்துவருகையிற் பகைத்தபிணிநோய் சுடச்சுடவருத்தியவுடலை வாட்டினவளவி ஓயிரடைமேன்மையிற் சிறந்தகுசை பொறுமைக்கோரிறைவனாகியதன்மையைக் கல்விநல்லோருஞ் சொல்லத்தகுவரல்லவென்க. (௨௮)

பிணிதோற்றுபடலமுற்றும்.

ஆகப் படலம் -௩௩- இ -விருத்தம்

௩௲௩௱௯.

மூப்பத்துநான்காவது.

தூதுரைப்படலம்.

வேறு.

நீடியபிணிகளெண் வருடநீங்கிலா
வாடியவுடற்குயிர் வாடிலாவளர்ந்
தோடியமீன்மிதித் துயர்ந்தவானலஞ்
சூடியதன்மையிற் குசையாயினன்.

உரை. — சொன்னபடியே நெடுநாள்வந்தநோ யெட்டு வருடமாக நீங்காமையா லுடலேவாடினு முயிர்வாடாமல்வளர்ந்து வான்மேலுலகிற்சென்று கீழோடித்திரியு மீன்களை மிதித்து வானுரிமாட்சியையடைந்தவனாகக் குசைதோன்றினனென்க. (க)

கட்புலங்கடந்துருக் கடிந்தவானவ
ருட்புலந்தகுந்தகத் தொத்தமாட்சியான்
மட்புலந்தணந்தினி யுரியவாழ்வுற
விட்புலத்தணந்தனர் விளிப்பவெய்தினர்.

உரை. — அங்ஙனங் கண்கடந்தவனப்போ டுருவில்லாத வானவர் வானின்றிறங்கி மனதிலடைந்தமேன்மையாற் றம்மோடொத்தமாட்சியானகியகுசைமாமுனி யினிப்பூவுலகைவிட்டு வான்மேற்றனக்குரியவாழ்வினையடைய வரும்படி யவனையழைக்கவந்தாரென்க. (உ)

பணிவளர்மாமையிற் பளிக்குமேனிகொண்
டணிவளர்மகரயா ழாதிமற்றையு
மணிவளர்மலர்க்கையாற் றடவிவாய்க்குரல்
பிணிவளர்துயரறப் பேணிப்பாடுவார்.

உரை.— அங்ஙனம் வந்தவானவர் பலவணிகலன்களாலழகுமிக்க பளிங்கினாற்செய்யப்பட்டமேனியையெடுத்துக்காட்டி மாலையணிந்த மகரயாழ்முதற்கொண் டெல்லாவீணைகளையேந்தி யொளிமணியணிந்த மலர்க்கைக்கொண்டு தடவியெழுந்தவோசைக்கினியவாய்க்குரலாவிசைகளையேற்றிநோயால்வளர்ந்ததுயர்களைத்தீர்ப்பப் பாடாநின்றனரென்க. (௩)

மீமழைபொழிந்தென விண்ணிற்பூத்ததோர்
பூமழைமணமழை பொழிநன்னீர்செயுந்
தேமழைதுதிமழை செறிந்தபாடல்செய்
நாமழைபகலிரா நயந்துநல்குவார்.

உரை.— மீளவு மேகம்பொழிந்தமழையையொப்ப வான்மேற்பூத்த மலர்மழையுங் கமழும்பனிநீ ரினியமழையுந் துதிகளைவிடாது பாடினநாவின்மழையும் பகலிரவுமாகமகிழ்ந்து பொழியாநின்றனவென்க. (௪)

சுகமுகத்தின்னவாய் துடரொன்பான்பகல்
நிகமுகத்தாய்வள னிகரிலாவயத்
தகமுகத்தொருமறை வின்றியன்றெளி
முகமுகத்திறைமையை முழுதுங்கண்டுளான்.

உரை. — இங்ஙனே மிக்கவின்பமுகமா யொன்பதுநாளும்விடாத வொளியின்சிறப்பிற்போனபின்பு சூசை நிகராதவல்லமைகொண்டு மனதின்கண்ணு லொருமறைவின்றி மிக்கொளிவகையாற் றேவசுபாவத்தை முகமுகமாய்க் குறையின்றிக்கண்டானென்க. (௫)

உரைகடந்துணர்வரு மிறைமையொண்முக
வரைகடந்தொழுகொளி மகிழ்ச்சிநீத்தமுட்
டரைகடந்தெனவருந் தவன்சுளித்தெலாக்
கரைகடந்துறுநயங் கருதுந்தன்மையோ.

உரை. — அங்ஙனஞ் சொல்லினுநினைவினுமடங்காத மாட்சியுள்ள தெய்வதமறைவின்றிக் கண்டவளவி லத்தேவமுக

மாகிய பொன்மலையினின்றெழுகிய வொளியுமகிழ்ச்சியுமா கிய வெள்ளத்துள்ளே யிப்பூவுலகம் கடந்தவனைப்போலச் சூசைமாமுனி நிறையமுழுகி யொருகரையுமின்றி யடைந்தபேரின்ப நாங்கருதத்தகுந்தன்மையோ வல்லவென்க. (சு)

தோடுசெய்கொடிநலோன் றுளங்கநாயகன்
வீடுசெய்நயத்தொடு விரும்பிநோக்கினன்
சேடுசெய்கமலவாய் துளித்ததேனுரைப்
பாடுசெய்தின்னவை பரிவிற்கூறினான்.

உரை. — அப்போ தலர்ந்தகொடியையேந்தியசூசை மிகவேதுளங்கும்படிக்குப் பரமநாதன் மோட்சபேரின்பத்தை விளைவிக்குநோக்கத்தோ டவனைவிரும்பிநோக்கி யழகிய கமலவாய்துளித்த தேனோடொத்தவினியவுரைகொண் டிவற்றை யன்போடுசொல்லத்துடங்கினானென்க. (எ)

உன்னுயிர்தன்னினு மோம்பித்தாய்மக
னின்னுயிர்காத்தனை யினிப்பயன்கொளீ
மன்னுயிர்பெறுங்கதி வானில்வந்துறீ
நின்னுயிர்வாழ்தலே நீதியாமரோ.

உரை. — சூசையைநோக்கி யாண்டவனெங்ஙனஞ்சொன்னானென்னில், நீயேயுன்னுயிரின்மேலுந் திருக்குமாரனுயிரையு மவன்றாயுயிரையுங்காத்தாய், இனியதற்குரியபலனைப் பெற்று நல்லோர்க்குக்குறித்த மேற்கதிவானில்வந்தடைந் துன்னுயிரோ வாழாநிற்பது நீதிதானென்றானென்க. (அ)

ஆயினுமரிதினீ வளர்த்தவாண்டகை
தாயினுமன்பொடு தரணிகாக்குப
வீயினுமன்றிமேல் வீடுறாதுட
லோயினுநீசெய்வ தோம்பிக்கேட்டியால்.

உரை. — அதுவேநீதியாயினு மருமையோடு நீ வளர்த்த நரதேவன் றயன்பினுமிக்கவன்போ டுலகத்தையிரட்சிக்கத் தான்பட்டிறத்தாலொழிய வான்வீட்டிலொருவருஞ்சேரமா

ட்டாமையா னீ யுன்னுடலைவிட்டுநீங்கினு மின்னஞ்செய்ய வேண்டியதொன்றினை யுற்றுக்கேளென்றானென்க. (௯)

ஈடடைந்தருந்தவ மியன்றமுந்தையார்
நீடடைத்துறையுமென் றயைநிழற் றிய
நாடடைந்திறையிறந் தளிக்குநாளுறி
வீடடைந்துவப்பரொன் றருள்விளம்புவாய்.

உரை. — இனிநீ செய்யுந்தொழிலேதென்னின் முடித்த தவத்தாற் பெருமையடைந்தபிதாக்கள் நெடுநா ளென்றயைநிழலிருக்குநாட்டிற்சென்று மனிதனாயினகடவு ளாயிறந் தவர்களை யிரட்சிக்குநாள் கிட்டிற்றென்று மோட்சத்திலவர்களினிவாழ்வாரொன்னுந் தயையின்செய்தியை யுரைப்பாயாகவென்றானென்க. (௰)

உடல்கடிந்துவந் துயி ருறையுநாடென
மடல்கடிந்தெரிபட வாடும்பூவினை
யடல்கடிந்திளைத்தநின் னாக்கைநீக்கியிவ்
விடன்கடிந்தங்கணீ விரைவிலேகென்றான்.

உரை.—ஆயினு மந்நாடடைவில்லாத வுயிர்கள் கிடக்குநாடாகையி லெரிபட்டிதழ்களிழந்த பூவாடினாற்போல நோயாலிளைத்துவாடின வுன்னுடலை நீயுநீக்கி யிவ்விடம்விட்டங்கே விரைந்துபோவாயாகவென்று னிறையோனென்க. (௰௧)

என்றலோடுயிர்தனி வினியமைந்தனு
மன்றலோடியைந்தமா மரியுநீக்கலே
பொன்றலோடுலக்கினும் பொவிதிருவுளத்
தொன்றலோடினிதிலென் றுணர்விற்றேறினான்.

உரை. — இங்ஙனங் கடவுள்சொன்னவளவிற் றன்னுயிரினுந் தனக்கினியதிருக்குமாரனையு மணப்பிணைவோடுசேர்ந்த மாமரியென்பவளையும்விடுதலே சாதலினும் வேதனைசெய்தாலுந் திருவுளத்தோ டொன்றிநிற்பதற்கொத்த நன்மையில்லையென்று மனதிற்றேறினானென்க. (௰௨)

வேறு.

களிமுகத்திணங்கியன்றன் கடவுளைப்பணியும்வேலை
வெளிமுகத்துற்றகாட்சி மின்னெனமறைந்துதானே
யொளிமுகத்திலக்கிச்சூழ வுவப்புறமகனுந்தாயு
மளிமுகத்திருப்பநோக்கியறைதல்பெருயிர்ப்போடுற்றான்.

உரை. — அங்ஙனஞ்சூசை மனதிற்றேறி யேவினபணியைச்செய்ய மகிழ்ந்துசம்மதித் தாண்டவன்பாதத்தைவணங்கினவளவின் முன்மறைவின்றித்தோன்றினகாட்சி மின்னைப்போலவிரைந்துமறையத் தான்முகத்தொளியைவீசித் தன்னண்டையிற் றிருக்குமாரனு மவனையீன்றதேவதாயுங் களிகூர்ந்திருப்பதைக்கண்டு தேவபுதல்வனைநோக்கிப் பெருமூச்சோ டிவற்றைச்சொன்றனென்க. (ய௩)

ஓரியல்பாகவுன்னோ டோரொன்பரன்பணித்தவேவல்
பேரியல்பறிவிற்கண்டாய் பிரிதலேவேண்டுமிஃதே
சூரியல்துன்பத்தெல்லாந் துன்பமாய்வருத்துமாகிற்
சீரியல்பியற்றுந்தேவ திருவுளநன்றினன்றே.

உரை. — திருக்குமாரனைநோக்கிச் சூசையெங்ஙனஞ் சொன்றனென்னில், தேவசுபாவமொன்றுகையி லுன்னோடொன்றுகியகடவுள் கற்பித்தவேவலைநீயறிவாயே, வேறுபட்டுநான்பிரிந்துபோகவேண்டுவதாமே, இதுவெல்லாத்துன்பங்களிற்றுன்பமாக வென்னைவருத்துமே, ஆயினு மெல்லாச்செல்வத்திற்குங்காரணமாகிய தேவதிருவுளமெல்லாநன்மையினு முத்தமநன்மையே யென்றனென்க. (யச)

மைந்தனேமைந்தனென்ப வரமெனக்களித்திநீயே
தந்தநோகன்றநன்றி தனக்கெஞற்கைம்மாறென்னோ
சிந்தனேயெனக்குச்செய்த சீரளவிடுக்கண்யாவும் [ய்.
கொந்தனேர்விளையக்கொய்தி கொய்தருள்விளைத்திநல்லோ

உரை. — மகனே யுன்னைநான்மகனென்னும்படி நீயல்லோவெனக்குவரந்தந்தாய், அத்தோடெனக்குத்தந்த நிகரா

தநன்றிக்கெல்லா மென்னுலான கைம்மாறேதோ? ஒழுகுமா றுபோல வெனக்குத்தந்த செல்வங்களினளவாக வென்னாற் றன்பங்களே சினத்தோடுவிளையப் பலனைக்கொண்டாயே, என்னாற் றன்பத்தைக்கொண்டு மெனக்குத் தயையேவிளை வித்தாய் நல்லோயென்க. (௰௫)

நிந்தையென்றுடைநாணேங்க நிமிர்ந்தவான்வியப்ப வென்னை
யெந்தையென்றனை நீயுந்தைக் கிரங்கிநல்லாசிதேவ
தந்தையின்பணியைச்செய்யத் தருதியென்றடியில்வீழச்
சிந்தையினெழுந்ததாற்றுத் திருமகன்றுங்கினானே.

உரை. — நிந்தைக்குரிய நானே மாட்சியிலோங்கவும் வானுலகெல்லாமதிசயப்படவு நீயென்னை யென்பிதாவென் றாய், உன்பிதாவுக்கிப்போதிரங்கித் தேவபிதாவின் பணிவிடைமுடிக்க வாசீர்வாதந்தருவாயென்று பாதத்தில்விழ வாசையோடெழுந்தருளத் துணிந்து பெலனுமாற்றமற் கீழே விழுகையிற் றிருக்குமாரனவனைத்தாங்கினானென்க. (௰௬)

மூவுலகனைத்துந்தாங்கு முதலவனொருபாலோர்பால்
தேவுலகனைத்துமேத்துந் தேவதாய்தாங்கச்சூசை
மேவுலகுள்ளியாக்கை விடுமுயிர்தனையன்பொன்றே
பூவுலகிருத்தினாற்போற் பூங்கரங்கூப்பிநின்றான்.

உரை. — அம்மன மூலகமூன்றினையுந் தாங்காநிற்கு முதலோனொருபுடையிற்றாங்க வானுலகெல்லாம்வணங்குந் தேவதாய் மற்றொருபுடையி லவனைத்தாங்கக் கற்பித்தவுலகிற் போகநினைத்துத் தன்னுடலையுயிர்விடுகையி லதையன்புதானென்றே யின்னம்பூவுலகி லிருத்தினாற்போலச் சூசையிருவரைவணங்கிக் கைகூப்பி நின்றானென்க. (௰௭)

பன்னலானிகராவண்ணம் பயனுறற்பெற்றேனானே
மின்னலாயுனக்கீங்கென்னால் விளைந்தபற்கசடுண்டாமே
நின்னலாற்பொறுப்பார்யாரோ நீத்திவையருளினார்வ
முன்னலாலாசிசெய்கென் றுயர்தவன்றொழுதுநின்றான்.

உரை. — அங்ஙனஞ் சூசை யிருவரைவணங்கிப்பேசாமற் கைகூப்பிநின்றபின்பு தேவதாயைநோக்கிச்சொன்னான்: மின்னலாய் சொல்விநிகரப்படாததன்மை யுன்னாலடைந்தேனானே, என்னாலோவெனி லுனக்குப்பலகுறைவினைந்ததுசரியே, ஆயினு முன்னையல்லாதெவன்பொறுப்பானோ? இந்தக்குறையெல்லா நீக்கி யுன்னன்பின்றயை நினைத் தெனக்காசீர்வாதந் தருவாயாகவென்று தொழுது நின்றானென்க. (௰௮)

இருவருமிருபாலாசி யிட்டருளுரையிற்றேற்ற
வுருவருமவானோர்சூழ வொலிக்குழலிசையிற்பாடி
மருவருமலரைச்சிந்தி வயவையில்விளித்துமுன்னத்
திருவருமாக்கைநீக்கித் தெள்ளுயிர்போயிற்றம்மா.

உரை. — அங்ஙன மிருபுடையிலிருந்த தேவமகனுந் தேவதாயுஞ் சூசைக்காசீர்வாதந்தந்து தயைநிறைந்தசொல்லாற் றேற்றிக்கொண்டிருக்க வுருவங்காட்டித் தோன்றினவானவர் வீணைகளிசையிற் பாவிசைகளையேற்றிக் கமழுமலரைச்சிந்தி யவனைவழியில்லழைத்து முன்னேபோகத் தன்றிருவுடலை நீக்கிச் சூசையினல்லுயிர்போயினதென்க. (அப்போ தவற்கறுபதுவய தினிதினிறைந்ததென்றறிக.) (௰௯)

மெய்யிலார்நாட்டிற்றூது விளம்பமெய்யுயிர்விட்டே
பொய்யிலாவுயிராயன்புட் புக்கெனக்கிடந்தயாக்கை [கிப்
மையிலாமலர்ந்தகொம்போ வரைந்தநற்படமோதோன்றி
றையிலாத்துயில்கொண்டென்ன நளியொளிவீசிற்றம்மா.

உரை.—அங்ஙன முடலில்லாதா ரிருந்தநாட்டிற்குத் தூதனாகவுடலைவிட்டுயிர்போனபின்ன ரன்புதான் மெய்யானவுயிராகவுட்புகுந்ததென்றாற்போலக் கிடந்தசூசையின் றிருமேனி மாசிலமலரைப்பூத்த கொம்புபோலவோ வெழுதிய சித்திரநற்படம்போலவோதோன்றிச் சுகமே துயில்கின்றதன்மையாய்நின்று குளுங்கதிரொளியை வீசாநின்றதென்க. (௨௰)

விதுவளர்பதநல்லாளும் விண்வளரரசர்கோனும்
பொதுவளர்முறைமேலன்ன பூட்சியைப்பேணிவானோர்

சதுவளரணியிற்சூழ்ந்து தனிவளர்புகழ்ச்சியாடி
மதுவளர்மலராச்சிந்தி மலர்வனத்தடக்கினுரே.

உரை.—பிறைமேலெழுந்த பாதத்தையுடையமரியென்பவளும் வான்வாழரசர்க்கரசனுகிய திருக்குமாரனும்பொருதுப்படச் செய்யவேண்டியமுறைகளின்மேலு மத்திருமேனியைப்பேணிச் சதுரப்படவகுத்தவணிகளாக வானவர்சூழவந்து நிகராதபுகழ்ச்சிகளைப்பாடி மதுப்பொழிமலராச்சிந்தி யதையோர் பூங்காவனத்திலடக்கினுரென்க. (உக)

தூதுறவுயிர்போய்மீண்டு தோன்றளவுடலைப்பூவே
பாதுறக்காமினென்னப் பாமனேயகர்ந்தவாசி
காதுறமகிழ்ந்தபூமி கைக்கொண்டநன்றிமூடப்
போதுறவிரித்தபைம்பூம் போர்வைமேற்போர்த்ததன்றே.

உரை.— அங்ஙன முடலையடக்கும்போது பரமநாதனுகியதிருக்குமாரன் பூமியைநோக்கிச்சொன்னதாவது: தேவதூதாகவுயிர்போய்த் திரும்பிவருமளவு நீ யிவ்வுடலைநன்றுய்க்காப்பாயாகவென்று தந்தவாசியின்சொல் காதினுட்படவே மகிழ்ந்தபூமியே யன்றுகைக்கொண்டநன்மைமூடியொளிப்ப விரைவிற்பூத்தமலர்களாற் பூம்போர்வைமேலிட்டாற்போல மலர்ந்ததென்க. (உஉ)

வேறு.

மடல்கடிந்துநறுமதுவாகையா
னுடல்கடிந்துடலங்கடிந்தோரிடை
கடல்கடிந்துகனிந்தசொற்கூறமெய்
யடல்கடிந்துசன்றுவியோடெய்தினன்.

உரை.— மலர்ந்தவிதழினின்று கமழ்மதுவொழுகும் பூங்கொடியேந்தியசூசைமாமுனி யுடலின்றி யுடலில்லாதாரிடத்தி லமிர்தக்கடலினு மினியசெய்தியைச்சொல்ல வுடலில்லாதவுயிராற் சென்றுனென்க. (உந)

நிந்தையாகுலநீத்தறநீர்மையாற்
றந்தையாமிறைதாழ்விலதாடொழு

தெந்தையார்கதியெய்துபநம்பிய
முந்தையாருறைமூற்றருணடதே.

உரை.—அங்ஙனஞ் சூசைசேர்ந்தநாடேதெனில், நிந்தையுந் துன்பமுமின்றி யறத்தின்றன்மையா னேரிட்டொழுகிப் பிதாவாகியசர்த்தாவின்பாதத்தைத் தாழ்வின்றிவணங்கினராகி யெந்தையாகிய திருக்குமாரன்பாடுபட்டடையும் பலன்களால் மேற்கதிபாக்கியத்தையடைய நம்பினபிதாக்களிருந்த வருளினிறைந்த நாடதுவேயென்க. (உச)

மையிழந்துமயக்கமிழந்தவாப்
பொய்யிழந்துபுரைகளிழந்துதோற்
பையிழந்துறுபாடுமிழந்தருண்
மெய்யிழந்திலர்வேய்ந்துறைநாடதே.

உரை. — மீளவு மிருளுமயக்கமுமின்றி யாசையால்வரும் பொய்யும் பாவமுமின்றி யுடலு முடலால்வரும் பாடுகளுமின்றித் தேவருளுண்மையைப் போக்கமாட்டாத செல்வோ ரிருந்தநாடதுவேயென்க. (உரு)

காட்டுமோசைகளிப்புறநாதனுங்
கீட்டுநன்றியிசைப்பதுபாலதோ
பேட்டுவீடவர்பெற்றிலராயினும்
வீட்டுவாயிலெனுமிளிர்நாடதே.

உரை. — மீளவு மங்கேயுள்ளோரி லவனவன்காட்டுமாசை நிறைத்துகளிகூரும்படி யங்கேயாண்டவன்குவித்தநன்மை சொல்லத்தகுந்தன்மையோ? அங்கேயுள்ளோர்விரும்பின மோட்சத்தை யின்னமடையாதவராயினு மோட்சவாசலாகி விளங்குநாடதுவேயென்க. (உசு)

அன்னநாட்டையன்றனடைந்தாங்குமீன்
மின்னமீனரசுற்றிடைவேய்ந்தென
மன்னமாதவருடுவயங்கினான்
சொன்னமாமறைசூட்டிளத்துயினான்.

உரை. — சொன்னநாட்டிற் சூசைசேர்ந்து வான்மீன் மிக்கொளிவிடும்படி யவற்றினடுவே மீனரசாகியசந்திரன் ஞேன்றிஞற்போலத் தாஞேதினவேதமே யணியாகக்கொண்ட வுள்ளத்தூயோஞகிய சூசை யங்ஙனே நிலைபெற்றதவத்தோர்நடுவே விளங்கித்தோன்றிஞனென்க. (உஎ)

புக்கடைந்தபொலிந்தவந்நாட்டிடை
மிக்கடைந்தநலோர்வியப்புற்றெழச்
சொக்கடைந்தவுருக்கொடுதோன்றிஞ
னிக்கடைந்தவிளந்துணர்வாகையான்.

உரை. — அங்ஙனஞ் சூசைசென்றுபுகுந்த வந்நாட்டிலிருந்த நல்லோரெல்லாரு மதிசயப்பட்டுமெகிழும்படி மிகவழகிற்சிறந்த வுருவினைக்காட்டிஞன் மதுப்பெய் பூங்கொடியோனென்க. (உஅ)

மட்புலந்தவிர்நரங்களிமாந்திடக்
கட்புலந்தவிர்தன்கவின்காட்டவீங்
கெட்புலந்தவிர்காந்தியோடெய்திய
விட்புலந்தவிர்விண்ணவஞேவென்பார்.

உரை. — அங்ஙனஞ் சூசையைக்கண்ட வத்தவத்தோர திசயப்பட்டுப் பூவுலகைவிட்டிங்கேவந்தநாமே களிகூர்ந்துவப்பக் கண்கடந்த தன்னழகினைக்காட்ட மாசிலகாந்தியைப்பரப்பி வானினின்றுவந்த வானவஞேவென்றுரொன்க. (உகூ)

ஆதியீறிலநாயகனம்புவி
மீதிலீறுயிராகவிளிந்தொரு
நீதிலாக்கதிவாயில்திறந்தபின்
னேதிஞமடைமாட்சியிதோவென்பார்.

உரை.—அல்லது துடக்கமுமுடிவுமில்லாதநாதன் பூவுலகிலவதரித்தெடுத்த மனுச்சுபாவத்திஞயிர்தந்திறந்து குறையில்லாத பரமகதியின்வாசலைத்திறந்தாஞே? அதைத்திறந்தபின் மேல் நாமடையுமாட்சிதன்மையிதோவென்பாரென்க. (ஙய)

ஆயினானுலகத்தையளித்தபின்
றாயினாருடாங்கியதன்மையான்
மீயினங்கதிவீட்டைமைச்சேர்த்திடத்
தூயினனடைதோற்றமிதோவென்பார்.

உரை. — அல்லது மாயினன் றாயினனென்பது சொன்னநாதன் பூவுலகத்தையிரட்சித்தபின்ன ரன்புள்ளதாயைப் போலவந்து நம்மைமோட்சத்திற்சேர்க்க விங்கேயவன் தோன்றினதன்மை யிதோவென்பாரென்க. (கூக)

ஐயந்தோன்றுமனத்தயர்வற்றிடச்
சையந்தோற்றியதோடவழ்தாரினன்
றய்யந்தோடவிழ்பூங்கொடிசுட்டிபு
மையந்தோன்றியிவ்வாயுரைபோக்கினன்.

உரை.— அங்ஙனஞ் சந்தேகப்பட்டு மனதிற்கொண்டசஞ்சலந்தீரப் பொன்மலையொத்ததோளின் மாலைதவழத்தோன்றினசூசை மலர்ந்ததன்பூங்கொடியைக்காட்டி நடுவேநின் றிவ்வுரைகளைக்கொண்டானென்க. (கூஉ)

வேறு.

வையத்தார்கசடழித்து வழுவின்றி மன்னுயிர்க
ளுய்யத்தான்மனுவாய வுயர்கடவுளுமக்கின்பஞ்
செய்யத்தானின்றிங்கண் செலுத்தியதோர் தூதடியே
னய்யத்தான்சையத்தா லயர்வுண்டவறவோரே.

உரை. — சூசை யெங்ஙனஞ்சொன்னானென்னில், ஐயத்தாலுமாசையாலு மயங்காநிற்குமறவோரே! பூவுலகத்தார் தீவினைநீக்கி மனிதர்யாவரும் வழுவாதுயிர்பிழைத் தென்றும் வாழ்வதற் கங்கே மனிதனாய்ப்பிறந்தநாத னுங்களுக் கினிய செய்தியைச்சொல்ல வவன்வரவிட்டதூது நானென்றானென்க. (கூகூ)

தூயாகமறைவடிவாய்த் தொக்கிணவெல்மாட்சிமை
டாயாகக்கன்னியுமாய்த் தாரணிமேலரிதீன்ற [யா

சேயாகவெம்மிறையோன் சென்றையைந்தோராண்டாய்த்
தீயாகவருத்துவினை தீர்த்திடுநாணண்ணியதே.

உரை.— வேதவடிவாகிய தூயமனதிலொப்பெல்லாங் கடந்தமாட்சியையுடையாள் கன்னியுந்தாயுமாகப் பூவுலகிலரிதிலீன்ற மகனுய நமதாண்டவன்பிறந் திருபத்தாறுவருடமாகி மனிதரைவருத்தஞ்செய்யும் வினைகளைத்தீர்ப்பக் குறித்தநாள் கிட்டினதென்றனென்க. (ருச)

அன்னவட்கேமணத்துணையா யன்னவளாங்கினிதுயி
மன்னவற்கேகைத்தாதை வரமுளனுயீங்கடியே [ர்த்த
னின்னவற்கேதூதுற்றே னிந்நாளுஞ்சிறைநீங்கிப்
பின்னவற்கேவீட்டிறுணை பெரிதுவப்பீரினியென்றான்.

உரை.— சொன்னகன்னித்தாய்க்கு மணத்துணையாகவு மவளினிதீன்ற நரதேவற்குக் கைத்தாதையாகவும் வரம்பெற்றவனுனே யிவற்குத்தூதனுகவந்தேன், இனி யிந்நாளிலே யுங்கள்சிறைதீர்ந்ததின்மே லவற்குமோட்சத்தி லொருதுணைவராகநின்றுகளிகூர்ந்தென்றும்வாழ்வீரென்றனென்க. (ருரு)

தேன்பொதுளுங்கனிதீஞ்சொற் றெளியயன்கேட்டவ
னேந்துங்
கான்பொதுளுமலர்வாகை கண்டுண்டநயம்பெருகி [ப
யூன்பொதுளுங்குலத்திம்மாண் புண்டோவென்றுளம்வியப்
வான்பொதுளும்வரத்தோனைவணங்கின்றாரொருங்கன்னர்.

உரை. — அங்ஙனஞ் சூசைசொன்ன வினியசொல்லையுங்கேட்டுக் கையிலவனேந்திய கமழ்பூங்கொடியையுங்கண் டங்கேயிருந்தயாவருங் கொண்டவின்பமிகுதியா லித்தன்மைத்தோ ஆனுள்ளவினமனுக்குலத்திற்குப் பெருமையாயிற்றென்று மிகவுமதிசயப்பட்டு வானுலகுரியவரங்களைப்பெற்றசூசையை யொருப்பட வெல்லாரும் வணங்கினரென்க. (ருசா)

ஆரணனேயாரணஞ்சேர்கொழுகொம்பேயரிதுவப்பக்
காரணனேகண்டணைத்த கைத்தாதையேயருளாற்

பூரணனே நாம்விழைந்த பொழுதடைந்தாயின்பமலி
வாரணனேதவத்தாசைக் கரைகண்டாய்வரத்தவனே.

மூக்காலங்காட்டுமொளி முகவிளக்காந்தவத்தொடுநா
மக்காலங்காண்மறைவி லாங்குரைத்தநாதனை நீ
யிக்காலங்காட்டினையே யேந்தினையேவளர்த்தனையே
மெய்க்காலங்காட்டியவான் வேந்தனிலைவிளம்பென்றார்.

இவ்விரண்டு மொருதுடர்.

உரை. — அப்பிதாக்கள் சூசையைவணங்கிச்சொன்னதாவது: வேதவடிவே! வேதமூன்றிப்படரும் கொழுகொம்பே! ஆதிகாரணனாகியகடவுளை மிகக்களிகூரக் கண்ணாற்கண்டு மார்பிலேணைத்தகைத்தாதையே! அருளானிறைந்தவனே! நாங்களெல்லாரும் காணவிரும்பினகாலத்தையடைந்தாயே, இன்பநிறைந்த பெருங்கடலாகி மற்றவர்செய்த தவத்தாற் றேடியடையாதபாக்கியத்தை நீயேபெற்று வரமடைந்த மாதவனாகித் தவத்தினாசைக் கரையைக்கண்டாயே, முக்காலங்களையொருங்குந் தெளிவோடுகாட்டுந் திருவிளக்காகத் தவத்தைக்கொண்டு நாங்களக்காலத்திலே கண்டமறைவோடன்று சொல்லால்வருமென்று காட்டினநாதனை நீ யிக்காலத்திலிவ்வந்தானென்று கையாற்காட்டவு மேந்தவும் வளர்க்கவுஞ்செய்தாய், மெய்யைக்காட்டவந்த வானரசாகிய நரதேவனியல்பினையெங்களுக்குரைப்பாயாக வென்றனென்க. (௩அ)

கோட்பதருங்குணத்திறையோன் குணக்கொளிபோனிலத்துதித்து
வேட்பதருந்தயைபுரிந்து விளங்குநிலையாதென்னக்
கேட்பதரும்வினைகேட்டீர் கெழுந்தவரோயென்றான்பின்
மீட்பதருஞ்சொற்றொடுத்தான் விம்மிதக்கற்புளத்தூயான்.

உரை. — அதற்குச்சூசை வளையப்படாத நீர்மையுடையகுணத்தி லாண்டவன் கீழ்திசையெழுஞ் செஞ்சுடரைப்போலப் பூமியிலுதித்து விரும்பினாராசையின்மேலுந் தயைமிகச்செய்துகாட்டு மியல்பேதென்று மாதவத்தோரே யரியவினையைக் கேட்டீரென்றான், பின்பு மீளவு மதிசயக்

கற்பினையுடைய மனத்தூயோன்குசை சொல்லத்துடங்கினு னென்க. (௩௯)

நோயொக்குமவர்க்கின்ப நுனித்தவுயிர்மருந்தொக்குந்
தீயொக்கும்புரையார்க்கே சீதமொக்கும்புயலொக்கும்
வீயொக்கும்வடிவத்தால் வியன்றயையாற்கடலொக்குந்
தாயொக்குந்தாதையொக்குஞ் சகத்தெங்குமத்திருவோன்.

உரை. — அவதரித்தநாத னியல்பேதென்னில், நோயைக் கொண்டயாவர்க்கு நல்லுயிர்தரு மருந்தொப்பாகவுந் தீ யொப்பச்சுடுந் தீவினைகொண்டயாவர்க்குங் குளிர்படப் பெய்யு மேகமொப்பாகவு மெடுத்தவடிவினூன் மதுமலர்மு கையொப்பாகவுஞ் செய்யுந்தயையாற் கரையில்கடலொப் பாகவுந்தோன்றி யுலகிற்கெல்லா மவனே யொருதாயொருத கப்பனுக நிற்பானென்று னென்க. (௪௰)

மீனுக்கப்பாவவிருள் விலகமிளிர்விழிகொண்டான்
கானுக்கமறையுமிழக் கமழ்கமலவாய்கொண்டான் [ன்
றேனுக்கத்துயர்க்கைப்புச் சிதைப்பவினிதுரைகொண்டா
வானுக்கக்கவின்காட்ட மலர்வதனநலங்கொண்டான்.

உரை. — மீளவு மவனே பாவம்விளைத்தவிருளைவிலகிநீக் க வான்மீனுைப்பவிளங்கியகண்ணைக்கொண்டான், வாசனைத ன்மையால் வேதநூலையுமிழும்படிக்குக் கமலவாயைக்கொ ண்டான், கசக்குந்துயர்களைத்தீர்க்கவினியதேனுைத்த வுரைக ளைக்கொண்டான், வானுலகுரியவழகினைக்காட்ட மலர்ந்தவ னப்புமுகத்தைக்கொண்டானென்றுனென்க. (௪௧)

தீதொருங்குமவிற்பறியாத் திளையருளார்நெஞ்சத்தான்
கோதொருங்குங்குறையொருங்குங் குறைத்தொழிக்கும்புய
ற்கரத்தா
னீதொருங்குந்தோற்றுவிக்கு நெறிவழுவாவறப்பதத்தான்
வாதொருங்குஞ்சிதைத்தலகை வெல்நாமவயவேலான்.

உரை. — தீவினையென்னப்பட்டயாவினு மேலாய்நிற்கு ங் கருணைநிறைந்தநெஞ்சமுங் குற்றங்கள்யாவையு மொழி

க்கவுங் குறைகள்யாவையுந்தீர்க்கவும் பொய்யாமற் பெய்யு மேகமொத்தகையு நீதிமுறைகளைக்காட்ட வறநெறிவழுவா தபாதமும் வஞ்சவினைகெடப் பசாசைவெல்லு நாமவேலுமு டையானவனே யென்றானென்க. (௬௨)

அருள்விஞ்சிப்பகைவெள்ள மறக்கடந்தான்மறையோ துந்
தெருள்விஞ்சிச்செயிர்ப்புகையா றேக்கியதீதிருட்கடந்தான்
பொருள்விஞ்சிப்பொங்குபுரைப் புணரியிரந்தவன்கடந்
தான்
மருள்விஞ்சிப்பெருகுநசை மழுக்கடந்தான்றவமிக்கான்.

உரை.— மீளவு மவனேசெய்யு மருளின்மிகுதியாற் ப கையின்வெள்ளத்தை முழுதுங்கடந்தான், அவனேயோதும் வேதநூற்றெளிவினாற் பாவப்புகையோ டுலகின்மண்டினவி ருளைக்கடந்தான், பொருளுண்டாகிப் பொங்கிக்கிளம்பும்வி னையின்கடலைத் தானேகையாலிரந்துகடந்தான், மயக்கமிகுதி யாற் பெருகுமாசையின்கடலை மிக்கதவத்தோடுகடந்தா னென் றானென்க. (௬௩)

என்னுரைப்பதினியானே யெந்தைமனுவாயுளிநீர் [ந்
முன்னுரைப்பவெடுத்ததிலை முற்றொழித்தான்கடந்தென்று
பின்னுரைப்பதெவனுண்டோ பெருந்தவரோவென்றான்சூழ்
மின்னுரைப்பவொளியெறிக்கு மெய்ச்சுருதிவிளக்கன்னான்.

உரை.— இதின்மே லினிநான்சொல்வதென்ன? என்னுண் டவன்வதரித்தகாலத்தி னடக்குந்தன்மையை நீங்களேமுன் குறித்துரைத்தீரல்லோ? அத்தன்மையெல்லாங்கடந் தொழித் ததின்மேற்செய்தானென்று லதின்பின்சொல்லத்தகுவதுண் டோ மாதவரோவென்றான் சூழமின்கள்பாயவொளியைப்ப ரப்பும் வேதத்திற்கொருவிளக்கொத்தானாகிய சூசையென்க. (௬௪)

வேறு.

பேர்நலமணிக்குன்றுச்சியிற்பெயர்ந்து பெருகிவீழ்
வெள்ளமொத்தன்னான்

சீர்நலத்துரைத்ததிவ்வியமதுர சீரியதேனுரைகேட்டாங்
கார்நலதவத்தோர்களிப்புறிநிற்ப வன்புமிக்கென்மகளீன்ற
வேர்நலபுதல்வற்குற்றனவயறைதி யென்றனளன்னைமையெ
ன்பாள்.

உரை. — அங்ஙனஞ் சூசை பேரழகுடையமணிமலை யு ச்சியினின்று பெருகிவிழுவதோர்வெள்ளம்போல வினிதா ய்ச்சொன்ன மதுரமதுவையொழுகிய திவ்வியவுரைகளை ய ங்கே நிறைந்ததவத்தோர்கேட்டு மகிழாநிற்பக் கன்னிமாமரி யை யீன்றதா யன்னமையென்பவ ளன்பின்வழியா லென்ம கள்தந்த வழகியதிருக்குமாரனுக்குச் சம்பவித்தயாவையுமு ரைப்பாயாக வென்றுளென்க. (சரு)

நனைவருங்கொடியோனிவ்வுரைகேட்டு நசைகொடாய்
மகிழமற்றங்க [னமரியே
னனைவருமுவப்பக்கன்னிமைமுகையோ டங்கனிகனிந்தெ
புனைவருங்கன்னிதாய்வரத்திசைப்பப் புகழ்வருந்தேவசூற்
கொண்டு [த்தான்.
வினைவருமையமுற்றவாறதனை விட்டவாறெருங்கெலாமுரை

உரை. — அன்னமைசொன்னதைப் பூங்கொடியோன் சூ சையாசைகொண்டதாயு மற்றயாவரு மகிழும்படிக்குக் கன் னிமையென்னும் பூவரும்போது தீங்கனிபழுத்ததன்மையி ற் கன்னிமைமாறுததாயாக வரம்பெற்று மரியென்பவளற் புதமாய்த் தேவகருப்பத்தாங்கியதனால் வருத்தமாக வையந் தோன்றினபடியையு மதுநீங்கினபடியையுஞ் சொன்னு னென்க. (சசு)

ஆவலருறவோரகற்றலில்வெளிமேய்ந் தாவடைகுகத்தி
டத்திறைவன்
காவலர்தன்மைத்தமரர்சூழ்நிற்பக் கங்குலிற்பிறந்தனவாறுங்
கோவலர்காணக்குழீயினவாறுங் கோக்கணமிறைஞ்சியவாறு
ம் [ம்.(க)
பாவலர்வாழ்த்திப்பலர்பழித்தங்கண் பழிபகைமுற்றியவாறு

கொன்வினைவெருவிற்புழுங்கியவரசன் கொடும்பகைக்கஞ்சியபாலா
[றும்
வின்விளைநாடுமினமுநீத்திழந்தே யெசித்திடத்தெய்தியவா
பொன்விளைசிறப்பிற்கோயிலுமுருவும் பொய்விளைதேவரோடங்கண்
மின்விளையொளிசெய்திருமகன்முகத்தில் வீழ்ந்தொருங்கொழிந்தனவாறும். (உ)

ஒளிவளர்பிறைபோல்வளர்ந்தவன்மலர்த்தா ளூன்றிமுன்னடந்தனவாறுங்
[றும்
களிவளருவப்பிலெம்வினைதீரக் கனிந்தசொற்றுடங்கியவா
வளிவளராடியேழுபோய்மீண்டு வந்துநாடடைந்தனவாறுந்
தெளிவளருரையிலினையவும்பலவுஞ் செழுந்தவன்செப்பிமீண்டுரைத்தான். (௩)

இம்மூன்றுமொருதொடர்.

உரை.—பெத்திலேமாநகரிற் சினேகிதருமுறவின்முறையாருமிடங்கொடாமற் றள்ளினதினுல் வெளியின்மேய்ந்தமாடுகளடையுமோர்குகையிற் காவற்படையணியாக வானவர்சூழ்ந்துநிற்ப வாண்டவன்மனிதனுய்ப்பிறந்தபடியையுமிடையர்சிலரோ யவனைக்காணவந்தபடியையுமரசர்மூவருமவனைவணங்கச்சென்றபடியையும் பாவுரையாற் சிலரவனைவாழ்த்தச் சிலரேபழிப்பவங்கேதானே பழியும்பகையுமூற்றிவளர்ந்தபடியையும் வீணுய்ப்பயந்தவரசனுகிய வெரோதன்சினந்துசெய்தகொடும்பகைக்கஞ்சி யினிய தன்னுட்டைநீங்கியெசித்துநாட்டிற்சென்றபடியையு மங்கேயின்னித்திருவொளிவீசுந்திருக்குமாரன்முகத்திற் பொய்யான தேவர்களும் பொன்னுற்சிறந்தகோயிலு முருவங்களும்விழுந்துதகர்ந்து முழுதுங்கெட்டபடியையுமொளியோடுவளருமிளம்பிறைபோல்வளர்ந்த திருக்குமார னிலத்திற் றன்மலர்ப்பாதத்தையூன்றி முதலடிவைத்துநடந்தபடியையு மன்றுதானே நமது வினையெலாந்தீர்ந்து நாங்களிகூரத் தான்முதற்றீஞ்சொல்லையுச்சரித்தபடியையுமேழுவருடம்போனபின்புமீ

ண்டுதன்னாட்டிற்சென்றபடியையு மிவற்றோடுபலவையுந்தெ
ளியச்சூசையுரைத்தபின்பு மீண்டுசொன்னானென்க. (௪௯)

மணிக்கலத்தமிர்தமேந்தியநெஞ்சான் வையகத்தியற்றி
யயாவும் [துமொருங்கே
பணிக்கலத்துரைப்பதென்னினியானே பகர்வதுஞ்செய்வ
யணிக்கலத்திருமாமணியெனத்தையையு மன்புமாயொருப்
படைத்தானே [ரெனக்கொண்டான்.
பிணிக்கலத்தெடுத்தவுடலொன்றேயெல்லாப் பிறருயிர்க்குயி

உரை. — அமிர்தத்தையேந்திய மணிக்கலமொப்பத் த
யையினிறைந்த நெஞ்சானாகியதிருக்குமாரன் பூவுலகிற்செ
ய்தயாவையு மினிநான் சொல்வதென்ன? அவன்சொல்வ
தெல்லாஞ் செய்வதெல்லா மழகியபூணிற்கோர்த்த விருமணி
யாகத் தயையுமன்புமாய்ச் சேர்ந்திருக்கத் துன்பமுறையா
ற் றானெடுத்தவுடலே பிறருயிர்க்கெல்லாமுயிராகவெடுத்தா
னென்றானென்க. (௫௰)

ஓர்மரக்கனியால்வந்ததீதகற்றி யொருங்குமன்னுயிரெ
லாமுவப்பப் [னக்கெனநோய்
பேர்மரத்திறத்தல்வேண்டுமென்றதுவே பெறற்கருநலந்த
கூர்மரச்சிலுவைதனக்கொர்செங்கோலே கொலுவதேயம
ளியேயென்னுச் [ள்வானம்மா.
சூர்மரத்துயர்தானிளமையிற்றுடங்கிச் சுகமெனத்துயில்கொ

உரை. — மீளவு முலகமுண்டாக்கினநாளிலே விலக்கின
தொருமரத்தின்கனியை யாதித்தகப்பனுண்டதனால் வந்ததீ
வினைநீக்கி மனிதரெல்லாரும் வாழும்படிக்குத் தானேபெரி
தோர்மரத்திலறையுண் டிறத்தல்வேண்டுமென்பான், அங்ஙன
மிறப்பது தனக்குப்பெறுதற்கரியநன்மையென்பான், மிக்க
துயரைவிளைவிக்குஞ் சிலுவைமரமே தனக்கொருசெங்கோ
லாகவுங் கொலுவாகவு மெத்தையாகவுமெண்ணி வாலிபத்தி
ற்றுவக்கித் தானொருசிலுவைமரத்தின்மேலே சுகமாய்த் து
யிலக்கொள்வா னென்றானென்க. (௫௧)

தன்னுயிர்தனிலுந்தமரெனமக்கட் டகுதியைமேவிய
வன்பான் [கெனநசைகொண்
மன்னுயிருய்ந்தாலொழியவாங்கொழியா வருத்தமேதனக்
டின்னுயிர்மெலியவிரங்கியதன்மைத் தெல்லையொன்றில்லது
மல்லா [வனொந்தான்.
இன்னுயிர்வருந்தவுரைப்பதேதென்ன வுளத்தினைந்தருந்த

உரை. — அங்ஙனந் திருக்குமாரன்மனிதனாய்ப் பிறந்த பின்பு மனிதரெல்லாரையுந் தன்னினத்தாரென்று தன்னுயிரின்மேலு நம்மைமேவி யன்புடையனாகி மனிதருயிர்கள்பிழைத்து வாழ்ந்தாலொழியத் தனக்குவருத்தமொழியாதென்று நம்மேல்வைத்தவன்பினாசையாற் றன்னுயிர்மெலிதற்காரணமாக நம்மேலிரங்கினதன்மைக் கோரளவில்லாததுந் தவிர வுன்னுயிர்வருந்தும்படிக்குவிரிவாயின்னநான்சொல்வதென்னவென்றன்னையை நோக்கிச் சூசைமாதவன்சொல்லித் தானுமனதிலிரங்கி நொந்தானென்க. (௯௨)

வேறு.

என்றூன்மென்றுதேத்தியகையா னிவையெல்லாஞ்
சென்றுங்குண்டாமாண்பினர்கேட்பத் தெளிவுண்டார்
பின்றவன்பால்யாருமிரங்கப் பெரிதேங்கி
நின்றோரொன்றுயார்புகழ்மாலை நிறைசொன்னார்.

உரை. — அங்ஙனம் பூங்கொடியேத்தியசூசை சொன்னவி, சொன்னவெல்லாவற்றையு மங்கேகூடின பெருமையோர்கேட்டவளவி லுணர்விற்றெளிந்து மிக்கொழியாதவன்போடுவரு மவதரித்தநாதற்கிரங்கி மிகவும்வருந்தி நின்றபின்னரொருப்படவவனைப்புகழ்ந்து சொல்லத்துடங்கினாரென்க. (௯௩)

தன்னேரில்லான்றன்வயனாகித் தனிவல்லோன்
முன்னேரில்லான்காரணனாகி முழுதொன்றாய்ப்
பின்னேரில்லான்றன்மனுவாகிப் பெரிதேங்க
வென்னேரானுனேவருணாளோ விதுவென்பார்.

உரை. — தனக்கோருவமை புறத்தில்லாதான் றன்னாற்றானாகி நிகராததிறத்தான் முன்னே மற்றொருவனுடன்பாடின்றி யெல்லாத்துக்குங்காரணனாகிப் பின்னே நிகரொன்றின்றி மனிதனாகி மிகவும்வருந்த வென்னோடொத்தவனானானோ? நினைத்தவருட்டொழிலைமுடிக்கு நாளிதுவோவென்பாரென்க. (௫௪)

தன்பாலெல்லா நன்றுளனாகித் தலைகவல்லோன்
பின்பாலில்லாதேதுளதுண்டோ பெறவஃதை
யென்பாலெல்லாநோயுளனாகி யிவணெய்த
வன்பாலெல்லாவொப்பிலனாய வரசென்பார்.

உரை. — தன்னியல்பாக வெல்லா நன்மையுடையனாக நின்ற பெருமையோன் பின்பு தனக்கில்லாததொன்றினை யடையவேணுமென்றாற்போல மனுவுடலையெடுத் தெல்லா நோயுடையனாகிப் பூவுலகிற்பிறந்தானே, இவனேயொவ்வாதவன்பினரசனென்பாரென்க. (௫௫)

வாழநாமுந்தானழுவானோ வளர்நீணாள்
மூழநாமுந்தான்மடிவானோ முழுமுந்நீ
ராழநாமுந்தாழ்ந்துறினெந்தை யருளாழி
சூழயாருண்டோவிதினுண்டோ துறையென்பார்.

உரை. — நாமேவாழத் தானழுவானோ? முடியாதவீட்டினெடுநாட்கொண்டாமிருப்பத் தான்சாவானோ? கடலினாழ்ந்தாழ்ந்து நாமளந்தாலு மெம்மிறையோன் றயைக்கடலையாராய்ந்தளக்க வல்லவருண்டோ? அதற்கோர் துறையுமுண்டோ? இல்லையென்பாரென்க. (௫௬)

எல்லையில்லையென்றவனன்பிற் கிணைகூற
வல்லையில்லையென்றதுபொய்யோ வசைமண்ணர்
தொல்லையில்லையென்றுளநாளுந் துடர்தீதொப்
பில்லையில்லையென்றதுபொய்யோ விதுமென்பார்.

உரை. — அளவெலாங்கடந்த திருக்குமாரனுடைய வன்பிற் கோரொப்புச்சொல்ல வல்லமையில்லையென்றாற் பொய்யோ? மீளவும் வசையுடைமனிதர் தொல்லைநாளன்றி யுள

நாளெல்லாம்விடாமத் செய்யுந்தீவினைக்கு மோரொப்பில்லையென்று விதுவும்பொய்யோ வென்பாரென்க. (ருஎ)

அன்பிற்குண்டோமாத்திரையாக வளவெம்பான்
முன்பிற்குண்டோவோர்பயன்வானுள் முதல்வற்கே
யென்பிற்குண்டோவெஃகுமோர் நன்றி யிவையாகிப்
பின்பிற்குண்டோமானிடராசை பெறவென்பார்.

உரை.—அன்பிற்குமாத்திரையாக வளவொன்றுண்டோ? சுவாமிநம்மைப்பற்றி யிவையெல்லாவற்றையுஞ் செய்ய முன்னம்மிடத்திற் பயனென்றுண்டோ? வானுலகாளாநிற்கு முதலோனெடுத்தவுடலாற் றனக்குவர விரும்பத்தகுவதோர் நன்மையுமுண்டோ? இவையெல்லாவற்றையு மாண்டவன் செய்தபின் னின்னமனிதர்விரும்பத்தகுவதொன்றுண் டோ வென்பாரென்க. (ருஅ)

அணியேயன்பேயன்பதுசித்தே யருள்வேந்தே
மணியேயுன்பேரார்வநிகர்ப்ப வலருண்டோ
பிணியேகொண்டாய்பேரரசாகி மனிதர்க்கே
பணியேநின்றாயுன் றயையீதோ பரிசென்பார்.

உரை.— அவதரித்தநாதனைநோக்கி யணியேயன்பே யன்பின்கடலே யருளினரசனே யெங்களுக்கோர்மணியே யுன்னட்பறிந்து நிகரைச்சொல்லவல்லவருண்டோ? எங்களைப்பற்றித் துன்பங்களைக்கொண்டாய், அரசர்க்கரசனாகி மனிதர்க்குக் கீழ்ப்படிந்தேவலைச்செய்யாநின்றாயே, இதோவுன்றயையின் றன்மையென்பாரென்க. (ருகூ)

இவ்வாயெஞ்சாநாடொறுமன்னா ரிசைபாடி
மெய்வ்வாய்வல்லோன்சூசையுரைப்ப விழைவோங்கி
யுவ்வாயின்றுநீங்கியமிக்கோ ருருகுள்ளச்
செவ்வாய்துய்த்ததிவ்வியவின்பந் திகிவிள்ளா.

உரை.— இங்ஙனே யவர்கள் நாடோறும் விடாம லிசைகளைப்பாடாநிற்கவுஞ் சூசை நாடோறு மெய்த்திறத்தாற் பலவைசொல்லவுந் தவத்தாற் றீவினையொழித்த வந்நல்லோ ரெ

ல்லாரு முருகினமனதின்வாயாலுண்ட திவ்வியவின்பமாரு
மல் நிலைபெற்றதென்க. (௯௰)

தூதுரைப்படலமுற்றும்.

ஆகப் படலம் -௩௪- இ- விருத்தம்

௩௲௩௱௯௰௬.

முப்பத்தைந்தாவது.

உத்தானப்படலம்.

வேறு.

இன்னவையங்கணி லினிதிலாகையி
னுன்னவையுன்னிய வுரிமைத்தாக்கினேன்
பன்னவைபயத்தபேய் பகைத்தமன்னுயிர்
துன்னவையாவையுந் துடைத்தலோர்ந்துளான்.

உரை.— சொன்னதெல்லாம் பிதாக்களிடத் தினிதாகையில் நினைத்தயாவையு நினைத்ததன்மையின் முடித்தோனாகியதிருக்குமாரன் தீவினைபலவையும்விளைவிக்கும்பசாசு பகைத்தமனிதருக்குள்ள பாவங்களைமுழுதுந்துடைப்ப நினைத்தானென்க. (௧)

நனைவருஞ்சண்பக நறுநிழற்கிளை
யனைவருங்குளிர்பட வருணிழற்றினான்
புனைவருந்துணிவொடு புவிபுரந்திட
நினைவருந்தவம்வழா நெறிநின்றனரோ.

உரை.— அங்ஙன நினைத்ததிருக்குமாரன் பூத்தசண்பகச்சோலை நிழலோடொப்ப வருளினாலெவரையுங்குளிர்ப்பிக்க நிழலைச்செய்தவனாகி யரியதுணிவோடுலகமிரட்சிக்க முந்தித் தானே யரியதவநெறி வழுவாதேநின்றனென்க. (௨)

திடந்துதைந்தருமறை தெளித்தநூற்படி
நடந்துமுன்னறநெறி நல்கிப்பூமதுக்
கடந்துபின்னினியவை கனியவோதுவான்
கிடந்துமின்பிழம்புகக் கிளர்த்தகாட்சியான்.

உரை. — இடர்தமின்ஞெளித்திரளை நிறையவெறிக்குங் காட்சியுடையதிருக்குமாரன் பிறழாமெய்யிற் சிறந்தவேத நூலின்படியே முன்றுனடந்து நல்லறநெறியைக்காட்டிப் பின்புமலர்ந்த பூவாயொழுகு மதுவினுமினியசொற்கொண்டநெறியை யோதுவானென்க. (௩)

செய்வினையுரைவினை திரிபிலாச்செயிர்
கொய்வினையாகையிற் குணுங்கிங்குய்த்தபற்
பொய்வினயனைத்தையும் போக்கியாண்டையு
மெய்வினையுணர்த்துவான் மெய்யின்காணியான்.

உரை. — மெய்யின்காணியையுடையதிருக்குமார னடந்துசெய்யுந்தன்மையு மோதிச்சொல்லுந்தன்மையும் வேறுபடாமலொன்றித் தீவினையறுக்குந்தன்மையாகையிற் பசாசு பூவுலகிற்கொண்டுவிட்டபொய்களை முழுதும்போக்கியெங்குஞ்சத்தியத்தை யுணர்த்துவானென்க. (௪)

ஒப்பிலாரேனொன்பா னென்றுணர்கிலாத்
துப்பிலாத்தேவரைத் தொழுதலந்தகற்
கப்பிலாழ்ந்தந்தகன் றுணையமைந்தெனத்
தப்பிலாவழுவிவர் தவிர்க்குமோவென்பான்.

உரை. — திருக்குமாரனுணர்த்துந் தன்மையோவெனில், தனக்கோருவமையில்லாதா னொருவனுவதன்றிப் பலராகமாட்டாதென்று நன்றுயுணராமையாற் றேவதிறமில்லாதவரைத் தேவராகவெண்ணி வணங்குவ தெத்தன்மைத்தோவெனிலாழ்ந்த வாற்றுநீரிற்புகுந்து குருடன் குருடனுக்கொருதுணையாகநின்று விருவருக்கொருப்படக் கேடுதப்பாததன்மையாகுமென்பானென்க. (ஆகையா லவ்விருகுருடர் நீரிலமிழ்ந்திச்சாவதுபோலப் பொய்யானதேவரை யனுசரித்தவருமத்தேவரோ டெரிதீநரகிலமிழ்ந்திக் கெடுவாரொன்றதாயிற்றென்க.) (௫)

மின்னுரைத்திழைத்தபொற் கோயில்வேய்ந்திலுங்
கொன்னுரைத்தனவுருக் கொள்கைத்தெய்வமோ

பொன்னுனாத்தொளிப்படப் புனைந்தபாவைக
ளென்னுரைத்திடுவதோ ரியல்புண்டோவென்பான்.

உரை. — மீளவும் பொய்யானதேவர்களுக்குப் பொன்னிழைத்தாக்கின நகையான் மின்னும்கோயில்கள் வைத்ததாகத் தோன்றினும் வீணுயலங்கரித்த வுருவங்களாரியதேவரென்பவோ? பொன்னைப்பூசி யொளிபடவலங்கரித்த மரப்பாவைகள்பேசுமோ வென்பானென்க. (ஆகையாற் புறக்கோலத்தையெண்ணுவதாகாதென்ற தாயிற்றென்க.) (சு)

உலகிடத்தோரென்பா னுரைத்தநூற்படி
விலகிடத்துகளெலாம் விலகியீரற
மிலகிடத்திடரறுத் தியலுநற்பய
னலகிடத்தகுதியை யறிவர்யாரென்பான்.

உரை.— சொன்னபடி யொன்றாகியகடவுளிப்பூவுலகிற் றிருவுளம்பற்றியருளின வேதநூற்படியே விலகவேண்டிய தீவினையாவையும்விலகி யில்லறந்துறவறமென்னு மிருவகையறங்கள் விளங்கினவிடத்திற் றுன்பங்களொழிந்துவிளையும் பலனையளக்க வதின்றன்மையை யறிவாருண்டோ வென்பானென்க. (எ)

மருள்வருநசைபிறர் பொருளில்வைத்திடா
தருள்வருமுகத்திறன் பொருளளித்தலே
பொருள்வரும்வழியெனப் புயலின்வான்கொடை
தெருள்வருமறிவுளார் திருத்துவாரென்பான்.

உரை.—மீளவு மறிவின்மயக்கத்தால் விளையுமாசையைப் பிறர்பொருளின்மேல்வையாம லருளான் மலர்ந்தமுகத்தோடு தன்கைப்பொருளை யிரப்போர்க்கீதலே தனக்குப்பொருள்விளையும்வழியாமென்று பெய்யுமழையோடொப்பத் திரளாய்க்கொடுப்பார் தெளிந்தவறிவினையுடையா ரென்பானென்க. (அ)

அறத்தினுல்வருவதே யின்பமல்லதோர்
மறத்தினுல்வருசைவரு மன்றிவானெறி

புறத்திறுமென்றுதான் புகன்றவேத நூற்
றிறத்திறு னுளத்திருள் சிதைப்பவோதுவான்.

உரை.— மீளவு நல்வினைப்பயத்தா லின்பம்வருவதே யொழியப் பாவத்தாலிகழ்ச்சிவிளைவதுமன்றியேயவ்வழிமே ற்கதிசேரும்வழிக்கப்புறத்து நிற்குமென்று தானேதியவேத நூலான் மனிதருட்கொண்ட விருளைநீக்கி விளக்குவானெ ன்க. (கூ)

தள்வரும்பொருடகாக் கடந்தசொற்புகழ்
கொள்வருமனையவர் கொண்டவப்புக
ழெள்வருமிழிவதே யியன்றதாழ்ச்சியா
லொள்வரும்புகழென்பா னுலகிலோரொன்பான்.

உரை.— மீளவுந் தன்னியல்பிற்குத் தகாமற்கடந்த புகழ் ச்சியைத் தனக்குத்தகுவதென்றுநினைத் ததைக்கொள்பவர் பி றர்கைப்பொருளைத் திருடுங்கள்ளரோடொப்பார். அதுவுந் தவிர வந்தப்பொய்ப்புகழ்ச்சியா லிகழ்ச்சிவிளைவதுசரியே, தாழ்ச்சியடக்கத்திறுலோவெனி லொளிபெறுங் கீர்த்தியாகு மென்பா னுலகிற்கெல்லா மொருகடவுளாகநின்ற திருக்கு மாரனென்க. (ம)

இக்கெனப்பொருளொளி யின்பமூன்றுமே
புக்கெனப்புரையெலாம் புவிபுகுந்தன
மிக்கெனத்துடைத்தவை வெல்லுவான்பொறை
சிக்கெனத்தாங்கியெஞ் செயிரைத்தாங்கிறுன்.

உரை.— அங்ஙனம் பொருளாசை புகழாசை யின்பத்தி றுசையென் றிம்மூன்று மினிமையோ டுலகிற்புகுந்ததன் மையாற் பாவமெல்லாமிகவும் புகுந்ததென்றவற்றையொழித் துவெல்லப்பிறர்க்குச்சொன்ன வுணர்ச்சிகளன்றியே தானே யாயுதமாகப் பொறுமையைத்தாங்கி நமதுதீவினைகளையுந் தாங்கிறுனென்க. (மக)

வென்றியுங்குணித்தனன் வென்றிவாளொடு
பின்றையுமுளபல பெரும்படைக்கல

பின்றியும்பொறுத்தலோ டிகல்வெல்லப்பொறை
யொன்றையுந்தாங்கிறு னுலகந்தாங்கினன்.

உரை.— அங்ஙனம் வெற்றியைக்கொள்ளநினைத்தாலும் வெற்றிவாளு மற்றவாயுதங்களுந்தேடாமற் றீயவைபொறுத் தலாற் றீவினைப்பகையைவெல்லப் பொறுமையொன்றினை த்தாங்கித் தரித்துக்கொண்டா னுலகம்யாவையுந்தாங்காநிற் குந் திருக்குமாரனென்க. (௯௨)

தீய்வருமிகழ்ச்சியைச் சிந்தியாப்பிரான்
றுய்வருமருளினுற் றரணியெங்கணும்
போய்வருந்துயரறப் புதுமையாக்கியுட்
காய்வருங்குளிர்ப்பவே கருணைகாட்டுவான்.

உரை.— அங்ஙனஞ் சுடுந்தீயாகத்தனக்குவந்த விகழ்ச்சி யைப் பொறுமைமிகுதியா லெண்ணுதிருந்தகடவு ளன்புள் ளதாயின்றன்மையா லெங்குந்திரிந்து மனிதர்க்குவந்த துயர் களைத்தீர்ப்ப மட்டில்லாதவற்புதங்களைச்செய்து பகையாற் சுடு நெஞ்சுடையர்முதலா யுள்ளேகுளிரும்படிக்குக் கருணை தயாபத்தை யெங்குங்காட்டுவானென்க. (௯௩)

கண்டருங்கரந்தருஞ் செலக்காறரு
மூண்டருங்களிதரு முயிர்தருந்தகும்
பண்டருந்துயர்களேய் பலவைதீர்தரு
மண்டருந்தயைநலம் வழங்கத்தந்துளான்.

உரை.— அவன்செய்யுமற்புதங்களேதெனில், கண்ணில்லா ர்க்குக் கண்ணைத்தரவுங் கைவழங்காதார்க்குக் கைவழங்கச் செய்யவு மூடங்கினகாற்குறைதீர்ப்பவு நொந்தார்க்கு மகிழ் ச்சிவிளைவிக்கவு மிறந்தார்க்குயிரைத்தரவு நெடுநாள்வந்ததுு ன்பநோயெல்லாநீக்கவு மிக்கதயையை யெங்குஞ் செய்வா னென்க. (௯௪)

சிந்தநன்றேவர்க்குமாய்த் தனக்கியாவரு
மந்தமொன்றிலாமலி யல்லலாக்கலும்

வந்ததன்றுயரெலா மனத்தெண்ணப்பொறைக்
கந்தளந்தரித்தனன் கருணைவேலையான்.

உரை.—அங்ஙன மற்புதமாகத் தான்செய்தநன்மையெவர்க்குமுண்டாகி யெல்லாருந் தனக்குத்தின்மையைச்செய்ய விளைந்த தன்றுன்பங்களையெண்ணமற் பொறுமையே வயிரக்கவசமாகத் தரித்துக்கொண்டான் கருணைக்கடலாகிய திருக்குமாரனென்க. (௰௫)

புரைசெயுந்தன்றுயர் பொறுத்துநோற்கிலா
னுரைசெயுநெறியுறு வுயிரைத்தீநர
கிரைசெயும்பாவமென் றிரங்கிவிம்முவான்
கரைசெயுங்கடலினை கடந்தவன்பினான்.

உரை.—அங்ஙனம் பிறர்குற்றத்தினால் வருந்தன்றுயர்களைப்பொறுத்து மனதினேகாதவனாய்த் தான்சொல்லிக்காட்டின நன்னெறியொழுகாமல் வழுவினவுயிர்களை யெரிதீநரகத்துக் கிரையாகவிழச்செய்யும் பர்வமேயென்று மனதிலிரங்கியழுவான் கரையுள்ளகடலைவவ்வா ததனைக்கடந்த வன்புடைய திருக்குமாரனென்க. (௰௬)

நக்குமேரர்சிறுசுவை நச்சிநீங்கலாச்
சிக்குமோர்நிறைதுயர் சிந்திப்பாரிலாத்
தக்குமோரறிவில தரணிகெட்டதென்
றெக்குமோரிணையிலா னுளைந்திரங்குவான்.

உரை.—அங்ஙன மொத்ததிகரில்லாத நரதேவன் மனிதரெல்லாரும் நக்கத்தகுவதொழிய வுண்பதற்குப்போதாதசிறிதோரினிமைக்காசைப்பட்டு வந்தொழியாத துன்பங்களாதலின் றிமெய்ப்பயனுணராமனிற்கு ஞாபகமின்றி யுலகெலாங்கெட்டதென்று மனதினொந்திரங்குவானென்க. (௰௭)

தீதளித்தோச்சிய தீயகோன்மையாற்
கோதளித்துயிருணுங் குணுங்கைவெல்லவு
நீதளித்தெரிந்தநின் வெகுளிநீக்கவு
மேதளித்தியற்றுவே னென்பிதாவென்றான்.

உரை.—அங்ஙன நமக்கிரங்கினநாதன் றன்பிதாவைநோக்கிச்சொல்வான்: என்பிதாவே தீவினைவிளைவித்துக் கொடுங்கோன்மைசெலுத்திப் பாவவழியா லுயிர்களைக்கெடுக்கும் பசாசைவெல்லவு நீதியின்படியேயெழும்பி யெரியுமுன்சினத்தையமர்த்தவு நான்செய்யத்தகுவ தேதென்றானென்க. (௰அ)

மூற்பழியொழித்துநின் முனிவையாற்றிடத்
தற்பழியிலாப்பலி தரணிமீதிலா
தற்பழிவிலாதவென் னுயிரளித்தியான்
றெற்பழிபிதாவிதோ துடைக்குவேனென்றான்.

உரை.—ஆதியில்வந்த வொழியாத பழியைத்தீர்த் துன்சினத்தையாற்றக் குற்றமில்லாதபலி பூவுலகிவில்லாமையா லற்பக்குற்றமாயினுமில்லாத வென்னுயிர்பலியாக நானேதந்து பழம்பழிப்பாவங்களைத்துடைத் துலக மிரட்சிப்பேனென்றானென்க. (௰௯)

வேறு.

என்றனன்கடனீர்வெள்ளத் திணைகடந்தரியவன்பா
னன்றெனப்பிதாவுமென்று னரதுவத்திறைமைசேர்த்தி
நின்றனநாயகன்செந்நீர் நீத்தமாய்ச்சிந்தித்தானே
சென்றனவுலகின்மாசு தீர்த்தறக்கழுவனேர்ந்தான்.

உரை. — அங்ஙனங் கடலின்வெள்ளமொவ்வாத வன்புடையோன்சொன்ன தற்குப்பிதாவுநல்லதென்றான். ஆதலான் மனுத்தத்துவத்தோடு தேவதத்துவத்தைச் சேர்த்திநின்றநரதேவன் வெள்ளமாகத்தன்னிரத்தத்தைச்சிந்திப் பூவுலகுடையமாசுகளைக் கழுவச்சம்மதித்தானென்க. (உ௰)

கலையினுலளக்கலாற்றுக் கசடெலாமொருங்குதீர்ப்பக்
கொலையினு லுயிரைச்சிந்தாக் கூறுமோருரைசால்பேனும்
விலையினு லுயர்வான்வீட்டு விழுப்பமேயெவர்க்குங்காட்ட
வலையினு லுவமியாத வலக்கணுற்றிறத்தனேர்ந்தான்.

உரை. — கற்றோ ரளவறுக்கப்படாத மனிதர்பாவங்கள் யாவையு மொருங்குடன்றீர்ப்பக் கொலைத்தொழிலா லவதரித்தநாத னுயிர்பட்டிறவாமது மவன்சொல்லுமொருசொல் லேபோதுமென்றுநு நமக்குமோட்சபாக்கியத்தைக்கொள்ளத் தான்றந்த விலைமிகுதியா லதின்செல்வமு மெவ்வளவென்றுகாட்டப் பெருங்கடலொவ்வாத துரிதங்களைக்கொண்டிறப்பச் சம்மதித்தானென்க. (உக)

இத்திறத்திறைவனேர்ந்தவியல்பிதென்றறிந்தபேய்கள்
மைத்திறத்துடன்றவஞ்ச மறப்பகையிவன்மேறீயோர்
கைத்திறத்தியற்றவுள்ளிக் காய்தழல்தூண்டினூற்போ
லத்திறத்தினரையேவி யரும்பகைமுற்றிற்றன்றே.

உரை.— இங்ஙன மாண்டவன்றிருவுளமானுனென் றறிந்தபேய்கள் முன்னிவன்மேலே வைத்தசினமும் வஞ்சமும் பகையுந் தீயோர்கையாற்செலுத்தவேணுமென்று வேகுமழலைத்தூண்டினூற்போலச் சிலபாவிகளையேவிப் பசாசினுலன்று கொடும்பகை முற்றிற்றென்க. (உஉ)

கண்கிழித்தொழுகச்செந்தீக் கதத்தினரடித்தபாலால்
விண்கிழித்தொழுகுமாரி விதப்பெனவெந்தையாக்கை
புண்கிழித்தொழுகுஞ்செந்நீர் புரைவினைமலங்கழீர்ப்ப
மண்கிழித்தொழுகுவெள்ளமலிவொடாங்கொழுகிற்றன்றே.

உரை.— அங்ஙனம் பசாசினலேவப்பட்டபாவிகள் தீப்பொறி கண்வழியாகப்புறப்படச் சினத்தைக்காட்டி யவதரித்தநாதனை யடித்தகொடுமையால் மேகத்தைக்கிழித்த மழைத்தாரையாக வவனுடலிற்றிறந்த புண்வழி யொழுகினவிரத்த நம்முடைதீவினைமலங்கள்யாவையுங்கழுவ மண்மேற்றிரண்டோடும் வெள்ளமாக வோடிற்றென்க. (உ௩)

கடுமரத்திழிந்தநஞ்சுட் கடுத்தடும்வினையைக்காக்க
நெடுமரத்திழிந்ததேவ நிலைமருந்துரியதென்ன
வடுமரக்கனியான்மாக்கட் கமைந்ததொற்பழியையெந்தை
கொடுமரத்தறையுண்டெம்மைக் குணித்திறத்தொருங்குதீர்
த்தான். ௩௰

உரை.— நச்சுமரத்தி லொழுகினநஞ்சினு ளுள்ளே கடுத்துக்கொல்லும் வினைகளைக்காக்க மற்றொருநெடுமரத்தினின்றொழுகிய தேவமருந்துவேண்டுவதென்று விலகினமரத்தின் கனியையுண்டதனால் மனிதர்க்குவந்த பழம்பழியையாண்டவன்றானே மற்றொரு கொடியமரத்தி லறையுண்டிறந்து தீர்த்தானென்க. (௨௪)

மக்கடங்கடன்கடீர்ப்ப வயமிலாரென்னநாதன்
றிக்கடங்களுமுட்கூசத் திளைத்தவக்கடன்மேற்போட்டு
மிக்கடங்கிலவன்பாற்றான் மெய்யொடுமகனாயிங்கண் [ன்.
புக்கடங்கிலநோயிவ்வாய் பொறுத்தெமையுள்ளிமாய்ந்தா

உரை. — அங்ஙனம் பாவவினையான் மனிதர்கொண்ட கடனைத்தீர்ப்ப வவர் வல்லவரல்லவென்று பரமநாதன்றானே யுலகெலாங்கூச வக்கடன்யாவையுந் தன்மேற்கொண்டவனாகி யடங்காதவன்பின் மிகுதியா லுடலையெடுத்து மனிதனாயிங்கேபிறந்து மட்டில்லாத துரிதங்களைப்பொறுத்து நம்மைப்பற்றி யிறந்தானென்க. (௨௫)

எஞ்சிறையொழித்துத்தான்றன் னின்னுயிர்தந்தியாக்
யஞ்சிறையொழித்துவாய்ந்தவாவியான்முந்தையோர்க[கை
டஞ்சிறையொழித்துவீட்டின் வளந்தரவருளோர்ந்தாசை
விஞ்சிறைவன்றன்றாது விளம்பியநிலையிற்போனான்.

உரை. — அங்ஙன மாசையின்மேலுந் தயையையுடைய நாதன் பாவத்தால்வந்தசிறை நமக்கொழித்துத் தானேதன்னுயிர்தந்திறந் துடலென்னுமழகிய சிறையைவிட்டு வாய்ந்தவுயிரோடு பிதாக்கள்சிறையைத்தீர்த்து மோட்சபாக்கியத்தை யவர்க்குத்தந்தருளநினைத்து முன்றன்றாதனாகிய குசையந்தப்பிதாக்களுக் குரைத்தபடியே யங்கேபோனானென்க. (௨௬)

வேறு.

பானலமொழித்தமரர்பாவிசைகள்பாடத்
தேனலமொழித்தபெருமின்பமுனர்செல்ல

மீனலமொழித்திரவியெஞ்சவொளிவிஞ்சக்
கானலமொழித்தவிறைவையோன்கடிதடைந்தான்.

உரை.—அங்ஙன மினியபாலினு மினியபாவிசைகளே வா ஞேர்பாடாநின்று தேனினுமினியபேரின்ப முன்னேபோக வான்மீன்மறையச் செஞ்சுடரொளியினுந் திரளொளியாப்பிக் காற்றுவிசையினும்விரைந்து நரதேவனங்கே சென்றானென்க. (உஎ)

இருட்பொதிரிராவுணவிளங்கிரவியோன்றே
மருட்பொதிரவாவமர்மனத்தொளிவயங்கத்
தெருட்பொதிர்முகத்திருவாசியுாசெப்பீதே
யருட்பொதிர்கதிக்குரியகாட்சியையளித்தான்.

உரை.—அங்கேசென்றநரதேவ னிராவிருளொழிப்பக் கதிரைவீசிய பருதியைப்போல மயக்குவிக்கு மாசையைக் கொண்ட மனத்தெளிய வொளியைப்பரப்பித்தெளிந்தமுகத்தோ டாசீர்வாதமுந்தந்து தேவவருளானிறைந்த மோட்சதரிசனத்தை யவர்களுக்குத்தந்தருளினனென்க. (உஅ)

விற்றிறமனத்திறருவிஞ்சைநலம்விஞ்ச
மற்றிறநலோனமறைவற்றினிதுகாண
நற்றிறமியற்றியதவத்தரியநல்லோர்
சொற்றிறமகன்றநயமுண்டுதொழுகின்றார்.

உரை.—அங்ஙன மாண்டவன் றந்த காட்சியொளித்திறத்தான் மனநிலாய விஞ்சைபெருகிச் சர்வத்துக்கும்வல்ல நாதனை மறைவொன்றின்றி யினிதாய்க்கண்டவுடனே யவ்வருந் தவத்தோரெல்லாருஞ் சொல்லிலடங்காத பேரின்பத்தைநுகர்ந்து வணங்காநின்றாரென்க. (உகூ)

காட்சியையடைந்துளிகளிப்புளமடங்கா
மாட்சியையடைந்தருவரத்திலவர்வாய்ந்த
சூட்சியையடைந்தடிதொழுந்தொழுமிறைஞ்ச
வாட்சியையடைந்தொளியடைந்தருள்டைத்தார்.

உரை. — அங்ஙன மோட்சக்காட்சியை யடைந்தவள வின் மகிழ்ச்சியுள்ளடங்கா மனமாட்சியைப்பெற்று வரங்க ளுஞ்சூழ்ச்சியுமிகவே யாண்டவன்பாதத்தைக் கூட்டங்கூ ட்டமாய்வணங்கி யாண்மையு மொளியு மருளுமிக வுள்ள டைந்தாரென்க. (கூ0)

பணிந்தனர்புகழ்ந்தனர்பதந்தனிலுயர்ந்தே
தணிந்தனர்தணிந்திலநலங்களிறயங்கத்
துணிந்தனர்துளங்கினர்துதைந்தனநயங்க
ளணிந்தனரருந்துதியவிழ்ந்தனரொருங்கே.

உரை. — அங்ஙன நாதனைப்பணிந்தார் புகழ்ந்தா ரவன்றி ருப்பாதத்தி லுயர்ச்சிபெற்றுத் தணிந்தார் தணியாநன்மை யிற்றெளிந்தார் விளங்கினர் நிறைந்தவின்பத்தைக்கொண் டா ரொருப்படவெல்லாரு மரியதேவதுதிகளை வகுத்தாரெ ன்க. (கூக)

ஓசைவருநீத்தமொடுநீர்பிரள்வதொப்பச்
சூசைவருநாதனொளிதோன்றவிலடங்கா
வாசைவருமார்வநிலையாயருள்வழிந்த
பூசைவருமாபுகழ்புரிந்துபுகலுற்றான்.

உரை. — மற்றயாவருஞ்சொன்ன பொதுப்புகழிற் சிறந் து சூசைமாமுனி முழங்கிவரும் வெள்ளத்துநீர் புரண்டாற் போல நாதன்வரு மொளியலங்காரத்தைக் கண்டவளவிற் க ளாயுள்ளடங்காத வாசையிலெழுந்த வன்பினளவா யருளிற் சிறந்தபூசையாக வவனைப் புகழ்ந்துசொல்லத் துடங்கினு னென்க. (கூஉ)

தன்னுயிரையோம்புமருடோன்றியெனையாளு
மென்னுயிரினின்னுயிரெனுந்தயையினல்லோ
யுன்னுயிரளித்தெமையளிப்பவுயர்வீட்டை
மன்னுயிரெலாமுறவருத்தமுற்மாய்ந்தாய்.

உரை. — உன்னைச்சேர்ந்த வுயிர்களைப்பேணி யருளைச் செய் தென்னையாளாநின் றென்னுயிரினு மெனக்கோரினிய

வுயிராய்நிற்குந் தயையினல்லோய் நீயுன்னுயிரைத் தந்தெங்களையிரட்சித் துயர்ந்தமோட்சத்தின் மனிதரெல்லாரும்வாழ்ந்திருக்க நீயேவருந்தி யிறந்தாயென்றுனென்க. (௬௩)

உரைக்கடல்கடந்தவெழி லுண்டிலகநீயே
வரைக்கடல்கடந்ததுயரோடுனைவளர்த்த
கரைக்கடல்கடந்தபயனின்றினிதுகண்டேன்
புரைக்கடல்கடந்தகளியுட்பொதுளவென்றான்.

உரை. — சொற்கடல்கடந்த வழகோடு நீயேவிளங்கக்கண்டபோதே மட்டில்லாததுயர்களோ டுன்னை நான்வளர்த்ததினு லின்று கரையிலடங்கின கடலொவ்வாம லளவில்லாதபயனைக்கண்டே னுவமையின்றி நானேமகிழும்படிக் கென்றுனென்க. (௬௪)

என்றெழுமவாவொடுவிழுந்திருவிழுந்தா
ளன்றெழுமுடிக்கிணையணிந்துதொழுகுசை
நன்றெழுமருநகைநயத்தசவையோடு
சென்றெழுமகிழ்ச்சியலைமூழ்கிநகைதீர்ந்தான்.

உரை. — அங்ஙனஞ்சொல்லி மனதிலெழுந்தவாசையோடுவிழுந்து சிறந்தவிருபாதத்தை முடியாகத் தலைமேலணிந்து வணங்கினசூசை மகிழ்ந்தமற்றத்தவத்தோர் சபையோடன்று பேரின்பக்கடலின்முழுகித் தன்னுசையையாற்றினுனென்க. (௬௫)

அளிபொதுளவாகியிவையன்றுதயைநாளா
யொளிபொதுளவேநிதியிணேவியழல்வெந்தார்
களிபொதுளவத்துயர்கடிந்துவரவானோர்
தெளிபொதுளவேகியிடர்தீர்த்தவுயிர்மீட்டார்.

உரை. — இவையெலா மன்புமிகவாகையி லன்றுதயைநாளாகையா லொளிமிகப் பொன்னையுலையிற்சுட்டதுபோலவுத்தரிக்கிறஸ்தலத்தில்வருந்தி வேகாநின்றவுயிர்களு மகிழ்ச்சியையடைய வத்துயர்களைவிட்டுவரும்படிக் கங்கே சிலவான

வர் தெளியொளிபரப்பிப்போய்த் துன்பந்தீர்ந்த வவ்வுயிர்களை மீட்டுக்கொண்டு வந்தானென்க. (௰௬)

ஆசைதருமல்லலறவவ்வவையுஞ்சேர்ந்தே
தூசைதருதிவ்வியதுதித்தொடைதொடுத்த
வோசைதருநாமமொருவாயிரமுமோதிப்
பூசைதருபூசுபுகழ்பூசறருவாரால்.

உரை. — ஆசைசெய்தவருத்தந்தீர்ந்த வந்தச் சபையுஞ் சேர்ந்து சூசைதுடங்கின புகழின்மாலையைத் தொடுத்த வோசையோ டாயிரதேவநாமங்களையோதிப் பூசையாகச் சிறந்ததேவதுதிகளைமுழங்கித் தூற்றுநின்றனென்க. (௰௭)

மின்புரியமீனதினுமின்னொளிமிளிர்ந்த
வன்புரியவன்னவருந்துதிகளாடிப்
பின்புரியவொப்புமிலபேருவகைபோரா
தின்புரியதொல்லையிலையெல்லையிலையன்றே.

உரை. —மின்னினவான்மீனினு மின்னெறித் தொளியைப்பரப்பி விளங்காநின்ற வவ்வன்புடையோ ரிங்ஙனேதேவதுதிகளைச்சொல்லிப் பின்னுக் குவமையில்லாதபேரின்பத்தை விடாதமகிழ்ச்சி முன்னிருந்ததுமில்லை யன்றோர்மட்டுள்ளது மில்லையென்க. (௰௮)

வேறு.

அயிர்கடந்தினியவின்பத் தங்கணிவிருநாட்போக்கி
யுயிர்கடந்தொழிந்தயாக்கை யுறைந்தகல்லறைகண்ணெநீந்தஞ் [ண்
செயிர்கடந்தளித்தநாதன் செறிந்தவவ்வவையோர்நாப்ப
வயிர்கடந்துடன்றவோதை வழங்கவிற்பரப்பிப்போனான்.

உரை. — அங்ஙன மினியயாவையுங்கடந்த வின்பத்தோடங்கேயிருநாட்களைப் போக்கி மூன்றுநாளெம்பாவவினைகளைக்கடந்து நம்மையிரட்சித்தநாத னுயிர்பிரிந்தொழிந்த தன்னுடல்கிடந்த கல்லறையிடத்தி லந்தச்சபையினடுவே யூ

துகொம்புமுதல் மற்றவிவ்வுலகின் வாச்சியங்களையுங் கடந்த வோசைமுழங்கக்கதிரைப்பரப்பிப்போனானென்க. (௩௯)

ஏற்பிழம்பெறித்தவானோ ரெண்ணிலர்முனர்ப்போய்ப்பாட
வற்பிழம்பறவில்லார்மற் றனைவரும்பினர்வந்தார்ப்பக்
கற்பிழம்புருகவின்பங் கனிவளன்புடையிற்செல்லச்
செற்பிழம்புறையினூர்ந்த திருவருணாதன்போனான்.

உரை.— அங்ஙனந் திரளாய்க்கதிர்களைவீசி யெண்ணப்படாதவானவர் முன்னேபோய்ப்பாடவு மற்றயாவரு மிராவிருளொழிப்ப விளங்கிப்பிறகேவந்துமுழங்கவுங் கல்லுமுருகுதற்குரிய வின்பத்தோ டண்டையிற்சூசைகூடவரவுந் திரண்டமேகங்கள்பெய்யு மாரியினுநிறைந்த தயையைச்செய்யு நாதன்போனானென்க. (சும)

மெய்கிடந்துறைந்தவங்கண் விரைவிலோர்கணத்திற்சென்று
பொய்கிடந்தமைந்தபாவம் போக்கத்தனுடலிற்பாய்ந்த
நெய்கிடந்தடைந்தகாய நின்றவவ்வவைமுன்காட்டத்
துய்கிடந்துடலைப்போர்த்த துகிற்படநீக்கினானே.

உரை.— அங்ஙன மொருகணத்தி லவனுடல்கிடந்தவிடத்துச்சென்று பொய்வழியால்விளைந்த பாவங்களைத்தீர்ப்பத் தன்றிருமேனியெங்கு மிரத்தம்பாயக் கொண்டகாயங்களை வந்தயாவர்க்குங்காட்ட மேற்போர்த்திருந்த சீலையை நீக்கியெடுத்தானென்க. (சுக)

அயநலம்போர்த்தபார்காத் தருளொடின்றுமக்குத்தந்த
நயநலங்கொள்ளநானே நல்கியவிலையிதோவென் [ந்த
றியனலந்தவிர்ந்தமெய்போர்த் திடுங்கலைநீக்கிநீங்கா [டே.
வயநலம்பொலிந்ததூயோன் வாய்மலர்ந்தறைந்தான்மீண்

உரை.— கடலையுடுத்த பூவுலகினையிரட்சித் திப்போ துங்களுக்குத்தந்தபேரின்பத்தைக்கொள்ள நான்றந்த விலையி

தோவென்று சொற்தத்தன்னழகிழந்த திருமேனியோர்த்த சிலையைப்பெயர்த்து மீளவுந் திருவாய்மலர்ந்துசொன்ஞன் வல்லமையிற்பொலிந்தநாதனென்க. (சஉ)

வானகத்துவகைசெய்யும் வனப்புடைசிரத்தைநோக்கி
கானகக்கொடியநெஞ்சார் கண்டசமுடியைச்சேர்த்தி [ர்
மீனகத்தெளிந்துமின்னென் விழியகத்துருவத்தாக்கி
பூனகத்திரத்தம்பாய வுறந்துயருணாப்பப்பாலோ.

உரை.— மோட்சத்திலும் பேரின்பத்தைவிளைவிக்கு மழகடைந்திருந்த வென்சிரத்தைப்பாருங்கள், பாலைநிலத்திலுங் கொடியநெஞ்சுடையார் நெடுமுண்முடியைச்சேர்த்தி மீனிலும்விளங்கிய வென்கண்வழியா யம்முள்ளுருவிப்புறப்பட வம்முடியைச் சிரசின்மேல்வைத்தடித்துத் திரளாய்க்குருதிகள்பாய வந்தவருத்தஞ்சொல்லுந் தன்மையோ வல்லவென்றனென்க. (சங)

பகையரசொழித்தொன்றாய்நான் படைத்தளித்தழிப்ப
தகையரசாகிமாக்க டஞ்செருக்கொழிப்பவென்னை [வல்ல
நகையரசாக்கிநீசர் நகைத்துமுண்மகுடஞ்சூட்டி
மிகையரசாகியாய வெருவிம்முருவங்காணீர்.

உரை.— எதிராளியின்றி யொருவனு யெல்லாவற்றையும் படைக்கவுங் காக்கவு மழிக்கவும் வல்லதனிக்கோலரசனுகிய நானே மனிதராங்காரத்தைத்தீர்க்கச் சிலநீசரென்னைப் பரியாசவிராசாவாக்கி நகைப்பாக முண்முடியையெனக்குப்புனைந்து நானே துன்பவரசனுகிக் கண்டயாவரு மஞ்சும்படி கொண்டவுருவத்தைப்பாருங்களென்றனென்க. (சச)

கண்வழியுயிரைப்போக்கிக் கண்டவைவெஃகிவெஃகும்
விண்வழியொழித்ததீது விலகுவான்கொடியர்கையாற்
புண்வழிகுருதியோடப் பூவெனவாடிவான்மீ
ஞெண்வழிகடந்தவென்கண் ணெளியொழிந்திருளனேக்கீர்.

உரை.— மனிதர்கண்வழியாக வுயிரைப்போக்கிக் கண்டயாவையும்விரும்பி விரும்பத்தகு மேற்கதியின் வழியைவிட்

டு வந்ததீவினைநீக்கக் கொடியநீசர்கையாற் பட்டபுண்வழி யாகத் திரளாய்க்குருதியோட வான்மீனோர்பாடுகடந்த வெ ன்கண் வாடினமலரைப்போல வொளியிழந் திருண்டதாகப் பாருங்களென்றானென்க. (சுரு)

தேனுகுமுரையால்யார்க்குந் தெருளுகுமருந்துமான
மீனுகும்வானோரோதும் வேதநூலுலகிற்றந்த
கானுகுங்கமலவாயே கடிதடிமிதிபட்டந்தோ
ஆனுதுமுதிரந்தோய்ந்த வுதட்டலர்வாடனோக்கீர்.

உரை.—மதுரவுரைகளாலெவர்க்குந் தெளிவினைப்பயக்கு மருந்தொப்பாக வொளிமீன்றிரியும் வானுலகத்தோர்வண ங்கும் வேதநூலைப் பூவுலகிடத்துத்தந்த வாசனைபொழியுங் கமலவாயே கொடிதா யடியுமிதியும்பட்டுத் திறந்தபுண்வழி யாக வடிந்தவிரத்தந்தோய்ந்த வுதட்டின்மலரோ வாடினதா கப் பாருங்களென்றானென்க. (சுசு)

தூயிரக்கொழித்தநீசர் தூணினோடெனச்சேர்த்தோ
னை
யாயிரத்தொருநூற்றைம்மூன் றடியடித்திடமொன்றின்றி
வாயிரக்கமுமற்றுய வடுவடித்தென்புந்தோன்றப்
பாயிரத்தமுமாம்றுடப் பழியுருவுடலைநோக்கீர்.

உரை. — மீளவு மிரக்கமில்லாதநீச னொன்னை யொருது ணோடேசேரக்கட்டி யையாயிரத்தொருநூற்றுப்பதினைந்த டிகளை யடித்து வாயா லையோவென்னு மிரக்கச்சொல்வில் லாமனுமடிக்க மற்றோரிடமில்லாமையாற் றிறந்தகாயங்க ளை மீளவுமடித்தடித் தெலும்புகளுந்தோன்ற விரத்தமுமா றுகக் கீழேபாய்ந்தோடப் பழியைச்சுமந்தவுருவமாகநிற் கு மென்னுடலைப்பாருங்களென்றானென்க. (சஎ)

படியதோர்தனிக்கோலோச்சிப் பாரொலாந்தாங்கநா
நெடியதோர்சிலுவைதாங்கி நீசருண்ணீசனென்னக் [னே
கடியதோர்வஞ்சர்நிந்தை கான்றடித்துதைப்பவீழ்ந்து
கொடியதோர்தடத்துயர்ந்த குன்றமேலரிதிற்சென்றேன்.

உரை.— உலகினரசு பொதுவறத்தனியேகொண்டு பூவுல கெல்லாந்தாங்காநிற்கு நானே நெடியதோர்சிலுவைமரத் தைத் தோண்மேற்றுங்கிக்கொண்டுபோய் நீசருக்குள்ளே நீ சனுக வென்னை நெட்டுரேவஞ்சகர் நிந்தித்தடித்துக் காலாலு தைப்ப நானேவிழுந்துவிழுந்து கொடியவழிகடந் துயர்ந் தமலைமே லரிதாய்ச்சென்றேனென்றுனென்க. (சஅ)

ஓரயில்குன்றின்கோட்டி லுலகெலாம்வெருவிக்கூசப்
பேரயிலாணிதன்னுற் பெருமரத்தறையுண்டென்செந்
நீரயில்புவிதன்றீது நீத்தருள்கிளர்த்துவாழக்
கூரயிலாணிக்காயங் கொண்டகால்கரங்கணேக்கீர்.

உரை. — அங்ஙனங் கூர்மையுள்ள மலையினுச்சிமேலுல கெலாம் வெருவிக்கூசம்படிக்குக் கூர்ந்தபெரியதோ ராணி களாற் பெரியசிலுவை மரத்தறையுண்டு சிந்தினவென்னிரத் தத்தையுண்டபூமி தன் றீவினையெலாந்தீர்த்துத் தேவருளா னிறைந்து வாழுதற்காரணமாகக் கூர்ந்தவிருப்பாணிகள்திற ந்த காயங்களையுடைய காலையுங் கையையும்பாருங்களென் றுனென்க. (சகூ)

ஆட்டியாலமைந்ததீமை யகற்றிமீதுயர்வீட்டாறு
காட்டியானுயிரை நீக்கிக் கடும்பகைநீங்காநெஞ்சா [ப்
னீட்டியால்விலாவைத்தாக்கி யடைக்கலமெவர்க்குஞ்செய்ய
பேட்டியான்றிறந்தநெஞ்சிற் பெரியதோர்வாயினேக்கீர்.

உரை. — உலகுண்டாகியநாளி லொருபெண்காரணமாக வுலகிற்கெல்லாம்வந்த தின்மையையகற்றி மோட்சத்தைச் சேரும்வழியைக்காட்டிநா னென்னுயிரையிங்ஙனேதந்திற ந்தபின்பு பகையைவிடாதகொடியநெஞ்சுடைய வொருவ னீட்டியா லென்னை விலாவிற்குத்தி யெவர்க்குமடைக்கலஞ் செய்யவாசையா னுனே யென்னெஞ்சிலேதிறந்த பெரும் வாசலைப்பாருங்களென்று னென்க. (ருய)

பெய்ததோர்மாரியென்னப் பெருகியென்னிரத்தஞ்
சிந்திக்

கொய்தவோர்கனியாற்கொண்ட குறைகடீர்த்துலகங்காக்கச்
செய்ததோர்வினையீதென்றாற் செய்வ துமினியாதுண்டோ
வெய்தவோர்பயனுமும்மாலெனக்குண்டோவென்றானதன்.

உரை. — அங்ஙன மாரிசெய்ததன்மையா லென்னிரத்த ஞ்சிந்தி யாதியிலறுத்துண்டவோர்கனியால் வந்தகேடுகளைத் தீர்த் துலகெலாங்காத்திரட்சிக்க நான்செய்ததன்மையிது வே, இனியென்னவின்னஞ் செய்வதேதுண்டோ? ஆயினுநா னிவையெல்லாவற்றையுஞ் செய்தபின் னுங்களாலெனக்கு வரத்தகும் பயனொன்றுண்டோவென்று னரதேவனென்க. (ருக)

உருகமாவயிரக்குன்று முரைத்தசொல்லெறிவேல்பா
திருகவாய்பிளந்தபுண் ணுட் டிரண்டதீயாகவாவி [ய்ந்து
பருகநோயாற்றுச்சூசை பரிவளவழுந்துந்துன்பம் [ன்.
பெருகவோவாற்றவோவோர் பேருயிர்ப்புயிர்த்துச்சொன்

உரை. — அங்ஙனம் வயிரமலையுமுருக நாதன்சொன்ன சொற்களே யெறிவேல்பாய்ந்தபின் பதைத்திருகினதினாற் பெரும்வாய்பிளந்தபுண்ணாகி யதிலேதிரளாயுள்ளிட்டமுக்கி னதீயைப்போலவாகி யுயிரையுண்டிருக்கச் சூசைகொண்ட நோயாற்றுமற் றன்னன்பினளவாக வழுந்தியவருத்தம்பெ ருகவோ வாற்றவோ தெரிவதரிதாய்ப் பெரிதோர்மூச்சினை விட்டுச்சொன்னானென்க. (ருஉ)

இன்றுநீயுலகங்கூசவித்துயர்படவோவஞ்சி
யன்றுநானெசித்துநாட்டை யடைந்துநின்னுயிரைக்காத்
தேன் [ச்
பொன்றுநீமரத்திற்செந்நீர்ப் புணரியாழ்ந்திடவோவீட்டை
சென்றுநானுவப்பில்வாழ்வேன் றேவருடிருவினல்லோய்.

உரை. — தேவருட்செல்வநல்லோய் நீ யிப்போதுலகங் கூசுதற்காரணமாக வித்துயர்யாவையும் படவேணுமென் றோ வப்போது நானஞ்சி யெசித்துநாட்டி லொளித்துப் போ யுன்னுயிரைக்காத்தேன், நீ பட்டிறக்குமரத்திற்சிந்தின

குருதிக்கடலி லமிழ்ந்தவோ நான்மோட்சகரையிற்சென்று
பேரின்பத்தோடு வாழ்வேனென்றனென்க. (ருஙு)

அருள்மிகவிறத்தல்வேண்டி னத்திறத்துயரோவேண்டு
மருள்மிகவசடருன்னை மரத்தறைந்திறத்தல்வேண்டின்
பொருள்மிகவுன்றேளென்றேள் பொருந்தியோர்மரத்திற் றூங்கி
யிருள்மிகமுகில்சூழ்குன்றத் திருவர்வீதலும்வேண்டாதேன்.

உரை.— உன்றயையிகுதியான் மனிதரைவேண்டி யிறக்கவேணுமாகி வித்தன்மை கொடிய துயர்க ளனுபவிக்கவேணுமோ? ஆயினு மயக்கமிகுதியாற் றீயோருன்னைச் சிலுவையிலறைதலோ டிறக்கத்திருவுளமாகி லுரிமையாகவுன்றேளுமென்றேளுஞ்சேர நீயுநானு மொருமரத்தறையுண்டுதூங்கி யிருண்டமலேமே லிருவருமொருப்பட வுயிர்பட்டிறக்கவேண்டாம லென்னென்றனென்க. (ருச)

பிறந்துயிர்பிழைத்தபோது பெயர்கிலாத்துணையென்றனே
னிறந்துயிரளித்தபோது மென்னையுந்துணைவேண்டாதேன்
சிறந்துயிரனைத்துங்காத்த திருமருந்தன்றேயென்ன
மறந்துயிரளிப்பநொந்தான் வளன்விடவுடலுண்டானல்.

உரை.— நீபிறந்துலகி லுயிர்பிழைத்திருக்கும்போது நானே பிரியாததுணையுனக்கானேனல்லோ? பின் னிறந்துயிரைச்சிந்தும்போது மென்னைக்கூடத் துணைவேண்டாமென்பானேன் றையயிற்சிறந் தெலாவுயிர்களைக்காத்த தேவமருந்தொப்பாகநின்றேயென்று சூசைசொல்லித் தன்னைமறந்துவிடத்தகு முடலுண்டாகி லுடலைவிட்டுயிர்பிரிந்துசாகத்தக்கவருத்தத்தோடேநொந்தானென்க. (சூசைக்கப்போதுயிரல்லா துடலில்லாமையாற் சாதற்குரியனல்லவென்க.)
(ருரு)

வேறு.

விண்டார்பைம்பூவாகையணிவ்வாய் மெலிவெய்த
மண்டார்துன்பத்தாழுடல்கொண்ட வடிவெல்லாங்

கண்டாராயந்தார்கண்டுளியாரும் கலுழ்கின்று
ருண்டாருன்னுப்பீழைகள்மீட்டோ ருளாயுற்றார்.

உரை. — அங்ஙன மலர்ந்தபூங்கொடியோன் குசைமா முனி வருந்திமெலியாநிற்க மற்றயாவரு மத்திருமேனி துன்பத்திலமிழ்ந்திக் கொண்டகாயங்களெல்லாங் கண்டாராயந்தார், கண்டவளவின் மிகநொந்தழுதார், மதிக்கப்படாத துயரங்கொண்டு வருந்தினபின்பு சொல்லத்துடங்கினுரென்க. (ருசு)

ஐயாவிவ்வாறெங்கள்பொருட்டா லயர்வுற்ருய்
மெய்யார்துன்பத்தொன்றெனவுன்பால் விளைவுண்டோ
மையார்பெட்பா றீவினைசெய்த மனுவெல்லா
முய்யாரென்றன்றேவுயிர்சிந்த வுணர்வுற்ருய்.

உரை. — ஐயா விங்ஙனே யெங்களைப்பற்றி வருத்தங் கொண்டாயே, தடிப்புளவுடலைத் துடர்ந்துவருந் துன்பங்களி லொன்ருயினு மியல்பாகவுடவில்லாத வுனக்குண்டாகுமோ? ஆசையான்மயங்கித் தீவினைசெய்தமனிதரெல்லாரு முயிர்கெட்டழிவாரென்றிரங்கியல்லோ வுன்னுயிரைத்தந்திறக்கத்துணிந்தாயே யென்றுரென்க. (ருஎ)

கோன்பானின்பாலென்றெதிரின்றிக் குறையின்றி
வான்பானின்றேயெங்கணுநின்றேய் மகிழ்கின்று
யூன்பானின்றோர்மேனியெடுத்தா யுயிர்சிந்தத்
தேன்பானின்றேரின்பமதென்றுய் திருவல்லோய்.

உரை. — செல்வத்திறத் துயர்ந்தோனே! அரசாள்வதுன்னியல்பாகி யெதிருங்குறையுமின்றி வானுலகாதியெங்கு நின்று மகிழாநின்ருய், பின்புயிரைத்தந் திறக்கவேணுமென்றானுளதோருடலையெடுத்து வெடுத்தமேனியிற் சாதலேயுனக்குத் தேனினுமினியதென்றுயே யென்றுரென்க. (ருஅ)

வாராயோவெம்மேலுமிரங்கி மனுவல்லற்
பாராயோவெம்பேயினம்வென்றே பகையெல்லாந்
தீராயோவென்றேநகையின்மேற் சிறைதீர்த்தாய்
தாராயோவின்றன்றயையேத்தத் தகவன்றே.

உரை. — எங்கள்மேலிரங்கி யெங்களை யிரட்சிக்கவாரா யோ? மனுக்குலங்கொண்ட துயரைப்பாராயோ? சினந்த பேயினங்களையென் றெங்கள்பகையெல்லாந் தீராயோவெ ன்று நாங்களே மன்றாடினோமல்லோ? இன்று நீயோவெ ளி லெங்களாசையின்மேலுந் தயைசெய்தெங்கள்சிறையை நீக்கினாயே, இனியுன்றயை யியல்பறிந் ததைவணங்கும்படி யதற்குரியதன்மை யெங்களுக்குத்தாராயோ வென்றொ ன்க. (௫௯)

விண்மேல்வைத்தநன் றிவறுநாம் வினைசெய்ய
மண்மேல்வைத்தகாவனினக்கே வரைவின்றிப்
புண்மேல்வைத்ததீநிகர் துன்பம் புகுவித்தோ
மெண்மேல்வைத்தவெஞ்செயிராரா ரிணைசொல்வார்.

உரை. — வான்மேலெங்களுக் குன்னால்வைக்கப்பட்டந ன்மையைவிரும்பாமல் நாங்கள் தீவினைசெய்கையிற் பூவுல கிற்குக்காவலாய்நின்ற வுனக்கே மட்டில்லாத புண்களைப்படு த்தி யுள்ளே செந்தீ யூட்டினாற்போல வுனக்குத்துன்பங்களை விளைவித்தோமே, எண்ணப்படாத வெங்கள்பாவங்களெத் தன்மைத்தென் றாரார்சொல்லத்தக்காரென்றொன்க. (௬௰)

வேண்டாவின்பம்வெஃகியதன்மை விளைதீதாற்
றாண்டாவின்மைகொண்டுபிறந்தாய் தகுகண்மை
பூண்டாய்புன்கண்பாலெனவுண்டாய் புரிவோங்கி
மாண்டாயோர்கைம்மாறுவழங்கக் கடவேமோ.

உரை. — விரும்பத்தகாதவின்பத்தை நாங்கள் விரும்பி னதினால் விளைந்ததீவினை காரணமாக நீங்காததரித்திரத்தை க்கொண்டுபிறந்தாய், அதற்குத்தக்கதணிமையுங்கொண்டாய், துன்பமேபாலாகவுண்டாய், கடையிலன்பின்மிகுதியாலிறந் தாயே, இதற்குநாங்க ளோர்கைம்மாறு வழங்கக்கடவோ மோ வென்றொன்க. (௬௧)

பொய்மாறுகின்றாயாசைவிளைக்கும் புரையுய்த்த
மைமாறுகின்றாய்பேயுருநாக வயறுறிப்

பைமாறுகின்றாய்நிற்கெனவெம்மாற் பயனுண்டாய்க்
கைமாறுனக்கேயாங்கள்வழங்கக் கடவேமோ.

உரை.—உலகின்மொய்த்த பொய்யினிருளை மாற்றினாய், ஆசையால் விளைந்தபாவங்கள் கொண்டுவிட்டமயக்கத்தை மாற்றினாய், பாம்பினுருவமாகத்தோன்றினபசாசின் றிறத்தைக்கெடுத்து விரித்தபடத்தைமாறச்செய்தாய், இனியுனக்கெங்களாலொருபயனுண்டாகி நாங்களேயுனக்குக் கைம்மாறுவழங்கக்கடவோமோவென்றுரொன்க. (சுஉ)

உன்னையுள்ளசிர்க்கறியோமே யுலகுள்ள
முன்னைபின்னையாமறியோமே முரியாம
னின்னையேத்திநன்னெறிநிற்ப வறியோமே
பின்னையோர்கைம்மாறுபிணிக்கக் கடவேமோ.

உரை.—உள்ளபடியே யுன்னையறியோமே, முன்னும்பின்னுமுலகிலுள்ளதையறியோமே, விடாமலுன்னைவணங்கி வழுவாமல்நன்னெறிநிற்பதறியோமே, இனியுனக்கோர் கைம்மாறிசைத்து வழங்கக்கடவோமோ வென்றுரொன்க. (சுரு)

தாயுநீயேதந்தையுநீயே தவறுநன்
றீயுநீயேயென்றறிவோமே யிதுவல்லாற்
காயும்பாவத்தன்மையுநின்றன் கனியன்பு
மாயுங்காலத்தந்தறியோநா மறியோமே.

உரை.— எங்களுக்குத்தாயுநீயே தகப்பனுநீயே, கெடாதநன்மைகளையெங்களுக்குத் தருபவனீயே யென்றிதையறிவோம், இதொழிய மனஞ்சுடவந்தபாவத்தின்றன்மையுமினியவுன் னன்பின்றன்மையு மாராய்ந்தாலு முழுதுமறியோ மறியோமேயென்றுரொன்க. (சுச)

பாயோர்செந்நீர்கொண்டுனசங்கப் படமீதே
நீயோநாமோவிவ்வரிவைத்த நிலையென்போ
மாயாவஞ்சத்திவ்வரிநாஞ்செய் வரியென்று
லோயாவன்பாலுன்வரியென்று லுரைபொய்யோ.

உரை. — உன்றிருமேனி யோர் படமாகக்கொண்டு பாய்ந்தகுருதியால் நீயோ நாங்களோ விவ்வரிகளையெழுதின தென்போம், ஆயினும் விடாதவஞ்சத்துடனே நாங்களெழுதினவரியென்றுவு மோயாதவன்பின்மிகுதியால் நீயெழுதினவரியென்றுவு மிரண்டுசொல்லும் பொய்யோவென்றொன்க. (சுரு)

பற்றக்கற்போர் நூற்பலகற்றுற் பயனென்னே
வொற்றக்கற்றவிவ்வரியொன்றே யுணர்வெல்லா
முற்றக்கற்பாராயினுமெம்மால் முழுதாகா
கற்றக்கட்டா நுண்பொருள்காட்டாய் கலைவல்லோய்.

உரை.— ஆசைவைத்துப்படித்தவர் பலநூற்களைப்படித்ததினால் வரும்பயனென்ன? உன்னுடற்படமேலெழுதப்பட்ட வரிகளைமாத்திர நன்றாய்ப்படித்தாலே யெல்லாவிஞ்சையு முழுதும்படிப்பாரல்லோ? ஆயினுமெங்களாலாகாக்கருமமிதுவே, அதைப்படித் ததினுட்கட்டப்பட்ட நுணுக்கப்பொருட்களை நீயே கல்வித்திறத்தோனாக வெங்களுக்கிரங்கிக்காட்டக்கடவாயென்றொன்க. (சுசு)

நன்றாய்க்கற்றேநின்றயைநாஞ்செய் நவைகற்றேம்
பொன்றாயெம்மாற்பொன்றினையெந்தம் புரையெல்லாம்
வென்றாய்வென்றாய்நின்னருள்மிக்காய்ப் பெரிதன்றோ
வென்றுருள்ளத்தோவியிறைஞ்சி யெதிர்வீழ்ந்தார்.

உரை.— அவர்கள்கேட்டபடியே யவ்வரிகொண்டபொருளை யாண்டவன்காட்டினனென்றுற்போல மீண்டவர்கள் சொல்லுந்தன்மையாவது: ஐய வுன்றயையின்றன்மையு நன்றாய்க்கற்றேம், நாங்கள்செய்தபாவத்தின் றன்மையுங்கற்றேம், சாகப்படாதவனாகிய நீ யெங்களாற்செத்தாயே யெங்கள்பாவங்களை வென்றாய்வென்றாயே யெங்கள்பாவங்களினு மளவொன்றின்றி யுன்றயை மிகப்பெரிதல்லோவென்றத்தவத்தோர்சொல்லி மனதில்மிகவும்வருந்தி யடிமுன்விழுந்து வணங்காநின்றொன்க. (சுஎ)

வேறு.

வாளழுந்திய வருத்தமேகண்டுயிர்புகமூந்
நாளழுந்திய நவைவடுநீத்தெழுந்திறைவன்
கோளழுந்திய கொள்கையின்விலாவிஞேடிருகை
தாளழுந்திய காயமைந்தொளிவிடத்தரித்தான்.

உரை. — அங்ஙன மன்ஞர்நெஞ்சிற் கொடும்வாளழுந் திஞற்போல வருந்தினதன்மையைத் திருக்குமாரன்கண்டு தன்றிருமேனியி லுயிர்புகவிட்டு மூன்றுநா ளுடலிலழுந்திய வடுவெல்லாத்தையுமாற்றி யுயிரோடெழுந்தருளி விலாவிலு மிருகையிலு மிருகாலிலுங்கொண்ட வைந்துகாயங்களோ வெளிற் பதித்தவான்மீஞெப்பக் கதிராவீச வவற்றைமாரு மற் றரித்துக்கொண்டானென்க. (ருஅ)

விண்விளக்கிய வெஞ்சுடரெழுந்தெனவெழுந்து
மண்விளக்கிய மணியொளித்தொளியணிதயங்கக்
கண்விளக்கிய கவின்மனம்விளக்கநின்றெந்தை
பண்விளக்கிய பனிமதுப்பணிமொழியகர்ந்தான்.

உரை. — வான்மேனின் றெல்லாவற்றையும் விளக்கினசூ ரிய னத்தமித்தபின்பெழுந்தாற்போலத் திருக்குமாரனெழு ந்து பூவுலகிடத்தொளிசெய்யு மணியொளியொளிப்ப மிக் கொளியணிகளைவிளங்கத்தரித்துக் கண்ணுக்கினிதாய்த்தோ ன்றினவழகு கண்டாருடைய மனத்தையும்விளக்கநின்று வீ ணைவாய்க்குரலினுமினிய குளுமதுமொழிகளைச் சொன்ஞ னென்க. (ருகூ)

தீய்முகத்துல கழிவுறுங்காலறஞ்சினந்த
பேய்முகத்தெனைப் பெயர்கிலார்க்கியல்பிதென்றறிய
நோய்முகத்திறந் தரியதூதுரைப்பநீநுதலி
வீய்முகத்திவண் விட்டமெய்யெடுத்தெழுகென்முன்.

உரை. — உயிரோடெழுந்த திருக்குமாரன் குசையை நோக்கிக் கடையுகத் துலகெலாம்வெந்து முடியும்போது ந

ல்லறம்பகைத்த பசாசுக்கிணங்காம லென்னைவிடாதயாவரு
மித்தன்மை யுடலெடுத்தெழுந்திருப்பாரோ, அதற்கடைமான
மாக நெடுநாட்பிணிகொண்டிறந்து நானேவினபடி யரிய
தூதுரைப்ப நீயிங்கேவிட்ட வுன்னுடலை யிப்பொழுதெடுத்
தெழுகவென்றானென்க. (௭௰)

அலைபுறங்கொளீ யாதவனெழுந்தொளிமுகத்திற்
கலைபுறங்கொளீக் கவினிறைதிங்கள்சேர்ந்ததுபோ
விலைபுறங்கொளீ யேடவிழ்கொடிநலோனெழுந்தெந்
நிலைபுறங்கொளீ நிமலனைத்தொழுதுமுன்னின்றான்.

உரை. — அம்மனந் திருக்குமாரனேவினதிறத்தாற் கட
லைவிட்டெழுந்த செஞ்சுடரொளிமுகத்தருகே பலகலைகடந்
து நிறைந்ததிங்கள்வந்து நின்றாற்போலப் பச்சிலையோடி
தழ்மலர்ந்த கொடியையேந்தியசூசையு முடலெடுத்தெழுந்
துநமக்குரியதன்மையைக்கடந்து பரமநாதனைவணங்கி ய
ருகேநின்றானென்க. (௭௧)

போற்றினனிணை போக்கியபுகழ்பொழிமாரி
தூற்றினன்மதுத் தூற்றியபூங்கொடியடிமே
லேற்றினனடி யேற்றுபுதழுவினனுளைசை
யாற்றினனரி தமரரும்வியப்பவன்பாற்றான்.

உரை. — மீளவுஞ் சூசைவணங்கினன், நிகராதபுகழ்ச்சிமா
ரியைத்தூவினன், மதுவைப்பொழிந்த தன்பூங்கொடியை
நாதனடிமேலேற்றினன், ஏற்றினபாதத்தைத்தழுவினன், த
ன்னுசையையாற்றினன் வானவருமதிசயப்படும்படிக் கெ
ன்று மன்பாற்றுத சூசைமாமுனியென்க. (௭௨)

கானரும்பின கைக்கொடியரும்பினமலர்பூத்
தேனரும்பின செறிந்தமற்றருந்தவர்சூழ
வானரும்பின வடிவுமீனொத்தனர்வயங்கு
மீனரும்பின விண்ணவர்விழாவணிவிளைத்தார்.

உரை. — அந்தமகிழ்ச்சியாற் சூசைகையிலேந்திய பூங்
கொடிபுதிதாய்மலர்ந்து மிக்கவாசனையு மதுவும்பொழியாநி

ற்பவு நெருங்கிச் சூழநின்ற மற்றத்தவத்தோர் வானிற்பூத்த மீன்பரப்புப்போல விளங்கிநிற்பவும் வானவர் திருவிழாவணியைக்கொண்டாடினரென்க. (எங)

வேறு.

மொடமொடவெனவினமுரசொலிமுழவொலி மோ
தியயாவுமுழங்கியதிர [துகனியப்
நெடநெடவெனவுளகுழலிசைகலவிசை நீரியவோதைகலந்
படபடவெனமழையிடியொலிகடலொலி பாடெனநேரி
லொழிந்துமெலிய [யெழுமால்.
விடவிடவெனவெளியுலகலையுலகிடை வீரியவோதைமயங்கி

உரை. — மொடமொடவென்று பலவகைமுரசு மடிபட்டொலிபடு மற்றப்பறைகளு மதிர்ந்துமுழங்கவும் பலவகைக்குழல்களும் வீணைகளு மினியவோசையிசைகளைக்கலந்தினிதொலிப்பவு மிடியொலி கடலொலி யதற்குநேராதொழிந்து மெலியும்படிக்கு வெளிவானுலகிலும் கடல்சூழுலகிலுந் தேவவாச்சியங்கள்முழக்க மயங்கி யெழுந்தனவென்க. (எச)

விளையொளியுருவுறியணியணியமரர்கள் வீரியராகமி
டைந்ததொருபால் [விந்ததொருபால்
திளையொளிமணியணியணிமுடிகொணர்வன சேடியராகமி
கிளையொளிவடிவடிமலரிணைதலைமிசை கேழணியாகவணிந்
ததொருபா [கிழ்ந்ததொருபால்.
விளையொளியுருவொடுபுகழிசையொலியெழ வீரணியாகம

உரை. — ஓரிடத் தொளிவிளைதற்காரணமாக வழகியவுருவைக்காட்டி வானவரணியணியாய்ப் படைவீரராகநிறைய நிற்கவு மோரிடத்தொளியைவீசிய மணியாபரணங்களையு மழகியமுடிகளையுங் கொண்டுவந்தவடிமைகளாகச் சிலரேநிறையநிற்கவு மோரிடத்தொளியைக்கிளைத்த வழகியதிருக்குமாரன்பாதமலரைத் தலையணியாகச் சிலரேயணிந்துவணங்கிநிற்கவு மோரிடத்திளங்கதிர்பரப்பிய வுருவோடுநின்று தேவபுகழ்ச்சியிசைகளைப்பாடிச் சிலரிரண்டணிகளாக மகிழாநிற்கவுஞ் செய்தார்களென்க. (எரு)

துளிவருமழையெனநிறைவருமதுமழை தூவியமாலை
நிறைந்ததொருபா [தொருபா
லளிவருமுறையெனவளிவருகவரிக ளாடியமாலையமைந்த
லொளிவருமதியெனவுயர்வருகவிகைக ளூரொளிமாலையொ
சிந்ததொருபால் [றுமே.
களிவருஞிமிறெனகனைவருகனிவன காமரமாலையிடங்கொடொ

உரை. — வான்மழைதுளித்தாற்போல மதுமழைதுளித்
த மாலைகளோரிடத்தெங்குநிறைந்தன, அன்போடுரைத்தவி
னியசொற்போலக் காற்றினிதாய்வீச வெண்சாமரைகளோ
ரிடத் தொழுங்கோடிரட்டின, விளங்கியநிறைமதிபோலவெ
ண்குடைகள்கூடி மாலைக்கால மொளிசெய் தூர்ந்துவந்தாற்
போல வொளியுநிழலுஞ்செய் தோரிடத்துயர்ந்தன, களித்த
வண்டுகளோசையொப்ப விடங்கள்யாவிலு மினியவிசைப்
பாட்டொலித்தன வென்க. (எசு)

ஒருவருமுளபலவுலகுளவதிபதி யூழுளவூழினறைந்து
புகழ்வா [ததறைவா
ரொருவருமினைவனநினைவவனுடலுட னோர்மகனாகவியைந்
ரொருவருமடிபடமிதிபடவுயிர்பட வோவியகாதைவியந்து
மொழிவா [நவின்றுதொழுவார்.
ரொருவருமிரவியினொளிமிகவிவனெழு மோரையினோகை

உரை. — சிலருண்டாகிய வுலகிற்கெல்லா மொருவனா யா
ளாநிற்கு மரசர்க்கரசனாகிய திருக்குமாரனுடைய நித்திய
தேவகுணங்களைச் சொல்லிப்புகழ்வார், சில ரவனிரங்கின நி
னைவோடுடலைக்கொண்டு மனிதனாய்ப்பிறந்தசெய்தியைப்பு
கழ்ந்துசொல்வார், சில ரவனடியு மிதியும்பட்டுத் தன்னுயிர்
பட்டிறக்க வருந்தினசெய்தியை யதிசயப்பட்டுச் சொல்
வார், சிலரிப்போ தவன்செஞ்சுடரொளியினும்விளங்கி யெ
ழுந்தமகிழ்ச்சியைச்சொல்லி வணங்குவாரென்க. (எஎ)

அனைவருமணுகுவர்நயமிகவுருகுவ ராசையிலாசிவழ
ங்கிமெலியார் [முடியார்
சுனைவருமலரடிதொழுகுவரணைகுவர் சோபனமாடியனந்த

நினைவருமுணர்வொடுபுகழுவர்புகழிசை நேரில்வாடவருந்தி
யொழியார் [பிரியார்.
புனைவருமழகுளமுகமுகையயிலுவர் பூகதர்பூசைபுணர்ந்து

உரை.— ஒருப்படவந்தவானவர்யாவரு மணுகி மகிழ்ச்சிமிகுதியாலுருகி யாசையளவாகவாழ்த்தி மெலியாதிருக்கவுந் தாமரைப்பாதத்தை வணங்கியணைத்துச் சோபனங்களைப்பாடி முடியாதிருக்கவு நினைப்பதற்கரிய புகழ்ச்சியைச்சொல்லிச் சொன்னபுகழ்களு நேராமற்றாழ்ந்தனவென்று வருந்திநின்றாலு மப்புகழொழியாதிருக்கவும் பெறுதற்கரிய வழகிற்சிறந்த திருமுகமலரைக் கண்வாயால்நுகர்ந்து புகழ்ச்சியருச்சனைசெய்து பிரியாதிருக்கவுஞ் செய்தாரென்க.
(எஅ)

கனைவிளைகதமிலகதமலிபகையில காதலிலார்வமலிந்து
பெருக [தமிலகச்
வினைவிளைநசையிலநசைவிளைசெயிரில மேவியமேதையனந்
சினைவிளையிழிவிலவழிவிலவொழிவில சீரியயோகமொருங்கு
விளையப் [யே.
புனைவிளைநலமுறியுலகெழநிகரில பூதலமீதிலெழுந்தனிறை

உரை. — அங்ஙனம் பேரொலிவிளைவிக்கும் கோபமுங் கோபத்தால்விளையும்பகையுமொழிந்துபோ யன்புசினேகமலிந்துபெருகவும் வினைகளைப்பயக்கு மாசையு மாசையால் வரும் பாவமுமொழிந்துபோய்த் தேடின வனந்தஞானம் விளங்கவுங் கருப்பத்தால்விளைந்தவிழிவு மழிவுங்கேடுமொழிந்துபோ யுயர்ந்தசெல்வங்கள்யாவு மொருப்படவிளையவும் புதுவழகடைந்த வுலகெலாமோங்கவு நிகரில்லாத மகிமையோடிப்பூவுலகிலாண்டவ னெழுந்தருளினனென்க. (எகூ)

மெலிவனவுயிருணுமயர்வளர்சிலுகிடர் பாசறையாவு
மொழிந்துமறைய [பெயர
நலிவனவுடலுணுமிடிபசிமடிபிணி யாகுலம்யாவுங்கன்று
மலிவனபகையொடுபழிமலிவெறியின மாறிலமாயைமடிந்து
சிதையப் [திறையே.
பொலிவனபலநலமருகுவவொளியொடு பூதலமீதிலெழுந்த

உரை. — மெலிந்தவுயிரையுண்ணும் பலவகைத்துன்பங்கள்யாவு மொழியவு மழியுமுடலையுண்ணுந் தரித்திரம்பசி நோய் சாவுமகன்று பெயரவு மிக்கபகைபழிகொண்ட பேயின மாறுமற்செய்யுமாயை யொழிந்துகெடவு முயர்ந்தநன்மையெல்லாம்வந்துகிட்டவு மிப்பூவுலகி லாண்டவ னொளியுருக்கொண் டெழுந்தருளினனென்க. (அ௰)

வேறு.

வானகமுதலெவ் வுலகும்வாழ்ந்துவப்ப
மீனகவுருவுற் றெழுந்தமெய்த்திறலோன்
றேனகமொழியா டன்னைச்சீர்த்துயிர்த்தா
டானகமற்றச் சவையோடாங்கெழுந்தான்.

உரை. — அங்ஙனம் வானுலகாதி யுலகெலாமகிழ்ந்துவாழ்தற்காரணமாக வான்மீனினு மொளிவீசின வுருவோடெழுந்த தேவவல்லோனாகிய திருக்குமாரன் றேனினுமினிய சொல்லாளாகித் தன்னைச்செல்வத்தி லீன்றதாயாகிய மரியென்பவள்தானுமகிழும்படிக் கவளண்டைக்கு மற்றச்சவையோ டெழுந்தருளிப்போனனென்க. (அக)

ஒளிமுகத்திருமா சுடரோடொத்திருவர்
தெளிமுகத்திலங்க வெடுத்தசீருடலைக்
களிமுகத்தவளே கண்டாள்கண்டடிவீழ்ந்
தளிமுகத்திறைஞ்சி யயின்றநோயொழிந்தாள்.

உரை. — இருசுடரொப்பத் தன்திருக்குமாரனுஞ் சூசையாகிய தன்றுணைவனு முடலெடுத்தெழுந் தொளிமுகத்திற் றோன்றினசெல்வத்தை மரியென்பவள் கண்டாள், கண்டவளவி லிருவரடிகளில்விழுந்து கொண்டவன்புமிகவேவணங்கித் தான் முன்னுகர்ந்தநோயெல்லா மொழிந்தாளென்க. (அஉ)

உணங்கியமுல்லைக் குயிர்பெய்நீர்த்துளிபோ
லணங்கிய வுள்ள மலரவக்காட்சி
யிணங்கியதன்மைத் திழிதேனிணரேற்றி
வணங்கியவின்பங் கடனீர்வளமாற்றும்.

உரை.—ஈரமின்றி யுணங்கிவாடிய முல்லைக்கொடிக் குயி
ராகப்பெய்த மழைத்துளிபோலத் துன்பத்தால்வாடின வவ
ள் மனமலரும்படி யக்காட்சியடைந்தவளவி லிருவர்பாதத்
தின் மதுமலரேற்றி வணங்கினபொழு தவளடைந்தவின்பத்
திற்குப் பெருங்கடலு நிகரல்லவென்க. (௮௩)

மாயவளவரிய மகனைக்கண்டயின்ற
நோயளவின்ப நுகரமற்றநலோர்
மீயளவுடுப்போல் விளங்கக்கண்டுவக்குந்
தாயளவிலவாழ் தகவிற்புகழுரைத்தாள்.

உரை.— சிலுவையிலறையுண்டிறக்கும்போது தன்னரிய
தேவமகனைக்கண்டதனா லுட்கொண்ட துன்பத்தளவோ டிப்
போ தின்பத்தை யவளுட்கொள்ளும்பொருட்டால் மற்றந
ல்லோ ருடலில்லாதாராயினு மேற்றிரியுமீன்களொப்ப வி
ளங்குவதைக்கண்டு மகிழ்ந்ததாயே யளவொன்றின்றி வாழ்
ந்ததன்மைத் தரும்புகழ்சொன்னாளென்க. (௮௪)

ஆயதுமறைந்தவ் வவையைக்காட்டியதன்
சேயதுமொழிகேட் டிதுநீசெத்தடைந்த
நோயதுபயனென் றிரங்கிநொந்தழுத
தாயதுநமக்கா மெனநோய்தாங்கினாளால்.

உரை. — முன்னானதெல்லாவற்றையுஞ்சொல்லிக் கூட்
டிக்கொண்டுவந்த நல்லோர்சபையைக்காட்டின தன்றிருக்
குமாரன்சொன்னதைக்கேட்டபின்ன ரிதுவே நீபாடுபட்டி
றந்ததனா லடைந்தபயனென்று திருக்குமாரன்பட்டபாடு
நினைத்தமையா லிரங்கிநொந்தழுதாள், அழுததா யப்பாடுந
மக்குநன்மைவிளைத்ததென்று நம்மைப்பற்றித் தன்னோய்
தாங்கி யாற்றினாளென்க. (௮௫)

இந்நிலைப்பலவும் பலநாளியைந்தன்னோர்
தந்நிலைசெல்லாத் தரித்தகாலிவண்வீட்
டந்நிலைசென்ற தன்னவானந்தஞ்
செந்நிலைவடிவங் காட்டிச்செலுத்துவரே.

உரை.— இங்ஙனே யிவையும்பலவும் பலநாளாகித் திருக்குமாரனுஞ் சூசையுந் தமக்குரியநிலையாகிய வானுலகிற்குப்போகாம லிங்கேதரித்தநாளெல்லா மோட்சமேயிங்கே சென்றதுபோலச் செஞ்சுடருருவாகத்தோன்றிப் பேரின்பத்தை விளைவித்தாரொன்க. (௮௬)

உத்தானப்படல முற்றும்.

ஆகப்படலம்-௩௫-௯ - விருத்தம்

௩௲௪௱௮௨.

முப்பத்தாறாவது.

முடிசூட்டுபடலம்.

வேறு.

அன்பருந்தியவாண்டகைமாய்தலாற்
றுன்பருந்தியயாவருந்தொய்யலிற்
பின்பருந்தியகாட்சியின்பெற்றியா
லின்பருந்தவிலெல்லையொன்றில்லையால்.

உரை. — சொன்னபடியே யன்பின்மிகுதியா லாண்டவனிறந்தபோது துன்பத்தழுந்தியயாவரும் பின்பு மகிழ்ச்சியோ டவனெழுந்துதந்தகாட்சியா லடைந்தவின்ப மட்டில்லாததாயிற்றென்க. (க)

நீதநன்னெறிதந்தருணேமியா
னாதனின்னணநாற்பதுநாளிருந்
தாதவன்றிரியந்தரமேற்செலக்
காதலுண்டுகருத்துமுண்டானரோ.

உரை. — அங்ஙன நீதிநன்னெறிதந்து தயையின்சக்கரத்தையுருட்டுநாத னிங்கேநாற்பதுநாளிருந்தபின்பு செஞ்சுடர்திரியு மண்டலங்கடந்து வான்மேலுலகிற்செல்ல வாசையுங் கருத்துங்கொண்டானென்க. (உ)

விதியெழுந்தமெய்வேதநன்னாதனுந்
துதியெழுந்தகைத்தாதையஞ்சூசையு
மதியெழுந்தபதத்தினள்வாழ்த்தினர்
நிதியெழுந்தவிண்ணேடுதுநாமென்றார்.

உரை. —விதித்தமுறையிற் சிறந்த சத்தியவேதத்தைத்தந்தநாதனு மெங்கும்புகழப்பட்ட வவன்கைத்தாதையாகிய

சூசைமாமுனியும் பிறைமேலெழுந்த பாதத்தாளாகிய மரியென்பவளுக்கு வாழவென்று பொன்னுலகாகிய மோட்சத்துக்கு நாங்களேபோவோமென்றாரென்க. (௩)

புண்குடைந்தவேல்போலுரைகேட்டுநான்
விண்குடைந்தவிடிப்படமின்னினீர்
கண்குடைந்தவில்காட்டிப்போதீரெனாப்
பண்குடைந்தசொலாள்பணிந்தேங்கினாள்.

உரை.— புண்ணைக்குடைந்த வேலோடொத்தசெய்தியைக்கேட்டு மேகத்தைக்கிழித்துவிழு மிடிபட்டாற்போல நானேமயங்கிக்கிடப்ப நீங்களிருமின்களைப்போலக் கண்ணுக்கொளியைக்காட்டி மறைந்துபோகிறீரோவென்று வீணைவாய்க்குரலினு மினியசொல்லாளாகியமரியென்பவ ளிருவரை வணங்கி வருத்தமா யேங்கிநின்றாளென்க. (௪)

எல்லின்வேந்தகன்றாமிருளீர்த்தவி
ரல்லின்வேந்தெனநாமகன்றாகுலம்
புல்லின்யாவரும்போற்றுதிநீயெனாச்
சொல்லினாசிதந்தோர்வரைதுன்னினார்.

உரை.— அதற்கவர்கள் பகலின்வேந்தனாகியசூரிய னகன்றபோது மொய்த்தவிருளையறுத்துவிளங்கு மிராவின்வேந்தனாகியதிங்களைப்போல நாங்களகன்றதினால் வருந் துயரத்தைத்தீர்த்து நீயெல்லாரையும்பேணுவாயாகவென் றாசீர்வாதந்தந்து பெரிதோர்மலையையண்டினாரென்க. (௫)

களியழுந்தியகாட்சியுளோர்களு
மொளியழுந்தியவும்பருமுன்புறத்
தெளியழுந்தியசீடரும்பின்வர
வெளியழுந்தியவெற்பினைத்துன்னினார்.

உரை.— அங்ஙனம் பேரின்பமோட்சகாட்சியையடைந்தவரு மொளியைவீசியவானவருமுன்னேபோகத் தெளிந்த சீடரும்பின்னேதொடர விருவருயர்ந்தமலையை யண்டினாரென்க. (௬)

விரைகிடந்தவெற்பேறிவிண்வேந்தனுங்
கரைகிடந்தகடற்கடந்தின்புற
நிரைகிடந்தனராகுலநீத்தறச்
சுரைகிடந்தசொல்லாசிதந்தானரோ.

உரை. — அங்ஙனம் பூத்து வாசனைசெய்யு மலைமேலேறி வான்வேந்தனாகிய திருக்குமார னெழுங்கோடங்கேகூழநின் றசீடர் பிரிதலிற்கொண்டதுன்பநீக்கிக் கரையுடைக்கடலி னும் பேரின்பத்தைக்கொள்ளும்படிக்குத் தேனினுமினிய சொற்கொண் டாசீர்வாதந்தந்தானென்க. (எ)

மேவியீயெழுமுன்விரைத்தாமரை
வாவியீயெழுவான்கதிர்போன்றரு
ளேவியீயெழச்சூசையைநோக்கியுள்
ளாவியீயெழுமன்பொடுகூறினான்.

உரை. —அங்ஙனந் திருக்குமாரன் மேவியவான்மேலெ ழுந்தருளாமுன்னே வாசனைபொழியுந் தாமரைத்தடாகத்தி ன்மேற் சூரியன்கதிர்பட்டாற்போலச் சூசைமேலெழுந்து மலரவருளைவீசிய திருக்கண் ணவன்மேற்படநோக்கி யுள் ளேயெழுந்த வன்பினைக்காட்டிச் சொன்னானென்க. (அ)

புண்ணைக்காக்குமருந்தினைப்போன்றுளோய்
கண்ணைக்காக்குநிமைக்கிணை காதலான்
மண்ணைக்காக்கெனமண்ணிடைகாத்தலால்
விண்ணைக்காக்கரசாகவிளங்குவாய்.

உரை. — சூசையைநோக்கித் திருக்குமார னெங்ஙனஞ் சொன்னானென்னில்,புண்ணையாற்று மருந்தோடொத்த த யையுடையோய் பூவுலகெல்லாங்காத்திரட்சித்தவென்னை யி ப்பூவுலகிலாசையோடே கண்ணைக்காத்த நிமையைப்போல க்காத்தாயே, இனிநீ வானுலகிலாளு மரசனாக விளங்குவா யென்றானென்க. (கூ)

ஒழிவருந்தவதாவிதற்கோதிய
மொழிவரும்படிமுற்றவன்கோத்திர

வழிவருஞ்சுதனீமனும்வானமு
மழிவருந்தகவோடரசாளுவாய்.

உரை. — அருந்தவமொழியாத தாவிதனென்பவற்கு முன்சொன்னதன்மையா லவன்கோத்திரத்திற் றலைமுறைமாறுமறபிறந்தநீ மண்ணுலகிலும் வானுலகிலு மழியாதபெருமையினரசுகொண் டாள்வாயென்றனென்க. (தாவிதற்குச்சொன்னதை வளன்சனித்தபடலத்தின் முப்பத்தெட்டாம்பாட்டிலேகாண்க.) (ம)

நானளித்தமனுக்குலநன்றுறக்
கோனளித்தமுடிக்குடஞ்சூடிநீ
வானளித்தவளங்கொடுவாழவின்
மீனளித்தவிசும்புயர்வாவென்றான்.

உரை. — நான்மனுக்குலத்தையிரட்சித்து விளைவித்தநன்மை மனுக்குலத்திற்பிறந்தவனிடத்திற்றேன்ற நீயிராசாவுக்குரியமுடியைச்சூடி வான்வீட்டுரிய பெருமைகொண்டுவாழ வொளிமீனுடைய மண்டலத்தின்மேல் வாவென்றானென்க. (மக)

பொருளில்வீங்கியதாள்வளன்போற்றலுந்
தெருளில்வீங்கியசேனைகள்வாழ்த்தலு
மருளில்வீங்கியவாண்டகைபால்வளன்
மருளில்வீங்கியவையம்விட்டேறினான்.

உரை.—திருக்குமாரன்சொன்னதைக்கேட்டுச் சூசையவன்பொற்பாதத்தைவணங்கவு நின்றமற்றயாவருந் தெளிந்துவாழ்த்தவுந் தயையிற்சிறந்தநாதனண்டையிற் சூசை மயங்காநின்ற பூவுலகத்தைவிட்டு மேலேறினானென்க. (மஉ)

வெளிபொதிர்ந்தகணங்களுள்வேய்ந்தநல்
லொளிபொதிர்ந்தவிருசுடரொத்தவர்
களிபொதிர்ந்தகணங்களினப்பனே
நளிபொதிர்ந்தநயங்கொடுவேறினார்.

உரை. — வானினிறைந்தமீன்களினடுவே யொளியைவீசித்தோன்றினவிருசுடர்போலத் திருக்குமாரனுங் குசைசமாமுனியுங் களித்தவம்முத்தியர்கூட்டத்தினடுவே மகிழ்ந்து மேலேறினரென்க. (டகூ)

வான்வழங்குதளங்கள்வகுப்பெலா
மீன்வழங்குமுருக்கொடுவேய்ந்தறித்
தேன்வழங்குதெரியல்வழங்கிடக்
கோன்வழங்குவளங்கொடுவேறினர்.

உரை. — வான்றளங்களாகிய வானவரொன்பதுவகுப்புமொளிமீனுருவங்காட்டிவந்து மதுமலர்மாலைகளைச்சிந்தாநிற்க விவரரசராகச்சிறந்து மேலேறினரென்க. (டச)

வில்லெழுந்ததுகாணவிரும்பியன்
றெல்லெழுந்திணைதோர்த்தெனநாணவின்
மெல்லெழுந்துசிவந்ததுமிக்கவர்
சொல்லெழுந்தசுடர்க்கொடுவேறினர்.

உரை. — அங்ஙனம் பூவுலகினின்று மிக்ககதிரொறித்தெழுந்தவொளி யேதென்று காணவேணுமென்றாற்போலச் சூரியனுங் கடலினின்றெழுந்துநோக்கவி லவ்வொளிக்கெதிராய்த் தன்னொளிதோர்த்ததென்று நாணினாற்போல வுடலெலாஞ்சிவந்து மெல்லவெழுந்ததாம், அவரோவென்னிற் சொல்லாலடையாவண்ணத் தொளியைப்பரப்பி யேறினரென்க. (ஆகையா லுதயநேரத்தி லெழுந்தருளினரென்பது கருத்து.) (டரு)

மிகைவிரிந்தவியப்பிமையாதிவண்
டொகைவிரிந்துநின்றார்துயர்தீர்ப்பவான்
முகைவிரிந்தமணிமுகில்மூடியவ்
வகைவிரிந்தவில்வாகனத்தேறினர்.

உரை. —அங்ஙன மவர்மேலேறிப்போகையி லிங்கேகூட்டமாய்நின்றவர் பிரிதலில்வருந்தி யவ்வற்புதத்தைக்காணவிலதிசயப்பட்டுக் கண்ணிமையாமற்பார்த்திருக்க வப்பார்வை

யால்வினையும் பிரிவின்றுயரை நீக்க வானமுகைத்ததுபோ லோர்மணிமேகநடுவே மறைக்கத்தோன்றி யொளியையவீசு மம்மேகவாகனத்தின்மேலவரோறினொன்க. (மகா)

வேறு.

விண்டிக்கிரிந்தவருமன்ன வீழ்ந்தவஞ்சப்பேய்வினை யா [ல்
லுண்டிக்கொழுதுங்கனியொன்று வளதீதடைத்தவான்வாயி
மண்டிக்குமுறுமலைகடவழ் வையமளித்தவருட்பயத்தா
லெண்டிக்குறைமன்னுயிர்க்கெல்லா மெந்தையன்றேதிறந் திட்டான்.

உரை.— அங்ஙனம் வான்மேலேறினபின்பு மேகத்தினின்றுவிழு மிடிபோல வானுலகினின்று முன்விழுந்தபேய்களின் றந்திரவினையா லாதித்தகப்பனுண்ட வினியகனியால்வந்தபாவ மடைத்தமோட்சவாசலை யன்றுதிருக்குமாரன் மண்டிமுழங்குங் கடலலைதவழாநிற்கும் பூவுலகத்தைக்காத்திரட்சித்த தயையின்வல்லமையா லெண்டிக்கினு முள்ளமனிதர்க்கெல்லாந் திறந்தானென்க. (மஎ)

அடைத்தவாயிற்றிறந்தானை யனுகியனுருமணங்கெல்லா [லாற்
முடைத்தவண்ணத்துளத்தெஞ்சா வொத்தநெறிநின்றூரல்
படைத்ததிவறிப்படைத்தானைப் பகைப்பாரிங்கண்புகாவொன்ணத் [வரப்புக்கான்.
துடைத்தநோய்க்கோர்மருந்தன்னான் றுடர்நற்குழுச்சூழ்

உரை.—முன்னடைத்திருந்த மோட்சவாசலைத் திறந்தவனை யனுசரித்தண்டி யவனையண்டினதினால் வருந்துயரெல்லா முடைத்தாற்போல மெலியாததுணிவ்வா டவற்கொத்த நெறிநின்றெழுகுநல்லோ ரிந்தவாசலிற் புகுவாரொழியப் படைக்கப்பட்டயாவையும் விரும்பி யவற்றைப்படைத்த நாதனைப் பகைத்தபாவிக ளிங்கே புகாவொன்றுசொல்வி யெந்நோய்துடைத்த தேவமருந்தாந் திருக்குமாரன் மற்றநல்லோர் துடர்ந்துசூழவர வுட்புகுந்தானென்க. (மஅ)

புக்கவனந்தநரதேவன் பொலிவானவர்தந்நிலைகடந்தே
தொக்கசிந்தைநிலைகடந்த சுகத்திற்பிதாவீற்றிருந்தாளு
மிக்கசுடர்சூழாசனத்தில் வீழ்ந்தான்றொழுதானுளந்தூண்டி
மக்கடம்மேலருத்தியெழீ வரையாவன்பானுரைகொண்
டான்.

உரை. — அங்ஙனம் புகுந்தநரதேவன் வானவர்நிற்குநிலையெலாங்கடந்து முழுதுமெய்ம்மா ணுணரப்படாதபேரின்பத்திற் பிதா வீற்றிருந்தாளாநிற்குஞ் சுடரைமிக்கெறித்த பத்திராசனத்தருகேசென்று கொண்டமனுச்சுபாவத்தால் விழுந்தான், வணங்கினான், வரைவில்லாதவன்புடையனாகி மனிதர்மேல்வைத்ததயையினாசை யவனுளத்தைத்தூண்டினதினாலிவ்வுரைகொண்டானென்க. (௰௧)

மன்னுவின்பவினையாற்று மக்கட்கிரங்கிமகனானே [ன்
னன்னார்வாழவுயிர்நொந்தே னயர்ந்தேனிந்தையட்டிறந்தே
முன்னாட்பிதாநீபணித்ததெலா முடித்தேன்பகைப்பேய்வெ
ன்றேன்வென் [சேர்த்தேன்.
றின்னார்கொணர்ந்தீங்காண்டுவப்ப விதோமீட்டின்றுன்னடி

உரை.—பிதாவைநோக்கித் திருக்குமாரனெங்ஙனஞ்சொன்னானென்னில், நிலையாதொழியுமின்பத்தைத்தேடி விளைந்த தீவினையாற்றமாட்டாதமனிதர்க்கிரங்கி நாமேனமானிடனானேன், அவர்களுயிர்வாழ நானுயிர்நொந்தேன், துன்பமுநிந்தையு மிகப்பட்டிறந்தேன், பிதாவே! நீ முன்கற்பித்ததெல்லாங் குறையொன்றின்றி முடித்தேன், நம்மையு மனிதர்குலத்தையும்பகைத்தபேய்களைவென்றேன், கொண்டவெற்றியின் பயனாக விதோவிவர்களைமீட்டுக்கொண்டுவந் தின்றிங்கே யாண்டுவாழ வுன்றிருப்பாதத்திற் சேர்த்தேனே யென்றனென்க. (௨௰)

நமரென்றிரங்கியன்புமிகநான்மீட்டளித்தநரர்குலமே
நுமரென்றிரங்கியருளுக்காய் நூறுப்பழிப்பேயக்குலத்
தார் [ப்பே
தமரென்றுள்வதினிநன்றோ தயைக்கென்னினத்திற்கிரங்கி

யமனொன்றவர்வென்றீங்கெம்மோ டாளவருள்செய்கெனத்
தொழுதான்.

உரை.—நானேமனிதனானபின்பு மனிதரையென்னினமென்று நானிரங்கி யன்பின்மிகுதியா லவர்களையிரட்சித்ததைப்பற்றி நீயும் பிதாவே யவர்களை யுன்னைச்சேர்ந்தவராகவெண்ணி யிரக்கம்புரிந்து தயையோடவர்களைப்பார்க்கத் திருவுளமாவாய், விடாதபழியைக்கொண்ட பசாசுகள் மனிதரைத் தமக்கடிமையென் றினியாளாநிற்பதுநலதோ? ஆகையால் நீ தயையோடென்னினத்திற்கிரங்கி யவர்களெல்லாரும் பசாசுசெய்யுங் கொடும்போர்வென்று நம்மோடிங்கேவந்தாண்டிருக்கத் தயைசெய்வாயேயென்று பிதாவைவணங்கினானென்க.

(௨௧)

களிகூர்ந்தார்வத்தருமகனைக் கனியத்தழுவிக்கண்கடந்த
வொளிகூர்ந்துயர்தன்னாசனத்தினுகப்பிலருத்தியோடிருத்தி
யளிகூர்ந்தேதோவென்மகனே யமைவகேளென்றவன்கூற
நளிகூர்ந்தாற்றுவருளேந்து நளினநெஞ்சான்மீட்டுரைத்
தான்.

உரை.—பிதாவோவெனில், களிகூர்ந்தவன்போ டரியதன் திருமகனை யினிதாய்த்தழுவிக்காணப்படுமொளித்தன்மையைக்கடந்த வொளியிக்குமிழ்ந்த வுயர்தன் பத்திராசனத்தின்மே லவனையாசையோடிருத்தி யன்புமிகுதலின் மகனே யாதொன்றாகக்கேளென்று பிதாசொல்ல வாற்றாதகுளுந்தயையேந்திய மதுரநெஞ்சுடைய திருக்குமாரன் மீளவுஞ்சொன்னானென்க.

(௨௨)

நின்பாலிருந்துன்பணியானா னிலப்பாலிறங்கும்வேலை
யிவன்
றன்பாலிருந்துநீதந்த தண்டேன்றுளிக்கும்பூங்கொடியின்
மின்பாலிருந்துநிழலொதுங்க விரும்பியரிதாயெனைவளர்த்
தா [யோன்.
னுன்பாலிருந்துதொழும்வளன்று னுலகினிகராவுளத்தா

உரை. —அண்டையிற்றொழாநின்றகுசையைக்குறித்துப் பிதாவைநோக்கித் திருக்குமார னெங்ஙனஞ்சொன்னானெ

ன்னில்,பிதாவே! உன்னிடத்திருந் துன்னேவலினாற் பூவுலகி னிறங்கி மனிதனுனபோ திவனிடத்திற்சென்று நீயிவற்கு த்தந்த குளுமதுத்துளிக்கும் பூங்கொடியின்கீழிருந் தந்நிழ லிலொதுங்கினவளவி லிவனே யென்னைமிக்கவன்போ டுலகி ல்வளர்த்தான்,இவனுறென்னி லிதோ வுன்பாதத்தில்விழுந்து வணங்கா நிற்கு முலகினிகராததன்மையின் மாசில்லாதகூசை தானேயென்றனென்க. (உக)

பூத்தானரியவரமெல்லாம் புவனத்தென்றாயுற்றதுயர்
நீத்தான்பிறநாடடைந்தடுங்கோ னிருபன்வஞ்சத்தென்னு
யிரைக் [ருந்த
காத்தான்பிரியாவன்பியக்கிக் கலுழ்ந்தான்கனிநான்சுவைய
வேத்தானுளைந்தான்வேர்த்துழைத்தா னெட்டாக்கருணைக்க
ரைகண்டான்.

உரை.—இவனே யரியவரங்கள்யாவையுமடைந்தான், எ ன்னையீன்றதாய் பூவுலகிற்பெற்ற துயர்கள்யாவையு மிவ னேதீர்த்தான், கொடுங்கோலரசனினைத்த வஞ்சனைக்கஞ்சி யெசித்துநாட்டிற்போ யென்னுயிரையிவனேகாத்தான்,சா ந்தனையும் பிரியாதவன்பினைச்செலுத்தி யென்றுயர்களைக்க ண்டழுவான்,இனியசுவைகளை நானுண்பதற்கிடும்படிக் கிரந் தான்,வருந்தினன்,உடல்வேர்த் துழைத்தான்,மற்றெவர்க்கு மெட்டாத கருணைக்கடலைக்கடந்து கரைகண்டவிவன்றனெ ன்றனென்க. (உச)

உன்றேடொன்றாய்மூவுலக மொருங்குநிழற்றும்வய
த்தெனக்கு [ய்த
மென்றேடென்னைக்கன்னிவழா தீன்றாட்குந்தானிழல்செ
மின்றேடியவான்மணியொப்ப விரிபூங்கொடியோன்றகு
மாட்சி [லோய்.
நின்றேடினியரனென்னுரைப்ப நினைவுங்கடந்தகாட்சிந

உரை.— ஆயினு முன்றே டொருமெய்க்கடவுளாகி மூ வுலகங்களைக்கூட நிழற்றியாதரியா நிற்கு மென்னையு மென் னைக்கன்னிமாறாதீன்றதாயையு மாதரித்தருநிழல்செய்த வா

ன்மணியொத்த மலரைவிரித்தபூங்கொடியேந்திய தவத்தோனுடையமாட்சியை யினி நானுனக்குச் சொல்வதென்ன, நினைவையுங்கடந்த காட்சியுடைய பிதாவே யென்றானென்க. (௨௫)

இன்னானின்னதகவுளனா யென்றோடேற்கொண்டிங்
கடைந்தான்
பன்னாடூர்ந்தபழியறநான் பாய்செங்குருதித்திறப்ப
வென்னாலாயபயன்காட்ட விவனேமக்கட்கரசனெனா
மின்னார்மணியார்முடிசூட்டல் வேண்டுமையாவெனப்பணி
ந்தான்.

உரை.— இவனித்தன்மைத் துயர்ந்தமாட்சியுடையனாகையி லென்றோடொத்ததா யுடலெடுத் தெழுந்தருளச்செய்து கூட்டோடிங்கே கூட்டிக்கொண்டுவந்தேன், இனி நெடுநாட்டூர்ந்துவந்த பாவப்பழியைத்தீர்ப்ப நானென்னிரத்தத்தைச்சிந்தி யுயிர்பட்டிறத்தலி லென்னால்வந்தபயனைக்காட்ட விவனே யெல்லாமனிதர்க்கரசனாக மின்னியமணிமுடி யிவற்குச் சூட்டல்வேண்டும்பிதாவேயென்று திருக்குமாரன்வணங்கினானென்க. (௨௬)

ஆய்ந்தேயிமிழிற்சொன்னவைகேட் டையன்வான்
மேற்பேருவகை [ன்றான்
தோய்ந்தேயெவருமகிழ்ந்தோயாத் துதிகடுவைப்பநன்றெ
வாய்ந்தேமகிழ்ந்துதொழாநின்ற வளனைநோக்கியாசிநல
மீய்ந்தேமீளாவன்பருளா லெழுகென்றிறுகத்தழுவினனே.

உரை.— இங்ஙன மினிதாய்ச்சொன்னயாவையு மாராய்ந்துகேட்டபிதாவு மங்கேயிருந்த முத்தியரெல்லாரு மிகப் பேரின்பத்தமிழ்ந்தி விடாதகளிப்போ டரியதுதிகளையுரையாநிற்ப நல்லதென்றான், பின்பு பெருகினமகிழ்ச்சியோடவன்பாதத்தை வணங்காநின்றசூசையைப் பிதாத் தானினிதாய் நோக்கி யாசீர்வாதமுந்தந்து மாறாதவன்பினருளோடெழுந்திருவென்று சூசையை யிறுகத்தழுவினானென்க. (௨௭)

வேறு.

வான்புறத்திலகுஞ்செஞ்சுடர்காண வந்தெனவனைந்த வாண்மகுடந் [யொளியியக்க
தான்புறத்தொருவேறேழ்சுடர்பூண்ட தன்மையேழ்மணி
மீன்புறத்தகற்றுஞ்செல்வவீட்டுவகை மிகவளவின்றியம்முடியைக் [ன்புனைந்தான்.
கான்புறத்தலர்கோற்சூசைதன்றலைமேற் களிப்பெழமுதலவ

உரை.— அங்ஙனம் பிதாச் சூசையைத்தழுவினபின்னரிவற்குச் சமைத்தமுடியின் றேற்றமேதெனில், வான்வீட்டின் புறத்தி னடந்துவிளங்குஞ்சூரிய னங்கே நடக்குஞ் செய்தியைக்காண வன்றங்கேநுழைந்து தோன்றினாற்போல மிக்கொளிவீசிய வோர்முடிதோன்றி யதுதான் புறத்துச் சூழ வேறேழுசூரியனை யணிந்ததன்மையாற் சூழப்பதிக்கப்பட்டவேழுமணிகள் கதிர்களையெறியாநின்றன, இந்நிலைமுடியை யொளிமீன் றன்னேடொத்தனவல்லவென்று புறத்திலகற்றின வான்வீடுடையபேரின்ப மன்றளவின்றிப் பெருகுதற்காரணமாக வாசனைவீசி மலர்ந்த கொடியையேந்திய சூசையின்றலைமேன் மிகக் களிகூர்ந்தமுதலோனுகிய பிதாத்தான் சூட்டினுனென்க. (௨அ)

ஆர்த்தனதேவமகிழ்வொலியரவ மார்த்தனதுடர்துதித் துழனி
யார்த்தனதேவவீணைவாயமலை யார்த்தனவினியபாவிசைக
ளார்த்தனபொலிந்தசோபனவகுளி யார்த்தனவதிசயகுமுத
மார்த்தனவுவப்பிலரரொளிமகுட மருந்தவற்கருட்சுதன்பு னைந்தான்.

உரை.— முடியைச்சூடினவளவில் வானுலகெங்குந் தேவமகிழ்ச்சியெழுந்து கிளப்பினவோசையுந் தொடையரயெடுத்த துதிகளினேசையுந் தேவவீணைவாய்க்குரலோசையு மினியபாவிசையோசையும் பொலிந்த சோபனவோசையு மதிசயப்படுவாரோசையு மெங்குமுழங்கினமகிழ்ச்சியோடருந்தவனுகியசூசைக்கு நிறையொளிமுடியைத் தயையிற்சிறந்த திருக்குமாரனுஞ் சூட்டினுனென்க. (௨௯)

ஆர்த்தனபல்லாண்டார்ந்தனவுவகை யாறறுநூற்றமு
வைம்பூச் [ராற்
சீர்த்தனமதுவிற்பூத்தனகுசை சேர்த்தகைக்கொடியிலம்மல
கோர்த்தனவாறறணிகளேகடவுட் குளுஞ்சுடர்ப்பதத்தவை
வானோர் [ந்தான்.
நீர்த்தனவின்பத்தணியமாதவற்கேநேயனுமொளிமுடிபுனை

உரை.— அங்ஙன மெங்குந்தேவசேரபனங்கள் முழங்கவு மங்கேயுள்ள பேரின்பநிறைந்துபெருகவுங் குசைகையி லேந்திய பூங்கொடி மூவாயிரத்தறுநூற்றொருபத்தைந்து மலரைவிரித்து விரித்தமலரை முப்பத்தாறுமாலையாகச் சேர்த்தியவானோ ராண்டவனுடைய குளுஞ்சுடர்ப்பாதத்தி லம்மாலைகளைச் சிறந்தவின்பத்தோ டணியாநிற்பத் தேவசினேகமாகிய விஸ்பிரீத்துச்சாந்துங் குசைமாமுனிக்கொளிவிரிமுடியைச் சூட்டினனென்க. (பிதாச்சுத னிஸ்பிரீத்துச்சாந்தென்னுமூவரும் வேறுபாடின்றி யொருமெய்க்கடவுளாகையிற் செய்யுந்தொழிலொன்றாயினு மிங்கேநாமுணருந்தன்மையைப்பற்றிப் பொருளுந் தெளிவதுவேண்டி வேறுபடவிரித்துரைத்தாரென்க.) (௫௰)

புனைந்தமாமகுடம்பொழியொளிபெருகிப் பொற்பத
ம்பாய்ந்துறப்போற்றிச் [ன்னிற்ப
சுனைந்தபாவுவமைநாணமிக்குவகை சுவைத்தவன்றுதித்துமு
வினைந்தமாமகனதிருக்கையினருகே யிலங்குமீன்மணியொடு
நிரைத்து [ருத்தியேயுரைத்தான்.
வனைந்தவாசனத்திற்பொலிந்துறவிறையோன் வளன்றனையி

உரை.— அங்ஙனஞ் குசைசூடினமாமுடிதரு மொளிபெருகுதற்காரணமாக வம்முடி யாண்டவன் பொற்பாதத்திலுரிஞ்சிப்பாயும்படிக்கு விழுந்துவணங்கி யென்பா நினைத்தவுவமைவாடிநாண நான்டையாததன்மையிற் பேரின்பத்தைச்சுவைத்துக் கடவுளைவாழ்த்தி முன்னேநிற்ப வின்பத்தோடிரங்காநின்ற திருக்குமாரனிருக்கையினருகே யொளியைப்பரப்பின மீன்களு மணிகளுங்கலந்து நிரைநிரையாய்

ப்பதித்தலங்கரித்த பத்திராசனத்தின்மேற் சூசையைப்பிதா
த்தானிருத்திச் சொன்னானென்க. (௩௧)

தாவிதென்பவற்கேசாற்றியவண்ணந் தவிர்கிலாதரசு
னக்களித்தேன் [ணிகளோவுன்னை
றாவியின்பிலிற்றுஞ்சுடிகைசூழ்பயிற்றித் துளங்குமேழ்ம
மேவிநின்றவர்க்குவேண்டுவவெறுப்ப விரும்பிநீயளிக்குமே
ழ்வரங்க [ளென்றான்.
ளேவியின்றனக்குத்தந்ததுகாட்ட வினியிவற்றுரிமைகே

உரை. — முன்னான் றாவிதென்பவற்குச்சொன்னபடி தப்பாமலுனக்கரசுதந்தேன், விளங்கியமுடியின் சூழப்பதிக்கப்பட்ட வேழுமணிகளோவெனி லுன்னை மேவியண்டின யாவர்க்கு மாசையின்மேலு நீ வகுத்திடத்தகு மேழுவரங்களுன்கையி லுன்றந்ததாகக்காட்டுவன, இனி யவ்வரங்கள்விபரத்தைக்கேளென்றானென்க. (௩௨)

களங்கமுற்றதுகண்டிந்துதேய்த்தொளிறுங் கழலினாட்
கன்னிமைகாத்துத் [யென்னா
துளங்கமுற்றியசெஞ்சுடரினுன்கற்புந் துகளறக்காத்தனை
வுளங்கணுற்றழற்றும்விரகநோயறக்கற் புரிநலந்தரவரந்தந்
தே [த்துளத்தூயோய்.
விளங்கமுற்பதித்தமுதன்மணிதந்தேன் வெண்கொடியொ

உரை. — மாசுளதென்று மதியைமிதித்துத்தேய்த்துக் கதிரைவீசும்பாதத்தையுடைய மரியென்பவள்தன் கன்னிமையு நீகாத்ததொழியச் சூரியன்கதிரைப்போலமாசின்றிவிளங்க வுன்கற்புங்காத்தாயென்றமையா லக்காமநோய்தீர்த் தரியகற்பு மற்றவர்க்குங்காக்கவரமேதந்ததற் கிதிலேபதிக்கப்பட்டுவிளங்கு முதன்மணியைத்தந்தேன் றூயவெண்பூப்பூத்தவுன்கொடியொப்ப மாசிலாமனநலோ யென்றானென்க. (௩௩)

போய்வினைகொணரும்பொறிகளைத்தடக்கிப் பொலந்
தவவேலியைக்கோலித் [யென்னாத்
தூய்வினையுளத்திற்றுகள்புகாக்காத்துச் சுடர்விளக்காயினா

தீய்வினைவருமுன்காக்கவும்வந்த தீதுநேர்ந்தொழிக்கவுமு
ணர்த்திக் [மாதவனே.
காய்வினைவிலக்கும்வரத்தையிவ்விரண்டாம் கதிர்மணிகாட்டு

உரை.— மீளவும் புறத்துத்திரிந்துவரும்போ துள்ளேவி
னைகளைக்கொண்டுவிடு மைம்பொறிகளையடக்கிச் சூழத் தவ
மேவேலியாகவளைத்து மாசிலாமனதிற் பாவமேபுகாததற்கு
க்காத்து மங்களவொளிவிளக்காக நின்றுயென்றதைப்பற்றி ம
ற்றயாவருந்தமக்குத் தீவினைவருமுன்னே வாராததற்குக்காக்
கவும் வந்தபின் னில்லாததற்கொழிக்கவு முணர்த்திச் சுடுவி
னை யாவர்க்கு நீவிலக்கிநீக்க வுனக்குத்தந்தவரமிவ்விரண்டா
மணியாற்காட்டப்பட்டதாமே யரியமாதவத்தோ யென்று
னென்க. (௩௪)

பருதியேயுடுத்துப்பனிச்சுடரியக்கிப் பரமனைப்பயந்
ததாய்தன்னைக் [ன்றுச்
கருதியேகருத்துக்கடந்தவன்பருளாற் காத்தரிதோம்பினுயெ
சுருதியேவடிவாய்த்தோன்றியதாயின் றுடர்பருளுதவிசார்
பெய்தத் [ண்மிக்கோய்.
தருதியேயெனமூன்றுமணிதந்தேன் றயைக்கடற்கடந்தரு

உரை. — செஞ்சுடராடையாகவுடுத் துயிர்குளிர்ப்பிக்குங்
கதிரைவீசி யவதரித்தநாதனை யீன்றதேவதாயைமேவிக் கருத்
தினுமுயர்ந்த வன்பினையருளிக்காத்துப் பேணினுயென்ற
தைப்பற்றி வேதவடிவாய்த்தோன்றின வத்தேவதாயினன்பு
மருளுமுதவியுஞ் சார்பு மினிதாய் மற்றவரடையச்செய்யும்
படிக்குனக்குவரந்தந்ததற்கு மூன்றுமணியுந்தந்தேன் றயை
யின்கடலைக்கடந்த வருளின்மிக்கோ யென்றுனென்க. (௩௫)

கனம்பழுத்திரிந்தவுருமெனவிண்ணிற் கடிந்தபேய்கொ
ண்டதொற்பகையான் [ன்றுச்
மனம்பழுத்தியற்றும்வஞ்சனைநாண வழுவிலாவென்றனையெ
சினம்பழுத்தெதிர்த்தகுணுக்கினமோடிச் செல்வநின்னும
வேற்கஞ்சத் [டியோய்.
தனம்பழுத்தெரிநலாமணிவரமே தந்ததாம்வெற்றியங்கொ

உரை. — மேகத்தினின் றிடித்துவிழுமிடிபோல வானுல கிழந்து விழுந்தபேய்க ளென்றுகொண்ட பகையின்மிகுதியா லுள்ளேபழுத்துப் புறத்தினடத்தும் வஞ்சனை யுன்னிடத் தொன்றுஞ் செலுத்தமாட்டாமையால் நாணுதற்காரணமா க நீ யப்பேய்களை வென்றாயென்றதைப்பற்றி யினிமற்றவ ரு முச்சரித்த வுன்னுமைவேற்கஞ்சிப் பேய்களெல்லாமோ டி நீங்கும்படிக்குப் பொன்னிற்பதித்த நாலாமணிவரந்தந் தேன் வெற்றிக்கொடியையேந்திய நல்லோ யென்றானெ ன்க. (௫௬)

தேவருள் திளைத்தநிரப்பினாற்கன்னி சினையையுற்றீனி
னுமீன்ற [னையென்று
மேவருள்மகவைமகனெனவினிதாய் விருப்பொடுவளர்த்த
நோவருள்புதல்வரிலாக்குறைதீர்த்து நுண்டகைச்சந்ததிய
ளிப்பக் [வரந்தந்தேன்.
காவருள்கமழ்பூங்கொடிநலோயைத்தாங் கடியொளிமணி

உரை. — தேவவருளால் நிரப்பப்பட்டகன்னி மற்றானுத வியின்றிக் கருப்பந்தாங்கித் தேவகுமாரனையீன்றனளாயினு மீன்றதிருவருட்குழந்தையை யுனக்கோர்மகனைப்போல வி னிதாய் வளர்த்தாயென்றதைப்பற்றி வருந்துதற்காரணமா கப் பிள்ளையில்லாதவர்க்கக்குறையைத்தீர்த்து மாட்சியிற்சி றந்த சந்ததியையவர்களுக்கு நீ பூங்கொடியோய் தருவாயெ ன்றதற் கைத்தாமணிவரந் தந்தேனென்றானென்க. (௫௭)

விருந்தினைக்கண்டார்முகத்தளவின்றி வினைசெயமிடை
ந்தநோயருந்தித் [ன்றெத்தாயென்று
திருந்தினைபொறையின் னுண்முறையெல்லாந் திருமணிக்கு
மருந்தினைப்போன்றுவருந்தினார்வருத்த மறுத்துளங்குளிர்
ப்பநல்வரமே [சுடையோய்.
யருந்தினையெனவாருமணியளித்தே னரும்பொறையருளர

உரை. — விருந்துவருவதைக்கண்ட வன்புடையோர்முக மலர்ந்தது போ லளவில்லாதவினையைச்செய்ய மொய்த்தபல நோய்கொண்டு பொறுமையின்முறையெலாந் திருந்தக்

காத்து வயிரமல்லயோ டொத்தாயென்றதைப்பற்றி வருந் தினயாவர்க்கு நீயேயொருமருந்தாகநின்று மற்றவர்கொண் டநோய்தீர்த்து மனத்தைக்குளிர்ப்பிக்க வரங்கொண்டாயெ ன்றதற் காருமணியைத்தந்தே னரியபொறுமைதந்த வரசு டையோ யென்றானென்க. (௩அ)

தாயொடுபுதல்வனிருபுடைதாங்கித் தகுந்துயராத்றரு ளியக்கத்
தீயொடுதீந்ததளிருடனீக்கிச் சென்றுதூதுரைத்தனையென் [ஞ
நோயொடுமெலிந்தவுடல்கெடுமெல்லை நொந்தவர்க்குதவ நீயொளியின் [மரபோய்.
வாயொடுமலர்ந்தகடைமணிவரமே வகுத்ததாம்வான்றெழு

உரை.— தேவதாயுந் தேவமகனு முன்னையிருபுடையிற் றுங்கி நீ யுட்கொண்டதுயராயாற்றுந் தயையைக்காட்டா நிற்பத் தீயிற்போட்டதளிரே தீந்ததுபோல மெலிந்தவுன் னுடலைவிட்டுப்பிரிந்த வுயிரோடுபோய் நானேவிய தூதுரை த்தாயென்றதைப்பற்றி மற்றவர்கொண்டநோயினால் மெலி ந்தவுடலைவிட் டுயிர்பிரியும்போ தவர்களுக்கொருதுணையாக நின்று நீ யுதவுவாயென்றதற் கொளிவாய்மலர்ந்த வேழாம ணிவரந்தந்தேன் வானுலகிடத்தும் வணங்கப்பட்டகுணத் துயர்ந்தோ யென்றானென்க. (௩௯)

தேன்பயில்மதுரத்தினிதினிவளர்த்த திருமகனளித்தம ன்னுயிர்கட் [கி
கூன்பயிலுடலாலுறுங்கசடகற்றி யுரியநல்லறநெறிநிறுத்
மீன்பயில்வான்வீட்டவ்வுயிர்சேர்த்தி விழைந்தரசாளவின்று னக்கே [முதலோன்.
நான்பயில்வரங்கள்வகுத்தியென்றுசி நல்கினான்பொதுவற

உரை.— மதுவின் மதுரத்தொத்த வின்பத்தோடுலகினி வளர்த்ததிருக்குமார னிரட்சித்தமனிதருயிர்கட்குத் தசையு ளவுடலால் விளையுந்தீவினையகற்றி யவற்கவற்குரியவறநெறியி ல் யாவரையுநிறுத்திப் பின்பவ்வுயிர்களை யொளிமீன்றிரியும் வானத்துயர்ந்தவீடாகிய மோட்சத்திற்சேர்த்தித் தந்தவாசா

ள்வதுவேண்டி நானின்றுனக்குத்தந்த விவ்வரங்களைமனிதர்க்குவகுத்திடுவாயென் றுசீர்வாதமுந்தந்தான் றனிமுதலோருகிய பிதாத்தாவெனன்க. (சஎ)

கனைகொன்றவருள்கொண்டவ்வுலகுறைகாற் களிப்பினுன்னுரைமறுக்கிலனுன்
றினைகொன்றநயங்கொள்ளிவ்வுலகினுநீ செப்புரைமறுக்கலாவென்றுந்
நிறைகொன்றநசைகொண்மன்னுயிர்க்கிரங்கி நீயெனக்கேட்பவையளிப்பேன்
புனைகொன்றவளங்கொணலோயெனத்தேவ புதல்வனுமாசியைத்தந்தான்.

உரை. — பிதாவின்பின்பு திருக்குமாரனுஞ் சூசையை நோக்கிச்சொல்வான்: கனையொன்றின்றி நானினைத்ததையாற் பூவுலகிலிருக்கும்போ துன்சொற்றவிராமல்நடந்தநான் கடலினும்பெருகி யலவில்லாத பேரின்பங்கொண்ட விவ்வானுலகிலு நீசொன்னதைத்தவிராமல் நீதிநெறியில்வழுவின வாசைகொண்டமனிதர்க்குவேண்டி நீயிரங்கிக்கேட்கும்யாவையு மெக்காலமுந்தருவே னுவமையெல்லாங்கடந்தமாட்சிநல்லோயென்று தேவசுதனுமாசீர்வாதந்தந்தானென்க. (சக)

மீனிலம்முடியாடிருமணநாளில் வினையறுநேயமாநானே [டினையாருந்
தேனிலந்துணர்கொய்யிக்கொடிதந்தேன் சேர்ந்துனையண்டினையாருங்
கானிலங்கொடியினீழலினுய்யக் கருணைசெய்வேனெனத்தேவ [ர்தான்.
வானிலங்கரதலரம்பிரானுசி வகுத்தருள்வெள்ளமும்பொழிந்தான்.

உரை. — கடைசியின்மூன்றுமாளாகிய விஸ்பிரீத்துச்சாந்துஞ் சூசையைநோக்கிச்சொல்வான்: வினையறுந்தேவநேயமாகியநானே யொளிமீன்களுக்குநிலையாய்நிற்கு முடியைச்சூழ்ந்த தேவதாயின்திருமணமாகியநாளிலே விடாதுமதுப்பொழிமலரைப்பூப்ப நீகையிலேந்திய விக்கொடி

யைத்தந்தேனல்லோ? இனியுன்னை வணங்கியடுத்தயாவரும் வாசனைவிடாத வுன்கொடிசெய்நிழலிற் குறையற்றுயிர்பிழைத்திருக்க நானேகருணைசெய்வேனென்று வானுலகுரிய தேவகாதலென்னு மிஸ்பிரீத்துச்சாந்துவாகியகடவுளு மாசீர்வாதந்தந்து தேவவருளையும் வெள்ளமாகத் தந்தானென்க. (௪௨)

நல்கியவாசிநயத்துயர்சூசை நறுமையிற்பிரிவிலாதொ
ன்றாய் [ம்வணங்கிப்
மல்கியசெல்வத்துரியவோர்கடவுள் வழங்குமாள்மூன்றையு
பில்கியநயணிலும்வயங்காட்டப் பிழைத்தவித்தொழும்பனை
நோக்கி [ணிந்தான்.
யல்கியபுன்மைவளம்படச்செய்ய லருச்சனையுமக்கெனப்ப

உரை. — அங்ஙனந் தந்தவரங்களினாசியாற் களிகூர்ந்துயர்ந்தசூசை யெல்லாநன்மைகளிற்பிரிவின்றி யொன்றாகநிறைந்த செல்வத்தினுரிமையா லோரேகடவுளாகி யற்புதமுறையால்வழங்குந் தேவ மூன்றாட்களையொருப்படவணங்கி நீங்கள்புறத்துச்செய்யுநன்மையி லுங்கள்வல்லமைகாட்டப்பிழைமிக்குடைய விவ்வடிமையை யருள்புரிந்தினிதாய்நோக்கி யென்சிறுமை மாட்சியைப்பெறச்செய்தமையா லுமக்கே யருச்சனையாகுமென்று வணங்கினானென்க. (௪௩)

வேறு.

அன்னானன்றடையன்னவரங்களினா
லுன்னாவண்ணமருந்தயையோம்பிவழாப்
பொன்னானாறுலகிற்புகவுய்த்தவுயி
ரென்னாலீங்களவேற்றுவதேலுவதோ.

உரை. — அங்ஙனஞ் சூசை யன்றடைந்தவரங்களைவகுத்து நினைப்பதற்கரியமுறையின்றயைபுரிந் தெல்லாமனிதரைப்பேணி விளங்கியபொன்னுலகாகிய மோட்சத்திற்சேர்த்தவுயிர்க ளெவ்வளவென்று நானேற்றத்தகுங் கணக்கல்லவென்க. (௪௪)

தாயேயொக்கவருந்தலையொக்குமரு
நோயேயொக்கமருந்திணையொக்குநுமை
பேயேயொக்கவரண்பிணைவொக்குமுயிர்
மீயேயொக்கவிடாத்துணையொக்குமிவன்.

உரை. — மிகவன்புடைய தாயைப்போல வெவர்க்குந்த லையைச்செய்து வந்தொழியாதநோ யொருவற்கு வந்தா லவனேநோய்தீருமருந்தாகவும் வஞ்சப்பேய் துரிதஞ்செ ய்யவந்தா லவனேபேய்க்கசையாதகோட்டையாகவு மெவ்வு யிர்யாவுமேற்கதிசேர வவனேபிரியாதவழித்துணையாகவு நி ற்பரன்குசையென்க. (சரு)

தாக்கிவெம்பகைதந்தசவத்தையிவ
ஞேக்கிநண்பகல்முன்னிருணூறுவபோற்
போக்கியம்புவிபூத்தனபுன்கணேலா
நீக்கியின்பநிழற்கொடியாற்பரிவான்.

உரை. — உயிரைத்தாக்கி வெம்பகைசெய்ய வெதிர்த்த பேய்களைச் சூசைநோக்கினதன்மையிற் பகல்முன் னிரு ளொழிவதுபோல வப்பேய்களைப்போக்கித் தன்கொடிநி ழலி லெல்லாரையுங்காப்பா னென்க. (சகு)

நொந்தாலாதரவாமுறுநோயொழியா
வந்தாளுளொழிவன்றுமருங்கிலுறிச்
சென்தாரானிழல்செய்துவழித்துணையாய்க்
கந்தாவான்கதியின்கரையேற்றுவனல்.

உரை. — நொந்தார்க் கவனேயாதரவாகி வந்தநோயொ ழியாமல் நாளொழிந் திறப்பக்காலம்வந்தா லவனேயண் டையிற்சென்று தன்பூங்கொடியானிழலைச்செய்து வழித் துணையாகிக்கெடாதமோட்சகரையிலேற்றுவானென்க. (சஎ)

பின்றுதோர்நசையாற்பெயராதணுகிக்
குன்றுதோ ரருள்கொள்ளிவனம்பினருட்
பொன்றுதோர்துயர்பூத்தொழியாமெலிவி
னின்றுமோரொருவர்நிலமீதுளரோ.

உரை. — விடாதவாசையோ டவனைப்பெயராமலண்டிக் கெடாததையிற்சிறந்த விவனை நம்பினவர்களுள்ளே தீராத துன்பத்து மெலிவொழியாமல்நின்றவ ரிப்பூவுலகி லொரு வருண்டோவென்க. (சஅ)

எண்ணென்றுயினதிக்கிவையாவுமுற
விண்ணின்றொளிவிஞ்சியமாமுடிசூழ்
மண்ணின்றுள்பலமன்னவர்மன்னவனை
கண்ணின்றுயினகாதையுரைத்திடுவாம்.

உரை.—அங்ஙன மெண்டிக்கிலெங்குஞ் சூதை யிவற்றை நடத்திக்கொண்டுவருகையில் வானொளியொப்பவிளங்கியமு டியைச்சூழ்ந்து பூவுலகரசர்க்கரசனுகிய வொருவனிடத்தி லானசெய்தியைச்சொல்வாமென்க. (சக)

வேறு.

அயப்போதலர்வேலியணிந்தழியா
நயப்போகையிரோமையினுடினிதாள்
வியப்போடுவணங்கிகல்வெம்படைவெல்
லெயுப்போல்தெனுநாமவெள்வேலியலான்.

உரை.—நீர்ப்பூமலர்ந்த வயல்சூழணிந்து கெடாதமகிழ் ச்சியில்வாழு மிரோமைநாட்டையாண்டு வெருவிவணங்கா நிற்கும் பகைவர்படைகளைவெல்லும் லெயுப்போல்தென் னு நாமவேலானொருவன் வீற்றிருந்தானென்க. (ருய)

கோடாதுதனித்தகுகோன்மையினன்
வாடாதழருமரைமாலையினன்
வீடாதநிழற்குடைவேலியினு
னோடாவடறுனையுடைக்கடலான்.

உரை. — அவனெத்தன்மைத்தானேவெனில், வளையாதநீ தியிற் றனிச்செங்கோலுடையான், வாடாததாமரைமாலையா ன், மாறுதநிழலைச்செய்யுங்குடைக்கீழழியாதகாவலான், ப கைமுகத் தோடாத படைப்பெருங்கடலானென்க. (ருக)

தவர்க்குங்கடிதாந்தகவுற்றிகல்கின்
றவர்க்குங்கனிதன் றிடுமன்பியலா
னுவர்க்குங்கடல்சூழுலகிற்குளதா
மெவர்க்குந்தயையேந்தியதாதையனான்.

உரை. — நற்றவநெறியினின்ற முனிவருஞ் செய்தற்கரிய தன்மையிற் பகைத்தவர்க்குந் தானன்மையைச்செய்யு மன்புடையான், உவர்க்கடல்சூழ்ந்த பூவுலகெங்குமுள்ளமனிதர்க்கெல்லாம் புரியுந்தயையா லொருபொதுத்தகப்பனாகநின்றானென்க. (௫௨)

மூயலேகடந்தான்முரணாலருடா
யியலேகடந்தானியையன்பியலாற்
புயலேகடந்தான்புரிவான்கொடையால்
மயலேகடந்தான்மலிகாட்சியினால்.

உரை. — அவனே வல்லமையா லெல்லாப்பேரையுங்கடந்தான், கொண்ட வன்பின்றன்மையா லன்புடையதாயின்குணத்தைக் கடந்தான், கொடுக்குந் தானமிகுதியான் மேகம் பொழியு மழையைக்கடந்தான், அடைந்தகாட்சியின்றெளிவினா லுலகின்மயக்கத்தைக் கடந்தானென்க. (௫௩)

நின்றுளிகலோர்தொழுதாந்தகைமே
லொன்றாயுலகாளுயர்வானிறையோன்
முன்றான்றொழுதேவல்முடித்தலினாங்
குன்றாநிறைவேட்டுயர்கொள்கையினான்.

உரை. — வெல்லப்பட்டபகைவர்வந்து தன்னடியில்விழுகையிற் றனக்குவரும்பெருமையினுந் தானேயுலகெலாமொன்றாயாளுங் கடவுளடிமுன்விழுந்துவணங்கித் தான்வனேவல்செய்கையிற் றனக்குவரு மொழியாதமாட்சியை விரும்பினதன்மையானென்க. (௫௪)

அனையானவியாதவருத்தியெழீ
நனையார்கொடியோனைநயந்தணுகி

வனையாவழிபாடுவனேந்துதொழப்
புனையாவுயர்பாடுபுனைந்தனனால்.

உரை.— சொன்னதன்மையான் பிரியாதவன்போடு பூங்கொடியேந்திய குசையை யண்டிச் செய்யாதவழிபாடெல்லாமவற்குச்செய்து வணங்கிக்கொண்டுவருகையி லடையாதவுயர்பாடெல்லாந் தானுமடைந்தானென்க. (௫௫)

தண்ணங்கொடிதந்தநிழற்கணுகும்
வண்ணங்கொடுவோய்ந்தவளங்கொடுசூழ்
தெண்ணங்கடல்சேர்ந்தசெகத்தொருவ
னெண்ணந்தவிர்மாட்சியையேந்தினனால்.

உரை.— அங்ஙனங் குசையேந்தியகுளுமதுப்பூங்கொடிநிழலி லண்டினதற்களவாகச் சிறந்தபெருமைகொண்டு தெண்கடல்சூழ்ந்தபூவுலகெங்கு மொப்பாரின்றியொருவனு யிதின்று மதிக்கப்படாத மாட்சியை யடைந்தானென்க. (௫௬)

உற்றானிறைசீர்வளமுற்றபகை
யிற்றானுயிரீறுறவெய்தியநோ
யற்றானெடிதாவியசந்ததியைப்
பெற்றான்விரிபூநிழல்பெற்றமையால்.

உரை.— குசையின் பூங்கொடிநிழலை யடைந்ததன்மையா னிறைந்தசெல்வங்களையடைந்தான், வந்தபகையெலாமுழுதுமிற்றொழித்தான், சாதற்காரணமாகவந்த நோய்தீர்த்தான், நெடுநாள்விரும்பின சந்ததியைப்பெற்றானென்க. (௫௭)

நெஞ்சிற்றகவிற்றிழிவார்நிகரா
வொஞ்சித்தகுபோர்வெலவீடிலதால்
வஞ்சித்துவெல்வாமெனவந்தொருநாள்
றஞ்சிட்டுயிரீதிடநாடினரால்.

உரை.— நிறையில்லாதநெஞ்சி னிகழ்ச்சிகொண்டபகைவருட்சிலரோ போர்முகத்தவனைத் தாம்வெல்வதற் கிடில்லாமை

யால் வஞ்சனைசெய்தாயினும் வெல்லுவோமென்றெண்ணி யொருநாள் நஞ்சிட்டவனைக்கொல்லநியமித்தானென்க. (ருஅ)

ஈண்டாங்குதவத்தனியெய்திவளன்
வேண்டார்வினைமாயைவிளம்பியதைத்
தீண்டாதெனவெண்டிசைகாத்துவழா
தாண்டானுயிரன்பொடுகாத்தனனால்.

உரை. — அங்ஙன நஞ்சுகலந்துவைத்தவுடனே யுதவிசெய்யவானினின்றங்கே யவற்குச்சூசைதோன்றிப் பகைவர்வஞ்சனைகாட்டி நஞ்சுகலந்ததைத்தீண்டாதென்றுவிலக்கி யெண்டிசைகாத்து வழுவின்றியாளாநின்றவரச னுயிரைக்காத்தானென்க. (ருகூ)

மைமாறியவன்புவலித்தவளன்
மெய்மாறுயிர்காத்தவினைக்கினியோர்
கைமாறிடுதன்மைகணித்தனனால்
பொய்மாறியமாண்புயர்பூபதியே.

உரை. — அங்ஙனம் பகைவர்வஞ்சனைமாற்ற வன்பினைநினைத்தசூசை யுடலைவிட்டுப்பிரியவிருந்த வுயிரைக்காத்தானென்றினி யோர் கைம்மா றிடும்படியைநினைத்தான் பொய்யாதமாட்சியி லுயர்ந்த வரசனென்க. (சுo)

ஒல்லென்றுலகெங்கணுமோலைகள்விட்
டெல்லென்றொளியேவியதன்குடைகீழ்
நல்லென்றுறைநாடர்விளித்தனனால்
செல்லென்றுமுழங்கியதிண்முரசான்.

உரை. — நினைத்ததை நினைத்ததன்மையின்முடிப்ப விரைந் துலகெங்குமோலைகளைவிட்டு விளங்கிய தன்குடையின்கீழ் நன்றாய்வாழு மரசரெல்லாரையு மழைத்தான் மேகத்திடியொலியொப்பமுழங்குந் திண்முரசுடையானென்க. (சுக)

கோலைப்பொருவக்கடுகொற்றர்கொணா
ரோலைக்கதைகேட்டுணரத்தொழுதே

வேலைப்படைவேந்தரொலாருமெழீக்
காலைக்கடியக்கடிதெய்தினரால்.

உரை. — விட்டவம்பொப்பக் கடுகிப்போனவர் கொண்டுவந்தவோலைச்செய்தியைக் கேட்டவளவி விட்டவேவலைப் பணிந்து கடலோடொத்த படையுளவரசர்யாவருந் தாமதமின்றி யெழுந்து காற்றுவிசையினுங் கடுகிச்சென்றாரென்க. (௬௨)

மஞ்சஞ்சுகவன்னிவிழிக்களிறும்
மஞ்சஞ்சுகமேல்வளர்தேருநிலா
மஞ்சஞ்சுகவாளபயாருமுறி
மஞ்சஞ்சுகமாய்வதிநாடதிரும்.

உரை. — அம்மனஞ் சூளைவாயழலினு மழன்ற கண்ணுடையயானைகளு மேகங்களஞ்சும்படி மேலுயர்ந்ததேர்களும் வானிலாவழகினும்விளங்கிய வாளையேந்தியவீரருங் கூடவந்தமையா லன்னஞ்சுகமேவாழு மந்நாடதிர்ந்த தென்க. (௬௩)

கூடார்முகிலார்த்தனகோடையெனக்
கூடார்தொழுகோமுரசின்குரலே
கூடார்பறவைக்குலமஞ்சியெழக்
கூடார்படையாற்புவிகூசினதே.

உரை. — மலையினுச்சிமே னிறைந்தமேகங்கள் கோடைநாளின்முழங்கின வொலியோடொப்பப் பகைவர்வணங்குங் கோமுரசுமுழங்காநிற்பப் பறக்கப்பருவமின்றிக் கூட்டிற்கிடந்தபறவை யன்றச்சத்தாற் கூட்டைவிட்டெழும்படிக்குக் கூடினபடைகளாற் பூவுலகெல்லாங் கூசினதென்க. (௬௪)

புண்கீறினவேவினர்சூழ்பொருள
மண்கீறினவல்லுருடேர்கடிரள்
விண்கீறினவெண்கொடியுங்குடையுங்
கண்கீறியபற்படைகாலொளியே.

உரை.— பலகைவர்மார்பு புண்ணாக்கிறின வேலையேந்திய வீரர் சூழ்ந்துநெருங்கிவர வுயர்ந்தவுருளையுடைய தேர்த்திரளாழமரயப் பூமியையறுத்தன, ஏந்திய வெண்கொடிகளும் விரித்தவெண்குடைகளு மேகங்களையறுத்தன, கண்கிழித்துருவினாற்போலப் பலவகையாயுதங்கள் மின்னிவிளங்கின வென்க. (சுரு)

நீரேந்தியநித்திலநீண்குடையுஞ்
சீரேந்தியசெய்ப்பவளக்குடையு
நேரோந்தியநீலமணிக்குடையு
மேரோந்தியநல்விருளேந்தினவே.

உரை.—முத்துக்குடைகளும் பவளக்குடைகளு நீலமணிக்குடைகளு நெருங்கிக்கூடி யழகியவிருளைச் செய்தனவென்க. (சுசு)

தண்டாரினருச்சரிதேன்றுளியும்
விண்டாரையின்வேழமுகுங்கடமும்
பண்டாவியபாய்வயமாக்குரமே
கொண்டாயதுகட்குலைநீத்தனவே.

உரை.— அணிந்தகுளுமலர்மாலைகள் வாசனைவீசிப்பொழிந்ததேன்மழையு மழைத்தாரையொப்ப யானைகள்பொழிந்த மதமழையுங் கலனையணிந்த குதிரைத்திரடம் குளம்பினாலெழுந்த தூசிமிகுதியை யடக்கினவென்க. (சுஎ)

மலைநேரிரதம்வளிநேர்பரிவான்
கலைநேர்குடைவான்கனநேர்கரிநீ
ரலைநேரயரடிநேர்தொழுதே
நிலைநேர்வலிநேரரசண்டினரால்.

உரை.— அங்ஙன மலையோடொத்தவிரதங்களுங் காற்றோடொத்த விசைக்குதிரைகளுந் திங்களோடொத்த குடைகளு மேகத்தோடொத்தயானைகளுங் கடலோடொத்தபடைவீரரும்வந்துநெருங்கி யடிமுன்விழுந்து பூவுலகத்தோடொத்த வல்லமையுடையவரசனை யண்டினாரென்க. (சுஅ)

பரிபூட்டியதேர்பலவேறரசர்
கரிபூட்டியதேர்கடிதோட்டரச
ரெரிபூட்டியதேர்மிசையெய்தரச
ரரிபூட்டியதேரரசண்டினரால்.

உரை. — சொன்ன பெரும்படையோடு பலவரசரும்வந்து குதிரைகளிழுத்த தேரின்மேலேறினசிலரும் யானைகளிழுத்ததேரை நடத்தினசிலரு மெரிவேகப்புரவியாலிழுக்கப்பட்ட தேரின்மேலேவந்தசிலருஞ் சிங்கங்களைப்பூட்டிய தேருடையவரசனையண்டினரொன்க. (௬௯)

பொங்கார்கலிமேற்பொலிவெஞ்சுடர்போ
லங்காரரசர்கடல்மீதவிரச்
சிங்காசனமேலொருசிங்கமென
மங்காவொளிமன்னனெழுந்தனனே.

உரை. — அங்ஙனம் யாவரும்வந்துகூடினபின்பு பொங்குமலைக்கடல்மேலே சூரியனெழுந்தாற்போல வங்கேகூடின வரசர்கடல்மே லெழுந்துவிளங்க வுயர்ந்தசிங்காசனத்தின்மே லொருசிங்கமாக மங்காதகீர்த்தியரச னெழுந்திருந்தானென்க. (௭௰)

விண்டிக்கில்விளங்கியவெஞ்சுடரை
யண்டிக்கிளர்மீனடியேத்துவபோன்
மண்டிக்கிலெலாமுடிமன்னவர்வந்
தெண்டிக்கிவிராயனையேத்தினரே.

உரை. — சூரியன்முகத்திலொளித்து மறையாநிற்கு மீன்களெல்லா மன்றுவந்து வானில்விளங்கிய சூரியனடியிலண்டி வணங்காநின்றாற்போலப் பூவுலகெங்குமுடியைச்சூடின வரசரெல்லாருமண்டி யெண்டிக்கிலுமாளாநின்ற விராயனை வணங்கினரொன்க. (௭௧)

அன்றாரவையாரணராரவைமெய்
மன்றாரவைமந்தி[illegible]மாரவைமற்

றென்ஞர்தொழுமோங்கயிலோங்கவைசூழ்
பொன்ஞரடிபொற்புறநண்ணினரே.

உரை. — சொன்ன வரசர்கூட்டமும் வேதியர்கூட்டமுந் தம்முடல்பகைத்த முனிவர்கூட்டமு மந்திரிமார்கூட்டமு மற்றப்பகைவர்வணங்கு முயர்ந்தவேலேந்திய வீரர் கூட்டமுஞ் சூழப் பொன்னணிவாயொளியெறித்த விராயன்பாத மழகுமிகப்பெற வண்டிநின்றனென்க. (எஉ)

வயிர்செய்யொலிமற்றெலிமாறியபின்
செயிர்செய்பகைதீர்த்தசிறந்தமுகத்
தயிர்செய்யினிதோருரையாய்ந்தறைவா
னுயிர்செய்யமிர்தேந்தியமார்புரியோன்.

உரை. — அங்ஙன மெவருங்கூடிச்சூழ்ந்துநிற்ப ஆகுடு கொம்புவாயொலியு மற்றப்பறைவாயொலியு மமர்ந்தபின்பு பாவத்தால்வரும்பகையைத்தீர்த்த மகிழ்ச்சியைக்காட்டு முகத்தோ டினியயாவினு மினியவுரைகளை யாராய்ந்துரைத்தானுயிர்தரு மமிர்தத்தையேந்திய மார்பினையுடைய விராயனென்க. (எங)

வேறு.

இன்றேயுள்ளோரன்றவர்மாள்வா ரிதுவல்லாற்
பொன்றாருண்டோபூதலமெங்கும் புகழ்விஞ்சக்
குன்றுமின்னுங்காரொளிகொண்மா முடிகொண்டே
நின்றாருள்ளும்பொன்றயிர்நீங்கா தெவனுண்டோ.

உரை. — இராய னெங்ஙனஞ்சொன்னனென்னில், இன்றுள்ளயாவரு நாளையிறப்பத்தகுவரொழியப் பூவுலகெங்கு மிறப்பத்தகாதவருண்டோ? மிகவும்புகழப்பட்டு விடாதொளியெறிக்கு மணிமுடிசூழ்ந்த வரசருள்ளு முயிர்பட்டிறவாதொருவருமுண்டோ வென்றனனென்க. (எச)

ஒன்னரஞ்சும்வண்சிலையஞ்சா வரிநன்னூற்
சொன்னர்சொல்லும்பாவுரையஞ்சா சுடர்மெய்ப்ப

மின்னார்மன்னர்கோலொளியஞ்சா விரியாப்பூ
வன்னார்சேடஞ்சாவிளிவென்னா வறியார்யார்.

உரை.— கொடுஞ்சாவானது பகைவரஞ்சும் வீரவில்லுக் கஞ்சாது, உரியதற்கலை யனைத்தையுஞ்சொல்வோ ருரைத்த பாவுரைக்கஞ்சாது, மிக்கொளி யெறித்துமின்னு மரசரேந் தியசெங்கோற்கஞ்சாது, முற்றும்விரியாப் பூவரும்பொத் தவிளையோரழகிற்கஞ்சாது, இவையெலா மறியாதவரிங்குண் டோவென்றனென்க. (எ௫)

மேலார்கீழார்யாவருமொன்றாய் விளிவாரேற்
கோலாலோங்காங்காரமுளத்தே கொளுவானேன்
சேலார்மூந்நீர்சூழ்புவியாண்டே செயிர்மொய்க்கும்
பாலாய்ந்தென்கோனீக்குதனீங்காப் பயனாமால்.

உரை.— அங்ஙன மேற்குலத்தோருங் கீழ்குலத்தோருமெ வருமொருப்பட விறப்பாராகி லேந்தியகோலா லுள்ளேயா ங்காரத்தைக்கொள்வதென்ன? ஆகையாற் கடல்சூழ்ந்தவுலக த்தை யாளாநிற்கையிற் பாவமேவிளையுமென்று நானென் கோன்மைதுறந்துவிடுவதே விடாதபயனெனக்காகுமென்ற னென்க. (எ௬)

வீடாச்செல்வனோயறவென்றும் விளியாதான்
கோடாக்கோலான்றண்ணருள்மாறாக் குடைவல்லான்
வாடாத்தண்பூவாகையணங்கான் வளரன்பா
னீடாடாத்தன்மைத்தலைமையன்னா னினியாள்வான்.

உரை.— அங்ஙன நானரசொழிந்து கெடாதசெல்வனு நோய்கொள்ளாதவனு மிறவாதவனும் வளையா நீதிச்செங் கோலு மருளின்குளிர்ச்சிமாறாக்குடையும் வாடாக்குளுமல ர்வாகையழகு மிவற்றோடன்பு மிக்குடையனுமாகியவொருவ னினி நிகராதமுறையா னம்மையாளாநிற்பானென்க.(எஎ)

அன்னானென்னானென்னவறைந்தா லருளார்ந்து
மின்னார்விண்ணுமண்ணுமொருங்கே வினைதீர்ப்பத்

தன்னாறாணாண்டோம்பிநிழற்றுந் தயையாற்கே
மன்னாநிற்குந்தண்ணிழல்செய்த வளனன்றே.

உரை. — நான்சொன்னதன்மைத்தா னெவனென்றால், அருளின்மிகுதியால் வானுலகும்பூவுலகுமொருப்பட வினைக ளியாவையுந்தீர்த்துத் தானேதனியே தன்னாலாண்டுபேணி ய நிழலைச்செய்யுந்தயையுடையனாகிய வவதரித்தநாதற்குத் தானே நிலைபெற்றொழியாக் குளுநிழல்செய்த சூசையவன் றானென்றானென்க. (௭௮)

நஞ்சிட்டெஞ்சாவஞ்சனைநல்கும் வினைநீக்கி
யெஞ்சித்துஞ்சாதென்னுயிர்காத்தா னிவனென்று
மஞ்சிற்கெஞ்சாதாரருள்பெய்த வளமோர்த்தென்
னெஞ்சிற்றுஞ்சாமின்முடிசூட்ட னினைவுற்றேன்.

உரை. — பகைவ னெனக்குநஞ்சிட் டொழியாவஞ்சனை கொண்டுவிட்ட வினைகளைநீக்கி நான்பட்டிறவாததற் கென் னுயிரைச் சூசையேகாத்தானென்றதைப்பற்றி மேகமாரியி ற் குறையாததயை யெனக்கவனேபொழிந்த மாட்சியையு ணர்ந்து விடாதவொளிமுடி யவற்குச்சூட வென்னெஞ்சினி னைத்தேனென்றானென்க. (௭௯)

பின்றாதோம்பிநோய்பசிபோராப் பகைபோன்றப்
பொன்றாவன்பாலாண் டென்னையும்மைப் பொலிவின்பங்
குன்றாவீட்டுய்ப்பான்மலர்குன்றாக் கொடிக்கோமா
னென்றுநின்றாருள் ளுருகப்பே ரியல்வல்லான்.

உரை. — சொன்னவரசன் விடாதுலகத்தையோம்பி நோ யும்பசியும் பகையுமொழியத் தானொழியாத வன்போ டா ண்டுகொண் டென்னையுநுங்களையும் பேரின்பமாறாதமோ ட்சத்திற்சேர்ப்பான் மாறாமதுமலர்க் கொடியையேந்திய கோமானாகியசூசை யென்றான் சூழநின்றயாவரு மதிசயப் பட்டுள்ளுருகுதற் காரணமாகிய பெருமையிற்சிறந்தவிரா யனென்க. (௮௰)

வேறு.

உள்ளியதுறவிற்சொன்னவுரையிதோவென்னவஞ்சித்
தெள்ளியவான்மேலாள்வோன்சென்றெமையாளனன்றேல்
விள்ளியகொடியோனேவும் விடைப்பணிநீதந்தெம்மை
யள்ளியகுறைதீர்த்தாள்வ தமைதியென்றுவப்பினேர்ந்தார்.

உரை. — இராயன்சொன்னதைக்கேட்டயாவரு மவன்றுறவாகநினைத்துச் சொன்னுனென்றஞ்சித் தெளிந்தொளிவீசியவானுலகின்மேலாள்பவ னிங்கே நம்மை யாளாநிற்பது நல்லதாயினு மலர்ந்தகொடியோன்சூசை யரசனுகவாண்டுகொண் டேவியபணிவிடையாவையு நீயே யவனுளாக வெங்களுக்கறிவித் தெங்கள்குறைதீர்த்தாளச் சம்மதிப்பாயாகவென் றெல்லாரு மித்தன்மையின் மகிழ்ச்சியோடடன்பட்டாரென்க. (அக)

கோமுரசரசன்வீர குன்றனைமுகத்துநோக்கி
மாமுரசொழிப்பச்சொல்லும் வளன்முடிபத்தாநாளிற்
பூமுரசார்ப்பச்சூடப் பொற்புறிநகரம்பூண
வேமுரசறைவியென்றான் விரைந்தவன்றெழுதுபோனான்.

உரை. — அங்ஙனஞ் சம்மதியானபின்பு கோமுரசுடைய விராய னங்கேநின்ற வீரகுன்றனென்பவனைநோக்கி முரசின்முழக்கத்தை மறைக்குஞ்சொல்லான் முழங்கியுரைப்பான்: பத்தாநாளிற் சூசைமுடியைச் சூடுவதென்பதுவேண்டி யழகுமிகப்பெற நகரெல்லாமலங்கரிப்பதற்கு நீமுரசறைவிப்பாயென்றான், அவனும் வணங்கி விரைந்துபோனானென்க. (அஉ)

வார்பிணிமுரசம்யானை வனெருத்தேற்றிப்பைம்பொ
ருர்பிணிமார்பன்வான்மேற் றவழ்கொடிமனைமூதூரிற் [ற்
கார்பிணிவரைமேன்மின்னிக் கதித்திடிமுழங்கினுற்போற்
பார்பிணியொழியவோதை படர்முரசறைவித்தானே.

உரை. — அங்ஙனம் வாராற்கட்டப்பட்டமுரசை யானைமேலேற்றி வானத்திற்றவழுங் கொடிகளையேற்றிய மாளி

கையுடைய வம்மூதூரிலெங்கும்போய் மேகங்கள்சூழ்ந்த மலையினுச்சிமேன் மின்னியிடித்தாற்போல மின்னும்பொற்கலனணிந்தமாரர்பன் பூவுலகுள்ளபிணியெலா மொழிதற் காரணமாக முழங்கினமுரசைக்கொண்டு கற்பித்தசெய்தியையறைந்தானென்க. (௮௩)

கேண்மினேகேண்மினின்பம் விளைத்தசொற்கனியக் கேண்மின்
வாண்மினேபசிநோய்வஞ்ச மறப்பகையொழியவாழ்மின்
பூண்மினேவியவான்வேந்தன் புவிமிசைமுடியைச்சூடல்
பேண்மினேநகரமெங்கும் பெருநகையணிமினீண்டே.

உரை.— முரசறைவித்த தன்மையேதெனில்: கேளுங்கள், கேளுங்கள், இன்பம்விளைவிக்குஞ்செய்தியையினிதாய்க் கேளுங்கள், நீங்களேவாழ நோயும்பசியும் வஞ்சமும்பகையுமொழிந்து வாழக்கடவீரென்றுவாழ்த்தினபின்னர்-அணிகலனாக மீன்களைப்பூண்ட வான்மேல்வாழுமரச னிப்பொழுதிப்பூவுலகின் முடியைச்சூடுவான், இந்தச்செய்தியைப்பற்றி யிந்நகரெங்கும்பெரிதோர் நகைகளாலுடனே யலங்கரிக்கக்கடவீரென்றானென்க. (௮௪)

வானரசாகிவிப்பார் வானுலகாகப்பூண்மின்
பானரசாகித்கங்குல் பட்டொளிபரவுமன்றே
கோனரதேவனேவற் கொண்டமாவரத்தோனிங்கண்
டானரபதியாயொவ்வாத் தயைதளிர்த்தெம்மையாள்வான்.

உரை.— இங்கேமுடியைச்சூடத்தகுமரசன் வான்வாழரசனாகையி விப்பூமியும் வானுலகொப்ப வலங்கரிக்கக்கடவீர், சூரியனரசனாய்நிற்குமிடத் திருளொழிந்துமிக்கொளிபரவுமல்லோ? இப்போதுமுடியைச்சூட்டத்தகு மரசனாரெனில், தேவகோனாகியநரதேவ னேவலைக்கொண்ட வரத்தையுடையகுசைமாமுனிதா னிங்கேநரபதியாகி நிகராததன்றயை தளிரச்செய்து நம்மையாள்வானென்க. (௮௫)

தேவுலகுரியவண்ணந் திருவிழாவொன்பானுளிற்
பூவுலகியற்றிப்பின்னுட் பூங்கொடிச்செல்வக்கோமான்

யாவுலகனைத்தும்வாழ யாணர்மாமகுடஞ்சூடல்
மேவுலகெழுகவென்ன வியன்முரசதிர்ப்பச்சொன்னான்.

உரை. — ஆகையாற் றேவலோகத்திற்குரிய தன்மையா லொன்பதுநாளுந் திருவிழாக்கொண்டாடினபின் மறுநாட் பூங்கொடியேந்திய செல்வக்கோமான் சூசையுலகங்கள்யா வும் வாழும்பொருட்டாக வழகியமுடியைச்சூடுவதைப்பற் றி யிவ்வுலகெல்லாஞ் சிறப்போ டியாக்கடவதென்று பெ ருமுரசடித்துச் சொன்னானென்க. (அசு)

தார்புனைமுரசின்பேழ்வாய் தழங்குரல்கேட்டகாலை
சார்புனைமனைமூதூரிற் கதத்தகாற்றதிர்ந்துவீச
நீர்புனைபுணரிபொங்கி நெருங்கலைமயங்கிற்றென்ன
நார்புனையுவப்பில்யாரு நடந்திரிந்தெதிர்ந்தோயாரே.

உரை. — அங்ஙன மாலையணிந்தமுரசின் பெரும்வாய் முழக்கவோசை கேட்டவளவிற் பெருங்காற்றதிர்ந்து வீசி னதன்மையிற் கடலெலாம்பொங்கி யலைமேலலைகள் நெருங் கிக்கலந்துவருவதேபோல மேகங்கள்சூழ்ந்த வுயர்மாடங்க ளையுடைய வந்நகரொங்கு மன்பின்மிகுதியான் மகிழ்ந்தயா வரு மங்கங்கேயோய்வின்றி நடக்கவுமோடவு மெதிர்த்துவ ரவுஞ் செய்தாரென்க. (அஎ)

கன்னியங்குமரிவாழை கமுகொடுமயங்கநாட்டிச்
சென்னியந்தளிரும்பன்னஞ் சேர்ந்ததீங்கனியும்பூவும்
பின்னியங்கிடங்கடோறும் பெருகமொய்த்தெவணுநாற
மின்னியந்நகர்வண்டார்க்கும் விரிமலர்க்காவிற்றுமே.

உரை. — அங்ஙன மீனுதவிளவாழைகளையுங் கமுகுகளையு ங்கலந்துநாட்டிக் குளுமரத்துச்சிமேலெழும் புதுத்தளிர்க ளையுந் தளிர்களோடியைந்திருக்குந் தீங்கனிகளையு மதுமலர் களையும்பின்னிச்சேர்த்தி யந்நகர்த்தெருக்கடோறும் நெரு ங்கவைத் தெங்கும்பரிமளம்வீசாநிற்ப வந்நகரன்றுவண்டுக ள்முழங்கும் பூங்காவனவடிவாகத்தோன்றிற்றென்க. (அஅ)

நெட்டொளிமாடத்துச்சி நேரிடைவிடாதுநீலப்
பட்டொளிப்பந்தர்பாய்த்திப் பத்தியிற்பயிற்றிக்கோர்த்த
கட்டொளிமணிகளுறக் கதிர்ப்பகற்கஞ்சாமின்மீன்
விட்டொளிபூத்தவான்போல் வியென்னமாநகரமன்றே.

உரை.— உயர்ந்துவிளங்கிய மாளிகையாவிலு முச்சிதொட்டெங்கு மிடைவிடாமல் நீலப்பட்டுகளைப் பந்தலாகப்பரப்பி யொழுங்கோடங்கே பத்திபத்தியாய்ப் பதித்தபலவகைமணிகளொளியையெறிப்பச் சூரியன்கதிருக்கஞ்சாமற் பகலினுமொளிவிடு மீன்களைப்பூத்த வானமொப்ப வன்றுவியென்னமாநகரந்தோன்றிற்றென்க. (௮௯)

செம்பொடிமணியின்றூசி செம்பொனின்றூசிசுண்ணத்
தம்பொடிசிந்துரத்தோ டயிர்மணன்முத்தமீதிற்
பைம்பொடியலருஞ்சிந்தப் படர்ந்தவான்பிரண்டுமீன்க
டம்பொடிமிதித்லாகுந் தகுமொளித்தெருவின்றோற்றம்.

உரை.—மீளவு நுண்மணலாகப் பரப்பினமுத்துப்பொடிமேற் சிவந்தமணிகட்பொடியுஞ் செம்பொற்பொடியுஞ் சுண்ணப்பொடியுஞ் சிந்துரப்பொடியும் பொடிமலர்களுஞ் சிந்திக்கிடப்பப் படர்ந்தவான மன்றுபிரண்டதாகவும் வான்மீன்களைமிதித்து நடந்ததாகவு மத்தெருவெல்லாமன்று தோன்றினவென்க. (௯௰)

தெருத்தொறுமொழுங்கிற்பாய்ந்த திருவொளிப்பளிக்குத்திண்ணைப்
பருத்தொறும்பசும்பொற்பாவை பவளநீண்குறட்டிலேற்றி
யுருத்தொறுமிரவில்வில்வா யொளிமணித்தீபமின்னக்
கருத்துறுமெல்லக்கேலாக் கவினகர்கேழ்த்ததன்றே.

உரை.— மீளவு மெல்லாத்தெருவிலு மொழுங்கோடிட்ட செல்வவொளியைவீசும் படிக்கத்திண்ணைகடோறும் பவளக்குறட்டின்மேற் பொற்பாவைகளையேற்றி யிராநேரத்திலொவ்வொருபாவையி னுருமுன்னே யொளிவாய்மலர்ந்த வொவ்வொருமணித்தீப மின்னியெறிப்ப நமதுகருத்துக்

செல்லுமெல்லைகடந்த வழகிற்சிறந்தவந்நக ரன்று விளங்கி
ற்றென்க. (கூக)

நகுமணிப்பாவையாக நங்கையர்மாலைத்தாமந்
தகுமணிநிரைத்துவாய்த்த சாளரத்தொசிந்துநோக்கத்
தொகுமணிப்பறைகளார்ப்புஞ் சுட்டகிற்புகையுஞ்சொல்ல
மிகுமணிவிழாவைக்காண விண்ணவர்வந்ததொத்தார்.

உரை. — சொன்னபொற்பாவையன்றி நகைகொண்ட
மணிப்பாவையாக வந்நகர்மடந்தைகள் மாலையொழுங்குப
டப் பலமணிகளைநிரைத்துவகுத்த வுயர்ந்தசாளரங்கடோறு
முயர்ந்துபாராநிற்பவே பலவகைப்பறைகள்கூடி முழ
ங்கினவோசையுஞ் சுட்டவகிற்புகைமிகுதியும் வான்மேலே
றிச்செய்தியைச்சொல்ல வறிந்தவானவ ருருவோடங்கே
மிக்கணித்திருவிழாவைக்காண வந்ததாகத் தோன்றினு ரெ
ன்க. (கூஉ)

இச்செவிமதர்கண்கையா லீறிலமுகத்துமாந்த
மெய்ச்செவியினியயாழில் விளையிசைமதுவைமேய்ந்து
கைச்செவிவளைவில்வீசக் களித்தமின்னுடிப்பாடி
யெச்செவிமிக்கதென்ப தீடிலாவியந்துநிற்பார்.

உரை. — சொன்னவழகின்வகையெலா மகிழ்ந்தகண்ணு
கியகையா லெவருமுடிவொன்றின்றி முகத்துநுகராநிற்ப
வினியவீணைவாய்விளைந்த வின்னிசைமதுவைச் செவிகளுமு
ண்ணுநிற்பக் கைக்கழகாகியமணிவளைக ளொளியைவீசக் க
ளித்த மின்களோடொத்தவ ராடவும்பாடவு மிவற்றுள்ளெந்
தவழகுமிக்கதென்றுதேறிச்சொல்லும்படிக் கீடில்லாமலதி
சயப்பட்டு நிற்பாரென்க. (கூங)

வேறு.

பண்ணிறவாய்வண்டார்க்கும்பனிப்பூநாறப் படர்ம
ழைமின் [லாம்
றெண்ணிறவாய்ப்பூம்புகையுண்மணிவில்வீசத் தெருவெல்

விண்ணிறவாய்மலர்ந்திவ்வாறென்பானாளும் விழாவணிகண்
டொண்ணிறவாயிரவியெழீவிழைந்தநன்னா ளுதித்ததுவே.

உரை. — அங்ஙனம் வீணைவாய்க்குரலொப்ப வண்டுகள் முழங்கும் குளுமதுமலர்மணம்வீசவும் படர்ந்தமேக மின்னிற்போலப் பலவகைப்பூம்புகைக்குள்ளே பலவகைமணிகள் மின்னிவிளங்கவு மத்தெருவெல்லாம் வானுலகொப்ப வழகின்மலர்ந்தனவாகி யிங்ஙனே யொன்பதுநாட் டிருவிழாவைக்கண்டபின்பு சூரியன்மிக்கொளிவீசியெழுந்து மிக வெல்லாரும்விரும்பின பத்தாநா ளுதித்ததென்க. (கூச)

பொற்பரப்பிற்பவளத்தூணிறுத்திமற்றோர் புறம்படிகக்
கற்பரப்பிச்சுவரேற்றிக்கவிழ்ந்தவான்போற் கதிர்மணியின்
னற்பரப்பிற்சிரங்கூட்டிநிலைக்கண்ணாடி நகநிரைத்து [மே.
விற்பரப்பிக்கதிர்ப்பதிபோல்வேய்ந்ததாங்கோர் மண்டப

உரை. — கீழ்ப்பரப்பெல்லாம் பொன்னாலாக்கி யதின் மேலொருபுறத்துப்பவளத்தூண்களை நிறுத்தி மற்றொருபுறத்துப் பளிங்கினாற் சுவர்களையேற்றிக் கவிழ்ந்துநிற்கும் வானமொப்பப் பலகதிர்மணிகளாற் சிகரத்தைமேலேவளைத்துக்கூட்டி யங்கங்கேயொழுங்குபடப் பலநிலைக்கண்ணாடிகள் நகைத்தாற்போல விளங்கவைத்துச் செஞ்சுடரொளியைப் பரப்பிவாழு மிருக்கைபோலத்தோன்றி யங்கொருமண்டபமிருந்ததென்க. (கூரு)

கலையீன்றமுறையொல்காதங்கணுப்பண் கதிர்ப்பொன்
அலையீன்றவரிமூன்றான்கெருத்திற்றங்க வொளியல்கா [று
மலையீன்றவினமணியாற்குறட்டையேற்றி வானோர்சேர்
நிலையீன்றவெழிற்காட்டநிமிர்ந்ததோர்சிங் காசனமே.

உரை.— அம்மண்டபத்தினடுவே கற்றநூல்தந்த முறையைத்தவிராம லருக்கினபொன்னால்வார்ப்புவேலையாகவமைத்த பன்னிருசிங்கங்கள்தாங்காநிற்பக் கெடாதவொளியிற் பலமலைதந்தபலவகைமணிகளாற்செய்யப்பட்டவுயர்ந்தகுறட்

டைமேலேற்றி வானவர்வாழுமுலகினுள்ளவழியினைக் காட்டி
ற்சூரியதோர்சிங்காசன நிமிர்ந்துதோன்றிற்றென்க. (௬௬)

கண்கனியமின்றெளித் துக்கதிரால்வீக்கிப் பானுவிராய்
மண்கனியக்கனிவானோர்களிப்பிற்செய்த வடிவாகப் [ல்
புண்கனியமருந்தன்றோனுருவமங்கண் பொலிந்துயிர்போ
விண்கனியவெண்கனியத்திருவில்வீசி வேய்ந்ததன்றே.

உரை. — கண்டகண்கூசாமல் மிக்க வின்பநுகர்வதுவேண்டி மின்களைத்தெளித்து நல்லுருப்படக் கதிரார்கட்டிச் சூரியன்றானுயிராக வுள்ளேநிற்பப் பூவுலகெல்லாமினிதாய் மகிழும்படிக்கு வானோர்தாமேமகிழ்ந்தவுணர்விற் செய்தவடிவமாகத்தோன்றிப் புண்ணையினிதாயாற்று மருந்தேயொப்பத் தயையுடைய சூசைமாமுனிதன் னுருவமே வானுலகின்பங்கொள்ளவு மெவர்க்குமாசைநிறைய வின்பங்கொள்ளவு மச்சிங்காசனத்தின்மே லுயர்ந் தம்மண்டபத்திற் றுயிராகத்திருவொளிபரப்பித் தோன்றிற்றென்க. (௬௭)

வான்பூத்தசுடர்க்குழவிமானவாய்த்த திருமகவை
மீன்பூத்தபூங்கொடியோடேற்றிக்கண்டார் வினைதீர்ப்பக்
கான்பூத்தவாய்மலர்ந்துட்குளிர்ப்பநோக்கும் களிமலர்க்கண்
டான்பூத்ததயைதளிர்ப்பவுயிராயுட்டங்கினதென்பார்.

உரை.— அவ்வுருவ மெங்ஙனமிருந்ததென்னில், வானிலுள்ளசூரியன் குழந்தையாயினாற்போலச் செய்யப்பட்டதிருக்குழந்தையுருவத்தை மீன்களைப்பூத்த தன்கொடியோடு சூசைகையிலேந்திக் கண்டயாவருந் தம்வினைதீர்தற்காரணமாக மணத்தைவீசிப்பூத்த கமலவாய்மலாநிற்பவு மெவர்க்கு மனமுட்குளிர்ப்பக் களித்த விருகண்மலர்ந்து நோக்காநிற்பவுஞ் சூசைதானே தன்றயைதளிர்த்துப் பூப்பதுவேண்டி யவ்வுருவத்துள் ளுயிராகவிறங்கித் தங்கினதென்பாரென்க. (௬௮)

விரிமாலைத்தாமத்துவிரிபூங்கோலான் மேற்சுடரைச்
சொரிமாலைபூமாலைசுடர்பொன்மாலை துகிர்க்குளுந்தி

யெரிமாலைமணிமாலைமுத்தமாலை யிவையொருங்கோ
ருரிமாலைதலைகூட்டிக்கதிர்நீப்பொப்பப் பரப்பினரே.

உரை.—சொன்னபடியே விரித்தமாலையாக மலர்த்தபூங்கொடியேந்தியசூசையி னுருவின்மேலே கதிர்கள்சொரிந்ததன்மையிம் பூவாலும்பொன்னாலுஞ் சுடர் தீயொப்ப வெரிந்து குளிர்ச்சிமிக்க பவளத்தாலும் வயிரமுதற்பலமணிகளாலு முத்துக்களாலும் வகைவகையாய்ப் பிணிக்கப்பட்டபலமாலைக ளுரியதோர்மாலையாகத்தோன்ற வெல்லாத்தலைகளு நடுவிலொருப்படச் சூசைதலைநேராகக்கூட்டிக் கதிர்கள்விரிந்து பரவுவதுபோல வம்மாலைகள்மறுதலைபரப்பித்தூக்கினாரென்க. (௬௧)

சென்றாகமுழக்கொடியேற்பறைகளார்ப்பத் திருமணி
யாழ்
புன்னாகவண்டிசையாற்புகழ்ந்துபாடத் தொழப்பொருனர்
பொன்னாகமணிமுகிற்பூம்புகைசூழ்தேக்கு மண்டபத்தின்
மின்னாகமணிமார்பன்மிளிர்தாளேத்தி விரைந்துற்றான்.

உரை. — இவையெலா மமைத்தபின்பு மேகமுழக்கத்தோடு பலவகைப்பறைகள் முழங்கவுந் திருமணிவீணைகள்குரலோடு புன்னைமலர்சூழ வண்டுகள் முரலுமோசையாற் பலரோபுகழ்ந்துபாடவுஞ் சூழ மற்றரசர் வணங்கா நிற்பவும் பொன்மலைசூழ்ந்த மணிமேகமொப்பப் பூம்புகைமண்டித்தேக்கு மம்மணி மண்டபத்திடத்து மின்னியமலையோடொத்த வொளிமணியணிந்தமார்பனாகியவிராயன் சூசைதன்திருப்பாதத்தை வணங்கிவிரைந்து சென்றானென்க. (௬௨)

அலைவரம்பற்றேவபோனகரமெல்லா மடர்ந்துறிவா
னிலைவரம்பற்றும்பர்மிசைபல்லாண்டோதி நிற்பமறைக்
கலைவரம்பற்றுணர்ந்தோர்தங்கருமமாற்றி மாதவற்கே [ன்.
விலைவரம்பற்றமைத்தமுடிவேந்தர்வேந்தன் றெழுதணிந்தா

உரை. — இராயன்வந்தவளவிற் சூழ்கரையுடைத்த கடல் மேற்பொங்கியோடிவருவதேபோல நகரமெல்லாந்திரண்

டுமொய்ப்பவும் வானினெல்லைகடந்து மேலெங்கும்வானவர் சோபனங்களைப்பாடிநிற்பவும் வேதநூற்கரைகடந்துணர்ந்த குருக்கள்செய்யவேண்டிய நன்முறையெல்லா நிறைவேற்றினபின்பு விலையெலாங்கடந்ததன்மையிற் செய்யப்பட்டதோர் மணிமுடியைச் சூசைமாமுனிதன்றலைமே லரசர்க்கரசன்வணங்கிச் சூட்டினனென்க. (௱௧)

வேறு.

படிவணங்கரசனடிவணங்கவெழுவிழமறு படிவணங்க
நிமிர்கிளைவணங்கவெனைகுருசில —
ரடிவணங்கமறையவர்வணங்கவணியணிபடையவர்வணங்க
வனையவர்வணங்கவிரைவிரிபுகை —
முடிவணங்கமலர்மழைவணங்கவிரிகொடிகுடை முனர்வணங்க
முரசொலிவணங்கமுழவொடுமெனை —
துடிவணங்கவிசைகுழல்வணங்கமிசையமரர்க டுதிவணங்க
முடிவிலவணங்குமிருவுலகெலாம்.

உரை.— அங்ஙன முடியைச்சூடினவுடனே பூவுலகெங்கும்வணங்கப்பட்டவிராயன் சூசையடிமுன் விழுந்துவணங்க விழுந்தெழுந் தாசையாற்றுப் பன்முறைவணங்கப் பின்பிராயன்மக்களோ டவன்கிளைகளு மற்றரசரும்வேதியரு மணியணியாகப்படைவீரரு மற்றவனைவரும் விழுந்துவணங்க வாசனைவீசியபூம்புகைத்திரளாயேறிமுடியைவணங்கப்பொழிந்தமதுமலர்மழையும் விரித்தகொடியுங்குடையு முழங்கினமுரசோடு பலவகைப்பறைகளும் பாடினவினியவீணைகளு மங்கேவணங்காநிற்ப மேலேவானோர்வணக்கத்துதிகளை வழங்கவே முடிவொன்றின்றி யீருலகெல்லாம் வணங்காநின்றனவென்க. (௱௨)

மழைவழங்கவிடியொலிமுழங்கனிகர்பலபறைவயினட
ங்கவொலிமிகமுழங்கமுதலவன்மணி —
மழைவழங்கமுடியணியணிந்தவெனையவர்நிதி மழைவழங்க
நிறைகலையணிந்தமறையவர்துதி —

மழைவழங்கவிவர்மதுமலிந்தநறவிடுமலர் மழைவழங்கவவர்
புழுகியைந்துகமழ்பலபுனல்
மழைவழங்கவெளியிசைவழங்குமழைமெலிவுற மணிவழங்
குநகர்மிசைவழங்குநகர்பொருவுமே.

உரை.— வானமழைபெய்வதற் கிடித்தாற்போல விடங்கடோறும் பலவகைப்பறைகள் முழங்காநிற்ப விராயன் மணிமழையு மற்றமுடிசூழ்ந்தவரசர் பொன்மழையும் வேதியர்துதிமழையு மற்றவருட்சிலர் வாசனைமதுமலர்மழையுஞ் சிலர் புழுகுமுதற்பலவாசனையாற் கூட்டினபனிநீர்மழையும் வானிற்பொழிந்தமழையினுந் திரளாய்வழங்காநிற்ப மணியாலலங்கரித்த வந்நகரன்று வான்மேலுள்ள நகரோடொத்ததென்க. (ருா)

நகவளர்ந்தவறநகமலிந்ததவம்வினையழ நகமிடைந்தி
ருநகமிகுந்தகொடைமிடியழ
நகவளர்ந்தகலைநகவனந்தமறைவெளிறழ நகநிவர்ந்தமுயல்
நகவியைந்தபொறைபிணியழ
நகவ்ளர்ந்தநயநகவலர்ந்ததயைபகையழ நகமுதிர்ந்தவளநக
வுயர்ந்தகளிதுயரழ
நகவளர்ந்தநரர்நகமகிழ்ந்தமரர்வெறியழ நகநலங்கணகநக
மெழுந்ததழநரகெலாம்.

உரை.— குசைமாமுனி யிங்கேமுடிசூடினதைப்பற்றி யறமுந்தவமும்வளர்ந்துநகவே வினைகள்கெட்டழுவன, செல்வமு மதற்குரிய கொடைதானமும்பெருகிநகவே தரித்திரமொழிந்தழுவது,கல்வியும்வேதநூலும்வளர்ந்துநகவே யறியாமை யகன்றழுவது, முயற்சியும் பொறுமையுமிகுந்து நகவே பிணிகள்கெட்டழுவன, நயமுந்தயையும்வளர்ந்து நகவே பகைகள்முடிந்தழுவன, பெருமையுமின்பமகிழ்ச்சியுமுதிர்ந்துநகவே துயர்கள்நீங்கியழுவன, மனிதரும்வானவருநகவே பேய்கள்கெட்டழுவன, நன்மையெல்லாம்வளர்ந்துநகவே நரகமனைத்துமழும்படி பூவுலகெல்லா மெழுச்சிபெற்று மகிழ்ந்ததென்க. (ருச)

குழலெழுந்தவிமிழிசையிலசந்தகுரலிணையில் குயிலொ
ழிந்தவயிரியர்களிர்த துதியிணையில
கழலெழுந்தவணிநகநயந்தநடமிணையில கடல்பிரண்டதெ
னமறுகடர்ந்தகுழுவிணையில
வழலெழுந்தமணிகுளிரவிண்டவொளியிணையில வருளலர்ந்
தமுகநகமுயன்றகொடையிணையில
நிழலெழுந்தநிலைநிறையமைந்தவமுதிணையில நிழலெழுந்த
கொடிவளனுமிழ்ந்தவரமிணையிலால்.

உரை.— அன்றங்கெழுந்த வீணைவாயினியவிசைகளோ டிசைபடவேற்றியகுரலுங் குயிலினுமினிதாய் வந்திகள் மாகதர்பாடியதுதிகளுங் காலிலணிந்தவணிகலனசைந் தொளிவீச நயப்பிலாடியகூத்துகளும் பெருங்கடல் பிரண்டதுபோல நெடுந்தெருவெங்கு நெருங்கியகூட்டமு மழலொப்பச்சுடர்ந்து பனியொப்பக்குளிர்ந்து மணிகளெங்கு மெறித்தவொளியுந் தயையான்மலர்ந்தமுகநக வன்றுவழங்கியகொடையு நிழல்பாய்ந்தவிடங்கடோறு மினிதமைத்திட்டவமுது மன்றுயிர்நிழற்றிய கொடியையேந்தியகுசை வழங்கிய வரங்கள் நிகரில்லாயினவாகையி லவையெல்லாமு மன்று நிகரில்லாயினவெனக. (௩௫)

முகையணிந்தவணிமதுவுமிழ்ந்தமணமளவில முருகு
மிழ்ந்தசுவைகலவைசிந்துரமுமளவில
புகையணிந்தமனைதொறுமெழுந்தகொடியளவில பொறிநு
கர்ந்தநயமனநுகர்ந்தநயமளவில
நகையணிந்தநகர்நனிகுவிந்தபயனளவில நவைகொணர்ந்த
வினையறவொழிந்தகுறையளவில
தகையணிந்தவருள்மிகவளர்ந்தநலமளவில தவமணிந்ததிரு
வளனுமிழ்ந்தவரமளவிலால்.

உரை. — அன்றுபூவரும்பாற் பிணித்தமாலைகள் மதுவோடொழிந்தமணமு மணமெழக்கூட்டின பல்வகைச்சாந்துஞ் சுண்ணமுஞ் சிந்தூரமு நறும்புகைவிட்டமாளிகையெல்லா மன்றுவிரித்தகொடிகளுங் கண்முதலைம்பொறி யன்று

நுகர்ந்தவின்பமு மனமுள்ளுண்டவின்பமும் பலநகையணி ந்தநகரமெல்லா மன்றுகுவித்த பயன்களும் பாவத்தால்வி ளைந்த வினைகள்கெடவே யன்றெழிந்த குறைகளு மாட்சி பொருந்தித் தேவருள்மிகவே யன்றுவளர்ந்தநன்மைகளுந் தவத்தையணிந்தசூசைமாமுனி யன்றுவழங்கிய வரங்களள வில்லாயின வாகையி லவையெல்லாமு மன்றே ரளவில்லா யினவென்க. (ராசு)

வே று.

சென்மழைக்கொடையானரசர்கோன்கோயிற் சென்
றுபுக்கந்தணர்க்காதி [ருள்வழங்கி
நன்மழைநெய்பால்முதளித்தெவர்க்கு நசையறவான்பொ
வின்மழைப்போரின்மீண்டெதிர்பகைவர் வெம்படைகாண்
பதுமறுத்தோன் [கேட்பதுமறுத்தான்.
பொன்மழைக்கொடையாவிடுவெனுஞ்சொல்விப் புவனியிற்

உரை. — அங்ஙன முடியைச்சூடினபின்பு மேகமழை யோடொப்ப வளையாக்கொடுப்போ னரசர்க்கரசனுகிய வி ராயன் றன்னரண்மனைக்குப்போ யந்தணர்முதற்கொண் டெவர்க்கும் பாலுநெய்யு நன்மழையாகப்பொழிந்து கலந் தவமுதினையிட்டபின்பு திரளாய்ப்பொருளைவழங்கி முன் போர்முகத்தில் வில்லாற்பெய்த வம்புமாரியைக்கொண்டு மீளவு மெதிர்த்த பகைவர்படையை யுலகிற்காணுதபடிக்குச் செய்தவ னன்றுதானமாய்வழங்கின பொன்னின்மாரியைக் கொண்டு மீளவு மிடுவென்னுஞ்சொல் லிவ்வுலகிற்கேளாத படிக்குச் செய்தானென்க. (ராஎ)

கைவிளைகொடையிற்பொழுதெலாமினிதிற் கடிந்து
வெங்கதிர்கடிந்தொளிப்ப [ளோடெறிப்ப
நெய்விளைசுடர்வாய்த்திருமணித்தீப நிறைந்தொளிமணிக
மைவிளைகங்குலுழைத்திருளுலகின் மல்கினதந்நகரறியா
மெய்விளையொற்றருளைப்பவீண்டரசன் விரிமணித்தேரொ
ழுவென்றான்.

உரை. — அங்ஙனம் வரையாக்கொடையைவழங்கிவிழ் பொழுதெலாமினிதாய்ப்போகச் சூரியனுமத்தமித்தொளித் துப்போகையா விராநாழைந் திருளுலகெங்கு மொய்க்கினு ந் திரண்டசுடர்வாய்மணிவிளக்கெறிப்பவு மணிந்தமணிகள் மிக்கொளிவீசிவிளங்கவு மத்தமித்ததென்று முலக மிருண்ட தென்று மன்றந்நகரறியாமையான் மெய்யையுணர்த்தும் வேவுகாரர்வந்துசொல்லப் பொழுதுபோனசெய்தியையறி ந்தவிராய னுடனே யொளிமணித்தே ரெழுந்தருளச்செய்க வென்றனென்க. (௱அ)

அடியெனவெள்ளியுருளைபொன்னச்சிட் டவிர்ந்தெ
  ழுமரகதமலையிற் [கிளம்பக்
கொடியெனவெண்முத்தாரமேதவழக் குடியெனமணியுருக்
கடியெனப்பசும்பொற்பரப்பில்வம்பலராய்க் கதிர்மணிபூ
  ப்பமேலொளிவான் [ததோரிரதம்.
முடியெனச்சிகரம்வயிரத்தூண்டாங்க முனிப்பதிக்கமைத்

உரை.— குசைமாமுனிக்கமைத்த தேரெத்தன்மைத்தோ வெனில், அடியில்வெள்ளியுருளைவைத் தவற்றுட்பொன்னாற் செய்தவச்சிட்டு மேலேமரகதமணியாலொருமலைவடிவமாக மேட்டையேற்றி யம்மலையிற் படர்ந்தகொடிகளொப்பவெ ண்முத்தாரங்கள் தவழ்ந்துதொங்க வதிலே வாழுங்குடிக ளொப்பப் பலமணிப்பாவைகள் கிளம்பித்தோன்ற வதின் மேற்பூங்காவனவுருவாகத் தூயபொன்னாற்செய்யப்பட்ட பரப்பிலே மதுமலரொப்பக் கதிரொளிமணிகள்பூப்ப வதி ன்மே லொளிவானுச்சியொப்ப வளைத்தவொளிமணிச்சிகர த்தை வயிரத்தூண்கள் தாங்காநிற்ப மாமுனியாகியவரசு னென்னுஞ்சூசைக் கோரிரத மித்தன்மைத்தமைத்ததென்க. (௱க)

ஒற்றையாமாழித்தேர்நலநாண வொற்றைதன்மாமை
  யில்வனந்த [ளிவடிவ
கற்றையாரிரதத்துயிரெனப்பகல்செய் கதிரெனக்கடியொ
ழுற்றையார்மணிபொன்முத்தலர்வழங்க முரசினமுகிலினு
  முழங்க [னர்தொழுதே.
மற்றையாவருஞ்சூழ்மன்னனேடிறைஞ்ச மறையவரோற்றி

உரை. — அங்ஙனஞ் சூரியனுடைய வொற்றையாழித் தேரழகொவ்வாமல்நாண நிகராதவழகோ டலங்கரித் தொளியைவீசியவிரதத்தின்மே லதற்குயிராகப் பகலைச்செய்யுங் கதிரோடொப்ப விளங்கிய சூசையுருவத்தை முழுதழகெல்லாநிறையக் கொண்ட மணிகளும் பொன்னுமுத்துக்களுமலர்களுந் திரளாய்வழங்கி மேகமுழக்கத்தினு முரசுமுதலியவைமுழங்கி யிராயனோடு மற்றயாவருஞ்சூழவிழுந்துவணங்காநிற்பக் குருக்கள்வணங்கி யெடுத்து மேலேற்றிவைத்தாரென்க. (௱௰)

கள்ளுறமலர்ந்தகடிமுகைபரப்பிக் கதிருறவிளக்கியதெ
ருவிற் [வகை
றெள்ளுறவிளங்கிவான்றெருவிரவி திரிவதேபோன்றுபேரு
யுள்ளுறத்தொழுவார்நசையளவொடுமெல் லுருண்டுகண்கூ
சுவபேணி [ம்.
யள்ளுறமணிப்பூம்புகைமுகில்சூழ வருளுறநடந்ததேயிரத

உரை. —ஒளியை யெறிப்பதற்குரிதாய் விளக்கினநெடுந்தெருவெங்கு மதுவோடுவாசனைபொழிந்து புதிதாய்மலர்ந்தமலரைத் திரளாய்ப்பரப்பி யுலகெலாந்தெளியவிளங்கி வானத்தின்றெருவிலே சூரியன்றிரிவதேபோலச் சூழவணங்காநின்றயாவரு முட்பேரின்பநுகர்வதுவேண்டி யவர்களாசையளவின்மெல்லவுருண்டுபோய்க் கண்டகண்ணொளியின்மிகுதியாற்கூசாததுவேண்டி மேகமாக மண்டியெழுந்த மணவாய்ப்பூம்புகை சூழமொய்ப்பத் தேவருள்வரங்களைப்பரப்பி யவ்விரதநடந்ததென்க. (௱௰௧)

புற்பதிக்குழாத்தினிரைத்தனபிச்சம் புயற்குழாத்தெழு
ந்தனபுகைக [கவரி
ளற்பதிதிங்கள்பொழிகதிர்க்குப்பை யணிக்குழாத்திரட்டின
தற்பதிபெயர்ந்துவீழுமீன்குழாத்திற் றனத்துகள்மணித்து
கள்சிந்தப் [விளக்களவோ.
பொற்பதிச்சுடர்கட்குழாத்தெரிமணிவாய் பூப்பநண்பகல்

உரை. — பனங்காவொப்பத் திரண்டகுடைகள்நிரையி னெருங்கியேந்தவு மேகத்திரட்சியொப்பப் பலவகைவாச புகைகளெழுந்துதேக்கவு மிராவரசாகியதிங்கள் பொழிந்த பாற்கதிர் பலவணியாகத்திரளாய்ச்சேர்த்தினதொப்பப் பல வெண்சாமரை யிரட்டவுந் தன்பதியினின்றுவிழுந்த வா னொளிமீன்றிரளொப்பப் பலபொற்பொடியும் பலமணிப் பொடியு மேனின்றுகீழே தெருவிற்சிந்தவும் பொன்னுலகு ள்ளசுடர்கட்கூட்டமொப்ப நல்லொளிமணிவாய் மலர்ந்து தெளிந்தபகலைச்செய்யுந் தீபங்களி லளவொன்றுண்டோ வென்க. (ருயஉ)

பண்கவர்குரலாற்பண்ணிசைக்கிசைப்பாப் பாடலுமா டலுமொளிமீன் [றழகனைத்துங்
மண்கவர்சுடர்வாய்மணித்தெருத்தொறுமெல் வாய்த்தலுமற் கண்கவர்வனப்பிற்கண்டனர்கணியாக் களிப்பொடுவியந்து கைவிதிர்ப்ப [ளளவோ.
வெண்கவர்தயையிற்பார்த்தெனச்சூசை விழித்தகண்விளையரு

உரை. — வீணைவாய்க் குரலினு மினிதாய் வீணையிசைக ளோடேற்றிய விசைப்பாட்டுகளைப்பாடலு மவ்விசையோ டொத்தாடலு மொளிமீனொப்பனையாக வொளிவாய்விரித்த மணிகணிறைந்ததெருவெலாம் பகலொளிவாய்ப்பவிளங்கலு மித்தொகை மற்றவபூகெலாங் கண்ணைத்திருடற்குரிய வடி விற்சிறந்ததாகக்கண்டயாவரு நினையாதமகிழ்ச்சி யுண்ணுகர் ந்ததிசயப்பட்டுக் கைவிரித்திருப்ப வரசையைக் கவருந்தயை யோ டெல்லாரையு நோக்கிக்கொண்டிருந்தாற்போலச் சூ சைமாமுனியுருவம் விழித்தகண்ணே யன்றங்கேவிளைவித்தவ ருளையளக்குமோரளவுண்டோ. (ருயங)

பணிநிலாவீசுமணித்திரள்பூத்துப் பகல்செயுங்கைக் கொடிநோக்கி [கன்றியேயன்னன்
ரணிநிலாப்பிறையையமிதித்தெழுந்தொளிசெய் யடிநலாட் மணிநிலாப்பிறைபோலீன்றதன்றேவ மகற்குமன்பருணிழல் செய்த [ஞ்சவோவென்பார்.
துணிநிலாக்கொடியேயிற்நிழல்கொண்டார் சுடுந்துயர்க்க

உரை.— அங்ஙன மதிசயப்பட்டுநின்றவர் மகிழ்ச்சிமிகு தியாற்சொல்லுந் தன்மையேதெனில்: பெருங்கதிர்வீசித்திரண்டமணிகளைப்பூத்து நற்பகல்செய்யச் சூசைகையிலேந்தியகொடியைப்பாருங்கள், அழகொளிவீசும் பிறையை மிதித் ததின்மேலெழுந்து விளங்கிய பாதமலரையுடையவட்கன்றியே யவன்தான் மணியுருவாகவொளிர்ந்த விளம்பிறைபோலவீன்ற தன்றேவகுமாரற்கு மன்புமிகநிழல்செய்த தெளியொளியுடையபூங்கொடியிதுவே, இனி யிந்நிழலிலொதுங்கினயாவரு மனஞ்சுடவருந் துன்பத்திற்கஞ்சவோ வென்பா ரென்க. (௱௰௪)

மறையணிதவத்தோனரசுநித்தானே மறைக்கணியாயி
னுனென்பார் [னென்பார்
பிறையணிபதத்தைத்தாணணிந்தன்ன பிறைக்கணியாயினு
பொறையணிகுறைகடீர்ப்பவின்றரசாய்ப் பொறைக்கணி
யாயினுனென்பா [மென்பார்.
நிறையணிமுடிகொண்டாணினிநாமிவ் விறைக்கணியாகுது

உரை. — வேதமே வடிவாகத்தோன்றிய விவ்வருந்தவத்தோனின்றரசனுகி யவ்வேதத்திற்கோரணியானுனென்பார், வளர்பிறையணிந்த தேவதாய்பாதமலரா யிவனணிந்தமையால்ந்தப்பிறையொளிமிக வதற்கோரணியாக நின்றுனென்பார், பூவுலகுள்ளகுறைகளைத்தீர்ப்பதுவேண்டி யின்றிங்கேயரசனுகிப் பூவுலகிற்கோரணியானுனென்பார், நம்மையாளாநின்றவிராயன்முடியை யின்றிவன்சூடினுனே, இனிநாமிப்புதுவிராயற் கோரணியாக நடக்கக்கடவோமென்பாரென்க. (௱௰௫)

நான்செய்ததவஞ்செய்யரசிதோநாமே தவப்பயன்
பெற்றனமென்பார் [ன்பெற்றுமென்பா
கான்செய்தகொடியோன்புனைமுடிகாணக் கண்பெற்றபய
னுன்செய்தபிறப்பினுருவிலவானோர்க் குயர்பயன்பெற்றனை
யென்பார் [மென்பார்.
வான்செய்தவுவகைபெற்றனமுன்னை மன்னனுப்பெற்றநா

உரை. — இவன் றான்செய்ததவத்தினால்வந்த வரசிதோ வறியோம், நாமோவெனி லிவ்வரசினாற் றவத்தின்பயனைப் பெற்றதறிவோமென்பார், வாசனைபொழிந்தபூங்கொடியோ ன் சூசைமாமுனி யின்றாசூடின முடியைக் கண்டமையாற் பெற்றகண்ணால் வரத்தகும்பயனைப்பெற்றோமென்பார், உ டலுடை நீசமனுப்பிறப்பாகத்தோன்றி நீமாதவனேயுருவி ல்லாதவரானோரடையாத வுயர்ந்தபயனைப் பெற்றாயேயென் பார்,இன்றெங்களுக்கரசனாக வுன்னைப்பெற்றநாம் வான்வீ ட்டுரியபேரின்பத்தை யின்று பெற்றோ மென்பாரென்க. (௱௰௬)

வேறு.

பன்னருமுவப்பொடு பலவுங்கூறியே
பொன்னருங்கொடியினோ னிருக்கைபோற்றிமுன்
மன்னரும்வியப்புற வனைந்தகோயில்வாய்
மின்னருங்கொடிஞ்சித்தேர் விளங்கநின்றதே.

உரை. — இவையு மித்தொகைப்பலவையுஞ் சொல்லிட ங்காதமகிழ்ச்சியோடுமாத்துமைப்ப மின்னிய கொடிஞ்சித் தேர்நகரமெல்லாஞ்சுற்றிவந்து விளங்கும்பொற்கொடியே ந்தியசூசை வீற்றிருப்பதுவேண்டி முன்னே யரசருமதிச யப்படத்தகும்வடிவோ டலங்கரித்தகோயில்வாசலில் விளங் கிநின்றதென்க. (௱௰௭)

செய்முறையனைத்தையுந் திருத்திவேதியர்
கைமுறைதொழப்பறை கறங்கயாவரு
மெய்முறைத்துதியொடு விழுந்துபோற்றநேர்
நைமுறைக்கோயிலுள் ளுருவநாற்றினார்.

உரை. — அதின்பின் செய்யத்தகுமுறையாவையுந்திருத் திப் பலவகைப்பறைகள்முழங்கவு மெவருந்துதிகளைச்சொ ல்லி விழுந்துவணங்கவுங் குருக்கள்வணங்கினபின் பவ்வுருவ த்தையெடுத்து நிகரெலாமெலியும்படியே யலங்கரித்தகோ யிலுள் வைத்தாரென்க. (௱௰௮)

மிடிவினைபசிபிணி வெறுப்புநோய்பகை
மடிவினையடைந்தபல் லரக்கர்வண்ணமே
யடிவினையென் றுகீழ்க் கிடத்தியஞ்சிய
கடிவினைமுகத்திடை காட்டிநின்றவே.

உரை. — குசையுருவம் வைத்தவிடத்தின் வடிவெத்தன் மைத்தோவென்று சொல்லத்துடங்கினார்: தரித்திரமும் வினையும் பசியும் பிணியும் வெறுப்புந் துன்பநோயும் பகையு மிவையெலாங்கெட்டுமுறிந்த பலவிராக்கதருருவமாக வடியின்கீழ்க்கிடத்தி முகத்தில் வெருவின வச்சத்தை தக்காட்டி நின்றனவென்க. (௱௰௯)

நான்மணியானைகள் நவின்றதீயவை
கான்மணிபடமிதித் துயர்தங்கைதொழ
வான்மணிபூத்ததோர் மரகதக்கிரி
நீன்மணியெருத்துயர் சுமந்துநின்றவே.

உரை. — சொன்னதீயவற்றைக் காலால்மிதித்து மணியாற்செய்தநாலுயானைகள் துதிக்கைதூக்கி வணங்காநின்று வயிரமணிமலர்பூத்த மரகதமலையை நீலமணிப்பிடரிமேற்சுமந்துநின்றனவென்க. (௱௨௰)

பைம்மணிமலையின்மேற் பணிசெய்பாவையாய்
வெம்மணியுருக்கொடு வேய்ந்தெண்விண்ணவர்
கைம்மணிதொழச்சிலர் சிலர்கலாநிதித்
துய்ம்மணிக்குறட்டினைச் சுமந்துதோன்றினார்.

உரை. — பச்சைமணியாகிய மரகதமலையின்மேற் டணிவிடைசெய்யும்பாவைகளுருவாகச் சிவந்தவிரத்தினமணியாற்செய்தவுருவோடு தோன்றின வெட்டுவானவர்களில் நால்வர் மணிக்கையால் வணங்காநிற்ப நால்வர் திங்கட்கதிரோடொத்த தூயமணியாலமைத்த மற்றொருகுறட்டைத்தாங்காநின்றாரென்க. (௱௨௧)

வையகத்தரசர்கோன் வெற்றிவாகையா
மையகத்திருதலைப் பறவையாகிய

மொய்யகத்தலர்ந்தபொற் சிறகின்மொய்ம்புமேன்
மெய்யகத்தவத்தா சுயர்விளங்கினான்.

உரை.—சொன்னகுறட்டின்மேலே யிப்பூவுலகரசர்க்கரச ஞகிய விராயனுக்கு வெற்றிவிருதாகிய வலிகுமிக விருதலைக ளைவிரித்த ஆகிலப்பறவைநின்று விசைபட வப்பறவைவிரித் த பொற்சிறகின்மேலே யுடலையுறுத்தி யருந்தவமுடித்த வர சனகியகுசைமாமுனி விளங்காநின்றானென்க. (௫௨௨)

மட்படவுலகெலாம் விற்பவாய்த்தன
விட்படமெனமணி விளங்கவோரைவில்
இட்படவளைத்தமா முடியொர்வானியாய்ப்
புட்படப்பறந்தவான் பொருனரோந்தினர்.

உரை.— அங்ஙனநின்றகுசையுருவத்தின்மேற் பூவுலகெ ல்லாம்விற்பதற்குரிய செல்வத்திற்செய்யப்பட்டதாகி வான த்தின்படமொப்பப் பலவகைமணிகள்விளங்கினவாகி யை ந்துவிற்கிடையுட்பட வளைத்த வொருமாமுடி மேற்கட்டி யாக வுயரத்தோன்றி யதைப் பறவையொப்பப் பறந்தவுரு வாய்ச் சிலவானவரே யேந்திநின்றாரென்க. (௫௨௩)

மின்றவழ்மணிவனா வேய்ந்தவாசன
முன்றவழ்திருவொளி முகிழ்த்தைவிற்கிடை
பின்றவழணிக்கொடு வியவர்பெற்றியாற்
பொன்றவழ்பாவைகள் போற்றிநின்றவே.

உரை. — மின்கள்தவழு மணிமலையொப்பத்தோன்றின சொன்னபத்திராசன முன்னும்பின்னு மைந்துவிற்கிடை யகன்று தவழுந் திருவொளிபூத்தவணிகளோ டேவல்செய்வ தற்கமைத்த மடந்தைய ருருவமாகச் சிலபொற்பாவைகள் வணங்காநின்றனவென்க. (௫௨௪)

சார்வயிற்படாத்தயை தானமன்பரு
ளோர்வயிற்றுதித்தன நால்வரோர்முகத்
தேர்வயிற்கரத்தணி யெண்ணிலேந்துபு
நேர்வயிற்றென்கிழக் கிறைஞ்சிநின்றவே.

உரை.—சொன்னபாவைகளின்றன்மையு மிடமுஞ்சொல்லத்துடங்கினர்: தாஞ்சாருமிடத்துப் பாடில்லாததற்குக் காரணமாகியதயையுந் தானமு மன்பு மருளு மொருவயிற்றிற்பிறந்த நால்வர்கூட வோர்முகத்தினின் றழகியகையி லெண்ணப்படாத பலவகையணிகலன்களையேந்தித் தென்கிழக்குநேராய்வணங்காநின்றனவென்க. (ருாஉரு)

பேர்விளைகாட்சியிற் பிறந்தபாவைகள்
சீர்விளை ஞானமு நிறையுஞ்சீலமு
மேர்விளைதாயொடின் னமிர்தமேந்தியெல்
லார்விளைவுறவட கிழக்கமைத்தவே.

உரை. — ஒளிப்பெயர் விளைதற்காரணமாகிய காட்சி தாயாகப் பிறந்தகன்னிகளென்று செல்வத்தைவிளைவிக்குஞானமுநிறையுஞ்சீலவொழுக்கமுமிம்மூவர்தமதழகிய தாயோடுகூட வினியவமிர்தத்தைக்கையிலேந்தினதன்மையி னற்பகல்விளையவிளங்கி வடகிழக்குநின்றனவென்க. (ருாஉசு)

வாட்டியவுடற்குயிர் வளர்ந்தமாட்சியைக்
காட்டியமுகநகை கதிர்ப்பொற்பாவைக
ளீட்டியகனிகொணர்ந் தெனத்தென்மேற்றிசை
பூட்டியகற்பொடு தவம்பொலிந்தவே.

உரை. — உடலேவாட்டினதன்மையி லுயிர்வளர்ந்தடைந்தமாட்சியைக்காட்டற்குரிய நகைமுகத்தோ டொளிவீசும் பொற்பாவைகளாகக் கட்டவிழாதகற்புந் தவமுந் தாங்கள் சேர்த்திய தீங்கனிகளைக்கொண்டுவந்தபாவனையாகத் தென்மேற் குயர்ந்துநின்றனவென்க. (ருாஉஎ)

பெண்ணுருக்காட்டியுட் பெருகுமாண்மையில்
வண்ணுருக்காட்டுபொற் கவசமார்பணித்
தொண்ணுருத்தொடைகொணர் பொறையுமூக்கமும்
விண்ணுருக்கொடுவட மேற்குவேய்ந்தவே.

உரை.—பெண்ணுருவாகத்தோன்றி மனதிற்கொண்டவாண்மையைக்காட்டப் பொற்கவசத்தை மார்பிலணியாநின்

ற பொறுமையு மனவூக்கமு மழகிய மதுமலர்மாலைகளைக் கொண்டுவந்தபாவனையாகவேந்தி வானுலகிற்குரியவுருவோ டங்கே வடமேற்குநின்றனவென்க. (ஈஉஅ)

வேறு.

தண்வாய்க்கொடியோனின்னனந்தன் றவத்தீருலகின ரசெய்தி
மண்வாயின்னநிலைபெற்று மணிவாய் முகத்துவீற்றிருக்கப்
பண்வாய்மணிப்பூங்குரன்முரலப் டனிப்பூங்குரல்வாய்து திதுவைப்ப [ழுதார்.
விண்வாய்மணப்பூம்புகைமொய்ப்ப விள்ளாவின்பத்தடிதொ

உரை.— அங்ஙனங் குளுமதுமலர்வாய் மலர்ந்தபூங்கொடியேத்தியகுசைமாமுனி மூடித்ததவத்தால் வானுலகிடத்தும் பூவுலகிடத்து நல்லரசடைந்து பூவுலகிடத்திவிந்நிலை பெற்றுச்சொன்னபடி யங்கேமணிமுகமலர்ந்து வீற்றிருப்ப வீணைவாய் மணிப்பூங்குர லுமிழ்ந்தொலிப்பவு மவ்விசையிலேற்றிய குளும்பூங்குரவிடுந் துதிகளொலிப்பவும் வான்மேலெங்கும் பலவகைவாசனைப்புகைத்திரள் மண்டிமொய்ப்பவு முள்ளொழியாதவின்பத்தோ டெவருமடியில்விழுந்து வணங்கினரென்க. (ஈஉகூ)

மன்னக்களிப்போடிவையாகி வான்வாழ்வானிங்கரசுற்றுனென்னக்காணவவ்வுலகி னிறைவர்மொய்த்தாரெனவானோர்
மின்னக்கதிர்வாயுருக்காட்டி வியந்தியாருங்கைவிரிப்பப்
பொன்னற்கலத்தின்மதுப்பெய்பற் புனையற்கொணர்ந்திவ் வுரைகொண்டார்.

உரை. — கெடாதகளிப்போ டிவையெலா மாகியபின்பு வான்மேல்வாழ்பவ னிப்பூவுலகிலரசுபெற்று முடியைச்சூடினனென்று வானுலகாசர்காணவந்தாற்போல மின்னிக்கதிரைவீசு முருவைக்காட்டிப் பலவானவ ரிறங்கித்தோன்றிக் கண்டயாவரு மதிசயத்தோடு கைவிரித்திருப்பப் பலபொற்

பாத்திரங்களின் மதுமலர்மாலைகள்பலவையுங் கொண்டுவந் திவற்றைச்சொன்றொன்க. (௱௩௰)

வான்மேல்மகுடம்புனைநாளில் வரமாதவன்றன்கொடி
பூத்த
தேன்மேற்றளம்பாறறுநூறு சேர்ந்தமூவைந்திருமணிப்பூ
நூன்மேன்முறைநையாத்தொடுத்த நுண்மணிஞாறுறணியி
தென [ரைத்தார்.
மீன்மேல்விளங்கும்வளன்பதத்தில் விரும்பிச்சாத்திமீண்டு

உரை. — அரியவரங்களைப்பெற்ற மாதவன்சூசை வான் மேன்முடியைச்சூடினநாளிலே தன்கொடிபூத்த மூவாயிரத்தறுநூற்றெருபத்தைந்து மதுமேலாடாநிற்குந் திருமணி மலரானூன்முறைவழுவாப் பிணித்த நுண்ணழகுடையமுப்பத்தாறுமாலைக ளிவையென்று வந்தவானவர்சொல்வி மீனினும்விளங்கிய வளன்பாதத்தில் விரும்பிச்சாத்தி மீளவுஞ் சொன்றொன்க. (௱௩௧)

நாம்பாவணிப்பூங்கொடிபூத்த நறும்பூவனையசொன்
மலராற்
காம்பாவணிவில்வீசியதன் கன்னித்துணைவிகளித்திசைத்த
தேம்பாவணியிஃதையணிவார் திருவீட்டுயர்வாரவ்விருவர்
சாம்பாவணித்தமைந்தனொடார் தயையிற்காப்பாரொனம
றைந்தார்.

உரை. — இளையாவழகிற் சூசை தன்பூங்கொடிபூத்த நறுமலரொப்பக் குறையாத்திருவில்வீசியசூசை தன் றுணையாகிய கன்னிமாமரியென்பவள் பின்பு தன்சொல்லாகியமலராற்களிகூர்ந்துரைத்துப் பிணித்ததேம்பாவணியிதுவே, இதையுரைத்தாயினு முரைப்பாரைக்கேட்டாயினு மணிந்த * யாவருஞ் செல்வவீடாகிய மோட்சத்தில்வாழ்வார், அதற்கு மரியுஞ்சூசையுமென் றவ்விருவர் புதுவணிவடிவிற்சிறந்த தந்திருக்குமாரனேடு நிறைந்ததயையைப்புரிந்துகாப்பாரென்றவ்வானவர்சொல்வி மறைந்துபோனுரென்க. (ஆகையால் வா

* மெய்ம்மறையணிந்த றசரிப்புவர்மாத்திரமே யிதனையுமணிபவரெனப்படுவர்.

னரசாளாகியமரியென்பாள் வான்மேல்வழங்கு மொழியா ற்றேம்பாவணியென்னுங் குசைதன்சரிதை மூன்சொன் னவளவு முப்பத்தாறுபடலமாக மூவாயிரத்தறுநூற் றொரு பத்தைந்து பாட்டென்றறிக.) (ருாகூஉ)

திருவாய்மணித்தேன்மலர்சேர்த்த தேம்பாவணியைத்
தொழுதேந்தி
மருவாய்மணிப்பூம்வயனுடு வடுவேற்றுய்யவீங்குற்றே
னுருவாய்வேய்ந்தவென்னிறையோ னுடன்மூவரின்பொற்
பதத்தணிய
வெருவாய்ப்புன்சொல்லஞ்சியபின் விருப்பந்தூண்டத்
தொழுதணிந்தேன்.

உரை. — தேவதாயின் றிருவாய்பூத்த மதுமலராற்சேர்த் திய தேம்பாவணியென்னுங் குசைதன்சரிதை நானேவண ங்கிக் கையிலேந்தி வாசனைபொழிய மணிமலர்பூத்தவயலை யணிந்த விந்நாடெல்லாம் வடுப்படா தெவரும்பிழைத்துயிர் வாழ்வதுவேண்டி யிங்கேகொண்டுவந்தேன். உருவில்லாதா னுகி யுருவாய்ப்பிறந்த வென்னுண்டவனோடு மரியுங்குசை யுமென் றிம்மூவர்பாதத்தி லித்தேம்பாவணியையணிய வெ ன்புன்சொல் லஞ்சாநின்றனபின்பு குசைமேல்வைத்தவிரு ப்பமே யென்மனத்தைத்தூண்டினதனுற் றுணிந்துவணங் கி யணிந்தேனென்க. (ஆகையாற் றேவதாய்முன்வான்மொ ழியாற்சொன்ன தேம்பாவணியைப் பொருளும்பிறழா வள வுமாறுத் தானுந் தமிழ்மொழியாற் சொன்னதென்பதாயி ற்றென்க.) (ருாகூ௩)

முடிகுசூட்டுபடலமுற்றும்.

ஆகப்படலம்-௩௬-இ - விருத்தம்

௩௬௧௫ாயிரு.

அநாதிநாமத்துப் பெரியநாயகிதுணையா லவதரித்தநாத னை வளர்த்த கைத்தாதை வளனென்னுங்குசைதன் சரிதை யாகிய தேம்பாவணி நன்றாகமுடிந்தது.

தன்மணத்துணையாய்நின்ற சூசைமாமுனிசரிதை முன்னுரைத்தவளாய்ப் பின்னுரைதந் தீங்குரைப்பித்தவளா யெக்கலையனைத்தும் விளைவித்துணர்த்துங் கிழத்தியாகிய மரியாயி யென்பாள் வானுலகுவப்பப் பூவுலகுயிர்ப்பத் தீயுலகஞ்சித் திறமிழந் தேங்க வவதரித்த நாதனைக் கன்னிமாறாதீன்ற ௲௭௱௨௰௬-மாண்டி லவடா னொளிநிறைபிறையென விப் பூவுலகிருளொழியப்பிறந்த திருநாள் முகிழ்த்தத் தவடன் றிருமலர்ப்பாதத்தணியெனத் தேம்பாவணி யுரை முடித்தது. ஆகையாற் புறவுரைகாட்டுதும்.

மாணுக்கன்புகழ்ந்துரைத்த புறவுரை

ஆசிரியம்.

வானுலகிருந்து வளர்தயைதளிர்ப்பத்
தானுலகனைத்துந் தழுவிப்புரக்கும்
வானோர்க்கரசாள் மண்ணோர்க்கருடா
யீனோருயர வேனையருவப்ப
மாசைப்பூங்கொடியொடு மணத்ததன் றுணையெனுஞ்
சூசைதன்சரிதந் தொடுத்ததேம்பாவணி
வீட்டுரிமொழியாய் விளம்பியநிலையிற்
நாட்டுமொழியொடு நயந்திவனூட்டின
புறநிலைக்காப்பியப் பொருளாய்வினையொழி
பறநிலைக்காப்பிய மாகவண்டமிழாய்
வீரமாமுனியென மேல்வடதிசையினின்
றீரமாதயையுணர்ந் திவனொருகுருவுறீச்
சறுவேசுரன்றன் றந்ததிருமறை
சறுவர்க்குணர்த்தித் தருங்கதிசெலுத்துந்
தயிரியசாமி தவறாமொழியுட
னுயிரியல்பயனே யுரைத்ததிருக்கதை
வான்பூத்திழிமது வரக்கொடிகொணர்ந்து
தேன்பூத்திழிவிரைத் தென்மலையுச்சிமே
லூட்டெனநறுந்தமிழ் நவின்றதிருப்பயன்

மொட்டெனமலர்ந்து முற்றிவண்மணமிடத்
தென்மலையுச்சியைச் சேர்திறமில்லார்
சொன்மலைப்பயனுறத் துணிவிலம்மலையினின்
றீங்கியான்கொணர்ந்தென வீரறமருணலம்
வீங்கியாப்பரும்பயன் விரித்தவுரையிதே
ஆறறுநூற்றைமூன் றரும்பொருட்பாவு
மாறறுபடலமு மாசிலகலந்தநல்
வண்ணந்தொண்ணூறு மறைக்கதைநூற்றைந்துந்
தண்ணந்தமிழ்வலோன் றந்தவரும்பயன்
கற்றுருரிமையிற் களிப்பதுவேண்டியு
மற்றூர்தெளிதலின் வாய்ப்பதுவேண்டியுங்
கற்றுணர்ந்துணர்த்தநான் கருதியதிகழ்ந்து
முற்றுணர்கலைவலோர் முனிவதுவேண்டா
நல்லமிர்தேந்திய நலிந்தமட்கலமெனச்
சொல்லமிர்தேந்திய துகளுறுமென்னுரை
பாராவமிழ்துணப் பல்லுயிருய்ந்துமே
வீராநயக்கதி யெய்துவதியல்பென.

முற்றிற்று.

பொதுப்பொருள்

அட்டவணை.

முதற்காண்டம்.

௧-வது. நாட்டுப்படலம்.

௰௩. நாட்டு நதி, நான்குவகைநிலம், வயல்,விளைவுமுதலியவற்றின்வருணிப்பு. ௧—௰௫. (†)

௨௧. நாட்டினின்பசுகவலங்காரமிகுதி. ௰௬—௩௫.

௩௰. சோலைகளின்சிறப்பு. ௩௬—௫௭.

௪௧. அச்சிறப்பைப்பார்த்துப் பரலோகத்தை விரும்பும்பாடல். ௫௮—௬௩.

௪௫. நாட்டினத்தியந்தசெல்வம். ௬௪—௭௩.

௫௧. அதிலேதின்மையின்றிநிறைந்தநன்மை. ௭௪—௮௩.

௨-வது. நகரப்படலம்.

௫௬. புகழெல்லாங்கடந்தஎருசலேநகரமாட்சி. ௧—௰௫.

௬௪. எவ்விதத்திலு மந்நகரத்தினிறைந்த வின்பவலங்காரப்பெருமை. ௰௬—௩௮.

௭௫. தேவாலயத்தினதிசயமானசிறப்பு. ௩௯—௫௰.

௮௩. குடிகளினிகரற்றசுகசெல்வம். ௫௧—௬௰.

௮௮. தயைநிறைந்தவரசன்செங்கோன்மையி லந்நகரத்து விளையுஞ்சுகிர்ததானதர்மபாக்கியம். ௬௧—௭௰.

௩-வது. வளன்சனித்தபடலம்.

௯௪. தாவிதன்விளங்கினதன்மை. ௧—௮.

௯௮. அவன்கோலியாற்றென்னுமிராக்கதனைக் கொன்ற வெற்றி. ௯—௩௧.

(†) இவ்வட்டவணையின் வரிமுதலில்வருமிலக்கம்-ஏட்டின் பக்கத்திலக்கமாமே. வரிக்கடைசியில்வருங்கணக்குகளோவெனில் விருத்தக்கணக்காம். இக்கணக்குகளை வாசிக்கும்விதமெப்படியென்றல், இவ்விடத்தில் முதல்விருத்தந்தூவக்கிப் பதினைந்தாம்விருத்தபரியந்தமென்றும், மற்றவிடத்தில் - இன்னவிருத்தந்தொடங்கி யின்னவிருத்தம்வரைக்குமென்றும் வாசிக்கத்தகும்.

ாகூ. இராசாவாகித் தாவிதனருந்தவத்தாற் கொண்டவரங்கள். கஉ—சா.

ாய௫. அவன்கோத்திரத்திற்குசைகருப்பமாகிச் சன்மப்பாவந்தீர்ந்தமுறை. சச—௫உ.

ாஉய. அதிசயமானவழகோடுபிறந்தபிள்ளையையாவருமகிழ்ந்து வாழ்த்தினமுறை. ௫ா—சுக.

ச-வது. பாலமாட்சிப்படலம்.

ாஉசு. பாலன்மேலானவரங்களை யடைந்தநுசரித்த சுகிர்தவொழுக்கம். க—ய௫.

ாநூஉ. ஐம்பொறிவென்றகுசை தவம்விரும்பிக்கானத்திற்குப்போகிறது. யசு—உா.

ாஙசு. இளமுனி தவத்திற்குரியமலையை வாழ்த்தின பாடல். உச—உசு.

ாஙஅ. மூத்தோனுருவமாய்த்தோன்றின வோர் வானவனேவலாற் குசையில்லறந்துறவறங் கூட்டிக்காட்டத் தன்னகரைத் திரும்பிச்சேருகிறது. உஎ—சசு.

ாசகூ. நல்லவாலன் ஞானதர்மதவமுதலியவறத்தால் விளங்கினதன்மை. சஎ—௫சு.

ா௫ச. அவனெவ்வறத்திலுநிலைமையாகிப் பிறர்க்குச்செய்தநன்மை. ௫எ—சுசு.

௫-வது. திருமணப்படலம்.

ா௫கூ. ஆதிமனிதன்பாவத்தால்வந்தகேடு. க—ய௫.

ாசுா. பரமநாத னவதரித்துவரமன்றுடின குசையுங் கன்னிமரியாயுமவற்குத்துணையாக மணமுடிப்பதற்குத் தேவசித்தத்தினால் நியமிக்கப்படுகிறது. யசு—உ௫.

ாசுஎ. தேவவேவலாற் கன்னியரரசி கன்னிமைமாறுமணத்துக்குச் சம்மதிக்கிறது. உசு—ஙஅ.

ாஎஉ. பரமநாத னவளுக்கேற்ற வரத்துணையைக்காட்டும்படிக்கு மன்றாடப்படுகிறது. ஙகூ—௫ச.

ாஎஎ. ஆகப்போகிறமணத்தினிமித்தம் புலம்புகிறதிருக்கன்னியை யாண்டவன்றேற்றுகிறது. ௫௫—எசு.

ாஅரு. திருக்கன்னிநூறுதோழிகள் கொண்டுவருகிற ஆடையாபரணங்களை வெறுத்துத் தேவவரங்களா லலங்கரிக்கப்படுகிறது. எஎ—அசு.

ாஅசு. வந்தகன்னியினழகினை யெவரும்விரும்பியதிசயிக்க மணத்திற்கஞ்சுகிறசூசை மணவாளனுகப் பலபுதுமையாற் காட்டப்படுகிறது. அஎ—ாயஉ.

ாகூரு. வேதமுறையின்படி திருமணமாகி யெவராலும் வாழ்த்தப்படுகிறது. ாயரு—ாஉஎ.

ாகூஅ. சீமையோனென்கிறமுனி திருமணத்தாரை யாசீர்வதித்தனுப்பிவிடுகிறது. ாஉஅ—ாசஉ.

உாரு. அவர்களுக்குச் செய்யப்பட்ட கொண்டாட்டம். ாசரு—ாசகூ.

உாசு. நாசரத்தையென்னுநகரி லவர்களோடு சகலநன்மையுஞ்சேரவே யவர்களுக்குக்கூறப்படுகிற திருப்புகழ். ாருய—ாகூய.

சு-வது. ஈரறம்பொருத்துபடலம்.

உாய. சூசையுமரியுமணத்தாலஞ்சினபின் கன்னிமைகாக்கத் தரமாண்டவற்குக்கொடுத்த வார்த்தைப்பாட்டை யொவ்வொருவ ரொவ்வொருவர்க்குச்சொல்லியகமகிழ்கிறது. க—உரு.

உாயஎ. அவ ளைம்பொறியடக்கந் தவமுதலிய வறத்தினொழுக்க மநுசரிக்கிறது. உசு—ருா.

உஉய. சூசை யாண்டவனைத்துதித் துலகிரட்சகனவதரித்துவரவேண்டுமென் று மன்றுடுகிறது. ருச—சச.

உஉச. சூசையு மரியுந் தவமுதலியவறத்தைப் புகழ்ந்து பேரின்பமநுபவிக்கிறது. சரு—ருஎ.

உருய. அவர்கள்யாவர்க்கு நன்மைசெய்தநுசரித்த வீரறவொழுக்கம். ருஅ—எரு.

எ-வது. ஐயந்தேோற்றுபடலம்.

உருரு. பரமதூதன் தேவதாயாவதற் குடன்படுத்தினவழியாதகன்னியிடத்திற் சுதனுகியசர்வேசுரன் மனுஷனு யவதரிக்கிறது. க—உஅ.

௨௪௪. நாதனவதரித்ததைக்குறித்துச் சம்மனசுகள்பாடின பாடல். ௨௯—௪௩.

௨௪௮. காரணமறியாதபோதிலு நாதனவதாரத்தினு லுலகத்திற்குஞ் சூசைக்கும் விசேஷமா யுண்டான நன்மையின்பமகிழ்ச்சி. ௪௪—௫௧.

௨௫௩. தன் றிருத்துணைவி தரிக்கிறகருப்பத்தைப்பற்றிச் சூசை யையங்கொண்டுவருந்திக் கலங்குகிறது. ௬௰—௭௩.

௨௫௭. கன்னித்தாய் தன்றுணைவன் றுயரத்தாலயர்ந்து தன்னைவிட்டுவனத்திற்குப்போக விருக்கிறனென்றுணர்ந்து மிகவும்வருந்தியழுது துயரைநீக்க வாண்டவனைமன்றுடுகிறது. ௭௪—௯௭.

௮-வது. ஐயநீங்குபடலம்.

௨௬௫. சூசை தன்பரிசுத்ததுணைவி கருப்பிணியான கன்னிகெடாதமுறையைத் தேவதூதனாலறிந்து சர்வேசுரனைத் துதிக்கிறது. ௧—௰௧.

௨௭௩. அவன்கன்னித்தாயைவணங்கிப் பொறுத்தலைக்கேட்டுப்புகழுகிறது. ௨௰—௪௩.

௨௮௰. அவனுக்குமுன்பாகக் கன்னித்தா யாகாயத்திலுயர்ந்து தேவதூதரணிகளால் வாழ்த்தப்படுகிறது. ௪௪—௬௨.

௨௮௧. தேவதூதர் மீளவுமவளைக்கொண்டாடின துதிவணக்கம். ௬௩—௭௧.

௨௯௩. சூசையுமவளைவணங்கி வாழ்த்தினபின் ஆண்டவன்வளுக்கோர் மகிமைமுடிசூட்டுகிறது. ௭௨—௮௧.

௨௯௭. மாதவன்றுயுதரத்தி லவதரித்தநாதனைக்கண்டுமிகுந்தவரங்களைப்பெற்று வணங்குகிறது. ௮௨—௯௬.

௯-வது. மகிழ்வினைப்படலம்.

௩௱௨. கண்டகாட்சியாற் சூசைமகிழ்ந்து ஆண்டவனையுந் தேவதாயையும் புகழுகிறது. ௧—௰௩.

௩௱௬. மாதவற்குங் கன்னித்தாய்க்குமுண்டான திருத்தாழ்ச்சியிசலாட்ட மோர்தேவதூதன் றீர்க்கிறது. ௰௪—௩௧.

௬௱௰௨. அவர்களிருவருந் தானமாகச் சகலமுந்தந்தபின்பு நானுவிதத் ததிசயவுணவு பராமரிக்கப்பட்டுப் பேரின்பமநுகருகிறது. ௬௨—ருஎ.

௬௨௰. தமக் காண்டவன்றந்த வற்புதவுணவைப்பற்றிச் சூசை தேவதுதிபாடுகிறது. ருஅ—எ௰.

௬௨௪. தேவமாதா வவதரித்தநாதனைத் துதித்தபாடல். எக—அ௬.

௬௨௯. சூசை கன்னித்தாயின் மகிமையைப் பலமுறைகண்டுகொண்டமகிழ்ச்சி. அ௪—௯ரு.

௬௩௨. கர்த்தன்பிறப்பதினுற் றனக்குண்டாகுமின்பத்தை நினைத்து மாதவன்மகிழ்ந்து தேவகுமாரனுக்குத் தகுந்தவிடந் தன்னிடத்திலில்லையென் றுருகித் தேவவரங்களைப்பெறுகிறது. ௯௬—௱௰எ.

௬௩௯. இரட்சகனுக்கு வறுமையேபிரியமென்று கன்னித்தாயுமாண்டவனு மாதவற்குத்தெரியப்படுத்தித் திருமாதாவொரு பூந்துகிலைச்செய்து நாதன்பிறக்குங்காலம்விரும்பி மகிழ்கிறது. ௱௰அ—௱௩௩.

௰-வது. மகவருள்படலம்.

௬௪௯. அவதரித்தகர்த்தன் பிறக்கப்போகிறகாலத்தி விராயன்கட்டளையாற் பயணப்படவிருக்கிறசூசை செய்யவேண்டியதேதென் றுண்டவனைக்கேட்கத் தன்றுணைவிக்குச் சொல்லுகிறது. க—அ.

௬௪அ. திருக்குமாரனேவலா லிருவரும் பயணப்பட்டுச் சூழ்ந்துவருகிற பதினுயிரம்வானவராற் காக்கப்படுகிறது. ௯—௨௰.

௬ரு௩. அவர்போகிறவழி சிறந்ததாகிப் பெரும்பாவியான காந்தரியென்பவள் மனந்திரும்புகிறது. ௨க—௪௨.

௬ருக. காந்தரி பாவத்துக் கேதுவாயிருந்தவெல்லா நீக்கி நன்னெறியநுசரிக்கவே மாதவனுங்கன்னித்தாயும் பெத்திலேமென்னுநகரிற் சேருகிறது. ௪௩—ருஎ.

௬௯ரு. அவ ரந்நகரி லில்விடமின்றி யிகழப்பட்டுவருந்துகிறது. ருஅ—எரு.

௩௭௨. அவரந்நகரண்டையிற்கண்ட வோர்குகையிற்போயித் தங்குகிறது. ௭௬—௯௧.

௩௭௬. அக்குகையில் அவதரித்தநாதன்பிறந் தெங்கு மின்பநன்மை யொளிபரப்பி வானவரா லாராதிக்கப்படுகிறது. ௯௨—௱௮.

௩௮௧. தேவமாதா திருக்குழந்தையைவணங்கித் துதித்துப் பரமகர்த்தாவைப் புகழுகிறது. ௱௯—௱௨௩.

௩௮௯. சூசையுந் திருப்பாலனை யாராதித்தேந்தி யகமகிழுகிறது. ௱௨௪—௱௩௪.

௩௯௰. மாதவன் பிறந்தநாதனைத்துதித்து வேண்டினபாடல். ௱௩௫—௱௫௰.

௰௧-வது. காட்சிப்படலம்.

௩௯௭. வானோரேவினவிடையர் தேவபாலனைவணங்கிப்புகழுகிறது. ௧—௰௪.

௪௱௧. ஓரிடைச்சிசொன்ன சந்தேகத்தைத் தேவமாதாதீர்க்கிறது. ௰௫—௩௪.

௪௱௭. நாதனுலகிரட்சிக்கவந்தமுறையையு மினித்தீர்வையிடவருமுறையையுந் தேவமாதாவிரித்துத்தெளிவிக்கிறது. ௩௫—௫௭.

௪௨௰. இடையர் மீளவுந்திருப்பாலனைத் துதித்துவணங்குகிறது. ௫௮—௭௯.

௪௨௬. சுவாமிபிறந்தகுகையை யண்டினவெல்லாருஞ் சூசைசொல்லுஞ் சுகிர்தபோதனைகேட்டு நல்லவர்களாகிறது. ௮௰—௮௬.

௪௨௮. திவ்வியகுழந்தைக்கு யேசுவென்னுந் திருநாமமிடப்படுகிறது. ௮௭—௱௨.

௪௩௪. மூவரச ரதிசயநட்சத்திரம்பின்சென்றுவந்து திருப்பாலனையாராதிக்கிறது. ௱௩—௱௨௩.

௰௨-வது. மகனேர்ந்தபடலம்.

௪௪௪. சூசையுந்தேவமாதாவுந் திருக்குழந்தையையெருசலேமாநகருக் கெடுத்துக்கொண்டுபோகிறது. ௧—௰௨.

சசக. வழியிற்சம்பவித்த வர்த்தமானங்கள். ௰ரு—உஎ

சடுரு. அவ்வழியின் முல்லைநிலத்துண்டான சிறப்பு. உஅ—சரு.

சகூ௰. மருதநிலத்திற்கண்ட விசேஷங்கள். சச—ருஎ.

சகூரு. அவரொருசலேமாநகரத்திற்சேர்ந்து சிறுவீட்டிற் றங்கித் தேவாலயத்திற் பிரவேசிக்கிறது. ருஅ—எக.

சஎஉ. கன்னிமரியுஞ்சூசையுந் திவ்வியபாலனைப்பரமநாதற்குப் பலிக்காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறபோது முனிமூத்தோனாகியசிமையோன்வந் தவனைக்கண்டு மகிழ்ந்து வணங்குகிறது. எஉ—எகூ.

சஎரு. அவ னிரட்சகனைத்துதித்தபாடல். அ௰—அஉ.

சஎசூ. தேவாலயத்தி லநேகர் திவ்வியகுழந்தையைவணங்கித்துதிக்கிறது. அரு—கூக.

சஎகூ. சிமையோன் றீர்க்கதரிசனஞ் சொல்லுகிறது, அன்னமென்பவள் தேவபாலகனைவணங்கி வாழ்த்துகிறது, அதன்பின் சூசையுமரியு மவனைமீட் டேந்திக்கொண்டுபோகிறது. கூஉ—ள.

உ-ம. காண்டம்.

௰ரு-வது. பைதிரநீங்குபடலம்.

க. ஓர்தேவதூதன் எரோதன்கொல்லநினைக்கிற திருப்பாலனை எசித்துநாட்டிற்குக் கொண்டுபோகக் கட்டளையிடுகிறது. க—எ.

ச. சூசை யக்கட்டளை தானறியலானமாத்திரத்தி லஞ்சித் தன்றிருமகனையேந்திய தேவமாதாவோடே பயணப்படுகிறது. அ—௰கூ.

எ. திவ்வியநாதனோடு சகலநன்மையுநீங்குகிறது. உ௰—உரு.

கூ. உலகிற்சகலமுந் திருக்குடும்பத்திற்கு வந்ததுன்பத் துக்கிரங்குகிறதாய்த் தோன்றுகிறது. உசூ—ருகூ.

௰௪-வது. இளவன்மாட்சிப்படலம்.

௰௪. குசை தேவகுமாரனுக்குவந்த துன்பதுயரத்தாற் புலம்பியழுகிறது. ௧—௰௧.

௰௭. தேவமாதா வவனுக் காறுதலுறுதிசொல்லுகிறது. ௰௨—௰௮.

௨௰. மிக்கயேலென்னும் வானவன் குசைக் காறுதலாகத் திருக்குமாரனது வல்லமைகாட்ட வவனெகிப்துநாட்டிற்குக் கட்டளையிட்டவார்த்தைகளை விவரிக்கிறது. ௰௯—௩௭.

௨௬. அந்நாட்டிற் றலைமக்களொருமிக்கச் செத்ததினாற் பயந்தவிராசா போகவிட்டயூதரைப் பின்றொடருகிறது. ௩௮—௪௭.

௩௧. நடுக்கடலிலோர்வானவ னவன்படையைத்தோற்கடிக்கிறது. ௪௮—௬௩.

௩௬. யூதரப்படைமுழுதுங் கடலிலேமுழுகக்கண்டு நாதனைத்துதித்துப் பாலைநிலத்தி லற்புதநீரையுண்கிறது. ௬௪—௭௫.

௪௰. முன்னாளிலெகிப்தார் யூதர்க்குச்செய்த நன்மைக்குப் பிரதிநன்மையை யாண்டவன் செய்யப்போகிறானென்று மிக்கயேல் தெளிவிக்கிறது. ௭௬—௮௭.

௪௪. அதனைக்கேட்டுக் குசை யாண்டவனைத்துதித்த பாடல். ௮௮—௯௰.

௪௫. காபிரியலென்னும்வானவ னுலகத்தைத் திவ்வியநாதன் சிஷ்டித்தவிதத்தைச் சொல்லிக்காட்டுகிறது. ௯௧—௯௭.

௪௮. சலப்பிரளய வரலாறு. ௯௮—௱௯.

௫௨. மற்றச்சகலரு மதிலேமுழுகிச்சாகவே நோவனு மவன்குடும்பத்தாருங் காப்பாற்றப்படுகிறது. ௱௰—௱௨௨.

௫௬. தேவமாதா தன் றிருமகனைப்புகழ்ந்தபாடல். ௱௨௩—௱௨௫.

௫௭. குசை தூரமைதானத்தி லோருயர்ந்த சாம்பன்மேடுகண் டதேதென்று வானவரைக்கேட்கிறது. ௱௨௬—௱௨௮.

௫௮. மிக்கயேலென்னும்வானவன் சோதமமுதலைந்தகரின்சாம்பலதென் றவைகள் தேவகோபாக்கினியா லழிந்

தவிதமுறைத்தபின் வானோர்திருப்பாலனை வணங்கிப் புகழு
கிறது. ாஉகூ—ாசக.

மரு-வது. சோசுவன்வெற்றிப்படலம்.

சுரு. ஓர்சோலையிற் சூசைவானவரைக்கேட்டபடியே மி
க்கயேலென்பவ னவதரித்தநாதனுடைய வல்லமையைத்தெ
ளிவிக்கிறது. க—எ.

சுஎ. யூதர் சோர்தானென்னுநதியை யற்புதமாய்க்கடந்
தெரிக்கோவென்னுநகரைப்பிடித்தவர்த்தமானம். அ—மஅ.

எஉ. சோசுவனோ டுறவானகாபனர் தம்பகைவர்பெரும்
படைக்கஞ்சி யவனடைக்கலந்தேடுகிறது. மகூ—சம.

எஅ. பகைவருக்கனுப்பினதூத னவர்களாங்காரத்தைப்
பற்றிப் போர்கூறித்திரும்பினபின்பு சோசுவன் தன்படை
யோடெதிர்க்கிறது. சக—ருகூ.

அசு. அகோரபோரிற் சோசுவன்காட்டினவீரம். ருஎ
—எஉ.

கூம. சோசுவன் ரூபிரனென்னுமிராசாவைச் செயிக்கி
றது. எங—அக.

கூரு. தன்படைத்தலைவனை ஊடுருவின றுகோதரனை யா
ப்பியனென்னுமரசன் கொன்றபின் னவன்றலையையாபன்
வெட்டுகிறது. அஉ—அகூ.

கூஅ. சோசுவனெண்ணிறந்த படைவீரரையுமன்றியோ
ரிராக்கதனையு மெய்துகொல்லுகிறது. கூம—கூஅ.

ாங. பகைவர்படைமுழுது மழிக்கப்படும்படி சோசுவ
னேவலாற் சூரியனொருநாளளவு நிற்கிறது. கூகூ—ாஅ.

ாசு. பாராவென்னுமரசனது படைத்தலைவனாகிய நிசி
தரன் சோணனென்கிற தளகர்த்தனாற் றேற்றுமடிகிறது.
ாகூ—ாமங.

ாகூ. பாரானுஞ் சோசுவனம்புகளான்மடிய வவன்ப
டை சிதறடிக்கப்படுகிறது. ாமச—ாமஅ.

ாமஉ. ஓவாவென்னுமரசனையுஞ் சோசுவனம்பினாலெ
ய் தவன்படையைத் தோற்கடிக்கிறது. ாமகூ—ாஙம.

ாமஅ. அதுனீசதனென்னுமரசன் தன்படையோ ட

கோரமாய்த்தாக்கவே யதி னிடச்சிறையைக் கனையன்சிதற டிக்கிறது. ௱௩௧—௱௪௧.

௱௨௨. கனையனச்சிறைத்தலைவனாகியவிகுலனை வெல்லுகிறது. ௱௪௨—௱௫௰.

௱௨௫. வலச்சிறையிலுங் கொடும்போரழன்று சோசுவனதற்குத் தலைவனாகவிட்டசச்சுத னெதிர்சிறைத்தலைவனை வெட்டுகிறது. ௱௫௧—௱௫௭.

௱௨௮. சோசுவனதுனிசன்றலையைப்பிளக்கவே யெதிர்படையெல்லாமுறிந்து சிதறுகிறது. ௱௫௮—௱௬௭.

௱௩௩. கடவுள்பெய்வித்த கன்மாரியா லப்படைமுழுதுஞ்சங்கரித்தமையா லெவருமவன்வல்லமையைப் புகழுகிறது. ௱௬௮—௱௭௮.

௱௩௭. இதெல்லாஞ்செய்தநாத னித்திருப்பாலன்றுனென்று மிக்கயேலு மற்றவானவரோடே குலைசயுமரியு மவன் பாதத்தைவணங்குகிறது. ௱௭௯—௱௮௨.

௱௩௮. தேவமாதா தன்றிருமகனைத்துதித்தபாடல். ௱௮௩—௱௮௫.

௱௪௰. திருக்குடும்ப மின்பத்தோடு நெடும்வழிபோய்க் களரிமாபுரத்திற்சேருகிறது. ௱௮௬—௱௮௭.

௰௬-வது. சேதையோன்வெற்றிப்படலம்.

௱௪௧. அந்நகர்வாசலின் முன் னேர்மணித்தூண்மேனிற்கும்பொற்பாவை சேதையோன்வெற்றிக் கடையாளமென்று கபிரியலென்னும்வானவன் தெளிவிக்கிறது. ௧—௭.

௱௪௩. தங்கள்பாவங்களைப்பற்றி யூதர்பட்டசிறுமையைநீக்கச் சேதையோனுக் கோர்தேவதூதன் தோன்றிக் கட்டளையிடுகிறது. ௮—௰௬.

௱௪௭. எண்ணிறந்த பகைவர்படையை யெதிர்க்கச் சேதையோன் யூதரில் ௩௨௲-சேவகரைக்கூட்டுகிறது. ௰௭—௨௪.

௱௪௯. அவன்தேவவேவலின்படியே யிவர்களில் மூந்நூறுபேரைமாத்திரநிறுத்தி யவர்களுக்குக் காளமு மட்கலமுந் தீபமு மாயுதமாகக்கொடுக்கிறது. ௨௫—௩௰.

௱௫௧. யூதர்காளச்சத்தத்தாலுந் தீபவொளியாலும் பகை

வர் மயங்கித் தமரைத்தாமே யெதிர்த்துக் கொல்லுகிறது. ௩௧—௩௮.

௱ருரு. பகைவர்படைவீரரசர் தாமுமயங்கித் தம்மையெ திர்த்துக் கொடியபோராடிமடிகிறது. ௩௯—ருக.

௱௬ய. காலையிற் படையின்மீதியை யூதர் சங்கரித்தார்க ளென்று கபிரியல்சொல்ல குசையும்வானவருந் திவ்வியகுழ ந்தையைவணங்கிப் புகழுகிறது. ருஉ—௬ய.

௰எ-வது. காசைசேர்படலம்.

௱௬௪. சிறந்தபலவழிகளைக்கடந் தோர் சோலையிற்சென் று தூரத்திற்காணு நகரேதென்று குசைவானவனைக்கேட் கிறது. க—௰உ.

௱௬அ. அதுகாசையென் றோர்வானவன்சொல்லி யதை ப்பிரபலியமாக்கின சஞ்சோனுடைய வற்புதவாண்மையை யும் வெற்றியையும் விவரிக்கிறது. ௰௩—உ௬.

௱எ௩. சஞ்சோன் காசைவாசற்கதவுகளைப் பெயர்த்துக் கொண்டுபோய்த் தாலிலையென்பவளுடைய வஞ்சனையாற் ற லைமயிரோடு பலமிழந்து மறுபடியு மதனையடைந்து பகை வரையழிக்கத் தானுஞ்சாகிறது. உஎ—௩௯.

௱எ௯. திவ்வியகுழந்தையேந்தியமரியுஞ்குசையுங் காசை நகரின் மூன்றுநாள்தங்கிச் சிலபுதுமை செய்திரந்துகொ ள்ளுகிறது. ௪௰—ருய.

௰அ-வது. சீனயிமாமலைகாண்படலம்.

௱அ௩. அவர் சீனயிமாமலையை யண்டுகையி லவர்க்கெதி ராய்வந்த விரண்டுவானவ ரவதரித்தநாதனைவணங்கி யிவரி லொருவ னிம்மலையின் விசேஷமறிவிக்கிறது. க—௰உ.

௱அஎ. ஆண்டவனம்மலையின் மோயிசனுக்குப் பத்துக்க ற்பனைதந்தவிதம். ௰௩—உ௩.

௱௯உ. அம்மலையண்டையி லுணர்ந்ததோர்மர முடனே சிறந்தவழகடைந்து பெருங்காற்றினு லழிந்தாற்போலே தோன்றி மறுபடி தன்னழகு பெறுகிறதைக்கண்டு குசையி தேதென்றுகேட்கிறது. உ௪—௩௩.

௱௯௫. இது வேதத்தியல்பினைக்காட்டுமாமென்றுவானவன்விவரித்ததைக்கேட்டுச் சூசை திவ்வியகுழந்தையைப் புகழுகிறது. ௩௪—௪௨.

௨௱. கண்டகாட்சியைக்குறித்துத் தேவமாதா தம்முடைய திருக்குமாரனைத்துதித்தபின் மரங்களின்கீழ் வானவர்சூழ விராக்காலந்தங்குகிறது. ௪௩—௫௯.

௰௯-வது. பாலைபுகுபடலம்.

௨௱௫. விடியற்காலத்திற்புறப்பட்டுப் பாலைசேர்சாரத்துப்போகிறது. ௧—௫.

௨௱௭. அவர்கள் கொடியபாலைபுகுந்தமாத்திரத்தி லதிலுண்டானவின்பமுள்ளசிறப்பு. ௬—௰௭.

௨௱௰௧. சூசையாண்டவனைத்துதித்தபாடல். ௰௮—௨௰.

௨௱௰௨. வானவர் மாதவனுக்குங் கன்னிமாதாவுக்கும்விருந்தமைத்திடுகிறது. ௨௧—௨௫.

௨௱௰௪. வானவரப்பாலைவனத்தி லற்புதவுணவுண்ட வெலீயமாமுனியி னதிசயங்களைப்பாடித் திருப்பாலனைத்துதித்துவணங்குகிறது. ௨௬—௩௫.

௨௱௰௯. வழி மூன்ருய்ப்பிரிந்தவிடத்தி னடுவழி நல்லதென்று மிக்கயேலென்கிறவானவன்சொன்னபடி சூசையுமரியு மதிலேசென் றிராத்திரியி லோர்மரத்தின்கீழ் தங்குகிறது. ௩௬—௪௧.

௨௰-வது. சித்திரக்கூடப்படலம்.

௨௨௨. காலையில்மறுபடிபுறப்பட்டுச் சிறந்தகருங்காவிற் புகுந்துபோகிறது. ௧—௰.

௨௨௫. இருமுனிகளவர்களை யோரலங்கார சித்திரக்கூடத்துக்குச் செலுத்துகிறது. ௰௧—௰௭.

௨௨௮. துறவறத்தின்பேரிற் சூசைக்குமுனிமூத்தோனுக்குமுண்டான சம்பாஷிணை. ௰௮—௨௧.

௨௩௯. அக்கூடத்துச் சித்திரங்களையெழுதுவித்த நீபகனது கதை. ௩௰—௫௪.

௨௪௨. சூசை சித்திரங்களைத்தெளிவித்து ஆணரன்களுக்

கண்டு தன்னண்ணன்மார்களாற் பகைத்து விற்கப்பட்டது முதலியதைக்காட்டுகிறது. ௩௫—௬௫.

உ௪௬. ஆணரன் பூத்திபானுக்கடிமையாயினு மவன்வீட்டிற் செல்வத்திலிருந்து தன்னாயகியின் றுராசைக்கிணங்காததினாற் சிறையிற்போடப்பட்டகொடுமைக்கு முனிகளாச்சரியப்படுகிறது. ௬௬—௮௧.

உ௫௪. ஆணரன் சிறையினின்று வெளிப்பட் டிராசாகண்டகாட்சியைத்தெளிவித் ததற்குச்செய்யவேண்டியதையறிவிக்கிறது. ௮உ—௯௬.

உ௫௯. அவனெசித்துநாட்டிற்குப்பரிபாலனாகித் தன்னினத்தாரைக்காப்பாற்றுகிறது. ௯௭—௱௰௯.

உ௬௯. அச்சித்திரக்கூடத்து முனிகள் கள்ளத்தவமுறைமைவிட்டதைப்பற்றிச் சூசைமகிழ்ந் தவருக்காக வாண்டவனைமன்றாடினபின் றன்றுணைவியோடு மறுபடிபயணப்படுகிறது. ௱உ௰—௱௬௯.

உக-வது. நீர்வரமடைந்தபடலம்.

உ௭௪. மோயிச னேர்பேழையில்வைத்துக் காப்பாற்றப்பட்டவா றெதிர்பட்டதனாற் கபிரியலென்னும் வானோ னந்தவர்த்தமானத்தை விவரிக்கிறது. க—௰௯.

உ௭௯. அநேகதூரம்போய்த் தேவமாதா தன்றிருக்குமரனைமுடியசீலையை யோர்தடாகத்திற்றோய்த்ததினா லதின்றண்ணீர் பிணிகளைத்தீர்க்கும் வரம்பெறுகிறது. ௰௪—உ௯.

உ௮உ. அவ்வரத்தாற் களிகூர்ந்தாற்போல வத்தடாகத்துப்பறவைக ளாடினதன்மை. உ௪—௯௪.

உ௮௬. மூவர் தமக் காசீர்வாதந்தந் துபோகிறதைக்கண்டு பறவைகள் துயரப்படுகிறது. ௯௫—௬௭.

உஉ-வது. எசித்துசேர்படலம்.

உ௮௮. அவ ரெசித்துநாட்டிற்புகுந்து சற்றுவழியாய்ப் போகிறது. க—௯.

உ௮௯. அவர் போகிறவிடங்கடோறுஞ் சகிர்தவின்பமுதலியதன்மையெல்லாம் விளைவிக்கிறது. ௪—௰௪.

௨௯௨. தேவகுமாரனெசித்தில்வணங்கப்பட்டபேயெல் லாமோட்டி யவற்றின்கோயில்தேருருவங்களை நிர்மூலமாக் கியோர்மரத்தினின்றும் பசாசைநீக்குகிறது. ௰௨—௨௫.

௨௯௭. மூவருமிரவிமாபுரத்திற்சேர்ந் தோர்சிறுமனையி ற்றங்கப்போகிறது. ௨௪—௩௫.

௨௫-வது. குணுங்குமந்திரப்படலம்.

௩௱௧. பேய்க்கரசன் எசித்தின்தேவரான பேய்கள் பெய ர்ந்து நரகில்விழுந்தகாரணம்விசாரித்துப் பிரதானபசாசுக ளைக்கூட்டமாகக்கூட்டுகிறது. ௧—௯.

௩௱௫. தன்னிராச்சியத்தில்வந்தகேடு விவரித்ததற்குச் செ ய்யவேண்டியதேதென்றுகேட்கிறது. ௰—௨௧.

௩௱௰. சிடாவியனென்றபேய் தான்பொய்த்தேவனாயே ற்படுத்தினவிதஞ்சொல்லி மறுபடி மனிதரைமயக்கியேய்க்க வெளிதென்றுகாட்டுகிறது. ௨௨—௨௯.

௩௱௰௩. வின்றுனென்னும்பேய் தானுகநாத னாராதனை யை வழங்குவித்தமுறையைத் தெளிவிக்கிறது. ௩௰—௪௨.

௩௱௰௭. இனிப்பேயரசு நரகிலடங்குமென்ற சத்தனுரைச் த் திரங்கரனென்கிறபேயெதிர்க்க விருவருங் கொடும்போ ராடுகிறது. ௪௩—௫௩.

௩௨௧. பேய்க்கரசன் சிந்துதேசத்துத்தேவனை யேற்படு த்தினசத்தனுசை யோர்தலைவனுகவுயர்த்தித் தன்னரசுகுறைத ற்குக்காரணமேதென்றவனைக்கேட்கிறது. ௫௪—௬௯.

௩௨௭. ஆண்டவ னவதரித்துப் பிறந்தானென்கிறதற்குச் சத்தனுசொன்னநியாயங்களை மருண்டமற்றப்பேய்கள்ம றுக்கிறது. ௭௰—௭௯.

௩௩௧. பேய்கள் காமத்தைவிளைவிப்பதற்குச் செய்ததுரா லோசனைகள். ௮௰—௯௭.

௩௩௮. பொய்யறம்வழக்குவிப்பதினுலு மெய்ம்மறைப் பிரசங்கிகளை நிந்தைபடுத்துவதினுலும் பேய்கள் கருதின மோசம். ௯௮—௱௰௨.

௩௪௫. பேய்கள் சகலபாவமும் விளைவிக்கும்படி சூசை யையு மரியையும் வெல்லவேணுமென்றுதீர்மானித் தேற்க

னவே வெற்றிகொண்டாற்போலக்கூப்பிட்டு முழங்குகிறது. ௯௰௩—௯௨௪.

உ௪-வது. சேருதோர்வைப்படலம்.

௩௫௰. பயங்கரவாயுதங்களைக்கொண்டு பெரும்படையாய்ப் பேய்களவரோடு போராடவருகிறதைக்கண்டு வானவ ரவர்வெற்றிக்குப் பூமாலையேந்திநிற்கிறது. க—௰க.

௩௫௪. ஒருகாதத்தூரத்தி னிறுத்தப்பட்டபேய்க ளவர்க்கெட்டாதபோராடுகிறது. ௰௨—உக.

௩௫௭. அவ ரசையாக்கோட்டையாய் நிற்பதைக்கண்டு பேய்க ளவர்மனங்கலக்கப் பயங்கரவுருவும் போருங்காட்டுகிறது. உ௨—உ௩.

௩௫௮. பேய்கள் பொருதபோர்வரலாறு. உ௪—௩௰.

௩௬௧. இருகொடும்பே யகோரவிதமாய்ப் பொருதுகிற து. ௩க—௩௭.

௩௬௪. அப்பேய்கள் மேன்மேலும்பொருதாலுஞ் சூசையுமரியுங் கலங்காததைக்கண்டு நொந்துமெலிகிறது. ௩௮—௪௩.

௩௬௭. அப்போரெல்லாம் வியர்த்தமென்றுகண்டசூசை சொல்வியமேலானவுணர்ச்சி. ௪௪—௫௫.

௩௭௧. திருக்குமாரன் றன்சொன்னமுதற்சொல்லாற்பேயெல்லா நரகத்தில்விழத்தள்ளியவற்றைவென்று நீக்கும்வரந் சூசைமாமுனிக்குக் கொடுக்கிறது. ௫௬—௬௮.

௩-ம். காண்டம்.

உ௫-வது. குழவிகள்வதைப்படலம்.

க. எரோதன் பிறந்தநாதனை வீணிற்கொல்லத்தேடி வருந்துகிறது. க—௰.

௫. மற்றக்குழந்தைகளையுங் கொல்லக்கருதினகொடுமை தன்மேற் சாராதபடிக்குத் தன்னாலோசனைச்சங்கத்தாரைக் கூட்டுகிறது. ௰க—௰௮.

௮. இராசா வாலோசனைகேட்டதற்கு நாபனென்கிறவ

ன் புதுவிராசாவைக் கொல்வதே நியாயமென்கிறது. ௰௯—௨௮.

௰௨. குழந்தையிராசாவகப்படுகிறதில்லையென் றெரோதன்சொன்னதனுன் மாதியன் மற்றக்குழந்தைகளையுங் கொல்லவேண்டுமென்கிறது. ௨௯—௩௮.

௰௬. அது வநீதமென்றும் வேதத்துக்கடாத கொடுமையென்றும்-எலியன்சொல்வதைக் காவியனுமற்றவருமொவ்வாத துர்நியாயங்களாலே மறுக்கிறது. ௩௯—௫௬.

௨௧. பலவற்புதவாக்கினையாற் றன்னீதியைவிளங்கச்செய்தநாதனைக் கொல்லநினைக்கலாகாதென் றேலியன்சொன்னதை யெரோதன்பிறக்கணித்துக் குழந்தைகளை வதைக்கக்கட்டளையிடுகிறது. ௫௭—௭௩.

௨௮. திரளானகுழந்தைகளைக்கொன்ற கொடுமைவரலாறு. ௭௪—௮௪.

௩௨. குழந்தைகள்பட்டகொடுமையையு மடைந்தநற்கதியின்பத்தையுஞ் சூசையுங் கன்னித்தாயுந் தேவகாட்சியிற்காண்கிறது. ௮௫—௯௰.

௩௫. திருக்குமார னக்குழந்தைகளைப் பேரின்பகதியிற் சேர்த்ததைப்பற்றி மாதவனுந் தேவதாயும் வானவரு மவனைப்புகழுகிறது. ௯௧—௱.

௨௬-வது. கருணையன்மாட்சிப்படலம்.

௩௯. தேவகிருபையாற் கருணையனைக் கருப்பமாகக்கொண்ட வெலிசபெத்தையென்பவளைக் கன்னிமரியுஞ் சூசையுஞ் சந்திக்கப்பயணப்படுகிறது. க—௰௪.

௪௫. தீவிரத்துடனேபோய்ச்சேர்ந்து தேவமாதா வவளைத்தழுவிக்கொள்ளுகிறது. ௰௫—௨௬.

௪௯. தாய்வயிற்றிற் கருணைய னவதரித்தநாதனைத்தொழுது வரமடைந்துதுள்ள வெலிசபெத்தை தேவதாயைத்துதிக்கிறது. ௨௭—௩௬.

௫௩. தேவமாதா வாண்டவனைத்துதித்தபாடல், கருணையன்பிறப்பு, எட்டாநாணடந்தவற்புதம், சூசையுமரியும்போனபின் அவ னெரோதன்கொடுமைக் கவனை யொளித்துக்காக்கச்சொல்லி யறிவித்தவிதம். ௪௰—௫௫.

ருகூ. எலிசபெத்தை மிகவும்வருந்தித் தன்மகனை வனாந்தரத்திற்கொண்டுபோ யவ்விடத்தில் மரிப்பதற்குமுன் னவற்குச்சொன்னவுறுதி. ருசா—எகூ.

கூஎ. தேவமாதா மனமிரங்கியனுப்பின வானவர்சொன்னவாறுதலாற்றேறின எலிசபெத்தைமரித்ததினாற் கருணையன் துக்கசாகரத்திலமிழ்ந்தி யோர்காட்சியா லாறுதலடைகிறது. எஎ—கூ௰.

எக. கருணையன் வானவருதவியாற் றன்றாயை யடக்கஞ்செய்தபின் றனிமையிலுரைத்தபுலம்பல். கூக—ாயஎ.

அஉ. திருக்குடும்பம் வானவராலநுப்பின வாறுதலுதவியாற் கருணையன்றேறி யவரோடுபாடிப் பேரின்பமகிழ் வடைகிறது. ா௰அ—ாகூஅ.

அஅ. அவன்றாதனைச்சேவிக்கிறவனது பாக்கியத்தைப் பாடினபாடல். ாகூகூ—ாசகூ.

கூ௰. கருணையன் காட்டிலெங்குநாதனைத்தேடித் தன்மனதிலவன்காட்சியையடைந்து தேவமாதாவனுப்பு முணவுண்டுவரவே கூசையவனைக்குறித்துச் செய்தவிண்ணப்பம். ாசஎ—ாருஎ.

கூரு. தேவகுமாரன் கருணையனைவிளங்குவிக்கு நடபடிவர்த்தமானங்களைச் கூசைமாமுனிக்கு முந்தியறிவிக்கிறது. ாருஅ—ாஎ௰.

ா. காமத்திலடங்கிய தீவினை கூசையுரைத்து நல்லோர்க்குத்துன்பத்தை நலமாக்குநாதனைத் துதித்தபாடல். ாஎக—ாஅகூ.

உஎ-வது. ஞாபகப்படலம்.

ாரு. தேவகுமாரன் றரையிலே முதலடிவைத்தணிந்த திருச்சட்டையின் விசேஷம். க—அ.

ாஅ. கூசைமாமுனி தேவகுமாரனேவலாற் சுகிர்தவுபதேசஞ்சொல்ல வேற்படுகிறது. கூ—௰அ.

ா௰உ. அத்தியந்ததயையால் மனங்களைத் தன்வசப்படுத்தின வவன்பிரசங்கங்களைத் திரளானசனங்கள்கேட்டுத் தருமத்தின்பயனை யவனிடத்திற்றியக்கேட்கிறது. ௰கூ—உஅ.

ாடுு. சூசை தர்மத்துக்குரியமுறை தெளிவிக்கிறது. உகூ—ஙகா.

ாடுஅ. தொபீயன் தர்மமிகுதியால்விளங்கி வருந்துங்காலத்தி லவற்குத் தூரமான தேசத்தில்வரவேண்டிய பணம் வாங்கி யவன்மகனுக்கு மணமுடிக்க வசரீயனேற்படுகிறது. ஙஎ—சரு.

ாஉஉ. அசரீயன் ரூபீயன்மகனைவிழுங்கப்பாய்கிற மீனைப்பிடித்துக்கொன்று கடன்பணமறுபடிவாங்கிச் சாரமியின் மணவாளரைக்கொன்றபேயோட்டி யவட்குந் தயோதரனுக்குமணமுடித்து மிகுந்த ஆஸ்தியோடவர்களோடு திரும்பிவருகிறது. சசு—சுய.

ாஉஎ. அதற்குள்ளே தாய்சொல்லுஞ் சஞ்சலமுறைப்பாடுகளைத் தகப்பனடக்குகிறது. சுக—சுரு.

ாஉக. அசரீயன் தொபீயன் குருடுநீக்கினபின்பு தான்இரபயேலென்னும் வானவனென்றறிவிக்கவே யக்குடும்பஞ்சுவாமியைவணங்கி மேன்மேலும்வாழுகிறது. சுசு—எகூ.

ாஙரு. சூசை சிவாசிவன் சொன்னதைமறுத்து மறுபிறப்பில்லையென்று காட்டுகிறது. அய—கூஉ.

ாஙகூ. மாதவன் மனிதர்க்குள்ளுண்டான வறுமைசெல்வவேற்றுமையை விளக்குகிறது. கூங—ாக.

ாசச. சூசை தலைவிதியில்லையென்று நிச்சயித்தூழ்வினையென்பதேதென்றுவிளக்க வாதித்தாய்தகப்பன் தேவகற்பனைமீறினவகையைத் தெளிவிக்கிறது. ாஉ—ாயஎ.

ாசகூ. அவ னப்பாவத்தால்வந்த கேடின்னதென்று மக்கேடுதீர்க்க நாதனவதரித்துப் பிறந்தானென்று மறிவிக்கிறது. ாயஅ—ாஉஅ.

ாருச. சிவாசிவன் மனந்திரும்பி யஞ்ஞானகோலநிந்தித்துவிட் டாண்டவனைத்துதிக்கிறது. ாஉகூ—ாஙகூ.

ாருஎ. சூசைநாதனைவாழ்த்திச் சிவாசிவனுக் கதந்ததயை காட்டவே மற்றச்சகலருஞ் சத்தியவேதத்தைப்புகழுகிறது. ாஙஎ—ாசச.

ாருகூ. சூசைதன்னைச் சிலர்விளுவினதின்பேரிற் பலதேவர்களைவணங்குதலேபேதைமையென்றுகாட்டுகிறது. ாசரு—ாருச.

௱௬௯. அவன்றேவவிலக்கணங்களைவிவரித் தோரோ கடவுளுண்டென் றொப்பிக்கிறது. ௱௫௫—௱௬௫.

௱௬௰. பலர்தெளிந்து தங்கள் முன்னோர்குருட்டாட்டத்தைநினைத் ததிசயிப்பச் சூதையதின்காரணங்களைத் தெளிவிக்கிறது. ௱௬௬—௱௭௫.

௨௮-வது. வாமனுட்சிப்படலம்.

௱௭௪. காமாதுரவீரனுகியவாமனறநெறியிலொழுகல் தன்னுலாகாதெனவே சூதைபழக்கத்தினுற் சகலமுமெளிதாகுமென்றுகாட்டி யிதற்குநல்லமனமேபோதுமென்கிறது. ௧—௰௧.

௱௮௧. உடலுமாதரு முயிருக்குச்செய்யும் பகைப்போரில் வெற்றியரிதென்று வாமன்சொல்லச் சூதை யிதினு நரகத்தில்வேத லரிதாமென்கிறது. ௨௰—௫௫.

௱௮௭. காமநோய்தீரும்வகை. ௫௬—௫௯.

௱௯௨. சூதைவாமனுக்கு நரகப்பயமுறுத்தவே மற்றவர் நரகமும்பசாசுமேதென்றுகேட்டதினுல் மாமுனி வானவரின் சிஷ்டிப்பு மியல்பும் பசாசுகளுண்டானவகையுந் தெளிவிக்கிறது. ௬௪—௭௪.

௨௱. அவன் பசாசினியல்பு நரகத்தன்மையுமதிலுள்ள துணையும் விவரிக்கிறது. ௭௫—௮௫.

௨௱௪. நரகநெருப்பினுலும் பசாசுகளாலும் வருமாக்கினை. ௮௬—௯௯.

௨௱௯. பாவிகள்நரகத்திற் பஞ்சேந்திரியங்களா லென்றென்றைக்குமநுபவிக்கும்வேதனை. ௯௭—௱௰௨.

௨௱௰௪. சூதை நரகப்புலம்பலையுரைத்ததின்பின் னிவையெல்லாங்கேட்டவர் மனமுருகி யழுதுசொல்லு முணர்ச்சிகள். ௱௰௩—௱௨௬.

௨௱௰௯. வாமன்மனந்திரும்பிச்சொல்லு மனஸ்தாபப் புலம்பல். ௱௨௭—௱௪௰.

௨௨௪. சூழநின்றவ ரதிசயித்துச்சொல்லும் புகழ்ச்சி. ௱௪௧—௱௪௮.

உஉகூ. ஞசையுரைத்த நல்லுணர்ச்சிகளால் வாமனு மற்றவரும்புண்ணியத்திற்றேறுகிறது. ௱சக—௱ருஅ.

உகூ-வது. வேதக்கெழுமைப்படலம்.

உகூஉ. சுரமியென்னுமோர்கிழவி ஞசையையெதிர்த்துச் சொன்னகனுவைமறுக்க மாமுனி கனவுகளின்காரணங்களைத்தெளிவித்ததினு லவள்சினந்து போகிறது. க—யஎ.

உகூஅ. அவள் தன்றேவரிழிவினுற் புலம்பிச்சோர்ந்துதூங்கையிற் பசாசவனுக்குத்தோன்றுகிறது. யஅ—உரு.

உசக. பசாசுகிளப்பின சினத்தோடு சுரமி சத்தியவேதத்தையழிக்கக் கொடியநாவகனுதவியைக் கேட்கப்போகிறது. உகூ—கூச.

உசச. நாவகன் சுரமியின் முறைப்பாடெல்லாங் கேட்டவள்களிகூரும்படி செய்யக்கருதுகிறது. கரு—சஅ.

உசக. அவன்முகத்திற்றேன்றினசினத்தை யவன்றகப்பனேகண்டதின்முகாந்தரங்கேட்டுணர்ந்து மறுக்கத்துவக்குகிறது. சக—ருசு.

உருக. மிகவும் வல்லமையுங்கொடுமையுமுள்ள சினக்கரன் பலவரசரைத் தனக்குக்கீழ்ப்படுத்தி யூதருந் தம்வேதத்தைவிட்டுக் கீழ்ப்படியச்சொல்லித் தூதனுப்புகிறது. ருரு—கூரு.

உருச. அவ னெருசலேநகரை நிர்மூலமாக்க நினைத்திருக்கையிற் றன்சேனை யோர்நிமிடத்திற் சங்காரமானதைக்கண் டோடிப்போ யவலமாய்மடிகிறது. கூகூ—எசு.

உருக. நபூக்கன் குளையிற்போடுவித்த மூன்றுயூதர்பிழைத்ததுமவன் தேவகோபாக்கினையால் மிருகவடிவாகி மறுபடி மனுவுருவுமரசுமடைந்ததுந் தேவகோயிலைக் கொள்ளையிடவந்த வெல்லியோதுர னுக்கினைப்பட்டதுமாகிய வற்புதங்கள். எஎ—அஅ.

உசுரு. நாவகன்சொன்னதை யவன் றகப்பன்மறுத்து வேதநலத்தைச் ஞசைமாமுனியிடத்திற் கேட்டறியவேவுகிறது. அக—கூகூ.

உசுசு. ஞசை நாவகன்மனதிற்கொண்ட தீமையைநீக்கத்தக்க சுகிர்தபோதகஞ்சொல்லுகிறது. கஎ—௱அ.

௨௭௰. நாவகன்தான்சினந்து சூசையைக் கன்னத்திலடித்தவடியை யிம்மாமுனிபொறுக்கிறதைக்கண்டு மனந்திரும்புகிறது. ௱௯—௱௨௰.

௨௭௪. நாவகனையாவரும்புகழவே சுரமி யவன்செய்ததைச்சகியாமல் மதிமயங்கி நாக்கைப்பிடுங்கிச்சாகிறது. ௱௨௧—௱௩௰.

௩௰-வது. மீட்சிப்படலம்.

௨௭௮. சூசை தான்சொல்லிய போதகத்தாலெங்கு நன்மைவிளைகிற சமயத்திற் றிருக்குமாரனோடுந் தேவதாயாரோடுந் தன்றேசத்துக்குத்திரும்பிப்போகத் தேவவேவல்பெற்று யாவர்க்குமுறுதிசொல்லுகிறது. ௧—௮.

௨௮௧. இரவிமாபுரத்தா ரவர்போனதை யறிந்தமாத்திரத்தின் மிகவும்புலம்பி யவரைப்பின்றொடருகிறது. ௯—௰௯.

௨௮௫. அந்நகரத்தார் புலம்பித்தேடிப்போகையி லோர் சோலையிலே மூவரடிகண் டதின்மேல் மலரணிந்து மீளவுந் துயரமுறையிட்டுத் தொடருகிறது. ௨௰—௩௪.

௨௯௰. சூசைமன்றாட்டினாற் றிருக்குமார னவர்துயரத்தைநீக்கி யவர்வனத்திற்றொடராதபடி நிறுத்தவே யாவரு மின்பவாறுதலடைந்து திரும்பிப்போகிறது. ௩௫—௪௧.

௨௯௨. யேசுமரிசூசைபோகிற வனத்துவழி மலர்ந்த தன்மை. ௪௨—௬௰.

௨௯௮. திருக்குமார னவ்வனத்தில் விளங்குந் தபசிகளைமுந்தியறிவிக்கிறது. ௬௧—௮௪.

௩௱௭. வானவர் திருக்குமாரனைத்துதித்துவணங்கையி லவ்வனமெல்லாம் வனப்பிற்சிறந்தமுறை. ௮௫—௯௰.

௩௱௰. மூவ ரோர்காட்டையுமலையையுங்கடந்து யூதர்நாட்டிற்சேர்ந் தொருசோலையிலிளைப்பாறுகிறது. ௯௧—௱.

௩௱௰௫. திருக்குமாரன் மோரியமாமலையைக் கண்டழுது-ஆபிருமென்பவ னதிலிடப்போனபலியைவிவரித் ததுவே தன்னாசையின்படி தானாகும் பலிக்கடையாளமென்கிறது. ௱௧—௱௰௪.

௩௱௰௮. வானவ ராகாயத்திற் கதிர்வீசின வோர்சிலுவைகாட்ட நாதனதனைப்புகழ்ந் துயர்ந்துபோ யதையரவணை

த்துத் தன் றிருமாதாவுஞ்சூசையும் பட்டதுயரைத் தீர்க்கிற து. ௱ஙரு—௱உஉ.

௲உக. சுகந்த மலைச்சாரலிற் கண்டவேடர்க்குஞ் சூசை மாமுனிக்கு முண்டானசம்பாஷணை. ௱உ௬—௱௬க.

௲உஅ. தனக்குப் பூமாலைகளைக்கொண்டுவந்த மாதர்களு க்குத் திருக்குமாரன்புத்திமதிசொல்லி யவர்களைச்சுகிர்தநெ றியிற் றிடப்படுத்துகிறது. ௱சங—௱சரு.

௬௬ங. மூவர்வழிப்போய் - எரோதன்மக னுளுகிறதைக் கேட்டதனாற் சூசைகொண்டபயந் தேவதூதனாலொழிந்து நாசரெத்தென்னுந் தந்நகரையண்டுகிறது. ௱ச௬—௱ருங.

௬௬உ. அந்நகரத்தா ராரவாரத்தோ டவர்க்கெதிர்போ யவரைக்கொண்டாடிப்புகழுகிறது. ௱ருக—௱சுங.

௬க-வது. பிரிந்தமகவைக்காண்படலம்.

௬௬௬. திருக்குமாரன்வளருமளவிற் சொல்லிடங்காத வருளால்விளங்கிப் பன்னிருவயதுள்ளவனுய்த் தன் றிருமா தாவோடுஞ் சூசைமாமுனியோடு மெருசலேமாநகர்க்கோ யிலுக்குப்போகிறது. க—அ.

௬௬க. நாத னியாக்கோபென்பவன் கண்ட வேணியி ன்காட்சியையுந் தான்சிலுவையிலிறந்து நிறைவேற்று மூலகி ரட்சிப்பையு மவர்க்குச்சொல்லிக் கோயில்வேண்டிக்கொ ள்ளப் போகிறது. கூ—ஙச.

௬சக. வேண்டினபின்பு திருக்குமாரன் காணமற்போ னதினாற் சூசையுமரியு மத்தியந்ததுயரோ டவனை யெங்கு ந்தேடியழுகிறது. ஙரு—உ௬.

௬சச. தேவதாயுமாமுனியு மிரவெல்லாந் துயரப்பட்டு ச்சொல்லிக்கொண்டதற்கு வானவர்மனமிரங்கித்திருக்குமா ரன் மரிக்கவில்லையென் றவர்களுக்கறிவிக்கிறது. உச—௬ரு.

௬சஅ. சூசை நகர்க்கப்பா லெங்கும்புலம்பித்தேடக் காவெல்லாங் கூடவருந்துகிறது. ௬௬—சசு.

௬ருஉ. தேவமாதா தன்றிருக்குமாரனை நகரெங்குந்தேடி யோர்தடாகத்தின்கரையினின்று சொல்லியபுலம்பல். சஎ— கூங.

௬ருசு. திருத்தாய்படுந் துயரமுகாந்தரமுந் தேடுமக

னது சாயற்குறிப்பு மொருத்திகேட்டுத் தானவனைக்கண்டவி தஞ்சொல்லுகிறது. ௬௧—௭௯.

௩௬௨. தேவமாதாவென்பட்ட சூசைமாமுனிக் கதைச் சொன்னதின்பின் னிருவருங்கோயிலுக்குவருகையி லதிலே திருக்குமாரன் வேதநூலோர்சொல்வதைக்கேட்டுக்கொண் டிருக்கிறது. ௮௰—௮௪.

௩௬௪. இரட்சகன் பிறந்திருப்பானென்று மவன்றே ன்று மிருவகையின்னதென்றுந் தன்விசேஷ மின்னதென் றுந் திருக்குமாரன்தெளிவிக்கிறது. ௮௫—௯௩.

௩௬௯. அவனைத்தேவமாதாவுஞ் சூசையு மவ்விடத்திற்க ண்டு மிகவுமகமகிழ்ந் தவனோடு தம்மூருக்குப்போகிறது. ௯௪—௱.

௩௨-வது. புரோகிதப்படலம்.

௩௭௩. அவர்வழியிலுண்டானசிறப்பு. ௧—௰.

௩௭௬. திருக்குமாரன்றந்த பேரின்பகாட்சியா லகமகி ழ்ந்தசூசை யவனைத்துதித்துத் தன்றாழ்மையைப்பாராட்ட நாதனதற்குரிய மறமொழிசொல்லுகிறது. ௰௧—௨௧.

௩௮௰. திருக்குமார னித்தாவியநாட்டைப்புகழ்ந்து வா னோரா லதிற்கொண்டுபோகப்படுஞ் சூசைமனைக் குண்டா குஞ்சிறப் பிவனுக்கறிவித்ததின்மே லிவ னோயத்துக்கு வி ளக்கங்கேட்கிறது. ௨௨—௩௧.

௩௮௫. திவ்வியநாதன் ஞானுலகத்தை யிரட்சிக்கு முறை சொன்னதின்பின் மனித ரறத்தினிலைக்கும்வகை சூசைகேட் கிறது. ௩௨—௩௮.

௩௮௮. அதற்குத்திருக்குமாரன் ஞானனுப்பும் பிரசங்கி களையுந் தந்தருளு மேழுபொதுவரங்களையுந் தெரியப்படுத் துகிறது. ௩௯—௪௭.

௩௯௩. சூசை நாதனருளைத் துதித்தபாடல். ௪௮—௫௰.

௩௯௪. மாமுனி வானத்திலே சொல்லிலடங்காத சிறப் பழகுமகிமையுள்ள வரசரையு மாதர்களையுங் கண்டகாட்சி. ௫௧—௭௧.

௪௱. மாதவன்கண்டவரச ரின்னின்ன தேசஸ்தரென்று திருக்குமாரனவனுக்குத் தெளிவிக்கிறது. ௭௨—௮௯.

சாகூ. அதற்குச்சூசை பிரமித்துக் கொடிய சேவகரோ டே பயங்கரமானபூதம் பாதாளத்தினின் றுபுறப்பட் டுபத் திரப்படுத்தப்படுநல்லோர் மெலியாததைக்கண் டிதேதென் று திருக்குமாரனைக்கேட்கிறது. கூ௰—கூசு.

சா௰உ. திருக்குமார னதை மாமுனிக்குத் தெளிவித் து பத்திரத்தாற் றன்வேதத்துக்கு நல்லோர்க்கும் வருநன்மை யைச்சொல்லிப் பிணியிற் பொறுமையால் வருமிராசாங்க மே யவன்பங்கரமென்கிறது. கஎ—ாஅ.

ஙரு-வது. பிணிதோற்றுபடலம்.

சா௰எ. நமக்குப்படிப்பினையாக மாதவன் கடும்பிணிய ட்டசையின்பமாய நுபவித்துமாட்சியடைந்தமுறை. க—௰க.

சஉக. வானோர்காட்சியா லாறுதலடைந்தசூசை பின்னு ங்கடினவருத்தப்படவே தேவமாதா வவனுக்காகத் தன்திரு க்குமாரனைக்கேட்டமன்றாட்டுக்கு மறுமொழி. ௰உ—உஉ.

சஉரு. தேவதாயுந்திருக்குமாரனுந் தனக்குச்செய்தப ணிவிடையாற் சூசை யின்பமடைந்துசிறந்தமாட்சி. உங— உஅ.

ஙச-வது. தூதுரைப்படலம்.

சஉஅ. மாதவன் வானோர்காட்சியாற்றேறித் தரிசித்தக டவுளாற் பிதாக்களிடத்திற்குத் தூதாக வனுப்பப்படுகிறது. க—௰உ.

சஙஉ. சூசைதிருக்குமாரனிடத்திலுந் தேவதாயிடத்தி லும் விடையுமாசீர்வாதமுங்கேட் டுயிர்பிரிந் தவர்களா லட க்கம்பண்ணப்படுகிறது. ௰ங—உஉ.

சஙரு. பிதாக்க ளவன் றம்மிடத்திற்சேர்ந்து விளங்குகிற தைக்கண்டு தம்முள்ளதிசயித் தவனுடென்று கேட்கிறது. உங—ஙஉ.

சஙஅ. சூசை தானின்றுனென்று மிரட்சகன்பிறந்த தனு விரட்சணியகாலமாயிற்றென் றுஞ்சொல்லிப் பிதாக்கள் கேட்டபடி யவனியல்பினை யவர்களுக்குத் தெளிவிக்கிறது. ஙங—சச.

சசஉ. அன்னமைகேட்டதின்பேரிற் சூசைநாதனுடைய பிரதானநடபடிகளையுரைக்கிறது. சரு—ருஉ.

சசசு. பிதாக்கள் நாதனைத்துதித்தபாடல். ருங—சுய.

ஙரு-வது. உத்தானப்படலம்.

சருய. நரதேவன் றமது திவ்வியவேதத்தைப்போதித் தெண்ணிறந்த வற்புதங்களைச்செய்து தம்முடையதேவபிதாவுக்குத் தம்மை யிரட்சணியபலியாக வொப்புக்கொடுக்கிறது. க—யக.

சருசு. நாதன்பாடுபட்டிறந்து பிதாக்கள்சிறையைத்தீர்க்கப்போகிறது. உய—உசு.

சருஅ. அவன்மகிமையைக்கண்டு பிதாக்களுஞ் சூசையும்விசேஷமா யத்தியந்தபேரின்பத்தோ டவனைவணங்கித் துதித்தபின் னுத்தரிக்கிறஸ்தலத்திணுத்துமாக்கள் சிறைதீர்ந்துவந் தவனையாராதித்துமகிழ்கிறது. உஎ—ஙஅ.

சசுஉ. மூன்றுநாள் வானவரும் பிதாக்களுஞ்சூழ நாதன்மகிமையோடே தன்னுடற்கல்லறைக்குப்போய்த் தன்றிருக்காயங்களை யவர்களுக்குக்காட்டினதினுற் சூசை யுருகிச்சொல்லுந்துதி. ஙக—ருரு.

சசுஅ. மற்றவரு நாதனைவணங்கித்துதித்தபாடல். ருசு—சுஎ.

சஎங. ஆண்டவ னுயிர்த்தெழுந்தருளிச் சூசையுந் தன்னுடலைமறுபடியெடுத் துயிர்க்கும்படிசொல்லி வானவராற் கொண்டாடப்படுகிறது. சுஅ—எங.

சஎரு. ஆண்டவ னுயிர்த்தெழுந்தருளுகிறபோது வானவரதந்தசந்தோஷித்துடனே யவனைக்கொண்டாடுகிறதுமன்றித் தின்மையெல்லாமு நீங்குகிறது. எச—அய.

சஎஅ. உயிர்த்தெழுந்தருளினநாதனுஞ் சூசையுந் தேவமாதாவுக்குக் காணப்படுகிறது. அக—அசு.

ஙசு-வது. முடிசூட்டுபடலம்.

சஅக. உயிர்த்தநாதனுஞ் சூசையுந்தேவமாதாவுக்குத் த

ரிசனையாகி மகிமையோடேபரலோகத்துக் கெழுந்தருளிப் போகிறது. ௧—௰௬.

௪௮௬. தேவகுமாரன் நித்தியபிதாவிடத்திற்சென்று சூசைக்கு மகிமைமுடி சூட்டல்வேண்டுமென்று கேட்கிறது. ௰௭—௨௭.

௪௯௧. திரியேகசர்வேசுரன் மாமுனிக்குத்தந்தருளினவேழுவரங்களுக்கடையாளமாகிய எழுமணிபதித்த முடியுஞ்சூட்டி யாசீர்வாதமுந்தந் தவனுல்வணங்கப்படுகிறது. ௨௮—௪௩.

௪௯௮. மாதவனுலகத்திலுண்டான வற்புதநன்மையுபகாரங்கள். ௪௪—௪௯.

௫௱. சிறந்தமாட்சியுடைத்தான லெயுப்போல்தென்னுமிராயன் சூசையடைக்கலத்தில்வாழ்ந்து பகைவரிட்டநஞ்சுட்கொள்ளாதபடி யவனுலெச்சரிக்கப்பட்டுத் தன்னுருகையிலுள்ள வரசனைக்கூட்டுகிறது. ௫௰—௭௩.

௫௱௭. இராயன் முனிராசாங்கம்விட்டுச் சூசையை யரசனுக நியமித் தவற்கு முடிசூட்டவேண்டுமென்கிற கருத்து தெளிவிக்கிறது. ௭௪—௮௰.

௫௱௰. சூசை யரசனுகவு மிராயனவனுளாயாளவும் யாவருஞ்சம்மதித்ததினு விச்செய்தியைமுரசறைந் ததற் கலங்காரதிருநாளைக் கூடினமாத்திரத்தி லந்நகரத்திலுண்டானசிறப்பு. ௮௧—௯௩.

௫௱௰௪. திருவிழாவின்பத்தாநாள் சிறந்தமணிமண்டபத்தி விராயன் சூசைமாமுனியினுருவத்துக்கு முடிசூட்டினமுறை. ௯௪—௱௧.

௫௱௰௮. இராயனுமற்றவரு மவற்குச் செய்தவணக்கந்தந்ததானதர்மம், அடைந்தநன்மை யின்பவரமிகுதி. ௱௨—௱௬.

௫௱௨௧. தருமத்திற்பொழுதுசென் றிராவந்தபின் னெளிமணித்தேரிற் சூசைமாமுனியினுருவத்தையேற்றிச் செய்தவெழுந்தருளுபடியின் வருணிப்பு. ௱௭—௱௰௬.

௫௱௨௬. எழுந்தருளுபடியானபின் பதிசயவலங்காரமுள்ளகோயிலி லவனிடத்து விளங்கியவறங்களின் பொற்பாவை

கள்சூழு நிகரற்றமகிமை பத்திராசனத்திற் சூசைமாமுனியி னுருவம் வைக்கப்படுகிறது. ௱௰௭—௱௨௮.

௫௧௰. சூசை யற்புதமான கொடிபூத்த ௩௯௱௰௫ - மலராற் பிணித்ததாக வானவராத்திருநாளின்முடிவில் யாவருமதிசயிப்ப வவன்பாதத்திற்சாத்தின - ௩௬-மாலைத்தொகையாய்க் கன்னிமாதா தன்சொன்மலரா லவன்சரிதை பிணித்ததற் கொப்பத் தேம்பாவணி யெவருமுயிர்வாழவிற்நாட்டிற்கொண்டுவரப்பட்டது. ௱௨௯—௱௩௩.

சந்தங்களின்

பொது வட்டவணை.

விவரம். இவ்வட்டவணையில் II என்பது உ-ம். காண்டத்திற்கும், III என்பது ௩-ம். காண்டத்திற்குங்குறிப்பாம். அவ்வவற்றைச்சார்ந்துவருகிற விலக்கங்க ளந்தந்தக்காண்டத்தின் ஏட்டுப்பக்கங்களைக்குறிக்கும். அக்குறிப்பின்றியாவது அவற்றிற்குமுந்தியாவது, இலக்கங்கள்வந்தா லவை முதற்காண்டத் தேட்டுப்பக்கங்களைக்குறிக்குமென்றறிக.

கருவிளங்கனி, கருவிளங்கனி, கருவிளங்கனி,கருவிளம். II ௱௨௫.

கருவிளங்கனி, கருவிளம், கருவிளம், கருவிளங்கனி, கருவிளம், கருவிளம். II ௱௨௮.

கருவிளங்காய், தேமா, தேமா, கருவிளம், கருவிளங்காய், தேமா, தேமா, கருவிளம். II ௩௬௧.

கருவிளநறும்பூ, கருவிளநறும்பூ, கருவிளம், கருவிளநறும்பூ, கருவிளநறும்பூ, கருவிளம். III ௫௱௰௮.

கருவிளம், கருவிளங்காய், கருவிளம், கருவிளங்காய். II ௱௩௮.

கருவிளம், கருவிளம், கருவிளங்கனி, கருவிளம், கருவிளம், கருவிளங்கனி. ௱௩௬. III ௩௱௭.

கருவிளம், கருவிளம், கருவிளம், கருவிளம், (இடைமடக்கு.) II ௪௬.

கருவிளம், கருவிளம், கருவிளம்,கருவிளம், கூவிளம், தேமா, புளிமா, புளிமா, III ௪௭௫.

கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம். ௱௩௬. II ௯௰. III ௩௱௭.

கருவிளம், தேமா, கூவிளங்காய், கருவிளம், தேமா, கூவிளங்காய். ௱௯௮.

கருவிளம், புளிமா, தேமா, கருவிளம், கருவிளம், புளிமா, தேமா, கருவிளம். II ௱௬, ௩௬௧.

காய், காய், காய், காய். ௨௱௰, ௩௪௮. II ௬௫, ௩௨௭. III ௨௱, ௨௫௪, ௩௱௰௮, ௪௩௮.

காய், காய், காய், காய், (இடைமடக்கு.) ௪௧. III ௮௮.

காய், காய், காய், காய், மா, தேமா. ௱௬௭, ௨௬௫, ௪௩௪; III ௱௯௯, ௩௮௰, ௪௱.

காய், காய், மா, தேமா. III ௱௨௭.

காய், காய், மா, தேமா, காய். ௩௬௫. II ௪௫, ௨௨௮; III ௯௫, ௨௮௧.

காய், காய், மா, தேமா, காய், காய், மா, தேமா. ௨௮௰, ௬௱௭.

காய், காய், மா, மா, காய். II ௧, ௱௭௩, ௱௮௭. III ௱௰௮.

கூவிளங்கனி, கூவிளங்கனி, கூவிளங்கனி, கூவிளம். ௩௮௬.

கூவிளங்காய், புளிமா, புளிமா, புளிமா. II ௮௪.

கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம், மா, மா, புளிமாங்காய். III ௩௮௮.

கூவிளம், விளம், கூவிளம், விளம். ௩௱௨.

கூவிளம், விளம், மா, கூவிளம். ௨௱௰௭.

கூவிளம், விளம், விளங்கனி. ௨௱௰௭.

தேமா, காய், மா, தேமா, காய். ௱௨௰.

தேமா, கூவிளம், கூவிளம், கூவிளங்காய். III ௪௯௮.

தேமா, கூவிளம், தேமா, கூவிளம், தேமா, கூவிளம், கூவிளம். ௩௮௯.

தேமா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய். ௪௨௬; II ௩௱௰. III ௫௱௭.

தேமா, மா, கூவிளம், தேமா, புளிமாங்காய். ௱௪௧. III ௪௬௮.

தேமா, விளம், மா, காய். III ௩௩௯.

புளிமா, கருவிளம், கருவிளம், கருவிளம், புளிமா, கருவிளம், கருவிளம், கருவிளம். ௨௮௧.

புளிமா, கருவிளம், புளிமா, கருவிளம், புளிமா, கருவிளம், கருவிளம். 11 ௩௯௪.

புளிமா, கூவிளங்காய், புளிமா, கூவிளங்காய், கருவிளம், புளிமா, கூவிளங்காய், புளிமா, கூவிளங்காய், கருவிளம். 111 ௫௱௰௮.

புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம், கருவிளம், கருவிளம். 11 ௱௨௮.

புளிமா, கூவிளம், புளிமா, கூவிளம், புளிமா, கூவிளம், கருவிளம். 11 ௱௨௫.

புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்கனி. 11 ௱௯.

புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், புளிமாங்காய், புளிமா, புளிமா. 11 ௱௯.

மா, கருவிளம், மா, கருவிளம். 111 ௩௩௨.

மா, கருவிளம், மா, கருவிளம், மா, கருவிளம், விளம். ௱௯௩.

மா, காய், காய், காய். 11 ௨௪௨.

மா, காய், மா, மா, காய். 11 ௱௬௰, ௨௨௫. 111 ௨௩௮, ௨௪௯.

மா, கூவிளங்காய், கூவிளம், தேமா. 11 ௨௭௯.

மா, கூவிளங்காய், கூவிளம், தேமா, மா, கூவிளங்காய், கூவிளம், தேமா. 11 ௨௮௮.

மா, கூவிளங்காய், மா, கூவிளங்காய், மா, கூவிளங்காய், விளம். 11 ௯௮, ௱௫௧.

மா, கூவிளம், கூவிளம். 111 ௱௫௭.

மா, கூவிளம், கூவிளம், கூவிளம். ௫௧, ௱௩௨, ௱௫௪, ௨௪௮, ௨௯௭, ௩௱௰௨, ௩௫௩, ௩௮௧. 11 ௯, ௱௭௯, ௨௱, ௨௫௪, ௨௮௬, ௩௱௰௩, ௩௭௧. 111 ௩௫, ௪௯, ௬௭, ௯௰, ௱, ௱௰௫, ௱௩௫, ௨௱௯, ௩௱௰, ௩௫௬, ௪௨௧, ௪௩௫, ௪௮௧.

மா, கூவிளம், கூவிளம், கூவிளம், (இருவிகற்பஎகபாதம்.) 111 ௩௭௩.

மா, கூவிளம், கூவிளம், கூவிளம், (அந்தாதி.) ௪௱௧.

மா, கூவிளம், கூவிளம், தேமா. III ௮.

மா, கூவிளம், மா, கூவிளம். ௨௧, ௱௨௬, ௩௭௬. II ௰௭.

மா, கூவிளம், மா, கூவிளம், மா, கூவிளம், விளம். III ௨௮.

மா, கூவிளம், மா, விளம், விளம், மா. III ௪௨௫.

மா, கூவிளம், விளம், விளம், மா. ௰௩, ௯௮, ௱௫௯, ௨௩௰, ௪௨௮, ௪௬௰. II ௱௪௩, ௩௩௧. III ௧, ௰௨, ௫௯, ௱௰௨, ௱௬௯, ௨௱௬௬, ௩௩௬, ௩௭௬, ௪௱௰௨, ௪௭௩.

மா, தேமா, கூவிளம், தேமா, தேமா, கூவிளம். III ௱௫௪.

மா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய். III ௨௱௰௪, ௪௯௬.

மா, தேமா, தேமா, தேமா, மா, தேமா, கூவிளம். ௩௯௭.

மா, தேமா, மா, தேமா, மா, தேமா, விளம். ௨௪௪.

மா, புளிமா, புளிமாங்கனி, கூவிளங்காய். ௱௮௩.

மா, புளிமா, புளிமாங்கனி, தேமா, தேமா. ௱௮௩.

மா, புளிமா, புளிமா, புளிமா. ௱௭௭, ௱௮௬, ௪௨௰. II ௭௨, ௨௮௯. III ௨௮௫, ௩௫௨.

மா, புளிமா, புளிமா, புளிமாங்காய், தேமா. II ௱௪௭.

மா, மா, காய், காய். III ௩௪௮.

மா, மா, காய், மா, காய். III ௱௮௧.

மா, மா, காய், மா, மா, காய். ௱௬௩, ௨௨௪, ௩௯௰, ௪௪௪; II ௬௭, ௨௱௰௪, ௩௱௧. III ௫௩, ௱௪௯, ௪௮௬.

மா, மா, கூவிளம், தேமா, புளிமாங்காய். ௩௨௰.

மா, மா, மா, மா, மா, மா. ௩௱௬, ௩௫௧. II ௩௬. III ௩௪௪.

மா, மா, விளம், கூவிளம். ௫௧.

மாங்கனி, கூவிளங்காய், புளிமாங்காய், தேமா. II ௱௪௭.

மாங்கனி, கூவிளம், கூவிளங்காய. ௱௭௭, ௱௮௬, ௪௨௰; II ௭௨, ௨௮௯. III ௨௮௫, ௩௫௨.

மாங்கனி, கூவிளம், கூவிளங்காய், மாங்கனி, கூவிளம், கூவிளங்காய். II ௩௫௮.

மாங்கனி, கூவிளம், கூவிளம், கூவிளங்காய். II ௱௪௭.

மாங்கனி, கூவிளம், கூவிளம், தேமா, தேமா. II ௱௪௭.

மாங்கனி, புளிமாங்கனி, புளிமாங்கனி, புளிமா. ௮௮. II ௱௨௨, ௨௮௨.

மாங்கனி, மாங்கனி, மாங்கனி, புளிமா. 11 ௩௧.
மாங்காய், தேமா, புளிமாங்கனி, கூவிளங்காய். ௱௮௩.
மாங்காய், தேமா, புளிமாங்கனி, தேமா, தேமா. ௱௮௩.
மாங்காய், தேமா, மாங்காய், தேமா, மாங்காய், தேமா, புளிமா. 11 ௫௮.
விளங்கனி, கூவிளம். 111 ௱௫௭.
விளங்கனி, கூவிளம், கூவிளம். ௫௧, ௱௩௨, ௱௫௪, ௨௪௮, ௨௯௭, ௩௱௰௨, ௩௫௩, ௩௮௧. 11 ௯, ௱௭௯, ௨௱, ௨௫௪, ௨௮௬, ௩௱௰௩, ௩௭௧. 111 ௩௫, ௪௯, ௬௭, ௯௰, ௱, ௱௰௫, ௱௩௫, ௨௱௯, ௩௱௰, ௩௫௬, ௪௨௧, ௪௩௫, ௪௮௧.
விளங்கனி, கூவிளம், கூவிளம். (அந்தாதி) ௪௱௧.
விளங்கனி, கூவிளம், கூவிளம். (இருவிகற்ப-ஏகபாதம்.) 111 ௩௭௩.
விளங்கனி, தேமா விளங்கனி, தேமா. 11 ௨௱௫.
விளங்கனி, மா, கூவிளம். ௨௧, ௱௨௬, ௩௭௬. 11 ௰௭.
விளங்கனி, மா, விளம், விளம், மா. 111 ௪௨௫.
விளங்கனி, விளங்கனி. ௨௧, ௱௨௬, ௩௭௬. 11 ௰௭.
விளங்கனி, விளங்கனி, விளங்கனி, விளம். 111 ௨௮.
விளங்கனி, விளம், விளம், தேமா. 111 ௰௨.
விளங்கனி, விளம், விளம், மா. ௰௩, ௯௮, ௱௫௯, ௨௩௰, ௪௨௮, ௪௬௰. 11 ௱௪௩, ௩௩௧. 111 ௧, ௫௯, ௱௰௨, ௱௬௯, ௨௬௬, ௩௩௬, ௩௭௬, ௪௱௰௨, ௪௭௩.
விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா. ௪௭௬; 11 ௰௪, ௩௱௰௭. 111 ௪௫௮.
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய். (இஃது இடையிடை யெதுகைபற்றிவந்தது.) ௨௱௬.
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்கனி. ௨௱௩.
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், தேமா. 11 ௱௰௨.
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், தேமா, புளிமா. ௨௱௩.
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், தேமா, புளிமாங்காய். 11 ௱௰௨.

விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளம். ஙகூள.
விளங்காய், கூவிளம், கூவிளங்காய், கூவிளம். 111 ாருச.
விளங்காய், புளிமா, புளிமாங்காய். 11 உளகூ.
விளங்காய், விளங்காய், விளங்காய், விளம். (இஃதந்தாதி.) உசச.

விளம், கருவிளம், கருவிளம், கருவிளம், மா, தேமா. 11 உாயஉ.

விளம், கருவிளம், கருவிளம், கருவிளம், விளங்காய். 11 உாயஉ.

விளம், கருவிளம், கருவிளம், புளிமா. அங.
விளம், கருவிளம், கூவிளம், கருவிளம். 111 ாருச.
விளம், கருவிளம், விளம், கருவிளம். 11 ாகங.
விளம், கூவிளங்காய். 111 உஉச.
விளம், கூவிளம், கூவிளம், கூவிளங்காய். 11 அச.
விளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளங்காய். சரு, உகூக.

விளம், கூவிளம், கூவிளம், கூவிளம், விளம், கூவிளங்காய். 11 ாக.

விளம், புளிமாங்காய், விளம், புளிமாங்காய். 11 உாரு.
விளம், மா, தேமா, விளம், மா, தேமா. ரு, ருசு, ாகூ, ாஙஅ, உஙரு, உருங, ஙஉச, ஙஙஉ, ஙஙகூ, சசகூ, சஎஉ, சஎகூ. 11 எ, உய, ருஉ, எஅ, கூரு, ாஙஎ, ாசய, ாருரு, ாசுஅ, ாகூஉ, உாஎ, உஙங, உருகூ, உஎச, உகூஉ, ஙாரு, ஙஉக, ஙருய, ஙருஎ. 111 ரு, உக, ஙஉ, ஙகூ, எக, ாஅ, ாஉகூ, ாருகூ, ாஎச, ாகூஉ, உாயகூ, உஉசு, உசச, உருகூ, உஎய, உஎஅ, உகூய, உகூஅ, ஙஉக, ஙசுஉ, ஙஅரு, சாகூ, சாயஎ, சஙஉ, சருசு, சசுஉ.
விளம், மா, மா, காய். 111 சஎஅ.
விளம், விளம், மா, கூவிளம். ஙய, சுச, கூச, ாயரு, ாஎஉ, உருஎ, உஎங, ஙஉகூ, ஙஙஉ, ஙஎஉ, சருரு. 11 ச, சய, சஅ, ருஎ, ாயஅ, ாசகூ, ாசுச, ாஅங, உாயக, உசுகூ, உகூஎ, ஙசசு, ஙருச, ஙசுஎ. 111 யசு, சரு, அஉ, ாரு, ாஉஉ, ாசச, ாஅஎ, உசக, உருக, உசுங, உஎச, உகூஉ, ஙாயங, ஙகூய, ஙசக, ஙசுகூ, ஙகூச, சஉஅ, சருய.

விளம், விளம், விளங்கனி. ௩௰, ௬௪, ௯௪, ௱௰௫, ௱௭௨, ௨௫௭, ௨௭௩, ௩௨௯, ௩௩௨, ௩௭௨, ௪௫௫. 11 ௪௰, ௪௮, ௫௭, ௱௰௮, ௱௪௯, ௱௬௪, ௱௮௩, ௨௱௰௯, ௨௬௯, ௨௯௭, ௩௪௬, ௩௫௪, ௩௬௭. 111 ௰௬, ௪௫, ௮௨, ௱௫, ௱௨௨, ௱௪௪, ௱௮௭, ௨௪௧, ௨௫௧, ௨௬௩, ௨௭௪, ௨௯௨, ௩௰௩, ௩௩௰, ௩௪௧, ௩௬௯, ௩௯௪, ௪௨௮, ௪௫௰.

விளம், மா, விளம், மா, விளம், விளம், மா. ௭௫, ௨௨௰, ௪௬௫. 11 ௨௬, ௱௯௫, ௨௪௬, ௩௩௮. 111 ௱௬௩, ௨௱௪, ௩௨௮, ௩௬௪, ௪௪௨.

வெண்பாப்போலவந்த விருத்தங்கள். (இடைமடக்கு.) 11 ௪௪, ௨௱௰௧. 111 ௩௱௯௩. (இடைமடக்காகவு மந்தாதித் தொடையாகவும் பாடியிருக்கின்றன.) ௪௭௫.

பொருளட்டவணை.

படலம்.	பொருள்.	பக்கம்.
	சந்தங்களினட்டவணை.	
௨௫	குழவிகள்வதைப்படலம்.	௧
௨௬	கருணையன்மாட்சிப்படலம்.	௩௯
௨௭	ஞாபகப்படலம்.	௱௫
௨௮	வாமனாட்சிப்படலம்.	௱௭௪
௨௯	வேதக்கெழுமைப்படலம்.	௨௩௨
௩௰	மீட்சிப்படலம்.	௨௭௮
௩௧	பிரிந்தமகவைக்காண்படலம்.	௩௩௬
௩௨	புரோகிதப்படலம்.	௩௭௩
௩௩	பிணிதோற்றுபடலம்.	௪௱௰௭
௩௪	தூதுரைப்படலம்.	௪௨௮
௩௫	உத்தானப்படலம்.	௪௫௰
௩௬	முடிசூட்டுபடலம்.	௪௮௧
	பொதுப்பொருளட்டவணை.	௫௩௫
	பொதுச்சந்தங்களினட்டவணை.	௫௬௧

பிழை திருத்தம்.

முதற்காண்டம்.

பக்கம்,	வரி,	பிழை,	திருத்தம்.
ரு	௰ந	வடமொழியால்	அழகிய
௰க	௰எ	யெழுதெனருள்	யெழுதென்றருள்
சஉ	௰எ	கொள்-கொண்டு	கோள்-மீன்கள்
	௰அ	(மீன்கள்)விளங்க	விளங்க
௱சுரு	உஉ	துடர்பிற	துடர்பித்
உ௱ரு	ந	மணடும்	மண்டும்
உ௱௰உ	௰ச	வெய்தரிய	வேய்தரிய
உஎரு	௰அ	காட்சியாய்த்	காட்சியாய்
உஎஅ	௰	சூழ்ந்த	சூழ்ந்த
உகூக	ந	மேலணிநது	மேலணிந்து
உகூசு	உ௰	முறறிய	முற்றிய
நஉஉ	௰சு	மயஙுறரு	மயஙுற்று
ச௱௰உ	உ௰	மனிதரொயல்லா	மனிதரொல்லா
சச௰	ந௰	மூவுலத்தை	மூவுலகத்தை

முதற்காண்டமுடிவின் மற்றச்சிலபிழைதிருத்தங்காண்க.

உ-ம். காண்டம்.

பக்கம்,	வரி,	பிழை,	திருத்தம்.
நரு	௰அ	கன்றற்றிய	கனறற்றிய
கூஎ	உச	கேகட	கேடக
௱சுஉ	ரு	தூண்மனனூர	தூண்மன்னூர-அல்லது தூணமன்னூர்
உ௱௰உ	உ	சொலலும்	சொல்லும்
ந௱௰ந	௰ரு	கார்நடந்துளி	காரடைந்துளி
	உந	செய்யுங்கமங்களை	செய்யுங்கருமங்களை-அலலது-செய்யுந்தருமங்களை
ந௱௰ரு	க	பாட்பினை	பாம்பினை
நஉந	உகூ	கையவே	வையவே
	ந௰	வையமே	கையமே

ந-ம். காண்டம்.

பக்கம்,	வரி,	பிழை,	திருத்தம்.
அ	௰ந	வேறோரவற்கு	வேறோர்வற்கு
ருக	௰உ	மைந்தனுயத்	மைந்தனுய்த்
ந௱௰ந	சு	கணடு	கண்டு